தமிழ்நாடு சட்டப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS

CHIEF REPORTER
FORT ST. GEORGE
12 NOV 1999
CHENNAI-600 009
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

CHIEF REPORTER
FORT ST. GEORGE
12 NOV 1999
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY SECRETARIAT
Chennai-600 009

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

நடவடிக்கைகளின் அட்டவணை (Index)

பயன்படுத்தும் முறை

பேரவை நடவடிக்கைகளின் ஒவ்வொரு தொகுப்புக்கும் (Volume) தனித்தனியாக அட்டவணைகள் வெளியிடப் பெறுகின்றன. உறுப்பினர்கள் பேரவையில் எழுப்பிய வினாக்கள், ஆற்றிய உரைகள் ஆகியவை தொடர்பான குறிப்புகளை இலகுவாகவும், விரைவாகவும் அறிந்துகொள்ள அகரவரிசைப் படி அமைக்கப்பட்ட இவ்வட்டவணை பெரிதும் பயன்படும்.

இந்த அட்டவணை கீழ்க்கண்டவாறு அமைக்கப்பட்டுள்ளது:—

1. உள்ளடக்கம்

2. உறுப்பினர்களின் பெயர் அட்டவணை (Name Index)

3. பொருள் அட்டவணை (Subject Index)

அவையில் எடுத்துக்கொள்ளப்பட்ட அலுவல்கள் பற்றிய குறிப்புகளை 'உள்ளடக்கம்' என்ற தலைப்பின் கீழும், உறுப்பினர்கள் பேசியது தொடர்பான குறிப்புகளை 'பெயர் அட்டவணை' என்ற தலைப்பின் கீழும் விவாதிக்கப்பட்ட பொருள்கள் குறித்த குறிப்புகளை 'பொருள் அட்டவணை' என்ற தலைப்பின் கீழும் காணலாம்

''உள்ளடக்கம்'' என்ற தலைப்பின்கீழ்—

அமைச்சரின் அறிக்கை

அறிக்கை அளித்தல்

அறிவிப்புகள்

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மற்றும் இதர தீர்மானங்கள்

இரங்கல் குறிப்புகள் மற்றும் இரங்கல் தீர்மானங்கள்

உரிமைப் பிரச்சினைகள்

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

ஒழுங்குப் பிரச்சினைகள்

53/4—A

கவன ஈர்ப்பு

சட்டமுன்வடிவுகள்

சிறப்புக் கவன ஈர்ப்பு

சிறப்புக் குறிப்பு

தகவல் கோரல்

தனித் தீர்மானங்கள்

பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

வரவு-செலவுத் திட்ட பொது விவாதம், மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம் மற்றும் இதர நிதி அலுவல்கள்

போன்றவை வருவதால் அவை 'பொருள் அட்டவணை'-யில் இடம் பெறவில்லை.

'பெயர் அட்டவணையில்' ஒவ்வொரு உறுப்பினரது பெயரின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு குறிப்பின் இறுதியிலும் அவ்வுறுப்பினர் அவையில் எந்தத் தலைப்பின்கீழ் உரையாற்றினார் என்பதைக் குறிக்கும் வகையில் அடைப்புகளுக்குள் அதுபற்றிய சுருக்கங்கள் கொடுக்கப்பட்டிருக்கும். எடுத்துக்காட்டாக (ஒ.பி.) என்று போடுவது ஒழுங்குப் பிரச்சினையையும், (க.ஈ.) என்று போடுவது கவன ஈர்ப்பையும், (ஒ.தீ.) என்று போடுவது ஒத்திவைப்புத் தீர்மானத்தையும், (அ.) என்று போடுவது அறிக்கையையும், (வி.) என்று போடுவது வினாவையும் குறிக்கும். இவ்வட்டவணையில் பயன்படுத்தப் பட்டுள்ள சில சுருக்கங்களின் விளக்கம் கீழே கொடுக்கப் பட்டுள்ளது:—

அ.	..	அறிக்கை
அ.வி.	..	அரைமணி விவாதம்
கு.வி.	..	குறுகிய காலவிவாதம்
பொ.வி.	..	பொது விவாதம்
ஆ.உ.	..	ஆளுநர் உரை
உ.பி.	..	உரிமைப் பிரச்சினை
ஒ.பி.	..	ஒழுங்குப் பிரச்சினை

A—1

க.ஈ.	..	கவன ஈர்ப்பு
சி.க.ஈ.	..	சிறப்புக் கவன ஈர்ப்பு (Special mension)
க.ஈ.அ.	..	கவன ஈர்ப்பு அறிக்கை
சி.கு	..	சிறப்புக் குறிப்பு
அ.நி.	..	சட்ட முன்வடிவின் அறிமுக நிலை
ஆ.நி.	..	சட்டமுன்வடிவின் ஆய்வு நிலை
த.கோ.	..	தகவல் கோரல்
த.வி.	..	தன்னிலை விளக்கம்
தீ.	..	தீர்மானம்
ஒ.தீ.	..	ஒத்திவைப்புத் தீர்மானம்
த.தீ.	..	தனித் தீர்மானம்
வ.செ.தி.	..	வரவு-செலவுத் திட்டம்
மா.கோ.	..	மானியக் கோரிக்கை
து.மா.கோ.	..	துணை மானியக் கோரிக்கை.
மி.மா.கோ.	..	மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கை.
வி.	..	வினா.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

சில குறிப்பகளைப் பொறுத்தவரையில் அவ்வாறு அடைப்புகளுக்குள் சுருக்கங்கள் கொடுக்கப்படுவதில்லை. ஏனெனில் அக்குறிப்புகளே தேவையான விளக்கத்தைத் தன்னகத்தே கொண்டிருக்கும். மூல வினாவிற்குரிய தலைப்புப் பொருளே, துணை வினாக் குறிப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

தலைவர், துணைத் தலைவர் மற்றும் மாற்றுத் தலைவர் ஆகியோரின் தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும் 'பெயர் அட்டவணை'-யில் "தலைவர்" என்ற தலைப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

பொருள் அட்டவணையில் வரும் பல்வேறு பொருள்களைப் பொறுத்தவரையில் அவை உரிய பொதுத் தலைப்புகளின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக 'கல்விக் கூடங்கள்' என்ற பொதுத் தலைப்பின் கீழ் பள்ளிகள், கல்லூரிகள், பாலிடெக்னிக் பயிற்சிக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, விவசாயக் கல்லூரி, ஆகியவை இடம்பெறும்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படியான
பத்தாவது சட்டமன்றப் பேரவையின்
ஒன்பதாவது கூட்டத்தொடர்.

1995 ஏப்ரல் 6, 7 மற்றும் 10

(தொகுதி 70....எண்கள் 1—3)

(1) உள்ளடக்கம்.

	பக்கங்கள்
தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்	iii—vi
Personnel of the Government of Tamil Nadu	vii—x
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்	xi—xiv
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)	xv—xxv
அறிக்கை அளித்தல்—	
சட்ட விதிகள் ஆய்வுக் குழு	380
பொதுக் கணக்குக் குழு ..	49
ஒழுங்குப் பிரச்சினை—	
உறுப்பினர் திரு. ச. அழகிரி 29-3-1995 அன்று அவையில் தெரிவித்த ஒரு கருத்து ..	505—510
கவன ஈர்ப்பு—	
இராமநாதபுரம் அரண்மனையும் அங்குள்ள ஓவியங்கள், போர்க் கருவிகளும் மாசு படிந்து பழுதடைந்துள்ளது குறித்து ..	377—380
கல்வராயன் மலைவாழ் மக்கள் மின் விநியோகமின்மையால் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து ..	511—513
சோலைவ உக்கடம், பெரியகுளம் ஏரிப் பகுதிகளில் பழுதடைந்துள்ள தடுப்பு அணையைப் புதுப்பிக்க வேண்டிய அவசியம் குறித்து ..	374—377

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

கவன ஈர்ப்பு— தொடர்ச்சி — பக்கங்கள்.

சிவகாசி லவ்லி கெமிக்கல்ஸ் நிறுவனப் புகையினால் சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படுவது குறித்து .. 44—49

திருவிடைமருதூர் அருகிலுள்ள காவிரி பாலம் செப்பனிடப்பட வேண்டியதன் அவசியம் குறித்து .. 42—44

சிறப்புக் கவன ஈர்ப்பு—

காரைக்குடியில் குடிநீர்ப் பிரச்சினையை முன் வைத்து உண்ணாவிரதம் மேற்கொள்ளப் படுவது குறித்து .. 364—374

நாகப்பட்டினம் கடல் பகுதியில் 19 மீனவர்கள் காணாமல் போனது குறித்து .. 503—505

தகவல் கோரல்—

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை குறித்து 374

பேரவைத் தலைவரின் அனுமதியின்றி தொலை காட்சியினர் கேமிரா சகிதம் அவை வளாகத்திற்குள் வந்தது குறித்து—பேரவைத் தலைவரின் அறிவிப்பு .. 586

ராஜினாமா செய்வதாகத் தெரிவித்த சில காங்கிரஸ் உறுப்பினர்கள் அவைக்கு வந்திருப்பது குறித்து .. 502

பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 131, 463, 601

மானியக் கோரிக்கைகள், 1995-96, விவாதமும் வாக்கெடுப்பும்—

மாநில ஆயத் தீர்வைத் துறை
காவல் துறை தீயணைப்புப் பணிகள் .. 49—131, 381—463, 513—596

மோட்டார் வண்டிகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம்

சாலைப் போக்குவரத்துப் பணிகளும், கப்பல் போக்குவரத்தும்

சாலைப் போக்குவரத்துப் பணிகள் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு .. 597—600

வினாக்கள்—விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் .. 1—42, 307—363, 459—502

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

நடவடிக்கைகளின் அட்டவணை

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் படியான பத்தாவது சட்டமன்றப் பேரவையின் ஒன்பதாவது கூட்டத் தொடர்

1995 ஏப்ரல் 6, 7 மற்றும் 10

(தொகுதி 10—எண்கள் 1-3)

(2) பெயர் அட்டவணை

பக்கங்கள்

அ

அமர்நாத், திரு. ஓ. எஸ்.—

உணவு விடுதிகள், ஜனதா சாப்பாடு வழங்க வற்புறுத்தல் (வி.) .. 8—10

அரங்கநாதன், திரு. ஆர். டி.—

விருத்தாச்சலம், மாவட்டப் பதிவாளர் அலுவலகம் அமைத்தல் (வி.) .. 462—464

அர்ச்சுனன், திரு. க.—

உடல் ஊனமுற்றோர், வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்தோர் எண்ணிக்கை மற்றும் வேலைவாய்ப்பில் முன்னுரிமை (வி.) 492—493

அழகிரி, திரு. ச.—

உறுப்பினர்—29-3-1995 அன்று சில தேசத் தலைவர்கள் குறித்து அவையில் தெரிவித்த ஒரு கருத்து (ஓ. பி.) .. 510

'ஆ'

பக்கங்கள்.

ஆசைமணி, திரு. எஸ்.—

திருவிடைமருதூர் அருகிலுள்ள காவிரிப் பாலம், வெள்ளத்தால் சேதம், செப்பனிடப்படாமை (க.ஈ.) ... 42, 43—44

புளியஞ்சேரி, கால்நடை மருந்தகம் அமைத்தல் (வி.) .. 20—21

ஆண்டித்தேவர், திரு. எஸ்.—

பதவி விலகுவதாகத் தெரிவித்த சில காங்கிரஸ் உறுப்பினர்கள், அவைக்கு வந்துள்ளமை (த.கோ.) ... 502

மா.கோ., 1995—96—

மோட்டார் வண்டிகள் குறித்து சட்டங்கள் நிருவாகம்

சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும்

சாலைப் போக்குவரத்துப் பயணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு .. 598—599, 599—600

ஆனந்தன், திரு. எம்.—

சேலம் மாவட்டம், பச்சைமலை ஓடைக் காட்டுப் புதூர், பழங்குடியினர் உறைவிட நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளியாக்குதல் (வி.) ... 501

'இ'

இந்திரகுமாரி, திருமதி இரா.—

அருப்புக்கோட்டை தொகுதி, நரிக்குடி, நூற்பாலை அமைத்தல் (வி.) ... 33—35

இ—தொடர்ச்சி.

இந்திரகுமாரி, திருமதி இரா.— தொடர்ச்சி

அவினாசி தொகுதி, பனந்தோப்புமயில் ஆதி திராவிடர் குடியிருப்பு, சத்துணவு மையம் அமைத்தல் (வி.) .. 337— 339

குறிஞ்சிப்பாடி, உற்பத்தியாகும் கைத்தறித் துணிகள்; ஏற்றுமதி (வி.) .. 31— 33

சத்துணவுத் திட்டம், வாரமொரு முறை குழந்தைகளுக்கு ஆட்டிறைச்சி வழங்கல் (வி.) .. 481— 485

நெசவாளர்கள், சலுகைகள் பெற அடையாள அட்டைகள் வழங்கல் (வி.) .. 485— 488

நெசவாளர் சங்கங்களிலிருந்து கோ-ஆப்டெக்ஸ் கொள்முதல், இலாப விகிதத்தினை உயர்த்துதல் (வி.) .. 336— 337

இராமசாமி, திரு. சி.—

ஓரிதழ் தாமரை மூலிகை, உற்பத்திக்கு அரசு ஊக்குவிப்பு (வி.) .. 334, 335

கல்வராயன் மலைப்பகுதி, மின் விநியோகம் இல்லாததால் மூன்று மாதங்களாக தெரு விளக்குகள் எரியாமை (க.ஈ.) .. 511— 513

இராமநாதன், திரு. இராம.—

சித்தா, ஆயுர்வேதா மற்றும் ஹோமியோபதி முறைகள், புதிய மருந்துகள் கண்டுபிடித்தல் (வி.) .. 322

மா.கோ., 1995— 96,

மாநில ஆயத் தீர்வைத் துறை காவல் துறை நியணைப்புப் டணிகள் .. 436

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இ—தொடர்ச்சி

பக்கங்கள்.

இராம வீரப்பன், திரு.—

உணவு விடுதிகள், ஜனதா சாப்பாடு வழங்க வற்புறுத்தல் (வி.) .. 8—12

கிருஷ்ணகிரி ஒன்றியம், பாலகுறி கிராமம், நியாய விலைக் கடை தொடங்குதல் (வி.) 310—313

குறிஞ்சிப்பாடி தொகுதி, எல்லப்பன்பேட்டை, தனியே அமுதம் அங்காடி அமைத்தல் (வி.) 464—467

மா.கோ., 1995—96.

மாநில ஆயத் தீர்வைத் துறை

காவல் துறை

தீயணைப்புப் பணிகள் .. 95—96, 438

இராஜன் பாபு என்கிற தணிகை பாபு, திரு.கி.—

செங்கல்பட்டு தொகுதி, மணப்பாக்கம், பாலாற்றில் மணல் எடுத்தல், தனியாரின் உரிமத்தை ரத்து செய்து தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுமதி வழங்கல் (வி.) ... 480—481

மா.கோ., 1995—96—

மாநில ஆயத் தீர்வைத் துறை

காவல் துறை

தீயணைப்புப் பணிகள் 412—413

இராஜேந்திரன், திரு.பி.வி.—

உறுப்பினர் திரு.ச.அழகிரி 29–3–1995 அன்று சிலதேசத் தலைவர்கள் குறித்து அவையில் தெரிவித்த ஒரு கருத்து, (ஓ.பி.) .. 505, 506

பிற்பட்டோர் நலம், அம்பாசங்கர் குழு பரிந்துரைகள், செயல்படுத்துதல் (வி.) 351

இ— தொடர்ச்சி

பக்கங்கள்

இளம்வழுதி, திரு.—

மா.கோ., 1995—96—

மாநில ஆயத் தீர்வைத் துறை
காவல் துறை
தீயணைப்புப் பணிகள் .. 395—397, 399—401, 421—423

'ஈ'

ஈஸ்வரமூர்த்தி, திரு. பி.—

இராமநாதபுரம் மாவட்டம், கதர், பருத்தி மற்றும் பட்டு கூட்டுறவு, சங்கங்கள், சில விவரங்கள் (வி.) .. 498—499

கல்வராயன் மலைப்பகுதி, தேனீ வளர்ப்புப் பண்ணை அமைத்தல் (வி.) .. 39—41

மா.கோ., 1995 96—

மாநில ஆயத் தீர்வைத்துறை
காவல் துறை
தீயணைப்புப் பணிகள் .. 391

'க'

கண்ணப்பன், திரு.எஸ்.—

கல்வராயன் மலைப்பகுதி, மின் விநியோகம் இல்லாததால் மூன்று மாதங்களாக தெரு விளக்குகள் எரியாமை (க.ஈ.அ.) .. 511—513

கன்னியாகுமரி மாவட்டம், விளாத்துறை நீரேற்றுப் பாசனத் திட்டம், தற்போதைய நிலை (வி.) 501

கீழ்ப்பாவூர் ஒன்றியம், துத்திகுளம் கண்மாய் தூர் எடுத்தல் (வி.) .. 41

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பக்கங்கள்

கண்ணப்பன் திரு. எஸ்.—தொடர்ச்சி

கோவை உக்கடம், பெரியகுளம் ஏரி, தடுப்பு அணை பழுதடைந்துள்ளமை (க.ஈ.அ.) 375, 376, 377

சீர்காழி, புறவழிச் சாலை அமைத்தல் (வி). 328—330

திருப்பூர், புறவழிச் சாலை அமைத்தல் (வி.) 330—333

திருவிடைமருதூர் அருகிலுள்ள காவிரிப் பாலம், வெள்ளத்தால் சேதம், செப்பனிடப் படாமை (க.ஈ.அ.). 42—43, 44

நாகூர், நகர நுழைவாயிலில் உள்ள பாலம், புதுப்பித்தல் (வி.) 22—23

பூம்புகார் தொகுதி, பிள்ளைபெருமாள் நல்லூர், அனுமின் நிலையம் அமைத்தல் (வி.). 471—472

மா.கோ.., 1995—96—

மாநில ஆயத் தீர்வைத் துறை

காவல் துறை

தீயணைப்புப் பணிகள் .386—387, 410, 450, 585—586

கந்தசாமி, திரு, கே.—

பச்சைமலை ஓடைக்காட்டுப் புதூர், பழங் குடியினர் உறைவிட நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளியாக்குதல் (வி.). 501

கவிநிலவு தர்மராஜ், திருமதி—

சத்துணவுத் திட்டம், வாரமொருமுறை குழந்தை களுக்கு ஆட்டிறைச்சி வழங்கல் (வி.) 481—483

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கு—தொடர்ச்சி.

பக்கங்கள்

கற்பகம் இளங்கோ, திருமதி—

காரைக்குடி, குடிநீர்ப் பிரச்சினையை முன் வைத்து உண்ணாவிரதம் (சி.க.ஈ.) 365—366, 367

கனகவல்லி, திருமதி என்.—

இருக்கன்குடி, மாரியம்மன் கோவிலுக்குச் செல் லும் வழியில் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல் (வி.) 343—344

விளாத்திகுளம், அரசு மேல்நிலைப் பள்ளி, கூடுதல் கட்டிடம் கட்டுதல் (வி.) 41—42

காஞ்சி பன்னீர்செல்வம், திரு.—

அருப்புக்கோட்டை தொகுதி, நரிக்குடி, நூற் பாலை அமைத்தல் (வி.) 52

சத்துணவுத் திட்டம், வாரமொரு முறை குழந்தைகளுக்கு ஆட்டிறைச்சி வழங்கல் (வி.) 484

செங்கல்பட்டு தொகுதி, மணப்பாக்கம் பாலற் றில் மணல் எடுத்தல், தனியாரின் உரிமத்தை ரத்து செய்து தொழில் கூட்டுறவுச் சங்கங் களுக்கு அனுமதி அளித்தல் (வி.) 476—477

காந்திராஜன், திரு. ச.—

சட்டவிதிகள் ஆய்வுக் குழு அறிக்கை அளித்தல் 380

மா.கோ., 1995—96—

மாநில ஆயத் தீர்வைத் துறை,

காவல் துறை,

தீயணைப்புப் பணிகள் 400

காளிராஜன், டாக்டர் மு.—

அறுவை சிகிச்சை செய்துகொள்ளும் நோயாளி கள், கட்டாய 'எய்ட்ஸ்' நோய் பரிசோதனை செய்தல் (வி.) 14—15

க—தொடர்ச்சி

பக்கங்கள்

கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ.—

எடைகள், அளவைகள், ஓராண்டுக்கு ஒருமுறை அல்லாமல் ஈராண்டுக்கு ஒருமுறை சோதித்து முத்திரையிடுதல் (வி.) 460—462

மா. கோ., 1995-96—

மாநில ஆயத் தீர்வைத் துறை
காவல் துறை
தீயணைப்புப் பணிகள். 424—425, 589—590

கிருஷ்ணன், திரு. என். எம்.—

கல்வராயன் மலைப்பகுதி, மின் விநியோகம் இல்லாததால் மூன்று மாதங்களாகத் தெரு விளக்குகள் எரியாமை (க.ஈ.) 512

கிருஷ்ணன், திரு. கு. ப.—

ஓரிதழ் தாமரை மூலிகை, உற்பத்திக்கு அரசு ஊக்குவிப்பு (வி.) 334, 335

புதுக்கோட்டை தொகுதி, வைத்தூர், வேளாண்மை விரிவாக்கத் துணை மையம் அமைத்தல் (வி.) 475

வேளாண்மைத் துறை துணை இயக்குநர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்களின் நேர்முக உதவியாளர்களாக நியமிக்கப்பட்ட பிறகு திட்டங்களில் முன்னேற்றம், விவரம் (வி.) 25—28

குழந்தைவேலு, திரு. சி.—

சித்தன்னவாசல், சுற்றுலா மையமாக்கல் (வி.) 496—497

புதுக்கோட்டை தொகுதி, வைத்தூர், வேளாண்மை விரிவாக்கத் துணை மையம் அமைத்தல் (வி.) 475

க—தொடர்ச்சி

பக்கங்கள்

கோடிமாரி, திரு. ஆர்.—

நாகூர், நகர நுழைவாயிலில் உள்ள பாலம், புதுப்பித்தல் (வி.) 22—23

நாகை தொகுதி, அக்கரைப்பேட்டையைச் சேர்ந்த மீனவர்கள், 3—4—1995 அன்று கோடிக்கரை பகுதியில் மீன பிடித்துக் கொண்டிருந்தபோது கடத்திச் செல்லப் பட்டமை (சி.க.ஈ.) 504

கோபால், டாக்டர் க.—

நன்னிலம் தொகுதி, திட்டச்சேரி—குத்தாலம் (வழி) நரிமணம், பேருந்து இயக்குதல் (வி.) 326—327

'ச'

சக்குபாய் தேவராஜ், திருமதி டி.—

திருவள்ளூர், மகளிர் தொழிற் பயிற்சி நிலையம் தொடங்குதல் (வி.) 341—342

சஞ்சய் ராமசாமி, திரு.—

மா. கோ., 1995-96—

மாநில ஆயத் தீர்வைத் துறை
காவல் துறை
தீயணைப்புப் பணிகள் 403, 588

சண்முகம், திரு. எஸ். வி.—

மா. கோ., 1995-96—

மாநில ஆயத் தீர்வைத் துறை
காவல் துறை
தீயணைப்புப் பணிகள் 582

சத்தியமூர்த்தி, திரு. வ.—

மா. கோ., 1995-66—

மாநில ஆயத் தீர்வைத் துறை
காவல் துறை
தீயணைப்புப் பணிகள் 210

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

சு—தொடர்ச்சி.

பக்கங்கள்

சந்திரசேகர், திரு. வி. பி.—

அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் நோயாளி கள், கட்டாய 'எய்ட்ஸ்' நோய் பரிசோதனை செய்தல் (வி.) 15

மா. கோ., 1995—96—

மாநில ஆயத் தீர்வைத் துறை
காவல் துறை
தீயணைப்புப் பணிகள். 425—434

சரஸ்வதி, திருமதி அ. தி.—

கொத்தமங்கலம், ராஜன் நகர் கூட்டுக் குடி நீர்த் திட்டம், விரைவில் செயல்படுத்துதல் (வி.) 37—38

சத்துணவுத் திட்டம், வாரமொரு முறை குழந்தை களுக்கு ஆட்டிறைச்சி வழங்கல் (வி.) 483

சரோஜா, டாக்டர் வெ.—

மாரடைப்பால் தாக்கப்பட்டோர், முதலுதவி அளிக்க கிராமப்புற மருத்துவர்களுக்கு சிறப்புப் பயிற்சி (வி.) 12—13

சிங்காரம், திரு. ஆர்.—

உறுப்பினர் திரு. ச. அழகிரி 29—3—1995 அன்று சில தேசத் தலைவர்கள் குறித்து அவையில் தெரிவித்த ஒரு கருத்து (ஒ.பி.) 505—510

மா.கோ.-1995-96—

மாநில ஆயத் தீர்வைத் துறை
காவல் துறை
தீயணைப்புப் பணிகள். 50, 52, 54—64, 95, 411, 592, 594, 596

பக்கங்கள்

சிங்காரம், திரு. ஆர்.— தொடர்ச்சி

மா. கோ. 1995-96 —தொடர்ச்சி

மோட்டார் வண்டிகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம்

சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும்.

சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு. 597—598, 599

சிங்கை கோவிந்தராசு, திரு.—

ஒண்டிப்புதூர், அரசு ஆண்கள் உயர்நிலைப் பள்ளி, அறிவியல் ஆய்வுக்கூடம் கட்டுதல் (வி.). 491—492

சிவசுப்பிரமணியன், திரு. கு.—

எல்லப்பன்பேட்டை, தனியே அமுதம் அங்காடி அமைத்தல் (வி.). 464—467

குறிஞ்சிப்பாடி, உற்பத்தியாகும் கைத்தறித் துணிகள், ஏற்றுமதி (வி.) 31—32

சின்னசாமி, திரு. ம.—

ஆரணி தொகுதி, 'சிப்காட்' தொழிற்சாலை வளாகம் அமைத்தல் (வி.). 30—31

சிவகாசி, லவ்லி கெமிக்கல்ஸ் நிறுவனம், தொழிற்சாலைப் புகையினால் சுற்றுப்புறச் சூழல் பாதிப்பு (க. ஈ. அ.). 44—49

செங்கல்பட்டு தொகுதி, மணப்பாக்கம், பாலாற்றில் மணல் எடுத்தல், தனியாரின் உரிமத்தை ரத்து செய்து தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுமதி வழங்கல் (வி.) 476—481

ச—தொடர்ச்சி.

பக்கங்கள்

சின்னசாமி, திரு. வி. கே.—

நம்பியூர், அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப்பள்ளியாக்குதல் (வி.) 489—491

மா. கோ., 1995—96—

மாநில ஆயத் தீர்வைத் துறை. காவல் துறை, தீயணைப்புப் பணிகள். 64—74

சின்னப்பன் திரு. கே. கே.—

மா. கோ., 1995—96—

மாநில ஆயத் தீர்வைத் துறை. காவல் துறை, தீயணைப்புப் பணிகள். 583

சீனியம்மாள், டாக்டர் மு.—

சித்தா, ஆயுர்வேதா மற்றும் ஹோமியோபதி முறைகள், புதிய மருந்துகள் கண்டுபிடித்தல் (வி.) 321

பனந்தோப்புமயில் ஆதிதிராவிடர் குடியிருப்பு, சத்துணவு மையம் அமைத்தல் (வி.). 337, 338, 339

சீனிவாசன், திரு. ஆ. கு.—

பெர்ணமல்லூர், சார்நிலைக் கருவூலம்-அமைத்தல் (வி.). 1—3

சுந்தரதாஸ், திரு. மா.—

உத்ச்சிக்கோட்டை மற்றும் மாராயப்புரம் நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளாக்குதல் (வி.). 363

விளாத்துறை நீரேற்றுப் பாசனத் திட்டம், தற்போதைய நிலை (வி.) 501

ச—தொடர்ச்சி.

	பக்கங்கள்
சுந்தரராஜ், டாக்டர் எஸ்.—	
இராமநாதபுரம் மாவட்டம், கதர், பருத்தி மற்றும் பட்டு கூட்டுறவுச் சங்கங்கள், சில விவரங்கள் (வி.).	497—499
சித்தா, ஆயுர்வேதா மற்றும் ஹோமியோபதி முறைகள், புதிய மருந்துகள் கண்டு பிடித்தல் (வி.)	316
நெசவாளர்கள், சலுகைகள் பெற அடையாள அட்டைகள் வழங்கல் (வி.)	487
வேளாண்மைத் துறை துணை இயக்குநர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்களின் நேர்முக உதவியாளர்களாக நியமிக்கப்பட்ட பிறகு திட்டங்களில் முன்னேற்றம், விவரம் (வி.)	27—28
சுந்தரவேல், திரு. ஏ. கே. சி.—	
எடைகள், அளவைகள், ஓராண்டுக்கு ஒருமுறை அல்லாமல் ஈராண்டுக்கு ஒருமுறை சோதித்து முத்திரையிடல் (வி.)	459—461
நெசவாளர்கள் சலுகைகள் பெற அடையாள அட்டைகள் வழங்கல் (வி.)	487—488
சுப்பிரமணியன், திரு. வி.—	
கயத்தூர் - வெட்டிக்காடு, இணைக்க சங்கிரா பரணி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல் (வி.)	484—495
சுப்புரத்தினம், திரு. ஆ.—	
மா.கோ.: 1995-96—	
மாநில ஆயத்தீர்வைத் துறை, காவல் துறை, தீயணைப்புப் பணிகள்	104—116
வேளாண்மைத் துறை துணை இயக்குநர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்களின் நேர்முக உதவியாளர்களாக நியமிக்கப்பட்ட பிறகு திட்டங்களில் முன்னேற்றம்: விவரம் (வி.)	25—26

பங்கங்கள்

சுவாமிநாதன், திரு. சி.—

வைத்தூர், வேளாண்மை விரிவாக்கத் துணை மையம் அமைத்தல் (வி.) 475

செங்கோட்டையன் திரு. கே.ஏ.—

அரசு போக்குவரத்துக் கழகங்களின் பழைய பேருந்துகள், சலுகை விலையில் மகளிர் அமைப்புகள் மற்றும் அரசு சார்பில்லாத சேவை அமைப்புகளுக்கு விற்றல் (வி.) 323—324

திருச்சிராப்பள்ளி பாய்லர் தொழிற்சாலை—நாகர்கோவில்— கன்னியாகுமரி, பேருந்து விடுதல் (வி.) 17—18

திருவண்ணாமலை— வளையல்காரகுளம் (வழி) காப்பனூர், சோழங்குப்பம், காங்கேயனூர், நம்மியத்தூர், பியம்பட்டு, பேருந்து விடுதல் (வி.) 19—20

நன்னிலம் தொகுதி, திட்டச்சேரி— குத்தாலம் (வழி) நரிமணம், பேருந்து இயக்குதல் (வி.) 324— 327

மா.கோ., 1995–96—

மாநில ஆயத்தீர்வைத் துறை

காவல் துறை

தீயணைப்புப் பணிகள் 98—110
403—404

மா.கோ., 1995— 96—

மோட்டார் வண்டிகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம்

சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும்

சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு 597—600

செல்வகணபதி, திரு. டி.எம்.—

அம்பாசமுத்திரம், பேருந்து நிலையம்; அபிவிருத்தி செய்தல் அல்லது புதிதாக அமைத்தல் (வி.) 345— 348

பக்கங்கள்

செல்வகணபதி, திரு. டி.எம்.—தொடர்ச்சி

காரைக்குடி, குடிநீர்ப் பிரச்சினையை முன்வைத்து உண்ணாவிரதம் (சி.க.ஈ.) — 368—374

சத்தியமங்கலம் தொகுதி, கொத்தமங்கலம், ராஜன் நகர், கூட்டுக் குடிநீர்த் திட்டம், விரைவில் செயல்படுத்துதல் (வி.) — 37—39

சாத்தூர் ஒன்றியம், இருக்கன்குடி, மாரியம்மன் கோவிலுக்குச் செல்லும் வழியில் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல் (வி.) — 343—345

விக்கிரவாண்டி ஒன்றியம், கயத்தூர்—வெட்டிக்காடு, இணைக்க சங்கராபரணி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல் (வி.) — 494—496

செல்வராஜ், திரு. கே.—

உக்கடம் மற்றும் கெம்பட்டி காலனி குடிசைப் பகுதி, குடிசைப் பகுதி மாற்று வாரிய வீடுகள் கட்டுதல் (வி.) — 473—474

கோவை, உக்கடம், பெரியகுளம் ஏரி, தடுப்பு அணை பழுதடைந்துள்ளமை (க.ஈ.) — 375, 376

சித்தா, ஆயுர்வேதம் மற்றும் ஹோமியோபதி முறைகள், புதிய மருந்துகள் கண்டுபிடித்தல் (வி.) — 317

பொதுக் கணக்குக் குழு, அறிக்கைகள் அளித்தல் — 49

மா.கோ., 1995-96—

மாநில ஆயத்தீர்வைத் துறை,

காவல் துறை

தீயணைப்புப் பணிகள் — 51, 428, 456—462, 582, 591—592, 595

'ச'—தொடர்ச்சி.

செழியன், திரு. தா.—

பெரம்பலூர் வட்டம், மேட்டூர், ஆட்கொல்லி நோய் ஒன்றினால் குழந்தைகள் இறப்பு (வி.) 470

சொக்கலிங்கம், திரு. பி.—

செங்கல்பட்டு தொகுதி, மணப்பாக்கம், பாலாற்றில் மணல் எடுத்தல், தனியாரின் உரிமத்தை ரத்துசெய்து தொழில்கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுமதி அளித்தல் (வி.) 476

சோமசுந்தரம், திரு. எஸ்.டி.—

குளித்தலை தொகுதி, தோகைமலை, பத்திரப் பதிவாளர் அலுவலகம் திறத்தல் (வி.) 308—309

பவானி வட்டம், மாத்தூர், ஆதி திராவிடர்கள் குடியேற ஒதுக்கப்பட்ட புறம்போக்கு, வனத் துறை எடுத்துக் கொண்டமை (வி.) 4—8

மா.கோ., 1995–96—

மாநில ஆயத்தீர்வைத் துறை
காவல் துறை
தீயணைப்புப் பணிகள் 99—100, 387,388, 390,391, 392, 401, 413

விருத்தாசலம், மாவட்டப் பதிவாளர் அலுவலகம் அமைத்தல் (வி.) 462—464

'த'

தங்கராஜ், திரு. ஆர்.—

லால்குடி வட்டம், மகிழம்பாடி, கால்நடை மருத்துவமனை அமைத்தல் (வி.) 327

TRUTH ALONE TRIUMPHS

பக்கங்கள்

தங்கவேல், திரு. எம்.—

மண்ணச்சநல்லூர், சார்நிலைக் கருவூலம் அமைத்தல் (வி.) 500

தமிழரசன், திரு. செ.கு.—

மா.கோ.] 1995–96—

மாநில ஆயத்தீர்வைத் துறை
காவல் துறை
தீயணைப்புப் பணிகள் 381—395

தம்புசாமி, திரு. வே.—

அறிவிக்கை கொடுத்த பிரச்சினை, எடுத்துக் கொள்ளுதல் (த. கோ.) 374

செங்கல்பட்டு தொகுதி, மணப்பாக்கம், பாலாற்றில் மணல் எடுத்தல், தனியாரின் உரிமத்தை ரத்து செய்து தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுமதி வழங்கல் (வி.) 429

நாகை தொகுதி, அக்கரைப் பேட்டையைச் சேர்ந்த மீனவர்கள், 3–4–1995 அன்று கோடியக்கரை பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது கடத்திச் செல்லப்பட்டமை (சி.க.ஈ.) 503

மா.கோ.. 1995–96—

மாநில ஆயத்தீர்வைத் துறை

காவல் துறை

தீயணைப்புப் பணிகள் 51, 52—53, 82—104, 542, 546, 581, 595, 596

'த'—தொடர்ச்சி.

பக்கங்கள்.

தலைவர்—

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—

அவையில் பயன்படுத்தப்படும் சொற்கள், சொற்றொடர்கள்—

ஓர் உறுப்பினர் பயன்படுத்திய ஒரு சொல்லுக்குப் பதிலாக ''உண்மைக்குப் புறம்பாக என'' மாற்றிக் கொள்ளுமாறு குறிப்புரைக்கப்பெற்றது. 487–488,

''சிறப்புக் கவன ஈர்ப்பு'' என்ற முறையில் ஒரு பொருள் குறித்துப் பேசிய ஓர் உறுப்பினர் ''சில புல்லுருவிகள் இதனைத் தவறாகப் பயன்படுத்தி......'' என்று குறிப்பிட்டதை இன்னொரு உறுப்பினர் ஆட்சேபித்தபோது, பின்வருமாறு குறிப்புரைக்கப் பெற்றது:

''உறுப்பினர் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. பொதுவாக தவறானவர்கள் கூட உள்ளே நுழைந்து கொண்டு செய்கிறார்கள் என்ற அர்த்தத்திலே சொல்லுகிறார்கள்'' 366

உறுப்பினர் ஒருவர் 29—3—1995-ஆம் நாளன்று அவையில் தெரிவித்த ஒரு கருத்து குறித்து—

உறுப்பினர் ஒருவர் 29—3—1995-ஆம் நாளன்று அவையில் பேசியபோது இரு தலைவர்களின் தலைமுறைகள் முன்னேற்றம் குறித்துப் பேசிய கருத்து குறித்து இன்னொரு உறுப்பினர் 10—4—1995-ஆம் நாளன்று ஒழுங்குப் பிரச்சினை எழுப்பியதற்குப் பிறகும், அதையொட்டி எழுந்த விவாதத்திற்குப் பிறகும் தலைவர் அளித்த குறிப்புரைகளின் தொகுப்பு வருமாறு :

''ஏற்கனவே இந்த அவையில் அது பற்றிக் கேட்டு, சம்பந்தப்பட்ட உறுப்பினர் வந்தவுடன் நீங்கள் அது பற்றிக் கேட்கலாம் என்று நான் அறிவுறுத்தியிருக்கிறேன்.

பக்கங்கள்.

தலைவர்—தொடர்ச்சி.

திர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

உறுப்பினர் ஒருவர் 29—3—1995-ஆம் நாளன்று அவையில் தெரிவித்த ஒரு கருத்து குறித்து—தொடர்ச்சி.

"..அதைப்போல, அவர் இன்றைக்கு அதுபற்றி எழுப்புகிறார். ஏற்கனவே பேசப்பட்ட ஒரு குறிப்புக்கு அவர் வருத்தம் தெரிவிக்க வேண்டும் அல்லது மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று உறுப்பினர் கேட்கிறார். அதை நான் வற்புறுத்த முடியாது என்று நான் ஏற்கெனவே அவரிடம் சொல்லியிருக்கிறேன்.

..அவர்கள் மன்னிப்பு கேட்பது கேட்காதது அவர்களைப் பொறுத்தது. மன்னிப்பு கேட்டுத்தான் தீரவேண்டும் என்று நான் வற்புறுத்த முடியாது. ஆனால், நான் ஏற்கனவே சொன்னது போல அன்றைய தினம் எழுப்பப்பட்ட வேறு ஒரு பிரச்சினைக்கு அவர் உதாரணமாக மகாத்மா காந்தியடிகளையும் ஜவஹர்லால் நேரு அவர்களையும் இழுத்தது தவறான கூற்று தான் என்பதை ஏற்கனவே நான் சொல்லியிருக்கிறேன். அது அவர்களைப் பொறுத்தது.

... உறுப்பினர் அன்றைக்குப் பேசியது தவறு என்பதை நான் சொல்லித்தான் ஆக வேண்டும்." 505—510

ஒழுங்குப் பிரச்சினை—நடைமுறைகள்—

அமைதி—

மானியக் கோரிக்கையின்மீது நடைபெற்ற விவாதத்தில் ஓர் உறுப்பினர் பேசிக் கொண்டிருந்தபோது, இன்னொரு உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினை இல்லாத ஒரு கருத்தை ஒழுங்குப் பிரச்சினையாக எழுப்பியபோது, அது ஒழுங்குப் பிரச்சினை இல்லை என்று குறிப்புரைக்கப்பட்டது1. 103

பக்கங்கள்.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—

ஒழுங்கு பிரச்சினை—நடைமுறைகள்—தொடர்ச்சி

ஒழுங்குப் பிரச்சினை எழுப்பும்போது இன்னொரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்புதல்—

10—4—1995-ஆம் நாளன்று ஓர் உறுப்பினர் 29—3—1995—ஆம் நாளன்று அவையில் தெரிவித்த ஒரு கருத்து குறித்து ஒழுங்குப் பிரச்சினை எழுப்பி பேசிக் கொண்டிருந்த போது இன்னொரு உறுப்பினர், இன்னொரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பியதை யொட்டி பின்வருமாறு குறிப்புரைக்கப் பெற்றது :

''உட்காருங்கள், ஏற்கனவே ஓர் உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினை கேட்டு பேச ஆரம்பிக்கிறார். அவர் ஆரம்பிக்கிற போதே, நீங்கள் ஒழுங்குப் பிரச்சினை கேட்கக் கூடாது." 506

கவன ஈர்ப்பு—நடைமுறைகள்—

விளக்கம் கோருதல்—

கவன ஈர்ப்பு ஒன்றுக்கு அமைச்சர் அளித்த அறிக்கையின் மீது விளக்கம் கேட்க அனுமதிக்கப்பட்ட உறுப்பினர் பத்திரிகைச் செய்திகள் பற்றிக் குறிப்பிட்டபோது, வாரப் பத்திரிகைச் செய்திகளை இங்கே குறிப்பிட வேண்டாம் என்று குறிப்புரைக் கப்பட்டது. 47

கவன ஈர்ப்பு ஒன்றுக்கு அமைச்சர் அறிக்கை அளித்த பிறகு, கவன ஈர்ப்பு கொடுத்த உறுப்பினர் விளக்கம் கோரிக் கொண் டிருந்தபோது, கவன ஈர்ப்பு கொடுக் காத இன்னொரு உறுப்பினர் விளக்கம் கேட்க விரும்பியபோது, அவ்வுறுப்பினர் விளக்கம் கேட்க முடியாது என்று குறிப் புரைக்கப்பெற்றது. 512

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

காங்கிரஸ் கட்சியினர் அவையில் நடந்துகொண்ட முறை குறித்து—பேரவைத் தலைவர் அறிவிப்பு—

10—4—1995-ஆம் நாளன்று காவல்துறை மானியக் கோரிக்கையின் மீது நடந்த விவாதத்திற்கு முதலமைச்சர் பதிலளிக்கத் துவங்கும்போது எதிர்க்கட்சியினர் அவையில் நடந்து கொண்ட முறை குறித்து பதிலுரைக்குப்பின் தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்:

".. முதலமைச்சர் அவர்களுடைய இந்த நல்ல விளக்கங்களை எல்லாம் கேட்பதற்கு மனம் இல்லாமல்தான் திட்டமிட்டு இங்கே தேவையற்ற முறையற்ற போக்குகளை எல்லாம் கடைப்பிடித்துவிட்டு, வெளியே போயிருக்கிறார்கள் என்றே கருதுகிறேன். வெளியே போய் ஒரு பச்சையான உண்மைக்குப் புறம்பான ஒரு செய்தியை வேறு சொல்லி விட்டுச் சென்றிருக்கிறார்கள். அதை மட்டும் நான் மறுக்க வேண்டி இருக்கிறது. இங்கேயிருக்கிற மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரும், மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சரும், மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சரும், அவரைப்போய் தாக்கப் போனார்களாம். இவ்வளவு பெரிய தடுப்பு இருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் வேறு அந்த இடத்திலேயிருந்து வராதீர்கள் என்று தடுத்திருக்கிறார்கள். அதையும் மீறி இங்கேயிருந்து எதிர்க்கட்சித் தலைவரை சமூகநலத்துறை அமைச்சர் அவர்கள் போய் தாக்கப் போனார்கள் என்று வெளியிலே போய் சொல்லியிருக்கிறார்கள்.

.. இந்தப் பக்கம் அவர்கள் திட்டமிட்டு ஒரு அசம்பாவிதத்தை உண்டாக்குகிற அளவுக்கு அவர்கள் நடந்து கொண்டிருந்தாலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

காங்கிரஸ் கட்சியினர் அவையில் நடந்துகொண்ட முறை குறித்து—பேரவைத் தலைவர் அறிவிப்பு தொடர்ச்சி

ஓரளவு தங்களுடைய உறுப்பினர்களை அமைதி காக்குமாறு அனுப்பிவிட்டார்கள்.

அதைக் கேட்க எந்த உரிமையும் இல்லாத எதிர்க்கட்சித் தலைவர்—இங்கே பேசக்கூடாது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்பதற்கு எந்த உரிமையும் எந்த அடிப்படையிலும் இல்லாத அந்த எதிர்க்கட்சித் தலைவர், முதலமைச்சரைப் பார்த்துக் கேட்டார் என்பதுதான் இன்னும் கண்டிக்கத்தக்க ஒரு செய்தியாகும்.

அதற்கு அடுத்து முறைகேடான ஒரு நேரத்திலே அவர் அதைக் கிளப்பினார் என்பதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப்போல இங்கே என்ன பிரச்சினையை பேரவைத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வந்து கிளப்ப வேண்டும் என்றாலும் கேள்வி நேரம் முடிந்தவுடன் எழுப்புவதுதான் இவ்வளவு காலமும் ஏற்றுக்கொண்ட ஒரு முறை. நான் கேள்வி நேரத்தை முடித்து விட்டு, இவர்களையும் அனுமதித்து அதற்குப் பிறகு பேரவை விதி 55-ன் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளை எடுத்துவிட்டேன் என்றால் பேரவை அடுத்த நடவடிக்கைகளுக்கு வந்துவிட்டது என்றுதான் அர்த்தம். அவற்றுக்குப் பிறகு முதலமைச்சர் அவர்களுடைய பதிலுரை என்பதுதான் அஜெண்டாவிலே இருக்கிறது. அப்போதுகூட முதலமைச்சர் அவர்கள் என்னுடைய பதிலுரை என்று நீங்கள் கூப்பிடுகிற நேரத்தில் என்னுடைய

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

காங்கிரஸ் கட்சியினர் அவையில் நடந்துகொண்ட முறை குறித்து—பேரவைத் தலைவர் அறிவிப்பு—தொடர்ச்சி

நேரத்தை எதிர்க்கட்சித் தலைவருக்குத் தருகிறேன், அவரை அழைத்துப் பேச வையுங்கள் என்று நான் கேட்பேன் என்று சொன்னார்கள். அதைக் கேட்க இருந்த நேரத்திலேதான் அவருடைய பெருந்தன்மைக்கு துளி அளவுகூட பொருந்தும் இல்லாதவர், எந்தத் தகுதியிலேயும் அடிப்படைத் தகுதியே இல்லாதவர் என்பதைக் காணுகின்ற வகையில் எதிர்க்கட்சித் தலைவர் இங்கே முறை தவறி நடந்தார். ஆகையினால்தான் அவரை வெளியேற்றி இருக்கிறேன். எனவே, அவரை வெளியேற்றி இருப்பது என்பது முறைகேடான ஒருவரை வெளியேற்றி இருக்கிறேன் என்பதுதான் அதனுடைய பொருள். ஆனால், நான் அதே நேரத்திலே அன்றையிலிருந்து திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறேன், இந்தச் சட்டமன்றத்திலே என்ன பிரச்சினையாக இருந்தாலும் உறுப்பினர்களுடைய பெரும்பான்மையை வைத்துத்தான் நாம் முடிவு எடுக்க வேண்டும். இந்தப் பேரவையின் பெரும்பான்மை என்கிறபோது மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் சொன்னது போல பெரும்பான்மையாக 161 உறுப்பினர்களுடைய ஒட்டுமொத்த ஆதரவை கொஞ்சம்கூட சிந்தாமல் சிதறாமல் சேதாரம் இல்லாமல் பெற்றிருக்கிற முதலமைச்சரை, ஒருவர் பதவியைவிட்டு விலகுங்கள் என்று கேட்கிற சொல்லே, அதுவே சட்டமீறல்தான் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

காங்கிரஸ் கட்சியினர் அவையில் நடந்துகொண்ட முறை குறித்து—பேரவைத் தலைவர் அறிவிப்பு—தொடர்ச்சி

. . இன்று ஆளும் கட்சியினர் அபரிமிதமான பொறுமை காட்டினீர்கள் என்பதை நானும் ஏற்றுக்கொள்கிறேன். நானும் பார்த்துக் கொண்டேதான் இருந்தேன், நீங்கள் அபரிமிதமான பொறுமை காட்டினீர்கள். ஆகையினாலே, அந்த ஒரு ஜனநாயக அமைப்பைப் பாதுகாக்கின்றவர்கள் என்ற நிலையிலே நாம் இருக்கிறோம். நடவடிக்கை எடுப்பது என்று சொன்னாலே, இன்றைக்கே நானே எதிர்க்கட்சித் தலைவர் மீது ஒட்டுமொத்தமாக எஞ்சிய செஷன் முழுவதற்குமான நடவடிக்கையை எடுக்க முடியும்.

. . அவர்கள்தான் இன்றைக்கு எல்லாத் தயாரிப்போடும் வந்தார்கள். எந்த அளவுக்கு ஆத்திரமூட்ட முடியுமோ, அந்த அளவுக்கு அவர்கள் ஆத்திரமூட்ட நீங்களும் பொறுமை இழந்து ஏதோ ஒன்று செய்வீர்கள், செய்ததற்குப் பிறகு வெளியே சென்று படம் எடுக்க வேண்டும் என்கிற தயாரிப்போடு வந்தவர்கள்தான். அதையும் மீறி நீங்கள் பொறுமையைக் காட்டி, நாம் ஜனநாயகவாதிகள் என்று நிலை நாட்டியிருக்கிறோம். ஆனால், அவர்கள் ஜனநாயகத்திற்குப் புறம்பானவர்கள், இந்தப் பேரவைக்கு வர லாயக்கற்றவர்கள் என்பதைக் காட்டிவிட்டுப் போய் இருக்கிறார்கள்." 584—594

பக்கங்கள்.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

குற்றச்சாட்டு நடைமுறைகள்—

ஒட்டுமொத்தமாகக் கூறுதல்—

மானியக் கோரிக்கையின் மீது நடைபெற்ற விவாதத்தில் 6—4—1995–ஆம் நாள் அன்று ஓர் உறுப்பினர் பங்குகொண்டு பேசியபோது ஒட்டுமொத்தமாக ஒரு குற்றச்சாட்டைக் குறிப்பிட்டபோது, அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டுமென்று தீர்ப்புரைக்கப்பெற்று பின்வருமாறு குறிப்புரைக்கப்பட்டது :

"முதலமைச்சர் உங்களைக் கேட்டது ஏதாவது ஒரு குறிப்பிட்ட சம்பவத்தைச் சொல்லுங்கள் என்பது. ஆனால் ஒட்டுமொத்தமாக நீங்கள் குற்றச்சாட்டைச் சொல்வது சரியல்ல. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது" 88

சிறப்புக் கவன ஈர்ப்பு—

காரைக்குடியில் குடிநீர்ப் பிரச்சினையை முன் வைத்து உண்ணாவிரதம் மேற்கொள்ளப்படுவது குறித்து—

காரைக்குடியில் குடிநீர்ப் பிரச்சினையை முன் வைத்து உண்ணாவிரதம் மேற்கொள்ளப்படுவது குறித்து, சிறப்புக் கவன ஈர்ப்பு என்ற முறையில் எழுப்ப அனுமதிக்கப்பட்டது.

உள்ளாட்சித் துறை அமைச்சர் பதில் அளித்தார். 364—374

நாகப்பட்டினம் கடல் பகுதியில் 19 மீனவர்கள் காணாமல் போனது குறித்து—

நாகப்பட்டினம் கடல் பகுதியில் 19 மீனவர்கள் காணாமல் போனது குறித்து சிறப்புக் கவன ஈர்ப்பு எழுப்ப அனுமதி அளிக்கப்பட்டது.

மீனவளத்துறை அமைச்சர் பதில் அளித்தார். 503—505

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி

திர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

சிறப்புக் கவன ஈர்ப்பு—நடை முறைகள்

அனுமதி—

ஒத்திவைப்புத் தீர்மானமாகக் கொடுக்கப்பட்ட ஒரு பிரச்சினை சிறப்புக் கவன ஈர்ப்பாக அனுமதிக்கப்பட்டது. 503—505

ஒரு பிரச்சினைக் குறித்து சில உறுப்பினர்கள் பேரவை விதி 56-ன் கீழ் ஒத்திவைப்புத் தீர்மானமாக ஏற்கப்பட வேண்டும் என்று கேட்டிருந்த அறிவிப்பை, சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்வதாக தலைவர் தெரிவித்தபோது பின்வருமாறு குறிப்புரைத்தார் :

''பேரவையில் காவல் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. முக்கிய விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிற நேரத்திலே, இந்தப் பிரச்சினையை ஒத்தி வைப்புத் தீர்மானமாக அனுமதிப்பதற் கில்லை என்று நேற்றைய தினமே நான் தெரிவித்திருந்தேன். இருந்தாலும் அது முக்கியமான பிரச்சினை என்று உறுப்பினர் கள் வற்புறுத்துகிற காரணத்தால் அதை சிறப்புக் கவன ஈர்ப்பாக அவையின் கவனத்திற்குக் கொண்டுவரலாம் என்று அனுமதிக்கிறேன்.'' 364

உரையாற்றும் முறை—

''சிறப்புக் கவன ஈர்ப்பு'' என்ற வகையில் ஒரு பிரச்சினையைப் பற்றி எழுப்ப அனு மதிக்கப்பட்ட உறுப்பினர் குறிப்பிட்ட பகுதியைப் பற்றிக் கேட்காமல், பல் வேறு பகுதிகளைக் குறிப்பிட்ட போது பின்வருமாறு குறிப்புரைக்கப்பெற்றது :

பக்கங்கள்.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

சிறப்புக் கவன ஈர்ப்பு—நடைமுறைகள்—தொடர்ச்சி

உறையாற்றும் முறை—தொடர்ச்சி.

"உறுப்பினர் திடீரென்று தமிழ்நாடு பூராவும் என்று ஆரம்பித்துவிட்டால் விவாதம் நீண்டு கொண்டே போகும். குறிப்பிட்ட ஊரோடு நிறுத்துங்கள்." .. 365

பதிலுரைக்குப் பின் விளக்கம் கோருதல்—

"சிறப்புக் கவன ஈர்ப்பு" என்ற முறையில் ஒரு பிரச்சினை எழுப்பப்பட்டு, அதற்கு அமைச்சர் பதிலளித்தபோது ஓர் உறுப்பினர் விளக்கம் கோர முயன்றபோது பின்வருமாறு குறிப்புரைக்கப்பெற்றது :

"அமைச்சர் அளித்த இந்த விளக்கத்தின் மீது உறுப்பினர் எதுவும் பேச முடியாது." 374

தகவல் கோரல்—நடைமுறைகள் அனுமதி—

வினா-விடை நேரம் முடிந்ததற்குப் பின்னர் ஓர் உறுப்பினர் எழுந்து ராஜினாமா செய்வதாக தெரிவித்த சில காங்கிரஸ் உறுப்பினர்கள் அவைக்கு வந்திருப்பது குறித்துத் தகவல் கோரியபோது பின்வருமாறு குறிப்புரைக்கப்பெற்றது :

"அது வேண்டாம். ஜனநாயக முறைப்படித்தான் நடக்கிறது என்பது உலகத்தில் எல்லோருக்கும் தெரியும்". .. 502

உறுப்பினர் கொடுத்துள்ள அறிக்கை குறித்து—

ஓர் உறுப்பினர் தாம் கொடுத்துள்ள அறிவிக்கை குறித்து தகவல் கோர முனைந்த போது பின்வருமாறு குறிப்புரைக்கப்பெற்றது :

'த'—தொடர்ச்சி.

பக்கங்கள்

தலைவர்— தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்— தொடர்ச்சி.

தகவல் கோரல்— நடைமுறைகள்— தொடர்ச்சி

உறுப்பினர்கள் கொடுதுள்ள அறிவிக்கை குறித்து — தொடர்ச்சி

"உறுப்பினர் கொடுத்திருக்கிற பிரச்சினையைப் பற்றிய முழு விவரமும் மத்திய அரசாங்கத்திடமிருந்து வரவேண்டி இருக்கிறது. இன்னொரு நாட்டிலிருந்தும் விவரங்களைச் சேகரித்துக் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, அந்த விவரங்களை எல்லாம் சேகரித்ததும் எடுத்துக் கொள்கிறேன்." .. 374

துணை வினா— அனுமதி—

மூல வினா கொடுத்த உறுப்பினர் அவையில் இல்லாததால் வேறொரு உறுப்பினர் ஒரு துணைக் கேள்வி கேட்க அனுமதிக்கப்பட்ட போது, பின்வருமாறு குறிப்புரைக்கப்பட்டது:

"இது இன்னொரு உறுப்பினருடைய கேள்வி. அதனால் நீங்கள் துணைக் கேள்வி ஒன்றுதான் கேட்கலாம்." .. 31

துணை வினா— கேட்கும் முறை—

துணை வினா கேட்க அனுமதிக்கப்பட்ட உறுப்பினர், உரையாற்றத் தொடங்கிய போது, கேள்வியாகக் கேட்குமாறு குறிப்புரைக்கப்பெற்றது. .. 32

துணை வினா கேட்க அனுமதிக்கப்பட்ட ஓர் உறுப்பினர் நீண்ட உரையாற்றிக் கொண்டிருந்த போது, தலைவர் அளித்த தீர்ப்புரைகளின் தொகுப்பு வருமாறு:

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தலைவர்—தொடர்ச்சி

திர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

துணை வினா—கேட்கும் முறை—தொடர்ச்சி

"துணைக் கேள்வியை ஒரு நிமிடத்தில் கேட்டு முடிக்க வேண்டும், முதலிலே துணைக் கேள்வி கேட்க 3 நிமிடங்கள் எடுத்திருக்கிறீர்கள்.

..... என்ன சிறப்பு இருந்தாலும் ஒரு நிமிடத்தில் துணைக் கேள்வி கேட்டு முடிக்க வேண்டும். அதுதான் சிறப்பு. விவரங்களையெல்லாம் அமைச்சர் சொல்லி விட்டார். கேள்வியாகக் கேளுங்கள். துணைக் கேள்வி கேட்க ஒரு உறுப்பினரே 6 நிமிடங்கள் எடுத்துக் கொண்டால், கேள்வியை எப்படி முடிக்க முடியும்?

.... நான் எல்லா உறுப்பினர்களையும் கேட்டுக் கொள்கிறேன். 20 கேள்விகளை ஒரு நாளில் 60 நிமிடங்களில் முடிக்க வேண்டும். ஒரு உறுப்பினரே 2 துணைக் கேள்விகளுக்கு 7 நிமிடங்கள் எடுத்துக் கொண்டால், 20 கேள்விகளை அந்த நேரத்திற்குள் எப்படி முடிக்க முடியும்? உறுப்பினர்கள் கேள்வியை மட்டும் கேட்க வேண்டும்." .. 6, 7

துணை வினா கேட்கும் உறுப்பினா மூலக் கேள்வியில் குறிப்பிடப்பட்டுள்ள இடம் பற்றித் தான் கேட்க வேண்டுமே தவிர, வேறு இடம் பற்றி கேட்கக் கூடாது என்று குறிப்புரைக்கப்பெற்றது. .. 480

மூலக் கேள்வி கேட்காத உறுப்பினருக்கு அவ்வினாவின் கீழ் துணைக் கேள்வி கேட்க ஒரு வாய்ப்புத்தான் அளிக்கப்படும். .. 470

த—தொடர்ச்சி

பக்கங்கள்

லவர்—தொடர்ச்சி.

ர்ப்புரைகளும்—குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

நீக்கம்—நடைமுறைகள்—

அவையில் இல்லாதோர் பற்றிப் பேசியது—

மானியக் கோரிக்கையின் மீது நடைபெற்ற விவாதத்தில் பங்கு கொண்டு பேசிய ஓர் உறுப்பினர், அவையில் இல்லாதோர் பற்றிப் பேசிய பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றது. .. 112,126

உள்நோக்கம் கற்பித்துப் பேசியது—

மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் 7—4—1995-ஆம் நாளன்று பங்கு கொண்டு பேசிய ஓர் உறுப்பினர் தனிப்பட்ட அலுவலருடைய நடவடிக்கை குறித்துப் பேசிய போது, அந்தப் பகுதியை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று தலைவர் குறிப்புரைத்து தெரிவித்ததாவது :

"..பேரவை விதிகளில் தனிப்பட்ட ஒரு அலுவலருடைய நடவடிக்கைகளை விவாதப் பொருளாக ஆக்கக் கூடாது என்று இருக்கிறது. எனவே, அது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது.

..நீங்கள் அதற்கு உள்நோக்கம் கற்பிப்பது கூடாது.

..நீங்கள் அந்தக் கோரிக்கையை வைப்பதோடு இருக்க வேண்டும்.

... நீங்கள் அதற்கு உள்நோக்கம் கற்பித்ததனால், அதை அவைக் குறிப்பிலேயிருந்து எடுத்தேன்." .. 404—405

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

நீக்கம்—நடைமுறைகள்—தொடர்ச்சி

குறைகூறிப் பேசியது—

மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு 7—4—1995-ஆம் நாளன்று ஓர் உறுப்பினர் பேசியபோது காவல் துறையைக் குறிப்பிட்டுப் பேசிய வார்த்தை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்பட வேண்டும் என்று குறிப்புரைக்கப்பெற்றது. .. 458

குற்றச்சாட்டுகள்—

மானியக் கோரிக்கையின் மீது நடைபெற்ற விவாதத்தில் 6—4—1995-ஆம் நாளன்று ஓர் உறுப்பினர் பங்கு கொண்டு பேசிய போது ஒட்டு மொத்தமாக ஒரு குற்றச்சாட்டைக் குறிப்பிட்டபோது, அது அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்பட வேண்டுமென்று தீர்ப்புரைக்கப்பெற்று பின்வருமாறு குறிப்புரைக்கப்பட்டது :

''முதலமைச்சர் உங்களைக் கேட்டது ஏதாவது ஒரு குறிப்பிட்ட சம்பவத்தைச் சொல்லுங்கள் என்பது. ஆனால் ஒட்டு மொத்தமாக நீங்கள் குற்றச்சாட்டைச் சொல்வது சரியல்ல. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.'' .. 88

தொடர்பின்றிப் பேசியது—

ஓர் உறுப்பினர் தொடர்பின்றிப் பேசிய பகுதி அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்பட்டது. .. 582

10—4—1995-ஆம் நாளன்று ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பிப் பேசிய ஓர் உறுப்பினர் குறிப்பிட்ட கருத்தை சில உறுப்பினர்கள் ஆட்சேபித்த போது பின்வருமாறு குறிப்புரைக்கப்பெற்றது :

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

நீக்கம்— நடைமுறைகள்—தொடர்ச்சி

தொடர்பின்றிப் பேசியது—தொடர்ச்சி.

"அதை விட்டு விடுவோம். அவ்வாறு பேசியிருந்தால் கண்டிக்கத்தக்கது.

....அதெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது." .. 509—510

பேரவைக்குள் அனுமதி—

பேரவைத் தலைவரின் அனுமதியின்றி தொலைக்காட்சியினர் கேமிரா சகிதம் அவை வளாகத்திற்குள் வந்தது குறித்து— பேரவைத் தலைவர் அறிவிப்பு—

பேரவைத் தலைவரின் அனுமதியின்றி தொலைக்காட்சியினர் கேமிரா சகிதம் அவை வளாகத்திற்குள் வந்தது குறித்து பேரவைத் தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

"எதிர்க் கட்சியினர் இதைத் திட்டமிட்டார்கள் என்பதற்கு இன்னொரு செய்தியை நான் பேரவைக்குச் சொல்லியாக வேண்டும். எதற்கு எடுத்தாலும் அவர்களுக்கு இப்போது பயன்பட்டு வருகிறார்களே, சென்னைத் தொலைக்காட்சி நிலையத்தினர், அவர்கள் பேரவை வளாகத்திற்குள்ளே அவர்களுடைய கேமிராவைக் கொண்டு வருவதாக இருந்தால் பேரவைத் தலைவருடைய அனுமதியைப் பெற்றுத்தான் கொண்டுவரவேண்டும். ஆனால், காலையிலேயே நான் பேரவையைத் தொடங்குவதற்கு முன்னமேயே அவர்கள் கேமிரா சகிதம் கொண்டு வந்து எதிர்க் கட்சித் தலைவருடைய அறையிலே வைத்திருந்ததை அறிந்து நான் காவலர்களை

தலைவர்—தொடர்ச்சி —பக்கங்கள்

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

பேரவைக்குள் அனுமதி—தொடர்ச்சி

பேரவைத் தலைவரின் அனுமதியின்றி தொலைக்காட்சியினர் கேமரா சகிதம் அவை வளாகத்திற்குள் வந்தது குறித்து—பேரவைத் தலைவர் அறிவிப்பு—தொடர்ச்சி

அனுப்பி என்னுடைய அனுமதியில்லாமல் டெலிவிஷன் நிலையத்தினர் இங்கே வந்து எதையும் படம் பிடிக்கக் கூடாது என்று நான் திருப்பி அனுப்பியிருக்கிறேன். இப்படி ஒரு அசம்பாவிதத்தை உருவாக்கி, அதைப் படமும் பிடிக்க வேண்டும் என்றெல்லாம் திட்டமிட்டு வந்தார்கள் என்கிற செய்தியையும் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.'' 586

விவாதம்—நடைமுறைகள்—

அவையில் இல்லாதோர் குறித்துப் பேசியது—

மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் 7—4—1995-ஆம் நாளன்று பங்கு கொண்டு பேசிய ஓர் உறுப்பினர் தனிப்பட்ட அலுவலருடைய நடவடிக்கை குறித்துப் பேசியபோது, அந்தப் பகுதியை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று தலைவர் குறிப்புரைத்துத் தெரிவித்ததாவது :

“..பேரவை விதிகளில் தனிப்பட்ட ஒரு அலுவலருடைய நடவடிக்கைகளை விவாதப் பொருளாக ஆக்கக் கூடாது என்று இருக்கிறது. எனவே அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

....நீங்கள் அதற்கு உள்நோக்கம் கற்பிப்பது கூடாது.

....நீங்கள் அந்தக் கோரிக்கையை வைப்பதோடு இருக்க வேண்டும்.

....நீங்கள் அதற்கு உள்நோக்கம் கற்பித்ததனால் அதை அவைக் குறிப்பிலேயிருந்து எடுத்தேன்.'' .. 404..405

பக்கங்கள்.

தலைவர்— தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்— தொடர்ச்சி.

விவாதம்— நடைமுறைகள்— தொடர்ச்சி.

உரையாற்றும் முறை—

மானியக் கோரிக்கையின் மீது நடைபெற்ற விவாதத்தில் 6-4-1995-ஆம் நாளன்று ஓர் உறுப்பினர் பங்குகொண்டு பேசிய போது ஏற்பட்ட குறுக்கீடுகள் குறித்து பின்வருமாறு குறிப்புரைக்கப்பட்டது :

''பேசிக் கொண்டிருக்கிற உறுப்பினர் ஏற்கெனவே குழம்பிப் போய் இருக்கிறார். ஒவ்வொருவராக அவரிடத்தில் சீட்டு கொடுத்துக் கொண்டிருந்தால் இன்னும் குழம்பிப் போய்விடுவார். அவருடைய கருத்தைப் பேசட்டும்.'' .. 70

10—4—1995-ஆம் நாளன்று ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பிப் பேசிய ஓர் உறுப்பினர் குறிப்பிட்ட கருத்தை, சில உறுப்பினர்கள் ஆட்சேபித்த போது பின் வருமாறு குறிப்புரைக்கப்பெற்றது :

''அதை விட்டு விடுவோம். அவ்வாறு பேசியிருந்தால் கண்டிக்கத் தக்கது.

— . . அதெல்லாம் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.'' — 509—510

உள்நோக்கம் கற்பித்துப் பேசியது—

7—4—1995—ஆம் நாளன்று மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய ஓர் உறுப்பினர் சில உறுப்பினர்கள் குறிப்பிட்டது குறித்துப் பேசியபோதும், அதையொட்டி எழுந்த விவாதத்தின்போதும் தலைவர் பின் வருமாறு குறிப்புரைத்தார் :

''அந்த உறுப்பினரே இங்கே இருக்கிறார். அவரே சொல்லுவார். நீங்கள் அதற்கு உள்நோக்கம் கற்பிக்கக் கூடாது.'' 416

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

விவாதம்—நடைமுறைகள்—தொடர்ச்சி

காலவரையறை—

உறுப்பினர்கள் அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நேரத்திற்குள் பேசி முடிக்க வேண்டும். .. 389, 392, 393, 395, 413, 414, 420, 421, 423, 452, 453, 456

மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் எதிர்க்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர், அவருக்கு ஒதுக்கப்பட்ட நேரத்திற்கு மேலும் பேசிக் கொண்டிருந்தபோது பின்வருமாறு குறிப்புரைக்கப் பெற்றது:

"ஆளுங்கட்சி உறுப்பினர்கள் என்னிடத்திலே ஆதங்கப்படுகிறார்கள். நீங்கள் இரு உறுப்பினர்களையும் தினசரி பேச விட்டு விடுகிறீர்கள், அவர்களுடைய தொகுதிகளினுடைய கோரிக்கையெல்லாம் இங்கே வைத்து வாங்கிக் கொள்கிறார்கள், எங்களை என்றைக்கோ ஒரு நாளைக்கு பேச அனுமதிக்கிறீர்கள், அப்போதும் 10 நிமிடத்தில் உட்கார வைத்து விடுகிறீர்கள், எங்கள் தொகுதியினுடைய பிரச்சினைகளை அவையின் கவனத்திற்கு கொண்டுவர முடியவில்லை என்கிற ஆதங்கம் அவர்களுக்கு இருக்கிறது." .. 440—441

"மானியக் கோரிக்கையின் மீது நடைபெறுகின்ற விவாதத்தில் பங்குகொண்டு பேசுகின்ற உறுப்பினர்கள் அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நேரத்திற்குள் பேசி முடிக்க வேண்டும்." .. 103

த—தொடர்ச்சி

தலைவர்—தொடர்ச்சி பக்கங்கள்

திர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

விவாதம்—நடைமுறைகள்—தொடர்ச்சி

காலவரையறை—தொடர்ச்சி

மானியக் கோரிக்கையின் மீது நடைபெற்ற விவாதத்தில் 6—4—1995-ஆம் நாளன்று தனக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் ஓர் உறுப்பினர் பேசிக் கொண்டிருந்தபோது, இன்னொரு உறுப்பினர் குறுக்கிட்டதையொட்டிப் பின்வருமாறு குறிப்புரைக்கப்பட்டது:

''உறுப்பினருக்கு நான் கூடுதலாக நேரம் கொடுத்து இருக்கிறேன். பக்கத்தில் இருக்கிறவர் சீட்டுக் கொடுத்து அவருடைய தொகுதியைப் பற்றிப் பேசுங்கள் என்று கூறக்கூடாது. தொகுதியைப் பற்றிப் பேசி முடியுங்கள்.'' 130, 131

குறுக்கீடுகள்—

மானியக் கோரிக்கையின்மீது நடைபெற்ற விவாதத்தில் பங்கு கொண்டு ஒரு உறுப்பினர் பேசிக் கொண்டிருந்தபோது இன்னொரு உறுப்பினர் எழுந்து பேசத் தொடங்கியது குறித்து பின்வருமாறு குறிப்புரைக்கப்பட்டது:

''உட்காருங்கள். இரண்டு உறுப்பினர்களைப் பேச விடவில்லை. ஒரு உறுப்பினரைப் பேசச் சொல்லியிருக்கிறேன் 102

பேசும் வாய்ப்பு—(முதலமைச்சர் பதிலுரை துவங்கும்போது எதிர்க்கட்சித் தலைவர் பேச அனுமதி)—

காவல் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கு 10-4-1995-ஆம் நாளன்று முதலமைச்சர் பதிலுரை ஆற்ற அழைக்கப்பட்டபோது எதிர்க்

த—தொடர்ச்சி

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி

திர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

விவாதம்— நடைமுறைகள்—தொடர்ச்சி

பேசும் வாய்ப்பு—(முதலமைச்சர் பதிலுரை துவங்கும்போது எதிர்க்கட்சித் தலைவர் பேச அனுமதி)—தொடர்ச்சி

கட்சித் தலைவர் எழுந்து பேசத் தொடங்கியபோதும், தலைவர் வேண்டுகோளை மீறி மீண்டும் மீண்டும் பேசிக் கொண்டிருந்தபோதும், தலைவர் அளித்த குறிப்புரைகளின் தொகுப்பு வருமாறு:

''எதிர்க்கட்சித் தலைவர், இது முறையல்ல. நான் முதலமைச்சர் அவர்களை அழைத்திருக்கிறபோது, அவர் என்ன சொல்கிறார் என்பதைக் கேளுங்கள். எல்லோரும் உட்கார வேண்டும். முதலமைச்சர் அவர்களை நான் அழைத்தேன். அவர்கள் எழுந்திருக்கிறபோது, எதிர்க் கட்சித் தலைவர் எழுந்து நிற்பது முறையல்ல.

..நீங்கள் ஒரு கருத்தைச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் நான் அதன் பின்னர் உங்களுக்கு வாய்ப்பு அளிக்கிறேன். முதலமைச்சர் என்ன சொல்ல வருகிறார் என்பதே தெரியாமல், நீங்கள் எழுந்து நிற்கக் கூடாது.

..இது மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம். நீங்கள் என்னிடத்தில் அனுமதி கேட்டீர்களா? எந்த நேரத்திலும் நான் முதலமைச்சரை அழைக்கிறபோது பேச எனக்கு உரிமை உண்டு என்று சொல்வது எப்படி சரியாக இருக்கும்?

..நீங்கள் எழுந்து நின்று கொண்டு, நான் உட்கார மாட்டேன் என்று சொன்னால் அது முறையல்ல. உட்காருங்கள். முதலமைச்சர் அவர்களே ஒரு கருத்தைச்

திர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

விவாதம்—நடைமுறைகள்—தொடர்ச்சி

பேசும் வாய்ப்பு—(முதலமைச்சர் பதிலுரை துவக்கும் போது எதிர்கட்சி தலைவர் பேச அனுமதி)—தொடர்ச்சி.

சொல்வதற்கு என்னிடத்தில் அனுமதி கேட்டு, அவர்களை நான் அனுமதிக்கிற போது அவர்கள் எழுந்திருக்கிறார்கள். அவ்வாறு அவர்கள் எழுந்து நிற்கிற போது, என்னிடத்தில் எதுவும் சொல்லாமல், எந்த அறிவிப்பும் கொடுக்காமல், எத்தகைய வகையிலும் அனுமதியும் கோராமல் இவ்வாறு செய்வது முறையல்ல. உட்காருங்கள். முதலமைச்சரைப் பேச விடாமல் தடை செய்வேன் என்று சொல்வதை நான் அனுமதிக்க முடியாது. இது மிக முறை கேடான செயல்.

.. முதலமைச்சர் என்ன சொல்கிறார்கள் என்று தெரிந்த பிறகு, அதிலே வேண்டுமானால் நீங்கள் கருத்துச் சொல்லலாம்.

.. நீங்கள் நினைத்த நேரத்தில் பேசுவேன் என்று சொல்வதற்கு இது ஒன்றும் சந்தைக் கடை அல்ல, சட்டமன்றம். இந்தச் சட்டமன்றத்தைச் சந்தைக் கடை ஆக்க விரும்புகிற எதிர்க்கட்சித் தலைவரை நான் அனுமதிக்க முடியாது. எதிர்க்கட்சித் தலைவருடைய அந்தப் போக்கை என்னாலும் ஏற்றுக் கொள்ள முடியாது. இந்த அவையும் சகித்துக் கொள்ளாது.

.. முதலமைச்சர் பெருந்தன்மையாக ஒரு கருத்தைச் சொல்வதற்கு, என்னிடத்திலே சொல்லிவிட்டு எழுந்தார். அந்தப் பெருந்தன்மைக்குரியவர் எதிர்க்கட்சித் தலைவர் இல்லை என்பதை

.. பேசும் வாய்ப்பு—(முதலமைச்சர் பதிலுரை துவங்கும் போது எதிர்கட்சித் தலைவர் பேச அனுமதி)—தொடர்ச்சி

உங்கள் நடவடிக்கை மூலம் காட்டிக் கொண்டிருக்கிறீர்கள். இந்த முறை கேட்டை நான் அனுமதிக்க முடியாது.

..முதலமைச்சர் அவர்களைப் பேச அழைத்ததில் என்ன பாயிண்ட் ஆப் ஆர்டர் இருக்க முடியும்? அவர் ஒரு கருத்தைச் சொல்லி, அதன் பின்னர் பாயிண்ட் ஆப் ஆர்டர் என்றால் அதில் பொருள் இருக்கிறது. பொருளற்ற வகையில் உங்கள் வாதத்தை எடுத்து வைப்பதை நான் அனுமதிக்க முடியாது.

..எதிர்க்கட்சித் தலைவர் உட்கார வேண்டும். இங்கே ஒரு சீனை கிரியேட் பண்ண வேண்டும் என்று செய்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் முறைகேடாக நடக்க வேண்டாம். உறுப்பினர்களை தூண்டிவிடுவது யார்? யாரும் அடிக்க வரவில்லை. நீங்கள் முறைகேடாக நடந்து கொண்டேயிருக்கிறீர்கள்.

..நீங்கள் முதலமைச்சர் அவர்களை அவமதிக்கிற வகையில் தொடர்ந்து ஏதேனும் செய்து கொண்டேயிருக்கிறீர்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவையை விட்டு வெளியேற வேண்டும்.

(எதிர்க்கட்சித் தலைவரும் அவருடைய கட்சியைச் சார்ந்தவர்களும் அவையிலிருந்து வெளியேறினர்).

தலைவர்—தொடர்ச்சி

திர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடரச்சி

விவாதம்—நடைமுறைகள்—தொடர்ச்சி.

பேசும் வாய்ப்பு—(முதலமைச்சர் பதிலுரை துவங்கும் போது எதிர்க்கட்சித் தலைவர் பேச அனுமதி)—தொடர்ச்சி.

.. குரல் எழுப்புகின்ற உறுப்பினர்கள் முறை கேட்டினுடைய மொத்த உருவங்கள் என்றால் அது மிகையாகாது. முறை கேட்டினுடைய மொத்த உருவங்கள் இப்போது ஒவ்வொன்றாக வெளியே போகிறது. மகாத்மா காந்தியைப் பழித்த உருவங்கள் ஒவ்வொன்றாக வெளியே போகிறது. ஜவஹர்லால் நேருவைப் பழித்த உருவங்கள் ஒவ்வொன்றாக வெளியேறுகின்றது. மகாத்மா காந்தியை / ஜவஹர்லால் நேருவைப் பழித்த, அவமதித்த குற்றத்துக்கு ஆளான நபர்கள் ஒவ்வொருவராக வெளியேறுகிறார்கள். எவ்வளவு முறைகேட்டின் உருவங்களாக இவர்கள் இருக்கிறார்கள் என்பதற்கு நான் இன்னொன்றையும் சொல்ல வேண்டும்.

.. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே வந்தவுடன செயலாளரை என்னிடத்திலே அனுப்பி எதிர்க்கட்சித் தலைவர் வந்திருக்கிறார், ஏற்கெனவே காவல் துறை மானியத்தின் மீது பலரும் பேசியிருக்கிறார்கள், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் சற்று நேரம் பேசட்டும், நான் பதில் உரைக்குச் செல்வதற்கு முன்னர் அவரும் பேசி நான் பதிலுரை சொல்வதுதான் முறையாக இருக்கும், அவரைப் பேச அனுமதிக்கலாம் என்று சொல்லி அனுப்பியிருந்தார்கள். நாம் நம்முடைய அஜெண்டாவிலே போட்டிருக்கிற முறைப்படி பார்த்தால் இன்றைக்கு எடுத்துக் கொள்ளப்பட

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

விவாதம்—நடைமுறைகள்—தொடர்ச்சி.

பேசும் வாய்ப்பு—(முதலமைச்சர் பதிலுரை துவங்கும் போது எதிர்க் கட்சித் தலைவர் பேச அனுமதி)—தொடர்ச்சி.

வேண்டிய முறை என்பது மானியக் கோரிக்கை எண் 2, மானியக் கோரிக்கை எண் 15, மானியக் கோரிக்கை எண் 16 ஆகிய முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கைகள் பற்றிய தீர்மானங்கள் மீதும் இவற்றுக்கு முன் மொழியப் பெற்ற வெட்டுத் தீர்மானங்களின் மீதுமான விவாதத்திற்கான பதிலுரை என்றுதான் போடப்பட்டிருக்கிறது. இன்னொரு புது விவாதத்தைத் துவக்குவதற்கு வாய்ப்பு இல்லை என்று நான் தெரிவித்தேன். அப்போது முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், நான்தான் பதிலுரையை ஆரம்பிக்க வேண்டும், ஆரம்பிக்கின்ற நேரத்தில் நானே அந்த வேண்டுகோளை வைக்கிறேன், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் இன்றைக்கு விவாதத்திலே கலந்துகொள்கிற வாய்ப்பை நீங்கள் வழங்க வேண்டுமென்று நானே அந்தக் கோரிக்கையை வைக்கிறேன் என்று சொன்னார்கள். அப்படியானால் நீங்களே அந்தக் கோரிக்கையை வைக்கிற போது நானும் ஏற்றுக் கொள்கிறேன் என்று சொல்வதும்கூட பொருத்தமாக இருக்கும் — நம்முடைய அஜெண்டாவில் இருப்பதற்கு மீறி நாம் அவருக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளிப்பதாக இருக்கும் என்பதால்—நான் திரும்பத் திரும்ப ஒரு நல்ல எண்ணத்தோடு ஒன்றைச் சொல்ல வருகிறார்கள், உட்காருங்கள் உட்காருங்கள் என்று சொன்னேன். அந்த நல்ல எண்ணத்திற்கு அவர்கள் உரியவர்கள் அல்ல என்பதை முதலமைச்சர் அவர்கள் எடுத்துத் தெரி

த—தொடர்ச்சி

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

விவாதம்—நடைமுறைகள்—தொடர்ச்சி.

பேசும் வாய்ப்பு—(முதலமைச்சர் பதிலுரை துவங்கும்போது எதிர்க்கட்சித் தலைவர் பேச அனுமதி)—தொடர்ச்சி.

வித்த கருத்துக்களிலே இருந்தும், நடந்த நிகழ்ச்சிகளிலேயிருந்தும் மிகத் தெளிவாக நாடு புரிந்து கொள்ளும். இன்றைக்கு இங்கே ஜனநாயகம் இல்லை என்று திரும்பத் திரும்ப வெளியிலே போய் ஒரு தவறான பிரச்சாரத்தைச் செய்தும் ஜனநாயகம் அங்கேதான் இருக்கிறது, அங்கே போங்கள் என்று அனுப்பியதற்குப் பின்னரும் அவர்கள் உள்ள நிலைமையை ஜனநாயகத் தன்மையைப் புரிந்து கொள்ளவில்லை என்றுதான் கூற வேண்டியிருக்கிறது. எனவே, இவர்களைப் பற்றி நாட்டு மக்கள் அதிகமாகக் கவலைப்பட மாட்டார்கள் என்பதை இந்த நடவடிக்கைகளிலேயிருந்தே தெரிந்து கொள்ளலாம். பெருந்தன்மைக்கு இடமில்லாத காரணத்தினாலே அவர்கள் போயிருக்கிறார்கள்.'' .. **514—519**

முதலமைச்சருக்குப் பாராட்டுரைகள்—

10—4—1995-ஆம் நாளன்று மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்திற்கு முதலமைச்சர் பதில் அளித்துப் பேசிய போது காவல் துறை அலுவலர்களுக்குப் பாராட்டுகள் தெரிவித்தார்கள். அப்போது பேரவைத் தலைவர் குறிப்பிட்டதாவது:

"முதலமைச்சர் அவர்கள், அவர்களுடைய துறையின் அலுவலர்களைப் பாராட்டினார்கள். இந்த அவையைப் பொறுத்த மட்டில் அந்தத் துறையின் அலுவலர்கள் அந்த அளவுக்கு சீர்படப் பணியாற்றியமைக்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நம்முடைய பாராட்

பொருள் | பக்கங்கள்

தலைவர்— தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்— தொடர்ச்சி

விவாதம்— நடைமுறைகள்— தொடர்ச்சி

முதலமைச்சருக்குப் பாராட்டுரைகள்— தொடர்ச்சி.

டைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். காரணம் இத்தனை சாதனைகளுக்கும் அடித்தளக் காரணம் முதலமைச்சர் அவர்கள்தான் என்பதை அந்த . அலுவலர்களே அவ்வப்போது தெரிவித்து வந்திருக்கிற கருத்துக்களை அனைவரும் அறிவோம். எனவே, இத்தனை சாதனைகளுக்கும் ஒட்டுமொத்தப் பாராட்டுக்குரியவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான் என்றால் மிகையாகாது.''

539—540

விசாரணையில் இருக்கும் பொருள்—

மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் 7—4—1995-ஆம் நாளன்று ஓர் உறுப்பினர் பேசியபோது, விசாரணையில் இருக்கும் பொருள் குறித்துப் பேச முனைந்த போது, ''வழக்குமன்றத்திலே தான் அது பற்றித் தெரியும், எனவே அது பற்றிப் பேச வேண்டாம்'' என்று குறிப்புரைக்கப்பெற்றது.

''..நீங்கள் ஏற்கெனவே இது பற்றிப் பேசினீர்கள். ஒவ்வொரு வழக்காக இங்கே பேசிக் கொண்டிருக்கக் கூடாது

409, 411.

பக்கங்கள்

தனபால், திரு. ம.—

செங்கல்பட்டு தொகுதி, மணப்பாக்கம், பாலாற்றில் மணல் எடுத்தல், தனியாரின் உரிமத்தை ரத்து செய்து தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுமதி அளித்தல் (வி.) ... 478

மண்ணிவாக்கம், ஊராட்சி ஒன்றியப் பள்ளி, உயர்நிலைப் பள்ளியாக்குல் (வி.) ... 35—36

தாமரைக்கனி, திரு. இரா.—

எடைகள், அளவைகள், ஓராண்டுக்கு ஒரு முறை அல்லாமல் ஈராண்டுக்கு ஒருமுறை சோதித்து முத்திரையிடல் (வி.) ... 461

காரைக்குடி, குடிநீர்ப் பிரச்சினையை முன்வைத்து உண்ணாவிரதம் (சி.க.ஈ.) ... 367—368

சித்தா, ஆயுர்வேதா மற்றும் ஹோமியோபதி முறைகள், புதிய மருந்துகள் கண்டுபிடித்தல் (வி.) 320

நாகை தொகுதி, அக்கரைப்பேட்டையைச் சேர்ந்த மீனவர்கள், 3—4—1995 அன்று கோடியக்கரை பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது கடத்திச் செல்லப் பட்டமை (சி.க.ஈ.) ... 503, 504

துரை ராமசாமி, திரு.—

உப்பிலியாபுரம் தொகுதி, பூதக்கால் கிராமம், தொழிற்பேட்டை அமைத்தல் (வி.) ... 24

மா. கோ., 1995-96—

மாநில ஆயத்தீர்வைத்துறை
காவல் துறை
தீயணைப்புப் பணிகள். ... 415, 421

தேவராஜ், திரு. அ.—

ஆரணி தொகுதி, 'சிப்காட்' தொழிற்சாலை வளாகம் அமைத்தல் (வி.) 30

'ந'

பக்கங்கள்

நடேசன், திரு. மு.—

எடைகள், அளவைகள், ஓராண்டுக்கு ஒரு முறை அல்லாமல் ஈராண்டுக்கு ஒரு முறை சோதித்து முத்திரையிடல் (வி.) ... 462

நடேசன் பால்ராஜ், திரு. வெ.—

மா.கோ., 1995-96—

மாநில ஆயத் தீர்வைத் துறை
காவல் துறை
தீயணைப்புப் பணிகள் ... 392

நாகூர்மீரான், திரு. எஸ்.—

உலமாக்கள் ஓய்வூதியம், அதிகரித்தல் (வி.) .. 349—351

குளத்தூர் தொகுதி, சித்தன்ன வாசல், சுற்றுலா மையமாக்கல் (வி.) .. 496—497

நிர்மலா, திருமதி பி.—

மா.கோ., 1995-96—

மாநில ஆயத்தீர்வைத் துறை
காவல் துறை
தீயணைப்புப் பணிகள். ... 122—126

நெடுஞ்செழியன், டாக்டர் இரா.—

பெரணமல்லூர், சார்நிலைக் கருவூலம் அமைத்தல் (வி.) 2—4

மா. கோ., 1995-96—

மாநில ஆயத்தீர்வைத் துறை
காவல் துறை
தீயணைப்புப் பணிகள் .. 585

முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர், சார் நிலைக் கருவூலம் அமைத்தல் (வி.) .. 500

'ப'

பஞ்சவர்ணம், திருமதி கே.

நன்னிலம் தொகுதி, திட்டச்சேரி—குத்தாலம் (வழி) நரிமணம், பேருந்து இயக்குதல் (வி.) 324, 325, 326

'ப'—தொடர்ச்சி.

பக்கங்கள்

பரமசிவம், திரு. ஆர்.பி.—

கல்வராயன் மலைப் பகுதி, தேனீ வளர்ப்புப் பண்ணை அமைத்தல் (வி.) .. 39—40

மா. கோ., 1995-96—

மாநில ஆயத்தீர்வைத் துறை
காவல் துறை
தீயணைப்புப் பணிகள். .. 126—131

பரமசிவன், திரு. ஏ. எம்.—

உடல் ஊனமுற்றோர், வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்தோர் எண்ணிக்கை மற்றும் வேலை வாய்ப்பில் முன்னுரிமை (வி.) .. 493—494

திருவள்ளூர், மகளிர் தொழிற் பயிற்சி நிலையம் தொடங்குதல் (வி.) 341—342

பலராமன், திரு. உ.

சித்தா, ஆயுர்வேதா மற்றும் ஹோமியோபதி முறைகள், புதிய மருந்துகள் கண்டுபிடித்தல் (வி.) .. 315

பழனிசாமி, திரு. க.—

கோனேரிப்பட்டி, ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல் (வி.) .. 313—315

பழனிசாமி, திரு. நா. சா.—

சேரிபாளையம், உயர்நிலைப்பள்ளிக்கு கட்டிடம் கட்டுதல் (வி.) .. 339, 340, 341

மா. கோ. 1995—96—

மாநில ஆயத்தீர்வைத் துறை
காவல் துறை
தீயணைப்புத்துறை 116—122

வேளாண்மைத்துறை துணை இயக்குநர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்களின் நேர்முக உதவியாளர்களாக நியமிக்கப்பட்டபிறகு திட்டங்களில் முன்னேற்றம், விவரம் (வி.) .. 27

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

ப—தொடர்ச்சி.

பக்கங்கள்

பழனிசாமி, திரு. வெ.—

திருப்பூர், புறவழிச் சாலை அமைத்தல்(வி.) .. 330,—331
332—333

மா.கோ., 1995—96—
மாநில ஆயத்தீர்வைத் துறை—
காவல் துறை
தீயணைப்புப் பணிகள். ... 426

பழனிசாமி, திரு. ஜி.—

காரைக்குடி, குடிநீர்ப் பிரச்சினையை முன் வைத்து உண்ணாவிரதம் (சி.க.ஈ. .. 364, 365
374

மா.கோ., 1995—96—

மாநில ஆயத்தீர்வைத்துறை—
காவல் துறை .. 50, 51,
தீயணைப்புப்பணிகள் 52, 82,
89—90
91, 103
434—456

பழனியம்மாள், திருமதி க.—

நெசவாளர் சங்கங்களிலிருந்து கோ-ஆப்டெக்ஸ் கொள்முதல் இலாப விகிதத்தினை உயர்த்துதல் (வி.) 335, 336,
337

மா. கோ. 1995—96—
மாநில ஆயத்தீர்வைத்துறை—
காவல்துறை
தீயணைப்புப் பணிகள். ... 75—81

பன்னீர்செல்வம், திரு. சா.—

புலியனூர், ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல் (வி.) ... 500

பாப்பா சுந்தரம், திரு. அ.—

தோகை மலை, பத்திரப் பதிவாளர் அலுவலகம் திறத்தல் (வி.) ... 307—309

ப—தொடர்ச்சி

பக்கங்கள்

பாலகங்காதரன், திரு. ஜெ.—

சிவகாசி, லவ்லி கெமிக்கல்ஸ் நிறுவனம், தொழிற்சாலைப் புகையினால் சுற்றுப்புறச் சூழல் பாதிப்பு (க.ஈ.) .. 44
47—48

பாலசுப்ரமணியன், திரு. எஸ். ஆர்.—

உறுப்பினர் திரு. ச. அழகிரி 29—3—1995 அன்று அவையில் தெரிவித்த ஒரு கருத்து, சில தேசத் தலைவர்கள் குறித்து (ஒ.பி.) 508—509

பிட்ரிக்ஸ், டிசோசா, டாக்டர்—

அரசு போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகள், சலுகை விலையில் மகளிர் அமைப்புகள் மற்றும் அரசு சார்பில்லாத சேவை அமைப்புகளுக்கு விற்றல் (வி.) .. 323

மா. கோ. 1995—96—

மாநில ஆயத்தீர்வைத் துறை—
காவல் துறை
தீயணைப்புப் பணிகள். .. 582—583

பூராசாமி, திரு. எட்.—

பிள்ளை பெருமாள்நல்லூர், அணுமின் நிலையம் அமைத்தல் (வி.) .. 471—472

பெரியசாமி, திரு. வே.—

மாத்தூர், ஆதி திராவிடர்கள் குடியேறவதுக் கப்பட்ட புறம்போக்கு, வனத்துறை எடுத்துக் கொண்டமை (வி.) .. 4—7

மா. கோ. 1995—96—

மாநில ஆயத்தீர்வைத்துறை—
காவல் துறை
தீயணைப்புப் பணிகள். .. 7

ப—தொடர்ச்சி

பக்கங்கள்.

பொன்னுசாமி, பேராசிரியர் க.—

இராமநாதபுரம் 'இராமலிங்க விலாசம்,' அரண்மனை பழுதடைந்துள்ளமை மற்றும் அங்குள்ள ஓவியங்கள், போர்க்கருவிகள் மாசு படிந்து, பழுதடைந்துள்ளமை (க.ஈ.அ.) .. 377, 378, 379, 380.

கிணத்துக்கடவு தொகுதி, சேரிபாளையம், உயர்நிலைப்பள்ளிக்குக் கட்டிடம் கட்டுதல் (வி.) 339—341

சிங்காநல்லூர் தொகுதி, ஒண்டிப்புதூர், அரசு ஆண்கள் உயர்நிலைப்பள்ளி அறிவியல் ஆய்வுக் கூடம் கட்டுதல் (வி.) .. 491—492

திருப்போரூர் தொகுதி, மண்ணிவாக்கம், ஊராட்சி ஒன்றியப் பள்ளி, உயர்நிலைப்பள்ளியாக்கல். (வி.) 36

பவானி சாகர் தொகுதி, நம்பியூர், அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப் பள்ளியாக்குதல் (வி.) .. 489—491

விளாத்திகுளம் அரசு மேல்நிலைப்பள்ளி, கூடுதல் கட்டிடம் கட்டுதல் (வி.) .. 42

விளாத்துறை பேரூராட்சி, உதச்சிக்கோட்டை மற்றும் மாராயப்புரம் நடுநிலைப்பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளாக்குதல் (வி.) .. 363

'ம'

மணிமேகலை, டாக்டர் சு.—

பெரம்பலூர் வட்டம், மேட்டூர், ஆட்கொல்லி நோய் ஒன்றினால் குழந்தைகள் இறப்பு (வி.) 468—469

லால்குடி வட்டம், மகிழம்பாடி, கால்நடை மருத்துவமனை அமைத்தல் (வி.) 327

ம—தொடர்ச்சி

பக்கங்கள்

மணிமேகலை, திருமதி வி. ஜி.—

நரிக்குடி, நூற்பாலை அமைத்தல் (வி.) .. 33—34

மதுசூதனன், திரு. இ.—

குத்தாலம் தொகுதி, புளியஞ்சேரி, கால்நடை மருந்தகம் அமைத்தல் (வி.) 20—22

லால்குடி வட்டம், மகிழம்பாடி, கால்நடை மருத்துவமனை அமைத்தல் (வி.) 327, 328,

மரியம் உல் ஆசியா, திருமதி கே.—

இராமநாதபுரம், 'இராமலிங்க விலாசம்', அரண்மனை பழுதடைந்துள்ளமை மற்றும் அங்குள்ள ஓவியங்கள், போர்க் கருவிகள் மாசு படிந்து பழுதடைந்துள்ளமை (க.ஈ.) .. 377, 378—379, 380

உலமாக்கள் ஓய்வூதியம், அதிகரித்தல் (வி.) .. 349—351

மல்லிகா, செல்வி கோ.—

குமாரப்பேட்டை, மகளிர் மீனவர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைத்தல் (வி.) .. 348—349

முத்துசாமி, திரு. சு.—

அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் நோயாளிகள், கட்டாய 'எய்டஸ்' நோய் பரிசோதனை செய்தல் (வி.) .. 14—17

எடப்பாடி ஒன்றியம், கோனேரிப்பட்டி, ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல் (வி.) .. 314, 315

சித்தா, ஆயுர்வேதா மற்றும் ஹோமியோபதி முறைகள், புதிய மருந்துகள் கண்டுபிடித்தல் (வி.) .. 315—322

திண்டிவனம் வட்டம், புலியனூர், ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல் (வி.) .. 500

பக்கங்கள்

முத்துசாமி, திரு. சு.—தொடர்ச்சி

பெரம்பலூர் வட்டம், மேட்டூர், ஆட்கொல்லி நோய் ஒன்றினால் குழந்தைகள் இறப்பு (வி.) 468

மாரடைப்பால் தாக்கப்பட்டோர், முதலுதவி அளிக்க கிராமப்புற மருத்துவர்களுக்கு சிறப்புப் பயிற்சி (வி.) .. 12—14

மா. கோ., 1995-96—
மாநில ஆயத்தீர்வைத் துறை
காவல் துறை
தீயணைப்புப் பணிகள் .. 89, 101—102, 402—403, 409, 415—416, 417, 421—422, 441, 452—453

முருகையா பாண்டியன், திரு. ஆர்.—

அம்பாசமுத்திரம், பேருந்து நிலையம், அபிவிருத்தி செய்தல் அல்லது புதிதாக அமைத்தல் (வி.) .. 345—348

முனிவெங்கடப்பன், திரு. கே.—

கிருஷ்ணகிரி ஒன்றியம், பாலகுறி கிராமம், நியாய விலைக் கடை தொடங்குதல் (வி.) 316, 311—312

முனுசாமி, திரு. கா. பூ.—

மா. கோ., 1995-96—
மாநில ஆயத்தீர்வைத் துறை
காவல் துறை,
தீயணைப்புப் பணிகள் .. 592—593

மூர்த்தி, திரு. து.—

சீர்காழி, புறவழிச்சாலை அமைத்தல் (வி.) .. 328, 329

ர

பக்கங்கள்

ரகுபதி, திரு. சே.—

கோவை மா நகர், உக்கடம் மற்றும் கெம்பட்டி காலனி குடிசைப் பகுதி, குடிசைப் பகுதி மாற்று வாரிய வீடுகள் கட்டுதல் (வி.) .. 473—474

ரத்தினவேல், திரு. த.—

செங்கல்பட்டு தொகுதி, மணப்பாக்கம், பாலாற்றில் மணல் எடுத்தல், தனியாரின் உரிமத்தை ரத்து செய்து தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுமதி வழங்கல் (வி.) .. 479—480

திருச்சிராப்பள்ளி பாய்லர் தொழிற்சாலை—நாகர்கோவில்—கன்னியாகுமரி, பேருந்து விடுதல் (வி.) .. 17—18

ரமேஷ், திரு. வி. பி. ஆர்.—

மா. கோ., 1995-96—

மாநில ஆயுத் தீர்வைத் துறை

காவல் துறை

தீயணைப்புப் பணிகள் .. 41

ரவிக்குமார், திரு. ஏ.—

மீஞ்சூர், மொண்டியம்மன் நகர் பகுதி, பால் விற்பனை நிலையங்கள் திறத்தல் (வி.) .. 28—29

ரவிச்சந்திரன், திரு. வி.—

பூதக்கால் கிராமம், தொழிற்பேட்டை அமைத்தல் (வி.) .. 24

ராமசுப்பு, திரு. எஸ். எஸ்.—

துத்திகுளம் கண்மாய், தூர் எடுத்தல் (வி.) .. 41

ராஜூ, திரு. கே. பி.—

உணவு விடுதிகள், ஜனதா சாப்பாடு வழங்க வற்புறுத்தல் (வி.) ... 11

சித்தா, ஆயுர்வேதா மற்றும் ஹோமியோபதி முறைகள், புதிய மருந்துகள் கண்டுபிடித்தல் (வி.) ... 319

ர—தொடர்ச்சி

ராஜூ திரு. கே.பி.— தொடர்ச்சி — பக்கங்கள்

நெசவாளர்கள், சலுகைகள் பெற அடையாள அட்டைகள் வழங்கல் (வி.) .. 486

மா. கோ., 1995-96—

மாநில ஆயத் தீர்வைத் துறை

காவல் துறை

தீயணைப்புப் பணிகள் 591

'ல'

லாரன்ஸ், திரு. கு.—

பிற்பட்டோர் நலம், அம்பாசங்கர் குழு பரிந்துரைகள், செயல்படுத்துதல் (வி.) .. 351—363

'வ'

வரதராஜன், திரு. செ. து.—

அரசு போக்குவரத்துக் கழகங்களின் பழைய பேருந்துகள், சலுகை விலையில் மகளிர் அமைப்புகள் மற்றும் அரசு சார்பில்லாத சேவை அமைப்புகளுக்கு விற்றல் (வி.) .. 326

செங்கல்பட்டு தொகுதி, மணப்பாக்கம், பாலாற்றில் மணல் எடுத்தல், தனியாரின் உரிமத்தை ரத்து செய்து தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுமதி அளித்தல் (வி.) .. 477

நெசவாளர்கள், சலுகைகள் பெற அடையாள அட்டைகள் வழங்கல் (வி.) .. 485—486

வேடியப்பன், திரு. தா.—

திருவண்ணாமலை—வளையல்காரகுளம் (வழி) கரப்பலூர், சோழங்குப்பம், காங்கேயனூர், நம்மியந்தூர், பியம்பட்டு, பேருந்து விடுதல் (வி.) .. 19—20

'ஜ'

ஜனார்த்தனன், திரு. தே.—

பொன்னேரி தொகுதி, மீஞ்சூர், மொண்டியம்மன் நகர் பகுதி, பால் விற்பனை நிலையங்கள் திறத்தல் (வி.) .. 28—29

ஜ—தொடர்ச்சி

பக்கங்கள்

ஜீனத் சர்புதீன், திருமதி—

உலமாக்கள் ஓய்வூதியம், அதிகரித்தல் (வி.) ... 349—351

சத்துணவுத் திட்டம், வாரமொருமுறை குழந்தைகளுக்கு ஆட்டிறைச்சி வழங்கல் (வி.) .. 484

சித்தா, ஆயுர்வேதா மற்றும் ஹோமியோபதி முறைகள், புதிய மருந்துகள் கண்டுபிடித்தல் (வி.) 318

ஜெயகுமார், திரு. டி.—

நாகை தொகுதி, அக்கரைப்பேட்டையைச் சேர்ந்த மீனவர்கள், 3—4—1995 அன்று கோடியக்கரை, பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது கடத்திச் செல்லப் பட்டமை (சி.க.ஈ.) .. 504—505

புவனகிரி தொகுதி, குமாரப்பேட்டை, மகளிர் மீனவர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைத்தல் (வி.) .. 348—349

ஜெயலலிதா, டாக்டர் ஜெ.—

காரைக்குடி, குடிநீர்ப் பிரச்சினையை முன் வைத்து உண்ணாவிரதம் (சி.க.ஈ.) .. 366

மா. கோ., 1995-96—

மாநில ஆயத்தீர்வைத் துறை
காவல் துறை
தீயணைப்புப் பணிகள் .. 50, 52, 53, 62, 72-73, 79—80, 83—88, 90—95, 96—98, 121, 389—390, 393, 394, 397—399, 400, 401, 402, 405—406, 407, 408—409, 412, 415, 417—418, 419, 420, 422—423, 424, 435, 436—437, 438, 440, 442, 443, 444, 445, 446, 447, 448, 449, 450, 451, 452, 454, 455, 456, 458.

பக்கங்கள்

ஜெயலலிதா, டாக்டர் ஜெ.—தொடர்ச்சி

மா. சோ., 1995-96—தொடர்ச்சி

மாநில ஆயத் தீர்வைத் துறை
காவல் துறை
தீயணைப்புப் பணிகள் .. 514, 515, 517—584, 587—588, 593.

ஜெய்சன் ஜேக்கப், டாக்டர்—

ஆரணி தொகுதி, 'சிப்காட்' தொழிற்சாலை வளாகம் அமைத்தல் (வி.) .. 30

(3) பொருள் அட்டவணை.

'அ'

பக்கங்கள்

அங்காடிகள்—

அமுதம் அங்காடி அமைத்தல், குறிஞ்சிப்பாடி தொகுதி எல்லப்பன் பேட்டைக்கென தனியே 464—467

நியாய விலைக் கடை தொடங்குதல், கிருஷ்ணகிரி ஒன்றியம், பாலகுறி கிராமத்தில் .. 310—313

அலுவலகங்கள்—

சார்நிலைக் கருவூலம் அமைத்தல், முசிறி தொகுதி மண்ணச்சநல்லூரில் .. 500

சார்நிலைக் கருவூலம், பெரணமல்லூரில் அமைத்தல் .. 1—4

பத்திரப் பதிவாளர் அலுவலகம், குளித்தலை தொகுதி தோகைமலையில் திறத்தல் .. 307—309

மாவட்டப் பதிவாளர் அலுவலகம், விருத்தாசலத்தில் அமைத்தல் .. 462—464

அறிக்கைகள் அளித்தல்—

பார்க்க—உள்ளடக்கம்

'உ'

உணவகங்கள்—

ஜனதா சாப்பாடு, உணவு விடுதிகள் வழங்குமாறு வற்புறுத்தல் .. 8—12

'ஊ'

ஊனமுற்றோர்—

விவரம், வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்தோர் மற்றும் வேலை வாய்ப்பில் முன்னுரிமை குறித்து .. 492—494

'ஒ'

ஒழுங்குப் பிரச்சினை—

பார்க்க—உள்ளடக்கம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

'ஒ'

ஒய்வூதியம்—

அதிகரித்தல், உலமாக்களுக்கு .. 349—351

'க'

கதர், கிராமக் கைத்தொழில்கள்—

கதர் பருத்தி மற்றும் பட்டு கூட்டுறவுச் சங்கங்கள், சில விவரங்கள், இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ளவை குறித்து .. 497—499

தேனீ வளர்ப்புப் பண்ணை அமைத்தல், சல்வராயன் மலைப் பகுதியில் .. 39—41

கல்விக் கூடங்கள்—

கட்டிடம் கட்டுதல், கிணத்துக்கடவு தொகுதி சேரி பாளையம், உயர்நிலைப் பள்ளிக்கு .. 339—241

கட்டிடம் கட்டுதல், சிங்கா நல்லூர் தொகுதி—ஒண்டிப் புதூர் அரசு ஆண்கள் உயர் நிலைப் பள்ளியின் அறிவியல் ஆய்வுக் கூடத்திற்கு .. 491—492

கூடுதல் கட்டிடம் கட்டுதல், விளாத்திக்குளம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு .. 41—42

தரம் உயர்த்துதல், சேலம் மாவட்டம், பச்சை மலை ஓடைக்காட்டுப்புதூர், பழங்குடியினர் உறைவிட நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக .. 501

தரம் உயர்த்துதல், திருப்போரூர் தொகுதி, மண்ணிவாக்கம், ஊராட்சி ஒன்றியப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக .. 35—36

தரம் உயர்த்துதல், பவானிசாகர் தொகுதி, நம்பியூர், அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக .. 489—491

தரம் உயர்த்துதல், விளாத்துறை பேரூராட்சி, உதச்சிக் கோட்டை மற்றும் மாராயப்புரம் நடுநிலைப்பள்ளிகளை உயர்நிலைப்பள்ளிகளாக 363

மகளிருக்காக தொழிற்பயிற்சி நிலையம் அமைத்தல், திருவள்ளூர் .. 341—342

க—தொடர்ச்சி

பக்கங்கள்

கவன ஈர்ப்பு—

பார்க்—உள்ளடக்கம்

கால்நடைகள்—

கால்நடை மருத்துவமனை அமைத்தல், லால்குடி வட்டம், மகிழம்பாடி .. 337—328

கால்நடை மருந்தகம் அமைத்தல், குத்தாலம் தொகுதி புள்ளியஞ்சேரி .. 20—22

குடிநீர்—

விரைவில் செயல்படுத்துதல், சத்தியமங்கலம் தொகுதி, கொத்தமங்கலம், ராஜன் நகர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் .. 37—39

கைத்தறி, விசைத்தறி—

அடையாள அட்டைகள் வழங்கல், நெசவாளர்கள் சலுகைகள் பெற .. 485—488

இலாப விகிதத்தினை உயர்த்துதல், நெசவாளர் சங்கங்களிலிருந்து கோ-ஆப்டெக்ஸ் செய்யும் கொள்முதலுக்கு .. 335—337

ஏற்றுமதி செய்தல், குறிஞ்சிப்பாடியில் உற்பத்தியாகும் கைத்தறித் துணிகள் .. 31—33

'ச'

சத்துணவு—

ஆட்டிறைச்சி வழங்கல், சத்துணவு பெறும் குழந்தைகளுக்கு வாரமொரு முறை .. 481—485

மையம் அமைத்தல், அவினாசி தொகுதி, பனந்தோப்புமயில் ஆதி திராவிடர் குடியிருப்பில் 337—339

சாலைகள்—

புறவழிச் சாலை அமைத்தல், சீர்காழி .. 328—330

புறவழிச் சாலை அமைத்தல், திருப்பூர் .. 330—333

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

ச—தொடர்ச்சி

பக்கங்கள்

சிறப்புக் கவன ஈர்ப்பு—

பார்க்க—உள்ளடக்கம்

சுரங்கங்கள்—

தனியாரின் உரிமத்தை ரத்து செய்து தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுமதி வழுங்கல், பாலாற்றில் மணல் எடுக்க செங்கல்பட்டு தொகுதி மணப்பாக்கத்தில் .. 476—481

சுற்றுலா—

மையமாக்குதல், குளத்தூர் தொகுதி சித்தன்ன வாசல். .. 496—497

'த'

தகவல் கோரல்—

பார்க்க—உள்ளடக்கம்

தொழிற்சாலைகள்—

'சிப்காட்' வளாகம் அமைத்தல், ஆரணி தொகுதி 30—31

தொழிற்பேட்டை அமைத்தல், உப்பிலியாபுரம் தொகுதி பூதக்கால் கிராமம் .. 24

நூற்பாலை, அருட்புக்கோட்டை தொகுதி நரிக்குடியில் அமைத்தல் .. 33—35

'ந'

நிர்வாகம்—

எடைகள், அளவைகள், ஈராண்டுக்கு ஒரு முறை சோதித்து முத்திரையில், ஓராண்டுக்கு ஒரு முறை செய்வதற்குப் பதிலாக. .. 459—462

நிலங்கள்—

ஆதி திராவிடர்கள் குடியேற ஒதுக்கப்பட்ட புறம்போக்கு, வன்துறை எடுத்துக்கொண்டமை, பவானி வட்டம் மாத்தூர் 4—8

'ந'—தொடர்ச்சி

பக்கங்கள்

நோய்கள்—

ஆட்கொல்லி நோய் ஒன்றினால் குழந்தைகள் இறப்பு பெரம்பலூர் வட்டம் மேட்டூர். .. 468—470

'ப'

பாசனம்—

தற்போதைய நிலை பற்றிய விவரம், கன்னியாகுமரி மாவட்டம் விளாத்துறை நீரேற்றுப் பாசனத் திட்டம் குறித்து .. 501

தூர் எடுத்தல், கீழப்பாவூர் ஒன்றியம், துத்திக்குளம் கண்மாய் .. 41

பாலங்கள்—

கட்டுதல், சாத்தூர் ஒன்றியம், இடுக்கன்குடி, மாரியம்மன் கோயிலுக்குச் செல்லும் வழியில் ஆற்றின் குறுக்கே .. 343—345

கட்டுதல், விக்கிரவாண்டி ஒன்றியம், கயத்தூர்—வெட்டிக்காடு, இணைக்க சங்கராபரணி ஆற்றின் குறுக்கே .. 494—496

புதுப்பித்தல், நாகூர் நகர நுழைவாயிலில் உள்ள பாலத்தை .. 22—23

பால்வளம்—

பால்விற்பனை நிலையங்கள் திறத்தல், பொன்னேரி தொகுதி, மீஞ்சூர், மொண்டியம்மன் நகர் பகுதி .. 28—29

பிற்பட்டோர் நலன்—

அம்பாசங்கர் குழு பரிந்துரைகள், செயற்படுத்துதல் .. 351—363

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

'ப'— தொடர்ச்சி

போக்குவரத்து— பக்கங்கள்

அரசு போக்குவரத்துக் கழகங்களின் பழைய பேருந்துகள், சலுகைவிலையில் மகளிர் அமைப்புகள், மற்றும் அரசு சார்பில்லாத சேவை அமைப்புகளுக்கு விற்றல் .. 323—324

பேருந்து நிலையம், அபிவிருத்தி செய்தல் அல்லது புதிதாக அமைத்தல், அம்பசமுத்திரம் 345—348

பேருந்து விடுதல், திருச்சிராப்பள்ளி பாய்லர் தொழிற்சாலை—நாகர்கோவில்—கன்னியாகுமரி தடத்தில் .. 17—18

பேருந்து விடுதல், திருவண்ணாமலை—வளையல்காரகுளம் (வழி) காப்பனூர், சோழங்குப்பம், காங்கேயனூர், நம்மியத்தூர், பியம்பட்டு தடத்தில் .. 19—20

பேருந்து விடுதல், நன்னிலம் தொகுதி, திட்டச்சேரி—குத்தாலம் (வழி) நரிமணம் தடத்தில் 324—327

'ம'

மருத்துவமனைகள்—

ஆரம்ப சுகாதார நிலையம், அமைத்தல் எடப்பாடி ஒன்றியம் கோனேரிப்பட்டி .. 313—315

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல், திண்டிவனம் வட்டம் புலியனூர் .. 500

மருத்துவம்— ..

'எய்ட்ஸ்' நோய் பரிசோதனை, கட்டாயமாகச் செய்தல். அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் நோயாளிகளுக்கு .. 14—17

கிராமப்புற மருத்துவர்களுக்கு சிறப்புப் பயிற்சி, மாரடைப்பால் தாக்கப்பட்டோருக்கு முதலுதவி அளிக்க .. 12—14

புதிய மருந்துகள் கண்டுபிடித்தல், சித்தா, ஆயுர்வேதா மற்றும் ஹோமியோபதி முறைகள். 315—322

ம—தொடர்ச்சி

பக்கங்கள்

மானியக் கோரிக்கைகள், 1995-96, விவாதமும் வாக்கெடுப்பும்

பார்க்க—உள்ளடக்கம்.

மின்சாரம்—

அணு மின்நிலையம் அமைத்தல், பூம்புகார் தொகுதி பிள்ளைபெருமாள் நல்லூர் .. 471—472

மீனளம்—

மகளிர் மீனவர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைத்தல், புவனகிரி தொகுதி: குமாரப்பேட்டை .. 348—349

'வ'

வீட்டு வசதி—

குடிசைப் பகுதி மாற்று வாரிய வீடுகள் கட்டுதல், கோவை மாநகரில் உக்கடம் மற்றும் கெம்பட்டி காலனி குடிசைப் பகுதில் .. 473—474

வேளாண்மை—

அரசு ஊக்குவிப்பு, ஓரிதழ் தாமரை மூலிகை உற்பத்திக்கு .. 334—335

திட்டங்களில் முன்னேற்றம் குறித்த விவரம், மாவட்ட ஆட்சித் தலைவர்களின் நேர்முக உதவியாளர்களாக வேளாண்மைத் துறை துணை இயக்குநர்கள் நியமிக்கப்பட்ட பிறகு 25—28

விரிவாக்கத் துணை மையம் அமைத்தல், புதுக்கோட்டை தொகுதி வைத்தூர் .. 475

உள்ளடக்கம்

6–4–1995

	பக்கங்கள்
தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்	iii-vi
Personnel of the Government of Tamil Nadu	vii-x
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்	xi-xiv
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)	xv-xxv
1. வினாக்கள்—விடைகள்—	
உடுக்குறியிட்ட வினாக்கள்	1-42
2. கவன ஈர்ப்பு—	
(அ) திருவிடைமருதூர் அருகிலுள்ள காவிரி பாலம் செப்பனிடப்படவேண்டியதன் அவசியம் குறித்து	42-44
(ஆ) சிவகாசி, லவ்லி கெமிக்கல்ஸ் நிறுவனப் புகையினால் சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படுவது குறித்து.	44-49
3. அறிக்கைகள் அளித்தல்—	
பொதுக் கணக்குக் குழு	49
4. மானியக் கோரிக்கைகள், **1995-96,** விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி	
(அ) கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வைத் துறை	
(ஆ) கோரிக்கை எண் 15—காவல் துறை	
(இ) கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள்	49-131

53-68–1

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா	50, 52, 53, 62, 72-73, 79-80, 83-88, 90-98, 121
திரு ஆர். சிங்காரம்	54-64
திரு. வி. கே. சின்னசாமி	64-74
திருமதி க. பழனியம்மாள்	75-81
திரு. வே. தம்புசாமி	82-104
திரு. ஆ. சுப்புரத்தினம்	104-116
திரு. நா.சா. பழனிசாமி	116-122
*திருமதி பி. நிர்மலா	122-126
திரு. ஆர்.பி. பரமசிவம்.	126-131
5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—	131

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

ஆளுநர். டாக்டர் எம். சென்னா ரெட்டி.

அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. முதலமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா:** பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், இந்திய காவல் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், காவல், இலஞ்ச ஒழிப்பு, மதுவிலக்கு மற்றும் ஆயத் துறை, சர்க்கரைப் பாகு கழிவு, சிறுபான்மையினர் நலம் மற்றும் மின்னணுவியல்.

2. நிதி அமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** நிதி, திட்டம், தேர்தல்கள், சட்ட மன்றம்.

3. சட்ட அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவை பற்றிய சட்டம் இயற்றுதல் உட்பட) கம்பெனிகள் பதிவு.

4. வருவாய்த் துறை அமைச்சர். .. **மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள், ஆவணப்பதிவுத் துறை, முத்திரைச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை, அரசு அச்சகம், பூமிதானம் மற்றும் கிராம தானம், பயண இசைவுச் சீட்டு.

5 உணவு அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இராம வீரப்பன்:** உணவு, நுகர் பொருள் வழங்கல், விலைவாசிக் கட்டுப்பாடு, புள்ளி விவரங்கள்.

6. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:
மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம்.

7. போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்:
போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள் மற்றும் வனங்கள்.

8. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்:
கால்நடை பராமரிப்பு.

9. பொதுப்பணித் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:
பொதுப்பணிகள், பாசனம் (சிறு பாசனம் உட்பட), நெடுஞ்சாலைகள், மின்சாரம், மரபுசாரா எரிசக்தி வளர்ச்சி, இரும்பு மற்றும் எஃகு கட்டுப்பாடு.

10. வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. சே. ரகுபதி:
வீட்டுவசதி, குடிசை மாற்றுத் திட்டம், ஊரக வீட்டு வசதி வளர்ச்சி, இடவசதிக் கட்டுப்பாடு, நகர அமைப்பு, நகர்ப்புற வளர்ச்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

11. ஊரகத் தொழில் துறை அமைச்சர் — மாண்புமிகு திரு. துரை ராமசாமி:
சிறுதொழில்கள், ஊரகத் தொழில்கள் (குடிசைத் தொழில்கள் உட்பட).

12. வேளாண்மைத் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்:
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்பு வரி மற்றும் கரும்பு வளர்ச்சி.

13. பால்வளத் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்:
பால், பால் பெருக்குத் திட்டம்.

14. வணிக வரிகள் துறை அமைச்சர் — மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி:
வணிக வரிகள்

15. தொழில் துறை அமைச்சர்.	மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: தொழில்கள், சுரங்கம் மற்றும் கனிம வளம் மற்றும் சுற்றுச்சூழல் மாசுக் கட்டுப்படுத்தல்.
16. சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.	மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: சமூக நலம் (மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் உட்பட), சத்துணவு, பிச்சைக்காரர் விடுதிகள், அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம் மற்றும் கைத்தறி மற்றும் நெசவாலைகள்.
17. பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர்.	மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: பிற்பட்டோர் நலம், மிகப் பிற்பட்டோர் நலம் மற்றும் சீர்மரபினர், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.
18. செய்தி-விளம்பரத் துறை அமைச்சர்.	மாண்புமிகு திரு. மு. தென்னவன்: செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு.
19. கல்வி அமைச்சர்	மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: கல்வி, தொழில் நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் நலம், தொல் பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு.
20. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.	மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன்: தொழிலாளர், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர்ப்புற மற்றும் கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டங்கள், மக்கள் தொகைக் கணக்கு.
21. கூட்டுறவுத் துறை அமைச்சர்.	மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: கூட்டுறவு.

22. உள்ளாட்சித் துறை அமைச்சர்.	**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி:** நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், கிராமப்புறக் கடன் சம்பந்தப்பட்டவை, நகர்ப்புற மற்றும் கிராமப்புற குடிநீர் வழங்கல்.
23. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.	**மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்:** ஆதிதிராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர், முன்னால் இராணுவத்தினர் நலன்.
24. இந்து சமய அற நிலையத் துறை அமைச்சர்.	**மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ்:** இந்து சமய அறநிலையத் துறை.
25. மீனளத் துறை அமைச்சர்.	**மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்:** மீனளம்.
26. சுற்றுலாத் துறை அமைச்சர்.	**மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்:** வக்ஃப் மற்றும் சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.
27. கதர்த் துறை அமைச்சர்.	**மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி:** கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியம்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

GOVERNOR—Dr. M. CHANNA REDDY

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. Chief Minister	..	**The Hon. Dr. J. JAYALALITHA**: Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service and other All India Services, District Revenue Officers, Police, Prevention of Corruption, Prohibition and Excise, Molasses, Minorities and Electronics.
2. Minister for Finance	..	**The Hon. Dr. V.R. NEDUNCHEZHIAN:** Finance, Planning, Elections and Legislature.
3. Minister for Law	..	**The Hon. Thiru K.A. KRISHNASAMY:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Debt Relief including Legislation on Money-lending, Chits and Registration of Companies.
4. Minister for Revenue	..	**The Hon. Thiru S.D. SOMASUNDARAM:** Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery and Printing, Government Press, Bhoodan and Gramdan and Passports.
5. Minister for Food	..	**The Hon. Thiru RAAMA VEERAPPAN:** Food, Civil Supplies, Price Control and Statistics.
6. Minister for Health	..	**The Hon. Thiru S. MUTHUSAMY:** Health, Medical Education and Family Welfare.
7. Minister for Transport and Forests.		**The Hon. Thiru K.A. SENGOTTAYAN:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports and Forests.

8. Minister for Animal Husbandry.	**The Hon. Thiru E. MADHUSUDHANAN:** Animal Husbandry.
9. Minister for Public Works.	**The Hon. Thiru S. KANNAPPAN:** Public Works, Irrigation including Minor Irrigation, Highways, Electricity, Non-conventional Energy Development and Iron and Steel Control.
10. Minister for Housing and Urban Development.	**The Hon. Thiru. S. REGUPATHY:** Housing, Slum Clearance, Rural Housing Development, Accommodation Control, Town Planning, Urban Development and Madras Metropolitan Development Authority.
11. Minister for Rural Industries.	**The Hon. Thiru DURAI RAMASAMY:** Small Scale Industries, Rural Industries including Cottage Industries.
12. Minister for Agriculture.	**The Hon. Thiru Ku.Pa. KRISHNAN**: Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.
13. Minister for Milk and Dairy Development.	**The Hon. Thiru. D. JANARDHANAN:** Milk and Dairy Development.
14. Minister for Commercial Taxes	**The Hon. Thiru. V. SATHIAMOORTHY:** Commercial Taxes.
15. Miniser for Industries.	**The Hon. Thiru. M. CHINNASAMY:** Industries, Mines and Minerals and Enviornmental Pollution Control.

16. Minister for Social Welfare and Handlooms and Textiles.	**The Hon. Thirumathi R. INDIRAKUMARI:** Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meals, Beggar Homes, Orphanages and Correctional Administration and Handlooms and Textiles.
17. Minister for Backward Classes.	**The Hon. Thiru. K. LAWRENCE:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees.
18. Minister for Information and Publicity.	**The Hon. Thiru M. THENNAVAN:** Information and Publicity, Film Technology, Cinematograph Act and Newsprint Control.
19. Minister for Education.	**The Hon. PROF. K. PONNUSAMY:** Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare. Archaeology, Tamil Development and Tamil Culture.
20. Minister for Labour	**The Hon. Thiru. A.M. PARAMASIVAN:** Labour, Employment and Training, Urban and Rural Employment Programmes and Census.
21. Minister for Co-operation.	**The Hon. Thiru C.P. PATTABIRAMAN:** Co-operation.
22. Minister for Local Administration.	**The Hon. Thiru T.M. SELVA GANAPATHY:** Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness and Urban and Rural Water Supply.

23. Minister for Adi Dravidar Welfare.	**The Hon. Thiru M. ANANDAN:** Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen.
24. Minister for Hindu Religious and Charitable Endowments.	**The Hon. V. NADESAN PAULRAJ:** Hindu Religious and Charitable Endowments.
25. Minister for Fisheries	**The Hon. Thiru. D. JAYAKUMAR:** Fisheries.
26. Minister for Tourism	**The Hon. Thiru S. NAGOOR MEERAN:** Wakf and Tourism and Tourism Development Corporation.
27. Minister for Khadi	**The Hon. Thiru P. ESWARAMURTHI:** Khadi and Village Industries Board.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. முத்தையா

பேரவைத் துணைத் தலைவர்

திரு. ச. காந்திராஜன்

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

1. திரு. வி.பி. சந்திரசேகர்
2. திரு. எஸ். அன்பழகன்
3. திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்
4. திரு. எச்.எம். ராஜு
5. திரு. ஜி. பழனிசாமி
6. திரு. எஸ். ஆண்டித் தேவர்

செயலாளர்

திரு. செ.சு. ஜானகிராமன்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

1.	திரு. தா. ஜேக்கப் ஆர்த்தர், பி.ஏ., பி.எல்., டி.பி., பி.ஏ.	கூடுதல் செயலாளர்
2.	திரு. டி. சாலமன் ஜெயபால், பி.எஸ்சி., பி.எல்.	இணைச் செயலாளர்
3.	திரு. பெ. இராசமாணிக்கம், பி.ஏ., பி.எல்.	இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
4.	திருமதி முனீர் உனிசா, பி.எஸ்.சி., பி.ஜி.எல்.	துணைச் செயலாளர்
5.	திரு. வெ. இராசாராமன், பி.எஸ்.சி., பி.எல்.	துணைச் செயலாளர்
6.	திரு. கா.ப. இராஜன், டி.ஆர்.எஸ்.	துணைச் செயலாளர்
7.	திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல்.	துணைச் செயலாளர்
8.	திரு. கோ. சண்முகநாதன், எம்.காம்., பி.ஜி.எல்.	துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
9.	திரு. செ ஏ. துரைபாண்டியன், பி.ஏ.	துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
10.	திரு. டி. சுந்தர்ராஜுலு, எம்.ஏ.	துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
11.	திரு. ப. சீ. வெங்கடராமன், பி.காம்.	குழு அலுவலர்
12.	திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல்.	குழு அலுவலர்
13.	திருமதி வீ. நா. உமா, பி.ஏ.	சார்புச் செயலாளர்
14.	திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல்.	சார்புச் செயலாளர்

15.	திரு. சா. கணேசன் பி.ஏ., பி.ஜி.எல்.	சார்புச் செயலாளர்
16.	திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ.	சார்புச் செயலாளர்
17.	திரு. எம். ஜோபாய், பி.காம்.	சார்புச் செயலாளர்
18.	திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி.,பி.எல்.	சார்புச் செயலாளர்
19.	திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.ஜி.எல்.	சார்புச் செயலாளர்
20.	திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல்.	சார்புச் செயலாளர்
21.	திரு. ஜி. அனீஸ் அகமத், பி.ஏ., பி.ஜி.எல்.	சார்புச் செயலாளர்
22.	திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல்.	சார்புச் செயலாளர்
23.	திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ.	சார்புச் செயலாளர்
24.	திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல்.	சார்புச் செயலாளர்
25.	திரு. பு.அ. செல்வராஜ், பி.எஸ்சி.	சார்புச் செயலாளர்
26.	திருமதி என். துளசிபாய், பி.ஏ.	சார்புச் செயலாளர்
27.	திரு. கே. ரவீந்திரன் எம்.ஏ.	சார்புச் செயலாளர்
28.	திரு. ஊ.கு.சுப்பிரமணியம், எம்.ஏ.	சார்புச் செயலாளர்

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

29.	திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ., எல்எல்.பி., டி.காம்., டி.ஜே.பி.ஆர்., டி.ஐ.ஆர்., பி.எம்.	தலைமை நிருபர்
30.	திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட்.	தலைமை நிருபர்
31.	திரு. செ. சந்திரகுமார், எம்.ஏ	தலைமை நிருபர்
32.	திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல்.	பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

பெயர்களும் தொகுதிகளும்.

1.	அண்ணாமலை, திரு. எஸ்.	..	ஆலந்தூர்
2.	அபரஞ்சி, திரு. பெ.	..	அரூர் (செ.வ.)
3.	அபுல்ஹசன், திரு. எம்.எம்.எஸ்	..	மயிலாடுதுறை
4.	அப்பு நடேசன், திரு. இரா.	..	திருவட்டாறு
5.	அமர்நாத், திரு. ஓ.எஸ்.	..	மதுரை கிழக்கு
6.	அம்மமுத்து பிள்ளை, டாக்டர் மு.		கன்னியாகுமரி
7.	அரங்கநாதன், திரு. ஆர். டி.	..	விருத்தாசலம்
8.	அரங்கநாயகம், டாக்டர் செ.	..	தொண்டாமுத்தூர்
9.	அர்ச்சுனன், திரு. க.	..	வீரபாண்டி
10.	அழகிரி, திரு. ச.	..	சிதம்பரம்
11.	அழகு திருநாவுக்கரசு, திரு.	..	ஒரத்தநாடு
12.	அறிவழகன், திரு. ஆ.	..	கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
13.	அன்பழகன், திரு. எஸ்.	..	நாமக்கல் (செ.வ.)
14.	ஆசைமணி, திரு. எஸ்.	..	குத்தாலம்
15.	ஆண்டி அம்பலம், திரு. எம்.	..	நத்தம்
16.	ஆண்டித் தேவர், திரு. எஸ்.	..	திருப்பரங்குன்றம்
17.	ஆரோக்கியசாமி, டாக்டர் ச.	..	திருச்சிராப்பள்ளி-1
18.	ஆறுமுகம், திரு. செ.	..	வானூர் (செ.வ.)
19.	ஆனந்தன், திரு. எம்.	..	உளுந்தூர்பேட்டை (செ.வ.)

20.	இந்திரகுமாரி, திருமதி இரா. ..	நாட்ராம்பள்ளி
21.	இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ.	மேலூர்
22.	இராசாராமன், திரு. சோ. ..	பாபநாசம்
23.	இராசாராம் திரு. க. ..	பனமரத்துப்பட்டி
24.	இராதாகிருஷ்ணன், திரு. த. க. ..	திருமங்கலம்
25.	இராமகிருஷ்ணன், டாக்டர். இ. ..	அச்சரப்பாக்கம் (செ.வ.)
26.	இராமசாமி அம்பலம், திரு. கே.ஆர்	திருவாடனை
27.	இராமசுவாமி, திரு. சி. ..	சங்கராபுரம்
28.	இராமச்சந்திரன், திரு ஓ. ஆர். ..	கம்பம்
29.	இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர்.	சாத்தூர்
30.	இராமச்சந்திரன் திரு. ச. ..	பண்ருட்டி
31.	இராமச்சந்திரன், திரு. மா. சா. மா..	இளையாங்குடி
32.	இராமதாஸ், திரு. எஸ். எஸ். ஆர்.	செஞ்சி
33.	இராமநாதன், திரு. இராம. ..	கும்பகோணம்
34.	இராம வீரப்பன், திரு. ..	காங்கேயம்
35.	இராஜமன்னார், திரு. சு. சே ..	ஒட்டப்பிடாரம் (செ.வ.)
36.	இராஜன்பாபு என்கிற தணிகைபாபு, திரு. கி.	திருத்தணி
37.	இராஜேந்திரன், திரு. பி.வி. ..	வேதாரண்யம்
38.	இலதா பிரியகுமார், திருமதி ..	அரக்கோணம் (செ.வ.)
39.	இளம்வழுதி, திரு. ..	எழும்பூர் (செ.வ.)
40.	ஈஸ்வரமூர்த்தி, திரு. பி. ..	தாராபுரம் (செ.வ.)
41.	ஈஸ்வரன், திரு. ஆர். ..	வாசுதேவநல்லூர் (செ.வ.)

42.	ஏகாம்பர ரெட்டி, திரு. எ.	..	பள்ளிப்பட்டு
43.	கண்ணப்பன், திரு. எஸ்.	..	திருப்பத்தூர்
44.	கண்ணன், திரு. வே.	..	திருவண்ணாமலை
45.	கந்தசாமி, திரு. கே.	..	தலைவாசல் (செ.வ.)
46.	கருப்புசாமி, டாக்டர் எம்.	..	குன்னூர் (செ.வ.)
47.	கலியபெருமாள், திரு. ப.	..	திருவையாறு
48.	கலைச்செல்வி, திருமதி கே.எம்.	..	காட்பாடி
49.	கவிநிலவு தர்மராஜ், திருமதி	..	மொடக்குறிச்சி
50.	கற்பகம் இளங்கோ, திருமதி	..	காரைக்குடி
51.	கனகவல்லி, திருமதி என்.	..	விளாத்திகுளம்
52.	காஞ்சி பன்னீர்செல்வம், திரு.	..	உத்திரமேரூர்
53.	காந்திராஜன், திரு. ச.	..	வேடசந்தூர்
54.	காளன், திரு. கோ.	..	வில்லிவாக்கம்
55.	காளிராஜன், டாக்டர் மு.	..	சமயநல்லூர் (செ.வ.)
56.	கிருஷ்ணசாமி, திரு. கே.ஏ.	..	ஆயிரம்விளக்கு
57.	கிருஷ்ணன், திரு. எஸ்.எம்.	..	தாம்பரம்
58.	கிருஷ்ணன், திரு. கு.ப.	..	ஸ்ரீரங்கம்
59.	கிருஷ்ணன், திரு. சி.	..	ஓமலூர்
60.	குப்பன், திரு. க.	..	திருவொற்றியூர்
61.	குமரி அனந்தன், திரு.	..	சாத்தான்குளம்
62.	குமாரதாஸ், டாக்டர் தே.	..	கிள்ளியூர்
63.	குழந்தைவேலு, திரு. சி.	..	குளத்தூர் (செ.வ.)
64.	கோடிமாரி, திரு. ஆர்.	..	நாகப்பட்டினம்

65. கோபாலகிருஷ்ணன், திரு. வே. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)

66. கோபால், டாக்டர் க. .. நன்னிலம் (செ.வ.)

67. கோவிந்தராசு, திரு. மா. .. ரிஷிவந்தியம்

68. சக்குபாய், திருமதி ரா. .. கும்மிடிப்பூண்டி

69. சக்குபாய் தேவராஜ், திருமதி டி. திருவள்ளூர்

70. சஞ்சய் ராமசாமி திரு. .. விருதுநகர்

71. சண்முகநாதன், திரு. எஸ். .. ஆலங்குடி

72. சண்முகம், திரு. எஸ். வி. .. மதுரை மேற்கு

73. சத்தியமூர்த்தி, திரு. வ. .. கடலாடி

74. சந்திரசேகர், திரு. வி.பி. .. பொள்ளாச்சி

75. சம்பத், திரு. எ. .. வாணியம்பாடி

76. சரஸ்வதி, திருமதி அ. தி. .. சத்தியமங்கலம்

77. சரஸ்வதி, திருமதி ப. .. கபிலர்மலை

78. சரோஜா, டாக்டர் வெ. .. சங்கரி (செ.வ.)

79. சாத்தையா, திரு. தி. .. இராஜபாளையம் (செ.வ.)

80. சாவித்திரி அம்மாள் திருமதி, ஆர். முகையூர்

81. சிங்காரம், திரு. ஆர். .. பேராவூரணி

82. சிங்காரம், திரு. கே. .. மொரப்பூர்

83. சிங்கை கோவிந்தராசு, திரு .. சிங்காநல்லூர்

84. சியாமளா, திருமதி ரெ. .. கோவில்பட்டி

85. சிவசுப்பிரமணியன், திரு. கு. .. குறிஞ்சிப்பாடி

86. சிவபதி, திரு. என். ஆர். .. தொட்டியம்

87. சின்னசாமி, திரு. கா. .. சேந்தமங்கலம் (ம.ப.)

88.	சின்னசாமி, திரு. ம ..	கரூர்
89.	சின்னசாமி, திரு. வி. கே. ..	பவானிசாகர்
90.	சின்னப்பன், திரு. கே. கே ..	ஜெயங்கொண்டம்
91.	சீனியம்மாள், டாக்டர் மு. ..	அவினாசி (செ.வ.)
92.	சீனிவாசன், திரு. ஆ. கு. ..	பெரணமல்லூர்
93.	சீனிவாசன், திரு. கு. ..	மன்னார்குடி
94.	சுதர்சனம், திரு. டி. ..	பூந்தமல்லி
95.	சுந்தரசாமி, திரு. எம். ..	கலசப்பாக்கம்
96.	சுந்தரதாஸ், திரு. மா. ..	விளவன்கோடு
97.	சுந்தரம், திரு. எம். கே. ..	தண்டராம்பட்டு
98.	சுந்தரராஜ், டாக்டர் எஸ். ..	பரமக்குடி (செ.வ.)
99.	சுந்தரவேல், திரு. ஏ. கே. சி. ..	திருப்பத்தூர்.
100.	சுந்தராம்பாள், திருமதி செ. ..	மேட்டூர்
101.	சுப்பிரமணியம், திரு. வ. மு. ..	மானாமதுரை (செ.வ.)
102.	சுப்பிரமணியன், திரு. வீ. ..	கண்டமங்கலம் (செ.வ.)
103.	சுப்புரத்தினம். திரு. ஆ. ..	பழனி (செ.வ.)
104.	சுலோசனா, செல்வி எல். ..	மேட்டுப்பாளையம்
105.	சுவாமிநாதன், திரு. சி. ..	புதுக்கோட்டை
106.	செங்கோட்டையன், திரு. கே.ஏ. ..	கோபிசெட்டி பாளையம்
107.	செல்லக்குமார், டாக்டர். அ. ..	அண்ணா நகர்
108.	செல்லசாமி, திரு. ஏ. டி. ..	ஒட்டன்சத்திரம்
109.	செல்லதுரை, திரு. ஆ. ..	திருச்செந்தூர்
110.	செல்வகணபதி, திரு. டி. எம். ..	திருச்செங்கோடு
111.	செல்வராசன், திரு. அ. ..	துறைமுகம்

112.	செல்வராஜ், திரு. கே.	..	கோயம்புத்தூர் மேற்கு
113.	செழியன், திரு. தா.	..	பெரம்பலூர் (செ.வ.)
114.	சேகர், டாக்டர் எம்.பி.	..	பெரம்பூர் (செ.வ.)
115.	சேகர், திரு. எம். ஜி.	..	பாலக்கோடு
116.	சொக்கலிங்கம், திரு. பி.	..	மதுராந்தகம்
117.	சோமசுந்தரம், திரு. எஸ். டி.	..	தஞ்சாவூர்
118.	ஞானசேகரன், திரு. சி.	..	வேலூர்
119.	டேனியல்ராஜ், திரு. எஸ்.	..	ஸ்ரீவைகுண்டம்
120.	தங்கமுத்து, திரு. கு.	..	திருவோணம்
121.	தங்கராஜ், திரு. ஆர்.	..	ஆண்டிமடம்
122.	தங்கவேல், திரு. எம்.	..	முசிறி
123.	தண்டாயுதபாணி, திரு. வி.	..	குடியாத்தம்
124.	தமிழரசன், திரு. செ. கு.	..	வந்தவாசி (செ.வ.)
125.	தமிழரசு, திரு. வெ.	..	ஆத்தூர்
126.	தம்புசாமி, திரு. வே.	..	திருவாரூர் (செ.வ.)
127.	தருமலிங்கம், திரு. கி.	..	அணைக்கட்டு
128	தர்மலிங்கம், திரு. பே.	..	பாளையங்கோட்டை
129.	தவசி, திரு. கே.	..	ஆண்டிப்பட்டி
130.	தனபால், திரு. ம.	..	திருப்போரூர் (செ.வ.)
131.	தாமரைக்கனி, திரு. இரா.	..	ஸ்ரீவில்லிப்புத்தூர்
132.	தாமோதரன், திரு. எம். சி.	..	நெல்லிக்குப்பம்
133.	திருநாவுக்கரசு, திரு .எஸ்.	..	அறந்தாங்கி
134.	துரை, திரு. எஸ். எம்.	..	ஆத்தூர்
135.	துரைமுருகன், திரு. கே .எஸ்.	..	பல்லடம்

136. துரை ராமசாமி, திரு.	..	வெள்ளக்கோவில்
137. தெய்வநாயகம், திரு. எ.	..	மதுரை மத்தி
138. தென்னவன், திரு. மு.	..	இராமநாதபுரம்
139. தேவராஜ், திரு. அ.	..	செய்யாறு
140. தேனி பன்னீர்செல்வம், திரு.	..	போடிநாயக்கனூர்
141. நடேசன், திரு. மு.	..	சேலம்-2
142. நடேசன் பால்ராஜ், திரு. வெ.	..	நாங்குநேரி
143. நாகூர் மீரான், திரு. எஸ்.	..	கடையநல்லூர்
144. நிர்மலா, திருமதி பி.	..	திண்டுக்கல்
145. நெடுஞ்செழியன், டாக்டர் இரா.		தேனி
146. பஞ்சவர்ணம், திருமதி கே.	..	வலங்கைமான் (செ.வ)
147. பட்டாபிராமன், திரு. கா. ப.	..	காஞ்சிபுரம்
148. பரந்தாமன், டாக்டர் ஜெ.	..	பேரணாம்பட்டு (செ.வ)
149. பரமசிவம், திரு. ஆர். பி.	..	சின்னசேலம்
150. பரமசிவன், திரு. ஏ. எம்.	..	சோழவந்தான்
151. பலராமன், திரு. உ.	..	பூங்கா நகர்
152. பழனிசாமி, திரு. இரா.	..	தாரமங்கலம்
153. பழனிசாமி, திரு. க.	..	எடப்பாடி
154. பழனிசாமி, திரு. நா.சா.	..	கிணத்துக்கடவு
155. பழனிசாமி, திரு. வெ.	..	திருப்பூர்
156. பழனிசாமி, திரு. ஜி.	..	திருத்துறைப்பூண்டி (செ.வ.)
157. பழனியம்மாள், திருமதி க.	..	ராசிபுரம்
158. பன்னீர்செல்வம் திரு. என்.	..	திருவிடைமருதூர்
159. பன்னீர்செல்வம், திரு. சா.	..	திண்டிவனம்

160.	பன்னீர்செல்வம், திரு. ஜெ. ..	திருநாவலூர்
161.	பாண்டியம்மாள், திருமதி இரா. ..	உசிலம்பட்டி
162.	பாப்பா சுந்தரம் திரு. அ. ..	குளித்தலை
163.	பாலகங்காதரன், திரு. ஜெ. ..	சிவகாசி
164.	பாலகிருஷ்ணன், திரு. சோ. ..	முதுகுளத்தூர்
165.	பாலசுப்பிரமணியன், திரு. கி. ..	பட்டுக்கோட்டை
166.	பாலசுப்பிரமணியன், திரு. வெ. ..	மயிலாப்பூர்
167.	பாலசுப்ரமணியன், திரு. எஸ். ஆர். ..	பொங்கலூர்
168.	பாலன், திரு. எம். கே. ..	சைதாப்பேட்டை
169.	பாலையா, திரு. ஆ. ..	குளச்சல்
170.	பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். ..	தென்காசி
171.	புதுநயினார் ஆதித்தன், திரு. இரா. ..	சேரன்மகாதேவி
172.	புரட்சிமணி, திரு. ச. ..	மங்களூர் (செ.வ)
173.	புருஷோத்தமன், டாக்டர். ஆ. வெ.	பெண்ணாகரம்
174.	பூராசாமி, திரு. எம். ..	பூம்புகார்
175.	பெரியசாமி, திரு. ப. ..	பெருந்துறை
176.	பெரியசாமி, திரு. வே ..	அந்தியூர் (செ.வ)
177.	பெரியவீரன், திரு. எம். ..	பெரியகுளம்
178.	பெருமாள், திரு. செ. ..	ஏற்காடு (ம.ப)
179.	பொன்னம்மாள் திருமதி ஏ. எஸ்...	நிலக்கோட்டை (செ.வ)
180.	பொன்னுசாமி, பேராசிரியர். க. ..	மருங்காபுரி
181.	பொன்னுசாமி, திரு. பெ. ..	தருமபுரி

182.	பொன்னுவேலு, திரு. ஏ. தா. ..	வரகூர் (செ.வ.)
183.	போளூர் வரதன், திரு. ..	ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
184.	மணிமேகலை, டாக்டர் சு. ..	அரியலூர்
185.	மணிமேகலை, திருமதி வி. ஜி. ..	அருப்புக்கோட்டை
186.	மணிவாசகம், திரு. கே. பி. ..	உடுமலைப்பேட்டை
187.	மதுசூதனன், திரு. இ. ..	டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
188.	மரியம் உல் ஆசியா, திருமதி கே.	அரவக்குறிச்சி
189.	மல்லிகா, செல்வி கோ. ..	புவனகிரி
190.	மனோகரன், திரு. கே. ஏ. ..	ஒசூர்
191.	மாணிக்கம், திரு. சி. ..	ஈரோடு
192.	மாலா, டாக்டர் ஜி. ஆர். ..	திருச்சிராப்பள்ளி-2
193.	முத்துசாமி, திரு. சு. ..	பவானி
194.	முத்தையா, திரு. இரா. ..	சேடப்பட்டி
195.	முருகானந்தம், திரு. கே. ஆர். ..	சிவகங்கை
196.	முருகையா பாண்டியன், திரு. ஆர்.	அம்பாசமுத்திரம்
197.	முனிரத்தினம், திரு. ஏ. எம். ..	சோளிங்கர்
198.	முனிவெங்கடப்பன், திரு. கே. ..	கிருஷ்ணகிரி
199.	முனுசாமி, திரு. கா . பூ. ..	காவேரிப்பட்டினம்.
200.	முஹமது ஆசிப், திரு. ..	திருவல்லிக்கேணி
201.	மூர்த்தி, திரு. து. ..	சீர்காழி (செ.வ.)
202.	மோகனன், திரு. கோவி. எஸ். ..	இராணிப்பேட்டை
203.	மோசஸ், டாக்டர் எம். ..	நாகர்கோவில்
204.	ரகுபதி, திரு. சே. ..	திருமயம்

205. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்

206. ரத்தினவேல், திரு. த. .. திருவெறும்பூர்

207. ரமணி நல்லதம்பி, திருமதி .. ராதாபுரம்

208. ரமேஷ், திரு. வி. பி. ஆர். .. தூத்துக்குடி

209. ரவிக்குமார், திரு. ஏ. .. பொன்னேரி (செ.வ.)

210. ரவிச்சந்திரன், திரு. வி. .. உப்பிலியாபுரம் (ம.ப.)

211. ராமசுப்பு, திரு. எஸ். எஸ். - ஆலங்குளம்

212. ராஜு, திரு. எச். எம். .. உதகமண்டலம்

213. ராஜு, திரு. கே. ஆர். .. கூடலூர்

214. ராஜு, திரு. கே. பி. .. பேரூர்

215. ராஜேந்திரன், திரு. என். ஆர். .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)

216. லட்சுமணன், திரு. வி. கே. .. கோயம்புத்தூர் கிழக்கு

217. லாரன்ஸ், திரு. கு. .. பத்மநாபபுரம்

218. லோகாம்பாள், திருமதி ஜெ. .. லால்குடி

219. வரதராஜன், திரு. செ. து. .. செங்கல்பட்டு

220. விசுவநாதன், திரு. ஜி. .. ஆற்காடு

221. வீரபாண்டியன், டாக்டர் பெ. .. செங்கம் (செ.வ.)

222. வெங்கடராம ரெட்டி, திரு. மு. .. தளி

223. வெங்கடேசன், திரு. பி. ஆர். எஸ். .. கடலூர்

224. வேடியப்பன், திரு. தா. .. போளூர்

225. வேலையா, திரு. டி. .. திருநெல்வேலி

226. ஜனார்தனன், திரு. தே. .. விழுப்புரம்

227. ஜானகிராமன், திரு. கோ. .. மேல்மலையனூர்

228. ஜீனத் சர்புதீன், திருமதி .. சேப்பாக்கம்

229. ஜெயகுமார், திரு. டி. .. ராயபுரம்

230. ஜெயக்குமார், திரு. எஸ். .. தியாகராயநகர்

231. ஜெயராமன், திரு. எஸ். ஆர். .. சேலம்-1

232. ஜெயலலிதா, டாக்டர் ஜெ. .. பர்கூர்

233. ஜெய்சன் ஜேக்கப், டாக்டர் .. ஆரணி

234. ஸ்ரீதரன், டாக்டர் அ. .. வால்பாறை (செ.வ.)

235. பிட்ரிக்ஸ் டி'சோசா, டாக்டர் .. நியமனம்

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

கிருஷ்ணமூர்த்தி, திரு. ஆர். .. தலைமை வழக்கறிஞர்

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 23, பவ , திருவள்ளுவர் ஆண்டு—2026

1995, ஏப்ரல் 6, வியாழக்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

> "அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
> இடுக்கண் இடுக்கட் படும்."

துன்பங்களைக் கண்டு மனங்கலங்காதவரிடம், அடுத்தடுத்து துன்பம் வருமேயானாலுங்கூட, அந்தத் துன்பமானது தானே துன்பப்பட்டு மறைந்து. அழியும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்.241, திரு. ஆ.கு. சீனிவாசன், மாண்புமிகு நிதி அமைச்சர்.

241—

பெரணமல்லூரில் சார்நிலைக் கருவூலம் அமைத்தல்

***35670**—திரு.ஆ.கு. சீனிவாசன்:

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரணமல்லூரில் புதியதாகச் சார்நிலைக் கருவூலம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா.நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) மற்றும் (ஆ) : பெரணமல்லூரில் புதிதாக சார்நிலைக் கருவூலம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ஆ. கு. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு"

என்ற வள்ளுவருடைய வாக்குக்கு இணங்க ஆறு அம்சங்களை தனித் தன்மைகளோடு அங்கங்களாகப் பெற்றுள்ள நல் ஆட்சி புரியும் மாண்புமிகு காவல் தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில் உயர்ந்த பண்பும் உயர்ந்த மனிதர்களாக அமைச்சர் அவையில் வீற்றிருக்கும் எல்லோரும் புன்னகையோடு இந்தச் சட்டமன்றத்தில் வீற்றிருப்பதற்கு காரணமாக விளங்குகின்ற உயர்ந்த மனிதராகிய அமைச்சர் பெருமக்கள் இதற்கு ஆவன செய்வாரா என்று அம்மா அவர்களின் ஆசியோடு இந்த அரசின் பரிசீலனையில் இது உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே சொன்னேன். இது அரசினுடைய பரிசீலனையில் இல்லை. காரணம் என்னவென்றால் பெரணமல்லூர் வந்தவாசி தாலுக்காவில் உள்ளது. இது ஒரு பஞ்சாயத்து யூனியன் தலைமை இடமாகும். ஆனால் பெரணமல்லூர் தாலுக்கா தலைமையகம் இல்லை. துணை விதி 1, கருவூல விதி 5, தமிழ்நாடு கருவூல விதி தொகுப்பு 1-ன்படி வட்ட ஆட்சி அலுவலகத் தலைமை இடத்தில்தான் சார்நிலைக் கருவூலம் தோற்றுவிக்கப்படவேண்டும். மேலும் பெரணமல்லூரைச் சுற்றிலும் தற்போது வந்தவாசி, செய்யாறு, ஆரணி ஆகிய 3 இடங்களில் சார்நிலைக் கருவூலங்கள் இயங்கி வருகின்றன. எனவே மேற்கண்ட சூழ்நிலையில் தற்போதுள்ள மிகவும் நிதி நெருக்கடியான நேரத்தில் திட்டம் இல்லா இனங்களில் செலவைக் குறைக்க வேண்டிய இக்காலக் கட்டத்தில் கருவூல விதிகளுக்குட்படுத்தி மேற்படி இடத்தில் ஒரு சார்நிலைக் கருவூலத்தை அமைக்கத் தேவை ஏற்படவில்லை. எனவே தான் அரசின் பரிசீலனையில் இது இல்லை.

திரு. ஆ. கு. சீனிவாசன்: மாண்புமிகு அமைச்சர் அவர்களே, வந்தவாசி வட்டத்தில்

1995 ஏப்ரல் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: "மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே" என்று சொல்லுங்கள்.

திரு. ஆ. கு. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையைப் பார்க்கும்போது இல்லை என்ற ஐயத்தை வைத்துப் பேசுகிறார்கள். அமைச்சர் அவர்களுக்கு சொல்லிக்கொள்கிறேன். வந்தவாசி வட்டத்தில், இரண்டு தொகுதிகள் உள்ளன. வந்தவாசி நகராட்சியை மையமாகக் கொண்ட தொகுதியும் 25 கிலோமீட்டர் தொலைவில் பெரமணமல்லூர் பொதுத் தொகுதியும் செயல்பட்டு வருகிறது. அந்தத் தொகுதி மிகவும் தாழ்ந்த நிலையில் இருக்கிறது. எதற்கெடுத்தாலும் 25 கிலோ மீட்டர் சென்றுதான் எல்லாப் பணியும் செய்ய வேண்டியுள்ளது. ஆகையால் அந்த பகுதி வளர்ச்சி பெறுவதற்காக மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நல்லாட்சியில்

> ***"குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்***
> ***மிகைநாடி மிக்க கொளல்"***

என்ற வள்ளுவருடைய வாக்குக்கு இணங்க நன்றாக ஆராய்ந்து தாழ்ந்த பகுதியை உயர்ந்த பகுதியாக மாற்றுவதற்கு கருவூலம் அவசியம் என்று மக்கள் நலன் கருதி இந்தக் கோரிக்கையை வைத்து இதை அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.05

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் காரண காரிய விளக்கங்களோடு இதை அரிசினுடைய பரிசீலனையில் எடுப்பதற்கு இல்லை என்று முதலிலேயே சொன்னேன். 'குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகை நாடி மிக்க கொளல்' என்ற குறளினுடைய அடிப்படையில் தான் இது பரிசீலிக்கப்பட்டு முடிவு செய்யப்பட்டது. ஏனென்றால், ஒவ்வொரு வட்டாட்சியருடைய தலைநகரிலும் ஒரு சார்நிலைக் கருவூலம் இருக்க வேண்டும் என்ற கொள்கை தமிழகம் முழுவதும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இங்கே ஒரு சார்நிலைக் கருவூலத்தில் வேலைப் பளு அதிகமாகி, ஒரு சார்நிலைக் கருவூலத்தால் தாக்கு பிடிக்க முடியாது என்கின்ற சூழ்நிலை ஏற்படுகின்றபோதுதான் அதனை இரண்டாகப் பிரிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஆனால், பெரணமல்லூரைச் சுற்றியிருக்கின்ற ஆரணி, வந்தவாசி மற்றும் செய்யாறு ஆகிய இடங்களில் இருக்கிற கருவூலங்களில் போதுமான அளவுக்கு வேலைகள் என்ற அடிப்படையிலே தான் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவற்றை இரண்டாக

உடைக்க வேண்டிய அவசியமோ, அவை இரண்டாக ஆக்கப்பட வேண்டிய அவசியமோ ஏற்படவில்லை. எனவே, இப்பொழுது இருக்கின்ற சூழ்நிலையில் பெரணமல்லூரில் சார்நிலைக் கருவூலம் அமைப்பதற்கான செயற்குறிப்புகள் இல்லை. அதற்கான அவசியமும் ஏற்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 242, திரு. வே. பெரியசாமி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

242—

மாத்தூர் ஆதிதிராவிடர்களுக்கு நிலம் ஒதுக்குதல்

***22313**—திரு. வே. பெரியசாமி:*

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், மாத்தூர் ஆதிதிராவிடர் நிலக்குடியேற்றத்திற்கு ஒதுக்கப்பட்ட வருவாய்த் துறைக்குச் சேர்ந்த புறம்போக்கு நிலத்தை வனத் துறை தானே எடுத்துக் கொண்டதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதனை வனத் துறையிடமிருந்து வருவாய்த் துறைக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பெரியார் மாவட்டம், பவானி வருவாய் வட்டம், மாத்தூர் கிராமம், க.க.எண். 559/1 மற்றும் 560-ல் உள்ள 673.88 ஏக்கர் மற்றும் 11.70 ஏக்கர் நிலங்கள் ஏற்கனவே வனத் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிலங்களாகும்.

(ஆ) வனத் துறையின் ஒதுக்கப்பட்ட காடாக இருப்பதால் வருவாய்த் துறைக்கு மாற்ற மத்திய அரசின் அனுமதி பெற வேண்டும்.

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம், மாத்தூர் ஆதிதிராவிடர் நிலக்குடியேற்றத்திற்கு, அதாவது பவானி வருவாய் வட்டத்தைச் சேர்ந்த மாத்தூர் ஆதி திராவிட நிலக்குடியேற்றச் சங்கத்திற்கு புல எண் 559/1-ல் 673.88 ஏக்கர் நிலத்திலேயும், புல எண் 560/1-ல் 11.70 ஏக்கர் நிலத்திலேயும் ஆரம்பக் காலத்தில், ஏறத்தாழ ஒரு 25 ஆண்டுகளுக்கு முன்னாலே, இந்த இடம்

உடைக்க வேண்டிய அவசியமோ, அவை இரண்டாக ஆக்கப்பட வேண்டிய அவசியமோ ஏற்படவில்லை. எனவே, இப்பொழுது இருக்கின்ற சூழ்நிலையில் பெரணமல்லூரில் சார்நிலைக் கருவூலம் அமைப்பதற்கான செயற்குறிப்புகள் இல்லை. அதற்கான அவசியமும் ஏற்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 242, திரு. வே. பெரியசாமி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

242—

மாத்தூர் ஆதிதிராவிடர்களுக்கு நிலம் ஒதுக்குதல்

***22313**—திரு. வே. பெரியசாமி:*

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், மாத்தூர் ஆதிதிராவிடர் நிலக்குடியேற்றத்திற்கு ஒதுக்கப்பட்ட வருவாய்த் துறைக்குச் சேர்ந்த புறம்போக்கு நிலத்தை வனத் துறை தானே எடுத்துக் கொண்டதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதனை வனத் துறையிடமிருந்து வருவாய்த் துறைக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பெரியார் மாவட்டம், பவானி வருவாய் வட்டம், மாத்தூர் கிராமம், க.க.எண். 559/1 மற்றும் 560-ல் உள்ள 673.88 ஏக்கர் மற்றும் 11.70 ஏக்கர் நிலங்கள் ஏற்கனவே வனத் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிலங்களாகும்.

(ஆ) வனத் துறையின் ஒதுக்கப்பட்ட காடாக இருப்பதால் வருவாய்த் துறைக்கு மாற்ற மத்திய அரசின் அனுமதி பெற வேண்டும்.

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம், மாத்தூர் ஆதிதிராவிடர் நிலக்குடியேற்றத்திற்கு, அதாவது பவானி வருவாய் வட்டத்தைச் சேர்ந்த மாத்தூர் ஆதி திராவிட நிலக்குடியேற்றச் சங்கத்திற்கு புல எண் 559/1-ல் 673.88 ஏக்கர் நிலத்திலேயும், புல எண் 560/1-ல் 11.70 ஏக்கர் நிலத்திலேயும் ஆரம்பக் காலத்தில், ஏறத்தாழ ஒரு 25 ஆண்டுகளுக்கு முன்னாலே, இந்த இடம்

1995 ஏப்ரல் 6]

வருவாய்த் துறையைச் சேர்ந்ததாகவும், வருவாய்த் துறை கணக்கில் இருந்ததாகவும் சொல்லப்படுகிறது, அப்படிப்பட்ட அந்த இடத்தைத் தான் அந்தப் பகுதியைச் சேர்ந்த ஏழையெளிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், ஆதிவாசி மக்கள், வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள மக்கள் எல்லாம், அந்த இடத்தை நிலக் குடியேற்றச் சங்கமாக ஏற்பாடு செய்து, அதிலே விவசாயம் செய்ய வழி செய்ய வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய பொற்பாதத்தை கெஞ்சிக் கேட்கிறார்கள். கடந்த காலத்திலே இருந்தவர்கள் எல்லாம் கையை விரித்துவிட்டுச் சென்று விட்டார்கள். நாம் ஆட்சிக்கு வந்த பின்னாலேதான் இன்றைக்கு மந்தை எல்லம் நில மாற்றம் செய்து பட்டா வழங்கிக் கொண்டிருக்கின்ற இந்த நல்ல நேரத்தில், கருணை உள்ளத்தோடு மத்திய அரசு என்ன? எந்த அரசாக இருந்தாலும் சரி, தாங்கள் பரிந்துரை செய்தால் அந்த நிலத்தை மீண்டும் வருவாய்த் துறைக்கு எடுத்து, அந்த மக்களுக்கு குடியேற்றச் சங்கம் ஏற்பட ஆவன செய்வார்களா என பணிந்து மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.10

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில அளவை மூலம் 1935-ஆம் ஆண்டு நில அளவையில் நிலங்கள் எது எதற்கு சொந்தம் என்று சொல்கிறபொழுது அந்த நிலம் அப்போழுது-எல்லா நிலங்களும் வருவாய்த் துறைக்குத் தான் சொந்தம், வேறு யாருக்கும் சொந்தம் இல்லை. அப்போது காடு மத்திய அரசினுடைய பட்டியலில் இல்லை. மாநில அரசின் பட்டியலில் இருந்தது. ஆனால், 1973-74-ல், இடைக்காலத்தில் ஒரு சட்டத்தைத் திருத்தி காட்டை அவர்கள் எடுத்துக்கொண்டார்கள். ஆகையினால் இன்றைக்கு சங்கடங்கள். அன்றைக்கு, 1935-ல் நில அளவையால் அலசுகிறபொழுது சில நிலங்கள் வருவாய்த் துறைக்கும், சில நிலங்கள் வனத் துறைக்கும் ஒதுக்கப்பட்டன. ஆக, இன்றைக்கு இருக்கிற பிரச்சினை என்னவென்றால், வருவாய்த் துறை நிலத்தை அவர்கள் எடுக்கவில்லை. நாம் கொடுத்துவிட்டு ஆகிவிட்டது 1935-ல். அந்த ஊரைச் சேர்ந்த வரதப்பன் என்பவர் தன்னை மாத்தூர் நிலக் குடியேற்றச் சங்கத்தின் தலைவர் என்றும், தன்னுடன் 200 பேர்கள் சங்க உறுப்பினர்களாக இருக்கிறார்கள் என்றும், அதில் ஆதிதிராவிடர்கள், விதவைகள், முன்னாள் இராணுவத்தினர் எல்லாம் இருக்கிறார்கள் என்றும், அவர்களுடைய பெயர்களை எல்லாம் கொடுத்திருக்கிறார்கள். இந்த அரசு ஆதி திராவிடர்களுக்கு நன்மை செய்து வருகிற அரசு என்று நீங்கள் சொல்கிறபடி, இந்த அரசு செய்ய வேண்டுமென்ற நல்லெண்ணத்தில்

அங்கே வரதப்பன் எழுத்து மூலமாகக் கொடுத்திருக்கிறாரே ஒழிய அவர் சங்கத்தைப் பதிவு செய்யவில்லை. இன்றைக்கு அவர்களுக்குப் பதிவு செய்யத் தெரியாவிட்டாலும், வருவாய்த் துறை அதிகாரிகளை அணுகி, எப்படிப் பதிவு செய்வது என்று தெரிந்து கொண்டு, இதைப் பதிவு செய்ய வேண்டும். இதைப் பதிவு செய்ய வேண்டுமென்றால் கூட்டுறவுச் சங்கத்தினுடைய விதிமுறைப்படி பதிவு செய்ய வேண்டும். கூட்டுறவுச் சங்கத்தினுடைய விதிமுறைப்படி பதிவு செய்து, அதற்குப் பிறகு வருவாய்த் துறையை அணுகினால், அதற்குப் பிறகு வருவாய்த் துறை இந்த மாதிரி கூட்டுறவுச் சங்கம் இருக்கிறது, அதிலே ஆதிதிராவிடர்கள் இருக்கிறார்கள், விதவைகள் இருக்கிறார்கள், முன்னாள் இராணுவத்தினர் இருக்கிறார்கள், ஆகையால் விரைவிலே இதற்கு அனுமதி வேண்டுமென்று மத்திய அரசுக்கு எழுதி, அனுமதி பெற்று, இவர்களுக்கு எல்லாம் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கலாம். அதற்குப் பிறகு நிலம் அதிகமாக இருந்தால், இன்னும் பலருக்கு எல்லாம் கொடுப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பெரியசாமி, துணைக் கேள்வியை ஒரு நிமிடத்தில் கேட்டு, முடிக்க வேண்டும். முதலிலே துணைக் கேள்வி கேட்க 3 நிமிடங்கள் எடுத்திருக்கிறீர்கள்.

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு சிறப்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன சிறப்பு இருந்தாலும், ஒரு நிமிடத்தில் முடிக்க வேண்டும், அதுதான் சிறப்பு. (சிரிப்பு)

திரு. வே. பெரியசாமி: ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட மக்களுடைய ஒரே ரட்சகர், எங்களுடைய கடவுள், இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் தாழ்த்தப்பட்ட மக்கள் தலைநிமிர்ந்து நிற்கக்கூடிய அளவுக்கு தரணியிலே எந்த மாநிலத்திலும் செய்ய முடியாத அளவுக்கு புரட்சித் தலைவி அவர்கள் புதுப்புது திட்டங்களைப் போட்டு, கடந்த ஆண்டு 40,000 வீடுகளா, இந்த ஆண்டு 50,000 தொகுப்பு வீடுகள் என்றெல்லாம் கொடுத்து, வள்ளலுக்கெல்லாம் வள்ளலாக விளங்குகிற பாரி வள்ளல் ஆட்சியிலேதான் நீங்கள் நிறைய நிலப் பட்டாக்களை ஏழை ஆதிதிராவிடர்கள், ஆதிவாசிகள், வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள மக்களுக்கெல்லாம் கொடுத்து வருகிறீர்கள். இந்த நிலமானது. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த நிலத்தைப் பற்றிய விவரங்களை எல்லாம் அவர்கள் சொல்லிவிட்டார்கள். கேள்வியாகக் கேளுங்கள்.

1995 ஏப்ரல் 6]

முதலில் 3 நிமிடம் எடுத்திருக்கிறீர்கள். இன்னும் 3 நிமிடங்கள் எடுத்தால் எப்படி நான் முடிக்க முடியும்? ஒரு உறுப்பினரே 6 நிமிடங்கள் எடுத்துக்கொண்டால் எப்படி முடிக்க முடியும்?

திரு. வே. பெரியசாமி: அந்த நிலமானது முன்னால் வருவாய்த் துறையிடம் இருந்தது. அதை நாங்கள் ஈரோடு டி.ஆர்.ஓ. அவர்களிடம் சென்று கேட்டபோது, பதிவு செய்ய வேண்டுமென்று வரதழுப்பனாரிடம் சொன்னார்கள். வனத் துறையிலிருந்து பூமியை வருவாய்த் துறை எடுத்துக்கொண்டால் நாங்கள் பதிவு செய்யலாம். நீங்கள் எடுக்காமல் எப்படி நாங்கள் பதிவு செய்வது என்று இவர்கள் கேட்கிறார்கள். எனவே தங்களுடைய சிறப்பான அதிகாரத்தைப் பயன்படுத்தி, வருவாய்த் துறைக்கு ஒரு ஆணையைப் போட்டு, அந்த நிலத்தை மைய அரசிலிருந்து வருவாய்த் துறைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். 1934-க்கு முன்பாக அது மத்திய அரசுக்கு இல்லாமல் இருந்தது. 1972-க்குப் பின்னாலே அதைக் கொடுத்துவிட்டோம். மீண்டும் நாம் எழுதினால் நிச்சயமாக அந்த நிலம் மத்திய அரசிடமிருந்து வருவாய்த் துறைக்கு வருமென்று சொல்லுகிறார்கள். ஏராளமான ஆதிதிராவிடர்கள், முன்னாள் இராணுவத்தினர், விதவைகள், பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோர் அத்தனை பேரும் அதிலே பங்குகொள்ள இருக்கிறார்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்... (குறுக்கீடு) இவ்வளவு சொல்லிவிட்டேன். பெரியசாமியைச் சொல்லும்போது, எல்லா உறுப்பினர்களையும் கேட்டுக் கொள்கிறேன். நான் 20 கேள்விகளை ஒரு நாளில் 60 நிமிடங்களில் முடிக்க வேண்டும். ஒரு உறுப்பினர் பெரியசாமி ஒவ்வொரு துணைக் கேள்விக்கும் 3 நிமிடம், 4 நிமிடம் எடுத்து, மொத்தம் 7 நிமிடம் எடுத்துக்கொண்டால் 20 கேள்விகளை நான் எப்படி முடிக்க முடியும்? திரு. பெரியசாமி, கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயுள்ளம் கொண்ட இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில், அந்த நிலத்தை மத்திய அரசிடமிருந்து வருவாய்த் துறை மீண்டும் எடுத்து, எங்களுக்கு வழங்குவார்களா என்று உங்கள் மூலமாக வருவாய்த் துறை அமைச்சரவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி.சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் கொடுக்கவில்லை. அவர்களே எடுத்துக் கொண்டார்கள். வனத் துறையை மத்திய அரசு பட்டியலிலே

93/65-5

TRUTH ALONE TRIUMPHS

சேர்த்துவிட்டார்கள். உங்களுடைய கோரிக்கையை ஏற்று, எவ்வளவு விரைவிலே செய்ய முடியுமோ அவ்வளவு விரைவில் செய்வதற்கு ஆவன செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 243, திரு. ஓ. எஸ். அமர்நாத், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர்.

243—

உணவு விடுதிகளில் குறைந்த விலையில் சாப்பாடு வழங்குதல்.

***20539**—திரு. ஓ. எஸ். அமர்நாத்:

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு முழுவதிலும் உள்ள உணவு விடுதிகளில் குறைந்த விலையில் ஜனதா சாப்பாடு வழங்க ஹோட்டல் உரிமையாளர்களை அரசு வற்புறுத்துமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாடு முழுவதிலும் உள்ள உணவு விடுதிகளில் குறைந்த விலையில் ஜனதா சாப்பாடு வழங்க ஹோட்டல் உரிமையாளர்களை வற்புறுத்தும் செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

முற்பகல் 10.15

திரு. ஓ.எஸ். அமர்நாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசிலே அளித்த இந்த பட்ஜெட்டிலே ஓட்டல்களுக்கு முழுமையாக வரிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இந்தத்தருணத்திலே ஒவ்வொரு உணவு விடுதியிலும் ஒவ்வொரு விலையை, அந்த உரிமையாளர்கள் நிர்ணயித்திருக்கிறார்கள். ஏழை மக்களுக்கு இது மிகவும் பாதிக்கப்படக்கூடிய செயலாக இருக்கிறது. சாதாரணமாக ஒரு உணவுவிடுதியில் சாப்பாடு வேண்டுமானால் 20 ரூபாய் 30 ரூபாய் செலவாகிறது. இதையெல்லாம் கவனத்தில் கொண்டு, இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவர் அவர்களின் ஆட்சிக் காலத்திலே ஜனதா சாப்பாடு ஒரு ரூபாய்க்கு வழங்க வேண்டுமென்று உத்தரவு போட்டு,

சேர்த்துவிட்டார்கள். உங்களுடைய கோரிக்கையை ஏற்று, எவ்வளவு விரைவிலே செய்ய முடியுமோ அவ்வளவு விரைவில் செய்வதற்கு ஆவன செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 243, திரு. ஓ. எஸ். அமர்நாத், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர்.

243—

உணவு விடுதிகளில் குறைந்த விலையில் சாப்பாடு வழங்குதல்.

***20539**—திரு. ஓ. எஸ். அமர்நாத்:

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு முழுவதிலும் உள்ள உணவு விடுதிகளில் குறைந்த விலையில் ஜனதா சாப்பாடு வழங்க ஹோட்டல் உரிமையாளர்களை அரசு வற்புறுத்துமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாடு முழுவதிலும் உள்ள உணவு விடுதிகளில் குறைந்த விலையில் ஜனதா சாப்பாடு வழங்க ஹோட்டல் உரிமையாளர்களை வற்புறுத்தும் செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

முற்பகல் 10.15

திரு. ஓ.எஸ். அமர்நாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசிலே அளித்த இந்த பட்ஜெட்டிலே ஓட்டல்களுக்கு முழுமையாக வரிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இந்தத்தருணத்திலே ஒவ்வொரு உணவு விடுதியிலும் ஒவ்வொரு விலையை, அந்த உரிமையாளர்கள் நிர்ணயித்திருக்கிறார்கள். ஏழை மக்களுக்கு இது மிகவும் பாதிக்கப்படக்கூடிய செயலாக இருக்கிறது. சாதாரணமாக ஒரு உணவுவிடுதியில் சாப்பாடு வேண்டுமானால் 20 ரூபாய் 30 ரூபாய் செலவாகிறது. இதையெல்லாம் கவனத்தில் கொண்டு, இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவர் அவர்களின் ஆட்சிக் காலத்திலே ஜனதா சாப்பாடு ஒரு ரூபாய்க்கு வழங்க வேண்டுமென்று உத்தரவு போட்டு,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1995 ஏப்ரல் 6]

எல்லா ஓட்டல்களிலும் 1 ரூபாய்க்கு அப்போது சாப்பாடு வழங்கப்பட்டது. அதேபோல, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சியிலும் குறைந்தபட்சம் இந்த ஜனதா சாப்பாடு ஒரு ரூபாய்க்கு வழங்கமுடியவில்லை என்றாலும், 5 அல்லது 6 ரூபாய்க்குத்தான் அவர்கள் வழங்க வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனதா சாப்பாடு ஒரு ரூபாய்க்குப் போடப்பட்டதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். எப்போது போடப்பட்டது என்ற விபரம் தெரியவில்லை. மத்தியிலே, மாண்புமிகு மொரார்ஜி தேசாய் அவர்கள் தலைமையிலே ஆட்சி அமைந்தபொழுது, இந்திய நாடு முழுவதும் அப்படி சாதாரண மக்களுக்காக ஜனதா சாப்பாடு என்கிற பெயரில், ஒரு குறைந்த விலை உணவு வழங்குகிற..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கு முன்னர் எமர்ஜென்சியில் 1976-ல் போடப்பட்டது.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: எமர்ஜென்சியில் அறிவித்திருந்திருக்கலாமே தவிர போடப்பட்டதா என்பது தெரியவில்லை. அதை நடைமுறைப்படுத்த முடியாமல்தான் பின்னாலே அது கைவிடப்பட்டிருக்கிறது. நாடு முழுவதும் அல்லது மாநிலம் முழுவதும் உணவு விடுதிகளிலே, இந்த விலைக்குத்தான் நீங்கள் உணவைப் போடவேண்டுமென்று சொல்கிறபோது, அவர்களுக்குக் குறைந்த விலையிலே அதற்கான மூலப் பொருள்கள் அனைத்தையும் நாம் வழங்கவேண்டும். அப்படி வழங்கியதற்குப் பிறகும், அவர்கள் தரமாக, சுவையாகப் போடுகிறார்களா என்பதிலேயும் பிரச்சினைகள் இருக்கின்றன. ஆகவேதான், இதை நடைமுறைப்படுத்த முடியாமல் இருக்கிறது. ஒருவேளை இங்கே அவர்கள் தெரிவித்ததைப் போன்று அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்ட காலத்தில் வேண்டுமானால் அன்றைக்கு அதிகாரிகளுக்குப் பயந்து கொண்டு அந்த உணர்விலே சிலர் நடந்திருக்கக்கூடும். ஆனால் நடைமுறையில் அது சாத்தியம் அல்ல என்றுதான் அது கைவிடப்பட்டிருக்கிறது. இன்றைக்கு, உணவு என்பதே, அவரவர்களுடைய ருசிக்கேற்றவாறு பல்வேறு தரங்களில் வெவ்வேறு விலைகளிலே வழங்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த உணவு விடுதிகளுக்கு விற்பனை வரியை நீக்கியிருக்கிறார்கள். ஆகவே விலை குறைக்கப்படுமா என்று கேட்டால், அதற்கு நம்முடைய மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களே தெரிவித்திருக்கிறார்கள். உணவு விடுதிகள் எல்லாம்

எவ்வளவுக்கு முடியுமோ, அந்த அளவுக்குக் குறைத்துக் கொள்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆகவே, குறைந்த விலையில் உணவு கிடைப்பதற்கு அரசு முயற்சிகள் எடுக்க முடியுமே தவிர, ஒரே விலையில் அதுவும் மலிவு விலையில் கொடுப்பது என்பது, இந்தக் காலத்திலே நடைபெற முடியாத ஒன்று.

திரு. ஓ. எஸ். அமர்நாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்த விலையில் சாப்பாடு வழங்க முடியவில்லை என்றாலும், தினமும் அத்தியாவசியமாகச் சாப்பிடுகிற இட்லி, தோசை, காப்பி, டீ போன்ற பொருள்களையாவது நிரந்தரமாகக் குறைந்த விலையில் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இட்லி, தோசை, போன்ற அப்படிப்பட்ட உணவுப் பொருட்கள், ஒவ்வொரு உணவு விடுதிக்கும், அதனுடைய தரத்திற்கும் தகுதிக்கும் ஏற்றவாறு விலைகள் நிர்ணயிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன. அதிலே, இட்லிக்கு என்ன விலை என்பதை விட, அது வழங்கப்படுகின்ற சூழ்நிலையில், அமைக்கப்பட்டிருக்கிற அந்த உணவு விடுதியைப் பொறுத்தவரை, அதற்கு மேலே ஏற்படுகிற செலவுகளை எல்லாம் சேர்த்து, அதன் மீது சுமத்தப்படுகிறது. ஆகவே, 10 ரூபாய், 15 ரூபாய் கொடுத்து ஒரு பெரிய ஓட்டலில் இட்லி சாப்பிடுகிறவர்களும் இருக்கிறார்கள், அதே இட்லியை இரண்டரை ரூபாய், மூன்று ரூபாய் கொடுத்து சாப்பிடுகிறவர்களும் இருக்கிறார்கள். ஆகவே கிடைப்பது ஒரே இட்லிதான். அது வழங்கப்படுகின்ற சூழ்நிலை, வழங்குகிற ஆள், அதைப் பரிமாறுகிறவர்கள் போன்ற அந்தச் சூழ்நிலைகளுக்கு எல்லாம் சேர்த்து, கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஆகவே, குறைந்த விலையிலே ஒரு தரமான இட்லியைச் சாப்பிடுவதற்குக்கூட பல இடங்கள் இருக்கின்றன. தெருக்களில் வைத்துக் கொண்டு மிகப் புகழ் பெற்ற, விளம்பரப்படுத்தப்பட்ட கடைகளில் எல்லாம் கூட விற்கப்படுகிறது. அங்கே பலபேர் போய்ச் சாப்பிடுகிறார்கள். ஆனால் அங்கே போய் இட்லி சாப்பிடுவதே சரியில்லை என்று, கேவலம் என்று எண்ணுகிறவர்கள் மிக உயர்ந்த கட்டிடத்திலே இருக்கிற அந்த விடுதிகளுக்குச் செல்கிறபோது, அதற்கும் சேர்த்துக் கட்டணம் போடுகிறார்கள். ஆகவே, அரசு மிகுந்த கவனத்தோடு, இந்த விலையேற்றம் நியாயமாக உயருகின்றதா; இல்லை, அவர்கள் அநியாயமாக, முறையற்ற முறையில் விலையை உயர்த்துகிறார்களா என்பதைக் கண்காணித்துக் கொண்டிருக்கிறது. உணவு விடுதிகளுடைய சொந்தக்காரர்களை எல்லாம் அவ்வப்போது அழைத்துப் பேசுகிறோம். அதிகமாக, தேவையற்ற சூழ்நிலையில் விலை ஏற்றினால் அதைக் கட்டுப்படுத்துவதற்கும் நடவடிக்கையை எடுத்து வருகிறோம்.

1995 ஏப்ரல் 6]

முற்பகல் 10.20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. பி. ராஜு.

திரு. கே.பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு ரூபாய் அரிசி விலையைக் குறைத்து இருக்கிறார்கள். அதைப்போல உணவுப் பண்டங்களின் விலையில் விற்பனை வரியைக் குறைத்து இருக்கிறார்கள். இதன்காரணமாக ஓட்டல்களில் உணவுப் பண்டங்களின் விலை எவ்வளவு குறைந்திருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா? அதேசமயத்தில், நமது பேரவைத் தலைவர் அவர்களுடைய நிர்வாகத்தில் இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் உள்ள உணவு விடுதிகளில் உணவினுடைய விலையைக் குறைத்து வழங்குவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை நீங்களே அங்கே பார்த்துக் கொள்ளலாம். எல்லாம் உங்கள் கன்ட்ரோலில் விட்டாகிவிட்டது.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பழமொழி உண்டு. அரச மரத்தைச் சுற்றி வந்துவிட்டு அடிவயிற்றைத் தடவிப் பார்த்தார்கள் என்ற பழமொழி உண்டு நாட்டிலே. அதைப்போல ஏப்ரல் 1-ஆம் தேதி முதல் இந்த உணவு விடுதிகளுக்கு எல்லாம் விற்பனை வரியை நீக்கி இருக்கிறார்கள். அதைப்போல ஒரு ரூபாய் நாம் குறைத்து அரசியை வழங்குகிறோம். இந்த ஒரு ரூபாய் குறைத்து அரிசி வழங்குவது உணவு விடுதிகளுக்கு அல்ல. அது குடும்ப அட்டைகளை வைத்துக் கொண்டிருக்கிற குடும்பங்களைச் சார்ந்தவர்களுக்குத்தான் வழங்குகிறோம். ஆகவே உணவு விடுதிகளுக்கு நாம் குறைந்த விலையில் அரிசி கொடுப்பதே இல்லை. அதைத்தான் நான் முன்னாலே சொன்னேன். விலையைக் குறைக்க வேண்டுமென்று அவர்களிடம் சொன்னவுடனேயே எங்களுக்குக் குறைந்த விலையில் அரிசி தாருங்கள், எண்ணெய் தாருங்கள், பருப்பு தாருங்கள் என்று கேட்பார்கள். அது முடியாது. ஆகவே தான் குறைந்த விலை அரிசிக்கும் உணவுப்பண்டங்கள் விலை குறைப்பதற்கும் தொடர்பு இல்லை. நான் முன்னாலே சொன்னதைப் போல மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லி இருக்கிறார்கள். அந்த உணவு விடுதிகளில் கூட பல விடுதிகளில், உயர்ந்த விடுதிகளில் 'பி' அல்லது 'ஏ' கேட்டகிரியில் இருக்கிற விடுதிகள் எல்லாம் உங்களிடத்தில், நம்மிடத்தில், நுகர்வோரிடத்தில் தான் விற்பனை வரியை வாங்கிக் கொண்டிருந்தார்கள். இப்போது அந்த விற்பனை வரி போடமாட்டார்கள். அதிலேயிருந்தே

விலைகுறையும். இந்த விற்பனை வரி தனியாகப் போடாத சில விடுதிகள் இருக்கின்றன. மொத்தமாக வரி கட்டுகிறவர்கள். அவர்கள் தான் இதிலே குறைப்பார்களா என்பதை அவர்களிடத்தில் பேசி மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்துக்கொண்டதையொட்டி உணவுத்துறையும் அவர்களிடத்தில் பேச இருக்கிறது. அவர்கள் 10,15 நாட்களுக்கு பிறகு, ஒரு மாதம் ஆனதற்கு பிறகு அதிலே என்ன நடவடிக்கை எடுக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொண்டதற்குப் பிறகு தான், நாம் அதிலே ஈடுபட்டு எந்த விலைக்கு அவர்கள் விற்க முடியும், விற்றால் அவர்களுக்குச் சரியாக இருக்கும் என்பதை நிர்ணயிக்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 244, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

244—

கிராமப்புற மருத்துவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளித்தல்

***26162**—டாக்டர் வெ. சரோஜா:*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புறங்களில் ``Heart Attack'' கண்ட நோயாளிகளுக்கு அந்த இடத்திலேயே முதலுதவி செய்ய கிராமப்புற மருத்துவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கிராமப்புறங்களில் `Heart Attack'' கண்ட நோயாளிகளுக்கு, அந்தந்த பகுதிகளில் இருக்கும் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள் தக்க சிகிச்சை அளிப்பார்கள். ஆகவே, இதற்காக சிறப்புப் பயிற்சி ஏதும் தேவையில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஹெல்த் பார் ஆல் பை 2000 ஏ.டி.' என்ற உயரிய நோக்கோடு செயல்பட்டு வரும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி

விலைகுறையும். இந்த விற்பனை வரி தனியாகப் போடாத சில விடுதிகள் இருக்கின்றன. மொத்தமாக வரி கட்டுகிறவர்கள். அவர்கள் தான் இதிலே குறைப்பார்களா என்பதை அவர்களிடத்தில் பேசி மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்துக்கொண்டதையொட்டி உணவுத்துறையும் அவர்களிடத்தில் பேச இருக்கிறது. அவர்கள் 10,15 நாட்களுக்கு பிறகு, ஒரு மாதம் ஆனதற்கு பிறகு அதிலே என்ன நடவடிக்கை எடுக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொண்டதற்குப் பிறகு தான், நாம் அதிலே ஈடுபட்டு எந்த விலைக்கு அவர்கள் விற்க முடியும், விற்றால் அவர்களுக்குச் சரியாக இருக்கும் என்பதை நிர்ணயிக்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 244, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

244—

கிராமப்புற மருத்துவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளித்தல்

***26162—டாக்டர் வெ. சரோஜா:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புறங்களில் "Heart Attack" கண்ட நோயாளிகளுக்கு அந்த இடத்திலேயே முதலுதவி செய்ய கிராமப்புற மருத்துவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கிராமப்புறங்களில் "Heart Attack" கண்ட நோயாளிகளுக்கு, அந்தந்த பகுதிகளில் இருக்கும் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள் தக்க சிகிச்சை அளிப்பார்கள். ஆகவே, இதற்காக சிறப்புப் பயிற்சி ஏதும் தேவையில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஹெல்த் பார் ஆல் பை 2000 ஏ.டி.' என்ற உயரிய நோக்கோடு செயல்பட்டு வரும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி

அவர்களின் பொற்கால ஆட்சியில் 80,000 முதல் 1.20 இலட்சம் ஜனத்தொகை கொண்ட ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு சமுதாய சுகாதார நிலையம் அமைத்துள்ள இதயதெய்வம் புரட்சித்தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில், ஒரு சிவில் சர்ஜன், சிவில் அசிஸ்டெண்ட் சர்ஜன், ஒரு கைனகாலஜிஸ்ட், ஒரு பீடியாட்ரிஸ்ட் ஆகியவர்களை அமைத்து சிறப்பாக மருத்துவ உதவியும், பல்நோக்கு மருத்துவ சிகிச்சையும் அளித்து வருகிறது. அந்த மருத்துவர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிப்பதன் மூலம் கிராமப்புற மக்களுக்கு 'ஹார்ட் அட்டாக்' பற்றிய விழிப்புணர்வும், அரசுக்கு அதிகமான நிதியொதுக்கீடு செலவு இல்லாமல் கிராமப்புற மக்கள் அனைத்து சிகிச்சையும் பெறுவதோடு, ஹார்ட் அட்டாக் நோயிலிருந்து இறப்பு விகிதத்தைக் குறைப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதால் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சியில் இந்த சிறப்புப் பயிற்சியை இந்த மருத்துவர்களுக்குக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஹார்ட் அட்டாக் நோயாளிகள் வந்தவுடன் அவர்களுக்கு என்ன முதலுதவி அளிக்க வேண்டும் என்பதைப்பற்றி ஏற்கனவே இருக்கிற அந்த மருத்துவர்களுக்கு அடிப்படையாகத் தெரிந்திருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். ஒரு வேளை அதற்காக சிறப்புப் பயிற்சி தேவையென்று சொன்னால் படிப்படியாக அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.

பிற்பகல் 10.25

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலையங்களில் சிறப்புப் பயிற்சி அளிக்கும் போது Cardio-pulmonary resuscitation செய்யும் வண்ணம், அந்த நிலையங்களில் E.C.G. Monitor மற்றும் Defibrillator போன்ற சிறப்பு மருத்துவக் கருவிகளை அங்கே அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இ.சி.ஜி. மெஷின்னை அந்த இடத்திலே கொண்டு போய் வைப்பதன் மூலமாக, அவர்கள் நோயாளிகளைக் கண்டுபிடித்தாலும் கூட அதற்குப் பின்னாலே தொடர்ந்து அங்கே சிகிச்சை கொடுப்பதற்கான முழு வசதிகளையும் ஏற்படுத்துவது என்பது சாத்தியமாக இருக்காது. எனவே, அவர்கள் உடனடியாக அங்கே இருக்கிற ஹெட்குவார்ட்டர்ஸ் ஹாஸ்பிட்டலுக்கோ அல்லது எங்கே அந்த வசதி இருக்கிறதோ, அந்த மருத்துவமனைக்கு உடனே அனுப்புவதுதான் பொருத்தமாக இருக்கும்

என்று நாங்கள் கருதுகிறோம். எனவே, இ.சி.ஜி. மெஷின் இல்லாமலே நோயாளிகள் சொல்கிற ஹிஸ்டிரியை வைத்துக் கொண்டு, அங்கே அந்த மருத்துவர்கள் அவர்களுக்கு முதல் உதவி வழங்க முடியும் என்று நான் கருதுகிறேன். எனவே, முதல் உதவியை வழங்கிவிட்டு, சந்தேகம் இருந்தால், உடனடியாக அவர்களை ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிடலாம். ஒருவேளை இ.சி.ஜி. மெஷின் இருப்பதன் மூலமாக பயன் இருக்கும் என்று எக்ஸ்பர்ட்ஸ் கருதினால், அதற்கான நடவடிக்கையை ஆலோசித்து—நிதிநிலைமை போன்ற பிரச்சினைகள் எல்லாம் இருக்கின்றன—அதற்கு ஏற்ப நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்றுதான் இதற்கு நிறைய விளக்கம் எல்லாம் சொல்லியிருக்கிறார்கள்.

வினா எண்.245, டாக்டர் மு. காளிராஜன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

245—

அறுவை சிகிச்சை நோயாளிகளுக்கு எய்ட்ஸ் நோய் பரிசோதனை

***36521**—டாக்டர் மு. காளிராஜன்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறுவை சிகிச்சை செய்து கொள்கின்ற எல்லா நோயாளிகளுக்கும் கண்டிப்பாக எய்ட்ஸ் நோய் பரிசோதனை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்பொழுது நிலவிவரும் மத்திய அரசாங்கத்தின் தேசிய எய்ட்ஸ் நோய் கட்டுப்பாட்டு மையத்தின் கொள்கை வகைப்படி அறுவை சிகிச்சை செய்துகொள்ளும் எல்லா நோயாளிகளுக்கும் எய்ட்ஸ் நோய் பரிசோதனை செய்வதற்கான கொள்கை இல்லை.

டாக்டர் மு. காளிராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டு அறுவைச் சிகிச்சை செய்து

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

என்று நாங்கள் கருதுகிறோம். எனவே, இ.சி.ஜி. மெஷின் இல்லாமலே நோயாளிகள் சொல்கிற ஹிஸ்டிரியை வைத்துக் கொண்டு, அங்கே அந்த மருத்துவர்கள் அவர்களுக்கு முதல் உதவி வழங்க முடியும் என்று நான் கருதுகிறேன். எனவே, முதல் உதவியை வழங்கிவிட்டு, சந்தேகம் இருந்தால், உடனடியாக அவர்களை ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிடலாம். ஒருவேளை இ.சி.ஜி. மெஷின் இருப்பதன் மூலமாக பயன் இருக்கும் என்று எக்ஸ்பர்ட்ஸ் கருதினால், அதற்கான நடவடிக்கையை ஆலோசித்து—நிதிநிலைமை போன்ற பிரச்சினைகள் எல்லாம் இருக்கின்றன—அதற்கு ஏற்ப நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்றுதான் இதற்கு நிறைய விளக்கம் எல்லாம் சொல்லியிருக்கிறார்கள்.

வினா எண்.245, டாக்டர் மு. காளிராஜன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

245—

அறுவை சிகிச்சை நோயாளிகளுக்கு எய்ட்ஸ் நோய் பரிசோதனை

***36521**—டாக்டர் மு. காளிராஜன்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறுவை சிகிச்சை செய்து கொள்கின்ற எல்லா நோயாளிகளுக்கும் கண்டிப்பாக எய்ட்ஸ் நோய் பரிசோதனை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்பொழுது நிலவிவரும் மத்திய அரசாங்கத்தின் தேசிய எய்ட்ஸ் நோய் கட்டுப்பாட்டு மையத்தின் கொள்கை வகைப்படி அறுவை சிகிச்சை செய்துகொள்ளும் எல்லா நோயாளிகளுக்கும் எய்ட்ஸ் நோய் பரிசோதனை செய்வதற்கான கொள்கை இல்லை.

டாக்டர் மு. காளிராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டு அறுவைச் சிகிச்சை செய்து

1995 ஏப்ரல் 6]

கொள்ளக்கூடிய நோயாளிகளினால், அறுவைச் சிகிச்சை செய்கின்ற நிபுணர்களுக்கும் எய்ட்ஸ் நோய் வரக்கூடிய நிலை இருப்பதால், அறுவைச் சிகிச்சை செய்து கொள்கின்ற அனைத்து நோயாளிகளுக்கும் எய்ட்ஸ் நோய் பரிசோதனை செய்வதால் முன்கூட்டியே தற்காப்பு நடவடிக்கைகளை மருத்துவர்கள் எடுத்துக் கொள்வார்கள். ஆகவே, பரிசோதனை செய்ய நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறுவைச் சிகிச்சை செய்துகொள்கிற நோயாளிகளுக்கு எந்தவிதமான எய்ட்ஸ்சோ, மற்ற எந்தவிதமான பாதிப்பும் இருந்தாலும், அந்தப் பாதிப்பு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கின்ற மருத்துவர்களுக்கு நிச்சயமாக வரக்கூடாது. காரணம் அந்த அளவிற்கு எல்லா நோயாளிகளையும் கவனிக்கிறபோதும், அல்லது அறுவை சிகிச்சை செய்கிறபோதும், அந்த மருத்துவர்கள் பாதுகாப்பாக இருக்கவேண்டுமே ஒழிய, அவர்களுக்கு எய்ட்ஸ் இருக்கிறது என்று கண்டுபிடித்த பின்னாலே அந்தப் பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதல்ல. எனவே, அவர்கள் ஆபரேஷனுக்குப் போகிறபோது, கையுறை அணிந்து, என்னென்ன தேவையான பிரிகாஷனரி ஸ்டெப்ஸ் எடுக்கவேண்டுமோ, அந்த நடவடிக்கைகளை அவர்கள் எடுத்துக் கொள்ளவேண்டும். எனவே, எய்ட்ஸ் நோய் இருக்கிறது என்று கண்டுபிடித்த பின்னாலே, அந்த நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டிய அவசியம் இல்லை. எந்த நோயாளிக்கு அவர்கள் அறுவைச் சிகிச்சை செய்வதாக இருந்தாலும், முன்கூட்டியே அந்த நடவடிக்கையை அவர்கள் எடுத்தாக வேண்டும். இதுதான் இப்போது இருக்கின்ற நடைமுறை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி.பி. சந்திரசேகர்.

திரு. வி.பி. சந்திரசேகர்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த எய்ட்ஸ் நோயானது, கெட்ட நடவடிக்கைகள் மட்டுமல்லாமல், ஊசிபோடுதல், அறுவைச் சிகிச்சை செய்தல், ரத்தம் செலுத்துதல், குளுகோஸ் போன்றவற்றை செலுத்துகின்றபோது, ரத்தத்திலே அந்தக் கிருமிகள் சென்று, இந்த நோய் ஏற்படுவதாக, நான் ஒரு கருத்தரங்கிற்குச் சென்றபோது அங்கே சொன்னார்கள். ஆகவே, ஒரு நோயாளி மருத்துவ சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியிலே அனுமதிக்கப்பட்டவுடன், இப்படிப்பட்ட செயல்பாடுகளை எல்லாம் செய்து பின் அவர்கள் வீடு திரும்புகின்றபோது, அவர்களுக்கு எய்ட்ஸ் நோய் பற்றிய பரிசோதனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1995 ஏப்ரல் 6

முற்பகல் 10.30

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எய்ட்ஸ் நோய் பற்றி நேற்றையதினம் விளக்கமாக நான் இங்கே சொன்னேன். நோயாளிகள் வருகிறபோது, அந்த டெஸ்டை செய்தாலும் கூட, அவர்களுக்கு அதைப்பற்றி அறிவிக்கக்கூடாது என்று கொள்கை ரீதியான முடிவை மத்திய அரசு எடுத்து இருக்கிறது. சமுதாயத்திலே அவர்கள் ஒதுக்கப்பட்டுவிடுவார்கள், அல்லது அவர்களுக்கு தாழ்வு மனப்பான்மை வந்துவிடும் என்ற காரணத்தாலே அதை அறிவிக்கக்கூடாது என்று தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. எனவே, அவர்களுக்குத் தனியாக அந்த எய்ட்ஸ் நோய் பரிசோதனையைச் செய்ய வேண்டிய முயற்சியை நாம் எடுப்பது சரியாக இருக்காது. இருந்தாலும் ரத்தம் செலுத்துகின்றபோது, அவர்களுக்குச் செலுத்தப்படுகிற ரத்தத்தை முழுமையாகப் பரிசோதித்த பின்பே அது அவர்களுக்குச் செலுத்தப் படுகின்றது. எனவே, அவர்களுக்கு அந்த நோய் வருவதற்கான அல்லது மற்ற எந்த நோயும் வருவதற்கான வாய்ப்பும் இருக்காது. எனவே, அப்படிப்பட்ட நிலைகளை எல்லாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதோடு இன்ஜக்ஷன் போடுகிறபோது, ஊசிகள் மூலமாக நோய் பரவிவிடும் என்ற சூழ்நிலை இருந்தது. அந்தச் சூழ்நிலையைத் தடுப்பதற்காக அரசாங்கம் இப்போது 'எய்ட்ஸ் செல்' மூலமாக மருத்துவமனைகளுக்கு தேவைக்கு அதிகமாக உதாரணமாக, ஒரு நாளைக்கு 100 இன்ஜக்ஷன் போடுகிறார்கள் என்று சொன்னால், குறைந்தபட்சம் 250 சிரிஞ்சும் 300 இன்ஜக்ஷன் நீடிலும் கொடுக்கவேண்டும் என்று முடிவு எடுத்து இருக்கிறோம். அதோடு ' ஆட்டோக்ளேவ் ' அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும். இதற்கு முன்னாலே, தண்ணீரிலே கொதிக்கவைத்துக் கொண்டு இருப்பார்கள். இப்போது 'ஆட்டோக்ளேவ்' கொடுக்கப்படுகிறது. எனவே, இவைகளை எல்லாம் செய்கிறபோது, முழுமையாக கட்டுப்படுத்திவிட முடியும். இதைப்பற்றி நேற்றைக்குக் கூடச் சொன்னார்கள். டிஸ்போசபிள் சிரிஞ்ஜ் கொடுக்கலாமே என்று சொன்னார்கள். பெரும்பகுதியான மருத்துவர்கள், எக்ஸ்பர்ட்ஸ் தெரிவித்தது, டிஸ்போசபிள் சிரிஞ்ஜ் கொடுத்தால், அது ஒருவேளை டிஸ்போஸ் ஆகாமல் போய்விடும். காரணம், அது மிகப் பயனுடையது. விலை அதிகமானது. ஒரு இன்ஜெக்ஷன் போட்டு, இன்னொரு இன்ஜெக்ஷனைப் போட்டால், அதிலே 2 ரூபாய் மிச்சமாகும் என்று கருதி யாராவது தவறாகக் கீழ் மட்டத்திலே பயன்படுத்தி விட்டால், அதிலே தான் மிகுந்த ஆபத்து வரும். எனவே அதற்குப் பதிலாக கிளாஸ் சிரிஞ்சஸ் தேவைக்கு அதிகமாக வாங்கி வைத்து, இன்றைக்கு 100 போடுகிறோம் என்று சொன்னால், அந்த இன்ஜெக்ஷன் சிரிஞ் அடுத்த நாள் பயன்படுத்தப்பட

மாட்டாது. அதற்கு அடுத்த நாள் ஆட்டோகிளேவிலே போட்டு எடுத்து வைக்கவேண்டுமென்ற ஒரு முறையை வகுத்து நாங்கள் கொடுத்திருக்கிறோம். இது மிகச் சிறப்பாக இருக்குமென்று எக்ஸ்பர்ட்ஸ் சொல்லியிருக்கிறார்கள். எனவே அதுபற்றி நாம் பயப்படுகிற அளவிற்கு ஒன்றும் நிலைமை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 246, திரு. த. ரத்தினவேல், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்.

246—

திருச்சிராப்பள்ளி பாய்லர் தொழிற்சாலை—கன்னியாகுமரிக்குப் பேருந்துகள் இயக்குதல்

***36003**—திரு. த. ரத்தினவேல்:

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி பாய்லர் தொழிற்சாலையிலிருந்து நாகர்கோவில், கன்னியாகுமரிக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. த. ரத்தினவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வென்றாரும், வெல்லாரும் இல்லாத வகையில் ஆட்சிபுரியும் தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் ஏற்கெனவே பி.எச்.இ.எல் பகுதியிலிருந்து சென்னைக்கு பேருந்து விடப்பட்டு, லாபகரமான முறையில் ஓடிக்கொண்டிருக்கிறது. அந்தப் பகுதியிலே பணிபுரிகிற தொழிலாளர்கள் பயன்பெறுகின்ற வகையில் இந்த ஆண்டு இல்லையென்றாலும் அடுத்த ஆண்டாவது பேருந்து விடப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாட்டாது. அதற்கு அடுத்த நாள் ஆட்டோகிளேவிலே போட்டு எடுத்து வைக்கவேண்டுமென்ற ஒரு முறையை வகுத்து நாங்கள் கொடுத்திருக்கிறோம். இது மிகச் சிறப்பாக இருக்குமென்று எக்ஸ்பர்ட்ஸ் சொல்லியிருக்கிறார்கள். எனவே அதுபற்றி நாம் பயப்படுகிற அளவிற்கு ஒன்றும் நிலைமை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 246, திரு. த. ரத்தினவேல், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்.

246—

திருச்சிராப்பள்ளி பாய்லர் தொழிற்சாலை— கன்னியாகுமரிக்குப் பேருந்துகள் இயக்குதல்

***36003**—திரு. த. ரத்தினவேல்:

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி பாய்லர் தொழிற்சாலையிலிருந்து நாகர்கோவில், கன்னியாகுமரிக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. த. ரத்தினவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வென்றாரும், வெல்லாரும் இல்லாத வகையில் ஆட்சிபுரியும் தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் ஏற்கெனவே பி.எச்.இ.எல் பகுதியிலிருந்து சென்னைக்கு பேருந்து விடப்பட்டு, லாபகரமான முறையில் ஓடிக்கொண்டிருக்கிறது. அந்தப் பகுதியிலே பணிபுரிகிற தொழிலாளர்கள் பயன்பெறுகின்ற வகையில் இந்த ஆண்டு இல்லையென்றாலும் அடுத்த ஆண்டாவது பேருந்து விடப்படுமா என அறிய விரும்புகிறேன்.

[1995 ஏப்ரல் 6

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து திருச்சி வழியாக கன்னியாகுமரிக்கு இயக்கப்படுகின்ற பேருந்துகளில், அந்த பாய்லர் தொழிற்சாலையின் வழியாக இயக்கப்படுமா என்ற கேள்விதான் இங்கே கேட்கப்பட்டிருக்கிறது. அதற்காகத்தான் நான் இல்லையென்று சொன்னேன். காரணம் இதற்கு முன்னாலே இயக்கப்படுகிறபோது திருச்சியிலிருந்து பாய்லர் தொழிற்சாலை வரையிலும், இயக்குவதற்கு 14 கிலோமீட்டர் சென்று திரும்பி வரவேண்டியிருக்கிறது. ஏறத்தாழ 28 கிலோமீட்டர் திருச்சியிலிருந்து மறுபடியும் அந்த பாய்லர் தொழிற்சாலைக்கு சென்று திரும்ப வேண்டியிருக்கிற காரணத்தினால் பயணிகள் அதிலே பயணம் செய்வதற்கு சாத்தியக்கூறுகள் இல்லாத காரணத்தினால்தான் அது நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே அதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

திரு. த. ரத்தினவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாய்லர் தொழிற்சாலைப் பகுதியில் தனியாக தொழிற்கூடங்கள், சுமார் 300-க்கும் மேற்பட்ட தொழிற்கூடங்கள் இருக்கின்றன. 20,000 தொழிலாளர்கள் அங்கே பணியாற்றுகிறார்கள். நாகர்கோவில், கன்னியாகுமரி, கேரள மாநிலப் பகுதியினைச் சார்ந்த தொழிலாளர்கள் அதிகமாக பணிபுரிகின்ற காரணத்தினால் தனியாக ஒரு பேருந்து பாயிலர் தொழிற்சாலையிலிருந்து நேரடியாக நாகர்கோவிலுக்கு விடப்பட்டால் நிச்சயமாக அந்தப் பகுதியிலே போக்குவரத்திற்கு உதவிகரமாக இருக்குமென்பதை தொழிலாளருடைய வாழ்விலே இன்றைக்கு ஒளிவிளக்கு ஏற்றி வைத்துக் கொண்டிருக்கிற புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் அந்தத் திட்டத்தை மறு பரிசீலனை செய்து நிறைவேற்றித் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி பேருந்து நிலையத்திலிருந்து தினந்தோறும் தீரன் சின்னமலைப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக புறநகர் பேருந்துகள், நகரப் பேருந்துகள் - -134 பேருந்துகளை இயக்குகிறோம். அதிலே ஏறத்தாழ 572 நடைகள் அங்கே இயக்கப்படுகின்றது. ஆகவேதான் அங்கே திருச்சியிலிருந்து பாய்லர் தொழிற்சாலைக்குச் சென்று கன்னியாகுமரிக்குச் செல்வது சாத்தியக்கூறு இல்லை என்று சொன்னேன். மீண்டும் அந்தக் கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 247, திரு. தா. வேடியப்பன், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்.

1995 ஏப்ரல் 6]

247—

திருவண்ணாமலையிலிருந்து புதிய பேருந்துகள் இயக்குதல்

***36594**—திரு. தா. வேடியப்பன்:

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலையிலிருந்து வளையல் காரகுளத்திற்கு காப்பலூர், சோழங்குப்பம், காங்கேய்னூர், நம்மியத்தூர், பியம்பட்டு வழியாக புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் இயக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : கோரிக்கை தடத்தின் சாலை கனரகப் பேருந்துகள் இயக்க முடியாத நிலையில் உள்ளதால் பேருந்து இயக்க சாத்தியமில்லை.

திரு.தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகுதான் இப்படிப்பட்ட ஏழை எளிய மக்கள் வாழக்கூடிய கிராமப்பகுதிகளில் எல்லாம் சாலைவசதிகள் தேவை என்று கேட்டவுடனே பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் சிறப்பான முறையில் இந்தச் சாலையை மேம்பாடு செய்வதற்காக, 3 கிலோமீட்டர் தார்ச் சாலை அமைப்பதற்காக கிராமச் சாலைகள் திட்டத்திலே எடுத்து, சிறப்பான முறையில் சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நல்ல சாலை, தார்ச் சாலையாக மேம்படுத்துவதற்கு எல்லாப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வருங்காலத்திலாவது இந்தச் சாலை அமைத்தவுடனே அந்தப் பஸ்ஸை விடுவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசீலனை செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலை அமைக்கின்ற பணிகள் இப்போது நடைப்பெற்றுக்கொண்டிருக்கிறது. முள் வேலிகள், புதர்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால்தான் நாங்கள் இயக்கமுடியவில்லை என்று சொன்னேன். சாலை அமைத்தவுடனே நீங்கள் சொன்ன ஒரே வார காலத்தில் பேருந்து இயக்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய போளூர் தொகுதிவாழ் மக்கள் சார்பாகவும், அப்பகுதியில் இருக்கக்கூடிய வலையவார்குளம், காங்கேயனூர், நம்மேந்தல் கிராமப் பகுதி மக்கள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்து, வருங்காலத்தில் இந்தச் சாலையை சரி செய்தவுடனே பேருந்துகளை விடுவதற்கு அமைச்சரவர்கள் ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு வாரத்தில் விடுகிறேன் என்று சொல்லிவிட்டாரே.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: சாலை அமைத்த ஒரே வார காலத்தில் பேருந்து இயக்குவதற்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 248, திரு.எஸ். ஆசைமணி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

248—

புளியஞ்சேரியில் கால்நடை மருந்தகம் கட்டுதல்

***22285**—*திரு. எஸ். ஆசைமணி:*

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா-

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, கொடவாசல் ஒன்றியம், புளியஞ்சேரி, விக்ரபாண்டியம், வல்லம் ஆகிய கிராமங்கள் பயனடைய புளியஞ்சேரி கிராமத்தில் கால்நடை மருந்தகம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, கொடவாசல் ஒன்றியத்தில் புளியஞ்சேரி கிராமத்தில் கால்நடை மருந்தகம் கட்டித்தர தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய போளூர் தொகுதிவாழ் மக்கள் சார்பாகவும், அப்பகுதியில் இருக்கக்கூடிய வலையவார்குளம், காங்கேயனூர், நம்மேந்தல் கிராமப் பகுதி மக்கள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்து, வருங்காலத்தில் இந்தச் சாலையை சரி செய்தவுடனே பேருந்துகளை விடுவதற்கு அமைச்சரவர்கள் ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு வாரத்தில் விடுகிறேன் என்று சொல்லிவிட்டாரே.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: சாலை அமைத்த ஒரே வார காலத்தில் பேருந்து இயக்குவதற்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 248, திரு.எஸ். ஆசைமணி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

248—

புளியஞ்சேரியில் கால்நடை மருந்தகம் கட்டுதல்

***22285**—*திரு. எஸ். ஆசைமணி:*

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா-

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, கொடவாசல் ஒன்றியம், புளியஞ்சேரி, விக்ரபாண்டியம், வல்லம் ஆகிய கிராமங்கள் பயனடைய புளியஞ்சேரி கிராமத்தில் கால்நடை மருந்தகம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, கொடவாசல் ஒன்றியத்தில் புளியஞ்சேரி கிராமத்தில் கால்நடை மருந்தகம் கட்டித்தர தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

1995 ஏப்ரல் 6]

முற்பகல் 10.35

திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் அந்தப் புளியஞ்சேரி கிராமத்தில் வருகிற நிதி ஆண்டிலாவது அந்தக் கால்நடை மருந்தகத்தை தொடங்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புளியஞ்சேரி கிராமம் நாகை காயிதே மில்லத் மாவட்டம், கொடவாசல் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கொடைவாசல் ஒன்றியத்தில் ஒரு கால்நடை மருந்தகமும், திருமலைப் பாளையத்தில் ஒரு கால்நடை மருந்தகமும், ஆக 2 கால்நடை மருந்தகங்கள் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன. மேலும் இந்த ஒன்றியத்தில் 8 இடங்களில் கால்நடை கிளை நிலையங்கள் இருக்கின்றன. புளியஞ்சேரி கிராமத்தில் 2 கி.மி. தொலைவில் கண்டிர மாணிக்கம் என்ற கால்நடை கிளை நிலையமும், 3 கிலோ மீட்டர் தொலைவில் வடவேரில் ஒரு கிளை நிலையமும் உள்ளது. இதை தவிர 6 கிளை நிலையங்கள் உள்ளதால், புதிதாக கால்நடை மருந்துவமனை அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு.எஸ். ஆசைமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த புளியஞ்சேரி கிராமத்தில் கால்நடை மருந்தகத்திற்கு அருகே பல கால்நடை கிளை நிலையங்கள் இருப்பதால் இதற்கு வாய்ப்பில்லை என்ற தகவலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இன்றைக்கு நாகை காயிதே மில்லத் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் விவசாயத்தையே முழுமையாக நம்பி இருக்கக் கூடிய மாவட்டம், 100 சதவீதம் விவசாயிகளே அங்கு வசிக்கிறார்கள். விவசாயக் கூலிகள் இருக்கிறார்கள். அவர்கள் அனைவருமே கால்நடை வளர்ப்பதையே பெரியத் தொழிலாகக் கொண்டிருப்பவர்கள். எனவே அந்தக் கால்நடை மருந்தகங்கள் இருக்கும் தூரத்தை கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், புளியஞ்சேரி கிராமத்தினுடைய அந்தப் பகுதியிலே சுற்றுப்புற கிராமங்களில் இருக்கக் கூடிய கால்நடைகளுடைய நலனைக் கருதி என்னுடைய கோரிக்கையை அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புளியஞ்சேரி மற்றும் அதனைச் சுற்றியிருக்கிற கிராமங்களில் போதிய கால்நடைகள் இருக்குமேயானால், அந்த ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் தீர்மானத்தை நிறைவேற்றி விட்டு, ஒரு ஏக்கர் நிலத்தை ஒதுக்கி, அதற்கு வாடகை இல்லாத கட்டிடத்தையும், பங்குத் தொகையையும் செலுத்தி தீர்மானத்தை நிறைவேற்றியதற்கு பிறகு அதற்கான சாத்தியக்

கூறுகளை அலசி ஆராய்ந்து அதற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்.249, திரு. ஆர். கோடிமாரி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

249—

நாகூர் நுழைவாயிலில் உள்ள பாலத்தைப் புதுப்பித்தல்

***16281**—*திரு. ஆர். கோடிமாரி:*

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் தொகுதியில் நாகூர் நுழைவாயிலில் உள்ள பாலத்தைப் புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு.எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திட்டம் ஏதும் தற்போது இல்லை.

திரு. ஆர். கோடிமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகூர் நுழைவாயிலில் இருக்கக்கூடிய இந்தப் பாலம் மிகவும் பழமையான பாலம். அந்தப் பாலம் இரண்டு வருடத்திற்கு முன் நாகையில் அடித்த புயல் சீற்றத்தால் பழுதடைந்து விட்டதால், அங்கு வாகன போக்குவரத்து மற்றும் மக்கள் போக்குவரத்து தடைபட்டது. அதனால் சுமார் 30 கிலோமீட்டர் சுற்றித்தான் நாகைக்கு வரவேண்டியிருக்கிறது. ஆகவே அந்தப் பகுதிவாழ் மக்களின் நீண்டநாள் குறையைப் போக்க, இந்த நிதி ஆண்டிலாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாவில் குறிப்பிடப்பட்டிருக்கிற பாலத்தைக் கட்டுவதற்கு ஆய்வு செய்தபோது ஏறக்குறைய 3 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. ஆகவே பெரும் நிதிச் செலவை இந்த அரசு உடனடியாக

கூறுகளை அலசி ஆராய்ந்து அதற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்.249, திரு. ஆர். கோடிமாரி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

249—

நாகூர் நுழைவாயிலில் உள்ள பாலத்தைப் புதுப்பித்தல்

***16281**—*திரு. ஆர். கோடிமாரி:*

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் தொகுதியில் நாகூர் நுழைவாயிலில் உள்ள பாலத்தைப் புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு.எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திட்டம் ஏதும் தற்போது இல்லை.

திரு. ஆர். கோடிமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகூர் நுழைவாயிலில் இருக்கக்கூடிய இந்தப் பாலம் மிகவும் பழமையான பாலம். அந்தப் பாலம் இரண்டு வருடத்திற்கு முன் நாகையில் அடித்த புயல் சீற்றத்தால் பழுதடைந்து விட்டதால், அங்கு வாகன போக்குவரத்து மற்றும் மக்கள் போக்குவரத்து தடைபட்டது. அதனால் சுமார் 30 கிலோமீட்டர் சுற்றித்தான் நாகைக்கு வரவேண்டியிருக்கிறது. ஆகவே அந்தப் பகுதிவாழ் மக்களின் நீண்டநாள் குறையைப் போக்க, இந்த நிதி ஆண்டிலாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாவில் குறிப்பிடப்பட்டிருக்கிற பாலத்தைக் கட்டுவதற்கு ஆய்வு செய்தபோது ஏறக்குறைய 3 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. ஆகவே பெரும் நிதிச் செலவை இந்த அரசு உடனடியாக

ஏற்றுக்கொள்ளக்கூடிய சூழ்நிலை இல்லாத காரணத்தினால் உடனடியாக அந்தப் பணியை எடுத்துச் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்தேன். ஈஸ்ட் கோஸ்ட் ரோடு என்று சொல்லப்படுகிற கிழக்குக் கடற்கரைச் சாலையில் இப்போது கடலூர்வரை சாலையைப் போட்டுக் கொண்டிருக்கிறோம். அதற்குப் பின்னாலே இந்தச் சாலையைப் போடுகிறபொழுது இந்தப் பாலம் அந்தச் சாலையில் வருகிறது. அப்படி வருகிற காலத்திலே, இந்தப் பாலத்தைக் குறித்து அரசு பரிசீலிக்கலாம் என்று கருதுகிறது.

திரு. ஆர். கோடிமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகூருக்கு அருகிலே உள்ள எம்.ஆர்.எல்., கோத்தாரி, ஓ.என்.ஜி.சி. போன்ற தொழிற்சாலைகள் இருப்பதால் அங்குள்ள கனரக வாகனங்கள், எடை அதிகமாக உள்ள வாகனங்கள், சுமார் 20 டன் 30 டன் எடையை உடைய வாகனங்கள் அந்தப் பாலத்தின் வழியாகத்தான் ஓட்டிக்கொண்டு செல்லப்படுகிறது. அப்படிச் செல்லும்போது அந்தப் பாலம் இடிந்து விழக்கூடிய அளவில் வாய்ப்பு இருப்பதால், அந்தப் பாலத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த நிதி ஆண்டில் கட்டித் தர முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்ததைப்போல இருக்கிற நிதி ஆதாரத்தைப் பொறுத்து உடனடியாகச் செய்கிற சூழ்நிலையிலே அரசு இல்லை என்று தெரிவித்தேன். ஏனென்று சொன்னால் இந்தத் திட்டப் பணிக்காக 3 கோடி ரூபாயை உடனடியாகச் செலவழிக்க வேண்டியிருக்கிறது. ஆகையினாலேதான் இது போன்ற சூழ்நிலையில் உடனடியாக அந்தத் திட்டத்தை எடுப்பதற்கு வாய்ப்பில்லை என்று தெரிவித்தேன். ஆகவே எதிர்காலத்தில் வர இருக்கக் கூடிய வாகனப் போக்குவரத்தைக் கருத்திலே கொண்டு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 250, திரு. எஸ்.எஸ். ராமசுப்பு, இருக்கையில் இல்லை.

வினா எண் 251, திரு.வி. ரவிச்சந்திரன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

251—

உப்பிலியாபுரம் தொகுதியில் தொழிற்பேட்டை அமைத்தல்.

***34371**—*திரு.வி. ரவிச்சந்திரன்:*

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், உப்பிலியாபுரம் ஒன்றியம், புதக்கால் கிராமத்தில் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

முற்பகல் 10.40

திரு.வி. ரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லி விட்டார்கள். சூரியனைச் சுட்டு எரிக்கும் சந்திரனாக விளங்கிக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லாட்சியில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், உப்பிலியாபுரம் ஒன்றியம், ஊதக்கால் கிராமத்தில் தொழிற்பேட்டை அமைக்க மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருபதுக்கும் குறையாது தொழில் முனைவோர் முன் வந்தார்களேயானால் அதைப் பற்றி அரசு கனிவோடு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 252, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

1995 ஏப்ரல் 6]
252—

வேளாண்மை அபிவிருத்தித் திட்டங்களில் முன்னேற்றம்.

***35969**—திரு. ஆ. சுப்புரத்தினம்:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட ஆட்சித் தலைவர்களின் நேர்முக உதவியாளர்களாக வேளாண்மைத்துறை துணை இயக்குநர்கள் நியமனம் செய்யப்பட்ட பிறகு வேளாண்மை அபிவிருத்தித் திட்டங்களில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு.குப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மாவட்ட ஆட்சித் தலைவர்களின் நேர்முக உதவியாளர்களாக வேளாண்மைத் துறை துணை இயக்குநர்கள் நியமனம் செய்யப்பட்ட பிறகு, வேளாண்மை அபிவிருத்தித் திட்டங்களில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

(ஆ) நேர்முக உதவியாளர்கள் (வேளாண்மைத் துணை இயக்குநர்) பணியமர்த்தப்பட்டதிலிருந்து 45 பயிர்களுக்கு மட்டுமே சாகுபடி பரப்பினை ஒத்திசைவு செய்து வந்ததை 92 பயிர்களுக்காக உயர்த்தப்பட்டது. இதனால் பல்வேறு பயிர்கள் சாகுபடிப் பரப்பை, சாகுபடி கணக்கிலிருந்து விடுபடாமல், கண்காணிக்கவும் ஏதுவாயிற்று.

மாதந்தோறும் மூன்றாவது வெள்ளிக்கிழமை அன்று விவசாயிகளின் குறை தீர்க்கும் நாள் கூட்டம் தவறாமல் நடத்தப்படுகிறது.

எரிபொருளுக்கு பயன்படும் மரம் மற்றும் இதர வகைபொருட்களின் அதிகரித்து வரும் தேவையை ஈடு செய்யவும், பின்தங்கியுள்ள மக்கள், மலைவாழ் மக்கள் மற்றும் நிலம் இல்லாத வேளாண்மைத் தொழிலாளர்களின் வேலைவாய்ப்பினை அதிகரிக்கும் நோக்கத்துடன் அரசுக்கு 25 கருத்துருக்களை அனுப்பியுள்ளனர். அவற்றில் குறைபாடுகள் சில கருத்துருக்களை அரசு திருப்பியனுப்பியுள்ளது. அதனை நிவர்த்தி செய்து மீண்டும் அரசுக்கு அனுப்ப சம்பந்தப்பட்ட நேர்முக உதவியாளர்கள் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் தவிர மற்ற அனைத்து மாவட்டங்களிலும் வேளாண்மை வளர்ச்சித் திட்டப் பணியில் நேர்முக உதவியாளர்கள் (வேளாண்மை துணை இயக்குநர்கள்) ஒரு முக்கிய அங்கமாக விளங்குகின்றார்கள்.

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஒப்பற்ற முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்பதற்கு முன்னால் இப்பதவி தமிழகத்தில் இருந்ததா அல்லது புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் புதிதாக ஏற்படுத்தப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புரட்சிப் பணி, இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகத்தில்தான் நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவியின் ஆட்சிக் காலத்திலேதான் எற்படுத்தப்பட்டது.

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற மாநிலங்களில் இது போன்ற பதவி உள்ளதா? திண்டுக்கல், அண்ணா மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சிறிய அளவில் என்ன என்ன பணிகளை இந்த நேர்முக உதவியாளர்கள் மேற்கொள்கிறார்கள் என்பதைக் குறிப்பாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தில் செயல்படுத்தப்படுகின்ற இந்தத் திட்டத்தை பிற மாநில அரசுகள் செயல்படுத்த இன்றைக்கு முன் வந்து இருக்கின்றன. குறிப்பாக உத்திரப் பிரதேசம், பீகார், மத்தியப் பிரதேசம் போன்ற மாநில அரசுகள் நம்முடைய அரசாணையினுடைய நகலை இன்றைக்கு எழுத்து மூலமாக எழுதிப் பெற்றிருக்கிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்த மாநிலத்தில் உள்ள விவசாயிகளுக்கு ஏற்படக் கூடிய பிரச்;கினைகளை வெகுவாகத் தீர்ப்பதற்காகத்தான் இந்தப் பணியிடங்கள் புரட்சித் தலைவி அவர்களால் ஏற்படுத்தப்பட்டது. குறிப்பாக எல்லா மாவட்டங்களிலும் அவர்களுடைய பணி சிறப்பாக இருக்கிறது. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், மதுரை மாவட்டத்தில் மல்லிகை ஏற்றுமதி செய்வதற்கு 1.25 ஏக்கர் நிலத்தில் குளிர்ப்பதன அறைக் கட்டுவதற்கு இன்றைக்கு நிலம் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தைப் பொறுத்தமட்டிலே 4.500 எக்டேரில் சாகுபடியாகும் வெங்காயத்தின் தரத்தை மேம்படுத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வாய்ப்பை ஏற்படுத்துவதும் அதற்குரிய தொகையாக 198.83 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்வதற்கு அரசுக்கு இவர்கள் பிரேரணை அனுப்பியிருக்கிறார்கள்.

1995 ஏப்ரல் 6]

அதனைப் போல திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் பூண்டு பயிரிடும் விவசாயிகள் அவர்களுடைய விளைப் பொருள்களுக்கு அதிக விலைக் கிடைப்பதற்கு ஏதுவாக கொடைக்கானலில் ஒரு ஒழுங்கு முறை விற்பனை மையம் அமைக்க கருத்துரு இன்றைக்கு வந்திருக்கிறது. எல்லா மாவட்டங்களிலும் பல்வேறு கருத்துக்கள் வந்திருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நா. சா. பழனிசாமி.

முற்பகல் 10.45

திரு. நா.சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளராக நியமிக்கப்பட்டிருக்கின்ற துணை வேளாண்மை இயக்குநர்கள் அந்த மாவட்டத்தில் வேளாண்மைத் தொழில் செய்பவர்களுக்கும் பிற தொழில் செய்பவர்களுக்கும் இடையில் ஏற்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவுவார்களா? எங்கள் கோவை மாவட்டத்திலே காரைமடை சுற்று வட்டாரப் பகுதியிலே செண்டுமல்லி சாகுபடி செய்ய சிந்தட்டிக் கம்பெனி என்று ஒரு கம்பெனி அதிலே ஒப்பந்தம் செய்து, ஆனால் கொள்முதல் செய்யாமல் அவர்கள் இப்போது அதைத் தவிர்த்து வருகிறார்கள். அதனால் பிரச்சினைகள் உருவாகி பல போராட்டங்களை எல்லாம் பல்வேறு இயக்கங்களும் நடத்திக்கொண்டிருக்கின்றன. இந்த துணை இயக்குநர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உதவியாக இருக்கின்ற அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரை இணைத்து பேச வைத்து அந்தச் செண்டுமல்லி உற்பத்தியாளர்களை பாதுகாக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தந்த மாவட்டத்திலே விவசாயிகளுக்கு ஏற்படக்கூடிய பிரச்சினைகளை அவர்களுடையத் தேவைகளை இந்தத் துணை இயக்குநர்கள் அறிந்து உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவருடைய கவனத்திற்கு கொண்டு சென்று ஒரு முத்தரப்புக் கூட்டத்தை நடத்தி பல்வேறு பிரச்சினைகளை இன்றைக்குத் தீர்த்து இருக்கிறார்கள். எனவே இந்தக் கருத்துருவும் இன்றைக்கு அரசுக்கு வந்திருக்கிறது. உரிய நடவடிக்கை எடுக்க அரசும் அறிவுரை வழங்கியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் எஸ். சுந்தரராஜ்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவரும் மற்றும் வேளாண்மைத் துணை இயக்குநர் அவர்களால் நடத்தப்படுகின்ற விவசாய குறை தீர்க்கும் நாட்களில் ஏற்கப்படுகின்ற

கோரிக்கைகளை வேளாண்மைத் துறை இயக்குநர் அவர்கள் ஆய்வு செய்கிறார்களா அல்லது அதன்மூலம் எடுக்கப்படுகின்ற குறைகளை நீக்குவதற்கு இந்த வேளாண்மைத் துறை எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு ஏற்படக்கூடிய பிரச்சினைகளை களைவதற்காகத்தான் ஒவ்வொரு மாதமும் மூன்றாவது வாரத்தில் வெள்ளிக்கிழமை அன்று விவசாயிகளுடைய குறை தீர்க்கும் நாள் நடத்தப்படுகிறது. அந்தக் கூட்டங்களிலே விவசாயிகளுடைய நியாயமான கோரிக்கைகளை அரசு இன்றைக்குப் பரிசீலத்து வந்திருக்கிறது. உரிய நடவடிக்கை எடுத்து வந்திருக்கிறது. ஆனால் சில விவசாயிகள் சங்கத் தலைவர்கள் எல்லாம் விவசாயிகளுக்கு அப்பாற்பட்ட பிரச்சினையை அரசியல் நோக்கோடு அரசியல் ஆதாயம் தேட வேண்டும் என்ற நோக்கிலே பேசுகிறார்கள் என்று சொன்னால் அதற்கெல்லாம் அவர்கள் தீர்வு காணமுடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 253, திரு. ஏ. ரவிக்குமார், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

253—

பொன்னேரி தொகுதியில் பால் விநியோகம்

***15996—**திரு ஏ. ரவிக்குமார்:

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதியில், மீஞ்சூர், மொண்டியம்மன் நகர் போன்ற பகுதிகளில் பால் விநியோக டெப்போக்கள் திறப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது திறக்கப்படும்?

மாண்புமிகு திரு. ஜனார்தனன், பால் வளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): சென்னை-செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், பொன்னேரி தொகுதியில் பாடியநல்லூர், பொன்னேரி, மீஞ்சூர் ஆகிய பகுதிகளில் முகவர்களை

கோரிக்கைகளை வேளாண்மைத் துறை இயக்குநர் அவர்கள் ஆய்வு செய்கிறார்களா அல்லது அதன்மூலம் எடுக்கப்படுகின்ற குறைகளை நீக்குவதற்கு இந்த வேளாண்மைத் துறை எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு ஏற்படக்கூடிய பிரச்சினைகளை களைவதற்காகத்தான் ஒவ்வொரு மாதமும் மூன்றாவது வாரத்தில் வெள்ளிக்கிழமை அன்று விவசாயிகளுடைய குறை தீர்க்கும் நாள் நடத்தப்படுகிறது. அந்தக் கூட்டங்களிலே விவசாயிகளுடைய நியாயமான கோரிக்கைகளை அரசு இன்றைக்குப் பரிசீலத்து வந்திருக்கிறது. உரிய நடவடிக்கை எடுத்து வந்திருக்கிறது. ஆனால் சில விவசாயிகள் சங்கத் தலைவர்கள் எல்லாம் விவசாயிகளுக்கு அப்பாற்பட்ட பிரச்சினையை அரசியல் நோக்கோடு அரசியல் ஆதாயம் தேட வேண்டும் என்ற நோக்கிலே பேசுகிறார்கள் என்று சொன்னால் அதற்கெல்லாம் அவர்கள் தீர்வு காணமுடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 253, திரு. ஏ. ரவிக்குமார், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

253—

பொன்னேரி தொகுதியில் பால் விநியோகம்

***15996**—*திரு ஏ. ரவிக்குமார்:*

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதியில், மீஞ்சூர், மொண்டியம்மன் நகர் போன்ற பகுதிகளில் பால் விநியோக டெப்போக்கள் திறப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது திறக்கப்படும்?

மாண்புமிகு திரு. ஜனார்தனன், பால் வளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): சென்னை-செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், பொன்னேரி தொகுதியில் பாடியநல்லூர், பொன்னேரி, மீஞ்சூர் ஆகிய பகுதிகளில் முகவர்களை

1995 ஏப்ரல் 6]

நியமித்து அவர்கள் மூலம் பால் விற்பனை செய்கிறது. எனவே, பொன்னேரித் தொகுதியில் மேலும் புதியதாகப் பால் விற்பனை நிலையங்கள் திறப்பதற்கான கருத்துருக்கள் ஏதும் தற்போதைக்கு இல்லை.

திரு. ஏ. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பொன்னேரி தொகுதி சென்னையை ஒட்டி மக்கள் தொகை பெருகி வருகின்ற ஒரு தொகுதியாகும். இப்பகுதியில் நம்முடைய இதய தெய்வத்தின் பொற்கால ஆட்சியில் சென்ற ஆண்டு மீஞ்சூர் பொன்னேரி நகரத்தில் பால் விநியோகம் செய்வதற்கு ஆவன செய்ததற்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் மொண்டியம்மன் நகர் பகுதியில் மட்டும் பால் விநியோகம் செய்யப்படுவதில்லை. அங்கு அதிகமான அளவுக்கு மக்கள் வசிப்பதால் அங்கே தனியாக பால் விநியோகம் செய்வதற்கும் ஆயிரம் மக்கள் வசிக்கின்ற அனைத்து கிராமங்களிலும் இப்பால் விநியோகம் செய்வதற்கும் நம்முடைய அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொண்டியம்மன் நகருக்கு மிக அருகில் பால் விற்பனை நிலையங்கள் இருக்கின்றன. மேலும் அந்தப் பகுதியில் பால் விற்பனை தேவை என்று கருதினால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஏ. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் தற்போது எவ்வளவு பால் கொள்முதல் செய்யப்படுகிறது? எவ்வளவு பால் விநியோகம் செய்யப்படுகிறது? அரசுக்கு இதனால் எவ்வளவு வருமானம்? மேற்கொண்டு இதனை விரிவுபடுத்துவதற்கு நம்முடைய அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாவட்டத்தில் தினசரி 81,180 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. அதிலே 39,157 லிட்டர்கள் அந்த மாவட்டத்திலே விற்பனை செய்யப்படுகிறது. மீதி பால் சென்னை நகர மக்களுக்காக சென்னையில் விற்பனை செய்யப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 254, டாக்டர் ஜெய்சன் ஜேக்கப், இருக்கையில் இல்லை, திரு. ஆ. தேவராஜ், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

254—

ஆரணி தொகுதியில் சிப்காட் தொழிற்சாலை வளாகம் அமைத்தல்.

***36233**—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்:*

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், ஆரணி தொகுதியில் சிப்காட் தொழிற்சாலை வளாகம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்தத் திட்டம் தற்போது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், செய்யாறு வட்டம், செய்யாறு - காஞ்சிபுரம் சாலையில் ரூ.17.80 கோடி திட்ட மதிப்பீட்டில் முதற்கட்டமாக சுமார் 600 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு சிப்காட் வளாகம் அமைக்க அரசு 13-1-1995-ல் ஆணை பிறப்பித்துள்ளது. எனவே, திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், ஆரணி தொகுதியில் மேலும் ஒரு சிப்காட் வளாகம் அமைக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை.

முற்பகல் 10.50

திரு. ஆ. தேவராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி தொகுதியைப் பற்றிய கேள்வியாக இருந்தாலும் சிப்காட் என்ற ஒன்று வந்திருக்கின்ற காரணத்தினாலே அமைச்சர் அவர்களிடத்திலிருந்து மேலும் பதில்களை எதிர்பார்க்க வேண்டும் என்ற முறையிலேதான் இந்தக் கேள்வியை இப்போது கேட்கின்றேன். செய்யாறு தொகுதிக்கு மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் அவர்கள் 600 ஏக்கர் நிலப்பரப்பில் 18 கோடியில் சிப்காட் அமைப்பதற்கு உரிய ஆணை வழங்கியிருக்கிறார்கள். அதை இந்த ஆண்டே 2, 3 மாதத்திற்குள் கால்கோள் விழா நடத்துவதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

1995 ஏப்ரல் 6]

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் செய்யாறு வட்டத்தில் அமைக்கப்பட இருக்கிற சிப்காட் தொழில் வளாகத்திற்கு இப்போது அரசு ஆணைப் பிறப்பித்து நில ஆர்ஜிதம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. எனவே, அந்த நிலச் சொந்தக்காரர்களை அழைத்துப் பேசுவதற்குண்டான முயற்சியில் அரசு ஈடுபட்டு உள்ளது. அதற்குரிய முழு ஒத்துழைப்பையும் அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் என்கிற முறையில் எல்லா உறுப்பினர்களும் ஒத்துழைப்பைக் கொடுப்பார்களானால் அவர் குறிப்பிட்ட தேதிக்கு முன்னாலேயே அந்தப் பணி துவக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் அவர்களுடைய கேள்வி. அதனால் உங்களுக்கு துணைக் கேள்வி ஒன்று தான்.

வினா எண் 255, திரு. கு. சிவசுப்பிரமணியன், மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

255—

கைத்தறித் துணிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தல்

***26072**—திரு. கு. சிவசுப்பிரமணியன்:*

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குறிஞ்சிப்பாடியில் உற்பத்தியாகும் கைத்தறி துணிகளை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடைமுறைப்படுத்தப்படும்?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : நல்ல தரமான உற்பத்தியை செய்து கொடுத்தால், வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியைப் பெருக்குகின்ற அளவுக்கு வகையான துணிகளை உற்பத்தி செய்து கொடுத்தால் அரசு ஏற்றுமதி செய்வதற்கு முன்வரும்.

1995 ஏப்ரல் 6]

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் செய்யாறு வட்டத்தில் அமைக்கப்பட இருக்கிற சிப்காட் தொழில் வளாகத்திற்கு இப்போது அரசு ஆணைப் பிறப்பித்து நில ஆர்ஜிதம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. எனவே, அந்த நிலச் சொந்தக்காரர்களை அழைத்துப் பேசுவதற்குண்டான முயற்சியில் அரசு ஈடுபட்டு உள்ளது. அதற்குரிய முழு ஒத்துழைப்பையும் அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் என்கிற முறையில் எல்லா உறுப்பினர்களும் ஒத்துழைப்பைக் கொடுப்பார்களானால் அவர் குறிப்பிட்ட தேதிக்கு முன்னாலேயே அந்தப் பணி துவக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் அவர்களுடைய கேள்வி. அதனால் உங்களுக்கு துணைக் கேள்வி ஒன்று தான்.

வினா எண் **255**, திரு. கு. சிவசுப்பிரமணியன், மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

255—

கைத்தறித் துணிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தல்

***26072**—திரு. கு. சிவசுப்பிரமணியன்:

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குறிஞ்சிப்பாடியில் உற்பத்தியாகும் கைத்தறி துணிகளை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடைமுறைப்படுத்தப்படும்?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : நல்ல தரமான உற்பத்தியை செய்து கொடுத்தால், வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியைப் பெருக்குகின்ற அளவுக்கு வகையான துணிகளை உற்பத்தி செய்து கொடுத்தால் அரசு ஏற்றுமதி செய்வதற்கு முன்வரும்.

திரு. கு. சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்ன சின்ன இழை பின்னி பின்னி வரும், சித்திரை கைத்தறி சேலையடி; எங்கள் தென் நாட்டில் எந்நாளும் கொண்டாடும் வேலையடி, என்று சொல்லுகின்ற அந்தப் புதிய மொழிக்கு ஏற்ப நம்முடைய மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பில் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் எங்களுடைய தென் ஆற்காடு வள்ளலார் மாவட்டத்தில் உள்ள குறிஞ்சிப்பாடியில் நல்ல தரமான கைலிகள் நெய்யப்படுகின்றன. இந்தக் கைலிகளை அரசு மூலமாக வெளிநாட்டுக்கு அனுப்பி அன்னியச் செலாவணியைப் பெற முடியும் என்ற காரணத்தால் இதனைச் செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோ-ஆப்டெக்ஸ் மூலமாக ஏற்றுமதி செய்வதை விட அவர்களுக்கு அதிகமான லாபம் தனியார் மூலம் கிடைப்பதால் அந்த லுங்கிகளை அவர்கள் தனியார்களுக்கு விற்று விடுகிறார்கள். தனியார் மூலம் ஏற்றுமதி செய்கிறார்கள். ஆனால் எங்களுக்குக் கிடைக்கிற ஆர்டர்கள்- - அலங்காரத் துணி வகைகள், பூந்துவாலைகள், மேஜை விரிப்புகள், சிறிய கைத்துண்டுகள் போன்றவைகளுக்கு கோ-ஆப்டெக்ஸ் ஆர்டர் கிடைக்கிறது. அந்த ஆர்டர்களை நாங்கள் உடனடியாகத் தருவதற்கு தயாராக இருக்கிறோம். அதை அவர்கள் செய்து கொடுத்தால் உடனடியாக ஏற்றுமதி செய்ய அரசு முன்வரும்.

திரு. கு. சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழகத்தில் விவசாயத் தொழிலுக்கு அடுத்தத் தொழிலாக விளங்கி வரும் நெசவுத் தொழிலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து இன்றைக்கு அந்தப் பகுதி வாழ் மக்களுக்கு பல்வேறு குடியிருப்புகள், அவர்களுக்கு வேண்டிய மருத்துவ வசதிகள், மருத்துவமனைகள் கட்டிக்கொண்டிருக்கின்ற இந்த நல்ல ஆட்சியில் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை இன்றைக்கு நம்முடைய மக்கள் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தவேளையில் நம்முடைய தமிழகத்திலிருந்து எவ்வளவு கைத்தறித் துணிகள் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன என்பதை இந்த நேரத்தில் நான் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991-92 ஆம் ஆண்டு ஒரு கோடியே 16 லட்சம் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது; 1992-93 ஆம் ஆண்டு 2 கோடியே 65 லட்சத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது; 1993-94 ஆம் ஆண்டு

1995 ஏப்ரல் 6]

1 கோடியே 22 லட்சத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது; 1994-95 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முடிய ஒரு கோடியே 10 லட்சத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 256, திருமதி வி.ஜி. மணிமேகலை, மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

256—

நரிக்குடியில் நூற்பு ஆலை அமைத்தல்.

***38810—**திருமதி வி. ஜி. மணிமேகலை :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிலில் பின்தங்கிய பகுதி என அறிவிக்கப்பட்ட அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி வட்டம், நரிக்குடியில் நூற்பு ஆலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும்?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திருமதி வி. ஜி. மணிமேகலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிமக்களின் நன்மையைக் கருதி அக்குடிமக்களைத் தழுவியே நல்ல ஆட்சியை செய்யும் அரசனது கட்டளையை — அந்த மக்கள் அவருடைய கட்டளையை தலைமேற்கொண்டு செயல் ஆற்றுகின்ற வகையில் வள்ளுவரின் கூற்றுக்கு இணங்க இன்றையதினம் தமிழக மக்கள் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் கட்டளையை ஏற்று நடந்து வந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அப்படிப்பட்ட செயற்குறிப்பு ஏதும் இல்லை என்று கூறிவிட்டார்கள். சத்துணவு தந்த சரித்திர நாயகர் புரட்சி தலைவர் அவர்களின் ஆட்சிக் காலத்திலே அருப்புக்கோட்டைத் தொகுதியில் இருக்கக்கூடிய நரிக்குடியில் ஒரு நூற்பாலை அமைத்துக் கொடுப்பேன் என்ற வாக்குறுதியை அந்தத் தொகுதி மக்களிடையே கொடுத்திருக்கிறார்கள். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

1995 ஏப்ரல் 6]

1 கோடியே 22 லட்சத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது; 1994-95 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முடிய ஒரு கோடியே 10 லட்சத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 256, திருமதி வி.ஜி. மணிமேகலை, மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

256—

நரிக்குடியில் நூற்பு ஆலை அமைத்தல்.

***38810—**திருமதி வி. ஜி. மணிமேகலை :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிலில் பின்தங்கிய பகுதி என அறிவிக்கப்பட்ட அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி வட்டம், நரிக்குடியில் நூற்பு ஆலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும்?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திருமதி வி. ஜி. மணிமேகலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிமக்களின் நன்மையைக் கருதி அக்குடிமக்களைத் தழுவியே நல்ல ஆட்சியை செய்யும் அரசனது கட்டளையை — அந்த மக்கள் அவருடைய கட்டளையை தலைமேற்கொண்டு செயல் ஆற்றுகின்ற வகையில் வள்ளுவரின் கூற்றுக்கு இணங்க இன்றையதினம் தமிழக மக்கள் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் கட்டளையை ஏற்று நடந்து வந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அப்படிப்பட்ட செயற்குறிப்பு ஏதும் இல்லை என்று கூறிவிட்டார்கள். சத்துணவு தந்த சரித்திர நாயகர் புரட்சி தலைவர் அவர்களின் ஆட்சிக் காலத்திலே அருப்புக்கோட்டைத் தொகுதியில் இருக்கக்கூடிய நரிக்குடியில் ஒரு நூற்பாலை அமைத்துக் கொடுப்பேன் என்ற வாக்குறுதியை அந்தத் தொகுதி மக்களிடையே கொடுத்திருக்கிறார்கள். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

[1995 ஏப்ரல் 6

முற்பகல் 10.55

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நரிக்குடியிலே அமைக்கப்பட்டிருக்கின்ற நூற்பாலைகள் இரண்டும் நரிக்குடிக்கு அருகிலேயே அமைக்கப்பட்டு இருக்கின்றன. தமிழ்நாட்டில் நூல் உற்பத்தியும் உபரியாக இருக்கின்ற காரணத்தினாலேதான் நரிக்குடியிலே அமைக்க முடியாது என்று குறிப்பிட்டேன். ஏற்கெனவே நரிக்குடிக்கு அருகாமையிலேயே இரண்டு நூற்பாலைகள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலத்தில் சொன்னதைப்போல அமைக்கப்பட்டு இருக்கின்றன.

திருமதி வி. ஜி. மணிமேகலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் அவர்கள் அருப்புக்கோட்டை தொகுதியிலே நின்றபொழுது அங்கே இருக்கக்கூடிய மக்கள் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கின்றார்கள் என்ற காரணத்தினால் அந்தத் தொகுதியிலேதான் நூற்பாலைகளை அமைத்துக் கொடுக்கிறேன் என்ற வாக்குறுதியைக் கொடுத்தார். அருப்புக்கோட்டை தொகுதிக்கு சுற்றி, பக்கத்திலே இருக்கக்கூடிய இடங்களிலே அமைத்துத் தருகிறேன் என்று அவர் கூறவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்கள். அதனால் தயவுசெய்து, கருணையோடு, அவர்கள் இதை மறுபரிசீலனை செய்து அருப்புக்கோட்டை தொகுதியிலேயே ஒரு நூற்பாலையை அமைத்துத் தருவதற்கு ஆவன செய்வார்களா என்பதை தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழக அரசால் 18 நூற்பாலைகள் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்த 18 நூற்பாலைகளும் நஷ்டத்திலேதான் இயங்கிக்கொண்டு இருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்கிறேன். நரிக்குடிக்குப் பக்கத்திலே இருக்கின்ற அச்சங்குளத்திலே ஒரு நூற்பாலை இராமநாதபுரம் பக்கத்திலே இருக்கிறது. இன்னொன்று வ.உ.சி. மாவட்டத்தில் எட்டயபுரத்தில் இருக்கிறது. ஆக, இரண்டும் 40 கிலோ மீட்டர் தூரத்திலேயே இருக்கின்ற காரணத்தினால் இன்னொரு நூற்பாலையை நஷ்டத்திலே இயங்கக் கூடிய வகையிலே அமைப்பதற்கு அரசு முன் வராது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோள், நீங்கள் சொல்லுகின்ற நூற்பாலைகள் எல்லாம் அவருடைய தொகுதியைச் சுற்றிச் சுற்றி வந்துகொண்டு

இருக்கின்றன, அவருடைய தொகுதிக்கு வரவில்லை என்பதைத்தான் சொல்கிறார்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நஷ்டத்திலே நூற்பாலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தினால் புதிய நூற்பாலைகளை அமைக்கின்ற எந்தத் திட்டமும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. காஞ்சி பன்னீர்செல்வம்.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நடத்தும் கூட்டுறவு நூற்பாலைகளில் நஷ்டத்தில் இயங்குகின்ற சிலவற்றை தனியாருக்கு விற்றிட அரசு நடவடிக்கை எடுக்குமா என தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நஷ்டத்திலே இயங்கிக்கொண்டு இருக்கின்ற எந்த நூற்பாலையையும் தனியாருக்கு விற்கின்ற எண்ணம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெளிவாகத் தெரியப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 257, திருமதி என். கனகவல்லி, இருக்கையில் இல்லை.

வினா எண் 258, திரு. ம. தனபால், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

258—

மண்ணிவாக்கம் ஊராட்சி ஒன்றியப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்குதல்.

***38076—**திரு. ம. தனபால் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்போரூர் தொகுதியில் உள்ள மண்ணிவாக்கம் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த ஆவன செய்யப்படுமா ?

இருக்கின்றன, அவருடைய தொகுதிக்கு வரவில்லை என்பதைத்தான் சொல்கிறார்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நஷ்டத்திலே நூற்பாலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தினால் புதிய நூற்பாலைகளை அமைக்கின்ற எந்தத் திட்டமும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. காஞ்சி பன்னீர்செல்வம்.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நடத்தும் கூட்டுறவு நூற்பாலைகளில் நஷ்டத்தில் இயங்குகின்ற சிலவற்றை தனியாருக்கு விற்றிட அரசு நடவடிக்கை எடுக்குமா என தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நஷ்டத்திலே இயங்கிக்கொண்டு இருக்கின்ற எந்த நூற்பாலையையும் தனியாருக்கு விற்கின்ற எண்ணம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெளிவாகத் தெரியப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 257, திருமதி என். கனகவல்லி, இருக்கையில் இல்லை.

வினா எண் 258, திரு. ம. தனபால், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

258—

மண்ணிவாக்கம் ஊராட்சி ஒன்றியப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்குதல்.

***38076—**திரு. ம. தனபால் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்போரூர் தொகுதியில் உள்ள மண்ணிவாக்கம் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கருத்துரு ஏதும் தற்போது ஆய்வில் இல்லை.

திரு. ம. தனபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஆவலோடு எதிர்பார்த்தேன். இது சம்பந்தமாக மூன்று ஆண்டுகளாக தொடர்ந்து பிரேரணை அனுப்பப்பட்டு திருப்பப்படுகிறது. மண்ணிவாக்கம் என்று சொல்லப்படுகின்ற அந்த இடம் பல்வேறு கிராமங்கள் சுற்றி இருக்கின்ற இடம். ஆதனூர், வண்டலூர், ஓட்டேரி, முடிச்சூர், கரசங்கழனி போன்ற பகுதிகளில் உள்ளவர்கள் எல்லாம், இதை உயர்நிலைப் பள்ளியாக மாற்றுவதனால் பயன்பெறுவார்கள். கிட்டத்தட்ட 700 பிள்ளைகளுக்கு மேலாக அந்தப் பள்ளியிலே படிக்கின்றார்கள். 10 ஏக்கர் நிலப்பரப்பு இருக்கின்றது. உயர்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்கு தனியார் ஒருவர், தன்னார்வம் மிக்கவர், 60 ஆயிரம் ரூபாயை, தன்னுடைய சொந்தப் பணத்தை கட்டியிருக்கின்றார். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனை உயர்நிலைப் பள்ளியாக மாற்ற ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றும்பொழுது சில விதிமுறைகளுக்கு உட்பட்டுத்தான் செய்யவேண்டி இருக்கிறது. குறிப்பிட்ட இந்தப் பள்ளியைச் சுற்றிலும் 5 கிலோ மீட்டர் தூரத்தில் கிளாம்பாக்கம் என்ற இடத்திலே ஆதிதிராவிடர் நலத் துறையின் உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. மற்றும் 5 கிலோ மீட்டர் தூரத்திலே படப்பை என்ற இடத்திலே அரசு மேல்நிலைப் பள்ளி இருக்கிறது. 3 கிலோ மீட்டர் தூரத்திலே பீர்க்கங்கரணை என்ற இடத்திலே அரசு உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. சாதாரணமாக 8 கிலோ மீட்டர் சுற்றளவில் வேறு உயர்நிலைப் பள்ளிகள் இல்லை என்றால்தான் அரசு இதை பரிசீலிக்கிறது. ஆகவே, விதிமுறைகளுக்கு உட்பட்டு இந்த ஆண்டிலே வரப்பெற்று இருக்கிற கருத்துருவை உயர்நிலைக் குழு பரிசீலிக்கும். குழு பரிந்துரை செய்தால் அரசு மேல் நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 259, திருமதி அ. தி. சரஸ்வதி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

259—

சத்தியமங்கலம் தொகுதியில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

***25268—**திருமதி அ. தி. சரஸ்வதி :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம், சத்தியமங்கலம் தொகுதி, கொத்தமங்கலம், ராஜன் நகர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் விரைவில் செயல்படுத்தப்பட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கொத்தமங்கலம் மற்றும் 4 கிராம பஞ்சாயத்துக்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ. 253.60 இலட்சங்களுக்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை டிசம்பர் 1996-க்குள் முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது.

முற்பகல் 11.00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திருமதி அ. தி. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும்; தர்மம் நின்றே வெல்லும், என்றும் தர்மம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பக்கத்திலே வெல்லும் என்று கூறி (மேசையைத் தட்டும் ஒலி) நமது மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என் நன்றியை அவர்களின் பொற்பாதங்களில் காணிக்கையாகச் செலுத்தி, அமைச்சரவர்களுக்கும் நன்றி தெரிவித்து, இந்தத் திட்டம் இந்த ஆண்டுக்குள்ளே முடிவடைய அமைச்சர் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வெற்றியைத் தவிர வேறொன்றும் அறியாத வெற்றித் தலைவியை நாம் பெற்றிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, தமிழகம் ஒரு நல்ல தலைமையிலே இயங்கிக் கொண்டிருக்கிற காட்சியை தமிழக மக்கள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதிக்கும், இந்த 2 கோடியே 53

இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலே தயாரிக்கப்பட்டிருக்கின்ற இந்தத் திட்டத்தில் போர்க்கால அடிப்படையிலே இன்றைக்குப் பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. சுமார் 47 கிலோ மீட்டர் பகிர்மானக் குழாய்கள் வழியாகக் குடிநீர் விநியோகிப்பதற்கான அத்துணை நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டிருக்கிறது. இந்த ஆண்டு தலைமைப் பணியிடமும், பிரதானக் குழாய்கள் பதிக்கின்ற அந்தப் பணியும் செய்வதற்காக ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையில், திட்டம் ஒரு பெரிய திட்டம் என்ற காரணத்தினால் சுமார் 45,000 மக்களுக்கும் மேலாக இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலே பயன் அடைகின்ற காரணத்தினாலே, அவசரத்திலே செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிறது. இன்றைக்கு சுமார் 19 மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் இந்தத் திட்டத்திலே உள்ளடக்கியிருக்கின்ற காரணத்தினாலும், இதற்குப் பணி முடிக்க ஆக வேண்டிய கால அவகாசம் கருதி அடுத்த ஆண்டு 1996-க்குள்ளாக முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி அ. தி. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் மனத்தில் மங்காப் புகழ் பெற்று மகராசியாகத் திகழும் இதய தெய்வத்தின் பொற்கால ஆட்சியில் கொத்தமங்கலம், ராஜன் நகர் கூட்டுக் குடிநீர்த் திட்டம், பன்னாரி குடியிருப்புகள் பகுதிக்கு சுமார் ரூ. ஐம்பது இலட்சம் வரை குடிநீர் வடிகால் வாரியம் பணம் கட்டப்பட வேண்டுமெனத் தெரிவித்திருக்கின்றார்கள். ஆனால் இப்பணத்தை பன்னாரி கோவில் மூலம் கட்ட பணம் இல்லை. கிராமப் பஞ்சாயத்துக்கு உட்பட்ட பகுதிகளை மாண்புமிகு இதய தெய்வம், தமிழகத்தின் 100 ஆண்டுக்கால முதல்வர் அம்மா அவர்கள் கிராமப் பகுதி குடிநீர் வாரியமே குடிநீர்த் திட்டத்தை எடுத்து செயல்படுத்தலாம் என அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, அமைச்சரவர்கள்- - பன்னாரி பொதுமக்கள் வாழக்கூடிய கிராமப் பகுதி ஆகும். ஆகவே, அமைச்சரவர்கள்- - வாரியமே இலவசமாகக் குடிநீர்த் திட்டத்தை குறைந்த அளவிற்காவது எடுத்து சுமார் ராஜன் நகரிலிருந்து பன்னாரி வரை தண்ணீர் கொண்டு வர குறைந்த அளவுத் தொகையாவது பெற்றுக் கொண்டு, திட்டத்தை நிறைவேற்றுவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்திருக்கிற அந்த ராஜன் நகர் கூட்டுக் குடிநீர்த் திட்டம், பன்னாரி அம்மன் கோயிலுக்கு வந்து போகிற சுமார் பத்தாயிரம் மக்கள் தொகைக்கும் சேர்த்துத்தான் உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த அடிப்படையிலே

1995 ஏப்ரல் 6]

இன்றைக்கு ஆய்வுக்காக என்று சிறு தொகையை அங்கேயிருக்கிற உள்ளாட்சி நிறுவனங்கள் செலுத்த வேண்டிய கட்டாயம் இருக்கிறது. அதையும் குடிநீர் வடிகால் வாரியமே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொன்னால் நிதிச்சுமை அதிகமாக ஆகிற காரணத்தினாலே அது ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் இந்தப் பிரச்சினை குறித்து வாரியத்திற்கு அறிவுரை வழங்கி ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 260, திரு. ஆர். பி. பரமசிவம், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

260—

கல்வராயன் மலையில் தேனீ வளர்ப்புப் பண்ணை ஏற்படுத்துதல்.

19215—*திரு. ஆர். பி. பரமசிவம் :

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்வராயன் மலையில் "தேனீ வளர்ப்புப் பண்ணை" ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டத்தில் உள்ள கல்வராயன் மலைப் பகுதியிலே தேனீ பண்ணை அமைத்தல் அரசு செயற்குறிப்பில் இல்லை.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வராயன் மலை என்னுடைய மாவட்டத்தினுடைய மேற்கு எல்லையாக இருக்கின்றது. அங்கு மலைவாழ் மக்கள் கிட்டத்தட்ட 300, 350 கிராமங்களில் வாழ்ந்து வருகிறார்கள். பொருளாதார வளர்ச்சியில் அடித்தட்டில் இருக்கின்ற அந்த மக்களுக்குப் பொருளாதாரத்தில் வளர்ச்சியடையும் வகையில் இந்தத் தேனீக்கள் பண்ணை வைத்து அதன் மூலம் அவர்கள் பொருளாதாரம் வளர்ச்சியடைய அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1995 ஏப்ரல் 6]

இன்றைக்கு ஆய்வுக்காக என்று சிறு தொகையை அங்கேயிருக்கிற உள்ளாட்சி நிறுவனங்கள் செலுத்த வேண்டிய கட்டாயம் இருக்கிறது. அதையும் குடிநீர் வடிகால் வாரியமே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொன்னால் நிதிச்சுமை அதிகமாக ஆகிற காரணத்தினாலே அது ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் இந்தப் பிரச்சினை குறித்து வாரியத்திற்கு அறிவுரை வழங்கி ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 260, திரு. ஆர். பி. பரமசிவம், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

260—

கல்வராயன் மலையில் தேனீ வளர்ப்புப் பண்ணை ஏற்படுத்துதல்.

***19215—திரு. ஆர். பி. பரமசிவம்** :

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்வராயன் மலையில் "தேனீ வளர்ப்புப் பண்ணை" ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டத்தில் உள்ள கல்வராயன் மலைப் பகுதியிலே தேனீ பண்ணை அமைத்தல் அரசு செயற்குறிப்பில் இல்லை.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வராயன் மலை என்னுடைய மாவட்டத்தினுடைய மேற்கு எல்லையாக இருக்கின்றது. அங்கு மலைவாழ் மக்கள் கிட்டத்தட்ட 300, 350 கிராமங்களில் வாழ்ந்து வருகிறார்கள். பொருளாதார வளர்ச்சியில் அடித்தட்டில் இருக்கின்ற அந்த மக்களுக்குப் பொருளாதாரத்தில் வளர்ச்சியடையும் வகையில் இந்தத் தேனீக்கள் பண்ணை வைத்து அதன் மூலம் அவர்கள் பொருளாதாரம் வளர்ச்சியடைய அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கல்வராயன் மலையானது இரண்டு மாவட்டங்களில் அமைந்துள்ளது. சேலம் மாவட்டத்திலும், விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டத்திலும் அமைந்துள்ளது. விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டத்திலுள்ள இந்த கல்வராயன் மலைப் பகுதியிலே கரியலூர், இன்னாடு, தேராப்பட்டு ஆகிய கிராமங்களில் கிட்டத்தட்ட 275 மலைவாழ் மக்களுக்கு ஒவ்வொரு குடும்பத்துக்கும் கிட்டத்தட்ட பத்து பெட்டிகள் வீதம் கொடுக்கப்பட்டு இன்று 2850 தேனீ வளர்ப்புப் பெட்டிகள் கொடுக்கப்பட்டுள்ளது. வாரியத்தின் மூலம் அந்தத் தேனீ வளர்ப்புத் தொழிலை ஊக்குவிப்பதற்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. மேலும் இந்தக் கரியலூர் பகுதியிலே 23-11-1985 ஆம் ஆண்டு முதல் ஒரு கூட்டுறவுச் சங்கமானது செயல்பட்டுக் கொண்டு வந்திருக்கிறது. ஆகவே, இந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய, இந்தத் தேனீ வளர்ப்புத் தொழில்களில் ஈடுபட்டிருக்கக்கூடிய மலைவாழ் மக்களுக்கு உதவ வாரியத்தின் மூலம் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11.05

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்களின் காவல் தெய்வமாக விளங்குகின்றார்கள் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். அந்தத் தேன் அருமருந்தாகப் பயன்படுகின்ற நிலை இருந்து வருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மலைவாழ் மக்களுக்குப் போதிய வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். தமிழகத்திலே உள்ள தேனீக்கள் வைரஸ் என்ற ஒரு நோயால் பாதிக்கப்பட்டு இறந்துவிட்டதை அரசு அறியுமா ? அப்படி அரசு அறிந்திருந்தால் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். அதே நேரத்தில் நம்முடைய தேனீக்களைவிட சைனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட தேனீக்கள் கூடுதல் தேனை அங்கே சேகரிக்கிற நிலை இருப்பதால், கேரளாவில் இந்த சைனாவிலிருந்து வரவழைக்கப்பட்ட தேனீக்களைப் பயன்படுத்துகிறார்கள். அதேபோல, கல்வராயன் மலைப் பகுதிகளிலே சைனாவிலிருந்து வரவழைத்து தேனீக்களைப் பயன்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனீகளுக்கு வைரஸ் நோய் தாக்கியதாக மாண்புமிகு

உறுப்பினர் சொன்னார்கள். தேனீகளுக்கு நோய் வந்தது உண்மைதான். ஆனால், எந்த நோய் என்பதை இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை. பூனாவில் இருக்கக்கூடிய தேனீ ஆராய்ச்சி மையத்திலிருந்துகூட சம்பந்தப்பட்ட அதிகாரிகளை வரவழைத்து நாங்கள் ஆராய்ச்சி மேற்கொண்டபோது, அதற்கு என்ன நோய் தாக்கியிருக்கிறது என்பதை இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை. இருந்தாலும் நாங்கள் இன்னும் முயற்சி எடுத்து வருகிறோம். சைனாவிலிருந்து கொண்டு வரப்பட்ட அந்தத் தேனீக்களை கல்வராயன் மலைப் பகுதியிலே அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டபோது, சாத்தியக்கூறுகள் இல்லையென்று தெரிவித்தார்கள். ஆகவே, அந்தத் திட்டம் கைவிடப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

250—

துத்திகுளம் நீர்ப்பாசனக் குளத்தைச் செப்பனிடுதல்.

***20667**—திரு. எஸ். எஸ். ராமசுப்பு :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், துத்திகுளம் நீர்ப்பாசனக் குளத்தை தூர் வாரிச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், தென்காசி தாலுக்கா கீழப்பானூர் ஒன்றியம் துத்திக்குளம் கண்மாயினை தூர் எடுத்தலுக்கான மதிப்பீடு ரூ. 31.65 இலட்சங்களுக்கு (93-94 விலை விவரப்படி) தயாரிக்கப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

257—

விளாத்திக்குளம் அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம்.

***37906**—திருமதி என். கனகவல்லி :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1995 ஏப்ரல் 6]

உறுப்பினர் சொன்னார்கள். தேனீகளுக்கு நோய் வந்தது உண்மைதான். ஆனால், எந்த நோய் என்பதை இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை. பூனாவில் இருக்கக்கூடிய தேனீ ஆராய்ச்சி மையத்திலிருந்துகூட சம்பந்தப்பட்ட அதிகாரிகளை வரவழைத்து நாங்கள் ஆராய்ச்சி மேற்கொண்டபோது, அதற்கு என்ன நோய் தாக்கியிருக்கிறது என்பதை இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை. இருந்தாலும் நாங்கள் இன்னும் முயற்சி எடுத்து வருகிறோம். சைனாவிலிருந்து கொண்டு வரப்பட்ட அந்தத் தேனீக்களை கல்வராயன் மலைப் பகுதியிலே அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டபோது, சாத்தியக்கூறுகள் இல்லையென்று தெரிவித்தார்கள். ஆகவே, அந்தத் திட்டம் கைவிடப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

250—

துத்திகுளம் நீர்ப்பாசனக் குளத்தைச் செப்பனிடுதல்.

***20667**—திரு. எஸ். எஸ். ராமசுப்பு :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், துத்திகுளம் நீர்ப்பாசனக் குளத்தை தூர் வாரிச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், தென்காசி தாலுக்கா கீழப்பானூர் ஒன்றியம் துத்திக்குளம் கண்மாயினை தூர் எடுத்தலுக்கான மதிப்பீடு ரூ. 31.65 இலட்சங்களுக்கு (93-94 விலை விவரப்படி) தயாரிக்கப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

257—

விளாத்திக்குளம் அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம்.

***37906**—திருமதி என். கனகவல்லி :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

உறுப்பினர் சொன்னார்கள். தேனீகளுக்கு நோய் வந்தது உண்மைதான். ஆனால், எந்த நோய் என்பதை இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை. பூனாவில் இருக்கக்கூடிய தேனீ ஆராய்ச்சி மையத்திலிருந்துகூட சம்பந்தப்பட்ட அதிகாரிகளை வரவழைத்து நாங்கள் ஆராய்ச்சி மேற்கொண்டபோது, அதற்கு என்ன நோய் தாக்கியிருக்கிறது என்பதை இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை. இருந்தாலும் நாங்கள் இன்னும் முயற்சி எடுத்து வருகிறோம். சைனாவிலிருந்து கொண்டு வரப்பட்ட அந்தத் தேனீக்களை கல்வராயன் மலைப் பகுதியிலே அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டபோது, சாத்தியக்கூறுகள் இல்லையென்று தெரிவித்தார்கள். ஆகவே, அந்தத் திட்டம் கைவிடப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

250—

துத்திகுளம் நீர்ப்பாசனக் குளத்தைச் செப்பனிடுதல்.

***20667—**திரு. எஸ். எஸ். ராமசுப்பு :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், துத்திகுளம் நீர்ப்பாசனக் குளத்தை தூர் வாரிச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், தென்காசி தாலுக்கா கீழப்பானூர் ஒன்றியம் துத்திக்குளம் கண்மாயினை தூர் எடுத்தலுக்கான மதிப்பீடு ரூ. 31.65 இலட்சங்களுக்கு (93-94 விலை விவரப்படி) தயாரிக்கப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

257—

விளாத்திக்குளம் அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம்.

***37906—**திருமதி என். கனகவல்லி :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1995 ஏப்ரல் 6

(அ) விளாத்திகுளம் அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டித் தரப்படும்?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : விளாத்திகுளம் அரசு மேல்நிலைப் பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழகம் கட்டிட மதிப்பீட்டில் 50% செலுத்த முன்வருமானால் அரசு தன் பங்காக 50% தொகையை செலுத்தி நடப்பு நிதியாண்டில் கூடுதல் கட்டிடம் கட்டித் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு.

(அ) திருவிடைமருதூர் அருகில் உள்ள காவிரி பாலம் செப்பனிடப்பட வேண்டியதன் அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. எஸ். ஆசைமணி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. எஸ். ஆசைமணி.

திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் அருகில் சென்ற ஆண்டு உடைந்த காவிரி பாலம் செப்பனிடப்படாததால் அப்பகுதி மக்கள் அவதிப்படுவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

[1995 ஏப்ரல் 6

(அ) விளாத்திகுளம் அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டித் தரப்படும்?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : விளாத்திகுளம் அரசு மேல்நிலைப் பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழகம் கட்டிட மதிப்பீட்டில் 50% செலுத்த முன்வருமானால் அரசு தன் பங்காக 50% தொகையை செலுத்தி நடப்பு நிதியாண்டில் கூடுதல் கட்டிடம் கட்டித் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு.

(அ) திருவிடைமருதூர் அருகில் உள்ள காவிரி பாலம் செப்பனிடப்பட வேண்டியதன் அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. எஸ். ஆசைமணி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. எஸ். ஆசைமணி.

திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் அருகில் சென்ற ஆண்டு உடைந்த காவிரி பாலம் செப்பனிடப்படாததால் அப்பகுதி மக்கள் அவதிப்படுவது குறித்த” அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

1995 ஏப்ரல் 6] [திரு. எஸ். கண்ணப்பன்]

அறிக்கை

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் அருகில் காவிரி ஆற்றில் உள்ள பாலமானது, நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பிலுள்ள இதர மாவட்டச் சாலையான திருவிடைமருதூர்-கோவிலாச்சேரி சாலையில் கி.மீ.2/6-ல் காவேரியாற்றின் குறுக்கே உள்ள மூன்று கண்களைக் கொண்ட பழைய வளைவுப்பாலமாகும். 1993-ம் ஆண்டு அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் பெய்த கடும் மழையின் காரணமாக இந்த பாலத்தின் அடித்தளத்தில் இருந்த பாதுகாப்புப் பணிகளும், பாலத்தின் இரண்டு கண்களும் இடிந்து விழுந்து விட்டது. இதனால், இந்தப் பாலத்தின் வழியே சென்று கொண்டிருந்த போக்குவரத்து, காவேரியாற்றின் கீழ் படுகையில் திருப்பனந்தாள்-ஆடுதுறை சாலை எனும் பெரிய மாவட்டச் சாலையில் கி.மீ.8/8-ல் உள்ள பாலத்தின் வழியே அனுமதிக்கப்பட்டது. மேலும் கவன ஈர்ப்பு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள திருவிடைமருதூர் கோவிலாச்சேரி சாலையில் கி.மீ.2/6-ல் இடிந்த நிலையிலுள்ள பாலத்தை திரும்பக் கட்டும் பணியானது, 'தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்' கீழ் அரசு ஆணை எம்.எஸ்.எண்.644 வேளாண்மை (டி.என்.ஏ.டிப்பி) துறை நாள் 16-11-94-ல் ஒப்புதல் வழங்கப்பட்ட பணிகளில், ரூ. 75 லட்சங்கள் மதிப்பில் இடம் பெற்றுள்ளது. மேற்படி பணிகள் செயலாக்கப்படவுள்ளது.

திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையின்படி 16-11-94-லே வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தில் இப்பாலம் சேர்க்கப்பட்டு சுமார் 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே இடம் பெற்றுள்ளதாக சொல்லப்பட்டிருக்கிறது. இன்றைக்கு தஞ்சை மாவட்டத்திலே பார் புகழ் உலகத் தமிழ் மாநாட்டை நடத்தியதன் மூலம் அங்கே இருக்கின்ற பல்வேறு சாலைகளுக்கு கோடிக்கணக்கான ரூபாய் அள்ளிக் கொடுத்திருக்கிற இதய தெய்வம் புரட்சித் தலைவி அரசு, அதேபோல், நாகை மாவட்டத்திலே பல்வேறு சாலைகள் வீணாகியிருக்கின்ற நிலைமைகளை அறிந்து அங்கேயும் பல கோடி ரூபாய் அள்ளித் தந்திருக்கின்ற நம்முடைய சிறப்பு வாய்ந்த கழக ஆட்சியில் இன்றைக்கு இந்தக் கோடை காலத்திற்குள்ளே இந்தப் பாலத்தை முடிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னால் கடந்த 4 ஆண்டு காலமாக காவிரி ஆற்றில் ஜூன் 12 ஆம் தேதி தண்ணீர் வருகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பிப்ரவரி மாதத்தில் தண்ணீர் நின்று அதற்குப் பின்னாலே ஜூன் மாதத்தில் அந்தத் தண்ணீர் வந்துவிடும் என்ற காரணத்தால் இந்த இடைப்பட்ட காலத்திற்குள்ளே அந்தப் பாலத்தைக் கட்டி முடிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிற

காரணத்தால் நடப்பு ஆண்டிலேயே போர்க்கால அடிப்படையில் அமைச்சர் அவர்கள் இந்தப் பாலத்தைக் கட்டி முடிப்பதற்கு உத்தரவு பிறப்பிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பாலங்களை எல்லாம் சீரமைப்பதற்காக, புதியதாக கட்டுவதற்காக, உலக வங்கியோடு தொடர்பு கொண்டு, வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழே ஏறத்தாழ 20 கோடி ரூபாய் பெற்றுத் தந்தவர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய சீரிய முயற்சியின் காரணமாக உடனடியாக மதிப்பீடுகள் எல்லாம் தயாரிக்கப்பட்டு இப்போது தேசிய நெடுஞ்சாலை என்.எச்.45 என்று சொல்லப்படுகிற அந்தப் பிரிவின் தலைமைப் பொறியாளர் அவர்கள் இதற்கான மதிப்பீடுகள் தயாரிப்பதிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அந்தப் பணிகளுக்கான மதிப்பீடுகளுக்கு உலக வங்கியின் ஒப்புதல் பெற வேண்டும். ஏனென்று சொன்னால், அவர்கள் நிதி தருகின்றபோது அவர்களுடைய விதிமுறைகளின்படிதான் நாம் ஒப்பந்தங்கள் கோர வேண்டும். ஆகவே, அவர்களுடைய ஒப்புதல் பெறுவதற்காக அனுப்பப்பட்டிருக்கிறது. ஒப்புதல் பெறப்பட்டவுடன் உடனடியாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு இந்தப் பணி துவங்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) சிவகாசி, லவ்லி கெமிக்கல்ஸ் நிறுவனப் புகையினால் சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திரு. ஜெ. பாலகங்காதரன், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஜெ. பாலகங்காதரன்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகாசி நகராட்சி எல்லைக்குட்பட்ட வேலாயுதம் சாலையிலுள்ள லவ்லி கெமிக்கல்ஸ் எனும் சிறுதொழில் நிறுவனத்திலிருந்து வெளியேறும் புகையினால் சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படுவது குறித்த" அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவையின்முன் வைக்கப்பட்டுள்ளது.

காரணத்தால் நடப்பு ஆண்டிலேயே போர்க்கால அடிப்படையில் அமைச்சர் அவர்கள் இந்தப் பாலத்தைக் கட்டி முடிப்பதற்கு உத்தரவு பிறப்பிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பாலங்களை எல்லாம் சீரமைப்பதற்காக, புதியதாக கட்டுவதற்காக, உலக வங்கியோடு தொடர்பு கொண்டு, வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழே ஏறத்தாழ 20 கோடி ரூபாய் பெற்றுத் தந்தவர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய சீரிய முயற்சியின் காரணமாக உடனடியாக மதிப்பீடுகள் எல்லாம் தயாரிக்கப்பட்டு இப்போது தேசிய நெடுஞ்சாலை என்.எச்.45 என்று சொல்லப்படுகிற அந்தப் பிரிவின் தலைமைப் பொறியாளர் அவர்கள் இதற்கான மதிப்பீடுகள் தயாரிப்பதிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அந்தப் பணிகளுக்கான மதிப்பீடுகளுக்கு உலக வங்கியின் ஒப்புதல் பெற வேண்டும். ஏனென்று சொன்னால், அவர்கள் நிதி தருகின்றபோது அவர்களுடைய விதிமுறைகளின்படிதான் நாம் ஒப்பந்தங்கள் கோர வேண்டும். ஆகவே, அவர்களுடைய ஒப்புதல் பெறுவதற்காக அனுப்பப்பட்டிருக்கிறது. ஒப்புதல் பெறப்பட்டவுடன் உடனடியாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு இந்தப் பணி துவங்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) சிவகாசி, லவ்லி கெமிக்கல்ஸ் நிறுவனப் புகையினால் சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திரு. ஜெ. பாலகங்காதரன், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஜெ. பாலகங்காதரன்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகாசி நகராட்சி எல்லைக்குட்பட்ட வேலாயுதம் சாலையிலுள்ள லவ்லி கெமிக்கல்ஸ் எனும் சிறுதொழில் நிறுவனத்திலிருந்து வெளியேறும் புகையினால் சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படுவது குறித்த" அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவையின்முன் வைக்கப்பட்டுள்ளது.

காமராஜர் மாவட்டம், சாத்தூர் தாலுக்கா, சிவகாசி நகரம் வேலாயுதம் சாலையிலுள்ள சர்வே எண்.53/1 மற்றும் 37/1 மற்றும் 2-ல் அமைந்துள்ள திருவாளர்கள் லவ்லி கெமிக்கல்ஸ் எனும் சிறு தொழில் நிறுவனமானது கடந்த 1979 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. இந்தப் பகுதி தொழிற்சாலைப் பகுதியாக உள்ளாட்சியால் அறிவிக்கப்பட்டுள்ளது. இத் தொழிற்சாலையானது சுண்ணாம்புக்கல் மற்றும் மரக்கரியை மூலப் பொருளாகக் கொண்டு மாதம் ஒன்றுக்கு 225 டன் சுண்ணாம்புத்தூள் (cem powder) தயாரித்து வருகிறது.

இத்தொழிற்சாலையிலிருந்து நாளொன்றுக்கு 0.3 கி.லி..வடிகால் கழிவு நீர் வெளியேற்றப்படுகின்றது. எவ்விதமான தொழிற்சாலைக் கழிவு நீரும் வெளியேறுவதில்லை. வடிகால் கழிவு நீரானது நச்சுத் தடைத் தொட்டி மூலமாக சுத்திகரிக்கப்பட்டு பரவும் குழிகளில் (Dispersion trench) வெளியேற்றப்படுகிறது. இத்தொழிற்சாலையில் வெளிவரும் வாயுக் கழிவுகளில் குறிப்பாக காற்றில் மிதக்கும் துகள்கள் அதிகமாகக் கொண்டுள்ளது. காற்று மாசினைக் கட்டுப்படுத்த உடைப்பானின் மேலே ஆஸ்பெஸ்டாஸ் கூரை போடப்பட்டுள்ளது. சலிப்பானிலிருந்து வெளிவரும் துகள்களைக் கட்டுப்படுத்த தகரம் கொண்டு மூடப்பட்டுள்ளது. சூளைகள் அமைந்துள்ள பகுதி முழுவதும் ஆஸ்பெஸ்டாஸ் கூரை கொண்டு மறைக்கப்பட்டுள்ளது.

சூளைகளிலிருந்து வாயுக் கழிவுகள் வெளியேற 9.15 மீட்டர் உயரமுள்ள பொதுவான புகைபோக்கி ஒன்று முதல் இரண்டு சூளைகளுக்கும், 8 மீட்டர் உயரமுள்ள மற்றுமொரு பொதுவான புகை போக்கி மீதமுள்ள இரண்டு சூளைகளுக்கும் பொருத்தப்பட்டுள்ளது. துகள்களாக்கும் பிரிவிலிருந்து வெளியேறும் தூசியினைக் கட்டுப்படுத்துவதற்காக சுழற்பிரிப்பான் (cyclone seperator) மற்றும் பை வடிப்பான் (Bag filter) ஆகியன பொருத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் சுற்றுப்புறக் காற்றின் தர நிர்ணயம் செய்வதற்காக 22-3-90 அன்று வாரியத்தால் ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வறிக்கையின்படி காற்றில் மிதக்கும் துகள் (SPM), சல்ஃபர்-டை-ஆக்ஸைடு (SO_2) ஆக்ஸைட்ஸ் ஆஃப் நைட்ரஜன் (NO_x) மற்றும் கார்பன்மோனாக்ஸைடு (CO) ஆகியவற்றின் அளவீடுகள் வாரியம் நிர்ணயித்துள்ள தொழிற்சாலைப் பகுதிக்கான அளவீடுகளுக்குட்பட்டு இருந்தது அறியப்பட்டது. வாரியத்தின் இசைவு ஆணை நீர் மற்றும் காற்று சட்டங்களின் கீழ் 31-3-94 வரை புதுப்பிக்கப்பட்டுள்ளது.

[திரு. ம. சின்னசாமி]

திருவாளர்கள் 'லவ்லி கெமிக்கல்ஸ்' தொழிற்சாலையில் இருந்து வெளிவரும் புகையால் சுற்றுச் சூழல் மாசுபடுகிறது என்று ஒரு வார இதழில் ஏப்ரல் '94-ல் பிரசுரிக்கப்பட்டிருந்தது. மேற்படி புகாரினைத் தொடர்ந்து சூளை மற்றும் உடைப்பானில் மிதக்கும் மின் துகள்களைக் கட்டுப்படுத்துவதற்காக, கூடுதல் காற்று மாசு கட்டுப்பாடு சாதனங்களைப் பொருத்துமாறு வாரியம் தொழிற்சாலையை அறிவுறுத்தியது. வாரிய அறிவுரையின்படி, தொழிற்சாலையானது வாயுக் கழிவுகளை வெளியேற்றப் பொருத்தப்பட்டுள்ள பொது புகைபோக்கிகளுடன் கூடுதலாக ஸ்கிரப்பர் சிஸ்டம் (scrubber) அமைத்துள்ளது.

தொழிற்சாலை அருகில் குடியிருப்பவரிடம் விசாரித்தபோது தற்பொழுது சூளையிலிருந்து வரும் தூசிக் கழிவு குறைந்துள்ளதாக அறியப்பட்டது. தொழிற்சாலையிலிருந்து 150 மீட்டர் தூரத்தில் வசிப்பவர்களிடம் விசாரித்தபோது மேற்கண்ட தொழிற்சாலை இயங்குவதால் பாதிப்பு ஏதும் இல்லை என அறியப்பட்டது.

இந்திய அரசு நிர்ணயித்துள்ள வரைமுறைப்படி சிவப்பு பட்டியலில் வரக்கூடிய சிறு தொழிற்சாலைகள் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை ஆய்வு செய்யப்பட வேண்டும். ஆனால் இந்தத் தொழிற்சாலையைப் பொறுத்தமட்டில் 1994-ம் ஆண்டில் ஏழு முறைகளும் 1995-ல் 8-3-95 மற்றும் 24-3-95 ஆகிய தினங்களில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

மேலும் 28-3-95 மற்றும் 29-3-95 அன்று சுற்றுப்புறக் காற்றின் தர நிர்ணயம் செய்வதற்காக மீண்டும் ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வறிக்கையின்படி மாசின் அளவு கீழ்க்கண்டவாறு வாரியம் நிர்ணயித்துள்ள அளவீடுகளுக்குட்பட்டு இருந்தது அறியப்பட்டது.

எண். (1)	அளவீடுகள். (2)	அறிக்கையின்படி கண்டறியப்பட்ட ஆய்வு மைக்ரோ கிராம் மீட்டர் கியூப். (3)	வாரியம் நிர்ணயித்துள்ள அளவு மைக்ரோ கிராம் மீட்டர் கியூப். (4)
1.	காற்றில் மிதக்கும் துகள்கள் (SPM)	84.44 - 153	500
2.	சல்ஃபர்-டை-ஆக்ஸைடு (SO_2)	Below detectable limit	120
3.	கார்பன் மோனாக்ஸைடு (CO)	Below detectable limit	5000
4.	ஆக்ஸைட்ஸ் ஆஃப் நைட்ரஜன் (NO_x)	4.7 - 7.1	120

1995 ஏப்ரல் 6] [திரு. ம. சின்னசாமி]

சூளைகளுடன் இணைக்கப்பட்டுள்ள புகைபோக்கிகளின் உயரத்தை 15 மீட்டர் அளவிற்கு உயர்த்துமாறும் மற்றும் வாரியம் நிர்ணயித்துள்ள சுற்றுப்புறக் காற்றின் தன்மை/வெளியேற்றும் தரங்களுக்குட்படும் வண்ணம் இருப்பதற்காக தொழிற்சாலையானது காற்று மாசுக் கட்டுப்பாடு சாதனங்களை மேம்படுத்தி சிறப்பாகவும், தொடர்ந்தும், செயல்படுத்தி பராமரிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், சிவகாசி நகராட்சி எல்லைக்குட்பட்ட, வேலாயுதம் சாலையிலுள்ள 'லவ்லி செம்' தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் புகையினால், சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படுகிறது எனக் கூற இயலாது.

பிற்பகல் 11.10

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே தொழில்களை நவீனப்படுத்த வேண்டும், தமிழகத்தை தொழிலிலே இந்தியாவிலே முதல் மாநிலமாகக் கொண்டு வரவேண்டும் என்று பாடுபட்டுக் கொண்டிருக்கிற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசின் கீழ் இன்றையதினம் நாம் தொழில் துறையில் முன்னேற வேண்டும், அதே நேரத்தில் பொதுமக்களுக்கு எந்த பாதிப்பும் வரக்கூடாது என்று ஒரு நல்ல நோக்கத்தில்தான் இந்த வினாவை எழுப்பினேன்.

இங்கே விவர அறிக்கையிலே இருப்பதைப் போல் அந்த பேக்டரியிலே சூளையிலிருந்து வெளிவரும் புகையை "சைக்ளின் செப்பரேட்டர்" Back filter வாயுக் கழிவுகளை வெளியேற்றி Serusser System ஆகிய சிஸ்டங்களை எல்லாம் அவர்கள் வைத்து இருக்கின்றார்கள். இருந்த போதிலும் அவர்கள் இதை உபயோகப்படுத்துவதில்லை ஏனென்று சொன்னால் மின்சார செலவு அதிகமாக ஆகிவிடும் என்ற காரணத்தினால் இதை உபயோகப்படுத்துவதில்லை. அதிகாரிகள் செல்லும்போது மட்டும், அதிகாரிகள் சோதனைக்குச் செல்லும்போது மட்டும் இவற்றை உபயோகப்படுத்துகிறார்கள். இதனால் in the early morning hours, due to atmospheric pressure, the fumes will come down. There is a chance of death due to carbon-monoxide leakage. இதன்படி சென்ற ஆண்டு அங்கே அந்த பேக்டரிக்கு அருகிலே வேலை பார்த்துக் கொண்டிருந்த ஒரு வாட்ச் மேன் இறந்து இருக்கிறார். இங்கே வார பத்திரிகையிலே எல்லாம் அதை பிரசுரித்து இருக்கிறார்கள் என்று கூறப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வாரப் பத்திரிகை செய்திகள் எல்லாம் இங்கே வேண்டாம்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் தினப் பத்திரிகையிலும் அது கூறப்பட்டிருக்கிறது என்பதைக் கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த புகையை கட்டுப்படுத்துவதற்கு நிரந்தர தீர்வு ஏற்படச் செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசியிலே இயங்கி வருகிற "லவ்லி கெமிக்கல்ஸ்" தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் புகையால் சுற்றுப்புறச் சூழல் மாசுபடுகிறது என்று ஒரு வார இதழில் ஏப்ரல் 94-ல் ஒரு செய்தியை வெளியிட்டு இருந்தார்கள். அந்த புகார்களைத் தொடர்ந்து வாரியத்தினுடைய அதிகாரிகள் அங்கே போய் அதை பரிசோதனை செய்தார்கள். சிவப்பு பட்டியலிலே வரக்கூடிய சிறிய தொழிற்சாலைகளை ஆறு மாதங்களில் ஒரு முறைதான் ஆய்வு செய்யவேண்டும் என்று வாரியத்தினுடைய விதி உள்ளது. இருந்தாலும் இந்த தொழிற்சாலையைப் பொறுத்தவரையில் ஏழு முறைகள் ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. ஆய்வு செய்ததில் வாரியம் என்ன தரத்தை நிர்ணயித்துள்ளதோ அதற்குள்ளேதான் அந்தக் கழிவுகளெல்லாம் இருக்கிறதென்று கண்டுபிடிக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல் இந்த தொழிற்சாலையிலிருந்து வெளிவருகின்ற வாயுவின் காரணமாக, புகையின் காரணமாக வாட்ச் மேன் ஒருவர் இறந்து போய் இருக்கின்றார் என்று சொல்லி இருக்கிறார். அதைப் பற்றி ஒன்றும் தகவல் இல்லை. இருந்தாலும், உறுப்பினருடைய ஆதங்கத்திற்கு இணங்கி மீண்டும் அதை பரிசோதனை செய்து வாரியம் எந்த அளவு நிர்ணயித்ததோ அந்த அளவிற்குள்தான் அவர்கள் வைத்து இருக்கவேண்டும் என்ற உத்தரவினை மீண்டும் வாரியம் பிறப்பிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இருந்த போதிலும் புகையை வெளிப்படுத்துகின்ற அந்த யூனிட், சூளை மற்றும் அந்த வாயு வருகின்ற யூனிட்டை மட்டும் why don't we advise the factory owner to put it in some other remote place, far away from the Sivakasi Municipal limits என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தொழிற்சாலை அமைந்துள்ள பகுதி தொழிலை தொடங்குகிற தொழிற்சாலைப் பகுதி என்று உள்ளாட்சியாலே அங்கே அறிவிக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, தொழிற்சாலையை ஒரு இடத்திலே

வைத்துக்கொண்டு புகை போக்கியை இன்னொரு இடத்திலே வைப்பதற்கு சாத்தியக்கூறு இல்லை, வைக்க முடியாது. இப்போது உள்ள புகைபோக்கிகள் 8 மீட்டர், 9 மீட்டர் உயரம் இருக்கிறது. அதனை 15 மீட்டர் அளவுக்கு உயர்த்தவேண்டும் என்று அந்த தொழிற்சாலைக்கு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் அறிவுறுத்தியுள்ளது. அது மட்டுமல்லாமல் மேலும் மாசுக் கட்டுப்பாடு சாதனங்களை மேம்படுத்தி சிறப்பாக செயல்படுத்த வேண்டும் என்றும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் அந்தத் தொழிற்சாலைக்கு அறிவுறுத்தியுள்ளது. இதனை அந்தத் தொழிற்சாலை செய்கின்றபோது மேலும் பாதிப்பு உண்டானால் அதன் பிறகு வாரியம் உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. அறிக்கைகள் அளித்தல்.

பொதுக் கணக்குக்குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கே. செல்வராஜ், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் சார்பாக இக்குழுவின் 165-வது, 166-வது ஆகிய இரண்டு அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

முற்பகல் 11.15

4. மானியக் கோரிக்கைகள், 1995-96, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 2 - மாநில ஆயத்தீர்வைத் துறை

(ஆ) கோரிக்கை எண் 15 - காவல் துறை

(இ) கோரிக்கை எண் 16 - தீயணைப்புப் பணிகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1995-96 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும் தொடர்ச்சி. மானியக் கோரிக்கை எண் 2 - மாநில ஆயத்தீர்வைத் துறை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

வைத்துக்கொண்டு புகை போக்கியை இன்னொரு இடத்திலே வைப்பதற்கு சாத்தியக்கூறு இல்லை, வைக்க முடியாது. இப்போது உள்ள புகைபோக்கிகள் 8 மீட்டர், 9 மீட்டர் உயரம் இருக்கிறது. அதனை 15 மீட்டர் அளவுக்கு உயர்த்தவேண்டும் என்று அந்த தொழிற்சாலைக்கு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் அறிவுறுத்தியுள்ளது. அது மட்டுமல்லாமல் மேலும் மாசுக் கட்டுப்பாடு சாதனங்களை மேம்படுத்தி சிறப்பாக செயல்படுத்த வேண்டும் என்றும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் அந்தத் தொழிற்சாலைக்கு அறிவுறுத்தியுள்ளது. இதனை அந்தத் தொழிற்சாலை செய்கின்றபோது மேலும் பாதிப்பு உண்டானால் அதன் பிறகு வாரியம் உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. அறிக்கைகள் அளித்தல்.

பொதுக் கணக்குக்குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கே. செல்வராஜ், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் சார்பாக இக்குழுவின் 165-வது, 166-வது ஆகிய இரண்டு அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

முற்பகல் 11.15

4. மானியக் கோரிக்கைகள், 1995-96, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 2 - மாநில ஆயத்தீர்வைத் துறை

(ஆ) கோரிக்கை எண் 15 - காவல் துறை

(இ) கோரிக்கை எண் 16 - தீயணைப்புப் பணிகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1995-96 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும் தொடர்ச்சி. மானியக் கோரிக்கை எண் 2 - மாநில ஆயத்தீர்வைத் துறை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

வைத்துக்கொண்டு புகை போக்கியை இன்னொரு இடத்திலே வைப்பதற்கு சாத்தியக்கூறு இல்லை, வைக்க முடியாது. இப்போது உள்ள புகைபோக்கிகள் 8 மீட்டர், 9 மீட்டர் உயரம் இருக்கிறது. அதனை 15 மீட்டர் அளவுக்கு உயர்த்தவேண்டும் என்று அந்த தொழிற்சாலைக்கு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் அறிவுறுத்தியுள்ளது. அது மட்டுமல்லாமல் மேலும் மாசுக் கட்டுப்பாடு சாதனங்களை மேம்படுத்தி சிறப்பாக செயல்படுத்த வேண்டும் என்றும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் அந்தத் தொழிற்சாலைக்கு அறிவுறுத்தியுள்ளது. இதனை அந்தத் தொழிற்சாலை செய்கின்றபோது மேலும் பாதிப்பு உண்டானால் அதன் பிறகு வாரியம் உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. அறிக்கைகள் அளித்தல்.

பொதுக் கணக்குக்குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கே. செல்வராஜ், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் சார்பாக இக்குழுவின் 165-வது, 166-வது ஆகிய இரண்டு அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

முற்பகல் 11.15

4. மானியக் கோரிக்கைகள், 1995-96, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 2 - மாநில ஆயத்தீர்வைத் துறை

(ஆ) கோரிக்கை எண் 15 - காவல் துறை

(இ) கோரிக்கை எண் 16 - தீயணைப்புப் பணிகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1995-96 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும் தொடர்ச்சி. மானியக் கோரிக்கை எண் 2 - மாநில ஆயத்தீர்வைத் துறை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மாநில ஆயத் தீர்வைத் துறை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 8,12,53,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண். 1007, திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மதுவிலக்குக் கொள்கையை அமல்படுத்த மத்திய அரசு மானியம் தர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மாநில ஆயத் தீர்வைத் துறை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 8,12,53,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 1168, திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழகத்தில் பூரண மதுவிலக்கு ஏற்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க மாவட்டந்தோறும் சர்வ கட்சிக்குழு அமைக்கும் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மாநில ஆயத் தீர்வைத் துறை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 8,12,53,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 15 - காவல் துறை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 420,04,36,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 477, திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கோவை மாநகர் உக்கடம், ரத்தினபுரி கணபதி பகுதிகளில் புதிய காவல் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

``காவல்துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 420,04,36,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 1170, திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நாகை காயிதே மில்லத் மாவட்டம், முத்துப்பேட்டையில் தொடர்ந்து இனக் கலவரங்கள் நடைபெற்று வருவதால் மாவட்ட காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் ஒருவரை நியமித்து இனக் கலவரத்துக்குக் காரணமானவர்களைக் கண்டுபிடித்து அவர்கள்மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

``காவல்துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 420,04,36,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 1214, திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவாரூர் வட்டம் வைப்பூரும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள பொதுமக்கள் காவல் துறையை நாடி நீண்ட தூரம் உள்ள திருவாரூர் காவல் நிலையத்திற்கும் நாகூர் காவல் நிலையத்திற்கும் செல்ல வேண்டியுள்ளது. இந்நிலையை மாற்ற வைப்பூரில் புதுக் காவல் நிலையம் திறப்பது குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"காவல்துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 420,04,36,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 16, தீயணைப்புப் பணிகள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

``தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 28,01,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 938, திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பேராவூரணி தீயணைப்பு நிலையத்திற்குப் போதுமான கட்டிட வசதி இல்லாததால் புதிய கட்டிடம் கட்ட வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 28,01,00,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 1165, திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நாகை காயிதே மில்லத் மாவட்டம் முத்துப்பேட்டையில் இனக் கலவரத்தினால் அடிக்கடி தீ விபத்து ஏற்படுவதால் சிறு வியாபாரிகள் கடைகள் தீயினால் பாதிக்கப்பட்டு பல லட்ச ரூபாய் நஷ்டம் ஏற்படுவதைத் தடுக்க உடனடியாக தீயணைப்பு நிலையம் அமைப்பது குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 28,01,00,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 1179, திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவாரூர் வட்டம், கீவளூர் நகரத்தைச் சுற்றி கிராமங்கள் அமைந்துள்ளதால் அப்பகுதிகளில் தீ விபத்து ஏற்படும்போது நீண்ட தூரம் உள்ள நாகையில் இருந்தோ திருவாரூரில் இருந்தோ தீயணைப்புப் பணிக்கு வரவேண்டியுள்ளதைத் தவிர்க்க கீவளூர் நகரத்தில் தீயணைப்பு நிலையம் திறப்பது குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 28,01,00,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய முன்னுரையாக ஏதேனும் கூற விரும்பின் கூறக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கைகளான மாநில ஆயத் தீர்வைத்துறை, காவல்துறை மற்றும் தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்புகளின் கீழ் கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு இந்தப் பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @நான் இந்த அவையில் ஆற்றிய உரையாகக் கருதி அவற்றை அவைக்குறிப்பில் பதிவு செய்யவேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கொள்கை விளக்கக் குறிப்புகளின் மீது தங்களுடைய மேலான கருத்துக்களையும், ஆலோசனைகளையும் மாண்புமிகு உறுப்பினர்கள் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மானியக் கோரிக்கைகள் மீதான விவாதங்களில் மாண்புமிகு உறுப்பினர்கள் முன்வைக்கும் கருத்துக்களைக் கேட்டறிந்த பின்பு இறுதியில் என்னுடைய பதிலுரைகளையும், இந்தத் துறைகளின் வளர்ச்சிக்காக எங்கள் அரசின் புதிய அறிவிப்புகளையும் தெரிவிக்கிறேன் என்பதையும் எடுத்துரைத்து அமைகிறேன்.

முற்பகல் 11.20

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் தொடங்குகிறது. ஏற்கெனவே அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவிற்கிணங்க இன்றும் நாளையும் இந்த விவாதம் நடைபெறும். நாளை பிராதன எதிர்க்கட்சியின் சார்பில் பேசுகிற உறுப்பினர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பதிலுரையும் வைத்துக் கொள்வதற்கான அவகாசம் போதுமானதாக இருக்கும். எனவே முன்வரிசையிலே இருக்கின்ற தலைவர்களெல்லாம் இன்றைக்கே பேசி முடிக்க வேண்டுமென்று நான் அன்றைக்கே சொல்லியிருக்கிறேன். இன்றைக்கும் அதே கருத்தைச் சொல்லிக்கொள்கிறேன். எனவே முன் வரிசையிலே இருக்கிற தலைவர்கள்

@ 133 முதல் 306 வரையிலான பக்கங்களில் இணைப்பு 1, 2 மற்றும் 3 ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இன்றைக்குப் பேசிவிடுவது நல்லது. (குறுக்கீடு) இல்லையென்றால், ஏற்கெனவே நாம் எடுத்த முடிவின்படி, அந்தத் திட்டத்தின்படி, நாம் மானியக் கோரிக்கைகளின்மீது விவாதம் வைத்துக் கொண்டிருக்க முடியாது. திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாநில ஆயத்தீர்வை, காவல்துறை, தீயணைப்புத்துறை மானியக் கோரிக்கையின்மீது காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு எனக்கு வாய்ப்பளித்த தங்களுக்கும் இந்தப் பேரவைக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். எத்தனை சோதனை வந்து நின்றாலும் வெற்றி நம் புரட்சித் தலைவி பக்கம் (மேசையைத் தட்டும் ஒலி) எத்தனை சோதனை வந்து நின்றாலும், வெற்றி நம் புரட்சித் தலைவி பக்கம் என்பதை அவரின் பெயரே ஜே. ஜே. (மேசையைத் தட்டும் ஒலி) அனைவருக்கும் உணர்த்தும். வாழிய முதல்வர் வெற்றியால் உயர்ந்து, வாழிய முதல்வர் வெற்றியால் உயர்ந்து. புரட்சி தலைவி இந்த மண்ணுக்குக் காவல் தெய்வம் என்பதை எவரும் மறுக்கமாட்டார், மறக்கமாட்டார் (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சி தலைவி இந்த மண்ணுக்குக் காவல் தெய்வம் என்பதை எவரும் மறுக்கமாட்டார், மறக்கமாட்டார். மறுப்பவர்கூட மனமகிழ்வோடு இருக்கமாட்டார் இந்த பூமியிலே. (மேசையைத் தட்டும் ஒலி) மறுப்பவர்கூட மனமகிழ்வோடு இருக்கமாட்டார் இந்த பூமியிலே. தமிழகத்தின் தாயும் நீயே, தமிழும் நீயே (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் தாயும் நீயே, தமிழும் நீயே. மனக்கோட்டை கட்டும் கோட்டான்களுக்கு சாட்டையும் நீயே (மேசையைத் தட்டும் ஒலி) மனக்கோட்டை கட்டும் கோட்டான்களுக்கு சாட்டையும் நீயே. டெல்லி செங்கோட்டையும் நீயே (மேசையைத் தட்டும் ஒலி) டெல்லி செங்கோட்டையும் நீயே. புனித ஜார்ஜ் கோட்டையும் நீயே (மேசையைத் தட்டும் ஒலி) புனித ஜார்ஜ் கோட்டையும் நீயே. சரித்திரம் படைக்கும் புதுக் கோட்டையும் நீயே (மேசையைத் தட்டும் ஒலி) சரித்திரம் படைக்கும் புதுக் கோட்டையும் நீயே. தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி வாழிய பல்லாண்டு வாழியவே என்று வாழ்த்தி என்னுடைய பேச்சைத் தொடங்குகிறேன். தமிழகத்தில் நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சி தலைவி ஆட்சிக்கு வந்த பிறகுதான் எங்களுடைய அருமைத் தலைவர் ராஜிவ்காந்தி அவர்களை படுகொலை செய்த விடுதலைப் புலிகள் மீது அன்றைக்கு துரிதமாக நடவடிக்கை எடுத்து விடுதலைப் புலிகள் தமிழகத்திலே எந்த மூலை முடுக்கிலும் இல்லாத அளவிற்கு செய்த பெருமை நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) அன்றிலிருந்து

இன்றுவரை, என்றும் சரி, நம்முடைய முதல்வர் டாக்டர் புரட்சி தலைவி அவர்கள் விடுதலைப் புலிகளை ஒடுக்குவதிலே கண்ணும் கருத்துமாக இருக்கின்றார்கள். அவர் பெண் என்றுகூட பார்க்காமல், அவரின் பெயர் Hit list-லே இருக்கிறது என்றுகூட பார்க்காமல் துணிவோடும் துணிச்சலோடும் சமூகநீதி காத்த வீராங்கனையாக சிங்கத் தமிழச்சியாக (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய முதல்வர் டாக்டர் புரட்சி தலைவி அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் சிலர் அந்த விடுதலைப் புலிகளுக்கு சாதகமாக இருக்கின்றவர்கள் அந்த விடுதலைப் புலிகள் மூலம் ராஜீவ் காந்தியை கொன்ற சிவா வாழ்க என்று கோஷம் போடுகின்ற தலைவரோடு ஒருவர் உறவு வைத்துக்கொள்கிறார். அடித்தளம் வகுத்த விடுதலைப் புலிகளுக்கு வழி வகுத்த தலைவரோடு ஒருவர் உறவு வைத்துக் கொண்டிருக்கிறார். இன்னொரு தலைவர் விடுதலைப் புலிகளின் கைப்பாவையாக இங்கே தமிழகத்திலே சுற்றிக் கொண்டிருக்கிற அவரோடு உறவு வைத்துக் கொண்டிருக்கிறார்.

முற்பகல் 11.25

இப்படி எங்கெங்கோ போய்க்கொண்டிருக்கிறார்கள் எங்களுடைய தலைவர்கள். ஆனால் நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சி தலைவி அவர்கள் எப்படியேனும் ராஜிவ் காந்தியினுடைய படுகொலைக்கு காரணமானவர்களை பழிவாங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மிகத் தீவிரமாக, தைரியமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக எங்களுடைய காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக நம்முடைய முதல்வர் டாக்டர் புரட்சி தலைவி அவர்களுக்கு மனமார்ந்த நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். விடுதலைப் புலிகளைப் பற்றி சொல்ல வேண்டுமென்று சொன்னால், கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே நான் அதுபற்றி அதிகம் பேசியிருக்கிறேன். பத்மநாபா படுகொலை சென்னையிலே நடந்தது. அன்று சென்னையிலே அன்றைய முதலமைச்சர் இருந்தார், சென்னையிலே டி.ஜி.பி. போன்ற போலீஸ் அதிகாரிகள் இருந்தார்கள். பத்மநாபா கொலை செய்யப்படுகிறார். கொலையை செய்தவர்கள் நடமாடிக்கொண்டு, காரிலே சென்று, தாராளமாக நடமாடிக்கொண்டு எங்களுடைய தொகுதியிலே மல்லிப்பட்டினம் பக்கத்திலே சின்னமடை பகுதியிலே சுப்பையா பிள்ளை தோப்பிலே சூப்பு சாப்பிட்டுவிட்டு சிலோனுக்குச் செல்லுகிறார்கள். அந்த அளவுக்கு தாராளமாக அவர்கள் அன்று நடமாடினார்கள். அந்த நடமாட்டத்தின் அடிப்படையில்தான் எங்களுடைய தலைவர் ராஜீவ்காந்தி அவர்கள் கொல்லப்பட்டார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. அப்படிப்பட்ட தலைவர்களோடு, சில துரோகிகள், தொடர்பை வைத்துக் கொண்டிருப்பதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

காவல் துறையிலே சொல்ல வேண்டுமென்று சொன்னால், நிறைய சொல்லலாம், சொல்லிக்கொண்டே போகலாம். நேரம் குறைவாக இருக்கிறது, பேரவைத் தலைவர் நேரம் குறித்து முன்பே தெரிவித்திருக்கிறார். எனவே ஒரு சிலவற்றை மட்டும் கூறி என்னுடைய உரையை முடிக்க எண்ணுகிறேன். அன்று நெடுஞ்சாலை கொள்ளை நடந்தது. ஆனால் இன்று நெடுஞ்சாலை கொள்ளைகள் நடக்கின்றனவா? எங்காவது நடக்கிறதா? இல்லை. நம்முடைய முதல்வர், தானைத் தலைவி, தங்கத் தலைவி, புரட்சி தலைவி அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து (மேசையைத் தட்டும் ஒலி) நெடுஞ்சாலை கொள்ளைகள் இல்லாத அளவுக்கு காவல் துறையை இயக்கி நடவடிக்கை எடுத்தார்கள். அதுமட்டுமா, சந்தனமர கடத்தல்காரன் வீரப்பனைப்பற்றி சொல்ல வேண்டுமென்றால், இன்று வீரப்பன் மட்டும்தான் இருக்கிறான். மற்றபடி அவனுக்கு பாதுகாப்பாக இருந்த சகோதரர்களும், பாதுகாப்பாக இருந்த பாதுகாவலர்களும், அவனுக்குத் துணையாக இருந்தவர்களும் இப்போது அவனோடு இல்லை. தான் என்ன செய்வது, தற்கொலை செய்து கொள்வதா, சரண்டர் ஆவதா என்று அவன் இன்று இருக்கிறான். அவனுடைய கூட்டாளிகள் சிலர் சொல்லுகிறார்களாம், நாங்கள் சரண்டர் அடைவோம், ஆனால் சரண்டர் அடைந்தால் எங்களை சுட்டுவிடுவார்கள், ஆகவே சரண்டர் ஆவதற்கு எங்களுக்கு பயமாக இருக்கிறது என்று சொன்னார்களாம். இதுபற்றி மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, போலீஸ் ரெக்ரூட்மெண்ட் போர்ட். இந்தக் காலத்திலேதான், போலீஸ் ரெக்ரூட்மெண்ட் போர்ட் என்று அமைத்து போலீசை முறையாக, மெரிட்டாக செலக்ஷன் செய்வது புரட்சி தலைவி, தானைத் தலைவி, நம்முடைய புரட்சி தலைவி தான். (மேசையைத் தட்டும் ஒலி). வெளியிலே சொல்லுகிறார்கள், போலீசுக்கு ஒரு லட்சமாம், சப்-இன்ஸ்பெக்டருக்கு இரண்டு இலட்சமாம். இப்படியெல்லாம் மனம் வந்தபடி பேசிக்கொண்டிருக்கிறார்கள். என்னுடைய ஊருக்குப் பக்கத்திலே நான் போலீஸ் செலக்ஷனுக்கு சிபாரிசு செய்யாத 3 நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு என்னிடத்திலே வந்தார்கள். எப்படியப்பா உங்களுக்குக் கிடைத்தது என்று கேட்டேன். நம்முடைய புரட்சித் தலைவி ஆட்சியிலே மெரிட்டிலே கிடைத்தது என்று சொன்னார்கள். பலபேர் பலமாதிரி சொல்லுகிறார்களே, என்னிடத்திலேகூட நீங்கள் எதுவும் சொல்லவில்லையே எப்படி கிடைத்தது என்று கேட்டேன். அப்படியெல்லாம் இல்லை, முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி மெரிட்டின்படி தேர்ந்தெடுத்தார்கள். அந்த மெரிட்டிலே தேர்ந்தெடுக்கப்பட்டு போலீசாக வந்திருக்கிறோம் என்று சொன்னார்கள் (மேசையைத் தட்டும் ஒலி). நல்ல உயரம், எடை, நல்ல

திடகாத்திரமான உடல், ஆகியவை கொண்ட அந்த நபர்கள் போலீசுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு இன்று பயிற்சியிலே அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். சப்-இன்ஸ்பெக்டருக்கு இரண்டு லட்சம், மூன்று லட்சம் என்று தவறான பிரச்சாரத்தை செய்து கொண்டிருந்தார்கள். ஆனால் இன்று மெரிட்டிலே எடுக்கிறார்கள். எனக்குத் தெரியும், என்னுடைய ஊரிலே 20 நபர்கள் இன்டர்வியூவுக்குப் போனார்கள். அதிலே 12 நபர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள். இன்னும் உத்தரவு வரவில்லை. ஆனால் அவர்கள் அத்தனைபேரும் மிகச் சீரான முறையில், பார்ப்பதற்கு மிக ஸ்மார்ட்டான முறையில் சப்-இன்ஸ்பெக்டர் வேலைக்கு தகுதியுடையவர்களாக இருக்கக்கூடிய அளவுக்கு புரட்சி தலைவியின் கற்பனையில் உதித்த வடிவமாக அவர்கள் இருக்கிறார்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதல்ல. பிரிலிமினரியிலே தேர்வு பெற்றிருக்கிறார்கள் என்பதுதான்.

திரு. ஆர். சிங்காரம் : ஆர்டர் வரவில்லை என்று சொன்னேனே!

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிரிலிமினரியில் தேர்வு பெற்றிருக்கிறார்கள் என்று சொல்லுங்கள்.

திரு. ஆர். சிங்காரம் : பிரிலிமினரியிலே செலக்ட்டாகி வந்திருக்கிறார்கள். ஆனால் தவறான பிரச்சாரத்தை இந்த அரசின் மீது எடுத்துச்சொல்லி, இந்த அரசை எப்படியாவது வீழ்த்த வேண்டுமென்று கண்ணும் கருத்துமாக இருக்கிறார்களே தவிர, உண்மையை சொல்வதற்கு அவர்களுக்கு மனம் வரவில்லை. சர்வீஸ் கமிஷனை எடுத்துக்கொண்டால், மிகத் தெளிவாக மெரிட் பார்த்து தேர்வு செய்கிறார்கள். என்னுடைய பக்கத்து வீட்டிலே சாதாரண முத்தரையர் சமுதாயத்தைச் சார்ந்த ஒரு பெண் செலக்ட்டாகி வேலை வந்திருக்கிறது. தஞ்சை மாவட்டத்திற்கு அலாட்டாகி இருக்கிறார். அந்தப் பெண் என்னிடத்திலே வந்து, எனக்கு வேலை கிடைத்திருக்கிறது, என்னை பேராவூரணி ஒன்றியத்திலோ அல்லது சேதுபாவாசத்திரம் ஒன்றியத்திலோ அமர்த்த ஆவன செய்யுங்கள் என்று கேட்டார். எப்படியம்மா உனக்கு செலக்ஷன் ஆனது என்று கேட்டேன். பரிட்சை எழுதச் சொன்னார்கள், எழுதினேன், இன்டர்வியூ வந்தது, இன்டர்வியூவிலே செலக்ஷன் ஆனேன், வேலை வந்தது என்று சொன்னார். யாராவது சிபாரிசு செய்தார்களா, ஏதாவது செலவு செய்தாயா என்று கேட்டேன். ஒரு பைசாகூட எனக்கு செலவில்லை என்று சொன்னார்.

முற்பகல் 11.30

அதேபோல் இன்னொரு பெண். கலெக்டரிடத்தில் சொல்லி சேதுபாவாசமுத்திரம் பிளாக்கில் ஒருவரையும், பேராவூரணி பிளாக்கில் ஒருவரையும் நியமிக்கச் சொன்னேன். இந்த முதலமைச்சர் அவர்கள் எந்த அளவிற்கு மெரிட் - ஆக இருக்கின்றார்களோ, அதே போல் இந்த அரசும், இந்த அரசு ஊழியர்களும், இந்த காவல் துறையும் மெரிட்டாக இருக்க வேண்டுமென்று நினைக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). கொஞ்சங்கூட அச்சமில்லை என்பதைச் சுட்டிக்காட்டலாம். துணிச்சலோடு நடவடிக்கை எடுக்கின்ற இந்த முதலமைச்சரைத் தவிர வேறு எந்த முதலமைச்சரும் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) யாராக இருந்தாலும் சரி. சமீபத்திலே ஒரு பாராளுமன்ற உறுப்பினர் மீது நடவடிக்கை எடுத்திருக்கின்றார்கள். அந்தப் பாராளுமன்ற உறுப்பினருக்கு என்னுடைய கட்சியைச் சார்ந்த இரண்டு உறுப்பினர்கள் உடந்தையாக இருந்தார்கள். வேண்டுமானால்...... (மணி அடிக்கப் பெற்றது) நான் பேர் சொல்லவில்லை. ஆனால் நடவடிக்கை எடுக்கவில்லை. ஏன் என்ன காரணம். துணிச்சல் இல்லை. பயம். இந்த இரண்டு எம்.பிக்கள் போய்விட்டால் ஆட்சி போய் விடுமோ என்ற பயம். ஆகவே யார் என்ன பண்ணினாலும் பரவாயில்லை. நேர்மையாக ஆட்சி நடத்த வேண்டும். போலீஸ் துறையை நீதியாக, நேர்மையாக, ஒழுங்காக கொண்டு வர வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் நினைக்கின்ற காரணத்தால், அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற காரணத்தால் யார் சிபாரிசு செய்தாலும், சிபாரிசுக்கு இடம் இல்லை. 'No recommendation'. எப்போதும் மெரிட் என்கிற அடிப்படையிலே செயல்படுகின்றார்கள். அவர்களை நான் மனமாரப் பாராட்டுகின்றேன்.

இங்கே என்னுடைய பழைய நண்பர்கள் கற்பழிப்பு பற்றியெல்லாம் பேசினார்கள். பத்மினி கற்பழிப்பு, பற்றியெல்லாம் பேசினார்கள். கேட்டவுடனேயே கமிஷன் அமைத்து நடவடிக்கை எடுத்து அதற்கு உதவித் தொகை வழங்கி அந்த பத்மினியின் வாழ்க்கை வளம் பெறும் அளவில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செய்திருக்கிறார்கள். கடந்த கால ஆட்சியில் என்னுடைய தொகுதியில் சுமதி என்கிற ஒரு பெண்ணை அந்த ஆட்சியைச் சேர்ந்த அந்த கட்சியைத் சேர்ந்த நபர்களே அன்றைக்கு முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவரே கற்பழித்தார் என்று குறிப்பிட்டு, நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்று இந்த மாமன்றத்தில் அன்றைய முதலமைச்சரிடம் கேட்டபோது அன்றைய முதலமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது அந்த பெண்ணினுடைய

சம்மதத்துடன்தான் கற்பழிக்கப்பட்டாள் என்று சொன்னார்கள். அதற்கு நான் சொன்னேன். அந்த பெண்ணினுடைய சம்மதத்துடன் கற்பழித்தார்களா, அந்த பெண்ணினுடைய சம்மதம் இல்லாமல் கற்பழித்தார்களா என்பது எனக்குத் தெரியாது. அது உங்களுக்குத்தான் தெரியும். ஆகவே, அதற்கு நீங்கள்தான் பதில் சொல்ல வேண்டும் என்று சொன்னேன். அப்படி இந்தச் சட்டமன்றத்திலே விவாதம் நடந்தும் கூட அந்த பெண் பாவம் பிராமணப் பெண்ணுக்கு நீதி கிடைக்காமல் இன்று அனாதைப் பள்ளியிலே சேர்த்து விட்டு இருக்கிறோம், நடவடிக்கை எடுக்கவில்லை. எந்த ஒரு ஆக்ஸனும் இல்லை. இது நியாயமா? இதுதான் அவர்களுடைய ஆட்சியினுடைய நீதியா? நேர்மையா? ஒழுக்கமா? பண்பா? ஆனால் இன்று யார் தவறு செய்தாலும் ஆளும் கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி, யார் தவறு செய்தாலும், உடனடியாக நடவடிக்கை எடுக்கின்ற தானைத் தலைவியாக, தங்கத் தலைவியாக நம்முடைய புரட்சித் தலைவி இருக்கிறார்கள் என்கிற மகிழ்ச்சி. நானே தவறு செய்தாலும், சிங்காரம் தவறு செய்து விட்டார் என்று சொல்கின்ற துணிச்சல் யாருக்கும் வராது. எங்களுக்கு வரமுடியாது. காரணம் நாங்கள் மைனாரிட்டி. ஆகவே, நீங்கள் மெஜாரிட்டியாக இருந்தாலும் சரி, மைனாரிட்டியாக இருந்தாலும் சரி, அந்தப் பண்பு, அந்தப் பாசம், அந்தப் பிடிப்பு யாருக்கும் வராது. ஆகவேதான் துணிச்சலோடு நடவடிக்கை எடுக்கின்றார்கள்.

போலீஸுக்கான பிரமோஷன் வாய்ப்புகள் அதிகரிக்க வேண்டும். காவல் துறையைப் பொறுத்தவரையில் இங்கே ஒன்று சொன்னார்கள், தேங்க்லெஸ் ஜாப் என்று. ஆனால் இந்த போலீஸ், நீங்கள் பேசிய பிறகும் சரி, நீங்கள் ஆட்சிக்கு வந்த பிறகும் சரி, இன்று போலீஸ் முழுக்க முழுக்க மிகத் தைரியமாக செயல்படுகின்ற போலீஸாக இருக்கிறது. காரணம் எந்த போலீஸ் எங்கே இறந்தாலும் அது ஆக்ஸிடெண்டிலே இறந்தாலும், அல்லது அவர்கள் டியூட்டியிலே இறந்தாலும் அந்தக் குடும்பத்தை பாதுகாக்கின்ற புரட்சித் தலைவியாக அவர்கள் திகழ்கிறார்கள். ஆகவேதான் இந்த போலீஸார் துணிச்சலோடு சந்தனக் கடத்தல் வீரப்பனை பிடிப்பதற்குத் சென்றார்கள். பிடித்தார்கள், கொண்டு வந்தார்கள், அவனுடைய கூட்டாளிகளை. தேவையில்லாமல் இங்கே சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது என்று சொல்கிறார்கள். சட்டம் ஒழுங்கு எங்கு கெட்டுவிட்டது ? இந்தியாவிலேயே நிலையான, ஒழுங்கான சீரான சிறப்பான நிலை இருக்கின்ற இடம் தமிழ்நாடுதான். (மேசையைத் தட்டும் ஒலி) வேறு எங்குமே கிடையாது.

முற்பகல் 11.35

எங்கள் ஊரில் ஒரு எஸ். ஐ. இருக்கிறார். ஹானஸ்ட் மதி என்று பெயர். அவரிடம் யாரும் சிபாரிசுக்கு போக முடியாது. நான் சிபாரிசுக்கு போனால் நீங்கள் எம்.எல்.ஏ. போனை வைத்து விடுங்கள் என்று சொல்லி விடுவார். அவர் இன்னும் இருக்கிறார். மூன்று வருஷம் ஆகப்போகிறது. அதுபோல எல்லா ஸ்டேஷன்களிலும் எஸ்.ஐ.-க்களைப் போட்டு விட்டால் யாரும் போன் பண்ணமாட்டார்கள். கரெக்ட்டாக, சின்சியராக நடக்கும். ஆளும் கட்சி, எதிர்க்கட்சி யாருமே சிபாரிசு பண்ண வேண்டிய அவசியம் இருக்காது. அதுபோல, பல இடங்களிலேயும் தேர்ந்தெடுத்து, 'ஆனஸ்ட்' - எல்லோரும் 'ஆனஸ்ட்' தான். இருந்தாலும் ஒருசில குறைபாடுகள் நாட்டில் இருந்து கொண்டுதான் இருக்கின்றது. 'ஆனஸ்ட்' ஆக இருக்கிற எஸ்.ஐ., இன்ஸ்பெக்டர்களை எல்லாம் தேர்ந்தெடுத்து, நீங்களே கண்டுபிடித்து, அவர்களை அப்படி ஸ்டேஷன்களிலே போட்டீர்கள் என்றால் எல்லாவித தீங்குகளையும் ஒழிப்பதற்கு அவர்கள் நிச்சயமாக நடவடிக்கை எடுப்பார்கள். யாரும் தலையிடமாட்டார்கள். ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் தலையிடுவதே கிடையாது. சும்மா, தேவை இல்லாமல், எம்.எல்.ஏ.க்கள் அதைப் பண்ணுகிறார்கள். இதைப் பண்ணுகிறார்கள் என்று விவகாரம் பண்ண, பத்திரிகைகளில் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு வாரப் பத்திரிகையில் என் பையனுக்கு பி.ஆர்.ஓ. போஸ்ட் வாங்குவதற்கு "நம்முடைய முதலமைச்சருக்கு, சிங்காரம் ஜால்ரா அடிக்கிறார்" என்று போட்டு இருந்தார்கள். நான் அன்றைக்கே சொன்னேன். என் பையனுக்கு வயது என்னவோ 15 தான் ஆகிறது. எனக்கு பையன் ஒருவன்தான். வேறு பையன் கிடையாது. ஒரு சம்சாரம்தான். வேறு இதெல்லாம் கிடையாது. ஆக, ஒரு தவறான பிரச்சாரத்தை, நாட்டு மக்களுக்கு இந்த ஆட்சியின்மீது அவநம்பிக்கை ஏற்பட வேண்டும் என்று சொல்லி, இந்த ஆட்சியை வீழ்த்த வேண்டும் என்பதில்தான் கங்கனம் கட்டிக் கொண்டிருக்கிறார்களே தவிர, யார் யாரோடு சேருவது? காம்பினேஷன் சரியாக வரவேண்டாமா? காம்பினேஷனே சரியாக வராமல் குழப்பமான சூழ்நிலையில் அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்த அளவுக்கு மோசமான சூழ்நிலையிலே எப்படியாவது வீழ்த்த வேண்டும் என்பதுதான் அவர்களுடைய நோக்கம். அது நடக்காது. (மேசையைத் தட்டும் ஒலி) அது நடக்கவே நடக்காது. எனக்குத் தெரியும். அனைத்து மாவட்டங்களிலும் பெண் காவல் நிலையங்களை திறந்து வைத்திருக்கிறீர்கள். அப்படி, பெண் காவல் நிலையங்கள் அமைத்த பிறகு பெண்கள் எல்லாம் மிகத் தைரியமாக தஞ்சாவூர், புதுக்கோட்டை, மாவட்டத் தலைநகரிலே உள்ள காவல் நிலையங்களில் போய் உடனடியாகப் புகார் பண்ணுகிறார்கள். தங்களைக்

கைவிட்ட கணவன்மார்கள் குறித்து, பெண்கள் புகார் கொடுக்கிறார்கள். உடனே அங்குள்ள போலீஸ் விசாரிக்கிறார்கள். பெண்கள் நிறையப் புகார்களைக் கொண்டுபோய் கொடுக்கிறார்கள். அவர்களும் நல்லபடியாக விசாரிக்கிறார்கள். இப்போது நிறைய அளவு குற்றங்கள் குறைந்திருக்கின்றன. பெண்கள் மிகத் தைரியமாக அவர்களுடைய குறைகளைச் சொல்வதற்கு அதன்மூலம் ஒரு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. மாவட்டத் தலைநகரங்களிலே அந்த அளவு வாய்ப்பு இருக்கிறபோது, பஸ் ஏறிப்போய் சாதாரணமாகப் புகார் சொல்லுகின்றார்கள் என்றால், அப்படிப்பட்ட பெண் காவல் நிலையங்களை தாலூக்கா அளவிலே அமைத்தால் எப்படி இருக்கும் ? அப்படிச் சிந்தித்துப் பார்த்தால், தாலுக்கா அளவிலே பெண் காவல் நிலையத்தை வைத்தால், இன்னும் பெண்களுக்கு அதிகமான அளவு நல்ல வாய்ப்பு ஏற்படும் என்பதைச் சொல்லி, ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதைத் தாலூக்கா அளவிலே அமைத்துக் கொடுத்தால் மிக நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து வரதட்சிணைக் கொடுமை. நிறைய கேஸ் விசாரிக்கின்றார்கள். தஞ்சாவூரிலே ஆயிரக்கணக்கான கேஸ்கள் விசாரித்திருக்கிறார்கள். இப்போது அப்படிப்பட்ட கேஸ்கள் மிகவும் குறைந்திருக்கின்றன.

போலீஸ் ஸ்டேஷன்களுக்கெல்லாம் கட்டிடங்கள் கட்டிக் கொடுத்திருக்கிறீர்கள். 1992-லே சட்டமன்றத்திலே வெட்டுத் தீர்மானம் கொடுத்திருந்தேன். வெட்டுத் தீர்மானத்திற்கு முதலமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். பேராவூரணி காவல் நிலையக் கட்டிடம் பழுதடைந்து போயிருக்கிறது; காவலர் குடியிருப்பும் பழுதாகி இருக்கிறது. அதை உடனே புதுப்பித்துத் தரமுடியுமா என்ற வெட்டுத் தீர்மானத்தைக் கொடுத்திருந்தேன். முதலமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். சொன்ன 15 நாட்களுக்குள் டெண்டர் விடப்பட்டு, அந்தக் காவல் நிலையமும் புதிதாக்கப்பட்டிருக்கிறது. காவலர் குடியிருப்பும் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. அதுபோல பல கட்டிடங்கள் இப்போது கட்டிக் கொடுத்திருக்கிறீர்கள்.

அதுபோல, வாகனங்கள் அலாட்மெண்ட் யார் கொடுத்தார்கள் ? யாருமே கொடுக்கவில்லை. சைக்கிள் எடுத்துக் கொண்டு போவார்கள்; அல்லது பார்டியிடம் சொல்லி டாக்ஸி எடுத்துவா என்று சொல்வார்கள். அப்படி நிலைமைகள் இருந்தன. அப்படி டாக்ஸி எடுத்துவா என்று சொல்லும்போதே லஞ்சம் வந்து விடுகிறது அல்லவா ? ஆக, டாக்ஸி எடுத்துக்கொண்டு வா என்று யாரும் சொல்லாத அளவுக்கு வாகனங்கள் கொடுத்திருக்கிறீர்கள். ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனுக்கும் வாகனங்கள்

கொடுத்திருக்கிறீர்கள். மேற்கொண்டும் கொடுக்கப் போகிறீர்கள். அதுமாதிரி எல்லா ஸ்டேஷன்களுக்கும் வாகன வசதி செய்து கொடுத்தால் நிச்சயமாக போலீஸ் இன்ஸ்பெக்டர்கள், எஸ்.ஐ.-க்கள் ஆகியோர் உங்களுடைய வேகத்திற்குத் தகுந்தாற்போல் நடவடிக்கை எடுக்க ஏதுவாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா காவல் நிலையங்களுக்கும் போலீஸ் வாகனங்கள் கொடுத்தாகிவிட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. ஆர். சிங்காரம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதற்கு பாராட்டையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல், தடா சட்டத்தில் கைது செய்யப்படுகின்றவர்களின் எண்ணிக்கை தற்போது குறைந்திருக்கிறது. ஒரு பக்கத்திலே தடா சட்டத்தையே நீக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். அது மிகவும் தவறு. அது யாராக இருந்தாலும் சரி. தடா சட்டம் அவசியம் தேவை. தடா சட்டம் இல்லாவிட்டால் சமுதாய விரோதிகள், நாட்டிலே அதிகமாகிக் கொண்டே போய்விடுவார்கள். ஆகவே, தடா சட்டம் என்பது மிகமிக அவசியம். அதை நீக்க வேண்டாமென்று மத்திய சர்க்காருக்கு இந்த அவையின் மூலம், நான் வேண்டுகோள் வைக்க விரும்புகின்றேன். தடா சட்டத்தை தயவு செய்து நீக்க வேண்டாம். அதை மீண்டும் பரிசீலனை செய்து, தடா சட்டம் அவசியம் வேண்டும் என்று மாநில சர்க்கார் மூலமாக மத்திய சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன். அதுபோல்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11.40

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடா சட்டம் அவசியம் இருக்க வேண்டும் என்று மாநில அரசு ஏற்கனவே தன்னுடைய கருத்தை மத்திய அரசுக்குத் தெரிவித்தாகிவிட்டது.

திரு. ஆர். சிங்காரம் : மாநில அரசோடு நானும் என்னுடைய கோரிக்கையை காங்கிரஸ்காரன் என்ற முறையிலே எங்களுடைய பிரதமர் நரசிம்மராவ் அவர்களுக்கு வேண்டுகோளாக விடுக்கிறேன் என்பதுதான் என்னுடைய கருத்து. ஆக, எதையும் முன்கூட்டியே செய்யக்கூடிய சக்தி

படைத்தவர் நீங்கள் என்பது எங்களுக்குத் தெரியும். நீங்கள் முன்கூட்டியே தெரிவித்துவிட்டீர்கள். ஆக (மேசையைத் தட்டும் ஒலி) எதையும் துணிச்சலோடு சொல்பவர். நாங்கள் பெருந் தலைவரிடத்திலே சென்று பார்க்கிறபோது பணிவோடு, குனிந்து, வளைந்து, நிமிர்ந்து அப்படியெல்லாம் போய்ப் பார்த்து, ஷோ பண்ணி, காக்கா பிடித்து இப்படியெல்லாம் பண்ணுவாங்க; இது இயற்கை. இது நாட்டிலே நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எங்களுடைய ப்ரைம் மினிஸ்டர், அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. நரசிம்மராவ் அவர்களிடத்ததில் சென்று பார்க்கிறபோது, அந்த மிடுக்கோடு, தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி என்ற மிடுக்கோடு இந்த இந்தியாவுக்கே வழி காட்டுகின்ற டாக்டர் புரட்சித் தலைவி என்கிற அளவிற்கு அங்கே சந்தித்து (மேசையைத் தட்டும் ஒலி) அங்கே கேட்க வேண்டியதைக் கேட்டு, அதே நேரத்தில் தைரியமாக திடகாத்திரமான சிந்தனையோடு ஆரோக்கியமான உணர்வோடு கேட்க வேண்டிய கேள்விகளை, கேட்க வேண்டிய நேரத்திலே கேட்டு சாதனை படைத்தவர் நம்முடைய புரட்சி தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி). 69 சதவிகிதத்தை (மணி அடிக்கப் பெற்றது) பொறுத்தவரையில் இங்கே சட்டமன்றத்திலே சட்டம் ஆகியபோது இங்கே எதிர்கட்சிக்காரர்கள் மற்றும் ஏனையவர்கள் எல்லாம் பேசினார்கள். இது நடக்குமா ? இது ஓடுமா ? இது பாடுமா ? இது நடக்காது; அது நடக்காது என்று பேசினார்கள். ஏனென்றால் இது நடக்கக் கூடாது என்பது அவர்களுடைய அபிப்பிராயம். அப்படி நடந்துவிட்டால் தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சி தலைவி அவர்கள் ஒட்டுமொத்தமாக தமிழக மக்களுக்கு பெரும் தலைவியாகி விடுவார்கள். இனிமேல் யாரும் தேர்தலிலே நிற்க முடியாது என்கின்ற சூழ்நிலைக்கு வந்துவிடும் என்பதற்காக எல்லோரும் சேர்ந்து அதை எதிர்த்தார்கள். அது மட்டுமா ? எனக்குத் தெரியும். டெல்லியிலே முகாமிட்டு (மணி அடிக்கப் பெற்றது) முக்கியமான 'சப்ஜெக்ட்' பேசிக் கொண்டிருக்கிறேன். இது நடக்கக் கூடாது; இது நடக்க விடக்கூடாது என்று பல கட்சித் தலைவர்கள் டெல்லியிலே முகாமிட்டுத் தடுத்தார்கள். தடுக்க முயற்சித்தார்கள். ஆனால் முடியவில்லை. நம்முடைய முதலமைச்சர் எந்த உதவியும் இல்லாமல் முழு விவரத்தோடு வீராங்கனையாக அங்கே பேசிய காரணத்தினால் அதற்குப் பதில் சொல்ல முடியாத எங்களுடைய பிரைம் மினிஸ்டர் அவர்கள் உடனடியாக அதைச் செய்ய வேண்டுமென்ற முடிவுக்கு வந்து — எங்களுடைய பிரதமர் அவர்கள் உடனடியாக முடிவுக்கு வந்த — ஒரு விஷயமே 69 சதவிகிதம்தான். (மேசையைத் தட்டும் ஒலி) உடனடியாக முடிவுக்கு வந்தது மட்டுமல்ல; அந்த அட்டவணையில் சேர்த்ததும்கூட மிகப் பெரிய வெற்றி. அதைச் சேர்க்க முடியுமா ? இங்கே, பெரிய பெரிய சட்டப்

புத்தகங்களை வைத்துக் கொண்டு புரட்டிப் புரட்டிப் பார்த்தார்கள். சேர்க்க முடியுமா, சேர்க்க முடியாதா என்று. சேர்த்துக் காட்டியவர் நமது முதலமைச்சர். ஆகவே, இன்றைக்கு தமிழகத்திலே இருக்கிற அத்தனை கோடி மக்களும் நெஞ்சார, இதயமார உங்களைப் பாராட்டுகிறார்கள். இங்கே (மணி அடிக்கப் பெற்றது) காவலர்களெல்லாம் நிறைய கோரிக்கைக்ள் கொடுத்திருக்கிறார்கள். இவற்றையெல்லாம் நான் சொல்வதற்கு நேரம் ஆகும். வெட்டுத் தீர்மானங்களையும் நான் நிறைய கொடுத்திருக்கிறேன். இந்தக் கோரிக்கைகளையெல்லாம் நான் முதலமைச்சர் அவர்களிடத்தில் கையிலே கொடுத்துவிடுகிறேன். காவலர்களுக்கு, காவல் தெய்வமாக விளங்குகிற தாங்கள், காவலர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றி அவர்களுக்கு நீங்கள் உதவி அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த வாய்ப்பினை எனக்குக் கொடுத்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். ஜெய் ஹிந்த்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு.வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6 கோடி மக்களின் இதய தெய்வமாக கொலு வீற்றிருக்கும், கோட்டையிலே அமர்ந்து, நாட்டிலே நடக்கும் கேட்டையெல்லாம் வேட்டையாடும், சமூகநீதி காத்த வீராங்கனை, இதய தெய்வம் டாக்டர் புரட்சி தலைவி அவர்கள் தலைமையேற்று நடத்தும் காவல்துறை, தீயணைப்புத் துறை, ஆயத் தீர்வை போன்ற மானியக் கோரிக்கைகளிலே பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றிகூறி, நான் கடவுளைக் கண்டதில்லை; ஆனால், நான் கண்டு வணங்கும் ஒரே கடவுள் இதய தெய்வம் டாக்டர் புரட்சி தலைவி அவர்கள் என்று சொல்லி, அவர்கள் பாதம்தொட்டு வணங்கி, என்னுடைய கருத்துக்களைக் கூற நான் விழைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சி தலைவி அவர்கள், இந்தக் காவல் துறையிலும், தீயணைப்புத் துறையிலும், ஆயத் தீர்வை மற்றும் மதுவிலக்குத் துறையிலும் செய்திருக்கிற சாதனைகளைப் பற்றி, இந்த நான்காண்டுகளிலே நிகழ்த்திருக்கிற சாதனைகளைப் பாராட்டி நான் பேச வேண்டும், இந்த நாட்டு மக்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்றால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கொடுத்திருக்கிற இந்த இரண்டு நாட்களுமே எனக்குத் தேவைப்படும்.

முற்பகல் 11.45

ஆனால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், பத்து நிமிடம் மட்டுமே எனக்கு வாய்ப்பு அளித்திருக்கிறார்கள். இதைக் கூட்டித்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தரவேண்டுமென்று முதலில் நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எல்லா மாவட்டங்களுக்கும் தானாகவே நேரில் சென்று, ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டு, ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான பேர்களுக்கு அரசு நலத் திட்ட உதவிகளை வழங்கும்போது, அந்த நிகழ்ச்சிகளின் துவக்க விழா நிகழ்ச்சிகளிலே, தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடும்போது, நான் புரட்சி தலைவி அவர்களைக் கவனித்திருக்கிறேன். அதேபோல், நாட்டுப்பண் பாடும்போதும் கவனித்திருக்கிறேன். தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடும்போது, தமிழ்த்தாய்க்குத் தலைவணங்கி, இரு கரங்களை முன்னிறுத்தி, மரியாதைச் செலுத்தும் காட்சியோடு நிற்பார்கள். அதேபோல், நாட்டுப்பண் பாடும்போது, வீரத்தையும், ஆற்றலையும் தெரிவிக்கும் வண்ணம், கம்பீரத் தோற்றத்தோடு நிமிர்ந்து நின்று — 'அட்டென்ஷ'னில் நின்று — காட்சியளிப்பார்கள். மாண்புமிகு முதலமைச்சர் ஒருவர் மட்டுமே, இதைத் தொடர்ந்து பின்பற்றுவதை நான் பார்த்திருக்கிறேன். இதை உதாரணமாகக் கொண்டு, இந்த அவையிலே இருக்கிற அனைவரும் அதனைப் பின்பற்ற வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சுதந்திர இந்தியாவில், எத்தனையோ முதலமைச்சர்கள் சாதிக்காத சாதனைகளை, இந்தக் காவல் துறையில், நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சி தலைவி அவர்கள் இன்றைக்குச் சாதித்திருக்கிறார்கள்.

காவல் துறையை நவீனப்படுத்துதல். காவல் துறையை நவீனப்படுத்துதல் என்பது, இதுவரையில் எந்த ஒரு முதலமைச்சருமே செய்திராத அளவுக்கு, மாண்புமிகு புரட்சி தலைவி அவர்கள் செய்து காட்டியிருக்கிறார்கள். குறிப்பாக, இந்த நிதிநிலை அறிக்கையிலே மட்டும், கடந்த 3 ஆண்டுகளைவிட, இந்த ஆண்டு 420 கோடி ரூபாயைக் காவல் துறைக்கு அள்ளிக் கொடுத்திருப்பது என்பது பாராட்டுதலுக்குரியது, போற்றுதலுக்குரியது என்பதை தெரிவித்துக் கொண்டு, அதேநேரத்தில், காவல் துறையை நவீனமாக்குவதற்காகவும், அந்தத் துறைக்குத் தேவையான கருவிகளையும், சாதனங்களையும் வாங்குவதற்காகவும், 80.45 கோடி ரூபாயிலே, அவர்களாகவே முன்வந்து ஒரு மிகப்பெரிய திட்டத்தைத் தீட்டி, அதனை மத்திய அரசினுடைய பிரதமரிடத்திலும், உள்துறை அமைச்சரிடத்திலும் தானாகவே நேரில் சென்று வற்புறுத்தி, அவர்களிடத்தில் அதற்குரிய நிதியைப் பெறவில்லையென்றாலும், அவர்களாகவே அதனைச் செயலாக்கத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அனைத்து மகளிர் காவல் நிலையங்களைப் பற்றி, அருமை உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்கள் இங்கே பேசினார்கள். இது இந்தியாவிற்கே வழிகாட்டுகிற ஒரு திட்டம் என்று அவர் இங்கே எடுத்துரைத்தார். இது இந்தியாவிற்கே வழிகாட்டும் திட்டம் மட்டுமல்ல; அனைத்து உலகத்திற்குமே, உலகத்திலுள்ள அனைத்துத் தலைவர்களுமே, நாடுகளுமே பின்பற்றக்கூடிய ஒரு மிகப் பெரிய திட்டம் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொண்டு, அதைத்தான் இன்றைக்குப் பக்கத்திலே இருக்கிற மற்ற நாடுகளெல்லாம் பின்பற்றி வருகிறார்கள் என்பதை தெரிவிப்பதோடு, காவல் துறையை நவீனப்படுத்துவதோடு, மனிதநேயத்தோடு செயல்படுகிற ஒரு குறிக்கோள் மிக்க காவல்துறையாக, இன்றைக்கு அதனை அவர்கள் உயர்த்திக் காட்டியிருக்கிறார்கள் என்பதை நான் இந்தநேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, காவல்துறையிலே, பதவி உயர்வு, பற்றி இங்கே நான் சொல்ல விரும்புகிறேன். அடிமட்டத்திலேயுள்ள காவலர்களிலேயிருந்து, மூத்த அதிகாரிகள்வரை, இந்த மூன்றாண்டுக் காலத்தில், 12,224 பதவி உயர்வுகளை அளித்த ஒரே முதலமைச்சர், நம்முடைய முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள்தான் என்பதை நான் இங்கே எடுத்துவைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல. மக்கள்தொகை பெருகிக் கொண்டே இருக்கிற இந்த நாட்டில், காவல்துறை அலுவலர்களின் எண்ணிக்கையையும் அதிகரிக்க வேண்டுமென்று, காவல்துறையிலே இருக்கிற உயர் அதிகாரிகளேகூட வற்புறுத்திய நேரத்திலேயுங்கூட, இது யாருடைய காலத்திலேயும் செய்யப்படவில்லை; ஆனால், புரட்சித்தலைவி அவர்கள் பொறுப்பேற்ற இந்தக் காலத்திலேதான், 10 ஆயிரம் காவலர்களை இன்றைக்குப் பதவியிலே அமர்த்தியிருக்கிறார்கள்; பணியாற்ற வைத்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, உலகெங்கும் இருக்கும் காவல்துறைகளில், பெரும்பாலான அனைவரும் காவலர்களாக நுழைந்து, காவலர்களாகவே ஓய்வு பெறுகிறார்கள். ஆனால், தமிழகத்திலே மட்டும்தான் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள், 21 ஆயிரம் கிரேட்-1 காவலர்களை, கிரேட்-2 காவலர்களாக உயர்த்திக்காட்டி, பதவி உயர்வு கொடுத்து.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கிரேட்-2-ஐ கிரேட்-1 என்றுதான் உயர்த்தியிருக்கிறார்கள். நீங்கள் மாற்றிச் சொல்கிறீர்கள்.

முற்பகல் 11.50

திரு. வி.கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிரேட்-2லிருந்து, கிரேட் 1- ஆகத்தான். ஆக கிரேட்2-லிருந்து, கிரேட் -

1-ஆக, இன்றைக்குப் பதவி உயர்வு அளித்திருக்கிறார்கள். இதனை எந்த ஒரு முதலமைச்சர் காலத்திலும் செய்யவில்லை. இது யாருக்கு என்றால், அடிமட்டத்திலே இருக்கிற காவலர்களுக்கு பதவி உயர்வு அளித்திருக்கிறார்கள். இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், சில தலைவர்கள் பேசுகிறார்கள்; உயர் அதிகாரிகளுக்கு மட்டும்தான் பதவி உயர்வு அளித்துவிட்டார்கள், முதலமைச்சர்; ஆனால், அடிமட்டத்திலே இருக்கிற காவலர்களுக்குப் பதவி உயர்வு தரவில்லை என்று சொல்கிற அவர்களுக்கு நான் இதைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, இன்றைக்கு வீட்டுவசதித் திட்டம் என்பது, காவல்துறையிலே இல்லாத ஒரு திட்டமாக முன்பிருந்தது. இதற்கு முன்பு ஆண்டவர்களுடைய காலத்திலே நீக்கப்பட்ட அந்தத் திட்டத்தை இன்றைக்கு நடைமுறைப்படுத்தி. ஆயிரம் வீடுகளுக்கு மேல் கட்டுகின்ற ஒரு மிகப் பெரிய திட்டத்தை இன்றைக்கு உருவாக்கித் தந்திருக்கிறார்கள் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்.

இங்கே அருமை நண்பர் சிங்காரம் பேசும்போது, காவலர்கள் இறந்துவிட்டால் அவர்களுடைய குடும்பத்தினர் காப்பாற்றப்படுகிறார்கள் என்று சொன்னார்கள். பணியாற்றுகின்ற, வீரத்தோடு கடமை உணர்வோடு பணியாற்றி வீர மரணம் அடைகின்ற காவலர்களின் குடும்பத்தினருக்கு 10 லட்சம் ரூபாய் தருகின்ற திட்டத்தை அமல்படுத்திய ஒரே முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தான். அவர்களுடைய குடும்பம் அரசு வீட்டிலே குடி இருக்குமேயானால், அந்த வீட்டிலேயே தொடர்ந்து அவர்கள் இருந்துகொள்ளலாம் என்று உத்திரவு பிறப்பித்து இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இறக்கின்ற நேரத்தில் காவலர்கள் என்ன சம்பளம் வாங்குகிறார்களோ அந்த சம்பளமே அவர்களுக்கு பென்ஷனாக இருக்கும் என்ற திட்டத்தையும் இங்கே அறிவித்து இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, வீரமரணம் அடைகின்ற காவலர்களின் குழந்தைகளுக்கு மருத்துவக் கல்லூரிகளில், பொறியியல் கல்லூரிகளில், சட்டக் கல்லூரிகளில் சேர்ந்து படிப்பதற்கும் வாய்ப்பு அளித்த ஒரே முதலமைச்சர் இதய தெய்வரம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் என்பதை இந்த நேரத்திலே எடுத்துரைத்து, இப்படிப்பட்ட உத்திரவுகளைப் பிறப்பித்த காரணத்தினாலேதான் காவல் துறை என்பது கூலிக்கு மாறடிக்கும் என்ற நிலை மாறி, இன்றைக்கு கடும் மழையானாலும், கடும் வெயிலானாலும் சளைக்காமல் மலைக்காமல் அச்சம் ஏதுமின்றி பணியாற்றுகின்ற காவல் துறையாக, சிறந்த காவல் துறையாகப் பணியாற்றிக் கொண்டு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

நான் மீண்டும் ஒன்றைத் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். இந்தச் சட்டங்கள் கொஞ்சம் கடுமையாக்கப்பட வேண்டும் என்பதை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். குறிப்பாக, மிகப் பெரிய குற்றங்களில் ஈடுபட்டவர்களை காவல் துறையினர் பிடித்து ஒப்படைக்கும் நேரத்தில், அவர்கள் நீதிமன்றங்கள் முன்புதான் சாட்சியம் அளிக்க வேண்டும் என்று சொல்கின்றார்கள். ஆனால் ஒரு முறை அவர்களை ஜாமீனிலே கோர்ட்டிலே விட்டுவிட்டால் அவர்கள் பின்னர் குறித்த காலத்தில் கோர்ட்டுக்குச் செல்லாமல் இருப்பார்களேயானால், அவர்களை காவல் துறையினர் பிடிப்பது என்பதில் மிகப் பெரிய ஒரு இக்கட்டான சூழ்நிலையை உருவாக்குகிறது. ஆகவே, அவர்கள் என்ன குற்றங்கள் செய்தார்கள் என்று காவல் துறையினரிடம் ஒப்புக்கொள்கிறார்களோ, அதையே அமல்படுத்துவதற்குக் கடுமையான சட்டங்களை ஏற்படுத்த வேண்டும். காரணம் அவர்கள் காவல் துறையினரிடத்திலே, போலீஸ் ஸ்டேஷனிலே ஒன்று சொல்வார்கள். ஒரு மிகப் பெரிய குற்றத்திலே ஈடுபடுகிற சமூக விரோதிகள் காவல் துறையினர் முன்பு ஒன்றைச் சொல்வார்கள்; ஆனால், அவர்களை நீதிமன்றத்திற்குக் கொண்டு சென்று விசாரிக்கும் நேரத்தில் முன்பு சொன்னதை மாற்றிச் சொல்லிவிடுகிறார்கள். ஆகவேதான், அதற்கு கடுமையான சட்டங்களை உருவாக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கூறக் கடமைப்பட்டு இருக்கிறேன். அவற்றை உருவாக்கி அமல்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 4 ஆண்டுகளில் நம்முடைய காவல் துறை தமிழகத்திலே திருடு போன சொத்துக்களை மீட்பதிலே செய்து இருக்கின்ற திறமைகளை நான் இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டு இருக்கிறேன். 1991-ல் திருடு போன சொத்துக்களில் 64 சதவீதத்தை காவல் துறையினர் கண்டுபிடித்துக் கொடுத்து இருக்கிறார்கள். 1992-ஆம் ஆண்டில் திருடுபோன சொத்துக்களை கண்டுபிடித்துக் கொடுத்தது 72.1 சதவீதமாக உயர்ந்து இருக்கிறது. 1993-ஆம் ஆண்டில் அது 73.2 சதவீதமாக உயர்ந்து இருக்கிறது. 1994-ஆம் ஆண்டில் அதை 94.3 சதவீதமாக உயர்த்தி திருடு போன பொருட்களை எல்லாம் மீட்டுக் கொடுத்து இருக்கிறார்கள்.

1993-ல் 451 குற்றங்கள், பெரிய அளவிலான குற்றங்கள் நடைபெற்று இருக்கின்றன. ஆனால், 1994-ல் அது மிகக் குறைக்கப்பட்டு 337 ஆக ஆகி இருக்கிறது. 114 குற்றங்கள் குறைந்து இருக்கின்றது. அந்த அளவுக்கு காவல் துறையினர் நடவடிக்கை எடுத்து சிறப்பாகப் பணியாற்றி வருகிறார்கள்.

இன்றைக்கு சட்டம் ஒழுங்கைப் பற்றி பல்வேறு நண்பர்கள் பேசுகின்றார்கள். சட்டம் ஒழுங்கு என்பதற்கும், குற்றங்கள் என்பதற்கும் வேறுபாடுகள் நிறைய இருக்கின்றன. ஒரு பஸ்ஸில் செல்கின்றவரிடம் ஒருவர் பிக்-பாக்கெட் அடித்துவிட்டால் உடனடியாக அதை பத்திரிக்கைகளில் ஒரு பக்க அளவுக்கு செய்தியாகப் போடுகிறார்கள். ஒரு வீட்டில் திருடு போய் விட்டால், அதை பெரிதுபடுத்தி ஒரு பக்கம் அளவுக்கு செய்தி போடுகிறார்கள். சட்டம் ஒழுங்கு தமிழகத்திலே கெட்டுவிட்டது என்று மிகைப்படுத்திப் பேசுகின்றார்கள். அவர்களுக்கெல்லாம் நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்வது, அயோத்தி சம்பவம் நம் எல்லோருக்கும் தெரியும்; அயோத்தி சம்பவம் வட நாட்டில் நடைபெற்றபோது நாடே கொழுந்து விட்டு எரிந்த நேரம். ஆயிரக்கணக்கான பேர்கள் கொல்லப்பட்ட நேரத்தில் தமிழ்நாடு அமைதிப் பூங்காவாக, சாதி சமயங்களுக்கிடையே எந்தத் தகராறும் இல்லாமல் அமைதிப் பூங்காவாக நிலைநாட்டி, சட்டம் ஒழுங்கு கெடாமல் பார்த்துக் கொண்டார்கள், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். அதுதான் சட்டம் ஒழுங்கு என்பதே தவிர, வேறு சிறு சிறு குற்றங்கள் நடைபெறுவதை வைத்து சட்டம் ஒழுங்கு இல்லை என்று நாம் இங்கே நிறுபிக்கமுடியாது என்பதற்காக நான் எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11.55

உதாரணமாகச் சொல்கிறேன், 1992ஆம் ஆண்டு மட்டும் நடந்த குற்றங்களை, கொலைகளைப் பற்றி நான் இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன் இந்தியாவில், ஆந்திராவில் நடைபெற்ற கொலைகள் 2,709 கொலைகள். 1992ஆம் ஆண்டு மகாராஷ்ட்டிராவில் நடைபெற்றது 5,112 கொலைகள். மத்தியப் பிரதேசத்தில் நடைபெற்றது 3,545 கொலைகள். உத்திரப்பிரதேசத்திலே எடுத்துக்கொள்வோமானால் 10,559 கொலைகள் நடைப்பெற்றன. மேற்கு வங்காளத்திலே 1,770 கொலைகள் நடைபெற்றன. ஆனால் தமிழகத்திலே 1,569 மட்டும்தான் நடைபெற்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கறேன். ஆக அந்த அளவிற்கு தமிழகத்தைப் பொறுத்த மட்டில் சிறப்பாக ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

அதே நேரத்தில், கிட்நாப்பிங் என்பது, இன்றைக்கு இங்கே திரு. சிங்காரம் அவர்கள் பேசும்போது வீரப்பனைப் பற்றியெல்லாம் குறிப்பிட்டார்கள். இந்த கிட்நாப்பிங் என்பது பயணக் கைதிகளாக (குறுக்கீடுகள்) இந்தியத் துணைக் கண்டத்திலே எடுத்துக்கொள்வோனால் (குறுக்கீடுகள்) இல்லை, பிணையக் கைதிகளாக. உத்தரப் பிரதேசத்தை எடுத்துக்கொள்வோமானால் 45 கேங்குகள் அங்கே இருக்கின்றன.

ஒவ்வொரு ஆண்டும் கிட்நாப்பிங் நடக்கின்றன. அந்த குரூப்கள் இதன் மூலம் செய்கின்ற வருமானம் எவ்வளவு தெரியுமா? ஆட்களை கடத்திச் சென்று வருமானம் செய்கின்றார்கள். ரூ. 2 கோடி முதல் ரூ. 4 கோடி வரை அங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

1991 முதல் 1994 வரை மட்டும் 500 கேஸ்கள். இதுமாதிரி 500 கிட்நாப்பிங் கேசஸ் அங்கே நடந்திருக்கின்றன என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதே போல, டெல்லியிலே எடுத்துக்கொள்வோமேயானால், 685 கிட்நாப்பிங் கேஸ்கள், வழக்குகள் பதிவாகியிருக்கின்றன என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

பீகாரிலே எடுத்துக்கொள்வோமானால், 2,460 சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன.

அதே நேரத்தில் பம்பாயிலே எடுத்துக்கொள்வோமானால், ஒரு தொழில் அதிபரையும் அவருடைய மகனையும் சேர்த்து கடத்திச் செல்கின்றார்கள். கடத்திச் சென்று 36 மணி நேரம் அங்கே வைத்திருந்து அவர்களிடத்திலே எவ்வளவு வசூல் செய்தார்கள் என்றால் 36 லட்சம் ரூபாயை வசூல் செய்து அவர்களை விடுதலை செய்கிறார்கள். இது பம்பாய் நகரத்திலே நடந்தது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் ஏற்கனவே குழம்பிப் போய் இருக்கிறார். ஒவ்வொருவராக அவரிடத்திலே சீட்டுக் கொடுத்துக் கொண்டிருந்தால், இன்னும் குழம்பிப் போய் விடுவார். அவருடைய கருத்தைப் பேசட்டும். அடுத்தவர்கள் சீட்டுக் கொடுத்துக்கொண்டே இருந்தார்கள் என்றால்..

திரு. வி.கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குழம்பிப் போகவில்லை. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சி தலைவி அவர்கள் இருக்கின்றபோது பேசுவது என்பது எனக்கு எப்போதுமே கொஞ்சம்.... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தங்களுக்கு ஏற்கனவே குழப்பம். ஏதோ ஒரு விதத்திலே பதட்டத்திலே இருப்பீர்கள். இன்னும் பதட்டப்படுத்துகிறார்களே என்று தான் சொல்கிறேன்.

திரு. வி.கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயம் வந்துவிடும். அவ்வளவு தானே தவிர குழப்பம் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு மட்டுமல்ல, தலைவர் அவர்களைத் தவிர, இங்கே இருக்கின்ற எல்லா உறுப்பினர்களுக்கும்

அப்படித்தான். அமைச்சர்கள் முதற்கொண்டு என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் இது ஒரு கட்டுப்பாடுள்ள இயக்கம். தலைமை என்ன சொல்கின்றதோ அதை நிறைவேற்றுகின்றது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான். (மேசையைத் தட்டும் ஒலி). ஆக தலைமையின் முன் பேசும்போது கூச்சம் ஏற்படுகிறது. எங்காவது ஒரு சின்ன பிழை வந்துவிட்டால் அதற்கு நான் எப்படி பரிகாரம் தேடமுடியும் என்ற பயத்திலே தானே தவிர வேறு அல்ல என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். எனக்கு எப்போதுமே குழப்பம் இல்லை. நான் குழப்பம் இல்லாதவன். இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒருவர் தான் என்னுடைய தலைமை, தாய், என்னுடைய உயிர் என்று வாழ்பவன் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நண்பகல் 12.00

ஆக அதே அளவிற்கு பஞ்சாபை எடுத்துக்கொள்வோமானால், 1990-லே மட்டும் 105 பெண்களும் 16 குழந்தைகளும் கடத்தப்பட்டு இருக்கிறார்கள். ஆக உத்திரபிரதேசத்திலே மீண்டும் எடுத்துக்கொண்டு சொல்வோமானால் இப்படிப்பட்ட பல்வேறு சம்பவங்கள் நடந்திருக்கின்றன. இதெல்லாம் புத்தகத்திலே, பதிவேட்டிலே இருக்கின்றது. ஆனால் தமிழகத்தைப் பொறுத்த மட்டில் எந்த ஒரு சம்பவமும் இல்லை. பம்பாய் போன்று ஒரு பெரிய மாநகரம், சென்னை நகரம் என்பது. அதிலே அப்படிப்பட்ட ஒரு சிறு நிகழ்ச்சிகூட இல்லை. யாரையும் கிட்நாப்பிங் செய்யவில்லை தமிழகத்திலே என்பதற்கு இதை உதாரணத்திற்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த 4 ஆண்டுக் காலத்தில் ஒரே ஒரு கிட்நாப்பிங் வீரப்பன் செய்தான். யாரை என்றால், ஒரு காவல் துறை அதிகாரியை. அந்தக் காவல் துறை அதிகாரிக்கு நம்முடைய காவல் துறை அறிவுரை வழங்கி இருந்தது. வீரப்பன் நடமாடுகின்ற அந்தக் காட்டுப் பகுதிகளுக்கு நீங்கள் செல்லக் கூடாது, காரணம் அவருடைய தோட்டம் அங்கே இருக்கிறது. இவர் செல்லுவார் என்பதை அவர்கள் தெரிந்துதான் நீங்கள் செல்லக் கூடாது என்று அவர்கள் அறிவுரை வழங்கியிருந்தார்கள். அதையும் மீறி அவர் சென்றிருந்தார். ஆனால், சென்றவரை கடத்திச் சென்று, வீரப்பன் இடத்திலே இருந்து 30 நாட்கள் போராடி, மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய ஆலோசனையின்பேரில் அவர் இங்கே சென்னையில் உட்கார்ந்து எப்படி எல்லாம் அந்த நடவடிக்கைகளை எடுத்திருப்பார் என்பதை நான் ஒரே ஒரு உதாரணத்தை சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். வீரப்பன் கடத்திச்சென்ற அந்த 3 பேர்களையும், ஒரு

பைசா கூட கொடுக்காமல் -- அவன் எத்தனையோ கோரிக்கைகளை வைத்தான்-இங்கே நான் சொன்னேனே பல கிட்நாப்பிங் கேசஸ்—அதுபோல வைத்தான். ஆனால் அவனுக்கு ஒரு பைசா கூட கொடுக்காமல், 3 நபர்களையும் உயிரோடு மீட்ட வரலாறு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) அவரோடு சேர்ந்த கூட்டாளிகளையும் இன்றைக்குப் பிடித்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கே சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆகவே, இன்றைக்கு திருநாவுக்கரசு அவர்கள் பேசும்பொழுது (மணியடிக்கப்பெற்றது) ஏற்கெனவே பேசும்பொழுது ஒரு கருத்தைச் சொன்னார்கள். இங்கே விடுதலைப் புலிகள் தான் இல்லையென்று சொல்லுகின்றீர்களே, ஆகவே, இந்த சிறப்புப் பாதுகாப்பை நீங்கள் நீக்கிவிட வேண்டுமென்று ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஆனால் இங்கே சிங்காரம் அவர்கள் பேசும்பொழுது ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறார்கள். புரட்சித் தலைவி அவர்களுடைய உயிரைப் பறிப்பதற்காக திட்டம் வைத்திருக்கிறார்கள் என்றுகூட அவர் பேசுகின்றபொழுது ஒரு கருத்தைச் சொன்னார்கள். அவர் காங்கிரஸ் கட்சி உறுப்பினர். ஆக, நான் ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களே, நீங்கள் வாழ்ந்தால்தான் இந்த நாடு வாழும். நீங்கள் தமிழகத்திற்கு மட்டுமல்ல (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்காலத்திற்கு இந்தியாவிற்கே வழிகாட்டுகின்ற ஒரு தலைவராக நீங்கள் வர இருக்கின்றீர்கள் என்பதை இந்த நாடே, இந்த உலகமே அறிந்துகொண்டிருக்கிறது. ஆகவே, உங்களுக்கு இந்த திருநாவுக்கரசு பேசியதில் ஏதோ சதித் திட்டம் இருக்கிறது என்று....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல்வர் அவர்கள்,

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சின்னசாமி அவர்கள் குறிப்பிடுகின்ற இந்தப் பிரச்சினைபற்றி ஏற்கெனவே இந்த அவையில் நான் தெளிவாகப் பதில் அளித்திருக்கிறேன். இப்போது மாண்புமிகு உறுப்பினர் சின்னசாமி அவர்கள் பேசுகின்றபோது, எல்.டி.டி.ஈ.யினரால் என்னுடைய உயிருக்கு ஆபத்து இருப்பதாகவும், அதனால்தான் இந்த கடலோர ஏற்பாடுகளை நாம் தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறோம் என்பது போலவும் ஒரு கருத்தைத் தெரிவித்தார். அது தவறான கருத்து.

என்னுடைய உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மட்டும் இந்த ஏற்பாட்டைச் செய்யவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நாட்டின் செக்யூரிட்டி -- தமிழ்நாட்டினுடைய கடலோரப் பகுதி, கோஸ்ட் லைன் ஆயிரம் கிலோமீட்டர் நீளம் உள்ளது. இது இந்த நாட்டின் எல்லையாகும். இன்டர்நேஷனல் பார்டர் ஆகும். ஆகவே, இந்த நேஷனல் பார்டருக்கு

நாம் செக்யூரிட்டி ஏற்படுத்தியாக வேண்டும். அதாவது எல்.டி.டி.ஈ.யின் நடவடிக்கைகள் தற்போது இந்த மண்ணில் இல்லையென்றாலும்கூட எந்த நேரத்திலும் அவர்கள் ஊடுருவக் கூடும் என்பதால்தான் இத்தனை கோடி ரூபாய்களைச் செலவுசெய்து கோஸ்டல் செக்யூரிட்டி கார்டு நாம் ஏற்படுத்தியிருக்கறோம். மேலும், கோஸ்ட் கார்ட் இங்கே காவல் ரோந்துப் பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறது. அதற்கு மேலும் இந்திய கடற்படையின் நேவல் டெட்டாச்மென்ட்கள் 7,8 இப்போது அமைக்கப்பட்டிருக்கின்றன. இதற்கு ஒரு உதாரணம் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இப்போது தான் எல்.டி.டி.ஈ. நடவடிக்கைகள் இங்கு இல்லையே, அப்படியானால் எதற்காக இந்த ஏற்பாடு என்று சொன்னால், இப்போதுதான் பாகிஸ்தானோடு யுத்தம் இல்லையே, அப்படியானால் இந்தியா-பாகிஸ்தான் எல்லையில் ஏன் இத்தனை ட்ரூப்புகளை, பார்டர் செக்யூரிட்டி போர்ஸ்களை அமர்த்தியிருக்கிறார்கள்? (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இன்னும் சொல்லப்போனால், பஞ்சாப் எல்லையில் ஒரு கிலோமீட்டர் தூரத்திற்கு 30 லட்சம் ரூபாய் செலவுசெய்து, ஒரு கிலோமீட்டருக்கு 30 Lakhs rupees செலவு செய்து மத்திய அரசு பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது. ஏன் இப்போது பாகிஸ்தானோடு எந்த யுத்தமும் நடைபெறவில்லையே. ஆனால் நமது நாட்டின் எல்லைகளை எந்த நேரத்திலும் நாம் காப்பாற்றியே ஆக வேண்டும். வெளிநாடுகளிலிருந்து எனிமீஸ், அவர்கள் மிலிட்டன்ட்ஸ் ஆக இருக்கலாம், டெரரிஸ்ட்ஸ் ஆக இருக்கலாம். வேறு பகைவர்களாக இருக்கலாம். அவர்கள் நமக்குத் தெரியாமல் இந்த நாட்டிற்குள் ஊடுருவக் கூடாது என்பதற்காகத்தான் இந்த ஏற்பாடுகள் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

பிற்பகல் 12.05

திரு. வி.கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய விளக்கத்திற்கு நன்றி தெரிவிப்பதோடு தாங்கள் வாழ்ந்தால் தான் இந்த நாடு வாழும். தாங்கள் இல்லையென்றால் இந்த நாட்டிலே ஒருவர்கூட நிம்மதியாக வாழ முடியாது. ஆகவே, நாட்டுக்குப் போடப்பட்டிருக்கின்ற பாதுகாப்போடு தங்களுடைய பாதுகாப்பை இன்னும் அதிகப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் இதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கறேனே தவிர வேறு அல்ல. காரணம் திருநாவுக்கரசு பேசியதற்காகத்தான் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு என்னுடைய தொகுதியைப் பற்றி ஒன்றே ஒன்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கடத்தூர் காவல் நிலையம் என்பது, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களே, நாங்கள் குடியிருக்கின்ற பகுதியில் உள்ள காவல் நிலையம். அதற்கு இந்த ஆண்டு கட்டிட வசதியும், காவலர்

குடியிருப்பும் கட்டித்தர வேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேநேரத்தில் வரப்பாளையம் காவல் நிலையத்திற்கும் தாங்கள் கட்டிட வசதி செய்து தர வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். வரப்பாளையம் காவல் நிலையம் நம்பியூர் காவல் ஆய்வாளருடைய பகுதிக்கு உட்பட்ட பகுதியாக இருந்தது. தற்சமயம் இது குன்னத்தூர் ஆய்வாளருடைய பகுதிக்கு மாற்றப்பட்டிருக்கிறது. வரப்பாளையம் பகுதியில் உள்ள பொதுமக்கள், குன்னத்தூர் செல்ல வேண்டுமென்றால், சுமார் 20 கிலோமீட்டர் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே மீண்டும் அதை நம்பியூர் ஆய்வாளர் பகுதியோடு சேர்க்க வேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

காவலர்களுக்காக ஒரே ஒரு கோரிக்கையை நான் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களிடம் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இதுவரையில் காவல் துறைக்கு யாருமே செய்யாத பல சலுகைகளைச் செய்து வருகின்ற தாங்கள், காவலர்களுக்கு 12 நாட்கள் லீவ் என்று இருப்பதை 20 நாட்களாக உயர்த்தித் தர வேண்டுமென்று அவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். தாங்கள் இதைப் பணிவன்போடு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். லீவ் நாட்களிலே வேலை செய்கின்ற காவலர்களுக்கு 20 ரூபாய் சம்பளமாகத் தருகிறார்கள். ஒரு நாள் சம்பளமாக அதை உயர்த்தித் தர வேண்டுமென்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள் என்று சொல்லி, புகழோடு தோன்றி, புகழோடு வளர்ந்து, புகழோடு வாழும் புரட்சித் தலைவி அவர்களின் புகழை என் கடைசி மூச்சி உள்ளவரை பரப்பிக் கொண்டேயிருப்பேன் என்று சொல்லி, இதிலே பேசுகின்ற வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. பெரியசாமி.

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993-94ல் தான் ஆயிரம் வீடுகளைக் கட்டிக் கொடுத்தார்கள். 1995-96ல் 1500 வீடுகளைக் கட்டுவதற்கு மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் பேசும்போது ஆயிரம் வீடுகள் என்று சொன்னார்கள்.

திரு. வி.கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயிரம் வீடுகள் என்று சொல்லவில்லை. வருடாவருடம் ஆயிரம் வீடுகள் என்று சொல்லியிருக்கிறேன். அவர் அதை கவனிக்காமல் விட்டுவிட்டார் என்று நினைக்கிறேன்.

1995 ஏப்ரல் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி க. பழனியம்மாள்.

திருமதி க. பழனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில ஆயத் தீர்வை, காவல் துறை, தீ அணைப்புப் பணிகள் ஆகிய கோரிக்கைகள் மீது பேசுவதற்கு அனுமதி அளித்த உங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 6 கோடி மக்களின் அன்புத் தாய், அன்புத் தலைவி, டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், ராசிபுரம் நகரில் பொதுச் சுகாதாரம், சாலை மேம்பாட்டுக்காக உலக வங்கித் திட்டத்தின்மூலம் 51 இலட்சத்திற்கு அனுமதி கொடுத்த எங்கள் சிங்க நிகர் தலைவி, தங்கத் தலைவி, டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 12.10.

இன்றைக்கு இந்தியாவிலே எத்தனை முதலமைச்சர்கள் இருந்தாலும், அவர்களிலே 'கிரியேடிவ் திங்கிங்' உள்ள ஒரு முதலமைச்சராக (மேசையைத் தட்டும் ஒலி), சைக்காலஜி தெரிந்த ஒரு முதலமைச்சராக, ஏன், எதிர்க்கட்சிகளினுடைய பலவீனம் தெரிந்த ஒரு முதலமைச்சராக, (மேசையைத் தட்டும் ஒலி) சர்வீஸ் மைண்ட் உள்ள ஒரு முதலமைச்சராகத் திகழ்ந்து கொண்டிருப்பவர்தான் நம்முடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். இன்றைக்கு இந்திய நாடு ஒரு மிகப் பெரிய சுதந்திர நாடு. இன்றைக்கு உலகத்திலே ஒரு பெரிய ஜனநாயக நாடு. ஆனால் இன்றைக்கு இவ்வளவு பெரிய ஜனநாயக நாட்டிலே, சுதந்திர நாட்டிலே மற்ற மாநிலங்களில் எல்லாம் பார்த்தால் எங்கேயாவது மனிதர்கள் சுதந்திரமாக நடமாட முடிகிறதா? இன்றைக்கு மனிதர்கள் சுதந்திரமாக நடமாடக்கூடிய ஒரு சூழ்நிலையை தமிழகத்திலே ஏற்படுத்திக் கொடுத்திருப்பவர் நம்முடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு இந்த ஜனநாயக நாட்டிலே எங்கு பார்த்தாலும் பார்க்கிறோம், 4 பேர்கள் இருந்தால் ஒரு சங்கம், ஒவ்வொரு ஜாதிக்கும் ஒரு சங்கம். எத்தனை மாநிலக் கட்சிகள்? இவைகள் எல்லாம் நித்தம் நித்தம் ஒரு போராட்டம், நித்தம் நித்தம் ஒரு பொதுக் கூட்டம். இந்தப் போராட்டங்களிலும், பொதுக் கூட்டங்களிலும் இன்றைக்கு அமைதியை நிலைநாட்டி, வெற்றி கண்டிருப்பவர் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள். அந்தக் காலங்களில் எல்லாம் ஒரு சங்கமாக இருந்தாலும் சரி, அரசியல் கட்சியாக இருந்தாலும் சரி, வலுவான கோரிக்கைகளை முன் நிறுத்தி, அந்தக் கோரிக்கையின் அவசரம் கருதி, ஒரு போராட்டத்தை நடத்துவார்கள். ஆனால் இன்றைக்குப் பார்க்கிறோம். தங்களுடைய பெயர்கள் பேப்பரிலே வரவேண்டும், மக்கள் மத்தியிலே

பரவவேண்டும் என்பதற்காக இன்றைக்குப் போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள், தடையை மீறிப் போராட்டம் நடத்தினால் தாங்கள் கைது செய்யப்படுவோம் என்று அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அப்படித் தெரிந்திருந்தும், அப்படித் தடையை மீறிப் போராட்டத்தைச் செய்கிறார்கள். அந்தத் தலைவரைக் கைது செய்துவிட்டால் உடனே மாநிலம் முழுவதும் வன்முறையைக் கட்டவிழ்த்து விடுகிறார்கள். கைதாவதற்குத் தானே தடையை மீறிப் போராட்டம் செய்கிறார்கள்? அதற்குப் பிறகு அவர்களுடைய தொண்டர்கள் எல்லாம், எங்கள் தலைவரை விடுதலை செய், எங்கள் தலைவரை விடுதலை செய் என்று பொது அமைதிக்குப் பங்கம் ஏற்படுகிற வகையிலும், பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படுகிற வகையிலும் போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிற ஒரு காட்சியை நாம் இன்றைக்குக் கண்டு கொண்டிருக்கிறோம். ஆனால் இத்தனையையும் தன்னுடைய திறமையால், தன்னுடைய காவல்துறையை அன்பினாலும் பண்பினாலும் பாசத்தினாலும் நடத்திக் கொண்டிருக்கிற ஒரு பாங்கினால், டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் இன்றைக்கு பொது அமைதியை இந்தத் தமிழ்நாட்டிலே நிலை நிறுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

நம்முடைய டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய குறிக்கோள் எல்லாம், இந்தக் காவல்துறையை சர்வதேசப் புகழ் பெற்ற ஒரு துறையாக மாற்றவேண்டும் என்பதுதான். அதற்காக, அவர்கள் வைத்திருக்கிற ஒரு aim-- ஒரு குறிக்கோள் we want to modernise, humanise the police force என்பதைத் தங்களுடைய குறிக்கோளாக வைத்திருக்கிறார்கள். இப்படிக் காவல் துறையை நவீனப்படுத்த வேண்டும் என்பதற்காக, இன்றைக்கு என்னென்ன நடவடிக்கைகளை டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

இன்றைக்கு நாட்டிலே பல மாநிலங்களிலே வன்முறை நடக்கிறது. கலவரம் நடக்கிறது. அதையெல்லாம் அடக்க அந்த மாநிலக் காவல்துறைகளுக்கு முடியவில்லை. ஆனால் தமிழ்நாட்டில் பார்க்கிறோம். அயோத்தி பிரச்சினை அங்கே ஏற்பட்டபோது, அந்தச் சூழ்நிலையை எவ்வளவு திறமையாக நம்முடைய புரட்சித்தலைவி அவர்கள் சமாளித்துக் காட்டினார்கள் என்பதைப் பார்க்கிறோம். அதேபோல, காவிரி நீர்ப்பிரச்சினை காரணமாக கர்நாடகத்திலே கலவரம் ஏற்பட்டபோது, தமிழ்நாட்டிலே ஒரு சின்ன அசம்பாவிதம் கூட ஏற்படவிடாமல் காவல்துறையைத் தன்னுடைய திறமையாலே வழி நடத்திச் சென்றவர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். அதையெல்லாம் விட்டுவிட்டால்

கூட, இன்றைக்கு உலகம் போற்றும் உலகத் தமிழ் மாநாட்டை டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தஞ்சைத் தரணியிலே நடத்திக் காட்டினார்கள். பல லட்சக்கணக்கான மக்கள் அந்தக் கூட்டத்திலே வந்து கலந்து கொண்டிருக்கிறார்கள். அதில் ஏதாவது ஒரு சிறு நிகழ்ச்சி, மற்றவர்களுக்கு ஊறு நேருகிற ஒரு சிறு நிகழ்ச்சி ஏற்பட்டதா? அந்த வகையிலே இன்றைக்குக் காவல்துறை திறம்படச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்றால், அது யாருடைய தலைமையில்? நம்முடைய டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய தலைமையில் என்று சொன்னால் மிகையாகாது.

இன்னும் சொல்லப்போனால், காவலர்கள் எண்ணிக்கையை எடுத்துக்கொண்டால், மகாராஷ்டிரா மாநிலத்தில் 676 பேருக்கு ஒரு காவலர் இருக்கிறார். பஞ்சாபிலே 371 பேருக்கு ஒரு காவலர் இருக்கிறார். ஆனால் நம்முடைய தமிழ்நாட்டிலே, 795 பேருக்கு ஒரு காவலர்தான் இருக்கிறார். மாநகரங்களை எடுத்துக்கொண்டால்கூட டெல்லியிலே 192 பேருக்கு ஒரு காவலர் என்றும், பம்பாயில் 234 பேருக்கு ஒரு காவலர் என்றும், கல்கத்தாவிலே 507 பேருக்கு ஒரு காவலர் என்றும் இருக்கிறார்கள். ஆனால் சென்னையில் 687 பேருக்கு ஒரு காவலர்தான். நான் 1991 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் நிலைமையைச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். இந்த அளவில் குறைவான காவலர்களை வைத்துக் கொண்டு கூட, இன்றைக்கு மாபெரும் சாதனைகளை நிகழ்த்திக் காட்டிக் கொண்டு இருப்பவர்தான் நம்முடைய டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

வழக்குகள் எவ்வாறு குறைந்திருக்கின்றன? அதனுடைய கண்டுபிடிப்பு சதவீதம் எவ்வளவு அதிகரித்திருக்கிறது என்பதை எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள். இந்த காவல்துறையில் இவ்வளவு பெரிய சாதனைகளை எப்படி நிகழ்த்தி இருக்கிறார்கள்? இதை மாடர்னைஸ் செய்ததன் மூலமாக இன்றைக்கு டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் நிகழ்த்திக் காட்டி இருக்கிறார்கள்.

பிற்பகல் 12.15.

நான் சட்ட சபை குறிப்புகளைப் பார்த்துக் கொண்டிருக்கும்போது ஒன்றைப் பார்த்தேன். 1958 ஆம் வருடம் இதே சபையில் ஒரு மாண்புமிகு உறுப்பினர் பேசி இருக்கிறார். எல்லா சர்க்கிள் இன்ஸ்பெக்டர்களுக்கும் ஒரு ஜீப் வழங்கினால் காவல் துறையை நன்றாக நடத்த முடியும் என்று இங்கே பேசி இருக்கிறார். இன்றைக்கு என்ன பார்த்துக் கொண்டிருக்கிறோம்? 1958-லிருந்து இன்றைக்கு நம்முடைய தங்கத்தலைவி

டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆட்சிக்கு வந்த 1991 ஆம் ஆண்டு வரையில் வெறும் 33 காவல் நிலையங்களுக்கு மட்டும் தான் ஜீப்புகளை வழங்கி இருக்கிறார்கள். ஆனால் நம்முடைய தலைவி இந்த குறுகிய காலத்தில் 1991-லிருந்து 1994 வரையில் நம்முடைய தமிழகத்தில் உள்ள 1,130 காவல் நிலையங்களுக்கும் இன்றைக்கு ஜீப்புகளை வழங்கி இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது ஒரு சரித்திர சாதனை அல்லவா?

அதோடு மட்டுமா, இன்னும் பாருங்கள், 9 எம்.எம்.பிஸ்டல், 9 எம்.எம். கார்பைன், 7.62 மெஷின் கன், ஏ.கே. 47 இதையெல்லாம் நம்முடைய காவல் துறை இதற்கு முன்னால் எந்த முதலமைச்சருடைய காலத்திலாவது கண்டிருக்கிறதா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு மட்டுமா, இன்றைக்கு மாநிலத் தலைமை நிலையங்களில் மாவட்டத் தலைமை காவல் நிலையங்களில் எல்லாம் `பேக்ஸ்' வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல் காவல் துறையில் என்னென்ன காலக்கட்டத்தில் என்னென்ன நடந்தது என்பதை உடனுக்குடன் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்கு இதையெல்லாம் சரி செய்ய வேண்டும் சீர் செய்ய வேண்டும். இன்றைக்கு தலைமையிடங்களிலும் மாவட்டத் தலைமை இடங்களிலும் கம்ப்யூட்டர் வசதியை செய்துகொண்டு இருக்கிறார்கள். இந்த வளர்ந்து வரும் நவீன காலத்தில் எல்லா நவீன வசதிகளையும் வைத்திருந்தால்தான் இவ்வளவு பெரிய மாநிலத்தை சிறப்பான முறையில் நடத்திச் செல்ல முடியும் என்ற உண்மையைத் தெரிந்திருப்பவர் தான் நம்முடைய புரட்சித்தலைவி அவர்கள் என்று சொன்னால், அதற்காக நாம் எல்லாம் பெருமைப்படக் கூடியவர்களாக இருக்கிறோம்.

அதுமட்டுமல்லாமல் காவல் துறையை நவீனப்படுத்த வேண்டுமென்று மத்திய அரசாங்கத்திடம் 80.45 கோடி ரூபாய் கேட்டார்கள். இந்தக் கோரிக்கையானது மத்திய அரசாங்கத்தினுடைய வரவு-செலவுத் திட்டத்தைப் பார்த்தால் ஒரு சிறு துளி வெள்ளம் கூட கிடையாது. ஆனால் மத்திய அரசாங்கம் எவ்வளவு கொடுத்திருக்கிறது? வெறும் 10 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறது. இன்றைக்கு டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் எவ்வளவு பெரிய சாதனையைப் படைத்து இருக்கிறார்கள்? தென்கிழக்கு ஆசிய நாடுகளிலே ஒரு மிகப் பெரிய இயக்கமாக, ஒரு கொடூரமான இயக்கமாக இருந்த எல்.டி.டி.ஈ. இயக்கத்தை இன்றைக்கு வேரோடு அறுத்தெறிந்து இருக்கிறார்கள் நம்முடைய புரட்சித்தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த சமயத்தில் இந்த காவல் துறையை நவீனப்படுத்த வேண்டுமென்று அந்தப் பணத்தை கேட்டார்கள். ஒரு மாநிலத்தில் கொடூர இயக்கம் பரவி இருக்கிறது என்றால் அதை

வேரறுப்பதற்காக உதவி செய்கிற தார்மீகக் கடமை மத்திய அரசாங்கத்திற்குக் கிடையாதா? நம்முடைய நிதி நிலை அறிக்கைக்கு பதில் சொல்லும்போது கூட நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தை இங்கே சொன்னார்கள். மத்திய அரசாங்கத்திற்கு என்று மக்கள் கிடையாது. மாநில அரசாங்கத்திலே இருப்பவர்கள் தான் மத்திய அரசாங்கத்திற்கு மக்கள். நம்முடைய தமிழ் நாட்டு மக்களும் இந்த மத்திய அரசாங்கத்தினுடைய மக்கள் தானே? இந்தத் தமிழ் நாட்டில் ஒரு கொடூரம் நடந்து கொண்டிருந்தபோது அதை அடக்குவதற்காக காவல் துறையை நவீனப்படுத்த வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்ட போது அதைக் கொடுப்பதற்கு மனம் வராத அரசு தான் இந்த மத்திய அரசாங்கம் என்பதை நாம் அனைவரும் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். இதையெல்லாம் அவர்கள் புரிந்து கொள்கிற காலம் வெகுவிரைவில் வரப் போகிறது.

பிற்பகல் 12.20

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையை நவீனப்படுத்துவதற்கு நாம் கோரிய நிதியுதவியை மத்திய அரசாங்கம் செய்யவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் பழனியம்மாள் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அது உண்மை. அதோடு இன்னொன்றையும் நான் இணைத்து இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன். காவல் துறையை நவீனப்படுத்துவதற்கு நாம் நிதி கோரியுள்ளோம் என்றால் அது நியாயமான கோரிக்கை. அதை மத்திய அரசாங்கம் நிறைவேற்றவில்லை. ஆனால் அதை விட முக்கியமானது நாட்டின் பாதுகாப்பு என்பதாகும். ஏற்கெனவே நான் தெரிவித்ததைப் போல், தமிழ்நாட்டிற்கு 1000 கிலோ மீட்டர் நீளம் உள்ள ஒரு கடற்கரையோரம் இருக்கிறது. கோஸ்ட் லைன். இது நாட்டினுடைய எல்லையாகும். இதைப் பாதுகாப்பது எப்படி மாநில அரசின் பொறுப்பாக மட்டும் இருக்க முடியும்? அதுவும் வெளிநாட்டிலிருந்து இத்தகைய terrorists-LTTE போன்றவர்கள் ஊடுருவக்கூடிய அபாயம் இருக்கும்போது, இந்த கோஸ்ட் லைனைப் பாதுகாக்கின்ற முழுப் பொறுப்பும் மாநில அரசு மட்டும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்வது நியாயமாகாது. நான் ஏற்கெனவே இங்கே சுட்டிக்காட்டியதைப் போல், பஞ்சாப் மாநிலத்தின் எல்லையை -- அது நாட்டின் எல்லை - பஞ்சாப் மாநிலத்தின் எல்லையைப், பாதுகாப்பதற்காக மத்திய அரசாங்கம் ஒரு கிலோ மீட்டருக்கு 30 லட்சம் ரூபாய் வீதம் செலவிடுகிறது. ஆனால் ஆயிரம் கிலோ மீட்டர் நீளமுள்ள தமிழ்நாட்டின் கோஸ்ட் லைனைப் பாதுகாப்பதற்காக நாங்கள் வெறும் 12 கோடி ரூபாயை மட்டும்தான்

மத்திய அரசாங்கத்திடம் கோரியிருக்கிறோம். அதைக்கூட மத்திய அரசாங்கம் கொடுக்கவில்லை என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திருமதி க. பழனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளக்கம் தந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு மத்திய அரசாங்கம் அப்படி நடந்து கொண்டிருப்பதால்தான், அரசியல் சித்தாந்தங்கள் மாறிக் கொண்டிருக்கின்றன. அந்தக் காலத்திலே, மத்தியிலே ஒரு கட்சியும், மாநிலத்திலே ஒரு கட்சியும் ஆளவேண்டும் என்பது ஒரு நியதியாக கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. ஆனால், இன்றைக்கு நம்முடைய தமிழக மக்கள், டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய மாண்பினால் ஒரு புதிய சித்தாந்தத்தைக் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதுதான் நமக்குப் பழனியிலே கிடைத்த வெற்றி. இன்றைக்கு வருகின்ற காலகட்டங்களிலே அந்த சித்தாந்தத்தை, ஒரு புதிய அரசியல் சித்தாந்தத்தை நம்முடைய மாநில மக்கள் செய்து காட்டப் போகிறார்கள். அன்றைக்குக் காவிரி நீர்ப் பிரச்சினை வந்தபோது, அங்கே நம்முடைய எம்.பி.க்கள் எல்லோருமே, தமிழ்நாட்டைச் சேர்ந்த எம்.பிக்கள் எல்லோருமே நம்முடைய கழகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்திருந்தால் அன்றைக்கு அங்கேயே ஒரு மாபெரும் போராட்டத்தை நடத்திக் காட்டி நமக்கு வெற்றியைப் பெற்றிருக்கக்கூடிய நிலையைக்கூட ஏற்படுத்தி இருக்க முடியும். எனவே, இன்றைக்கு மத்திய அரசாங்கம், நம்முடைய டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கூறியதைப் போல, வேறு மாநிலங்களுக்கு எல்லாம் உதவி செய்துவிட்டு, நமக்கு உதவி செய்யாது இருக்கின்ற நிலையை நம்முடைய தமிழ்நாட்டு மக்கள் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே நம்முடைய டாக்டர், புரட்சித் தலைவி அவர்கள், வேறு எந்த மாநிலத்திலும் ஏற்படுத்தாத Coastline Security Force அது போராளிகள் ஊடுருவுவதைத் தடுப்பது மட்டுமல்லாமல், இங்கிருந்து .பொருட்களைக் கடத்திச் செல்லாமல் இருப்பதற்காகவும், குற்றவாளிகள் தப்பிக்காமல் இருப்பதற்காகவும் இந்த போர்ஸை ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

அதேபோல்தான் ஹைவே செக்போஸ்ட்கள் 190-ஐ இன்றைக்கு அமைத்திருக்கிறார்கள் என்றால், இன்றைக்கு தமிழ்நாட்டில், வழிப்பறிக் கொள்ளைகள் வருடந்தோறும் எப்படி கணிசமாகக் குறைந்து கொண்டு வருகிறது என்பதை நாம் கண்டு கொண்டிருக்கிறோம். எனவே, நம்முடைய டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலம்தான் நம்முடைய காவல் துறையினுடைய பொற்காலமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. காவல் துறையினருக்கு வேண்டிய அனைத்து வசதிகளையும் செய்ய

தி.மு.க. ஆட்சியால் மூடப்பட்ட போலிஸ் ஹவுசிங் கார்ப்பரேஷனைக்கூட திரும்பக் கொண்டு வந்து, இன்றைக்கு வருடந்தோறும் 1,500 வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்ற நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். எனவே, இது காவலர்களுடைய பொற்காலம் என்று சொன்னால், அது மிகையாகாது.

அதேசமயத்தில் என்னுடைய தொகுதியைச் சேர்ந்த சில கோரிக்கைகளைக் கூறி நான் முடித்துக் கொள்கிறேன். இப்போது ராசிபுரம் வட்டத்தை டி.எஸ்.பி. அந்தஸ்துக்கு உயர்த்தி இருக்கிறார்கள், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். அதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அந்த டி.எஸ்.பி. அலுவலகத்திற்கு ஒரு கட்டிடம் கட்டிக் கொடுக்க வேண்டுமாய் மிகவும் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் ராசிபுரம் நகரத்தில் டிராபிக் விங் வேண்டும் என்று பல தடவை கோரிக்கை வைக்கப்பட்டு, அதனுடைய புரப்போசல் நமது அரசுக்கு வந்திருக்கிறது. எனவே, ராசிபுரம் நகரத்திற்கு டிராபிக் விங் ஒன்றை ஏற்படுத்தித் தர புரட்சித் தலைவி அவர்கள் உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, தீயணைப்பு நிலையத்திற்கு அங்கே ஒரு கட்டிடம் இல்லாததால், அந்த தீயணைப்பு என்ஜின் வெய்யிலிலும் மழையிலும் இருக்கிறது. அதற்கு ஒரு கட்டிடம் கட்டித் தரவேண்டும் என்று மிகுந்த பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல ஒரே ஒரு பொதுவான தொகுதிப் பிரச்சினையை நான் இங்கே முன்வைக்கக் கடமைப்பட்டுள்ளேன். ஏன் என்று சொன்னால், பல காலமாக ராசிபுரத்திற்கு பெண் கொடுக்கவே மறுப்பார்கள். ஏன் என்றால், அங்கு அவ்வளவு தண்ணீர் கஷ்டம் என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட அந்த ஊருக்கு இன்றைக்கு 21 கோடி ரூபாய் செலவில் பூலாம்பட்டி-ராசிபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அளித்திருக்கிறார்கள். அந்தப் பணிக்கு, ஏதாவது சிறப்பு நிதியிலிருந்தாவது அதிக நிதியை ஒதுக்கிக் கொடுத்து, இன்னும் ஒரு 6 மாத காலத்திற்குள் அந்த நகருக்கு, இந்த பூலாம்பட்டி-ராசிபுரம் கூட்டுக்குடிநீர்த்திட்டத்தை நிறைவேற்றி, அங்கே தண்ணீர் கொடுக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொண்டு இங்கே பேச பெரிய வாய்ப்பு வழங்கிய உங்கள் அனைவருக்கும் நன்றியைக் கூறி முடிக்கிறேன், வணக்கம்.

[1995 ஏப்ரல் 6

பிற்பகல் 12.25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி பழனியம்மாளையே அந்த ஊரில் நம்பிக் கொடுத்திருக்கிறார்கள். அந்த அளவிற்கு உங்கள் பெற்றோரைப் பாராட்ட வேண்டும். (சிரிப்பு)

திரு. பரிதி இளம்வழுதியை இன்று பேசக் கேட்டிருந்தேன். அவர், வீட்டில் இருந்தாகவேண்டும், ஒரு முக்கியமான அலுவல் இருக்கிறது என்று சொல்லி, அவர் போய்விட்டார். (குறுக்கீடு)

திரு. ஜி. பழனிசாமி: நான் காலையிலே உங்கள் அறையிலே வந்து சொன்னேன்.(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பழனிசாமி, நீங்கள் என்னிடம் சொன்னீர்கள், ஆனால், நீங்கள் நாளை பேசுவது என்று வருகிறபோது நாளை காலை பேசுங்கள். நாங்கள் போட்ட திட்டப்படி போகமுடியாமல் போகிறது. திரு. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல்துறை மானியக் கோரிக்கை மீது ஒரு சில கருத்துக்களைக் கூற அனுமதித்த தங்களுக்கு எனது கட்சியின் சார்பிலும், எனது சார்பிலும் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக காவல்துறை என்பது சமுதாயத்தில் இருக்கக்கூடிய அனைத்துப் பகுதி மக்களின் உயிர், உடமைகளைப் பாதுகாக்கக் கூடிய மிகப் பெரிய பொறுப்பை நிறைவேற்றக்கூடிய ஒரு துறையாகும். அப்படிப்பட்ட அந்தத் துறைதான் மக்களுடைய வாழ்க்கைக்கும், உயிருக்கும், உடமைக்கும் உத்தரவாதமாக அமைந்திருக்கக்கூடிய ஒரு துறையாகும். இந்தத் துறை பணிகளைச் செய்கிறபோது அது மக்களுக்கு ஆற்றுகின்ற பணி சிறப்பாக இருக்குமென்றால், யாரும் பாராட்டாமல் இருக்கமுடியாது. ஆனால் அதிலே குறை வருகிறபோது அந்தக் குறையைச் சுட்டிக்காட்டுகின்ற கடமை எதிர்க்கட்சிகளுக்கு உண்டு. அப்படிச் சுட்டிக்காட்டுகின்ற அந்தக் குறைகளைப் பரிசீலித்து எதிர்காலத்திலே நடக்காமல் பாதுகாக்கின்ற பொறுப்பு அரசைச் சார்ந்ததாகும். அந்த வகையிலே இந்த அறிக்கையில் நாடறிந்த சில உண்மைகள் மறைக்கப் பட்டிருக்கிறது.

குறிப்பாக காவல் நிலையங்களிலே நடந்த கற்பழிப்புச் சம்பவங்கள் பற்றி பல நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. சட்டமன்றத்திற்கு முன்னாலும் வந்திருக்கிறது. நாடு முழுமையும் அது வந்திருக்கிறது. அப்படிப்பட்ட

வழக்குகள் குறித்து எம்மாதிரியான நடவடிக்கை எடுக்கப்பட்டது, நடவடிக்கை கட்டுப்படுத்தப்பட்டதா என்பது இந்த அறிக்கையிலே சுட்டிக்காட்டப்படவில்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருசில கற்பழிப்பு நிகழ்ச்சிகள் ஏற்கெனவே நடைபெற்றிருக்கலாம். அவ்வப்போது இந்தக் கற்பழிப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றபோது இந்த அவையில் ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தப் பிரச்சினைகளை எழுப்பி இவற்றுக்கெல்லாம் நான் ஏற்கெனவே விரிவாக இதே அவையில் பதிலும் அளித்திருக்கிறேன். ஆகவே இந்தப் பாலிசி நோட்டில், ஒரு கொள்கை விளக்க நோட்டில் எதையும் மறைக்க வேண்டிய அவசியமில்லை, மறைக்கும் எண்ணமும் இந்த அரசுக்கு இல்லை. வேறு புதியதாக ஏதாவது கற்பழிப்பு சம்பவங்கள் நடைபெற்றிருந்தால், அது இந்த அரசுக்குத் தெரியாமல் மாண்புமிகு உறுப்பினர் தம்புசாமி அவர்களுக்குத் தெரிந்திருந்தால் அந்தக் குறிப்பிட்ட வழக்குகளை அவர் தெரிவிப்பாரேயானால், அதற்கான பதிலையும், விளக்கத்தையும் அளிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே நான் ஏன் குறிப்பிட வேண்டிய அவசியம் வருகிறது என்று சொன்னால், இது தொடரக்கூடாது என்பதற்காகத்தான், கடந்த மாதம் பிப்ரவரி மாதம் 21-ஆம் தேதி இதே வண்ணாரப்பேட்டையில் ஒரு கற்பழிப்பு. சென்னையிலே இருக்கிற வண்ணாரப்பேட்டையில். அதுகுறித்து நானே பேரவைத் தலைவருக்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானமே கொடுத்திருக்கிறேன். இப்போது நடந்திருக்கிற நிகழ்ச்சி. ஆகவே இதுபோன்று தொடராமல் தடுப்பதற்கான ஒரு உத்தரவாதத்தை இனிமேலாவது நடவாமல் இருப்பதற்கான வகையில் காவல்துறை மூலமாக மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று லாக்அப் மரணங்கள் வருகிறது. அப்படிப்பட்ட லாக்அப் மரணங்கள் ஏன் ஏற்பட்டது? எப்படி ஏற்பட்டது? ஏற்பட்டதற்கான அடிப்படையான காரணங்கள் என்னவென்பதைப் பரிசீலித்து, அது நடக்காமல் இருக்க வேண்டும். அதற்கான உத்தரவாதத்தை..... (குறுக்கீடு)

பிற்பகல் 12.30

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு உறுப்பினர் தம்புசாமி அவர்கள் பேசுகின்றபோது ஏதோ காவல் துறையினரால் ஒரு பெண்

கற்பழிக்கப்பட்டு, அந்தச் சம்பவத்தை இந்த அரசு மறைத்துவிட்டது போல் பேசினார். அவர் குறிப்பிடுகின்ற அந்தச் சம்பவம் வெளியிலே நடைபெற்ற ஒரு சம்பவம். காவல் துறைக்கும் அதற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. அதனால் அத்தகைய நிகழ்வுகள் நடைபெறாது என்று காவல் துறையினர் உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்று கோருவது பொருத்தமாக இல்லை என்றே கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வண்ணாரப்பேட்டை காவல் நிலையத்திலே அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு, திரும்ப வீட்டிலே கொண்டு வந்து விடுகிற நேரத்திலே காவலர்களால் கற்பழிக்கப்பட்டது என்பதுதான் தங்களுக்கும் மகஜர் வந்திருக்கிறது. தொடர்ந்து இயக்கங்கள் நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலைத் தந்து கொண்டிருக்கிறார். அதனுடைய முழு விவரமும் நான் பெற்று, நாளை இந்த அவையில் தெரிவிப்பேன் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொலை கொள்ளை சம்பந்தமாக, கொள்ளை அடிக்கிற பொருட்கள் மீட்கப்பட்டு திருப்பி கொடுக்கப்பட்டிருப்பதாக, இன்று கூட பத்திரிக்கையிலே வந்திருக்கிறது. இந்த அறிக்கையிலேயும் குறிப்பிடப் பட்டிருக்கிறது ஒரு வரவேற்கத்தக்க அம்சம். ஆனால் இது தொடராகவே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதைத் தடுப்பதற்கு, தடுத்து நிறுத்துவதற்கு என்ன நடவடிக்கை என்பதைப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்று சொன்னால்...

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கொள்கைக் குறிப்பில் நாங்கள் என்ன கொடுத்திருக்கிறோம் என்று சொன்னால், இந்த அரசு பதவி ஏற்ற பிறகு 1991-லிருந்து ஆண்டுக்காண்டு குற்ற நிகழ்வுகள் குறைந்து கொண்டே வந்திருக்கிறது. அதேசமயம் கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்களின் சதவீதம் உயர்ந்து கொண்டே வந்திருக்கிறது. 1991 ஆம் ஆண்டில் 64 சதவீதம் என்று கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்களின் சதவீதம் இருந்தது. அது இன்று நான்கே ஆண்டுகளில் 74.3 சதவீதமாக உயர்ந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொன்னால், அதாவது 4 ஆண்டு காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்களின் சதவீதம் 10.3 சதவீதம் உயர்ந்திருக்கிறது என்று சொன்னால், இது அகில இந்தியாவிலேயே ஒரு மாபெரும்

சாதனை (மேசையைத் தட்டும் ஒலி) வேறு எந்த மாநிலத்திலும் சாதிக்காத ஒரு சாதனையாகும். ஆகவே மாண்புமிகு தம்புசாமி அவர்கள் கொள்ளைகள், கொலைகள் நடைபெற்றுக் கொண்டேயிருக்கிறது, அவற்றை முற்றிலுமாகத் தடுக்க வேண்டும் என்று சொன்னால், இந்தியாவில் எந்த மாநிலத்திலாவது குற்றங்கள் நடைபெறாமல் இருக்கிறதா? உலகத்தில் எந்த நாட்டிலாவது குற்றங்கள் நடைபெறாமல் இருக்கின்றனவா? யாருமே கொலை செய்ய மாட்டார்கள், யாருமே திருடமாட்டார்கள், யாரும் எவ்விதக் குற்றமும் செய்யமாட்டார்கள் என்று காவல் துறையோ, ஒரு அரசோ எப்படி உத்தரவாதம் கொடுக்க முடியும்? இந்தக் குற்ற நிகழ்வுகள் குறைக்கப்படும், குற்றங்களைக் கண்டுபிடிக்கிற சதவீதத்தை அதிகரிக்கிறோம் என்றுதான் நாங்கள் சொல்ல முடியுமே தவிர, குற்றங்களே நடைபெறாத நாடு இந்த உலகத்திலேயே இருக்க முடியாது. ஏனென்றால் குறை இல்லாத மனிதன் இந்த உலகத்தில் கிடையாது. ஆகவே நாம் எதை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றால் குற்ற நிகழ்வுகளின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது. அதேசமயம் கடந்த 4 ஆண்டுகளாக, கண்டுபிடிக்கப்பட்டக் குற்றங்களின் சதவீதம் உயர்ந்து கொண்டே வருகிறது. இதைத்தான் நாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும், பாராட்ட வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருடுகள் கண்டுபிடிப்பதிலே, திருவாரூரைச் சார்ந்த திருக்கடவாசல், நாகைப்பட்டனத்தில் நீலாட்சி அம்மன் கோயிலினுடைய மரகத லிங்கம் காணாமல் போய்விட்டது. போன சட்டமன்ற கூட்டத்திலேகூட இது வலியுறுத்தப்பட்டது. வேகமாகக் கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் இதுவரையிலும் கண்டுபிடிக்கப்படவில்லை.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற அந்த வழக்குகளில் எல்லாம் விசாரணை நடந்து கொண்டேயிருக்கிறது. 100க்கு 100 சதவீதம் எல்லாக் குற்றங்களையும் கண்டு பிடித்து விட்டோம் என்று நாங்கள் சொல்லவில்லை. அப்படி எந்த அரசும் சொல்ல முடியாது. ஆனால் காவல் துறை எடுத்த முயற்சிகளினால்தான், காவல் துறை மிகவும் திறமையான வகையில் செயல்பட்ட காரணத்தினால் தான் நிகழ்ந்த குற்றங்களில் 74.3 சதவீதம் குற்றங்கள் கண்டுபிடித்து இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு.வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வழக்குகளைப் பற்றி சொல்லுகிற வகையில் கள்ளச் சாராய

சம்பந்தமான ஒரு வழக்கு இருப்பதாகவோ அல்லது கண்டுபிடிக்கப் பட்டதாகவோ அல்லது தண்டனை வழங்கப்பட்டதாகவோ இந்த அறிக்கையிலே குறிப்பிடப்படவில்லை.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 கொள்கைக் குறிப்புகள் இந்த அவையிலே தரப்பட்டிருக்கின்றன. அவர் காவல் துறை சம்பந்தப்பட்ட அந்தக் கொள்கை குறிப்பினை மட்டும் படித்து இருக்கிறார் என்று கருதுகிறேன்.

புரொகிபிஷன் அண்டு எக்சைஸ். அந்தப் பாலிசி நோட்டைப் படித்துப் பார்த்தால் பல பக்கங்களுக்கு காவல் துறையினர் இந்த புரொகிபிஷன் அபென்சஸ் சம்மந்தமாக எத்தனை நடவடிக்கைகள் எடுத்து இருக்கிறார்கள், எத்தனை பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள், எத்தனை வாகனங்கள் கான்பிஸ்கேட் செய்யப்பட்டுள்ளன, எத்தனை ஆயிரம் லிட்டர் கள்ளச் சாராயம் கைப்பற்றப்பட்டுள்ளது போன்ற பல விவரங்கள் அந்தக் குறிப்பிலேயே இருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த புரொகிபிஷன் அண்டு எக்சைஸ் சம்பந்தப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பைப் படித்துவிட்டுப் பேச வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12.35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களுக்குப் பொதுவாக போலீஸ் என்றாலே, அந்தக் காக்கிச் சட்டை, லா அண்டு ஆர்டர் உள்ளேயே முடிந்து போவது போன்ற ஒரு தோற்றம்.

திரு.வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வளவு வழக்குகள் இருந்தாலும் நான் இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் அவ்வளவு வழக்குகள் இருந்தாலும் கண்டு பிடிக்கப்பட்டாலும் சட்டம் கொண்டுவருகிறபோதே நான் சொன்னேன், இதை முழுமையும் அமுல்படுத்த முடியாது என்று. ஆனால் இது இன்றைய தினம் இல்லாத இடங்களே கிடையாது என்ற நிலைமைக்கு...

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு சில விவரங்களைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இவையெல்லாம் அவருக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு இருக்கக்கூடிய மாநில ஆயத்தீர்வை கொள்கைக் குறிப்பிலேயே இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் படிக்கத் தவறிவிட்டதால் அவற்றைச் சுட்டிக் காட்ட வேண்டிய அவசியம்

ஏற்பட்டிருக்கிறது. 1-1-1994 முதல் 28-2-1995 வரையிலான காலத்திற்குரிய புள்ளிவிவரங்கள் கண்டுபிடிக்கப்பட்ட மதுவிலக்குக் குற்றங்களின் மொத்த எண்ணிக்கை 6,89,390. கைது செய்யப்பட்ட மதுவிலக்குக் குற்றவாளிகளின் மொத்த எண்ணிக்கை 6,81,000. அவர்களில் கள்ளச் சாராயம் காய்ச்சுவோர் தடைச் சட்டத்தின்கீழ் காவலில் வைக்கப்பட்ட மதுவிலக்குக் குற்றவாளிகள் எண்ணிக்கை 1,462. கள்ளச்சாராயம் காய்ச்சுவதாகக் கண்டுபிடிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 85,772. அழிக்கப்பட்ட சாராய ஊறல்களின் அளவு 4,62,93,655 லிட்டர். கைப்பற்றப்பட்ட கள்ளச் சாராயம் 71,62,512 லிட்டர். கைப்பற்றப்பட்ட சாராயப் பாக்கெட்டுகளின் எண்ணிக்கை 14,52,225. கைப்பற்றப்பட்ட தெளிந்த சாராவி 2,58,060 லிட்டர். கைப்பற்றப்பட்ட மதுக் கஷாயம் 1,17,064 லிட்டர். அனுமதி இன்றி இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைப் புட்டிகள் கைப்பற்றப்பட்டவை 1,68,754. அனுமதி இன்றி இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைகள் கைப்பற்றப்பட்ட எண்ணிக்கை 2,637. கைப்பற்றப்பட்ட மோட்டார் வண்டிகளின் எண்ணிக்கை 1,754. கைப்பற்றப்பட்ட சைக்கிள்களின் எண்ணிக்கை 2,779. பறிமுதல் செய்யப்பட்ட வண்டிகளின் (அனைத்து வகை) எண்ணிக்கை 2,230. (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு மேலும் இத்தகைய வழக்குகளில் காவல்துறை நடவடிக்கை எடுக்கவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் எப்படிச் சொல்லுகிறார் என்பதுதான் புரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனாலேதான் இந்த மதுவிலக்குக் கொள்கை தோற்றுவிட்டது என்று . . .

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கையில் வேறுபாடு இருக்கலாம். அது மாநிலத்திற்கு மாநிலமும் மாறலாம். என்னைப் பொறுத்தவரையில் எங்கள் கட்சியில் எந்த மாறுபாடும் இல்லை. ஆனால் இந்தக் குற்றங்கள் நடந்தபோது காவல் துறை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டிச் சொன்னார்கள், குற்றம் சாட்டினார்கள். அதற்குத்தான் இத்தனை விவரங்களையும் அவருக்குக் சுட்டிக் காட்டினேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை செயல்பாட்டை சுதந்திரமாக செயல்பட அனுமதிக்க வேண்டும். குறிப்பாக காவல் துறையை ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் இயக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் நான் கூறக்கூடியது.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தம்புசாமி அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் இந்தக் காவல் மானிய கோரிக்கை வரும்போது இத்தகைய பொதுப்படையான குற்றச்சாட்டுகளைச் சொல்வதை வாடிக்கையாக வைத்துக் கொண்டிருக்கிறார். இந்த ஆண்டும் தான் சார்ந்து இருக்கின்ற கட்சிக்கு அவர் ஆற்ற வேண்டிய கடமையை ஆற்றிக் கொண்டு இருக்கிறார். ஆகவே, இப்படிப் பொதுப்படையாகக் குற்றச் சாட்டுகளைச் சொல்லாமல் குறிப்பாக ஸ்பெசிபிக் குற்றச்சாட்டுகளைச் சொன்னால் எங்களால் அதற்குப் பதில் சொல்ல முடியும்.

பிற்பகல் 12.40

திரு.வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று சொன்னார்கள்.**

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: பேரவைத் தலைவர் அவர்களே, பல சந்தர்ப்பங்களில் காவல் துறையினர் எங்கள் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள்மீதே இன்னும் சொல்லப்போனால் சில சட்டமன்ற உறுப்பினர்கள்மீதே நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கட்சி நிர்வாகிகள் மீதும் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். காவல் துறையினர் முழு சுதந்திரத்தோடு செயல்படுகிறார்கள் என்பதற்கு இத்தகைய நிகழ்ச்சிகளே சான்று. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தம்புசாமி அவர்களே, ** என்று சொல்லுகிறீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உங்களை கேட்டது, ஏதாவது ஒரு குறிப்பிட்ட சம்பவத்தைச் சொல்லுங்கள் என்று கேட்டால் ஒட்டுமொத்தமாக இப்படி நீங்கள் குற்றச்சாட்டைச் சொல்வது சரியல்ல. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. வே. தம்புசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாகச் சொல்கிறேன். வலிவளம் காவல் நிலையத்தைச் சேர்ந்த, வலிவளத்திற்கு அருகாமையில் இருக்கக் கூடிய தென்சாரியிலே ஒரு வழக்கு. நாங்கள் கொடுத்த வழக்கை காவல்துறையினர் நடவடிக்கை எடுக்காமல் ஆளுங்கட்சியைச் சார்ந்து கொடுக்கப்பட்டதினுடைய விளைவாக அநாவசியமாக எங்கள் தோழர்களைக் கைது செய்து சிறையில் அடைத்தார்கள். நான் வரிசையாகச் சொல்கிறேன். அதே மாதிரி...

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுங்கட்சி சொன்னார்களா? எதிர்கட்சி சொன்னார்களா, தம்புசாமி அவர்கள் சொன்னார்களா என்பது பிரச்சினை அல்ல. அந்த வழக்கிலே என்ன நேச்சர்? அந்த வழக்கிலே என்ன உண்மை இருக்கிறதோ அந்த உண்மையை எடுத்து இருப்பார்கள். சில இடங்களிலே நீங்கள் கொடுத்ததிலே வேறு கட்சிக்காரர்களைக்கூட நடவடிக்கை எடுத்திருப்பார்கள். எனவே அவர் எதிர்பார்ப்பது என்னவென்று சொன்னால் இவர் சொல்வது எல்லாம் அங்கே நடந்துவிட வேண்டும்; இவர் சொல்கிறவர்களை எல்லாம் கைது செய்து உள்ளே போட்டுவிட வேண்டும். அப்படிச் செய்தால் அந்தக் காவல்துறை சுதந்திரமாக இயங்குகிறது என்று அவர் ஏற்றுக்கொள்வார். கடைசியிலே பார்த்தால் இப்போது முதலமைச்சர் அவர்கள் அந்தத் துறையை இயக்கக்கூடாது, நான் இயக்குகிறேன் என்று சொல்கிற அளவுக்கு வந்துவிடுவார் போல் இருக்கிறது.

திரு. வே. தம்புசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, நான் அப்படி சொல்லவில்லை. அப்படிக் கருதவில்லை. மாவட்டக் கண்காணிப்பாளர் அவர்களிடமே நான் பேசினேன். யார் தவறு செய்தார்களோ அவர்கள் மீது நீங்கள் விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பல தடவை நான் பேசியிருக்கிறேன். பேசாமல் அல்ல.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசாரித்துத்தான் அவர்கள் அந்த நடவடிக்கை எடுத்திருப்பார்கள். எனவே விசாரித்ததிலே கிடைத்த பைண்டிங்ஸ் அது. எனவே, அதிலே நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். நீங்கள் என்ன எதிர்பார்க்கிறீர்கள்? நீங்கள் சொன்னபடி அது நடந்திருந்தால் நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள். நீங்கள் சொன்னபடி நடந்திருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள். எனவே நீங்கள் சொன்னதிலே தவறு இருக்கலாம். எனவே நீங்கள் சொல்வதுதான் சரியாக இருக்கும் என்று நீங்கள் நினைத்துக் கொண்டால் அது தவறு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தம்புசாமி அவர்கள் பேசுகிறார்கள். நான் நாளைக்குப் பேசும்போது பேசுகிறேன். அநேகமாக ஆளுங்கட்சித் தரப்பிலேயிருந்து சொல்லக்கூடியதை அதிகாரிகள் கேட்கவில்லை என்று சொன்னால்

எதையாவது அவர்கள் மீது சொல்லி உடனடியாக அவர்களை மாற்றம் செய்யும் நிலைமைகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை ஆணித்தரமாக நான் மறுக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட நிகழ்ச்சிகளே இந்த ஆட்சியில் நடைபெறவில்லை. முந்தைய ஆட்சியில் நடைபெற்றிருக்கலாம். நீங்கள் தோழமையாக இருந்தீர்களே, கூட்டணி அமைத்தீர்களே, அப்போது ஆட்சி அமைத்தார்களே அந்த ஆட்சியில் வேண்டுமானால் அப்படி நடைபெற்றிருக்கலாம். இப்போது நிச்சயமாக அத்தகைய பொலிடிகல் இண்டரபியரன்ஸ் போலீஸ் அட்மினிஸ்ட்ரேஷனில் கிடையவே கிடையாது என்பதை நான் ஆணித்தரமாகச் சொல்ல முடியும். இன்னும் சொல்லப் போனால் என்னுடைய அமைச்சர்களே, என்னுடைய சட்டமன்ற உறுப்பினர்களே, என்னிடம் வந்து சில சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட காவல் துறை அலுவலர்களை மாற்றம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டபோதுகூட, காரணங்கள் சரியாக இல்லை என்பது எனக்குப் புரிந்ததால், நான் அவர்களுடைய கோரிக்கைகளை ஏற்கவில்லை என்பதையும் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. வே. தம்புசாமி: தலைவர் அவர்களே, அதேபோன்று இன்னும் சில வழக்குகள் இருக்கின்றன. நீங்கள் அதுசம்பந்தமாக விசாரியுங்கள். என்ன உண்மை என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். அதற்காகவே நான் சொல்கிறேன். அதுமாதிரி திருவாரூரிலே நடந்த வழக்கு. அதுமாதிரி வெம்மணிச்சேரியிலே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்க விரும்புவதெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் தம்புசாமி அவர்கள் இந்த அவையில் அடிக்கடி என்னைச் சந்திக்கிறார். அடிக்கடி என்னிடம் கடிதங்கள் கொடுக்கிறார். இப்படி ஏதாவது வழக்குகளில் தவறு நடந்திருந்தால் அவர் ஏன் இதை முன்பே என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரவில்லை?

திரு. வே. தம்புசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது, சமீபத்தில் ஒரு மாத காலத்திற்குள் நடந்து இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர். ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மாதத்திற்குள் நடைபெற்றதாக இருந்தாலும்கூட, இப்போது ஏறக்குறைய ஒரு மாத காலமாக இந்தச் சட்டசபை கூட்டத்தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் தம்புசாமி அவர்கள் இந்த மானியக் கோரிக்கை வரும்போது இந்த அவையிலே குற்றச்சாட்டைச் சொல்ல வேண்டும் என்பதற்காக, இதைப்பற்றி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கவலை இல்லாமல் பத்திரமாக அந்தப் புகார்களை எல்லாம் தன்னிடம் வைத்துக் கொண்டு, இப்போது குற்றம் சொல்ல வேண்டும் என்பதற்காக இந்த அவையிலே இந்தப் புகார்களை எழுப்புகிறார் என்று சொன்னால் அது நடைமுறையில் நல்ல நடைமுறை அல்ல. உண்மையிலேயே ஒரு தவறு நடைபெற்றிருந்தால் அதற்குப் பரிகாரம் காண வேண்டும் என்று அவர் விரும்பியிருந்தால் ஏற்கனவே என்னுடைய கவனத்திற்கு இவற்றையெல்லாம் கொண்டுவந்திருக்கலாம்.

பிற்பகல் 12.45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தம்புசாமி. (குறுக்கீடு)

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, நீங்கள் நாளைக்குப் பேசுகிறேன் என்று சொல்லிவிட்டு, எழுந்தால் எப்படி? இன்றைக்கே நீங்கள் பேசியிருக்கலாம். திரு. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக பெண்களை விசாரிக்கின்றபோது பெண் காவலர்களே விசாரிப்பதற்கான ஒரு உத்தரவாதத்தை ஏற்படுத்த வேண்டும். அதே நேரத்தில் ஒரு வழக்கு ஏற்படுகிறது....

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான ஆணை ஏற்கெனவே வழங்கப்பட்டிருக்கிறது. அதுதான் நடைமுறையிலும் நடந்து கொண்டிருக்கிறது.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருவர் சம்பந்தமாக ஒரு குற்றம் வருகிறபோது அந்த நபரை வேண்டுமானால் விசாரிக்கலாம், நடவடிக்கை எடுக்கலாம், வழக்குப் போடலாம், அதிலே யாருக்கும் கருத்து வித்தியாசம் கிடையாது. ஆனால் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களை அழைத்துப்போய் நிர்பந்திக்கின்ற நிலைமை இனிமேலாவது ஏற்படாமல் மாற்ற வேண்டும். அப்படி மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். யாரோ ஒருவர் குற்றம்

செய்கிறார், அவர்கள் வீட்டில் இருக்கிற தாய், தந்தை அல்லது மற்ற உற்றார் உறவினர்களைக் காவல் நிலையத்திற்குக் கொண்டுபோய், சம்மந்தம் இல்லாத குடும்பத்தினரைக் காவல் நிலையத்திற்குக் கொண்டுபோய் துன்புறுத்துவது என்பது இனிமேல் தடுத்து நிறுத்தப்படவேண்டும்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொதுவாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு குடும்பத்தில் ஒருவர் குற்றம் புரிந்திருக்கிறார் என்றால் அந்தக் குடும்பத்திலுள்ள மற்றவர்களை விசாரிப்பதில் எந்தத் தவறும் இல்லை. அவர்கள் விசாரிக்கப்படவேண்டும். ஆகவே, காவல் துறையினர் அவர்களை விசாரிப்பதையே குற்றம் என்று சொல்ல முடியாது. துன்புறுத்தப்படுகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். இதுவெல்லாம் பொதுப்படையான குற்றச்சாட்டு. இதையெல்லாம் ஏற்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பொதுப்படையாகச் சொல்லவில்லை. மயிலாடுதுறை, பாலாக்குடியில் நடந்த நிகழ்ச்சி. இப்படிப்பட்ட நிகழ்ச்சி ஏற்பட்டதினுடைய விளைவாகத்தான் இதை நான் சுட்டிக் காட்ட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

அடுத்து, காவல் துறைக்குத் தேர்வு செய்யப்பட்டது. அப்படித் தேர்வு செய்யப்பட்டவர்கள் அனைவரும் பணியில் அமர்த்தப்படாமல் கிட்டத்தட்ட ஆயிரம் பேருக்கு மேல் இருக்கிறார்கள். அவர்களை விரைவாகப் பணியில் அமர்த்துவதற்கான நிலைமையை ஏற்படுத்த வேண்டும்.

அதேபோல் காவல் துறையில் இன்றையதினம் பல்வேறு பதவிகள் நிரப்பப்படாமல் இருக்கின்றன, காலியிடங்கள் பூர்த்தி செய்யப்படாமல் இருக்கின்றன. உதாரணத்திற்குச் சொன்னால் நாகை மாவட்டத்தில் 15 நேர்முக உதவியாளர்களின் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. இதுவரையில் நிரப்பப்படவில்லை.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு 1994 ஆம் ஆண்டில் மட்டும் காவல் துறையில் 12,224 எக்சிகியூட்டிவ் போஸ்டுகளும், 430 மினிஸ்டிரியல் போஸ்டுகளும் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே பெரிய

அளவிலே பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது தவறு. அங்கொன்றும் இங்கொன்றுமாக ஏதாவது வேகன்சிகள் இருக்கலாம். அவைகள் நிரப்பப்படும், நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோன்று பதவி உயர்வு கொடுக்காமல் இருக்கிறார்கள். பதவி உயர்வு கொடுக்காமல் இருப்பதனுடைய விளைவு அவர்கள் கிட்டத்தட்ட ஓய்வு பெற்று — அவர்கள் பதவி உயர்வு பெறக்கூடியவர்கள், ஓய்வு பெறுகின்ற வயது வந்துகூட, ஓய்வு பெற்றும்கூட அவர்களுக்கு அந்தப் பதவி உயர்வு பெற்றால் கிடைக்கக்கூடிய சலுகைகள் மற்றும் இதர...

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை எந்த ஆட்சியிலும் இல்லாத அளவுக்கு இந்த ஆட்சியில்தான் கீழ்மட்டத்திலிருந்து மேல்மட்டம்வரை ஒவ்வொரு மட்டத்திலும் மிக அதிகப்படியான புரமோஷன்கள், பதவி உயர்வுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த விவரங்களை எல்லாம் ஏற்கெனவே நான் இந்த அவையிலே தெரிவித்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தம்புசாமி அவர்கள், ஓய்வு பெற்ற பிறகும்கூட பதவி உயர்வு இல்லாமல் இருக்கிறார்கள் என்று சொன்னீர்கள். ஓய்வு பெற்ற பிறகு எப்படிப் பதவி உயர்வு கொடுப்பார்கள்? (சிரிப்பு)

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியில்லை. ஓய்வு பெறும் வயதுவரைகூட அவர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்காமல் இருக்கிறார்கள். அப்படி ஒரு வாய்ப்பு இருந்தும்கூட அந்த வாய்ப்பை இழந்தவர்களுக்குப் பென்ஷன் வழங்குகிறபோதாவது, அந்த உயர்வைப் பெற்றிருந்தால் என்ன சலுகைகள் அவர்களுக்குக் கிடைத்து இருக்குமோ அந்தச் சலுகையை எதிர்காலத்திலேயாவது வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12.50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 40 ஆண்டுகளுக்கு முன்னால், 50 ஆண்டுகளுக்கு முன்னால் இறந்துபோன காவல் துறை அலுவலர்களின் குடும்பங்களுக்கு

அந்தப் பென்ஷன் கிடைக்காமல் இருந்தபோது, இந்த ஆட்சி வந்த பிறகு நான்தான் அவர்களுக்கெல்லாம்கூட பென்ஷன் வழங்கி உத்தரவிட்டு இருக்கிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுகூட அவர்கள் ஓய்வுபெற்ற பிறகு பென்ஷன் பெறுவதிலே பல்வேறு சிரமங்கள், சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, அவர்கள் ஓய்வு பெற்ற உடனே பென்ஷன் கிடைப்பதற்கான வழியை, என்னென்ன வாய்ப்புகளை முன்னாடியே ஏற்படுத்த முடியுமோ, அதை முழுமையாக ஏற்படுத்தி, அவர்கள் ஓய்வு பெற்ற உடனேயே பென்ஷன் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக எல்லோரும் ஓய்வு பெற்றவுடனேயே பென்ஷன் பெறுகிறார்கள். அவர் ஏதோ ஓரிரண்டு குறிப்பிட்ட வழக்குகளைப் பற்றிக் குறிப்பிடுகிறார்போல் தெரிகிறது. அதற்கு வேறு ஏதாவது டிபார்ட்மெண்டல் என்கொயரி போன்ற காரணங்கள் இருக்கலாம். எந்தக் குறிப்பிட்ட வழக்கு என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னால்தான் அதற்கு விளக்கம் தர முடியும்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து அவர்களுக்கு வழங்கக்கூடிய பயணப்படி, உணவுப்படி போன்றவை மிகக் குறைவாக இருக்கிறது. இன்றைக்கு சாதாரணமாக, குறைந்தபட்சம் எடுத்துக் கொண்டாலே ஒரு நாளைக்கு 50 ரூபாய், 75 ரூபாய் செலவு செய்யவேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே அவர்களுக்குக் கூடுதல் உணவுப் படி, பயணப்படி வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடுதல் உணவுப்படி, பயணப்படி , Kit maintenance Allowance, Uniform Allowance போன்ற பல படிகள் இந்த ஆட்சி வந்தபிறகுதான் இரண்டு மடங்காகக்கூட உயர்த்தி வழங்கப்பட்டு இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) Food subsidy scheme-ஐ இந்த அரசுதான் சீரமைத்து, இப்போது காவலர்களுக்குப் பொது விநியோகத் துறையிலே வழங்கப்படும் உணவுப் பண்டங்களின் விலையில், பாதி

விலைக்குக் கொடுக்கப்படுகின்றது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக நகரங்களிலே பெரிய பெரிய கடைகளில், நமது காவல் துறையினருக்கு என்ன உடை அளிக்கப்படுகிறதோ, அதேமாதிரியான உடைகளை அணிந்து கொண்டு சிலர் வாசலிலே நின்று கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் அணிந்திருக்கும் உடைக்கும் காவல் துறையினருடைய உடைக்கும் வித்தியாசம் கிடையாது. ஆகவே, அப்படிப்பட்டவர்களுக்கு, அந்த மாதிரியான உடைகளை அணியக்கூடாது என்று எதிர்காலத்திலே உத்தரவிட வேண்டும். வேறு கலரில் அவர்கள் உடை அணிந்து கொள்ளட்டும். அதில் ஒன்றும் பிரச்சினை கிடையாது. ஒரே கலரில் இரண்டு பேர்களும் உடை அணிவதால் வித்தியாசம் தெரியாமல், சாதாரணமானவர்கள் நிற்கும்போதுகூட, சப்-இன்ஸ்பெக்டர் நிற்கிறாரா, சர்கிள் இன்ஸ்பெக்டர் நிற்கிறாரா, இவர் கடையின் வாசலிலே நிற்கிறாரே என்ற குழப்பம் ஏற்படாமல் இருப்பதற்கு, அந்த உடை காவல் துறையினர் அணிவது போன்று இல்லாமல், அது மாற்றப்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் கதர் சட்டை போட்டிருக்கிறேன். அவரும்தான் கதர் சட்டை போட்டிருக்கிறார்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதர் சட்டையும் காக்கிச் சட்டையும் ஒன்றாகக் கூடாது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். காவலர்களுக்கு மானியத்திலே உணவு வழங்குகிறபொழுது அந்த உணவுப் பொருள்கள் ஒரே நாளில் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். ஒரு நாளைக்கு அரிசி கிடைக்கிறது; ஒரு நாளைக்கு பருப்பு கிடைக்கிறது. இந்த உணவுப் பொருள்களைப் பெறுவதற்கு அவர்கள் இரண்டு மூன்று தடவை செலவழிக்க வேண்டிய நிலைமை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு அமைச்சர்.

* மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிசி, பருப்பு இவைகளெல்லாம் கிடைப்பதிலே எப்போதுமே தாமதம் ஏற்படுவதே இல்லை. ஒரே முறையிலேதான் வழங்கப்படுகிறது. எப்பொழுதாவது, மண்ணெண்ணெய் கொடுக்கிறபோது, சில நேரங்களில் அங்கேயிருந்து வருவதிலே தாமதம் ஏற்பட்டால், அது இரண்டு தடவை

பிரித்துக் கொடுக்கப்படுகிறதே தவிர, வேறு உணவுப் பொருள்களைத் தருவதிலே தாமதமும் கிடையாது. வேறு உணவுப் பொருள்களைப் பிரித்து வழங்குவதும் கிடையாது.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால், வலிவலம் காவல் நிலையத்திலிருந்து, நாகப்பட்டினத்திற்கு அருகாமையிலுள்ள அந்தணப்பேட்டைக்குப் போய் அவர்கள் உணவுப் பொருள்களை வாங்க் வேண்டி இருக்கிறது. அப்படிப் போகிறபொழுது, ஒரு நாளைக்கு அரிசி, பருப்பு வழங்கப்படுகிறது. ஒரு நாளைக்கு மற்ற பொருள்கள் வழங்கப்படுகின்றன. கிட்டத்தட்ட 20 கிலோ மீட்டருக்கு அவர்கள் வண்டி வாடகை போன்றவைகளெல்லாம் கொடுக்க வேண்டி இருக்கிறது. அதனால்தான் நான் சொல்கிறேன். அந்தப் பொருள்களைக் கொடுக்கிற போது ஒரே தடவையில் கொடுத்தால் அவர்கள் வண்டியில் ஒரே தடவையில் எடுத்துக் கொண்டு வருவதற்கு உதவிகரமாக இருக்கும் என்பதற்காகச் சொல்கிறேன். ஆகவே, அப்படிக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12.55

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி அவர்கள் பல குறைகளைச் சொல்லி, திரும்பத் திரும்ப உதாரணத்திற்கு வலிவலம் என்ற ஒரு ஊரை மட்டும் சொல்லுகிறார். ஆக, அவர் வேண்டுமானால், வலிவலத்தில் இத்தகைய குறைபாடுகள் இருக்கின்றன என்று சொல்லட்டும். ஏதோ மாநிலம் முழுவதும் இத்தகைய குறைகள் இருப்பது போல அவர் பேசுவது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டக் காவல் துறை அலுவலகம் எங்கள் மாவட்டத்திலே கட்டுவதற்கு இடம் வாங்கப்பட்டு, கிட்டத்தட்ட ஐந்தாறு ஆண்டுக்காலமாக கட்டப்படாமல் இருக்கிறது. மாவட்டக் காவல் அலுவலகம் இப்பொழுது மாதம் பத்தாயிரம் ரூபாய் வாடகை கொடுக்கக்கூடிய - எந்தவிதமான ஒரு சரியான வசதியில்லாத இடத்திலே அலுவலகம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதைக் கட்டுவதற்கு விரைவாக-நம் கொள்கைக் குறிப்பிலே மற்ற சில இடங்களுக்கு கட்டுவதாக இருக்கிறது; ஆனால் நாகை மாவட்டத்திலே அந்த மாவட்ட அலுவலகம் கட்டப்படாமல் இருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. எந்தவிதமான வசதியும்

கிடையாது. அப்படிப்பட்ட இடத்திலே, நெருக்கடியான இடத்திலே அந்த அலுவலகம் செயல்படுகிறது. ஆகவே, இந்த ஆண்டு அதையும் இந்த நிதி அறிக்கையோடு சேர்த்துக்கொண்டு மாவட்ட அலுவலகம் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதேபோன்று, சீவளூரிலே இருக்கக்கூடிய காவலர்கள் குடியிருக்க வசதியில்லாமல், வெளியே குடியிருந்து வந்து சேர வேண்டிய ஒரு நிலைமையிருக்கிறது, ஆகவே சீவளூர் காவல் நிலையத்திலே ஒரு குடியிருப்பு கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதேபோன்று, கொரடாச்சேரியில், குடியிப்பதற்கு வீடுகூட வாடகைக்குக் கிடைக்கவில்லை. அவர்கள் கிராமத்திலேயிருந்து கொரடாச்சேரி நகரத்திற்குப் பணியாற்ற வர வேண்டிய ஒரு கட்டாயமிருக்கிறது. அந்த கொரடாச்சேரி காவலர்களுக்கு குடியிருப்பு கட்டுவதற்கான குடியிருப்பு கட்ட வேண்டும். அதுபோல...

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்டப்பட வேண்டும்; மாவட்டக் காவல் நிலைய அலுவலகங்களுக்குக் கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும். இதையெல்லாம் நான் ஒப்புக்கொள்ளுகிறேன். எங்கள் நிதி நிலைமைக்கு ஏற்ப in a phased manner படிப்படியாக இவற்றைச் செய்து கொண்டு வருகிறோம். கடந்த ஆண்டுவரை ஒரு ஆண்டுக்கு ஆயிரம் காவலர் குடியிருப்புகள் கட்டப்பட்டு வந்தன; இந்த ஆண்டு முதல் ஆண்டுக்கு ஆயிரத்து ஐநூறு காவலர் குடியிருப்புகளைக் கட்ட நாங்கள் திட்டமிட்டிருக்கிறோம்.

ஆனால் நான் கேட்க விரும்புவதெல்லாம், காவலர்களின் கஷ்டங்களைப்பற்றி இவ்வளவுதூரம் மனமுருகும் மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி அவர்கள், அவர்களுடைய கட்சியுடன் கூட்டணியமைத்து இதற்கு முன்னால் இங்கே ஆட்சியமைத்தார்களே அவர்கள் இந்த Police Housing Corporation-னையே இழுத்து மூடினார்களே; இனிமேல் காவலர்களுக்குக் குடியிருப்புகளைக் கட்டவே வேண்டாம் என்று அந்தக் கார்ப்பரேஷனை இழுத்து மூடினார்களே, அப்பொழுது அதை எதிர்த்து இந்த அவையிலே பேசினாரா? காவலர்களுக்குக் குடியிருப்புகள் அவசியம் கட்ட வேண்டும்; அதை இழுத்து மூடாதீர்கள் என்ற கோரிக்கை வைத்தாரா என்பதை அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் மூடிய காரணத்திற்காக கட்டக் கூடாது என்று முடிவெடுக்கப் போகிறோமா? அதற்கும் இதற்கும், கடந்த காலத்தைப் பற்றி...

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வியை மாண்புமிகு உறுப்பினரவர்கள் புரிந்து கொள்ளவில்லை என்று கருதுகிறேன். ஏற்கனவே அவர்கள், அவர் கூட்டணி அமைத்திருந்தாரே அந்த ஆட்சியாளர்கள், Police Housing Corporation என்ற அமைப்பை இழுத்து மூடிவிட்டார்கள். அப்பொழுது மாண்புமிகு உறுப்பினரவர்கள் அதைத் தவறு என்று இந்த அவையில் சுட்டிக்காட்டினாரா? அந்த Police Housing Corporation-ஐ மூடக் கூடாது என்று அவர் கருத்து தெரிவித்தாரா? எதிர்ப்பு தெரிவித்தாரா என்றுதான் கேட்டேன். அவர்கள் இழுத்து மூடிய Police Housing Corporation-ஐ நாங்கள்தான் மீண்டும் திறந்தோம்; உயிர் கொடுத்தோம். நாங்கள் ஆண்டுக்காண்டு காவலர்கள் குடியிருப்புகளைக் கட்டிக்கொண்டுதான் வருகிறோம். அதிகரித்துக் கொண்டே போகிறோம்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இருக்கிற தேவையின் அடிப்படையிலே கோரிக்கைகள் அதிகரித்து வருவது குறித்துச் சொல்லுகிறோம். பழைய காலத்தைப் பற்றியே பேசிக்கொண்டிருப்பது என்பது...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறைந்தது இப்போதாவது அவர்கள் செய்தது தவறுதான் என்று ஒப்புக்கொள்ளுங்கள். (சிரிப்பு)

திரு. வே. தம்புசாமி: அப்பொழுது வருகிறபொழுது அதை...

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்க விரும்புவதெல்லாம் (குறுக்கீடு) ஒரு நிமிஷம். இப்பொழுது காவலர்களுக்குக் குடியிருப்புகளை நாங்கள் கட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். கொடுப்பவர்களிடம் கேட்கிறீர்களே, கட்டவே வேண்டாம் என்று அப்பொழுது அந்தக் கார்ப்பரேஷனையே இழுத்து மூடியவர்களிடம் நீங்கள் இதைப்பற்றிக் கேட்டீர்களா? என்றுதான் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்பொழுதும் கேட்டோம்; இப்பொழுதும் (குறுக்கீடு) சாத்தக்கூடாது என்று சொல்லி (குறுக்கீடு) பொறுங்கள், பொறுங்கள், நீங்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்பொழுது உறுப்பினராக இருந்தவர் அவர். மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் போலீஸ் வீடு கட்டுகின்ற சங்கத்தை மூடுகின்றபொழுது. அமைதியாக நீங்கள் இருந்தீர்களே தவிர ஒரு

வார்த்தைக்கூட கேட்கவில்லை. சட்டமன்றக் குறிப்பேட்டிலேயே இருக்கிறது. நீங்கள் கேட்டிருந்தால் இன்றைக்கும் பார்க்கலாம். அதற்கு நீங்கள் தயாராக இருக்கிறீர்களா என்பதை நான் உங்கள் மூலமாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு)

பிற்பகல் 1.00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் கேட்டாரா, இல்லையா என்பது எங்கள் யாருக்கும் தெரியாது. அவர் கேட்காமலேயே கேட்டேன் என்று சொல்கிறாரா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேட்கவில்லை என்று அப்போது உறுப்பினராக இருந்த போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள் (குறுக்கீடு) மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் கேட்டோம் என்று சொல்கிறார். அது குறிப்பேட்டிலே இல்லாவிட்டால் நீங்கள் இல்லாததைச் சொன்னதாக எடுத்துக்கொள்ளப்படும் என்பதை பேரவைத் தலைவர் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்போது கேட்கவில்லை என்று இப்போது சாட்சியமாகச் சொல்கிறார். அப்போது உறுப்பினராக இருந்த போக்குவரத்துத் துறை அமைச்சர்.

திரு வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அந்த ஆய்வுக்கு நேரம் இல்லை. நான் பிரச்சினைக்குப் போகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி காவல் துறையினருடைய வீடு கட்டிக் கொடுக்கும் கழகத்தை எடுத்தபோது, வேண்டாம் என்று எதிர்த்தோம் என்பதை உறுதியாக அவர் சொல்லிவிட வேண்டும் இங்கு. உறுதியாகச் சொல்லிவிட்டால் நாளையோ மறுநாளோ அதைப் பற்றி ஆய்வு செய்வதற்கு வாய்ப்பு ஏற்படும். நாங்கள் எதிர்த்தோம் என்பதை உறுதியாகச்

சொல்ல வேண்டும். இல்லை, எதிர்க்கவில்லை என்று சொல்லிவிட வேண்டும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு ஜி. பழனிசாமி, உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு உறுப்பினர் தம்புசாமி அவர்களைக் கேட்கிறேன், அவர் எதிர்த்தாரா, எதிர்க்கவில்லையா என்று. திரு. பழனிசாமி கேள்வி எழுப்புகிறாரே? திரு. தம்புசாமி நேரிடையாக எதிர்த்தோம் அல்லது எதிர்க்கவில்லை என்று சொல்லிவிட வேண்டும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மானியக் கோரிக்கையின்போது எங்களை குண்டுக்கட்டாக தூக்கி வெளியே எறிந்துவிட்டார்கள். அந்த மானியக்கோரிக்கையிலே நாங்கள் பேசுவதற்கு அன்றைக்கு வாய்ப்பு இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அதை தெரிந்துகொண்டாக வேண்டும்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நேரத்திலே அ.தி.மு.க. உறுப்பினர்கள் 26 சட்டமன்ற உறுப்பினர்கள் இருந்தபோது நீங்கள் ஏன் கேட்க முடியவில்லை?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போக்குவரத்துத் துறை அமைச்சர் அதைத்தான் சொல்கிறார். அப்போது எங்களை வெளியேற்றிவிட்டார்கள் என்று. (குறுக்கீடு) மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மானியக் கோரிக்கையின்போது நாங்கள் அப்போது சில கோரிக்கைகளை வலியுறுத்தியபோது எங்களை குண்டுக்கட்டாக தூக்கி வெளியே எறிந்துவிட்டார்கள். அப்போது நீங்களும் இங்கே இருந்தீர்கள். நீங்களும் அன்றைக்கு அமைதியாக இருந்தீர்கள். அன்றைக்கு நீங்களும் அந்த கோரிக்கையை வலியுறுத்தவில்லை. இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஒப்பற்றத் தலைவி அவர்கள் பல்வேறு திட்டங்களை

நிறைவேற்றுகின்றபோது இன்றைக்கு இவ்வளவு அக்கறையோடு சொல்லிக்கொண்டிருக்கிற உறுப்பினரைப் பார்த்து கேட்கிறேன், நீங்கள் உங்களுடைய தோழமைக் கட்சியாக இருக்கின்ற இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சி இருக்கிறபோது அன்றைக்கு வாய்மூடி மௌனம் சாதித்தது எப்படி என்பதைத்தான் இந்த நேரத்திலே தெரிந்துகொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தம்புசாமி அவர்களை தயவுசெய்து விட்டுவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் அவருக்குத் தெரியும், யாரிடத்திலே கேட்டால் நடக்கும் என்று தெரியும். அதனால் கேட்கிறார். இதற்கு முன்னாலே கேட்டிருந்தால் நடக்காது என்பது அவருக்குத் தெரியும். அதனால் கேட்கவில்லை. எனவே, அன்றைக்கு மூடியபோது இவர் என்ன சொன்னாலும் அவர்களோ கேட்கப்போவது கிடையாது. இங்கேகூட நீங்கள் கேட்டீர்களா என்று கேட்டார்கள். போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அதற்கு பதில் சொன்னார், இங்கே, வாய்ப்பே கொடுக்கப்படவில்லை என்று சொல்லி. ஒருவேளை சொல்லியிருந்தால் அவர்கள் செய்யப் போவது கிடையாது. எனவே, செய்யாதவர் இடத்திலே கேட்கவில்லை. நீங்கள் புத்திசாலித்தனமாக செய்திருக்கிறீர்கள். இன்றைக்கு புத்திசாலித்தனமாக, புரட்சித் தலைவி அவர்கள் செய்வார்கள் என்ற காரணத்தால் கேட்கிறீர்கள். எனவே, அதையும் வெளிப்படையாக ஒப்புக்கொண்டால் இவ்வளவு கேள்வியே வராது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தம்புசாமி பேசட்டும்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யார் ஆட்சியில் இருந்தாலும் கோரிக்கை வருகிறபோது, அந்தக் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்பது நியாயம். அந்தவகையிலேதான் இப்போது. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யார் ஆட்சியிலே இருந்தாலும் கோரிக்கை வைக்கவேண்டும். ஆனால், நீங்கள் சிலபேர் ஆட்சியிலே இருக்கிறபோது கோரிக்கைகள் வைக்கிறீர்கள். சிலபேர் இருக்கிறபோது பேசுவதே இல்லை. அதுதான் இப்போது பிரச்சினை. அன்றைக்கு அந்த கோரிக்கையை வைக்கவில்லை.

அதைத்தான் நீங்கள் இப்போது ஒப்புக்கொள்கிறேன் என்று சொல்லிவிடுங்கள். `அவர்களிடத்திலே கேட்டால் நடக்காது. அம்மா உங்களிடத்திலே கேட்டால் நடக்கும், அதனால் கேட்கிறேன்' என்று ஒரே வரி சொன்னால் இந்தப் பிரச்சினை முடிந்துபோய்விடுகிறது.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யார் ஆட்சியிலே இருந்தாலும் நிச்சயமாக கோரிக்கைகளை கேட்போம். அதுதான் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அதற்காக இயக்கம் நடத்துவோம், போராடுவோம். அது பூரா செய்வோம். அதிலே ஒன்றும் கருத்து வித்தியாசம் கிடையாது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாய விலைக் கடையிலே 6 கிலோ அரிசி அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே போடுகிறபோது நீங்கள் போராடவில்லை. நீங்கள் அன்றைக்கு அவர்களுக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டிருந்தீர்கள் இந்த சட்டமன்றத்திலே. மாண்புமிகு தங்கத் தலைவி இதயதெய்வம் புரட்சித்தலைவி காவல்துறையைப் பொறுத்தவரையில், இந்தியத் துணைக் கண்டத்திற்கே ஒரு எடுத்துக்காட்டாக உருவாக்கிக் கொண்டிருக்கிற அவர்களிடத்திலே நீங்கள் கோரிக்கையை வைக்கிறபோதுதான், அந்தக் கோரிக்கை இன்றைக்கு நிறைவேற்றப்படுகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் உட்காருங்கள், திரு. தம்புசாமி பேசட்டும்

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அரிசி பிரச்சினை வருகிறபோது அதைக் கண்டித்து வெளிநடப்பு செய்திருக்கிறோம். நாடு முழுவதும் கண்டனக் கூட்டங்கள் நடத்தினோம். இல்லையென்று சொல்வது பொருத்தமே இல்லை. வெளிநடப்பு செய்திருக்கிறோம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு உறுப்பினர்களைப் பேச விடவில்லை. திரு. தம்புசாமியைப் பேசச் சொல்லியிருக்கிறேன். நான் பேசவிட்டது ஒரு உறுப்பினரைத்தான்.

திரு. ஜி. பழனிசாமி: பாயிண்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயிண்ட் ஆப் ஆர்டரா? திரு. ஜி. பழனிசாமி.

பிற்பகல் 1.05.

திரு. ஜி. பழனிசாமி: காவல்துறைக்கு நாங்கள் எல்லாம் ஏதோ சென்ற ஆட்சியிலே கேட்கவில்லை என்று சொன்னார்கள். காவல்துறைக்கு சங்கம் வைப்பதற்கு இந்தியாவிலேயே முதல் முதலாக அனுமதி அளித்தது எங்கள் ஆட்சியிலே தான் கேரளாவிலே அனுமதித்தோம். அது வேறு எந்த ஆட்சியிலும் கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது என்ன பாயிண்ட் ஆப் ஆர்டர். இதில் என்ன பாயிண்ட் ஆப் ஆர்டர் இருக்கிறது. உட்காருங்கள். (குறுக்கீடு) தம்புசாமி (குறுக்கீடு) உட்காருங்கள், திரு தம்புசாமி. இன்னும் ஆறு உறுப்பினர்கள் பேச வேண்டும். வேகமாகப் பேசி முடியுங்கள்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுதான் இப்படி ஒரு நெருக்கடியான கொரடாச்சேரியிலே குடி இருக்கமுடியாமல் திருவாரூர் நகரத்திலேயிருந்து அவர்கள் பணிக்குச் செல்லவேண்டியிருக்கிறது. அதனாலேதான் இந்த ஆண்டு கட்டுகின்ற வீடுகளிலே ஒரு பகுதியாவது, குறைந்த பட்சமாவது கொராடாச்சேரியில் கட்டிக் கொடுக்கப்படவேண்டும். அதே மாதிரி கீவலூர் பகுதிக்கு திருவாரூரிலிருந்து, நாகப்பட்டினத்திலிருந்து பணிக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களில் ஒரு நான்கு, ஐந்து வீடாவது கொஞ்சம் கொஞ்சமாக கட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் தொடர்ந்து வற்புறுத்துவது திருவாரூர் தாலுக்காவிலே வைப்பூர் இருக்கிறது. அந்த பகுதியிலே ஒரு 15, 16 பஞ்சாயத்துக்கள் குவியலாக சாதாரண மக்கள் வாழக்கூடிய பகுதியாக இருக்கின்றன. ஆனால் ஏதாவது ஒரு விஷயத்திற்கு போக வேண்டும் என்றால் 18 கிலோ மீட்டர் நாகூருக்கு அல்லது 10 கிலோ மீட்டர் திருவாரூருக்கு காவல் நிலையத்தை நாடிச் செல்ல வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட அந்த சாதாரண மக்கள் வாழ்கின்ற பகுதியிலே ஒரு புறக்காவல் நிலையம் ஏற்படுத்த வேண்டும் என்று நான் தொடர்ந்து மூன்று முறை மானியக் கோரிக்கையிலே வற்புறுத்தி வருகிறேன். இப்பொழுதாவது மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவனம் செலுத்தி ஒரு புறக்காவல் நிலையத்தை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. வே. தம்புசாமி] [1995 ஏப்ரல் 6

அடுத்து திருவாரூரில் ஒரு துணை கண்காணிப்பாளர் அலுவலகம் திறக்கப்பட வேண்டும். முன்னதாக ஒரு துணை கண்காணிப்பாளர் அலுவலகம் இருந்தது. அது திடீரென்று மாற்றப்பட்டது. மீண்டும் அந்த துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தை திருவாரூரில் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏன் என்றால் அதைச் சுற்றி சாதாரண பகுதிகள் இருக்கிற காரணத்தால் ஒரு துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தை ஏற்படுத்தி தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எனக்கு வாய்ப்புத் தந்ததற்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆ. சுப்புரத்தினம்.

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருமகளின் மாடமாக மட்டுமல்ல, கலைமகளின் கூடமாக, வீரத்திருமகளின் இருப்பிடமாக காட்சித் தருகிற இந்த அவையிலே,

புறநானூற்று வீரமும் புறங்காணும் விதத்தில்,

புதிய புறநானூற்றை தன்னுடைய திருவிழிப்பார்வையால்

படைத்துக் கொண்டிருக்கிற ஆற்றல் மிக்க தலைவி,

ஆறரைக் கோடி தமிழர் நெஞ்சில் நிறைந்த அன்புத்தெய்வம், எங்கள்

இதயதெய்வம், சாதனைப் பூக்களின் சரித்திர வசந்தமாக

விளங்குகின்ற, மாண்புமிகு தமிழக முதல்வர், நம் கண்கண்ட தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சமர்ப்பித்திருக்கின்ற காவல்துறை, ஆயத்தீர்வை, தீயணைப்புத்துறை, ஆகிய துறைகள் கூடிய மானியக் கோரிக்கையிலே சில கருத்துக்களை தெரிவிக்க வாய்ப்பு வழங்கியதற்காக தங்களுக்கு என்னுடைய பணிவான நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு அரசாங்கத்தின் வலிமைமிக்க துறையாக காவல்துறை விளங்குகிறது. ஒரு ஆட்சியின் திறமையான, வேகமான நிர்வாகத்திற்கு அளவுகோலாக இருப்பது காவல்துறை. மக்களின் உயிரை பாதுகாத்தல், அவர்களுடைய உடைமைகளை பாதுகாத்தல், சட்டம்-ஒழுங்கை நிலைநாட்டுதல், குற்றங்கள் நிகழாமல் தடுத்தல், திருட்டைத் தடுத்தல், துப்பு துலக்குதல், போக்குவரத்தை ஒழுங்குபடுத்துதல் ஆகிய பணிகளில் செம்மையாக கடமையாற்றிக் கொண்டிருக்கிற பெருமைக்குரிய துறைதான் காவல்துறை. அத்தகைய காவல்துறை, வலிமைமிக்க, வல்லமைமிக்க, அறிவுமிக்க, ஆளுமைமிக்க, ஆற்றல்மிக்க நம் இதயதெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் திருக்கரங்களில் இருக்கிறது என்பது உள்ளபடியே பெருமைக்கு உரிய ஒன்றாகும். இன்றைக்கு நான் எண்ணிப் பார்க்கிறேன். இதயதெய்வம்

டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 1991-ஆம் ஆண்டு தமிழகத்தினுடைய ஒப்பற்ற முதலமைச்சராக பொறுப்பேற்ற காலகட்டத்தில் தமிழ்நாட்டினுடைய காவல்துறையினுடைய நிலைமையை எண்ணிப்பார்க்க வேண்டும். இரண்டு ஆண்டுகாலம் இருண்ட ஆட்சி செய்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தவறான போக்கின் காரணமாக அன்றைக்கு அன்னிய சக்திகளை ஏகாதிபத்திய சக்திகளை, பயங்கரவாத சக்திகளை, நாச விளைவுகளை விளைவிக்கக்கூடிய சக்திகளை, இந்த நாட்டிலே தாராளமாக நடமாட விட்டதன் காரணமாக அமைதிப்பூங்காவாக விளங்கிய தமிழ்நாடு அமளிக்காடாக மாறியது. ஆயுதகிடங்கின் மையப் பகுதியாக மாறியது. அன்றைக்கு தமிழ்நாட்டினுடைய சட்டம் ஒழுங்கு எந்த அளவிற்கு உச்ச கட்டத்திற்கு கெட முடியுமோ அந்த கோரமான நிலையை உருவாக்கிய ஆட்சி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி என்பதை மறந்துவிடக்கூடாது. நாம் போராளிகள் என்று குறிப்பிடுகிற குறிப்பாக விடுதலைப்புலிகளுடைய அந்த இயக்கமானது தமிழ்நாட்டிலே தாராளமாக வேரூன்ற வழி விடப்பட்டது.

அன்றைக்கு அரசே அதை கண்டுகொள்ளாத கோரமான நிலை இருந்தது. ஆனால் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு மிகத் தெளிவாகச் சொன்னார்கள், என்னுடைய முழு முதல் கடைமையானது இந்த நாட்டினுடைய கலாச்சாரத்தை, பண்பாட்டை பாதிக்கக்கூடிய அந்தச் சட்டம்-ஒழுங்கு பிரச்சினையை முதற்கண் எடுத்து அதை நெறிப்படுத்துவதுதான், முறைப்படுத்துவதுதான் என் `முழு முதல் கடமை' என்று அறிவித்ததோடு மட்டுமல்லாமல் மிகத் தீவிரமாக சொன்னார்கள், தீர்க்கதரிசனத்தோடு சொன்னார்கள்.

பிற்பகல் 1.10

இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழ்நாடு இழந்த பெருமையை, அமைதிப்பூங்கா என்று எடுத்திருந்த நல்ல பெயரை, மீட்டுத் தருவேன் என்று சொன்னதோடு மட்டுமல்லாமல் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் அமைதிப் பூங்கா என்ற அரிய பெயரை மீட்டுத் தந்தார்கள் என்பதை நான் மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிகழ்ச்சியை சுட்டிக் காட்டுகிறபோது இங்கிலாந்து அரசாங்கத்தில் 1688 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒரு மிகப்பெரிய நிகழ்ச்சி என்னுடைய நினைவுக்கு வருகிறது. இங்கிலாந்து நாட்டைப் பொறுத்தவரையில் அந்த ஆண்டை எடுத்துக்கொண்டால் இங்கிலாந்து வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய ஒரு சிறந்த ஆண்டாகும்.

1688 ஆம் ஆண்டு. அந்த ஆண்டிலேதான் பொற்கால புரட்சி, மாட்சிமை நிறைந்த புரட்சி, ரத்தம் சிந்தாப்புரட்சி அந்த நாட்டிலே உருவாக்கப்பட்டது.

எப்படி அமைதிப் பூங்காவாக இருந்த தமிழ்நாட்டில் சம்பந்தமே இல்லாத விடுதலைப் புலிகளை ஏவிவிட்டு, தமிழ்நாட்டினுடைய கலாச்சாரத்திற்கும், பண்பாட்டிற்கும், மக்களுடைய அன்றாட வாழ்க்கைக்கும் மிகப்பெரிய துயரத்தை, தொல்லையை அன்றைய திராவிட முன்னேற்றக் கழக அரசு கொடுத்ததோ அதுபோல் அன்றைக்கு இங்கிலாந்து நாட்டிலே ஒரு அசாதாரண சூழ்நிலை உருவானது. மதத்தின் காரணமாக தொல்லை உருவானது. அன்றைக்கு இங்கிலாந்து நாட்டினுடைய ஆட்சிப் பொறுப்பிலே இருந்தவன் இரண்டாம் ஜேம்ஸ் மன்னன். அப்போது பிராட்டெஸ்டன்ட் மதம் இங்கிலாந்து நாட்டின் அடிப்படை மதமாக இருந்தது. ஆனால் எப்படி கருணாநிதியின் அரசு விடுதலைப் புலிகளை ஏவிவிட்டு அவர்களைத் தாராளமாக நடமாடவிட்டதோ, விடுதலைப் புலிகளுக்கு இங்கே புகலிடம் தரப்பட்டதோ, புகலிடம் தந்து இந்த நாட்டினுடைய பெருமைக்கும் சிறப்புக்கும் மிகப்பெரிய துயரம் தரப்பட்டதோ, அதுபோல் இங்கிலாந்து நாட்டினுடைய இரண்டாம் ஜேம்ஸ் மன்னன் கத்தோலிக்க மதத்தைக் கொண்டுவந்து புகுத்தப் பார்க்கிறான். அந்தச் சூழ்நிலையில்தான் மூன்றாம் வில்லியம் என்ற மன்னன், எப்படி அமைதிப்பூங்கா என்ற நிலைமையை புரட்சித் தலைவி அவர்கள் மீட்டுத் தந்தார்களோ அதற்கொப்ப இங்கிலாந்து நாட்டினுடைய அழைப்பை ஏற்று அங்கே சென்றான். அதாவது இங்கிலாந்து மக்கள் அசாதாரண சூழ்நிலை இருக்கிறது, ஒரு மிகப்பெரிய கொந்தளிப்பான சூழ்நிலை இருக்கிறது என்று மூன்றாம் வில்லியம் என்ற அந்த ஹாலந்து மன்னனை அழைத்து, எப்படியாவது நல்ல சூழ்நிலையை மீட்டுத் தாருங்கள், மதத்தின்பெயரால் ஒரு கொந்தளிப்பான சூழ்நிலை இருக்கிறது, பிரளயம் ஏற்பட இருக்கிறது, அதைத் தடுத்துத் தாருங்கள், நீங்கள் வாருங்கள் என்று அழைத்ததற்கு இசைந்து அவன் இங்கிலாந்து நாட்டிற்குச் செல்கிறான். பிராட்டெஸ்டன்ட் மதத்தைப் பாதுகாக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்கிறான். அந்த அளவில் வில்லியம் மன்னன் வந்து இறங்கியவுடன் இரண்டாம் ஜேம்ஸ் மன்னன் இருந்த இடம் தெரியாமல் ஓடி விடுகிறான். எப்படி இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இக்கட்டான காலகட்டத்தில் தமிழ்ப் பெருமக்களின் ஆதரவைப் பெற்று, அன்பைப் பெற்று, தமிழ் மக்களின் அந்த அழைப்பை ஏற்று, தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன் விடுதலைப் புலிகள் இருந்த இடம் தெரியாமல் ஓடினார்களோ, அதைப்போல இரண்டாம் ஜேம்ஸ் மன்னன் இங்கிலாந்து நாட்டை விட்டு ஓடவேண்டிய சூழ்நிலை உருவாயிற்று. அன்றைக்கு ரத்தம் சிந்தியாகவேண்டும், மிகக்

கொடூரத்தைச் சந்தித்தாகவேண்டும், சமுதாயச் சீர்கேடுகளைச் சந்தித்து ஆகவேண்டும் என்றிருந்த அந்தச் சூழ்நிலையில் ஒரு இணக்கத்தை உருவாக்க முடியுமா என்று எண்ணி இருந்த காலகட்டத்திலேதான் மூன்றாம் வில்லியம் மன்னன் அதற்கெல்லாம் இடம் தராமல், ரத்தம் சிந்தாமல், அமைதியான முறையில் ஒரு புரட்சியை ஏற்படுத்தினான். அதற்குப் பெயர்தான் 'க்ளோரியஸ் ரெவலூஷன்' 'ப்ளட்லெஸ் ரெவலூஷன்' என்று வரலாற்றில் கோடிட்டுக் காட்டப்படுகிறது. அத்தகைய மிகப்பெரிய பணியை இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்கள் செய்து இருக்கிறார்கள்.

மூன்றாம் வில்லியம் மன்னன் இங்கிலாந்து நாட்டைக் காப்பாற்றியதுபோல் புரட்சித் தலைவி அவர்கள் 6½ கோடி தமிழ் மக்களின் இதய தெய்வமாக, அவர்களின் ஒட்டுமொத்த ஆதரவைப் பெற்று, தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக பொறுப்பேற்றவுடனே சட்டம் ஒழுங்கைப் பாதுகாத்து, விடுதலைப் புலிகளை விரட்டி, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் அலங்கோலத்திலிருந்து தமிழ்நாட்டைக் காப்பாற்றி, அமைதிப் பூங்காவாக தமிழ்நாட்டை மீண்டும் உருவாக்கினார்கள். இவை அனைத்தையும் செய்வதென்றால் மிகப் பெரிய போராட்டத்தைச் சந்தித்து ஆகவேண்டும்; விடுதலைப் புலிகளோடு ஆயுதம் தாங்கிப் போரிட வேண்டும்; அந்த அளவுக்கு சமுதாயத்தில் ரத்த ஆறு கூட ஓடலாம் என்றிருந்த நிலையை மாற்றி புரட்சித் தலைவி அவர்கள் கடுமையான நடவடிக்கை எடுத்ததன் காரணத்தால், அவர்களின் நிர்வாகத் திறமை காரணத்தால், அறிவின் காரணத்தால் அதற்கெல்லாம் இடம் தராமல் மிகச் சிறந்த முறையில், அமைதியான முறையில் விடுதலைப் புலிகளை வேரறுத்ததோடு மட்டுமல்லாமல், இருந்த இடம் தெரியாமல் விரட்டி, இங்கிலாந்தில் ஏற்பட்டதைப்போல ஒரு மாட்சிமை நிறைந்த, புகழ்பெற்ற புரட்சியை, ரத்தம் சிந்தாப் புரட்சியை உருவாக்கினார்கள். அத்தகைய பெருமை இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைச் சாரும் என்று நான் மெத்த மகிழ்ச்சியோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1.15

எனவேதான் கோடிட்டுக் காட்டுகிறேன், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் பல்வேறு குறைகளை இன்றைக்கு சொல்லித் திரிகிறார்கள். அடுத்தபடியாக, காவல்துறையை நவீனப்படுத்த வேண்டும். புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடன் மிகத் தெளிவாகச் சொன்னார்கள். இன்றைக்கு காவல்துறையை தமிழ்நாட்டில்

நவீனப்படுத்தியாகவேண்டும். இன்றைக்கு இந்தியத் துணைக்கண்டத்திலே தென்கோடி மாநிலமாக இருக்கின்ற தமிழ்நாடு, எல்லைப்புறமாக இருக்கக்கூடிய தமிழ்நாடு, ஆயிரம் கிலோ மீட்டர் கடற்கரைப் பகுதியைக் கொண்டிருக்கக்கூடிய தமிழ்நாட்டுக்கு இன்றைக்கு இருக்கக் கூடிய இந்த நிதியைக் கொண்டு, இருக்கக்கூடிய நிதி ஆதாரங்களைக் கொண்டு காவல்துறையை செம்மைப் படுத்தியாகவேண்டும். தமிழ்நாட்டினுடைய நிதிநிலைமை புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றபோது சுமார் ரூ. ஆயிரம் கோடிக்குமேல் பற்றாக்குறையான ஒரு அவல நிலை இருந்தது. அந்த நிலை புரட்சித் தலைவி அவர்களுக்கு மிகப் பெரிய பாரம் சுமத்தப்படுவதாக இருந்தது. ஒருபுறம் பொருளாதார சீர்கேட்டை சரிசெய்தாகவேண்டும். மக்களுடைய பொருளாதார நிலையை சீர்செய்யவேண்டும். அதற்குப் பிறகு மக்களுடைய சுபிட்சமான வாழ்க்கை, அமைதியான வாழ்க்கைக்கு ஒரு ஆக்கப்பூர்வமான திட்டமாக சட்டம் ஒழுங்கை சீர்செய்தாகவேண்டும். அமைதிப் பூங்கா என்ற ஒரு அற்புத நிலையை உருவாக்கவேண்டுமென்ற அடிப்படையிலேதான் புரட்சித் தலைவி அவர்கள் நிதிநிலைமையை மனதில் கொண்டு, சட்டம் ஒழுங்கைக் கட்டிக் காப்பது மாநில அரசினுடைய கடமை மட்டுமல்லாமல் மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் பொதுப்படையானது, மாநில அரசுக்கு மட்டும் சொந்தமானது என்று பொருள் அல்ல. எனவே கூட்டு முயற்சியின் காரணமாக இதை சீர்செய்யவேண்டுமென்ற அடிப்படையிலேதான் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ரூ. 80 கோடி கேட்டார்கள். ஆனால் மத்திய அரசு கொடுத்ததோ யானைப் பசிக்கு சோளப் பொறிபோல ரூ. 10 கோடி கொடுத்தது. இதிலே மத்திய அரசானது இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கோரிக்கைக்கு அந்த அளவு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. ஏதோ தமிழ்நாடுதானே. வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்ற பழமொழிக்குச் சொந்தக்காரர்களாக தமிழ்நாடுதானே என்ற அடிப்படையிலே நம்முடைய கோரிக்கைக்கு செவி மடுக்கவில்லை. ஏதோ பிச்சை போடுவதுபோல ரூ. 10 கோடி வழங்கி தமிழர்களை இழிவுபடுத்தும் முயற்சியிலே இன்றைய மத்திய அரசு அன்றைக்கு ஈடுபட்டது. அந்தவகையிலும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல் எப்படி இருந்தாலும் சட்டம் ஒழுங்கைக் கட்டிக் காப்பது, தமிழ் மக்களுடைய இன்னல்களைப் போக்குவது, தமிழ்நாட்டில் அமைதியைத் திரும்பப் பெறுவது, தமிழ்நாட்டு மக்களுடைய பொற்கால ஆட்சிக்கு வழி வகுப்பது தம்முடைய தார்மீகக் கடமை என்ற அடிப்படையின் காரணமாக மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் காவல்துறையை நவீனப்படுத்தக்கூடிய ஒரு மிக முக்கியமான நடவடிக்கையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்கள்.

TRUTH ALONE TRIUMPHS

ஆனால் மத்திய அரசு நாட்டினுடைய ஒருமைப்பாட்டை, நாட்டினுடைய இறையாண்மையை, நாட்டின் முக்கியத்துவத்தை மனதில் கொண்டாவது, இந்த ஒரு பிரச்சினையிலாவது மாற்றாந்தாய் போக்கை கைவிட்டு புரட்சித் தலைவியினுடைய அந்தக் கோரிக்கைக்கு செவி மடுத்திருக்கலாம்.

ஆனால் மத்திய அரசு இந்தப் பிரச்சினையில் ஏனோ தானோவென்று ஒரு நிலையை எடுத்ததே தவிர உருப்படியான, Constructive-ஆக புரட்சித் தலைவியினுடைய அந்த நல்ல கோரிக்கைக்கு செவி மடுக்கவில்லை. இருந்தாலும்கூட நான் எண்ணிப் பார்க்கிறேன். புரட்சித் தலைவி அவர்கள், எந்த அளவுக்குத்தான் மத்திய அரசு புறக்கணித்தாலும், எத்தனை முறைதான் தமிழ் மக்களை அவர்கள் பல்வேறு சூழ்நிலைகளில் பின்னுக்குத் தள்ளினாலும் 'என்னுடைய முழு முதற் கடமை இந்த நாட்டு மக்களுக்குத் தொண்டு செய்வது' என்ற தூய உள்ளத்துடன் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் காவல்துறையை இன்றைக்கு நவீனப்படுத்தியிருக்கிறார்கள். நான் எண்ணிப் பார்க்கிறேன். இரண்டாம் உலகப் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 'நாசி' படைகள் கை ஓங்குகிறது. ஹிட்லர் 'நாசி' படைகளுக்கு தலைமையேற்று அன்றைக்கு இங்கிலாந்து தலைமையிலான படைகளுக்கு எதிராக முன்னேறி வருகிற அந்த நிலையிலே ஒரு critical situation-ல் இங்கிலாந்து பிரதம மந்திரியாக படைகளுக்கு தலைமையேற்று நடத்தி வின்ஸ்டன் சர்ச்சில் வருகிறார். அமெரிக்காவினுடைய பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட்டு வருகிறார். பிரான்ஸ் பிரசிடெண்ட் செல்கிறார். இப்படி கூட்டணி படைகளெல்லாம் சென்றுகொண்டிருந்த நேரத்தில் சர்ச்சில் மிக அற்புதமாகச் சொல்கிறார். அவர்கள் கலங்கிய நிலையில், வதங்கிய நிலையில், படபடப்போடு பயந்து கேட்கிறார்கள். 'நாசி' படைகள் முன்னேறி வருகின்றனவே, அவர்கள் கை ஓங்கியிருக்கிறதே, எப்படி நாட்டை காப்பாற்ற இருக்கிறோம் என்று கேட்ட நேரத்திலே சர்ச்சில் மிக அற்புதமாக ஒரு வார்த்தை சொன்னார். We will finish the job எனக்கு ஆயுதங்களை வழங்குங்கள், நான் காரியத்தை முடித்துக் காட்டுகிறேன் என்று சொன்னார். அவர்கள் பண உதவியும் பொருளுதவியும் வழங்கியதன் காரணமாக இரண்டாம் உலகப் போரிலே அன்றைக்கு ஹிட்லர் வெளியேற்றப்பட்டு இங்கிலாந்து தலைமையிலான அந்தப் படை மிகப் பெரிய வெற்றியைப் பெற்று இன்றைக்கு பூகோள உருண்டையில் அந்த நாட்டினுடைய கை ஓங்கியிருக்கக்கூடிய ஒரு அற்புத நிலையை உருவாக்கினார். நான் ஒப்பிட்டுப் பார்க்கிறேன். இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் காலத்தில் அதற்கு முன்னாலே இங்கே வேரூன்றிவிட்ட விடுதலைப் புலிகள் என்ற பயங்கர சக்தியை விரட்டியடித்து, தமிழ்நாடு ஒரு காஷ்மீராகவோ அல்லது ஒரு பஞ்சாபுக்கு எப்படி பாதிப்பு இருக்கிறதோ அல்லது எப்படி அஸ்ஸாமுக்கு

பாதிப்பு ஏற்பட்டிருக்கிறதோ, அது போல இல்லாமல், தமிழ்நாட்டுக்கு பங்கத்தை, ஒரு கேட்டை விளைவிக்கக் கூடாது என்ற தூய உள்ளத்தோடு மத்திய உதவி கேட்டார். அன்றைக்கு சர்ச்சில் கேட்டது கிடைத்தது. இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்கள் ரூ. 80 கோடி கேட்டும் கிடைக்கவில்லை.

பிற்பகல் 1.20

இருந்தாலும் புரட்சித் தலைவி வெற்றி பெறுகிறார் என்றால் இன்றைக்கு சர்ச்சிலையும் மிஞ்சக்கூடிய ஆற்றல் மிக்க, ஆளுமை மிக்க, தலைசிறந்த, சான்றாண்மை மிக்க, ஆட்சித் திறமை மிக்க ஒரு ஒப்பற்ற முதலமைச்சர் அவர் என்பதை நான் மெத்த பணிவோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, அனைத்து மகளிர் காவல் நிலயம். இது இந்திய துணைக் கண்டம் மட்டுமல்ல, உலக நாடுகள் எல்லாம் பின்பற்றக்கூடிய ஒரு அற்புத திட்டம் ஆகும். நான் இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்டுவது, அன்றைக்கு சுதந்திரப் போராட்டம் நடைபெற்றபோது ஒரு கால கட்டத்திலே பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் மகாத்மா காந்தி அவர்களுக்கு உறுதுணையாக இருந்து அந்தப் போராட்டத்தினுடைய முன்வரிசை வீரராக வீற்றிருந்தார்கள். அப்போது மிக அற்புதமான ஒரு கருத்தை சொன்னார்கள். சுதந்திரப் போராட்ட காலத்திலே, போராட்டத்தின் இறுதி கால கட்டத்திலே அவர் சொல்லுகிறபோது "What Bengal thinks today, India will think tomorrow" என்று சொல்லுகிறார். இன்றைக்கு வங்காளம் எதை சிந்திக்கிறதோ நாளை அதை இந்தியா சிந்திக்கும் என்று மிக தெளிவாக சொன்னார்கள். நான் எண்ணிப் பார்க்கிறேன், ஒப்பிட்டுப் பார்க்கிறேன். ஜவகர்லால் நேரு அவர்களை காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் இங்கே தரக்குறைவாக பேசலாம், ஆனால் நான் உயர்ந்த நோக்கத்திற்காகவே ஜவகர்லால் நேருவையும், மகாத்மா காந்தியையும் குறிப்பிட்டிருக்கிறேன் என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வகையிலே ஜவகர்லால் நேரு அவர்கள் கூறியதைப்போல இன்றைக்கு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்த அனைத்து மகளிர் காவல் நிலையம் என்பது—இன்றைக்கு புரட்சித் தலைவி என்று எடுத்துக் கொண்டால்—what Puratchi Thalaivi thinks to-day, not only India, but the whole Universe will think tomorrow, என்று சொல்லக்கூடிய அந்த வகையிலே அனைத்து மகளிர் காவல் நிலையம் என்கின்ற ஒரு அற்புதமான திட்டத்தை அண்டை மாநிலமான கர்நாடகம் மட்டும் அல்ல, இந்திய

துணைக் கண்டத்திலே இருக்கக்கூடிய மற்ற மாநிலங்கள் மட்டுமல்ல, மரியாதைக்குரிய பாகிஸ்தான் நாட்டின் பிரதமர் பெனசிர் பூட்டோ அவர்களும் பின்பற்றுகிறார்கள் என்றால் not only India, but the entire Universe is ready to follow Dr. Puratchi Thalaivi என்கிற உண்மையைத்தானே இதிலிருந்து அறிந்துகொள்ள முடிகிறது.? எனவே அனைத்து மகளிர் காவல் நிலையம் என்பது மிகச் சிறப்பான, சான்றாண்மை மிக்க, மிகப் பெருமைப்படத்தக்க, டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆளுமையை திறமையை மக்கள் எப்படி நேசிக்கிறார்கள் என்பதற்கு ஒரு சாதனையாகும். சமுதாயத்தின் ஒவ்வொரு பிரிவினரையும் எப்படி பாகுபடுத்திப் பார்த்து, எந்தெந்த பிரிவினருக்கு எப்படி எப்படியெல்லாம் உதவி செய்ய முடியும், எப்படியெல்லாம் ஆட்சித் தேரை சுழற்ற வேண்டும், எப்படியெல்லாம் உதவிக்கரம் நீட்ட வேண்டும் என்கின்ற அடிப்படையில் புரட்சித் தலைவி அவர்கள் செயல்படுகிறார்கள் என்பதற்கு அனைத்து மகளிர் காவல் நிலையம் ஒரு அற்புதமான உதாரணம் என்பதை நான் சொல்லிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

இன்றைக்கு எதிர்க்கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் சொல்லுகிறார்கள் புரட்சித் தலைவி அவர்கள் காவல் துறையை மிக அதிகமாக புகழ்கிறார்கள் ஆதரிக்கிறார்கள் என்றெல்லாம் சொல்லுகிறார்கள். நான் அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு இந்திய துணைக் கண்டத்தின் வரலாற்றிலே, தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றிலே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சைக்காலஜியுடன், காவலர்களின் மன நிலையை உணர்ந்து அவர்களுக்கு ஆதரவுக்கரம், நேசக்கரம் நீட்டியதன் காரணமாக, அவர்களின் பொறுப்பையும், இடர்பாடுகளையும் உணர்ந்து அவர்களுக்கு ஆதரவு காட்டியதன் காரணமாகத்தான் இன்றைக்கு போலீஸ் போர்சில் கட்டுக்கோப்பு உயர்ந்திருக்கிறது. அவர்கள் மனச்சாட்சியோடு சிந்தித்துப் பார்க்கிறார்கள். இப்படி தாயுள்ளத்தோடு உதவுகின்ற ஒரு தலைவி, நமக்கு ஏதேனும் ஒரு கேடு என்றால் ஓடோடி வந்து நேசக்கரம் நீட்டக்கூடிய ஒரு தலைவி, காவல் துறையே ஏதோ கேடுகெட்ட துறையைப் போன்று எண்ணியிருந்த காலகட்டத்தில் அதை மாற்றி காவல் துறையை பொதுமக்கள் தோழனாக, மனிதாபிமானத்திற்கு மறு உதாரணம் என்ற அளவிலே அவர்களுடைய நிலையை உயர்த்திய மாபெரும் தலைவி என்ற அடிப்படையிலே அவர்களுடைய மனச்சாட்சியை தொட்டுப் பார்த்து வேலை செய்து வருகிறார்கள், கடமையை ஆற்றுகிறார்கள். அந்த வகையிலே டாக்டர் புரட்சித் தலைவி, அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய சப்போர்ட்டின் காரணமாக அவர்களுடைய பணிகள் உயர்ந்து இருக்கிறது. அவர்களுடைய நிர்வாகத்

திறமை மேம்பட்டு இருக்கிறது. எனவே அதைக்கூட புரிந்துகொள்ளாமல் இன்று எதிர்க்கட்சியைச் சார்ந்த நண்பர்கள் வாய் புளித்ததோ,மாங்காய் புளித்ததோ என்ற அளவில் பேசுகிறார்கள் என்றால் உள்ளபடியே வேதனையாக இருக்கிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி ஆயத் தீர்வை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பை படிக்காமலேயே வந்து பேசியிருக்கிறார்கள். ஒருவேளை அது வலதுசாரி கொள்கை என்ற வகையில் விட்டுவிட்டாரோ என்று எண்ணத் தோன்றுகிறது. எனவே அருள் கூர்ந்து வழங்கியிருக்கக்கூடிய அந்த 3 மானியக் கோரிக்கைகளையும் அவர்கள் படித்து வந்து பேசியிருந்தால் உள்ளபடியே பாராட்டுக்குரியதாக இருந்திருக்கும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கொடைக்கானலைப் பற்றி ஒரு சம்பவம். கொடைக்கானல் என்ற உடன் இரண்டு நிகழ்ச்சிகள் என்னுடைய ஞாபகத்திற்கு வருகின்றது. ஒன்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் போது நடந்த சம்பவம். இன்னொன்று நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் காலத்தில் நடைபெற்ற சம்பவம். அன்றைக்கு எழுபதுகளிலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் முதலமைச்சர் கருணாநிதி கோடை விழாவிற்காக கொடைக்கானல் செல்லுகிறார். சென்ற நேரத்திலே மாலை வேளையிலே தன் குடும்பத்தோடு வாக்கிங் செல்கிறார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருள்கூர்ந்து தவறு இருந்தால் சுட்டிக்காட்டுங்கள், திருத்திக் கொள்கிறேன். ஆனால் நடந்த சம்பவத்தை சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

குடும்பத்தோடு கருணாநிதி வாக்கிங் செல்கிறார்.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குடும்பத்தோடு செல்லுகிறார் என்பதை மட்டும் சொல்லுங்கள், மற்றவை வேண்டாம்.

பிற்பகல் 1.25

திரு. ஆ. சுப்புரத்தினம் : குடும்பத்தோடு செல்லக்கூடிய அந்த நிலையில், மதுரை மல்லி வேண்டுமென்று ஒரு கோரிக்கை அங்கே எழுகிறது. உடனே கருணாநிதி அருகில் இருந்த காவல் துறை உயர் அதிகாரிகளை பார்த்து மதுரை மல்லி பெற்று வரவும் என்கிறார். முதலமைச்சரின் உத்திரவு அல்லவா, ஆணை அல்லவா ? காவல் துறை பறக்கிறது. ஒரே வேளையில் 10 காவலர்கள் 10 கிலோ மீட்டர் வந்தவுடன் ஆயிரம் அடி பள்ளத்தில் உருளுகிறார்கள். மாண்டு போகிறார்கள். இப்பேர்ப்பட்ட ஒரு வரலாற்றை வைத்துக் கொண்டு இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தினர், புரட்சித் தலைவி

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

அவர்களுடைய சீரிய தலைமையில் இயங்கி வரும் காவல் துறையைப் பார்த்து இன்றைக்கு கேலி செய்கிறார்கள், கிண்டல் செய்கிறார்கள் என்றால் இதை எப்படி ஒப்பிடுவது ? எதை எண்ணிப் பார்ப்பது ? அதே நேரத்தில் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் நடைபெற்ற ஒரு சம்பவத்தை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கடந்த ஆண்டு இதே பேரவையில் பட்ஜெட் கூட்டத் தொடர் நடைபெறுகிறது. அந்த நேரத்திலே கொடைக்கானலுக்கு பழனி வழியாக ஒரு கூட்டம் செல்கிறது. சுற்றுலாப் பயணிகள் ஆன அவர்கள் இடையிலே வழிமறித்துத் தாக்கப்படுகிறார்கள், கொள்ளையடிக்கப்படுகிறார்கள். ஒருவர் அந்த இடத்திலே சுட்டுக் கொல்லப்படுகின்றார். நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை அன்றே சந்தித்து 'இதை சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொண்டுவர விரும்புகிறேன். காரணம் என் தொகுதியில் நடைபெற்றது' என்று சொன்னவுடன், பெருந்தன்மையோடு எங்கள் அன்புக்கினிய பேரவைத் தலைவர் அவர்கள் வாய்ப்பு வழங்குகிறீர்கள். பிரச்சினையை நான் அவையில் எழுப்புகிறேன். இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய மேலான கவனத்திற்கு கொண்டு வந்து பேசியபோது, 'இந்தப் பிரச்சினையை எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்றவுடன் மேலான பார்வைக்கு கொண்டு சென்றவுடன், புரட்சித் தலைவி அவர்கள் சற்றும் தயக்கம் காட்டாமல் நம்முடைய காவல் துறையினுடைய டி.ஜி.பி. மரியாதைக்குரிய ஸ்ரீபால் அவர்களை உடனடியாக அனுப்பி, இன்றைக்கு அவர் திருச்சி வரையில் சென்று, அங்கிருந்து கார் மூலம் பழனி சென்று இருக்கிறார்கள் 10, 15 எஸ். பி. க்கள், டி.எஸ். பிக்கள் முகாம் இட்டிருக்கிறார்கள். நிலைமை கட்டுக்குள் இருக்கிறது. மக்களிடம் ஏற்படவிருந்த அச்சம், அசாதாரணமான சூழ்நிலைகள் தவிர்க்கப்பட்டிருக்கிறது. ஓரிரு வாரத்தில் அவர்கள் பிடிக்கப்படுவார்கள். குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படுவார்கள்' என்று நான் இந்த அவையிலே பேசுகிறேன். புரட்சித் தலைவி அவர்கள் மிகத் தெளிவாக சொல்கிறபோது அப்பொழுது பேசுகிறபோது, எதிர்கட்சியைச் சேர்ந்த நம்முடைய நண்பர்களைப் பார்த்து, புரட்சித் தலைவி அவர்கள் 'எடுத்து வரக்கூடிய நடவடிக்கைகளுக்கு நீங்கள் எதிராக பேசுகிறீர்கள் என்றால், அது வழக்கில் எதிரிகளுக்கு உதவி செய்வதாக இருக்கும். வழக்கினுடைய போக்கிற்கு குந்தகம் விளைவிப்பதாக இருக்கும், எனவே, அருள்கூர்ந்து ஆதரவு வழங்குங்கள்' என்ற நேரத்தில், எதிர்க்கட்சிகள் எல்லாம் எகிறிக் குதித்தன. 'எப்படி எங்களைப் பார்த்து அரசியல் ஆக்காதீர்கள் என்று கூறுகிறீர்கள்' என்று கேட்டபோது, 'எங்களுடைய தனிப்பட்ட கருத்து. எனவே, மனச்சாட்சியோடு சிந்தித்துப் பாருங்கள்' என்று கேட்டபிறகு, இதயதெய்வம் அவர்கள் பதில் சொல்கிறார்கள், மிகத் தெளிவாகச்

சொல்கிறார்கள், 'அனைத்து நடவடிக்கைகளும் எடுத்து இருக்கிறோம், அங்கே Combing ஆபரேஷன் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. என்ன தேவை, எது தேவையோ, எப்படியென்றாலும் அதைச் செய்து குற்றவாளிகளைக் கண்டுபிடித்தாக வேண்டுமென்று உத்திரவிட்டு இருக்கிறேன், ஒருவார காலத்தில் குற்றவாளிகள் பிடிபடுவார்கள்' என்று ஆணித்தரமாக புரட்சித் தலைவி அவர்கள் உத்திரவிடுகிறார்கள். இங்கே சொல்கிறார்கள். ஆனால் நடைபெற்றது. என்ன? இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு வாரம் என்று சொன்னால், மூன்று நாட்களிலேயே 12 குற்றவாளிகளும் கண்டுபிடிக்கப்பட்டு (மேசையைத் தட்டும் ஒலி) கைது செய்த ஒரு வரலாற்றை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இதே அவையில் நிகழ்த்திக் காட்டினார்கள் என்பதை நான் மெத்த பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் இங்கே இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நம் மாநிலத்து மக்களின் கோரிக்கைகளை, மன விருப்பங்களை குறிப்பாக, காவல் துறைக்கான தேவைகளை தாய் அன்புடன் கவனித்து சரித்திரப் பிரகடனங்களாக இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள்.

இந்தியத் துணைக் கண்டத்தில் பல்வேறு பாகங்களில் இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பை ஏற்று அரசு கட்டிலை அலங்கரிப்பவர்களில் பல பேர் மக்கள் தலைவர்கள் இல்லை. தங்களைக் காப்பாற்றிக் கொள்வதில் அவர்களுக்கு இருக்கின்ற கவனமும், கரிசனமும் மாநிலப் பணிகளில் அவர்களை ஈடுபாடு கொள்ளாமல் செய்து விடுகிறது. அத்தகைய தேவையும் அவசியமும் இல்லாத முதல்வர் நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். எனவேதான், புரட்சித் தலைவி அவர்களின் நேரமும், நினைப்பும் தமிழகத்தை தன்னிகர் இல்லாத மாநிலமாக உருவாக்குவதிலே சுற்றிச் சுழல்கிறது. இந்தியத் துணைக் கண்டத்தில் வேறு எந்த மாநிலத்து முதல்வருக்கும் இல்லாத சிறப்புகள் புரட்சித் தலைவியிடத்தில் குவிந்துள்ளன. அவற்றில் எதைச் சொல்வது., எதை விடுவது ? பொம்மைக் கடையில் நிறுத்தப்பட்டுள்ள சிறுவனைப் போல் நான் தவிக்கின்றேன்.

வோர்ட்ஸ்வொர்த்தின் வார்த்தைகளை இரவல் பெற்றுச் சொல்வதென்றால் "Our `Amma' is the finest flower in our History" நாளைக்கு நடக்கப் போவது அவருக்கு இன்றே தெரிகிறது. அந்தத் தொலை தூரப் பார்வை, கார்சிகா நாட்டு இளைஞன் நெப்போலியனிடத்திலே இருந்த இராஜ தந்திரம், மக்கள் தலைவன் மாசேதுங்கிடமிருந்த கம்பீரம், ஆபிரகாம் லிங்கன், ஜார்ஜ் வாஷிங்டன்

போன்றோரிடமிருந்த செயல்திறம் அனைத்தும் நம் இதய தெய்வத்திடம் சங்கமமாகி விட்டிருக்கின்றன. சில பித்தளைக் காசுகள் சேர்ந்து கொண்டு தங்கத்தை, தங்கமில்லை என்று சொல்வதாலேயே, தங்கம் தரம் இழந்து போவதில்லை. செல்லாக் காசுகளின் பொல்லாக் கோபம் செலாவணி நாணயங்களை செல்லாமல் ஆக்கிவிடுவது இல்லை. இவர்கள் குற்றம் கண்டுபிடிப்பதிலும் குறை சொல்வதிலும் தங்கள் வாழ்வை அமைத்துக் கொண்டிருப்பவர்கள். அதைப் பற்றி எங்களுக்குக் கவலை இல்லை. சாமக் கோழிகள் கூவி சரித்திர வானம் வெளுத்ததில்லை. சாமந்திப்பூ இல்லை என்று சடங்குகள் நின்றதில்லை. கழகத்தின் லட்சியப் பதாகைகளாக, கொள்கை துந்துபிகளாக, இலட்சக்கணக்கான அடலேறுகள், ஆற்றல் மறவர்கள் இன்றைக்கு மாநிலம் முழுவதும் வேரோடி இருக்கும் இயக்கம் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் சீரிய தலைமையில் இயங்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்.

எஃகுக் கம்பிகளாக, ஈட்டி முனைகளாக, பகைப் புலத்தை ஊடறுக்கும் பாசறை முழக்கங்களாக, பணிபுரியும் வீரர்கள் கொண்ட கூட்டம்தான் புரட்சித் தலைவி தலைமையில் செயல்படும் இயக்கம். அந்த இயக்கத்தில் தொண்டர்களாக புரட்சித் தலைவியின் உண்மை விசுவாசிகளாக இருப்பதில் இன்றைக்கு 1½ கோடி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பெருமிதமும், பூரிப்பும் கொண்டு இயங்குபவர்கள் என (மேசையைத் தட்டும் ஒலி) எடுத்துரைக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். . . . (மணி அடிக்கப் பெற்றது).மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றே ஒன்று, தொகுதியைப் பற்றிச் சொல்லிவிடுகிறேன்.

பிற்பகல் 1.30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆ. சுப்புரத்தினம், தொகுதியைப்பற்றி எல்லாம் முன்னமே சொல்லிவிட்டீர்கள்.

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பழனி தொகுதியானது தமிழ் கடவுள் முருகப் பெருமான் எழுந்தருளியிருக்கக் கூடிய மிகப்பெரிய புண்ணியஸ்தலம். தைப்பூசம், பங்குனி உத்திரம் போன்ற திருவிழாக் காலங்களில் 50 இலட்சம், 60 இலட்சம் பக்தர்கள் கூடுகின்ற மிகப்பெரிய நகரம். எனவே ஃப்ளோட்டிங் பாப்புலேஷன் நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. எனவே, இதய தெய்வம், நம்முடைய கண்கண்ட தெய்வம், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்பாதம் தொட்டு நான் கேட்டுக் கொள்வேன். அனைத்து மகளிர் காவல் நிலையம் ஒன்றை அருள்கூர்ந்து அங்கே துவக்குங்கள், அல்லது திண்டுக்கல்லில் உள்ள அனைத்து மகளிர் காவல்

நிலையத்தினுடைய ஒரு பிரிவினை பழனிக்கு வழங்குங்கள் என புரட்சித் தலைவியின் பொற்பாதம் தொட்டு வணங்கி, இந்த நல்ல மானியக் கோரிக்கைகளிலே பேசக்கூடிய வாய்ப்பை வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, இந்த மானியக் கோரிக்கைகளை உள்ளன்போடு வரவேற்று, புரட்சித் தலைவியின் பாதம் தொட்டு வணங்கி, நன்றிகூறி அமைகிறேன். அனைவருக்கும் வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று, திரு. அ. செல்வராசன் அவர்களும் பேசவேண்டும் என்று சொல்லியிருந்தேன். அவர் வந்தார், போய்விட்டார். திரு. நா. சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சீரிய தலைமையிலே இயங்குகின்ற, மாநில காவல் துறை, தீயணைப்புத் துறை, ஆயத் தீர்வைத் துறை ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கைகளின் மீது உழவர் உழைப்பாளர் கட்சியின் சார்பாக ஒருசில கருத்துக்களை முன்வைக்க வாய்ப்பளித்தமைக்காக எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எதிரி நாட்டுப் படையெடுப்பிலிருந்து தாய்நாட்டைக் காப்பது இராணுவம். அந்த இராணுவம் எதிரியினிடம் எப்படி வேண்டுமானாலும் துப்பாக்கியை நீட்டி சுட்டுத் தள்ளிக்கொண்டே செல்லலாம். ஆனால் உள்நாட்டிலே இருக்கின்ற மக்களில், அதிலே கலவரம் செய்பவர்களை, சமூக விரோதச் செயல்கள் செய்பவர்களை, குற்றம் புரிபவர்களை இனம் கண்டுகொண்டு, அவர்களில் யார் குற்றவாளியோ, அவர்களைத் தண்டிக்கின்ற, அவர்களுடைய அடக்கு முறையில் இருந்து சாதாரண மக்களைப் பாதுகாக்கின்ற பொறுப்பை நிர்வகித்து வருவது காவல்துறை. அப்படிப்பட்ட காவல்துறையை நிர்வகிக்கின்ற அந்த சீரிய பொறுப்பை இன்றைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்துக் கொண்டு செயல்பட்டு வருவது கத்தி முனையில் நடப்பதற்குச் சமம். ஆனால், அந்தக் கத்தி முனையானது இருபுறமும் கூர்மையுள்ள கத்தி. அந்தக் கத்தியை, எதிர் அணியில் உள்ளவர்களைக் காயப்படுத்தத்தான் இதுவரை ஆட்சியில் உள்ளவர்கள் பயன்படுத்தி வந்தார்கள். ஆனால் இன்றைக்கு தமிழக முதல்வர் அவர்கள் அந்தக் கூர்மையான கத்தியை உறைக்குள் போட்டுவிட்டு, அவர்களுடைய புத்திகூர்மையை மட்டுமே பயன்படுத்தி, தமிழக மக்களைப் பாதுகாப்பதுடன், நிதானத்துடன் கூடிய ஒரு அணுகுமுறையை மேற்கொண்டு, எந்தப் போராட்டமும் நடைபெறாமல் பார்த்துக் கொண்டு வருகிறார்கள். இன்றைக்கு விவசாயிகள்

போராட்டம் இல்லை; தொழிலாளர்கள் போராட்டம் இல்லை; மக்கள் யாருமே எதற்குமே போராடுவது இல்லை. ஆனால், மீண்டும் எப்படியாவது ஆட்சியைப் பிடிக்க வேண்டும், பதவிக்கு வரவேண்டும், இருக்கின்ற ஆட்சிக்குத் தொல்லைகள் கொடுக்க வேண்டுமென்று சில கட்சிகள் வேண்டுமானால் போராடிக் கொண்டிருக்கின்றன. அந்த அளவுக்கு இன்றைக்குச் சட்டம் ஒழுங்கைப் பாதுகாத்து, மக்களையே சட்டம் ஒழுங்கை மதிக்கச் செய்து, இன்றைக்குக் காவல் துறை நிர்வகித்து வருகின்ற, இந்தத் துறையை நான் பாராட்டுகின்றேன்.

இன்றைக்கு, படித்த வேலையற்ற சில இளைஞர்கள் இப்படிப்பட்ட கட்சியினராலும், வன்முறையாளர்களாலும், சமூக விரோதிகளாலும், தீவிரவாத இயக்கங்களாலும் தூண்டப்பட்டு, சிற்சில நேரங்களில் அவர்கள் சில வழிப்பறிகள், வன்முறைச் சம்பவங்களைச் செய்கின்றார்கள். கிராமங்களில் முகமூடிக் கொள்ளையர்கள் என்ற பெயரால் சிற்சில வன்முறைச் சம்பவங்கள் நடக்கின்றன. அதை நம்முடைய திறமை மிக்க காவல்துறை, பின்னால் பிடித்து விடுகிறது. ஆனால், அப்படிப்பட்ட இடங்களில், கிராமங்களிலே தன்னந்தனியாக, விவசாயிகள், சாலைகளிலே இருப்பவர்களுக்கு, இந்த அரசின் சார்பில் அவர்களின் பாதுகாப்பிற்காக அவர்களுக்கு துப்பாக்கி லைசென்ஸ் போன்றவற்றை வழங்க வேண்டுமென்ற வேண்டுகோளை நான் இந்த நேரத்திலே வைக்க விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

வீரப்பனைப் பிடிக்க நம்முடைய காவல்துறை வீரத்தோடு பணியாற்றி வருகிறது. அன்மையில்கூட நான் பத்திரிகையிலே ஒரு செய்தியைப் படித்தேன். கர்நாடக மாநில காவல் துறை நம்முடைய அதிரடிப்படையோடு வீரப்பனைப் பிடிப்பதில் இணைந்து பணியாற்றவில்லை. விலகி நிற்கிறது என்பதைப் போன்ற ஒரு செய்தி வந்தது.

பிற்பகல் 1.35

ஆனால் நிச்சயமாக கர்நாடகக் காவல் துறையின் துணை இல்லாமல் தமிழகத்தின் காவல் துறையே நிச்சயமாக அந்த வீரப்பனை பிடிக்கும் என்கிற நம்பிக்கை நம்முடைய மக்களுக்கும் இருக்கிறது, நமக்கும் இருக்கிறது. அதை நிச்சயமாக நிறைவேற்றும். அப்படி அந்த வீரப்பனைப் பிடிப்பதிலே தன்னுடைய ஒரு காலையும் இழந்து தன்னுடைய வீரத்தைக் காட்டிய ஒரு காவலருக்குத் தமிழக அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய அரசு கூடுதல் தலைமை இயக்குநரையே நேரில்

அனுப்பி, அவருக்கு ரூ. 10 இலட்சம் கொடுத்து அந்தக் குடும்பத்தைப் பாதுகாத்ததை இன்றைக்கு நான் மனமாரப் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) முன்பெல்லாம் காவல் துறையில் போராட்டக் காலத்திலே துப்பாக்கிச் சூட்டிலே இறந்தவர்களுக்கு கருமாதி செய்வதற்குக் கூட பணம் கொடுத்தவர்கள் கிடையாது. துப்பாக்கியிலே இருந்து குண்டுதான் வருமே அல்லாமல் பூ மாரியா பொழியும் என்று தான் பேசி வந்தார்கள். ஆனால் இன்றைக்கு அப்படி எதிர்பாராத சில சூழ்நிலைகளில் குண்டடிப்பட்டு இறந்தவர்களின் குடும்பத்திற்கு கருணை மழை பொழிகின்ற ஒரு ஆட்சியை இன்றைக்குத்தான் தமிழகத்திலே பார்த்துக் கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு ஒரு விவசாயி துப்பாக்கிச் சூட்டிலே இறந்துவிட்டால், இதுவரைக்கும் யாரும் கருமாதிக்குக்கூட பணம் கொடுத்ததில்லை. ஏழை எளிய மக்கள் இலட்சத்தை வெறும் லாட்டரிச் சீட்டிலேதான் பார்த்திருக்கிறார்கள். ஆனால் இறந்த அந்த விவசாயக் குடும்பத்திற்கு இலட்சத்தை நிதியாகக் கொடுத்தது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில்தான் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு சில வன்முறைகள் சிற்சில காவல் நிலையங்களில் நடப்பது பெரிய பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது. காவல் துறைக்கே களங்கத்தை ஏற்படுத்தி வருகிறது. அதை எதிர்க்கட்சிகள் அரசியல் ஆதாயத்திற்காகப் பயன்படுத்தும் வாய்ப்பும் ஏற்பட்டு விடுகிறது.

தற்போது உலகிலேயே அனைத்து மகளிர் காவல் நிலையம் 31-ஐ ஏற்படுத்திக் கொடுத்தது டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில்தான். எல்லா காவல் நிலையங்களிலும் பெண் துணை ஆய்வாளர்கள், தலைமைக் காவலர்கள், சில காவலர்கள் போன்றவர்களை அமர்த்தி விட்டால் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடக்காமல் தவிர்க்கப்படும் என்ற என்னுடைய கருத்தை இங்கே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எனது தொகுதியில் வடக்குப் பாளையத்தில் ஒரு புறக்காவல் நிலையம் இருக்கிறது. அந்த வடக்குப் பாளையம் பகுதி கேரள எல்லையை ஒட்டியுள்ள பகுதி. அங்கு ஒரு தனிக் காவல் நிலையத்தை ஏற்படுத்தித் தரவேண்டுமென்ற வேண்டுகோளை நான் இந்த நேரத்திலே வைக்க விரும்புகிறேன்.

அதேபோல் என்னுடைய தொகுதியிலே மிகலூர் காவல் நிலையம் பொள்ளாச்சி வட்டத்தில் உள்ளது. ஆனால் அது பல்லடம் துணைக் கண்காணிப்பாளர் கட்டுப்பாட்டிலே இருந்து வருகிறது. அதேபோல் கிணத்துக்கடவு காவல் நிலையம் பொள்ளாச்சி வட்டத்திலே இருக்கிறது.

அது போத்தனூர் டி.எஸ்.பி. கட்டுப்பாட்டிலே இருக்கிறது. இந்தக் காவல் நிலையங்கள் எந்த வட்டத்திலே இருக்கிறதோ அந்த டி.எஸ்.பி. -யினுடைய கட்டுப்பாட்டிலே இருந்தால் நிர்வாகத்திதற்கும், மக்கள் சென்று அணுகுவதற்கும் சவுகரியமாக இருக்கும். எனவே, எனது தொகுதியிலே இருக்கின்ற அந்த இரண்டு காவல் நிலையங்களையும் பொள்ளாச்சி டி.எஸ்.பி. கட்டுப்பாட்டிலே கொண்டுவந்து வைக்க வேண்டுமென்ற வேண்டுகோளை நான் இந்த நேரத்திலே வைக்க விரும்புகிறேன். இன்றைக்கு ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் ஒரு தனி ஆய்வாளர், ஒரு வாகனம் -ஜீப் - போன்றவைகளைக் கொடுத்து காவல் துறையைத் திறம்படச் செயல்படுத்திய தமிழக முதல்வர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். காக்கிச் சட்டை அணிந்து மிடுக்கோடு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சியிலே பணியாற்ற பல்வேறு துணை ஆய்வாளர்கள் பதவிகளுக்காக பலர் தேர்வு எழுதியிருக்கிறார்கள். அவர்களெல்லாம் இந்த புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே பெருமை மிக்க, துணிச்சல் மிக்க, நேர்மை மிக்க, பதவி நிச்சயமாகக் கிடைக்கும் என்ற நம்பிக்கையிலே இருக்கிறார்கள். இன்றைக்கு பல காவல் நிலையங்களில் காவலர்களாக இருந்து, தலைமைக் காவலர்களாக இருந்து, ஆய்வாளர்களாக இருந்து, அவர்களெல்லாம் கொஞ்சம் முதுமை நிலையில் தங்களுடைய பணியிலே கொஞ்சம் ஆர்வமற்ற நிலையிலே இருக்கின்றபோது, இளமைத் துடிப்பு மிக்க மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் அப்படிப்பட்ட அந்தக் காவல் நிலைய துணை ஆய்வாளர்களாக அதிகம் பேரை நியமிக்க வேண்டுமென்ற வேண்டுகோளை நான் இந்த நேரத்திலே வைக்க விரும்புகிறேன். "It is fault to be faultless" என்று சொல்வார்கள். தவறு இல்லாத மனிதன் இயற்கையில் இருப்பதே தவறு. அப்படி தவறு செய்தவனைத் தண்டிக்க வேண்டும். தண்டிக்கப்பட்டவன் திருந்த வேண்டும். இன்று திரைப்படங்களில் ஒரு கொலை நடந்துவிட்டால் உடனே சைரன் ஒலியோடு அங்கே காவல் துறை வந்துவடுவதை மக்கள் பார்த்துப் பழக்கப்பட்டிருக்கிறார்கள். அதைப் போல் நம்முடைய காவல் துறையும் எங்கே ஒரு குற்றம் நடந்தாலும் உடனே அந்த சைரன் ஒலியோடு வேகத்தில் வரவேண்டுமென்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் அது இயற்கையாக, காரிய சாத்தியமாக நடக்கக் கூடியது அல்ல. இருந்தாலும்கூட நம்முடைய காவல் துறை, நம்முடைய தமிழகத்திலே மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் தலைமையின் கீழ் இயங்குகின்ற காவல் துறை, இன்றைக்கு சகல நவீன கருவிகளையும் பெற்று, காவல் துறையை நவீனப்படுத்தி, தொலை தொடர்பு வசதிகளையெல்லாம் ஏற்படுத்தி, மக்கள் எதிர்பார்ப்புகளுக்கு ஈடுகட்டுகின்ற முறையில் அதன்

செயல்பாட்டை பெருக்குவதிலும், அவர்கள் மத்திய அரசினுடைய ஆதரவை எதிர்பார்த்தும், இந்திய அரசினுடைய ஆதரவு கிடைக்காத சூழ்நிலையிலும் கூட அதைச் செயல்படுத்தி வருவதை நான் இன்றைக்குப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1.40

இன்றைக்கு, பூரண மதுவிலக்கை அமல்படுத்துவதில், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், மிக உறுதியோடு இருக்கிறார்கள் என்பது அனைவரும் அறிந்த உண்மை. ஆனால், முந்தைய ஆட்சிக் காலங்களில் இருந்தவர்கள் ஊசலாட்டத்தோடு இருந்தார்கள். அந்த மதுபானக் கடைகளைத் திறப்பதும், மூடுவதுமாக பல சந்தர்ப்பங்களில் இருந்த காரணத்தினால், மதுப் பழக்கத்திற்கு சில இளம் தலைமுறையினர் அடிமையாகி இருக்கிறார்கள். அவர்கள் ஏழைக் குடும்பத்தினர். அவர்களால் இந்தியாவிலே தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவை வாங்கிக் குடிக்கும் சக்தி கிடையாது. பீர், பிராந்தி போன்றவற்றை மருந்தாக உபயோகிப்பது, வெளிநாட்டினருக்குப் பழக்கம். ஆனால், ஏழ்மை, கவலை, வேலை அசதி என இப்படிப் பலவகைகளிலே வரும் ஏழை மக்கள், அவற்றைப் போதைக்கும், மயக்கத்திற்கும், மயக்கத்தை ஏற்படுத்தவும், கவலையை மறக்கவுமே பயன்படுத்துகிற நிலைமை இருக்கிறது. எனவேதான், அவர்களெல்லாம், வெளிநாட்டிலே தயாரிக்கப்பட்ட இந்த வெளிநாட்டு மதுவகைகளை வாங்கிக் குடிக்க முடியாத சூழ்நிலையில், கள்ளச் சாராயத்தை நாட வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். நான் எனது கட்சியின் வேண்டுகோளாக, விவசாயிகளினுடைய வேண்டுகோளாக ஒன்று வைக்க விரும்புகிறேன். நான் ஏற்கெனவே நிதிநிலை அறிக்கை விவாதத்திலேயும் சொல்லியிருக்கிறேன். அதனை ஆந்திர அரசு இன்றைக்கு அமல்படுத்தி வருகிறது. தென்னை சாகுபடியாளர்களுக்கும், தென்னை மரம் ஏறுகின்ற ஏராளமானவர்களுக்கும் இதனால் பயனும், வேலைவாய்ப்பும் கிடைக்கும். அது இயற்கையான பானம். எனவே, கள்ளுக் கடைகளைத் திறந்தால் தவறில்லை என்ற கருத்தை, எனது கருத்தாக — இதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எப்படி எடுத்துக் கொள்வார்களோ தெரியவில்லை; எனது கருத்தாக — இதை நான் இந்த இடத்திலே வைக்க விரும்புகிறேன். கள்ள மது குற்றங்களில், காவல்துறையினரால் பிடிக்கப்பட்டு, தண்டிக்கப்படுபவர்கள், மதுக் கடத்தல் மற்றும் விற்பனையில் காசுக்காக கருவியாகப் பயன்படுத்தப்படுபவர்கள் ஏழை ஆதிதிராவிடர்களும், பிற்படுத்தப்பட்ட மக்களும்தான் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். காவல்துறை விரிக்கின்ற அந்த

வலையிலே, பெரிய சுறா மீன்கள் தப்பித்து விடுகின்றன; அறுத்துக் கொண்டு சென்று விடுகின்றன. ஆனால், சின்னஞ்சிறு குற்றவாளிகள்தான் பிடிபடுகிறார்கள்; அவர்கள்தான் தண்டிக்கப்படுகிறார்கள். எனவே, இந்த (குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஈஸ்வரமூர்த்தி போன்ற பெரிய சுறா மீன்களையும், இந்தக் காவல்துறை பிடித்துள்ளது; கைது செய்துள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திரு. நா. சா. பழனிசாமி : சுறா மீன்கள் என்ன; திமிங்கலத்தையே பிடிக்கிற ஆற்றல் நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், இந்தக் காவல்துறைக்கும் உண்டு என்கிற நம்பிக்கை எனக்கிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இருந்தாலும்கூட, இப்படிப்பட்ட கருவியாகப் பயன்படுபவர்கள், அதிலே அதிகமான பேர்கள் ஏழைகள் என்பதால், அவர்கள் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்ற கருத்தை இந்த நேரத்திலே நான் வைக்க விரும்புகிறேன்.

எனது தொகுதி கிணத்துக்கடவிலும் சரி, நெகமத்திலும் சரி, எந்தத் தீயணைப்பு நிலையமும் கிடையாது. அந்தப் பகுதிகளில் தென்னை நார்கள் அதிகமாகவும், தென்னை நார் தொழிற்சாலைகளும் இருக்கின்றன. அந்தத் தென்னை நார்க் கழிவுகளை அங்கே இருப்பவர்கள், கண்ட இடங்களிலெல்லாம் போட்டு, தீ வைத்துவிட்டுச் சென்று விடுகிறார்கள். தென்மேற்குப் பருவக்காற்று அதிகமாக வீசுகின்ற பகுதி அது. அந்த தென்னை நார்க் கருவிகளிலே, அடிக்கடி அவ்வாறு பற்ற வைக்கின்ற தீ, விடிய விடிய எரிந்து, பக்கத்திலே கூரைச் சாலைகளில், பக்கத்திலே இருக்கிற மாட்டுக் கொட்டகைகளில் பிடித்துவிடுகிற சம்பவங்கள், அடிக்கடி நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. எனவே, கிணத்துக்கடவிலும், நெகமத்திலும், இரண்டு தீயணைப்பு நிலையங்களை ஏற்படுத்தி, அப்படிப்பட்ட அந்தத் தீ விபத்திலிருந்து காப்பாற்ற வேண்டுமென்ற வேண்டுகோளை இந்த நேரத்திலே சொல்லி, இந்த இரண்டு, மூன்று மானியக் கோரிக்கைகளின்மீது, எங்களது இயக்கத்தின் சார்பிலே, பல கருத்துக்களை முன்வைக்க வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி -- மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு என்ன சோதனைகள் வந்தாலும், மலைபோல் வரும் சோதனையெல்லாம் பனிபோல் நீங்கிவிடும் -- அதற்கு உழவர் உழைப்பாளர் கட்சி, விவசாயிகள், 14 இலட்சம் பம்புசெட்டு விவசாயிகளுக்கு இன்றைக்கு உலகத்திலே யாரும் கொடுக்காத இலவச மின்சாரத்தைக் கொடுத்து, பாதுகாத்து வருகின்ற புரட்சித்

தலைவிக்குத் துணையாக நிற்பார்கள் என்ற கருத்தைக் கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருமதி பி. நிர்மலா.

பிற்பகல் 1.45

*திருமதி. பி. நிர்மலா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு வாய்ப்பு வருமோ வராதோ என்று இருந்தேன்; ஏனென்றால், நேரம் ஆகிக் கொண்டே இருக்கின்றது; இன்னும் எதிர்க் கட்சி வரிசையிலே இருக்கின்ற தலைவர்கள், முக்கிய தலைவர்கள் எல்லாம் பேச வேண்டி இருக்கின்றதே என்ற பயத்திலே இருந்தேன்; இருப்பினும் கிடைக்கவேண்டும் என்ற ஆர்வத்தோடும், கிடைத்துவிட்டால் ஏதாவது தவறாக சொல்லிவிடுவோமோ என்ற பயத்தினாலும் இங்கே அமர்ந்து இருந்த எனக்கு என் வாழ்நாளிலே கிடைக்காத ஒரு பொன்னான பாக்கியத்தை அளித்த மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் முதலிலே எனது நன்றியை சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது சொல், செயல், சிந்தனை ஆகிய அனைத்திலும் இருக்கும் எங்கள் அன்புத் தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் திருப்பாதங்களை வணங்கி, ஈடு இணையற்ற தலைவியின் சீரிய தலைமையின் கீழ் திறம்பட படைத்திட்ட நிதிநிலை அறிக்கையின் ஓர் அங்கமாக விளங்கும் சீரிய தலைமையின் கீழ் சீருடை அணிந்து செம்மாந்து நடை போடும் காவல் துறையின் மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பு அளித்த இதய தெய்வத்திற்கும் சட்டப்பேரவை துணைத் தலைவருக்கும் நன்றியைக் கூறி உரையை ஆரம்பிக்கின்றேன்.

அம்மா, தங்களின் சீரிய தலைமையில் தங்களின் கட்டளையை ஏற்று சிறப்புமிக்க சமுதாயப் பணியினை தலையாய கடமையாக ஏற்று, சட்டம் ஒழுங்கு நலிவடையாமல் நாட்டினைப் பாதுகாக்கும் பணியினைப் பேணிப் போற்றும் தங்களின் காவல் துறையை தமிழ்நாட்டு இராணுவம் என்பது எனது தாழ்மையான கருத்து. மக்களின் நல்ல நண்பனாகவும், மக்களைக் காக்கும் நல்ல காவலனாகவும் விளங்கக்கூடிய காவல் துறையின் கண்களையும் மனச்சாட்சியையும் கட்டி வைத்து அரசியல் ஆதாயத்திற்காக தவறான வழியில் திருப்பி விட்டது ஒரு காலம்.

**"மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு."**

என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்க, தர்மமே அவர்களை மக்களின் வாயிலாக தண்டித்து, தாயே, தங்களுடைய பொற்கரங்களில் ஆட்சியை ஒப்படைத்தது. தாயே, தங்களின் சிந்தனையை சொல்லாக்கி, சொல்லை செயலாக்கி, செயலை சாதனையாக்கி, சாதனையை சரித்திரம் ஆக்கும் வல்லமை படைத்த தங்களைச் சூழ்ந்து வரும் சோதனை என்ற நெருப்புகளை சாதனை மலர்களாக்கி அவற்றை வெற்றி மாலைகளாக சூடிக்கொள்ளும் தங்களை, இன்றைய நாளில் அரசியல் அகராதியிலிருந்து வெளியேற்றப்பட்டு இருக்கின்ற அவர்கள் தொடுத்த சோதனை அம்புகள் நெருப்பில் இட்ட புழு போல் மடிந்து, தங்களின் வெற்றி சாதனை மகுடத்தில் சூட்டி இருக்கும் மற்றொரு மாபெரும் வெற்றி மாலையாகும்.

முடிந்தது அரசியல் வாழ்வு என்ற நிலையில் உள்ள சூழ்ச்சிக்காரர்களுக்கு இந்த மாமன்றத்தின் வாயிலாக ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மக்கள் நலனையே தனது நலனாக கொள்ளும் நல்லவர்கள் மீது பழி சுமர்த்திப் பார்க்கும் புல்லர்களை தெய்வமே தண்டித்துவிடும். நெருப்பை புழு தீண்ட முடியாது; நெல் உமியை கரையான் அரிக்காது—இவை அன்றைய பழமொழி. உலகத்தில் உள்ள இயற்கை செயற்கை பொருட்கள் அனைத்திலும் நாளாக நாளாக புழு வைத்து அரித்துவிடும். ஆனால், நெருப்பை அழித்துவிட வேண்டும் என்ற எண்ணத்தில் புழு வந்து கொண்டிருந்தால், அதன் எண்ணம் நிறைவேறாமல் அருகில் வரவர நெருப்பின் வெம்மை தாளாமல் புழு மடிந்துவிடும். அதேபோல, தாயே! தங்களுக்கு களங்கம் கற்பிக்க வேண்டும் என்ற எண்ணத்திலே செயல்படுபவர்களின் எண்ணம் ஈடேறாமல் நெருப்பிடைப்பட்ட புழுப் போல் மடிந்து போவது உறுதி. இது தங்களிடம் உள்ள தெய்வ சக்தியின் செயல். இந்த தெய்வ நியதியை மாற்றிவிட முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த தெய்வ நியதியை மாற்றிவிட யாராலும் முடியாது; இனி யாரும் பிறக்கப் போவதும் கிடையாது.

அழிவுப் பாதையை நோக்கிச் செயல்பட்டுக் கொண்டிருந்த காவல் துறையை மக்களின் ஆக்கப்பூர்வமான நலப் பணிகளுக்கு, மக்களின் நல்ல காவலர்களாக, உற்ற நண்பனாக ஆக்க வேண்டும் என்று எண்ணி, மாசுபடுத்தப்பட்டு இருந்த காவல் துறையின் தூசுகளைத் தட்டி, அவர்கள் நல்ல வழியிலே சுதந்திரமாகச் செயல்பட விடவேண்டும் என்று எண்ணி தாங்கள் அவர்களை சுதந்திரமாகச் செயல்பட விட்டு இருக்கிறீர்கள்.

பட்டம் எவ்வளவுதான் உயர உயரப் பறந்து கொண்டு இருந்தாலும், அதன் நூல் பிடித்து இருப்பவரின் கையிலே இருப்பதைப் போல, தாங்கள் காவல் துறையை சுதந்திரமாகச் செயல்பட விட்டுக்கொண்டு, அதன் நூலை தாங்கள் கையிலே பிடித்துக்கொண்டு, ஒரு கட்டுப்பாட்டிலே வைத்துக்கொண்டு, மக்கள் நலன் எந்தத் திசையிலே இருக்கின்றதோ அந்தத் திசையிலே உயரப் பறக்க விடுகின்ற தங்களின் சாதனையை என்னவென்று சொல்வது!

இராமாயண காலத்திலே எடுத்துக்கொண்டீர்களேயானால் இராவணன் என்ற ஓர் அரக்கன் இருந்தது எல்லோருக்கும் தெரியும். அவனுக்கு 10 தலைகள். பிறவியிலேயே அவன் அரக்கர் குலம். அவனிடம் எந்தவிதமான ஆயுதங்கள் இல்லாவிட்டாலும், அவனால் எந்தவிதமான போர்களிலேயும் வெற்றி பெற முடியும். ஆனால், ஸ்ரீஇராமபிரான் மனிதனாகப் பிறந்தாலும், மனிதன் முன்னால் நிராயுதபாணியாக ஆயுதம் அற்றவனாக இருந்ததால், இராவணனுடைய பலம் அழிந்து, இன்று போய் நாளை வா என்று இராமனால் அவமானப்படுத்தப்பட்டு அன்று தோற்றான். அதேநிலையிலே, எவ்வளவோ பெரிய திடகாத்திரமான உடலோடு தேர்ந்தெடுக்கப்பட்ட காவல் துறை இருந்தாலும், அவர்கள் நிராயுதபாணிகளாக இல்லாமல் அவர்களுக்கு நல்ல முறையிலே ஆயுதங்களை வழங்க வேண்டும் என்ற தங்களுடைய சீரிய சிந்தனையை முதலில் செயலாக்கத் துணிந்தீர்கள். தீய சக்திகள் நாட்டை விட்டு விரட்டப்பட வேண்டுமானால், காவல் படை நவீன ஆயுதங்களுடன் நவீனப்படுத்தப்பட வேண்டும் என்று சிந்தித்து தாங்கள் உடனே உத்தரவிட்டு, பல கோடி ரூபாயில் நவீன ஆயுதங்கள் மற்றும் சுமார் 1300 ஜீப்புகளை வழங்கினீர்கள். காவலர்களின் வாகனங்களுக்கு ஒயர்லெஸ் கருவிகள் வழங்கினீர்கள். விடுதலைப்புலிகளையும் தீய சக்திகளையும் சென்ற ஆட்சியிலே எந்தக் காவல் படையை வைத்து காப்பாற்றிக் கொண்டு இருந்தார்களோ, அதே காவல் படை மூலம் அதன் கண்களைத் திறந்துவிட்டு, விடுதலைப் புலிகளையும் தீய சக்திகளையும் ஓட ஓட விரட்டி அடித்து தமிழகத்தை அமைதிப் பூங்காவாக மாற்றி இருக்கிறீர்கள். இன்றைய தமிழக மக்களின் காவல் தெய்வமாக தாங்கள் விளங்கிக் கொண்டு இருக்கிறீர்கள்.

அம்மா, காவல் துறையை மட்டுமா தாங்கள் நவீனமாக்கினீர்கள்? காவலர்களையும் சேர்த்தல்லவா தாங்கள் நவீனமாக்கி விட்டீர்கள்! காவலர்களுக்கு சீருடை கொடுத்து, சிறந்த மாற்றத்தை ஏற்படுத்தி, தமிழ்நாட்டிலே உள்ள ஒரு டிராஃபிக் போலீஸ் கூட ஒரு புதுப் பொலிவுடன் சீருடை அணிந்து கம்பீரமாக காட்சி அளிக்க வைத்து

இருக்கின்றீர்கள். அது மட்டுமா? காவலர்களின் நலன்களைக் காப்பதையும் தங்களின் தாய் உள்ளம் விட்டு வைக்கவில்லை. காவலர்களுக்கு பல வசதிகள் செய்து கொடுத்து இருக்கின்றீர்கள். அதாவது முதலிலே காவலர்களுக்கு உணவு அவசியம். மானிய விலையில் உணவுப் பொருட்கள் வழங்க வேண்டும் என்ற திட்டத்தைக் கொண்டு வந்தீர்கள். காவலர்களின் வீட்டு வசதி சென்ற ஆட்சியிலே கைவிடப்பட்டது; அந்தத் திட்டத்தை மறுபடியும் கொண்டுவந்து, காவலர்கள் தங்களுடைய வாழ்க்கையை சிறந்த முறையிலே அனுபவிக்க வேண்டும் என்று எண்ணி, அவர்கள் நல்ல முறையிலே வாழ்ந்தால்தான் அவர்கள் சிறந்த முறையில் பணியில் செயல்படுவார்கள் என்ற கூற்றுக்கிணங்க காவலர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுத்துள்ளீர்கள். காவலர்களுக்கு மருத்துவ வசதிகள் செய்து கொடுத்து இருக்கிறீர்கள். தமிழ்நாடு காவல்துறை நல உணவு கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்துக் கொடுத்து இருக்கிறீர்கள். தமிழ்நாடு காவலர் நல நிதித் திட்டம் ஒன்று ஏற்படுத்திக் கொடுத்து இருக்கிறீர்கள். காவலர் பணியாளர்களின் குழந்தைகளுக்காக மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சிறப்புப் படிப்புதவித் தொகையை வழங்கும் திட்டத்தையும் அறிமுகப்படுத்தியிருக்கிறீர்கள்.

பிற்பகல் 1.50

தமிழ்நாடு காவல்துறை நூற்றாண்டு படிப்புதவித் திட்டத்தை அமுல்படுத்தியிருக்கிறீர்கள். சிறந்த காவலர்களை ஊக்குவிக்கும் வகையிலும் பரிசுகளும் வெகுமதிகளும் வழங்கியிருக்கின்ற திட்டத்தையும் அமல்படுத்தி இருக்கிறீர்கள். இன்னும் பலப்பல விதமான திட்டங்களை அறிவித்து இன்று இந்தியாவிலேயே தங்களின் தலைமையிலே இருக்கின்ற தமிழ்நாடு காவல் துறைக்கு நிகராக எங்கும் இல்லை என நிரூபித்திருக்கிறீர்கள்.

தாயுள்ளம் கொண்ட தங்களை இன்று உலகமே வியந்து பாராட்டி, தங்களைப் பின்பற்றி நடக்கும் வகையிலே தமிழ்நாடு முழுவதும் அனைத்து மகளிர் காவல் நிலையங்களை திறந்து வைத்து உலகம் போற்றும் உன்னதத் தலைவியாக விளங்குகின்றீர்கள் என்றால் அது மிகையாகாது. அம்மா, தங்களிடம் ஒரு சிறு விண்ணப்பம். இன்னும் கூடுதலாக பெண் காவலர்கள் பணி நியமனம் செய்யவேண்டும் என்றும் அவர்களுக்குத் தனிப் பயிற்சி நிலையங்கள் அமைக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மற்றபடி, நிறைந்த தாயுள்ளமும், சீரிய சிந்தனையும் வெற்றி சாதனைகளையும் ஒருங்கே படைத்த தங்களிடம் எடுத்துக் கூறுகின்ற அளவுக்கு எனக்கு தகுதிகள் இல்லை அம்மா. மீன் தன் குஞ்சுகளுக்கு தன் கண்ணாலேயே நீந்தக் கற்றுக்கொடுப்பது போல கற்றுக்கொடுத்து

வளர்க்குமாம். அதுபோல தங்களின் ஒரு கண் அசைவிலே எனக்கு அரசியல் கற்றுத் தந்து உணர்ந்தவள் தாயே! என் அரசியல் தெய்வமே, தாயே, மீனாட்சியே, அம்மா தாங்கள் எனக்களித்த •திண்டுக்கல்லில் பாதாள சாக்கடைத் திட்டமும், தோல் ஷாப்பினால் பாதிக்கப்பட்ட 18 கிராமங்களுக்குக் கூட்டு குடிநீர் வழங்கும் திட்டமும் விரைவில் செயல் படுத்தவேண்டுமென்று தங்கள் பாதம் பணிந்து வேண்டிக்கொள்கிறேன். தாயுள்ளத் தலைவி அவர்கள் உத்தரவிட்டு வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திண்டுக்கல் சிறுமலை அடிவாரத்தில் ஏ-வெள்ளோடு கிராமத்தில் ஐயனார் நீர்த்தேக்கம் வேண்டுமென்று சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாக போராடி வருகின்றனர். அவர்களின் கோரிக்கை நிறைவேற ஐயனார் நீர்த்தேக்கம் கட்ட தாயுள்ளத்தின் பாதம் பணிகின்றேன். இறுதியாக ஒன்றை இம்மாமன்றத்தின் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். ** இம்மாமன்றத்தின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது வேண்டாம். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திருமதி பி. நிர்மலா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேர்தலைச் சந்திக்கப் போடப்பட்ட பட்ஜெட் என்று சொன்னவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். தேர்தலுக்காக எங்கள் அன்னை பட்ஜெட் போடவேண்டியதில்லை. இன்று தமிழக முதல்வர் ஆகவும் எதிர்காலத்தில் பாரதப் பிரதமராகவும் வரக்கூடிய எங்கள் அன்னை (மேசையைத் தட்டும் ஒலி) தேர்தலின்போது வெளியிலே வந்து திருமுகத்தைக் காட்டினாலே போதும், வெற்றி மாலை அவர்கள் காலிலே வந்து விழும். மக்கள் சக்தியும், தெய்வ சக்தியும் ஒன்றாக ஏற்படப்பட்ட ஒரு உன்னத தலைவி நீங்கள். உன்னத தலைவி உண்டு என்றால், அது தாங்களே தவிர அகில உலகிலே வேறு யாரும் இல்லை என்று கூறிக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி வணக்கம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். பி. பரமசிவம்.

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல்துறை, தீயணைப்புத் துறை மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வைகள்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மீது 1995-96 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின் மீது பேசுகின்ற நல்வாய்ப்பினை நல்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைக் கூறி, பாரம்பரியம் மிக்க இந்த மாமன்றத்தில் நின்று பேசுகின்ற அரிய வாய்ப்பினை நல்கிட்ட எங்கள் கழகக் காவல் தெய்வம், எனது இதய தெய்வம் திசை நோக்கி வணங்கி துவங்குகிறேன்.

"உறுப்பமைந்து ஊறஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையு ளெல்லாம் தலை"

என்ற வள்ளுவன் வாய்ப்பாட்டின்படி அரசனுடைய செல்வங்கள் எல்லாவற்றிலும் சிறந்த செல்வம் வெற்றி தரும் படை என்பது போன்று, இன்று இதய தெய்வம் தனது அரசின் சிறந்த செல்வமாக காவல் துறையை மாற்றி வருகின்றார் என்றால் அது மிகை ஆகாது. இதயதெய்வம் இந்த மாமன்றத்தில் குறிப்பிட்டதுபோன்று, அன்றாடம் இந்தக் காவல் துறையை நினைத்து அசைபோடாத அரசியல் இயக்கமே இல்லை. அச்சப்படாத சமூகவிரோதிகளே இல்லை. அப்படிப்பட்ட 'காவல் துறைக்கு தெரிந்துவிட்டது. காவல்துறை வந்துவிடும். வந்தேவிட்டது இனி பயம் இல்லை' என்று அபரிமிதமான மன நிறைவோடு அமைதியைக் கடைபிடிக்கும் சூழ்நிலையும் உண்டு. ஆனால் இத்தனைக்கும் கிராமங்களில் ஒரு வழக்குமொழி உண்டு. இந்த மாடு முன்னால் சென்றால் முட்டுகிறது, பின்னால் சென்றால் உதைக்கிறது என்று கூறுவார்கள்.

அதுபோன்று காவல்துறை எந்த நடவடிக்கையை எடுத்தாலும் குறை கூறுகின்ற, எதையாவது குறை கூறிக்கொண்டே இருக்கின்ற அரசியல் வாதிகளைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் இந்த நிலையிலே காவல் தெய்வம் தமிழக முதல்வர் அவர்கள் கண்களின் இமை போல இந்தக் காவல் துறையை காத்து நின்று அதன்மூலம் காவல் தெய்வமாக நின்று காத்து வருகிறார்கள்.

சிறப்புப் பாதுகாப்புப் படை, சிறப்பு அதிரடிப் படை, திருக்கோயில் பாதுகாப்புப் படை, பெண் காவலர்கள், ரெயில்வே காவல் படை, விமான நிலையப் பாதுகாப்புப் படை, கடல் ஓரப் பாதுகாப்புப் படை, துப்பறியும் நாய்ப் படை, குதிரைப் படை, ஒழுக்கக்கேடு தடுப்புப் பிரிவு, இளம் குற்றவாளிகள் திருந்த உதவும் காவல் துறைப் பிரிவு, காவல் துறையில் சுருக்கெழுத்துப் பிரிவு, ஊர்க்காவல் படை, மக்கள் பாதுகாப்புப் படை, குடியுரிமைப் பாதுகாப்பு, இப்படி சிறப்புப் படைப் பிரிவுகளை காவல் துறையில் உண்டாக்கி, காவல் துறை என்றாலே காவல்தெய்வத்தை முன்னிறுத்தி பார்க்கின்ற நிலையை இன்று ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

தமிழகப் பெண்களின் கண்ணீர் நிரந்தரமாக துடைக்கப்பட வேண்டும் என்ற இதய தெய்வத்தினுடைய தொலைநோக்குப் பார்வையோடு, இதய தெய்வத்தின் சீரிய சிந்தனையில் உதித்ததுதான் அனைத்து மகளிர் காவல் நிலையம்.; இன்று உலக அளவில் பாராட்டைப்பெற்று பிற மாநிலங்கள், பிற நாடுகள்கூட பின்பற்றுகின்ற நிலையை ஏற்படுத்தியுள்ளது. 14-4-1992 தமிழ் புத்தாண்டு அன்று ஆயிரம்விளக்கு பகுதியில் துவங்கிய இந்த காவல் நிலையம் இன்று குன்றின்மேல் ஏற்றிய விளக்காக, 31 நிலையங்களைப் பெற்று, மிகத் திறமையாக செயல்படுகிறது. ஏராளமான படிப்பற்ற பெண்களுக்கும், கிராமப்புற பெண்களுக்கும் பேருதவி ஆற்றுவதுடன், காவல் துறையில் கணிசமான, ஏன் கணிப்பொறியில்கூட உதவுகின்ற அளவிற்கு இன்று பெண் காவலர்கள் தங்களுடைய திறமையைக் காட்டி வருகின்றார்கள்.

காவல் துறையை நவீனம் ஆக்குதல், நவீனப்படுத்தல் என்ற திருவாசகமே எங்கள் இதய தெய்வம் பொறுப்பேற்ற பின் வந்த வாசகம் என்பதை யாரும் மறந்துவிட முடியாது. இல்லையேல் ஹைதரலி காலத்து துப்பாக்கிக் கட்டையுடன் திரையில் தோன்றுகின்ற செந்தில் கவுண்டமணி போன்று தான் நம்முடைய காவலர்கள் இருந்து வருவார்கள்.

அதேபோன்று தகவல் தொடர்பு. இதில் பழைய அனல் ஆக்கு நுண் அலை அமைப்பு முறைக்கு பதிலாக டிஜிட்டால் நுண் அலை அமைப்பு முறையைப் பயன்படுத்த இதய தெய்வம் நடவடிக்கை எடுத்துள்ளார்கள். அதேபோன்று கணிப்பொறி மயமாக்குதல். காவல் துறையின் முக்கிய நடவடிக்கைகள் அனைத்தையும் கணிப்பொறிமயமாக்குவதற்கு விரிவான அணுகுமுறை மேற்கொள்ளப்பட்டுள்ளதை இதயசுத்தி உள்ளவர்கள் பாராட்டுவார்கள். இவற்றை எல்லாம், மேலை நாடுகளுக்கு ஈடு இணையாக இதய தெய்வம் செய்து வருகின்றார்கள்.

அடுத்துசட்டம்-ஒழுங்கு. 6-12-1992 அன்று பாபர்மசூதி இடிக்கப்பட்டபோது இனக் கலவரம், வன்முறைச் சம்பவங்கள், தீ வைப்பு, இப்படி நாடு முழுவதும் நடந்துகொண்டிருந்த நேரத்தில், தமிழகம் அமைதிப் பூங்காவாக காட்சியளித்தது. ஏன், காவிரி நீர்ப் பிரச்சினையில்கூட அண்டையில் உள்ள கர்நாடகத்தில் கொந்தளிப்பு ஏற்பட்ட நேரத்தில் தமிழகம் அமைதிப் பூங்காவாக இருந்ததை நாம் பார்த்து வந்தோம். அதைவிட பாரதிய ஜனதா மற்றும் அதனுடைய கூட்டணிக் கட்சியும்,

அவர்களுக்கு எதிர்ப்பாக இஸ்லாமிய மதத்தைச் சார்ந்தவர்களும் ஊர்வலம் நடத்தும்போது, அப்போது ஏற்பட்ட அந்த பதட்ட நிலையின்போதுகூட நம்முடைய காவலர்கள் திறமையாக, அமைதிப் பூங்காவாக் தமிழகம் இருப்பதற்காக பாடுபட்டதை நாம் பார்த்து வந்தோம்.

தமிழகம் அமைதிப் பூங்கா என்று கூறினால் ஏளனப் பார்வைப் பார்க்கும் எதிர்க்கட்சிக்காரர்களுக்கு ஒன்றை நான் கூறிக்கொள்வேன்.

கல்விக்கண் திறந்த கர்மவீரர் காமராஜர் காலத்தில் முதுகுளத்தூர் சம்பவம் நடைபெறவில்லையா? பக்தவத்சலம் காலத்தில் இந்தி எதிர்ப்பில் காக்கைக் குருவி போன்று மாணவர்களைச் சுட்டுத்தள்ளவில்லையா? ஏன், நம்முடைய பெருந்தகை பேரறிஞர் அண்ணா காலத்தில்கூட தஞ்சை கீழ்வெண்மணி சம்பவம் நடைபெறவில்லையா? கருணாநிதி காலத்தில் நாள்தோறும், தினந்தோறும் துப்பாக்கிச்சூடு, கற்பழிப்பு சம்பவம், சூறையாடல், ஏன், அழகிய ஒரு பெண் தொலைக்காட்சியில் தோன்றிவிட்டால் போதும், ஆபத்து என்ற நிலை இருக்கவில்லையா? இந்தியாவின் மான்செஸ்டர் என்று போற்றப்படும் பம்பாயில் வெடிகுண்டுகளால் பொருளாதார சீரழிவு ஏற்பட்டு நூற்றுக்கணக்கில் உயிர்ச்சேதம் ஏற்படவில்லையா? இதை எல்லாம் பார்க்கும்போது நாம் ஏன் தமிழகத்தை அமைதிப்பூங்கா என்று அமைதியாக சொல்லக்கூடாது? நாட்டில் இங்கொன்றும், அங்கொன்றுமாக பிரச்சினைகள் இல்லையென்றால், ஒன்று உணர்ச்சியற்ற மக்களாய், உணர்வற்ற நாடாக இருக்க வேண்டும். அல்லது மக்கள் இல்லாத பாலைவனமாக இருக்க வேண்டும். எவ்வளவோ கஷ்டப்பட்டு, 50 ஆண்டுகளாக திராவிட இயக்க வரலாற்றில் தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும் கட்டிக்காத்த இந்த இயக்கத்தை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.-க்குப் பிறகு ஒரு சூனியம் ஏற்பட்டு தமிழகம் இருண்டு விட்டதோ என்று இருந்த நேரத்தில், திராவிட இயக்கத்தை யார் வழிநடத்திச் செல்வார்கள் என்று நாங்கள் கலங்கியபோது, திராவிட இயக்க குன்றின்மீது ஒரு ஜீவ ஜோதியாக, தமிழக முதல்வர் எங்கள் இதயதெய்வம் தோன்றினார்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இந்திய தேசத்தின் பாதுகாப்பைப் போல், ஒருமைப்பாட்டையும் கட்டிக் காக்கின்ற இந்த ஜீவ ஜோதியை வரம்புமீறிய அதிகாரத்தால் எட்டி உதைக்க நினைத்தால் ஒன்று தமிழகம் மீண்டும் இருண்டுவிடலாம் அல்லது தமிழகம் தீப்பற்றி எரியலாம். அப்படி தீப்பற்றி எரியும் பொழுது . . .

[1995 ஏப்ரல் 6

பிற்பகல் 2.00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. 3 நிமிடங்களில் முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. ஆர். பி. பரமசிவம்: தீ பற்றி எரியும்போது, அப்படி எட்டி உதைத்தவர்கள் எங்கே என்று தெரியாமல், அடையாளம் தெரியாமல் எரிந்து போவார்கள். இந்த ஜீவஜோதி வெறும் எண்ணெயால் திரியைக் கொண்டு எரிவது கிடையாது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டர்களின் நரம்பைத் திரியாக, இரத்தத்தை எண்ணெயாகக் கொண்டு எரியும் (மேசையைத் தட்டும் ஒலி) ஜீவஜோதி என்பதை மட்டும் பொல்லாங்கு பேசும் புல்லர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

அடுத்து என்னுடைய தொகுதிக்கு வருகிறேன். என்னுடைய தொகுதியில் கச்சிராப்பாளையத்தில் வடக்காநந்தல் என்ற பேரூராட்சி இருக்கிறது. அங்கே 40 ஆண்டுகளாக காவல் நிலையம் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இதயதெய்வம் அவர்கள் அருள்கூர்ந்து இந்த ஆண்டாவது அங்கே ஒரு புதிய கட்டிடம் கட்டிக் கொடுப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். அடுத்து என்னுடைய தொகுதியில் கீழ்க்குப்பம் என்ற இடத்தில் ஓ.பி. ஸ்டேஷன் இருக்கிறது. அதை ஒரு எஸ்.ஐ. லெவலில் ஒரு காவல் நிலையமாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நீண்ட நிலையான திட்டம் ஒன்று அரசினுடைய அனுமதிக்காகக் காத்திருக்கிறது. சின்னசேலம், தியாகதுர்க்கம், கள்ளக்குறிச்சி ஆகிய 3 பேரூராட்சிகளுக்கும் உள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டம் அது. 40, 45 ஆண்டுக்காலமாக மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிற அந்தத் திட்டத்தை, இதயதெய்வம் அவர்கள் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து டபிள்யூ.ஆர்.சி.பி. திட்டத்தில் கோமுகி அணையிலிருந்து சின்னசேலம் ஏரிக்கு வாய்க்கால் வெட்டுவதற்கு ஒரு திட்டம் இருக்கிறது. அருள்கூர்ந்து டபிள்யூ, ஆர்.சி.பி. திட்டத்தின்கீழ் அதனுடைய மதிப்பீட்டை ஆய்வு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கள்ளக்குறிச்சியில் ஒரு துணைமின் நிலையம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து பக்கத்தில் இருக்கிற . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கு நான் கூடுதலாக நேரம் கொடுத்திருக்கிறேன். பக்கத்தில் இருக்கிறவர் சீட்டுக் கொடுத்து, என்

தொகுதியைப் பற்றியும் பேசுங்கள் என்றால் எப்படி? உங்கள் தொகுதியைப் பற்றி மட்டும் பேசி முடியுங்கள்.

திரு. ஆர். பி. பரமசிவம்: சின்னசேலம் தொகுதியில் மேல்நாழிபுரம் என்ற கிராமத்தில் ஒரு பி.எச்.சி. அமைக்க வேண்டும். அதற்காகக் கிட்டத்தட்ட 6 ஏக்கர் நிலம் அரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதைப்போன்று சின்னசேலத்தில் அப்கிரேடட் பி.எச்.சி. தொடங்க வேண்டும். அதற்கும் 6½ ஏக்கர் நிலம் கொடுத்து இருக்கிறார்கள். அங்கே 12 படுக்கைகள் கொண்ட அப்கிரேடட் பி.எச்.சி. அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டு, இந்த வாய்ப்பை நல்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (7-4-1995) காலை 10.00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2.02 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

5. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

ஏதுமில்லை.

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

83. கோரிக்கை எண். 2-மாநில ஆயத் தீர்வைப் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1995-96 (தமிழ், ஆங்கிலம்).

84. 1994-95-ஆம் ஆண்டின் சாதனைகள் மற்றும் 1995-96-ஆம் ஆண்டின் வருங்காலத் திட்டங்கள் பற்றிய குறிப்பு (தமிழ், ஆங்கிலம்).

85. கோரிக்கை எண். 16—தமிழ்நாடு தீயணைப்புத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1995-96 (தமிழ், ஆங்கிலம்).

86. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று அறுபத்தி ஐந்தாவது அறிக்கை, 1994-95.

87. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று அறுபத்தாறாவது அறிக்கை, 1994-95.

தொகுதியைப் பற்றியும் பேசுங்கள் என்றால் எப்படி? உங்கள் தொகுதியைப் பற்றி மட்டும் பேசி முடியுங்கள்.

திரு. ஆர். பி. பரமசிவம்: சின்னசேலம் தொகுதியில் மேல்நாழிபுரம் என்ற கிராமத்தில் ஒரு பி.எச்.சி. அமைக்க வேண்டும். அதற்காகக் கிட்டத்தட்ட 6 ஏக்கர் நிலம் அரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதைப்போன்று சின்னசேலத்தில் அப்கிரேடட் பி.எச்.சி. தொடங்க வேண்டும். அதற்கும் 6½ ஏக்கர் நிலம் கொடுத்து இருக்கிறார்கள். அங்கே 12 படுக்கைகள் கொண்ட அப்கிரேடட் பி.எச்.சி. அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டு, இந்த வாய்ப்பை நல்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (7-4-1995) காலை 10.00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2.02 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

5. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

ஏதுமில்லை.

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

83. கோரிக்கை எண். 2-மாநில ஆயத் தீர்வைப் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1995-96 (தமிழ், ஆங்கிலம்).

84. 1994-95-ஆம் ஆண்டின் சாதனைகள் மற்றும் 1995-96-ஆம் ஆண்டின் வருங்காலத் திட்டங்கள் பற்றிய குறிப்பு (தமிழ், ஆங்கிலம்).

85. கோரிக்கை எண். 16—தமிழ்நாடு தீயணைப்புத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1995-96 (தமிழ், ஆங்கிலம்).

86. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று அறுபத்தி ஐந்தாவது அறிக்கை, 1994-95.

87. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று அறுபத்தாறாவது அறிக்கை, 1994-95.

தொகுதியைப் பற்றியும் பேசுங்கள் என்றால் எப்படி? உங்கள் தொகுதியைப் பற்றி மட்டும் பேசி முடியுங்கள்.

திரு. ஆர். பி. பரமசிவம்: சின்னசேலம் தொகுதியில் மேல்நாழிபுரம் என்ற கிராமத்தில் ஒரு பி.எச்.சி. அமைக்க வேண்டும். அதற்காகக் கிட்டத்தட்ட 6 ஏக்கர் நிலம் அரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதைப்போன்று சின்னசேலத்தில் அப்கிரேடட் பி.எச்.சி. தொடங்க வேண்டும். அதற்கும் 6½ ஏக்கர் நிலம் கொடுத்து இருக்கிறார்கள். அங்கே 12 படுக்கைகள் கொண்ட அப்கிரேடட் பி.எச்.சி. அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டு, இந்த வாய்ப்பை நல்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (7-4-1995) காலை 10.00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2.02 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

5. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

ஏதுமில்லை.

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

83. கோரிக்கை எண். 2-மாநில ஆயத் தீர்வைப் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1995-96 (தமிழ், ஆங்கிலம்).

84. 1994-95-ஆம் ஆண்டின் சாதனைகள் மற்றும் 1995-96-ஆம் ஆண்டின் வருங்காலத் திட்டங்கள் பற்றிய குறிப்பு (தமிழ், ஆங்கிலம்).

85. கோரிக்கை எண். 16—தமிழ்நாடு தீயணைப்புத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1995-96 (தமிழ், ஆங்கிலம்).

86. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று அறுபத்தி ஐந்தாவது அறிக்கை, 1994-95.

87. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று அறுபத்தாறாவது அறிக்கை, 1994-95.

இணைப்பு-I

(53 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

கோரிக்கை எண். 2

மாநில ஆயத் தீர்வை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1995-96.

I. மதுவிலக்குக் கொள்கையின் வரலாறு

தமிழ்நாடு தான் நாட்டில் மதுவிலக்குக் கொள்கையைப் புகுத்திய முதல் மாநிலம் ஆகும். 1937-ஆம் ஆண்டில் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தை இயற்றியது. தொடக்கத்தில், 1937-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில், இம்மாநிலத்தில், சேலம் மாவட்டத்தில் மதுவிலக்கு புகுத்தப்பட்டு செயல்படுத்தப் பட்டது. பின்னர் இம்மாநிலத்தின் மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு, 1948-ஆம் ஆண்டு மகாத்மா காந்தி அவர்களின் பிறந்த நாளில் இருந்து தமிழ்நாடு முழுவதும் பூரண மதுவிலக்கு செயல் படுத்தப்பட்டது. 1971-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 30-ஆம் நாளன்று மதுவிலக்கு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட போது, மதுவிலக்கு திட்டத்திற்கு ஒரு கடுமையான பின்னடைவு ஏற்பட்டது; இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மதுவகைகள், சாராயம் மற்றும் கள் விற்பனைக்காக கடைகள் மாநிலம் முழுவதும் திறக்கப்பட்டன. இரண்டாண்டுகளுக்குப் பின்னர், அதாவது 1973-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 31-ம் நாளன்று மதுவிலக்கு கொள்கை ஒரு மாற்றம் பெற்று, கள்ளுக்கடைகள் மூடப்பட்டன. மீண்டும், 1974-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் சாராய விற்பனை நிறுத்தப்பட்டது. ஆனால், பிற மாநிலங்களில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட, இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மதுவகைகள், உரிமம் பெற்ற கடைகளில், தன்னனுமதி (பர்மிட்) பெற்றவர்களுக்கு தொடர்ந்து விற்பனை செய்யப்பட்டு வந்தது.

2. 1981-ஆம் ஆண்டு மே திங்களில் மதுவிலக்கு அமல்படுத்தப்பட்டது குறித்து ஆய்வு செய்ததன் பேரில், அப்போதைய அரசு, கள் மற்றும் சாராய விற்பனைக்கு உரிமங்கள் வழங்கியது. 1982 முதல் 1984 வரையிலான காலத்தில், இம்மாநிலத்தில் தனியார் மற்றும் கூட்டுத் துறையில், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகைகள் உற்பத்தி செய்ய அனுமதி அளிக்கப்பட்டது. தமிழ்நாடு வாணிபக் கழகம், 1983ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் செயல்பாட்டுக்கு வந்தது. அக்கழகம், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் மற்றும் சாராயம் ஆகியவற்றின் மொத்த வியாபாரத்தை இம்மாநிலத்திற்குள் மேற்கொண்டது. மீண்டும் 1-1-1987 முதல் மாநிலத்தில் சாராயம் மற்றும் கள் ஆகியவற்றை விற்பனை செய்தல் மற்றும் அருந்துதல் ஆகியவை முற்றிலும் தடை செய்யப்பட்டன. 1990-ஆம் ஆண்டில், அப்போதிருந்த அரசால், நாட்டு மதுவைத் தயாரித்தல் மற்றும் விற்பனை செய்தல் ஆகியவை இம்மாநிலத்தில் கொண்டுவரப்பட்டன. இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் மற்றும் பீர் ஆகியவற்றைத் தயாரிப்பதற்காக, 1989-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட சாராவிக் கழகத்திடம், இம்மாநிலத்தில் நாட்டு மது தயாரிக்கும் பணி ஒப்படைக்கப்பட்டது.

3. தற்போதைய அரசு, பதவியேற்றவுடன், தனது முதல் முடிவாக, 1991-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 16-ஆம் தேதிமுதல், நாட்டு மது உற்பத்தி, விற்பனை மற்றும் அருந்துவதை, குடியின் தீமைகளால் வெகுவாகப் பாதிக்கப்பட்ட வகுப்பினரின், சமூக பொருளாதார நலனை மேம்படுத்தும் நோக்கத்துடன் நிறுத்தியது. 1992 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மது வகைகளின் சில்லறை விற்பனைக் கடைக்கு உள்ளேயே ‘பார்’ செயல்பட அனுமதிக்கப்பட்டது. பார்கள் செயல்பாட்டை ஆய்வு செய்ததின் பேரில், அவைகளை

1-6-1993 முதற்கொண்டு மூடிவிட அரசு முடிவெடுத்தது. சென்னை உயர்நீதி மன்றத்தின் 30-6-1993-ம் நாளிட்ட தீர்ப்பில் உயர்நீதிமன்றம் பிறப்பித்த தடையாணையை இரத்து செய்த பின்னர், 1-7-1993 ஆம் நாளிலிருந்து பார்கள் மூடப்பட்டன. இந்திய உச்சநீதி மன்றம், 27-7-1994 ஆம் நாளிட்ட தனது தீர்ப்பில், மேற்சொல்லப்பட்ட அரசின் முடிவை உறுதி செய்தது.

II. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை பற்றிய அரசின் கொள்கை.

4. பூரண மதுவிலக்கே மாநில அரசின் கொள்கையாகும். அரசின் இக்கொள்கையை செயல்படுத்தும் முதற்படியாக 1991 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 16-ஆம் நாள் முதல் நாட்டு மது விற்பனை நிறுத்தப்பட்டது. கள்ளச் சாராயம் காய்ச்சப்படுவது, கொண்டு செல்லப்படுவது, வைத்திருப்பது, விற்பனை செய்யப்படுவது மற்றும் ஏனைய மாநிலங்களிலிருந்து அவை கடத்தி வரப்படுவது ஆகியவைகளை ஒட்டுமொத்தமாக ஒழிக்க வேண்டுமென்ற அரசின் கொள்கை தீவிரமாகத் தொடரப்படும்.

5. இம்மாநிலத்தில் பொதுத் துறையில் மது தயாரிக்கப்படமாட்டாது என்ற அரசின் கொள்கை தொடரும்.

6. இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மதுவகைகள் சில்லறை விற்பனைக் கடைகளுடன் இணைந்து செயல்படும் "பார்"களுக்கு உரிமம் வழங்கப்படமாட்டாது என்ற அரசின் கொள்கை தொடரும்.

7. கள்ளச் சாராயம் தயாரிப்பதற்கும், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு போலி மது வகைகளைத் தயாரிப்பதற்கும் தெளிந்த சாராவி தவறாகப் பயன்படுத்துவதைத் தடுக்கும் நோக்கத்துடன், இரசாயனத் தொழிற்சாலைகளில், எங்கெங்கெல்லாம் சாத்தியமோ, அங்கெங்கெல்லாம்

தெளிந்த சாராவியைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, இயல்பு மாற்றப்பட்ட சாராவியைப் பயன்படுத்த அனுமதிப்பது என்ற அரசின் கொள்கை தொடரும். கண்டிப்பான விதிமுறைகளின் கீழ் மட்டுமே, பல்வேறு பயன்பாடுகளுக்குத் தெளிந்த சாராவியைப் பயன்படுத்த அனுமதிக்கப்படும்.

8. மதுபானத் தயாரிப்பாளர்களிடமிருந்து வாங்கப்படும் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மதுவகைகளின் கொள்முதல் விலையை, தமிழ் நாடு மாநில வாணிபக் கழகம், உற்பத்தியாளர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி, விலையை நிர்ணயம் செய்யும் கொள்கை தொடர்ந்து நீடிக்கும்.

9. மதுவிலக்கு தொடர்பான குற்ற வழக்குகளை இணக்க முறை தீர்வு மூலமாக முடிவுக்குக் கொண்டு வர தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தில் கண்டுள்ள விதித்துறைகளைப் பயன்படுத்தும் நடைமுறை தொடர்ந்து செயலில் இருக்கும்.

10. சமூக விரோத சக்திகள், வழக்கமாகக் குற்றம் செய்பவர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கை களைக் கட்டுப்படுத்தி, தடுக்கும் பொருட்டு, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு, கள்ளச் சாராயக்காரர்கள், போதைப்பொருள் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள் மற்றும் குடிசை நில ஆக்கிரமிப் பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1982) விதித்துறைகள் தொடர்ந்து திறம்பட செயல்படுத்தப்படும்.

11. இம்மாநிலத்தில் கிடைக்கக்கூடிய வளங்களைப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கத்துடன், இம்மாநிலத்தில் சாராவியை அடிப்படையாகக் கொண்ட புதிய தொழிற்சாலை களை அமைக்க ஊக்குவிக்கப்படும்.

1995 ஏப்ரல் 6]

12. குடிப்பதால் விளையும் தீமைகள் குறித்து பொது மக்களுக்கு அறிவுறுத்த அரசு, தனது முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளும். இது ஒரு தொடர் நடவடிக்கையாகும்.

III. நிறுவன அமைப்பும் அதன் செயல்பாடுகளும்

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

13. மதுவிலக்கு மற்றும் ஆயத்துறை ஆணையாளர் மதுவிலக்கு மற்றும் ஆயத்துறை தலைவர் ஆவார்; அவர் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் மதுவிலக்கு ஆயத்துறை செயல்பட்டு வருகிறது. மதுவிலக்கு குறித்த கொள்கைகளை உருவாக்குவதில் மதுவிலக்கு ஆயத்துறை ஆணையாளர் அரசுக்கு உதவுகிறார். அவர், மாநிலத்திலுள்ள ஆயத்தீர்வை நிருவாகம் முழுவதையும் மேற்பார்வை செய்து கட்டுப்படுத்துகிறார்; தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் பல்வேறு பிரிவுகள் மற்றும் அதன் கீழ் இயற்றப்பட்டுள்ள விதிமுறைகள் ஆகியவற்றைச் செயல்படுத்துவதற்கு அவர் பொறுப்பு ஆவார். தலைமையிடத்தில், இரு இணை ஆணையாளர்களும், நான்கு உதவி ஆணையாளர்களும் மற்றும் தேவையான இதர பணியாளர்களும் மதுவிலக்கு மற்றும் ஆயத்துறை ஆணையாளருக்கு உதவுகிறார்கள். அரசு துணைச் செயலாளர் பதவித்தரத்தில் உள்ள ஒரு நிதிக்கட்டுப்பாட்டு அலுவலர், நிதி நிர்வாகத்தில் ஆணையாளருக்கு உதவுகிறார். மாவட்ட அளவில் ஓர் உதவி ஆணையாளர் மற்றும் அவருக்குத் துணையாகவுள்ள அலுவலர்களும் ஆயத்தீர்வை குறித்த விஷயங்களுக்கான பொறுப்பினை வகிக்கிறார்கள். அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரின் கட்டுப்பாட்டின் கீழ் பணியாற்றுகிறார்கள். மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையில் பணியாற்றுகின்ற பணியாளர்கள் பற்றிய விவரங்கள்

இணைப்பு-I இல் கொடுக்கப்பட்டுள்ளன. சாராவியை அடிப்படையாகக் கொண்டுள்ள தொழில் பிரிவுகளில் சாராவி முறையாகப் பயன்படுத்தப்படுவதைக் கண்காணிக்கவும், தேவையான நேர்வுகளில் தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் தீர்வை விதிக்கத்தக்க பொருட்களுக்கு ஆயத்தீர்வை விதிப்பதற்கும், வருவாய்த் துறை அலுவலர்கள், வடிசாலைகள், ஆயத்தீர்வைக்குட்பட்ட பொருட்களைச் சேமித்து வைக்கும் பிணைக் கிடங்குகளில் வடிசாலை அதிகாரிகளாகவும்/ஆய மேற்பார்வை அலுவலர்களாகவும்/பிணையத்திலுள்ள தொழிற்சாலைகள் அதிகாரிகளாகவும் பணியமர்த்தப்படுகின்றனர். மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதியான பாண்டிச்சேரியின் எல்லைப் பகுதிகளில், தற்போது, விழுப்புரம் ராமசாமி படையாச்சியார் மாவட்டத்தில் 5 சோதனைச் சாவடிகளும் மற்றும் தென்னாற்காடு வள்ளலார் மாவட்டத்தில் தற்போது 3 சோதனைச் சாவடிகளும் செயல்படுகின்றன.

மதுவிலக்கு செயலாக்கப் பிரிவு

14. தற்போதைய அரசால் மீண்டும் ஏற்படுத்தப்பட்ட, மாநிலத்திலுள்ள மதுவிலக்கு செயலாக்கப் பிரிவு 1991-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களிலிருந்து செயல்பட்டு வருகிறது. இப்பிரிவு ஒரு காவல் துறைத் தலைவரின் தலைமையில் இயங்கி வருகிறது. இவருக்கு, காவல்துறைத் துணைத் தலைவர் இருவர் உதவி புரிகின்றனர். இப்பிரிவில் 7 மண்டலங்கள் உள்ளன. ஒவ்வொன்றிற்கும், காவல்துறைக் கண்காணிப்பாளர் ஒருவர் தலைமை வகிக்கிறார். தமிழ்நாடு மாநிலத்திலும், தமிழ்நாட்டின் எல்லையோர அண்டை மாநிலங்களிலிருந்தும் கள்ளச் சாராயம் கள்ளத்தனமாகக் கடத்தப்படுவது குறித்த தகவல்களைச் சேகரிக்கும் பொருட்டு காவல்துறை ஆய்வாளர்

ஒருவர் தலைமையின் கீழ் ஒவ்வொரு மண்டலத்திலும், மதுவிலக்கு புலனாய்வுப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் 117 மதுவிலக்கு செயலாக்கப் பிரிவுகள் உள்ளன. ஒவ்வொரு பிரிவும் காவல்துறை ஆய்வாளரின் தலைமையில் இயங்குகிறது. மாவட்டத்திலுள்ள பிரிவுகள், காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளரின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகின்றன. மதுவிலக்கு செயலாக்கப் பிரிவின் கீழ் செயல்படும் பணியாளர் பற்றிய விவரங்கள் இணைப்பு II-இல் கொடுக்கப்பட்டுள்ளன.

IV. தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் வரும் பொருட்கள்.

கருப்பஞ்சாற்றுக் கசண்டு.

15. கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இம்மாநிலத்தில் அமைக்கப்பட்டுள்ள 32 சர்க்கரை ஆலைகளில் (இணைப்பு-III) செய்யப்படும் சர்க்கரை உற்பத்தியில் கிடைக்கப் பெறும் ஒரு துணைப் பொருளாகும். வடிசாலைகளில் சாராவி தயாரிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் அடிப்படை மூலப்பொருள் கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஆகும். இம்மாநிலத்தில் உள்ள உரிமம் பெற்ற இதர 371 சிறு உரிமதாரர்கள், கருப்பஞ்சாற்றுக் கசண்டை, நல்லெண்ணெய், கால்நடைத் தீவனம், கோழித் தீவனம் ஆகியவற்றைத் தயாரிப்பதிலும் மற்றும் வார்ப்படச் சாலையில் பிணைக்கும் பொருளாகவும் பயன்படுத்துகின்றனர்.

16. கருப்பஞ்சாற்றுக் கசண்டை வைத்திருத்தல், விற்பனை செய்தல், பயன்படுத்துதல், கொண்டு செல்லுதல், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்தல் ஆகியவற்றிற்காக, தகுதியுடைய அதிகாரிகளால் உரிமம் வழங்குவது, தமிழ்நாடு 1958-ஆம்

ஆண்டு கருப்பஞ்சாற்றுக் கசண்டு கட்டுப்பாடு முறைப்படுத்தல் விதிகளால் முறைப்படுத்தப்படுகிறது.

17. மத்திய அரசு, 1961 ஆம் ஆண்டு கருப்பஞ்சாற்றுக் கசண்டு கட்டுப்பாட்டு ஆணையை 10-6-1993 அன்று இரத்து செய்தது. மத்திய அரசின் இந்த இரத்து ஆணையின்படி சர்க்கரை ஆலைகள், உரிமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளுக்கேற்ப, கருப்பஞ்சாற்றுக் கசண்டைப் பயன்படுத்தும் உரிமம் பெற்றவருக்கு விற்கலாம். விலைக் கட்டுப்பாடு எதுவும் இல்லை. கருப்பஞ்சாற்றுக் கசண்டின் மீதான கட்டுப்பாடு மத்திய அரசால் நீக்கப்பட்டதன் விளைவாக கருப்பஞ்சாற்றுக் கசண்டின் விலை, நாடு முழுவதிலும் வெகுவாக உயர்ந்துவிட்டது. மத்திய அரசால் பிறப்பிக்கப்பட்ட கட்டுப்பாடு நீக்க ஆணைகளின் விளைவாக, மாநில அரசு, உரிமதாரர்கள் கருப்பஞ்சாற்றுக் கசண்டை விற்பனை செய்தல், கொண்டு செல்லுதல், உடைமையில் வைத்திருத்தல், பயன்படுத்துதல், இறக்குமதி செய்தல் மற்றும் ஏற்றுமதி செய்தல் ஆகியவை குறித்து, 1993-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் விரிவான நெறிமுறைகள் பிறப்பித்தது. இந்த நெறிமுறைகள், தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு கருப்பஞ்சாற்றுக் கசண்டு கட்டுப்பாடு முறைப்படுத்துதல் விதிகளில் கூறப்பட்டுள்ள விதித் துறைகளுக்குட்பட்டவை.

18. 1993-94 ஆம் கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஆண்டில் (அக்டோபர் 1993 முதல் செப்டம்பர் 1994 வரை) இம்மாநிலத்தில் 0.45 இலட்சம் மெட்ரிக் டன்கள் கருப்பஞ்சாற்றுக் கசண்டு மிகுதியாக இருந்தது. 1994-95 கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஆண்டில் உள்ளூர் தேவைகளை நிறைவு செய்த பின்னர் 2.00 இலட்சம் மெட்ரிக் டன்கள் கருப்பஞ்சாற்றுக் கசண்டு உபரியாக இருக்கும் என

எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில், கருப்பஞ்சாற்றுக் கசண்டு சேமிப்புப் பிரச்சினையைத் தீர்க்க, மற்ற மாநிலங்கள்/நாடுகளுக்கு கருப்பஞ்சாற்றுக் கசண்டினை ஏற்றுமதி செய்ய கீழ்க்கண்டவாறு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன :-

ஆணை வெளியிட்ட நாள்.	ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப் பட்ட அளவு.	எடுக்கப்பட்ட அளவு.
	(மெட்ரிக் டன்களில்.)	
7-9-1994	40,000	1,533
18-11-1994	5,000	4,967
22-2-1995	50,000	எடுக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

இம்மாநிலத்தில், 1990-91 முதல் கருப்பஞ்சாற்றுக் கசண்டு உற்பத்தி மற்றும் பயன்பாடு பற்றிய விவரங்கள் இணைப்பு IV-இல் கொடுக்கப்பட்டுள்ளன.

சாராவி

19. இம்மாநிலத்தில் கருப்பஞ்சாற்றுக் கசண்டினை மூலப்பொருளாகப் பயன்படுத்தி சாராவி தயாரிக்கும் 14 வடிசாலைகள் செயல்பட்டு வருகின்றன. இம்மாநிலத்திலுள்ள வடிசாலைகள் பற்றிய விவரங்கள் இணைப்பு V-இல் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த மாநிலத்திலுள்ள 14 வடிசாலைகளில், 12 தனியார் துறையிலும், 2 கூட்டுறவுத் துறையிலும் உள்ளன.

20. இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள், ஏனைய இராசயனப் பொருட்கள் மற்றும் வார்னீஷ் போன்ற பொருட்களை தயாரிக்க சாராவி மூலப் பொருளாகப் பயன்படுகிறது. கல்வி நிலையங்கள், ஆய்வுக் கூடங்கள், ஆராய்ச்சி நிலையங்கள் ஆகியவற்றிலும் சிறிய அளவில் இது

பயன்படுத்தப்படுகிறது. சில இரசாயனத் தொழிற்சாலைகள் தெளிந்த சாராவியைத் தவறான முறையில் பயன்படுத்துவதைத் தடுக்கும்பொருட்டு, சாத்தியமான இடங்களில் இயல்பு மாற்றப்பட்ட சாராவியை வழங்க அரசு ம்டிவெடுத்துள்ளது. கடுமையான நடைமுறைகளின் கீழ் மட்டுமே, இரசாயன தொழிற்சாலைகளுக்கு தெளிந்த சாராவி வழங்கப்படும். இதற்குத் தேவையான கடுமையான விதிகள் அரசால் விரைவில் பிறப்பிக்கப்படும்.

21. மத்திய அரசு, 10-6-1993 ஆம் நாளிட்ட அதன் ஆணையில், 1971 ஆம் ஆண்டு எதைல் ஆல்கஹால் (விலைக்கட்டுப்பாடு) ஆணையை இரத்து செய்தது. அதன் காரணமாக எதைல் ஆல்கஹால் மீது விலைக்கட்டுப்பாடு ஏதும் இல்லை. இதன் விளைவாக இம்மாநிலத்திலுள்ள உரிமம் பெற்ற தொழில் பிரிவுகள் சாராவியை விற்பனை செய்தல், எடுத்து செல்லுதல், வைத்திருத்தல் மற்றும் பயன்படுத்துதல் முதலியவற்றுக்கு அரசு விரிவான நெறிமுறைகளை பிறப்பித்தது. மேலும் விற்பனை செய்தல், வைத்திருத்தல், பயன்படுத்துதல், இறக்குமதி செய்தல், ஏற்றுமதி செய்தல், கொண்டு செல்லுதல் போன்ற பல்வேறு காரியங்களுக்காக சாராவியைப் பயன்படுத்துவது, நடைமுறையிலுள்ள மாநில விதிகளான, தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு தெளிந்த சாராவி விதிகள் மற்றும் தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இயல்பு மாற்றப்பட்ட சாராவி மற்றும் வார்னிஷ் (பிரெஞ்ச் பாலிஷ்) விதிகள் ஆகியவற்றின்கீழ் முறைப்படுத்தப்படும் என்பதும் தெளிவாக்கப்பட்டது.

22. இம்மாநிலத்தில் தயாரிக்கப்படும் சாராவியை உள்ளூரிலேயே பயன்படுத்த, சாராவியை அடிப்படையாகக் கொண்ட புதிய தொழிற்சாலைகள் இம்மாநிலத்தில் நிறுவ, அரசு ஊக்கமளிக்கும்.

23. 1993-94 ஆம் சாராவி ஆண்டில் (டிசம்பர் 93 முதல் நவம்பர் 94 வரை) 44.43 இலட்சம் லிட்டர்கள் சாராவி இம்மாநிலத்தில் உபரியாக இருந்தது. 1994-95 ஆம் சாராவி ஆண்டில், உள்ளூர் தேவைகளை நிறைவு செய்த பின்னர், 215.00 இலட்சம் லிட்டர்கள் சாராவி உபரியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சேலம் மற்றும் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில், சாராவி சேமிப்புப் பிரச்சினையைத் தீர்க்கும் பொருட்டு, 30 இலட்சம் லிட்டர்கள் சாராவியை, மேற்படி வடிசாலைகளிலிருந்து ஏற்றுமதி செய்ய, 22-2-1995 அன்று அரசு அனுமதி வழங்கியுள்ளது. 1990-91 ஆம் ஆண்டிலிருந்து இம்மாநிலத்தில், சாராவி உற்பத்தி மற்றும் பயன்பாடுகளின் விவரங்கள் இணைப்பு VI-இல் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள்.

24. 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களுக்கும், 1995 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களுக்கும் இடைப்பட்ட காலத்தில், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைகளின் மொத்த உற்பத்தி 76.60 இலட்சம் பெட்டிகளாகும். இது 689.00 இலட்சம் பல்க் லிட்டர்களுக்கு நிகரானதாகும்.

1990-91 ஆம் ஆண்டிலிருந்து, இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் மற்றும் பீர் ஆகியவைகளின் உற்பத்தி விவரங்கள் இணைப்பு VII-இல் கொடுக்கப்பட்டுள்ளன.

பீர்.

25. 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல், 1995 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் வரையிலான காலத்தில் மொத்த பீர் உற்பத்தி 47.93 இலட்சம் பெட்டிகளாகும். இது 374 இலட்சம் பல்க் லிட்டர்களுக்கு நிகரானதாகும்.

V. விநியோக முறைகள்.

மொத்த வணிகம்.

26. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், ஒரு மொத்த வணிக உரிமம் மற்றும் 35 கிளை கிடங்கு உரிமங்களை பெற்றுள்ளது. இது, மாநிலத்திலுள்ள பல்வேறு சில்லறை உரிமதாரர்களுக்கு மதுவகைகளை விநியோகம் செய்கிறது. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் வழங்கும் மதுவகைகள் தவிர வேறெந்தவகை மதுவையும் தமிழ்நாட்டில் உள்ள சில்லறைக் கடைகளில் விற்பனை செய்ய இயலாது.

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்.

அமைப்பு.

27. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், தமிழக அரசுக்கு முற்றிலும் சொந்தமான ஒரு நிறுவனமாகும். இது 1983 ஆம் ஆண்டு ஜூலையில் தோற்றுவிக்கப்பட்டது. இந்த நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் சென்னையில் அமைந்துள்ளது. தலைவர் (பதவி வழி), மேலாண்மை இயக்குநர், 4 இயக்குநர்கள் (பதவி வழி) ஆகியோரைக் கொண்டுள்ள இயக்குநர்கள் குழு, இக்கழகத்தின் நடவடிக்கைகளை நெறிமுறைப்படுத்திக் கட்டுப்படுத்துகிறது. சென்னையிலுள்ள இதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைத் தவிர, மாநிலத்தில் 5 மண்டல அலுவலகங்களும், 35 கிளை கிடங்குகளும் உள்ளன.

28. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் 5 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்ட மூலதனத்தைக் கொண்டுள்ளது. இம்மூலதனம் ஒவ்வொன்றும் ரூ. 1000 மதிப்புள்ள 50,000 மூலதனப் பங்குகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மாநில அரசு இதுவரை ஒவ்வொன்றும் ரூ. 1000 மதிப்புள்ள 34000 மூலதன பங்குகளாக மொத்தம் ரூ. 3.40 கோடி செலுத்தியுள்ளது.

வணிக நடவடிக்கைகள்.

29. 1983 ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், இம்மாநிலத்திற்குள், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் மற்றும் சாராயம் ஆகியவற்றின் மொத்த வியாபாரத்தினை எடுத்துக் கொண்டது. 1985-இல் தமிழ்நாடு முழுவதிலும் சாராயத்தை சில்லறையில் விற்பனை செய்யும் பணியும் இந்நிறுவனத்திடமே ஒப்படைக்கப்பட்டு, அதன் முகவர்கள் மூலம் அப்பணி மேற்கொள்ளப்பட்டது. இதில் பல சட்டச் சிக்கல்கள் ஏற்படவே, சாராய சில்லறை வியாபாரத்திற்கான அனுமதியை 1986 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 16 ஆம் நாள் முதல் ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலமுறையில் வழங்குவதென அரசு முடிவு செய்தது. இம்மாநிலத்திலுள்ள உற்பத்தியாளர்களால் உற்பத்தி செய்யப்படும், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் மற்றும் பீர் ஆகியவற்றையும், வெளிமாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்யும் மது வகைகளையும் வாங்கி அவற்றை இந்நிறுவனத்தின் 35 கிளை விற்பனைக்கிடங்குகள் மூலம் சில்லறை விற்பனையாளர்களுக்கு விநியோகம் செய்யும் மொத்த விற்பனையாளராக இந்நிறுவனம் இம்மாநிலத்தில் செயல்படுகிறது. 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் 1995 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் வரையில் உள்ள காலத்தில், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் 84.76 இலட்சம் பெட்டிகளும், 61.69 இலட்சம் பீர் பெட்டிகளும் சில்லறை விற்பனையாளர்களுக்கு இந்நிறுவனத்தால் விற்பனை செய்யப்பட்டது.

தமிழ்நாடு சாராவிக் கழகம்.

30. தமிழ்நாடு சாராவிக் கழகம், தமிழ்நாடு வாணிபக் கழகத்தின் ஒரு துணை நிறுவனமாகும். இக்கழகம், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் மற்றும் பீர்வகைகள்

ஆகியவற்றை தயாரிக்கும் நோக்கத்துடன் 1989 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. 1990 ஆம் ஆண்டில், நாட்டு மது தயாரிப்பு, அப்பொழுதிருந்த அரசால், இக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. தற்பொழுதுள்ள அரசு, பதவி ஏற்றவுடன், நாட்டு மது விற்பனையை 16-7-1991-லிருந்து நிறுத்திவிடுவதற்கு முடிவெடுத்தது. பொதுத்துறையில் மது தயாரிக்கப்படக்கூடாது எனவும் இந்த அரசு முடிவு செய்தது. இதன் விளைவாக இக்கழகத்திற்குச் சொந்தமான 12 கலவை ஆலைகளில், நாட்டு மது உற்பத்தி நிறுத்தப்பட்டது. எல்லாக் கலவை ஆலைகளும், தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்திடம் (ஆவின்) 1992 ஆம் ஆண்டு மே திங்களில், இறுதி உத்தரவு பிறப்பிக்கப்படுவதை எதிர்நோக்கி ஒப்படைக்கப் பட்டது.

சில்லறை விற்பனைக் கடைகள் :

31. 31-5-1989 வரையில், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுபான வகைகள், உரிமம் பெற்ற கடைகள் வாயிலாக விற்பனை செய்யப்பட்டன. 1-6-1989-இல் இருந்து 1989 ஆம் ஆண்டைய தமிழ்நாடு மது (சில்லறை விற்பனை) விதிகளின் கீழ், ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏல முறையின் வாயிலாக சில்லறை விற்பனைக் கடைகள் விற்பனை செய்யப்பட்டன. கூட்டுறவுச் சங்கங்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் ஆகியவற்றிற்கு நியமன முறையில் கடைகளை விற்பனை செய்வதற்கு மேற்குறிப்பிட்ட விதிகள் வழிவகை செய்கின்றன. 21-4-1992 நாளிட்ட மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அரசாணை (நிலை) எண்.90-இன் படி, 1992-93 ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்கள், மாநில வாணிபக் கழகம் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆகியவற்றுக்கு நியமன அடிப்படையில் கடைகள் எதுவும்

ஒதுக்கப்படவில்லை. மேற்கண்ட அரசின் முடிவு, மறு பரிசீலனை செய்யப்பட்டு, இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுபான சில்லறை விற்பனைக் கடைகளை விருப்பமுள்ள கூட்டுறவு நிறுவனங்களும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும், நடத்தலாம் என அரசு 1993-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் தீர்மானித்தது. 1990-91 முதல் இம்மாநிலத்தில் செயல்பட்டு வரும் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது சில்லறை விற்பனைக் கடைகள் குறித்த விவரங்கள் இணைப்பு VIII-இல் கொடுக்கப்பட்டுள்ளன.

VI. விலை நிர்ணயம்

32. இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகைகள், பீர் ஆகியவற்றுக்கான விலை, உள், மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையில் 14-2-1989 ஆம் நாளிட்ட 217 ஆம் எண் அரசாணையில் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளுக்கு இணங்க மதுவிலக்கு ஆயத்துறை ஆணையாளரால் முன்பு நிர்ணயம் செய்யப்பட்டு வந்தது. இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகைகள், பீர் ஆகியவற்றுக்குரிய விலையை நிர்ணயம் செய்யும் அதிகாரம் 1990 இல் அரசால் எடுத்துக்கொள்ளப்பட்டது. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், தயாரிப்பாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி, இந்தியாவில் தயாராகும் அயல்நாட்டு மதுவகைகள் மற்றும் பீர் ஆகியவற்றின் விலையை நிர்ணயம் செய்ய 1992 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. மொத்த விற்பனையாளருக்கும், சில்லறை விற்பனையாளர்களுக்கும் குறைந்த அளவு ஆதாயம் தலா பத்து விழுக்காடு எனவும், உயரளவு ஆதாயம் தலா இருபது விழுக்காடு எனவும் அரசு மேலும் வரையறை செய்துள்ளது.

VII. ஆயத்தீர்வை வருவாய்

33. 1994 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் முடிய ஆயத்தீர்வை வகையில் கிடைத்த வருவாய் ரூ. 568.82 கோடியாகும். இதற்கு முந்தைய ஆண்டில் கிடைத்த வருவாய் ரூ. 564.86 கோடியாகும். 1994-95 ஆம் ஆண்டில், 1995 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் வரையிலான 'மாநில ஆயத்தீர்வை' யின் கீழ் கிடைத்த மொத்த வருவாய் ரூ. 452.59 கோடியாகும். 1990-91 ஆம் ஆண்டிலிருந்து ஆயத்தீர்வை மூலம் கிடைத்த வருவாய் குறித்த விவரங்கள் இணைப்பு XIV -இல் கொடுக்கப்பட்டுள்ளன.

34. 16-7-1991 முதல் நாட்டுமது விற்பனையை ஒழித்ததன் விளைவாக, ஆண்டொன்றுக்கு ரூ. 391 கோடி பெருத்த வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. மதுவிலக்கை அமல்படுத்தியது காரணமாகவும், நாட்டுமது விற்பனையை ஒழித்தது காரணமாகவும் ஏற்பட்ட வருவாய் இழப்பை ஈடுகட்டுமாறு மைய அரசை இவ்வரசு கேட்டுக்கொண்டது. ஆயினும், இவ்வரசுக்கு ஏற்பட்ட அவ்வருவாய் இழப்பை ஈடுகட்ட மைய அரசு மறுத்துவிட்டது.

VIII. மதுவிலக்குச் செயலாக்கம்

மதுவிலக்குச் செயலாக்கப் பிரிவின் பயன்கள்:

35. கள்ளத்தனமாக சாரயம் காய்ச்சுவது, மதுவிலக்குக் கொள்கைக்கு பெருந்தீமையாகும். கள்ளச்சாராயத்தை வடிப்பது, வைத்திருப்பது, விற்பனை செய்வது, எடுத்துச் செல்வது போன்ற நடவடிக்கைகளைத் தீவிரமாகக் கண்டுபிடித்து, அவற்றை அறவே ஒழிப்பதற்கு காவல் நிலைய அலுவலர்கள், கிராம நிருவாக அலுவலர்கள் பொறுப்பாக்கப்பட்டனர். கிராம நிருவாக அலுவலர்கள் ஊரக அளவில் பொது மக்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்வதால் குறிப்பாக, அவர்களுடைய பகுதியில் நடக்கின்ற

சட்ட விரோத நடவடிக்கைகள், நன்கு தெரிந்திருக்கும் என்று எதிர்பார்க்கப் பட்டு அவர்களுக்கு அப்பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டது.

36. சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கும் காவலர்கள் மட்டும் தனியாக கள்ளச்சாராயம் காய்ச்சுதலை முற்றிலுமாக ஒழிக்க முடியாது என்பதை உணர்ந்து, அரசு, காவல் துறையில் மதுவிலக்குச் செயலாக்கப் பிரிவு ஒன்றைத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளுடன், காவல் துறைத் தலைவரின் தலைமையில் அமைத்துள்ளது. மதுவிலக்கைச் செயலாக்குவதில் சட்டம்-ஒழுங்கைப் பராமரிக்கின்ற காவலர்களுக்குத் துணையாக மதுவிலக்குச் செயலாக்கப் பிரிவு அமைக்கப்பட்டுள்ள போதிலும், மதுவிலக்குச் செயலாக்கப் பிரிவின் தனிப்பட்ட பணி மதுவிலக்கைச் செயலாக்குவதாகும். இந்த நோக்கத்தை எய்துவதற்காக, மதுவிலக்குச் செயலாக்கப் பிரிவில் உள்ள காவல்துறைத் தலைவர் முதல் காவலர்கள் வரை, திட்டமிட்டு குறித்த காலத்திற்கொருமுறை திடீர் சோதனைகள் நடத்துகின்றனர். குறிப்பிட்ட சில பகுதிகளில் கள்ளச்சாராயம் காய்ச்சுவதைக் கருத்தில் கொண்டும் குறிப்பிட்ட சில பகுதிகளில் மக்கள் பெருவாரியாக ஈர்க்கப்படுகின்ற விழாக் காலங்களைக் கருத்தில் கொண்டும், புத்தாண்டு தினம், பொங்கல், தீபாவளி, கிறிஸ்துமஸ் போன்ற பண்டிகை தினங்களைக் கருத்தில் கொண்டும், அச்சமயங்களில் திடீர் சோதனைகள் நடத்தத் திட்டமிட்டு, மூத்த காவல் துறை அதிகாரிகள் நேரடியாகச் சென்று திடீர் சோதனைகள் பல நடத்தினர். கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கள்ளச்சாராய விற்பனை ஆகியவை அதிக அளவில் திட்டமிட்டபடி நடைபெற்று, பல பகுதிகளுக்கும் பரவுகின்ற இடங்களில், காவல் துறையினர் சட்டம்-ஒழுங்கு மதுவிலக்குச் செயலாக்கப் பிரிவு மற்றும் ஆயுதம் தாங்கிய காவல் படைப்பிரிவு ஆகியவற்றை ஒன்று சேர்த்து பெரிய அளவில் திடீர் சோதனைகள் நடத்தப்பட்டன; இதனால்,

சிறந்த பயன்கள் கிடைத்தன. 1994-ல் தீபாவளிக்கு முன்னர் (1-10-1994 முதல் 2-11-1994 வரை) சட்டம்-ஒழுங்கு பிரிவும், மதுவிலக்குச் செயலாக்கப் பிரிவும் பல்வேறு வகையான மதுவிலக்குக் குற்றங்களில் (55,411) ஈடுபட்டிருந்த மதுவிலக்குக் குற்றவாளிகள் 54,103 பேரைக் கைது செய்தது. இத்தகைய திடீர் சோதனைகள் காரணமாக, சாராய ஊறல்கள் 31,54,548 லிட்டர், கள்ளத்தனமாக வடிக்கப்பட்ட சாராயம் 4,85,639 லிட்டர், தெளிந்த சாராவி 10,385 லிட்டர், கருநாடக மாநிலத்திலிருந்து கொண்டுவரப்பட்ட சாராயப் பாக்கெட்டுகள் 1,01,974, அரிஷ்டம் 1689 லிட்டர், கள் 5972 லிட்டர், அனுமதியின்றி இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைகள் 3308 புட்டி ஆகியவை கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன. அக்கால அளவில் மேற்கூறிய இரு பிரிவுகளும், 5 லாரி, 4 வேன், 12 கார், 7 ஆட்டோ, 1 டிராகடர், 141 மோட்டார் சைக்கிள், 315 சைக்கிள், 4 ஏனைய வகைவண்டி (மோட்டார் பொருத்தப்படாத வண்டிகள்) ஆகியவற்றைக் கைப்பற்ற முடிந்தது. இது குறுகிய காலத்தில் எய்திய சிறந்த சாதனை ஆகும். இதனால் மதுவிலக்கைச் செயலாக்குவதில் அதிக அளவிற்குப் பயன் கிடைத்துள்ளது.

37. பொங்கல் பண்டிகை நாட்களுக்கு முன்னர் (25-12-1994 முதல் 14-1-1995 வரை) நடத்தப்பட்ட இது போன்ற பெரிய அளிவிலான மும்முர திடீர் சோதனைகளின் பயனாக 31,307 மதுவிலக்குக் குற்றங்களைப் புரிந்த கள்ளச்சாராயம் காய்ச்சுவோர் 30,801 பேர் கைது செய்யப்பட்டனர். இக்கால அளவில், மதுவிலக்குச் செயலாக்கப் பிரிவும், மாவட்ட காவல் பிரிவும் சேர்ந்து 15,58,000 லிட்டர் சாராய ஊறல்களை அழித்தனர். கள்ளத்தனமாக வடிக்கப்பட்ட சாராயம் 2,75,230 லிட்டர், கருநாடக மாநில வகை சாராயம் 13,395 பாக்கெட்டு, தெளிந்த சாராவி 8445 லிட்டர், மதுகஷாயம் 4561 லிட்டர், கள் 4356 லிட்டர், அனுமதியின்றி இந்தியாவில் தயாரிக்கப்

பட்ட அயல்நாட்டு மதுவகை 845 புட்டி ஆகியவற்றைக் கைப்பற்றினர், அத்தகைய திடீர் சோதனைகளின் போது அவர்கள், கள்ளச்சாராயத்தை எடுத்துச் செல்வதற்காக கள்ளச்சாராயம் காய்ச்சுவோர் பயன் படுத்திய ஒரு லாரி, 5 கார், ஒரு வேன், 6 ஆட்டோ, 51 மோட்டார் சைக்கிள், 140 சைக்கிள் ஆகியவற்றையும் கைப்பற்றினர்.

38. மதுவிலக்குக் குற்றங்களைக் களையும் நோக்கத்தில் அடைந்த சாதனைகள் வருமாறு:-

(1-1-1994 முதல் **28-2-1995** வரையிலான காலத்திற்குரிய புள்ளிவிவரம்)

1.	கண்டுபிடிக்கப்பட்ட மதுவிலக்குக் குற்றங்களின் மொத்த எண்ணிக்கை	6,89,390
2.	கைது செய்யப்பட்ட மதுவிலக்குக் குற்றவாளிகளின் மொத்த எண்ணிக்கை	6,81,000
3.	அவர்களில் கள்ளச்சாராயம் காய்ச்சுவோர் தடைச் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப் பட்ட மதுவிலக்குக் குற்றவாளிகளின் எண்ணிக்கை	1,462
4.	கள்ளச் சாராயம் காய்சுவதாகக் கண்டு பிடிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	85,772
5.	அழிக்கப்பட்ட சாராய ஊறல்களின் அளவு (லிட்டரில்)	4,62,93,655
6.	கைப்பற்றப்பட்ட கள்ளச்சாராயம் (லிட்டரில்)	71,62,512
7.	கைப்பற்றப்பட்ட சாராய பாக்கெட்டுகள் எண்ணிக்கையில்	14,52,225
8.	கைப்பற்றப்பட்ட தெளிந்த சாராவி-லிட்டரில்	2,58,060
9.	கைப்பற்றப்பட்ட மதுக்கஷாயம் - லிட்டரில்	1,17,064
10.	அனுமதியின்றி இந்தியாவில் தயாரிகக்ப்பட்ட அயல் நாட்டு மதுவகை புட்டிகள் கைப்பற்றப் பட்டவை எண்ணிக்கை	1,68,754
11.	அனுமதியின்றி இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல் நாட்டு மதுவகைகள் கைப்பற்றப்பட்ட எண்ணிக்கை	2,637

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

12.	கைப்பற்றப்பட்ட மோட்டார் வண்டிகளின் எண்ணிக்கை	1,754
13.	கைப்பற்றப்பட்ட சைக்கிள்களின் எண்ணிக்கை	2,779
14.	பறிமுதல் செய்யப்பட்ட வண்டிகளின் (அனைத்துவகை) எண்ணிக்கை	2,230

39. தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டம் குறிப்பிட்ட சில மதுவிலக்குக் குற்றங்களை இணக்க முறையில் தீர்வு செய்வதற்கு வகை செய்கிறது. இந்த விதித்துறைகளின் கீழ் 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் குற்றஞ் சாட்டப்பட்டவர், இது தொடர்பாக அதிகாரம் அளிக்கப் பெற்றுள்ள அதிகாரிகளுடன் அத்தகைய குற்றங்களை இணக்க முறையில் தீர்வு காணுவதன் பேரிலும், மேற்படி சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள அபராதத் தொகையைச் செலுத்துவதன் பேரிலும் விடுவிக்கப் பெறுவார். மதுவிலக்குக் குற்றங்களுக்கு இணக்க முறையில் தீர்வு காண வருவாய்த்துறை அதிகாரிகளுக்கும், காவல் துறை அதிகாரிகளுக்கும் அரசு, அதிகாரம் அளித்துள்ளது. 1992 ஆம் ஆண்டு அக்டோபரில், மதுவிலக்குக் குற்றங்களை இணக்க முறையில் தீர்வு காணுவதற்காக ஏற்கெனவே உள்ளவர்களுடன் மதுவிலக்குச் செயலாக்கப் பிரிவிலுள்ள காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளர்கள், காவல்துறைக் கூடுதல் கண்காணிப் பாளர்கள் மற்றும் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் ஆகியோருக்கு அரசு அதிகாரம் அளித்துள்ளது. 1-1-1994 முதல் 31-12-1994 வரையிலான கால அளவில், காவல் துறையினர் 2,62,349 மதுவிலக்கு வழக்குகளுக்கு இணக்க முறையில் தீர்வு கண்டனர்; இணக்க முறை கட்டணம் வகையில், ரூ. 14,79,21,197/- வசூலிக்கப்பட்டது. இது தவிர, நீதி மன்றங்கள் 1,98,842 வழக்குகளை முடிவு செய்தன; மற்றும், 3,96,30,412 ரூபாய் அபராத தொகையாக வசூலிக்கப்பட்டது.

மதுவிலக்குக் குற்றங்களில் சம்பந்தப்பட்ட மோட்டார் வண்டிகளைப் பறிமுதல் செய்தல்.

40. தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் 14 ஆம் பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவு, மதுவிலக்குக் குற்றங்களில் சம்பந்தப்பட்ட மோட்டார் வண்டிகளைப் பறிமுதல் செய்ய மாவட்ட ஆட்சியருக்கு (அல்லது) அரசால் அதிகாரமளிக்கப் பட்ட யாதொரு அதிகாரிக்கு அதிகாரமளிக்கிறது. பறிமுதல் செய்யும் நடைமுறைகளை விரைந்து செயல்படுத்தும் பொருட்டும், மாநிலத்தில் மதுவிலக்கைத் தீவிரமாகச் செயலாக்கும் பொருட்டும், தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் 14 ஆம் பிரிவைச் சேர்ந்த மேற்கூறிய 4 ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள பறிமுதல் அதிகாரங்களைச் செயல்படுத்துவதற்கு, மாவட்ட ஆட்சியர் களுக்கு மட்டுமன்றி, காவல் துறை மண்டல கண்காணிப் பாளர்களுக்கும், கூடுதல் கண்காணிப்பாளர்களுக்கும் அதிகாரம் அளிக்கின்ற ஆணைகள் 2-7-1993 அன்று பிறப்பிக்கப்பட்டுள்ளன. பின்னர், மதுவிலக்குக் குற்றங்களில் சம்பந்தப்பட்ட வண்டிகளைப் பறிமுதல் செய்கின்ற அதிகாரத்தைக் காவல் துறை துணைக்கமிஷனருக்கு (மதுவிலக்கு) அளித்து 16-8-1994 இல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

41. 1992,1993,1994 ஆம் ஆண்டுகளில் மதுவிலக்குச் செயலாக்கம் குறித்த ஒப்பீட்டு ஆய்வின் மூலமாக, அனுமதியின்றி இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைகளுக்கு எதிராக எடுக்கப்பட்ட தீவிர நடவடிக்கைகள், உறுதியான பயன்களை அளித்துள்ளன என்பது தெரிய வருகிறது: 1992-இல் அனுமதியின்றி இந்தியாவில் அயல்நாட்டு மதுவகைகள் தயாரிக்கப்பட்ட 4,973 இனங்கள் கண்டுபிடிக்கப்பட்டன; ஆனால், 1994 இல் அவற்றின் எண்ணிக்கை 2,242 ஆகக் குறைந்துள்ளது. கடந்த இரண்டு

ஆண்டுகளின் புள்ளி விவரங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், 1994 இல் மதுவிலக்குக் குற்றங்கள் பல கண்டறியப்பட்டன; கள்ளச்சாராயம் அதிக அளவில் அழிக்கப்பட்டது; மோட்டார் வாகனங்கள் பல தடுத்து நிறுத்தப்பட்டு சோதனை செய்யப்பட்டன; கள்ளச் சாராயம் காய்ச்சுவோர் தடைச் சட்டத்தின் கீழ், மதுவிலக்குக் குற்றவாளிகள் பலர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர்; கள்ளச் சாராயம் காய்ச்சுவோர் தடைச் சட்டத்தின் கீழ், தடுப்புக் காவலில் வைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1992 இல் 1,064 ஆகவும், 1993 இல் 1,366 ஆகவும் 1994 இல் 1,282 ஆகவும் இருந்தது.

42. மதுவிலக்கைச் செயல்படுத்துவதில், காவல் துறையின் சாதனையைக் குறிப்பிடும்போது, மிகச் சிறப்பான மற்றும் மன எழுச்சியைத் தரக்கூடிய சில நிகழ்ச்சிகளை, நாம் இங்கு குறிப்பிடலாம், அவையாவன:-

(i) செங்கற்பட்டு வட்டக் காவல் துறையினர், இராசாயனத் தொழில் பிரிவு ஒன்றிலிருந்து கேரள மாநிலத்திலுள்ள ஒரு இடத்திற்கு எவ்விடத்திற்கு எடுத்துச் செல்லப்படுகிறது என்ற குறிப்பின்றி, லாரி ஒன்றில் 12,000 லிட்டர் தெளிந்த சாரவியைக் கள்ளத்தனமாக எடுத்துச் சென்றபோது அந்த லாரியை 21-4-1994 அன்று வெற்றிகரமாக வழிமறித்து பிடித்ததோடு அதில் இருந்த 5 நபர்களைக் கைது செய்தனர். புலன் விசாரணையை முடித்த பின்னர், மேற்சொன்ன இராசாயன தொழில் பிரிவின் உரிமையாளர்கள் மற்றும் மறைமுகமாக அதில் ஈடுபட்ட அனைத்து நபர்கள் மீதும் வழக்கு தொடரப்பட்டது;

(ii) அதே நாளன்று, அதாவது, 21-4-1994 அன்று கோயம்புத்தூர், மாநகர மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு, 12,000 லிட்டர் தெளிந்த சாராவியை ஏற்றிக்கொண்டு கேரள மாநிலத்திற்குச் சென்று கொண்டிருந்த லாரி ஒன்றையும் கைப்பற்றியது. அதில் தெளிந்த சாராவியை கள்ளத்தனமாக

எடுத்துச் சென்ற 2 நபர்கள் கைது செய்யப்பட்டனர். இது குறித்த புலன் விசாரணை நடைபெற்று வருகிறது;

(iii) 5-5-1994 அன்று, அவினாசி, மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு காவல்துறையினர், 12,000 லிட்டர் தெளிந்த சாராவியை, கேரளத்திற்குக் கள்ளத்தனமாக எடுத்துச் சென்ற லாரி ஒன்றைத் தடுத்து நிறுத்தி, கடத்தல் தொடர்பாக 2 நபர்களைக் கைது செய்தனர். இந்த வழக்கு தற்போது நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது.;

(iv) 19-5-1994 அன்று எடப்பாடி, மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு காவல் துறையினர், 10,400 லிட்டர் தெளிந்த சாராவியை, கேரளத்திற்கு எடுத்துச் சென்ற லாரி ஒன்றைத் தடுத்து நிறுத்தி, கடத்தல் தொடர்பாக 2 நபர்களைக் கைது செய்தனர். இந்த வழக்கு தற்போது நீதிமன்ற விசாரணையில் உள்ளது.;

(v) செங்கற்பட்டு எம்.ஜி.ஆர்-கிழக்கு மாவட்டத்திலுள்ள ஓர் இடத்திலிருந்து 10,000 சாராய உறைகளுடன் வந்த ஆட்டோ ரிக்ஷா ஒன்றை 1-6-1994 அன்று, சென்னை மாநகரிலுள்ள செம்பியம் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல்துறையினர் கைப்பற்றினர். ஆட்டோ ஓட்டுநர் மற்றும் சாராய உறைகளை எடுத்து வந்தவர் கைது செய்யப்பட்டனர். இவ்வழக்கு தற்போது நீதிமன்ற விசாரணையில் உள்ளது.;

(vi) செல்திறனுள்ள உரிமம் இன்றி, 8,000 லிட்டர் தெளிந்த சாராவியை, கேரளத்திற்கு ஏற்றிச் சென்ற டேங்கர் லாரி ஒன்றை 24-6-1994 அன்று, வள்ளியூர் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு காவல் துறையினர் தடுத்து நிறுத்தினர். இந்த தெளிந்த சாராவி, கும்மிடிப்பூண்டியில் அமைந்துள்ள இராசாயனத் தொழில் பிரிவு ஒன்றினால் கள்ளத்தனமாக விற்பனை செய்யப்பட்டதும், இக்கள்ள விற்பனையில் பெரிய அமைப்பு ரீதியான கும்பல் ஒன்று பின்னணியில் உள்ளதும் புலன்

விசாரணையில் தெரியவந்தது. அந்தத் தொழிற்சாலையின் தெளிந்த சாராவி இருப்புக்குப் பொறுப்பேற்ற துணை வட்டாட்சியர் உட்பட, சம்பந்தப்பட்ட அனைத்து நபர்கள் மீதும் தொழிற்சாலையின் உரிமையாளர்கள் மீதும் மற்றும் இதில் ஈடுபட்ட கும்பல் மீதும் மேற்கொள்ளப்பட்ட தொடர் புலன் விசாரணைக்குப் பின்னர் குற்றப் பத்திரிக்கைத் தாக்கல் செய்யப்பட்டது. அனைவர் மீதும் நீதிமன்ற விசாரணை நடைபெற்று வருகிறது.

(vii) செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள இரசாயனத் தொழில் பிரிவு ஒன்றிலிருந்து கேரளத்திற்கு 9000 லிட்டர் தெளிந்த சாராவியை ஏற்றிச் சென்ற டேங்கர் லாரி ஒன்று, 1-7-1994 அன்று ஆரல்வாய்மொழி அருகே உள்ளூர் காவல் துறையினரால் தடுத்து நிறுத்தப்பட்டது. இது தொடர்பாக ஐந்து நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

(viii) கருநாடக அரசு முத்திரையுடன் கூடிய 40,400 சாராய உறைகளை ஏற்றி வந்த லாரி ஒன்றை 2-7-1994 அன்று ஒசூர் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு காவல் துறையினர் கைப்பற்றினர்; மூன்று நபர்கள் கைது செய்யப்பட்டனர். மேற்சொன்ன கள்ளக்கடத்தல் சரக்கு, செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள பல்லாவரத்திற்கு கொண்டு வரப்பட்டதாகும். இக்கள்ளக் கடத்தலில் சம்பந்தப்பட்ட அனைவரும் வெற்றிகரமாக கண்டுபிடிக்கப்பட்டு, அவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டது.

(ix) கருநாடக மாநிலத்தின் சாராய உறைகள் 8,000 த்துடன் வந்த மாருதி வேன் ஒன்றை 11-7-1994 அன்று மயிலாப்பூர் சாந்தோம் நெடுஞ்சாலையில் சென்னை மாநகர மதுவிலக்கு அமலாக்கப் பிரிவினர் கைப்பற்றினர். அது தொடர்பாக இரு நபர்கள் கைது செய்யப்பட்டனர். இவ்வழக்கு, தற்போது நீதிமன்ற விசாரணையிலுள்ளது.

(x) ஒவ்வொன்றிலும் அனுமதி பெறாது இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது முழு புட்டிகள் 7,200 வீதம், இரண்டு லாரிகள், கருநாடக மாநிலத்திலிருந்து வந்து கொண்டிருந்தபோது, 17-9-1994 அன்று, தருமபுரி மாவட்டம் ஓசூர் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவினர் அந்த இரண்டு லாரிகளையும் கைப்பற்றினர். அந்த ஐயத்திற்கிடமான கள்ள போலி மதுப்புட்டிகள் நாமக்கல் மற்றும் திருச்சிராப்பள்ளிக்கு எடுத்துச் செல்லப்பட்டவையாகும். இது தொடர்பாக 6 நபர்கள் கைது செய்யப்பட்டனர். மேற்கொண்டும் புலன் விசாரணை நடைபெற்று வருகிறது.

(xi) செங்கற்பட்டு எம்.ஜி.ஆர் மாவட்டத்திலுள்ள நடுவீரப்பட்டு என்ற ஒரு கிராமத்தில், நவீன எந்திரத்தைப் பயன்படுத்தி சாராய உறைகளைத் தயாரிப்பதில் ஈடுபடத் தொடங்கியபோது, உரிய நேரத்தில் ஒருவர் தகவல் அளித்ததன் பேரில், 13-10-1994 அன்று பிரபல கும்பலின் நடவடிக்கைகள் முளையிலேயே கிள்ளி எறியப்பட்டது. மதுவிலக்கு அமலாக்கப் பிரிவினர், விரைவாக நடவடிக்கை எடுத்ததன் பயனாக, சாராய உறைகள் தாயரிக்கப்பயன்படுத்தப்பட்ட விலையுயர்ந்த இரு எந்திரங்கள் பொருத்தப்பட்ட ஒரு லாரி, தெளிந்த சாராவியைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட 50,000 மது உறைகள் மற்றும் பெருமளவில் தெளிந்த சாராவி ஆகியவைக் கைப்பற்றப்பட்டன. இதன் விளைவாக, சம்பவ இடத்திலேயே 3 நபர்களும் பின்னர் அக்கும்பலைச் சேர்ந்த ஏனைய சிலரும் கைது செய்யப்பட்டனர். இத்தகைய கள்ளத்தனமான நடவடிக்கையில் இறங்கத் தொடங்கியவுடனேயே அக்கும்பல் பிடிபட்டது.

(xii) வானூர் பகுதியின் (விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டம் - பாண்டிச்சேரி எல்லையில்) விஷமது பெருமளவில் விற்பனை செய்ததற்காக, தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தைச் சேர்ந்த 4 (1-A) பிரிவின் கீழ்,

வானூர் காவல் நிலையக் குற்ற எண் 274/94 இல் பாண்டிச்சேரியைச் சேர்ந்த குப்புசாமி என்கிற குப்பன் என்னும் சாராய மொத்த வியாபாரி ஒருவர், 15-10-1994 அன்று கைது செய்யப்பட்டார். விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டத்தின், மாவட்ட ஆட்சியர் பிறப்பித்த ஆணைகளின் அடிப்படையில் கள்ளச்சாராயம் காய்ச்சுவோர் சட்டத்தின் கீழ் அவர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார்.

(xiii) திருச்சிராப்பள்ளி மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுக் காவல் துறையினர், 10-11-1994-ஆம் நாளன்று வேன் ஒன்றைத் தடுத்து நிறுத்தி அதில் அனுமதியின்றி எடுத்துச் செல்லப்பட்ட 3,168 பாட்டில் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு மதுவைக் கைப்பற்றியதுடன், அது தொடர்பாக இருவரைக் கைது செய்தனர். இந்த போலி மது, பாண்டிச்சேரியிலிருந்து எடுத்துவரப்பட்டது. இது தொடர்பான வழக்கு விசாரணையில் உள்ளது.

(xiv) 10-12-1994 ஆம் நாளன்று கோயம்புத்தூர் மாநகர மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுக் காவல்துறையினர், பல்வேறு கொள்ளளவு கொண்ட புட்டிகளில் நிரப்பப்பட்டிருந்த 97.700 லிட்டர் வெளிநாட்டு மதுவுடன் சென்ற அம்பாசிடர் காரை கைப்பற்றி, கோயம்புத்தூர் நகர், பாப்பநாயக்கன் பாளையத்தைச் சேர்ந்த மூவரைக் கைது செய்தனர். மேல் புலன் விசாரணை நடைபெற்று வருகிறது.

(xv) 22-12-1994 அன்று திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள நாங்குநேரி மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல் துறையினர் 3,236 புட்டிகள் இந்தியாவில் தயாராகும் அயல்நாட்டு போலி மதுவை கேரளாவிலிருந்து கடத்தி வந்த அம்பாசிடர் காரை கைப்பற்றியதுடன், அது தொடர்பாக 7 பேரைக் கைது செய்தனர். மேல் விசாரணை நடைபெற்று வருகிறது.

(xvi) 8-1-1995 ஆம் நாளன்று கோயம்புத்தூர் ஊரக மாவட்டத்தைச் சேர்ந்த சின்னியம்பாளையத்தில் 7,800 லிட்டர் தெளிந்த சாராவியை கேரளாவிற்குக் கடத்திச் சென்ற லாரி ஒன்று கோயம்புத்தூர் மாநகர மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுக் காவல்துறையினரால் வழிமறித்து பிடிக்கப்பட்டது. இது தொடர்பாக, கோவை மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு குற்றம் எண் 3/95 இல் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் 4 (1) (அ) பிரிவு, தமிழ்நாடு தெளிந்த சாராவி விதிகள் 6,11 ஆகியவற்றின் கீழ் வழக்குகள் பதிவு செய்தது. இச்சாராவி எங்கிருந்து, யாரால் அனுப்பி வைக்கப்பட்டது என்பதைக் கண்டறிய, புலனாய்வு நடைபெற்று வருகின்றது.

(xvii) 29-1-1995 ஆம் நாளன்று செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம், பேரம்பாக்கத்தில், காஞ்சிபுரம் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுக் காவல் துறையினர், கள்ளத்தனமாகக் கடத்தப்பட்ட, இந்தியாவில் தயாரான வெளிநாட்டு மதுவகைகள் அடங்கிய 4,896 புட்டிகளுடன் சென்ற அம்பாசிடர் காரைக் கைப்பற்றினர். இது தொடர்பாக காஞ்சிபுரம் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவில் குற்ற எண். 267/95 இல் இந்தியத் தண்டனைச் சட்டப்பிரிவு 120 (பி) தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் 7, 4 (1) (a) 4 (1-A), 24, 24 -A, (c) (ii) பிரிவுகள் இந்தியத் தண்டனைச் சட்டப்பிரிவு 284,465,468, 471 பிரிவுகள், போதை மருந்துகள் - மயக்கப் பொருட்கள் சட்டத்தின் 20 (பி) (i) பிரிவு ஆகியவற்றின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு புலனாய்வு நடைபெற்று வருகிறது. இதனைத் தொடர்ந்து போலி ஆயத்தீர்வை லேபிள் கட்டுகளுடன் சென்ற அம்பாசிடர் கார், மாருதி வேன், மட்டடார் வேன் ஆகியவையும் கைப்பற்றப்பட்டு, 4 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர். ஆவண வல்லுநரின் அறிக்கையை எதிர்நோக்கி வழக்கு விசாரணையில் உள்ளது.

(xviii) 3-2-1995 ஆம் நாளன்று புளியந்தோப்பு மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுக் காவல்துறையினர், வியாசர்பாடியில், வியாசர்பாடியைச் சேர்ந்த தயாளம்மாளிடமிருந்து 24,000 பாக்கட் சாராயத்தையும், வியாசர்பாடியைச் சேர்ந்த செல்லாவிடமிருந்து 36,800 பாக்கட் சாராயத்தையும் கைப்பற்றினர். இது தொடர்பாக, வியாசர்பாடி மதுவிலக்கு அமலாக்கப்பிரிவால் குற்ற எண் 193,194/95 இல் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் 4 (1) (a), 4 (1-A) பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகின்றது. புலனாய்வின் போது, இந்த சாராய பாக்கட்டுகள், கள்ளக் கடத்தல் சாராயத்தில் பேர்போன கடத்தல்காரனான கோலாடி துரை என்ற துரையிடமிருந்து அவை வாங்கப்பட்டன என்று தெரிய வந்தது. 1-3-1995 ஆம் நாளன்று 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் பிரிவு 4 (1) (i) மற்றும் இந்தியத் தண்டனைச் சட்டம் 328 ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட, புளியந்தோப்பு மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு குற்ற எண் 361/95 இன் கீழ் கோலாடி துரை கைது செய்யப்பட்டார். பின்னர் 6-3-1995 ஆம் நாளன்று கள்ளச்சாராயக்காரர்கள் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டார்.

(xix) 10-2-1995 அன்று கோயம்புத்தூர் ஊரக மாவட்ட மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுக் காவல் துறைக் கூடுதல் கண்காணிப்பாளர், கோயம்புத்தூர் ஊரக மாவட்டம் ரங்க சமுத்திரம் கிராமத்திலுள்ள திருவாளர்கள் சிவசண்முக சபரி கெமிக்கல்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவன வளாகத்தைச் சோதனை செய்ததில், உரிம விதிகள் மீறப்பட்டிருப்பதையும், முடிவான உற்பத்திப் பொருட்களை எடுத்துச் செல்ல போலி ஆவணங்கள் தயாரித்து வைத்திருப்பதையும் கண்டுபிடித்தனர். இது தொடர்பாக, மேட்டுப்பாளையம் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவின் 184/95 ஆம் குற்ற எண்ணில் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் 24,

24-பி பிரிவுகள், இந்தியத் தண்டனைச் சட்டம் 420, 477 ஏ, 120 பி பிரிவுகள் ஆகியவற்றின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, விசாரணை செய்யப்பட்டது. விசாரணையின் போது, இக்கம்பெனியின் 2 இயக்குநர்களும், ஏனைய 15 பேரும் கைது செய்யப்பட்டு, காவலில் வைக்கப்பட்டனர். சென்னை மதுவிலக்கு ஆயத்துறை ஆணையாளர் 24-2-1995 ஆம் நாளன்று இந்த இரசாயன தொழிற்சாலையின் ஆர்.எல்.உரிமத்தைத் தற்காலிகமாக ரத்து செய்தார். வழக்கு நடைபெற்று வருகிறது.

(xx) 21-2-1995 அன்று சேரம்பாடி காவல்நிலைய எல்லைக்கு (உதகமண்டலம்) உட்பட்ட ஐயங்கொல்லி சந்திப்பில், சேரம்பாடி காவல் நிலையத்தைச் சேர்ந்த காவல் துறையினர், 4000 லிட்டர் தெளிந்த சாராவியுடன் வந்த லாரியையும், அதற்கு பாதுகாப்பாக வந்த ஜீப்பையும் அவை, கேரளாவிற்கு சரக்குகளைக் கடத்திச் செல்கையில், மடக்கிப் பிடித்தனர். இது தொடர்பாக, சேரம்பாடி காவல் நிலைய குற்ற எண். 83/95 இல், தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் 4 (1) (a) பிரிவு, தமிழ்நாடு தெளிந்த சாராவி விதிகள் 5 மற்றும் 7 ஆகியவற்றின் கீழ் வழக்குப் பதிவு செய்தனர். ஓட்டுநர்கள் உட்பட 4 பேர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர். வழக்கு விசாரணையில் உள்ளது.

கண்டுபிடிக்கப்பட்ட வழக்குகள், முடிவு செய்யப்பட்ட வழக்குகள், கைப்பற்றப்பட்ட கடத்தல் பொருட்கள், வாகனங்கள் குறித்த விவரங்கள் இணைப்புக்கள் IX, IX-அ மற்றும் X-இல் கொடுக்கப்பட்டுள்ளன.

IX போதை மருந்துப் பொருட்கள் தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுத்தல்.

43. போதையூட்டும் மருந்துப் பொருட்களால் மனிதர்களுக்கு ஏற்படும் தீங்குகளை கருத்திற்கொண்டு கடுமையான சட்டம்

இயற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டது. 1985 ஆம் ஆண்டில், இந்திய அரசு, 1985 ஆம் ஆண்டு போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் சட்டத்தை (மத்திய சட்டம் 61/85) இயற்றியது. இச்சட்டம் அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகளுடன் 14-11-1985 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்தன.

இச்சட்டமும் விதிகளும் போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் சம்பந்தப்பட்ட பணிகளை கட்டுப்படுத்தி முறைப்படுத்தவும் இப்பொருட்களின் திருட்டுத்தனமான நடமாட்டத்தின் மூலம் கிடைத்த சொத்துக்கள் மற்றும் பயன்படுத்தப்பட்ட பொருட்களை பறிமுதல் செய்யவும் வழிவகை செய்கின்றன. மேலும், போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் தொடர்பான பன்னாட்டு உடன்பாடுகளின் விதித்துறைகளையும், அவை தொடர்பான விவரங்களையும் செயல்படுத்த வழிவகை செய்கின்றன. இச்சட்டத்தின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்கள் ஒவ்வொன்றுமே பிடியாணை வேண்டாத பிணையில் விடத்தகாத குற்றங்களாகும். இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட தண்டனை எதுவும், நிறுத்திவைக்க அல்லது குறைக்க அல்லது மாற்ற முடியாது.

44. மத்திய அரசால் இயற்றப்பட்ட 1988 ஆம் ஆண்டு போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் கள்ளப்புழக்கத் தடுப்புச் சட்டம் (மத்திய சட்டம் 46/1988) 1988 ஆம் ஆண்டு ஜூலை 1 ஆம் நாள் முதல் நடைமுறைக்கு வந்தது. இச் சட்டத்தின் கீழ் மத்திய அரசு அல்லது மாநில அரசு அல்லது தனி அதிகாரம் வழங்கப்பட்டுள்ள மத்திய அரசு அல்லது மாநில அரசு அதிகாரிகளுக்கு போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்களைக் கள்ளத்தனமாக கடத்துதலில் ஈடுபடும் நபர்களைத் தடுப்புக்காவலில் வைக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் கீழ், குற்றவாளிகளை தடுப்புக்காவலில் வைத்த நாளிலிருந்து

குறைந்தது 1 ஆண்டும் அதிகபப்படியாக 2 ஆண்டுகளும் தடுப்புக்காவலில் வைக்கலாம். நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில், 1988 ஆம் ஆண்டு போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் கள்ளப் புழக்கத் தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றவாளிகளைத் தடுப்புக்காவலில் வைக்க உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறைச் செயலாளருக்கு தனி அதிகாரம் அளிக்கப் பட்டுள்ளது. மாநில அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு—குற்றப் புலனாய்வுத் துறையினரும், மதுவிலக்கு செயல்பாட்டுப் பிரிவினரும் மாவட்ட காவல் துறையினரும், இரயில்வே காவல் துறையினரும் மற்றும் மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் போதைப் பொருள் கட்டுப்பாட்டு பிரிவு, சுங்கத்துறை கலெக்டர், வருவாய் புலனாய்வுத் துறை இயக்ககம் ஆகியவை, இம்மாநிலத்தில், போதைப் பொருட்கள் சட்டத்தின் விதித்துறைகளைச் செயல்படுத்தி வருகின்றன. 1994 ஆம் ஆண்டில், மேற்குறிப்பிட்ட சட்ட அமலாக்க அமைப்புகள் அனுப்பிய பரிந்துரைகளின் அடிப்படையில், 1988 ஆம் ஆண்டு போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் கள்ளப் புழக்கத் தடுப்புச் சட்டத்தின் கீழ், 27 பேர் தடுப்புக் காவலில் வைக்க ஆணையிடப்பட்டது.

45. 1988 ஆம் ஆண்டு போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் கள்ளப் புழக்கத் தடுப்புச் சட்டத்தின் கீழ் மாநில உள், மதுவிலக்கு ஆயத்துறை செயலாளர் பிறப்பிக்கும் ஆணைகளை, மதுவிலக்கு - ஆயத்துறையின் 1-8-1989 ஆம் நாளிட்ட 888 ஆம் அரசாணையின் கீழ் அமைக்கப்பட்ட அறிவுரைக் கழகம் பரிசீலனை செய்கின்றது.

46. போதைப்பொருட்கள் நுண்ணறிவு பிரிவு, இம்மாநிலத்திற்குள் போதைப் பொருட்கள் தடுப்புச் சட்டத்தை செயல்படுத்தும் ஒரு முக்கிய முகவரமைப்பாகத் திகழ்கிறது.

போதைப் பொருட்கள் நுண்ணறிவு பிரிவு (குற்றப் புலனாய்வுத் துறை) அரசால் அனுமதிக்கப்பட்ட 7 பிரிவுகளைக் கொண்டதாகும். இப்பிரிவுகள் சென்னை, திருச்சிராப்பள்ளி, சேலம், மதுரை, திண்டுக்கல், தேனி மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய இடங்களில் செயல்படுகின்றன. இவற்றோடு தூத்துக்குடியில் தனிப்பிரிவு ஒன்றும் செயல்பட்டு வருகிறது. இந்தப் பிரிவுகளின் அனுமதிக்கப்பட்ட மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கை குறித்த விவரம், இணைப்பு XI-ல் கொடுக்கப்பட்டு உள்ளது.

47. 9வகை போதைப் பொருட்களையும், பல்வகை ஆல்கலாயிடுகளையும் தயாரிக்கப் பயன்படும் அபின் தமிழ்நாட்டில் கள்ளத்தனமாக சாகுபடி செய்யப்படவில்லை. அதேபோன்று மற்றொரு போதைப் பொருளான பதப்படுத்தப்படாத கோகயின் தயாரிக்கப் பயன்படும், 'கோகோ' செடியும் தமிழ்நாட்டில் சாகுபடி செய்யப்படுவதில்லை.

48. அபின், ஹெராயின் போன்ற போதைப் பொருட்களையும் மெதாகுலோன் அல்லது மாண்ட்ராக்ஸ் போன்ற மனமயக்கப் பொருட்களையும் இந்தியாவின் வடக்கு, வடகிழக்கு மற்றும் மேற்கு மாநிலங்களிலிருந்து கள்ளத்தனமாகக் கடத்திச் செல்லும் ஒரு வழி மாநிலமாகத் தமிழ்நாடு பயன்படுத்தப்படுகிறது. சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை போன்ற மாநகரங்களில் சில காலமாக அபின், ஹெராயின் மற்றும் மெதாகுலோன் போன்ற போதைப் பொருட்களும் மனமயக்கப் பொருட்களும் தவறாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் மாண்ட்ராக்ஸ், டேடிஜெசிக் ஊசி (Tidigesic Injection.....) டார்மின் மாத்திரைகள் மற்றும் டையாசிபாம் (Diazepam) போன்ற மனமயக்கப் பொருட்கள் தவறாகப் பயன்படுத்தப்பட்டு வருவதும், அண்மையில் கவனத்திற்குக் கொண்டு

வரப்பட்டுள்ளது. சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை தவிர, சேலத்திலும், தூத்துக்குடியிலும் இந்த போதைப் பொருட்களும் மனமயக்கப் பொருட்களும் தற்போது தவறாகப் பயன்படுத்தப்படுகின்றன. (கானாபிஸ் பயிர்) கஞ்சாவைத் தவறாகப் பயன்படுத்துவோர் எண்ணிக்கையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, போதைப் பொருட்கள் மற்றும் மனமயக்கப் பொருட்களைத் தவறாகப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை குறைவாக உள்ளது. அநேகமாக அனைத்து சிறிய நகரங்களிலும், நகராட்சிகளிலும், மாநகரங்களிலும் தற்போது கஞ்சா தவறாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. கீழ்க்காணப்பெறும் இடங்கள், கஞ்சா பயிரிடுவதற்கு அதிக வாய்ப்புள்ள இடங்களாகக் கண்டறியப்பட்டுள்ளன; விவரம் வருமாறு:-

1. கல்ராயன் குன்றுகள்.
2. வத்தமலை குன்றுகள்.
3. மேற்கு மலைத் தொடர்.

போதைப் பொருட்களைக் கடத்துவதற்கு பின்வரும் இடங்கள் பயன்படுத்தப்படுவதாகத் தெரிய வந்துள்ளது:-

1. சென்னை மாநகர்.
2. மதுரை மாநகர்.
3. திருச்சிராப்பள்ளி.
4. சேலம்.
5. தூத்துக்குடி.
6. இராமேஸ்வரம்.
7. திருச்சி மற்றும் மீனம்பாக்கம் விமான நிலையங்கள்.
8. திண்டுக்கல்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

49. போதைப் பொருட்கள் தடுப்புச் சட்டத்தை முனைப்புடன் செயல்படுத்தி வருவதால், கல்ராயன் குன்றுகள், வத்தமலை குன்றுகள் மற்றும் மேற்கு மலைத்தொடர்கள் போன்ற குன்றுப் பகுதிகளில் சட்ட விரோதமாக கஞ்சா பயிர் சாகுபடி செய்வது மிகவும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. நமது மாநிலத்தில் கஞ்சா கிடைப்பது அரிதாக இருப்பதன் காரணமாக, ஆந்திரப்பிரதேசம் மற்றும் கேரளம் போன்ற அண்டை மாநிலங்களிலிருந்து தலைச்சுமையாகவும் 'பார்சல்' களாகவும், வண்டிகள் மூலமாகவும் தமிழ் நாட்டிற்கு கள்ளத்தனமாகக் கொண்டுவரப்படுகிறது.

50. போதைப் பொருட்களைத் தடுப்பதில் போதைப் பொருட்கள் நுண்ணறிவுப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறை மற்றும் மாநில காவல் துறை ஆகியவை ஆற்றிய பணிகள் பற்றிய விவரம், இணைப்பு-XII இல் தனியாகக் கொடுக்கப் பட்டுள்ளது.

தேவைக் குறைப்புக்கு தொண்டு நிறுவனங்கள் ஆற்றிய பங்கு

51. மத்திய அரசிடமிருந்து 90 சதவீத மான்ய உதவியைப் பெற்றுச் செயல்படுகின்ற 10 ஆலோசனை மையங்கள், அறிவுறுத்தல் மையம் ஒன்று, பிற்காப்பு மையம் ஒன்று போதை பழக்கத்திலிருந்து மீட்கும் மையங்கள் இரண்டு ஆகியவையும் மத்திய அரசிடமிருந்து உதவி எதையும் பெறாமல் செயல்படுகின்ற எட்டு ஆலோசனை மையங்களும் சேர்ந்து, மறுவாழ்வுப் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன. இவற்றின் பணி, பாராட்டத்தக்கதாகும்.

52. திட்டவட்டமான அதிகார வரம்பைக் கொண்டு சென்னை, தஞ்சாவூர், புதுக்கோட்டை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் சேலத்தில் செயல்பட்டு வருகின்ற இன்றியமையாப் பொருட்கள் தனி நீதிமன்றங்கள், அதே அதிகார வரம்பைக் கொண்டு, 1985 ஆம் ஆண்டு போதை மருந்துகள் மற்றும்

மனமயக்கப் பொருட்கள் சட்ட வழக்குகளை விசாரிப்பதற்குரிய தனி நீதிமன்றங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. மேற்சொன்ன தனி நீதி மன்றங்கள், 1993 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்திலிருந்து செயல்படத் தொடங்கியுள்ளன.

X கள்ளச் சாராயக்காரர்கள் மற்றும் ஏனைய குற்றவாளிகளைத் தடுப்புக் காவலில் வைத்தல்.

53. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கள்ளச் சாராயக்காரர்கள், போதைப்பொருள் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரக் குற்றம் புரிபவர்கள் மற்றும் சட்டவிரோதமாக பிறருடைய நிலங்களில் குடிசை போடுபவர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 14/1982) 5-1-1982 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்தது. பொது அமைதியைப் பேணிக்காக்கும் பொருட்டும், சமுதாயத்தில் குறிப்பாக தமிழ்நாட்டில் உள்ள நகர்ப் பகுதிகளில் பொது அமைதிக்கும் சுகாதாரத்திற்கும் கடுமையான அச்சுறுத்தல் ஏற்படுத்தக் கூடியவர்களான கள்ளச்சாராயக்காரர்கள், போதைப்பொருள் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரக் குற்றம் புரிபவர்கள் மற்றும் சட்ட விரோதமாகப் பிறருடைய நிலங்களில் குடிசை போடுவோர் போன்ற சமூக விரோதச் சக்திகளின் நடவடிக்கைகளை அடக்கி, ஒடுக்கும் பொருட்டும் இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது. கள்ளத்தனமாகச் சாராயம் காய்ச்சுதல், விற்பனை செய்தல் முதலியன போன்ற மதுவிலக்குக் குற்றங்களில் வழக்கமாக ஈடுபடக் கூடிய குற்றவாளிகளுக்கு எதிராக இச்சட்டம் தீவிரமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. 1994-ஆம் ஆண்டில் இச்சட்டத்தின் கீழ் 1,886 குற்றவாளிகள் தடுப்புச் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு குற்றவாளிகளுக்கு எதிராக தீவிர நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ளப்படும். தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு

14-ஆம் எண் (குண்டர்கள் சட்டம்) சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டோரின் எண்ணிக்கை விவரம், இணைப்பு XIII-இல் கொடுக்கப்பட்டுள்ளது.

XI. மதுவிலக்கினைச் செயல்படுத்துவதற்கு ஆக்கப்பூர்வமான பணி

54. மதுவின் தீமைகள் குறித்த செய்திகளைப் பரப்புவதற்காக, பிரபலமான பெருமக்களை உறுப்பினர்களாகக் கொண்ட மாநில அளவிலான மதுவிலக்குப் பிரச்சாரக் குழுவினை இவ்வரசு அமைத்துள்ளது. இக்குழு, பல பரிந்துரைகளைச் செய்தது. கீழ்கண்ட பரிந்துரைகளை செயல்படுத்த ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன :—

(i) மதுவிலக்குப் பிரச்சாரப் பணிக்கு சத்துணவு மையங்களைப் பயன்படுத்துதல்.

(ii)குடிப்பழக்கத்திற்கு ஆளானவர்களுக்கு மாநிலம் தழுவிய முதலமைச்சர் சுகாதார முகாம்களில் சிகிச்சையளித்தல்.

(iii) தொலைக்காட்சி மற்றும் வானொலி வாயிலாக முனைப்பாக மதுவிலக்குப் பிரச்சாரம் செய்தல், இது தொடர்பாக சிறு நாடகங்களைத் தயாரித்து, அவற்றை வீடியோ கேசட்டுகளில் பதிவு செய்து ஊராட்சி ஒன்றியங்களின் வசதியைப்பயன்படுத்தி பொதுமக்களுக்குக் காட்டுதல்.

(iv) குடிப்பதால் ஏற்படக்கூடிய தீமைகளைக் குறித்து விளக்கி மதுவிலக்குப் பிரச்சார முழு நீள திரைப்படம் ஒன்று "நீங்க நல்லா இருக்கணும்" என்ற பெயரில் வணிக ரீதியில் தயாரிக்கப்பட்டு, இத்திரைப்படம், 26-11-1992 அன்று வெளியிடப்பட்டது. "வெளிச்சம்" என்ற பெயரில் தமிழ் நாடகம் ஒன்று தயாரிக்கப்பட்டு 1-5-1992 அன்று அரங்கேற்றம் செய்யப்பட்டது.

(v) மதுவிலக்குக் கொள்கை குறித்த சிறு கதைகள், நாடகங்கள் எழுதும் மாணவர்களுக்கு சுமார் ரூ.1,000 (முதல் பரிசு) ரூ. 600 (இரண்டாம் பரிசு), ரூ. 400 (மூன்றாம் பரிசு) மதிப்புடைய பரிசுகள் வழங்குதல்.

(vi) மதுவிலக்கு குறித்து முதலமைச்சர் எழுதிய கட்டுரையை 10-ஆம் வகுப்பு தமிழ் பாடப் புத்தகத்தில் சேர்த்தல். 'பெண்ணுரிமையில் ஒரு புதிய வரலாறு' என்ற பெயரில் முதலமைச்சர் எழுதிய மற்றொரு கட்டுரையை 12 ஆம் வகுப்பு பொது தமிழ்ப் பாடப் பத்தகத்தில் சேர்த்தல்.

(vii) செய்தித் தாள்களில் அரசு விளம்பரங்களை வெளியிடும்போது மதுவிலக்கு குறித்து இரு வரி பிரச்சார வாசகங்களைச் சேர்த்தல்.

(viii) திரைப்படங்களில் மது அருந்தும் காட்சிகளை அனுமதிப்பதைத் தவிர்க்குமாறு திரைப்படத் தணிக்கைக் குழுவிற்கு அறிவுறுத்துமாறு மத்திய அரசுக்குக் கடிதம் எழுதப்பட்டது. மத்திய அரசு 16-12-1992 ஆம் நாள் நிலவரப்படி, திருத்திய வழிகாட்டிக் குறிப்புகளை இணைத்து, பதில் அனுப்பியுள்ளது. அதில், மது அருந்துவதை நியாயப்படுத்தும் அல்லது பெருமைப்படுத்தும் காட்சிகளும் போதைப் பொருளுக்கு அடிமையாவதை ஊக்குவிக்கும், நியாயப்படுத்தும் அல்லது கவர்ச்சிகரமானதாகச் செய்யும் காட்சிகளும் காட்டப்படாமல் இருப்பது உறுதி செய்யப்பட வேண்டும் என்று திரைப்படங்களுக்குச் சான்றளிக்கும் வாரியத்திடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

(ix) 'முறை சாராக் கல்வி' யின் கீழ் வரும் "படித்தோர் தன்னார்வத் தொண்டு நலப்பணித் திட்டம்" என்னும் ஒரு புதிய திட்டத்தில் பணியாற்றும் படித்த வேலை வாய்ப்பற்ற இளைஞர்களை "குடிப்பழக்கத்தின் தீமை" குறித்து தொடர்ச்சியாகப் பிரச்சாரம் செய்வதற்காக அவர்களைப் பயன்படுத்துதல்.

(x)மதுவிலக்குச் சட்டத்தின் தண்டனை விதித் துறைகள் போதுமானதாக உள்ளனவா என்பது குறித்த வல்லுனர் குழு செய்து கொண்ட பரிந்துரைகளை அரசு பரிசீலித்தது. பல்வேறு மதுவிலக்குக் குற்றங்களுக்கான தண்டனைகளில் காணப்படும் குறைபாடுகளைத் தவிர்க்கும் பொருட்டு, 1937 ஆம் ஆண்டைய தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்திலுள்ள தண்டனை விதித்துறைகளை பிரிவு வாரியாக மறு ஆய்வு செய்யுமாறு வல்லுநர் குழுவினை அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

(xi) மதுவிலக்குக் கொள்கையைச் செயல் படுத்துவதிலும், குடிப்பழக்கத் தீமைகளைப் பிரச்சாரம் செய்வதிலும் பொது மக்களை ஊக்குவிக்கும் வகையில் மாவட்ட, வட்டார, நகராட்சி, நகரிய அளவில் மது விலக்குப் பிரச்சாரக் குழுக்கள் அமைத்தல் மற்றும் கிராம நிலை குழுக்களை மாற்றி அமைத்தல் செய்யப்பட்டுள்ளன.

(xii) கிராம மக்களிடையே குடிபழக்கத்தை ஊக்குவிக்காமலிருக்க கிராமங்களில் “சமூகப்புறக்கணிப்பு” செயற்படுத்த வேண்டுமென்று கிராம நிலையிலுள்ள குழுக்களிடம் கேட்டுக் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், காவல் துறைக் கண்காணிப்பாளர்களுக்கும் உத்திரவிடப்பட்டுள்ளது.

(xiii) குடித்துவிட்டு வாகனம் ஓட்டுதலுக்கு எதிராக தற்போதுள்ள 1988 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் கடுமையான விதிகள் தீவிரமாக நடைமுறைப்படுத்தப்படும்.

(xiv) சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் முயற்சியினால் அவர்களுடைய தொகுதியில் கள்ளச்சாராயம் காய்ச்சுதல், விற்பனை செய்தல், குடித்தல் போன்றவை இல்லாமல் இருந்தால், அத்தகைய உறுப்பினர்களுக்குக் கேடயங்கள் வழங்கவும், அது குறித்து சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கவும் ஆணையிடப்பட்டுள்ளது.

(xv) குடிப்பழக்கத்திற்கு அடிமையானவர்களை அப்பழக்கத்திலிருந்து விடுவிக்கும் பொருட்டு, தொழில் நிறுவனங்கள் ஆதரவுடன் குடிப்பழக்க மீட்பு மையங்களை ஒவ்வொரு மாவட்டத்திலும் தொடங்க மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

(xvi) கள்ளச்சாராயம் காய்ச்சுவதை விட்டு, திருந்தியவர்களில் தகுதியுள்ளவர்களுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மற்றும் மாவட்ட தொழில் மையங்களின் கீழ் இயங்கிவரும் சுயவேலை வாய்ப்புத் திட்டம் முதலியவற்றின் மூலம் ஏதாவது வணிகம் அல்லது தொழில்கள் தொடங்க மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நிதியுதவி அளித்து வருகின்றனர்.

XII கள்ளச்சாராயம் இல்லா சட்டமன்ற பேரவைத் தொகுதிகளுக்குக் கேடயம் வழங்குதல்:

55. சட்டமன்ற பேரவைத் தொகுதியில் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் முயற்சியால் கள்ளச்சாராயம் காய்ச்சாத, விற்காத, குடிக்காத நிலை உருவாகுமேயானால் அச்சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களைப் பாராட்டி கேடயம் வழங்கவும் மற்றும் அதனைச் சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கவும், 7-7-1993 இல் வெளியிட்ட மதுவிலக்கு (மற்றும்) ஆயத்தீர்வைத்துறை அரசு ஆணை (நிலை) எண்.135 இல் ஒரு திட்டத்தை ஏற்படுத்தி உத்திரவிடப்பட்டுள்ளது. 1993இல், தர்மபுரி மாவட்டத்தில் பர்கூர் தொகுதியும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் வால்பாறைத் தொகுதியும் கள்ளச்சாராயம் இல்லா தொகுதிகள் எனத் தெரிவிக்கப்பட்டது. வால்பாறை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் அ. ஸ்ரீதரன் அவர்களுக்கு 15-8-1994 அன்று சுதந்திரதின விழாவில், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியாளரால், கேடயம் வழங்கப்பட்டது. 1994 ஆம் ஆண்டில் அந்தந்த சட்டமன்றப் பேரவை


உறுப்பினர்களின் முயற்சியால், கள்ளச்சாராயம் காய்ச்சாத, விற்காத மற்றும் குடிக்காத தொகுதிகளின் விவரங்கள் கேட்கப்பட்டுள்ளன. இந்த உயரிய நோக்கத்திற்கு மாண்புமிகு சட்டமன்ற பேரவை உறுப்பினர்கள் தங்களுடைய முழுமனதான முயற்சிகளைச் செய்து, ஆதரவை நல்குவார்கள் என்பது அரசின் உண்மையான நம்பிக்கையாகும்.

XIII முடிவுரை

56. சுருக்கமாகச் சொன்னால், கள்ளச்சாராயம், வரிசெலுத்தாமல் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மதுவகைகள் இம்மாநிலத்திற்கு வெளியிலிருந்து கள்ள மதுவகைகளைக் கொண்டு வருதல் ஆகியவற்றைத் தடுத்துக் கட்டுப்படுத்துவதற்கு, இந்த அரசு தொடர்ந்து முயற்சிகள் எடுக்கும். இம்முயற்சி தொய்வின்றி தொடர்ந்து மேற்கொள்ளப்படும். அதே நேரத்தில் பொது மக்கள் குடிப்பழக்கத்திலிருந்து விடுபடும் வகையில் அப்பழக்கத்தின் தீமைகள் குறித்து தொடர்ந்து பிரச்சாரம் செய்யப்படும். ஒருபுறம் தீவிரமாகவும், திறமையான முறையிலும் மதுவிலக்கை அமுல்படுத்துவது, மற்றொரு பக்கம் குடிப்பழக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்காக சீர்திருத்த மறுவாழ்வு நடவடிக்கை எடுப்பதுடன் போதைப் பழக்கத்திற்கு அடிமையாவதன் தீமைகளை மக்களுக்கு அறிவுறுத்துவது என இவ்வரசு பின்பற்றிய நடைமுறை சார்ந்த இருமுனை நடவடிக்கைகளின் பயனாக, இப்பிரச்சனை பெருமளவுக்கு மட்டுப்படுத்தப்பட்டு கணிசமான அளவிற்கு பயனும் கிட்டியுள்ளது.

இணைப்பு-I

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையில் பணிபுரியும் பணியாளர்கள் பற்றிய விவரங்கள்



1. ஆணையாளர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை
2. இணை ஆணையாளர் - 1
3. இணை ஆணையாளர் - 2
4. நிதிக் கட்டுப்பாட்டு அலுவலர்.
5. உதவி ஆணையாளர் - 1
6. உதவி ஆணையாளர் - 3
7. உதவி ஆணையாளர் - 4
8. உதவி ஆணையாளர் - 2
9. மாவட்டங்களில் உள்ள உதவி ஆணையாளர்
10. உரிமம் பெற்ற வடிசாலை வளாகங்கள் முதலியவற்றில் பணிபுரிகின்ற துணை ஆட்சியர் பதவி நிலையில் உள்ள அலுவலர்கள்
11. உதவி கணக்கு அலுவலர்
12. மாவட்டங்களில் உள்ள கோட்ட ஆய அலுவலர்கள்
13. உரிமம் பெற்ற இடங்களான வடிசாலைகள் முதலியவற்றில் பணிபுரிகின்ற வட்டாட்சியர் மற்றும் துணை வட்டாட்சியர் பதவி நிலையில் உள்ள அலுவலர்கள்


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1740

இணைப்பு-II

மாநிலத்தில் உள்ள மதுவிலக்கு அமலாக்கப்பிரிவில் பணிபுரியும் பணியாளர்கள் பற்றிய விவரங்கள் (பதவிகளின் எண்ணிக்கை அடைப்புக்குறியில்)



விரிவாக்கம்

கா. து. த.	.. காவல்துறைத் தலைவர்	துணை கா. து. கண்காணிப்பாளர்	.. காவல்துறை துணைக் கண்காணிப்பாளர்
துணை கா. து. த.	.. காவல்துறைத் துணைத் தலைவர்	இ. நி. உ.	.. இளநிலை உதவியாளர்
		நே .மு. உ.	.. நேர்முக உதவியாளர்
கா. து. கண்காணிப்பாளர்	.. காவல்துறைக் கண்காணிப்பாளர்	கா. து. ஆ	.. காவல்துறை ஆய்வாளர்
		கா. து. உ. ஆ.	.. காவல்துறை உதவி ஆய்வாளர்
கூடுதல் கா. து. கண்காணிப்பாளர்	.. காவல் துறைக் கூடுதல் கண்காணிப்பாளர்	முகாம் இ. நி. உ.	.. முகாம் இளநிலை உதவியாளர்
		கா. து. கா.	.. காவல்துறைக் காவலர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு - III

மாநிலத்திலுள்ள சர்க்கரை ஆலைகள் அவற்றின் கருப்பஞ்சாற்றுக் கசண்டு சேமிப்புத்திறன் பற்றிய விவரங்கள்.

வ.எண்.	சர்க்கரை ஆலையின் பெயர்	கருப்பஞ்சாற்றுக் கசண்டு சேமிப்புத் திறன் (மெட்ரிக் டன்களில்)
(1)	(2)	(3)
1.	அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம்	11,000
2.	மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம்	15,000
3.	திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம்	14,000
4.	தர்மபுரி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம்	15,000
5.	சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சுகர்ஸ் நிறுவனம்	12,000
6.	நேஷனல் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம்	18,200
7.	மதுரா சுகர்ஸ்	6,000
8.	ராஜஸ்ரீ சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம்	12,000
9.	ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம்	14,000
10.	திருப்பத்தூர் சர்க்கரை ஆலை நிறுவனம்	10,000
11.	வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம்	21,000
12.	சக்தி சுகர்ஸ் நிறுவனம், அலகு 2	12,000

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

13.	பன்னாரி அம்மன் சுகர்ஸ் நிறுவனம்	12,000
14.	தாரணி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம்	12,600
15.	சக்தி சுகர்ஸ் நிறுவனம்	18,000
16.	செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம்	16,000
17.	கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம்	15,000
18.	எம்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவு சர்க்கரை ஆலை	12,000
19.	அருணா சுகர்ஸ் அண்டு எண்டர்பிரைசஸ் நிறுவனம்	25,000
20.	ஈ.ஐ.டி.பாரி (இந்தியா) நிறுவனம்	18,600
21.	சவுத் இந்தியா சுகர்ஸ் நிறுவனம்	16,500
22.	சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம்	19,000
23.	பொன்னி சுகர்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் நிறுவனம்	8,400
24.	என்.பி.கே.ஆர். இராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம்	20,000
25.	அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை	14,000
26.	திரு ஆரூரான் சுகர்ஸ் நிறுவனம், அலகு 1	14,500
27.	திரு ஆரூரான் சுகர்ஸ் நிறுவனம், அலகு 2	12,000
28.	பெரம்பலூர் சர்க்கரை ஆலை நிறுவனம்	12,000
29.	காவேரி சுகர்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் நிறுவனம்	7,000
30.	டெக்கான் சுகர்ஸ் (ஈ.ஐ.டி. புகளூர்)	14,700
31.	கோத்தாரி சுகர்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் நிறுவனம்	13,300
32.	செய்யார் கூட்டுறவு சர்க்கரை ஆலை	12,000
	மொத்தம் ..	4,52,600

இணைப்பு - IV

இம்மாநிலத்தில் கருப்பஞ்சாற்றுக் கசண்டின் உற்பத்தி மற்றும் பயன்பாடு பற்றிய விவரங்கள்.

(கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஆண்டு - அக்டோபர் முதல் செப்டம்பர் வரை)

கருப்பஞ் சாற்றுக் கசண்டு ஆண்டு	தொடக்க இருப்பு	உற்பத்தி	மொத்த அளவு	பயன்-படுத்தப் பட்ட அளவு	இறுதி இருப்பு அளவு
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
		(இலட்சம் மெட்ரிக் டன்களில்)			
1990-91	1.06	5.88	6.94	4.38	2.56
1991-92	2.56	6.09	8.65	5.79	2.86
1992-93	2.86	4.42	7.28	5.82	1.46
1993-94	1.46	5.21	6.67	4.76	1.91
1994-95 (10/94–2/95)	1.91	1.68	3.59	1.36	2.23

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு - V

மாநிலத்தில் உள்ள வடிசாலைகள் பற்றிய விவரங்கள்.

வ. எண்.	வடிசாலையின் பெயர்	ஆண்டொன்றிற்கு கருப்பஞ்சாற்று கசண்டு வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்ட அளவு.	கருப்பஞ்சாற்று கசண்டு சேமிக்கும் திறனளவு	1993-94 சாராவி ஆண்டில் சாராவி உற்பத்தி அளவு
(1)	(2)	(3)	(4)	(5)
		(மெட்ரிக் டன்களில்)	மெட்ரிக் டன்களில்)	இலட்சம் லிட்டர்களில்)
1.	கோயம்புத்தூர் ஆல்கஹால் அண்டு கெமிக்கல்ஸ் நிறுவனம்	71,350	22,800	100.66
2.	ஓரியன் கெமிக்கல்ஸ் அண்டுடிஸ்டில்லரீஸ் நிறுவனம்	45,000	11,788	53.42
3.	சக்தி சுகர்ஸ் நிறுவனம்	78,260	23,950	163.65
4.	திருச்சி டிஸ்டில்லரீஸ் அண்டுகெமிக்கல்ஸ் நிறுவனம்	1,10,000	26,200	114.05
5.	அருணா சுகர்ஸ் நிறுவனம்	50,000	12,840	55.42
6.	திரு ஆரூரான் சுகர்ஸ் நிறுவனம்	50,000	15,040	96.93
7.	கோத்தாரி சுகர்ஸ் அண்டு கெமிக்கல்ஸ்	40,000	10,000	72.29
8.	ராஜஸ்ரீ சுகர்ஸ் நிறுவனம்	40,000	12,000	63.23
9.	கெம்பிளாஸ்ட், மரிகம்பள்ளி	65,000	15,000	—

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வ. எண்.	வடிசாலையின் பெயர்	ஆண்டொன்றிற்கு கருப்பஞ்சாற்று கசண்டு வைத்துக் கொள்ள அனுமதிக்கப் பட்ட அளவு.	கருப்பஞ்சாற்று கசண்டு சேமிக்கும் திறனளவு	1993 94 சாராவி ஆண்டில் சாராவி உற்பத்தி அளவு
(1)	(2)	(3)	(4)	(5)
		(மெட்ரிக் டன்களில்)	மெட்ரிக் டன்களில்)	இலட்சம் லிட்டர்களில்)
10.	கெம்பிளாஸ்ட், காடாம்புலியூர்	59,000	26,468	60.41
11.	சதர்ன் அக்கிரிபுரேன் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம்	12,500	2,250	29.75
12.	ஈ.ஐ.டி. பாரி (இந்தியா) நிறுவனம்	34,000	9,200	66.96
13.	சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை	55,000	12,000	12.37
14.	அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை	55,000	11,000	16.38

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு - VI

1990-91 ஆம் ஆண்டிலிருந்து இம்மாநிலத்தின் சாராவி உற்பத்தி மற்றும் பயன்பாடுகள் பற்றி விவரங்கள்.

(சாராவி ஆண்டு: டிசம்பர் முதல் நவம்பர் வரை)

ஆண்டு	தொடக்க இருப்பு	இந்த ஆண்டில் தயாரிக்-கப்பட்ட சாராவி	அருந்தும் பயனுக்காக ஒதுக்கீடு செய்யப் பட்ட சாராவி	தொழில் பயனுக்காக ஒதுக்கீடு செய்யப் பட்ட சாராவி	முடிவான இருப்பு
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
			(இலட்சம் லிட்டர்களில்)		
1990-91	73.73	768.03	360.00	398.32	51.26
1991-92	51.26	951.50	266.04	578.45	85.51
1992-93	85.51	917.75	309.28	635.68	56.45
1993-94	56.45	905.51	346.97	501.61	110.88
1994-95 (12/94 முதல் 2/95 வரை)	110.88	241.61	88.13	138.43	125.06

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு - VII

இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் மற்றும் பீர் ஆகியவை குறித்த விவரங்கள்.

	அளவு (பல்க் லிட்டர்களில்)
இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் உற்பத்தி.	
1990-91	2,89,46,786
1991-92	4,41,64,814
1992-93	6,39,62,164
1993-94	7,02,88,439
1994-95	
(பிப்ரவரி 1995 வரை)	6,89,36,464
பீர் உற்பத்தி	
1990-91	3,25,37,544
1991-92	3,36,33,287
1992-93	4,64,04,951
1993-94	3,85,51,554
1994-95	
(பிப்ரவரி, 1995 வரை)	3,73,88,761

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
தமிழ்நாடு சட்டப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு - VIII

1990-91 முதல் **1994-95** ஆம் ஆண்டு வரை இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகைகளின் சில்லறை விற்பனை உரிமம் வழங்கப்பட்ட கடைகளின் விவரங்கள்.

1990-91	..	2,372	
1991-92	..	3,049	
1992-93	..	4,216	/பார்கள் 3,332
1993-94	..	3,937	
1994-95	..	3,781	

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு - IX

1990-ஆம் ஆண்டு முதல் 1994-ஆம் ஆண்டு வரையில் கண்டுபிடிக்கப்பட்ட மதுவிலக்கு வழக்குகள், கைப்பற்றப்பட்ட கள்ளக்கடத்தல் பொருட்கள் ஆகியவை பற்றிய விவரங்கள்.

வஎண். (1)	விவரம் (2)	1990 (3)	1991 (4)	1992 (5)	1993 (6)	1994 (7)
1.	கண்டுபிடிக்கப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை	3,78,298	2,79,318	5,03,677	5,58,072	5,89,807
2.	கைப்பற்றப்பட்ட கள்ளச்சாராயம் அளவு(லிட்டர்களில்)	38,43,245	25,44,922	40,73,420	49,31,408	63,38,326
3.	அழிக்கப்பட்ட ஊறலின் அளவு (லிட்டர்களில்)	1,47,89,457	1,16,88,414	1,99,53,370	2,95,07,298	4,10,79,999
4.	கைப்பற்றப்பட்ட இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் அளவு (பாட்டில்களில்)					
	(அ) முழு பாட்டில்	1,343	6,734	16,205	19,787	29,148
	(ஆ) அரை பாட்டில்	6,255	2,024	10,422	2,140	2,286
	(இ) கால் பாட்டில்	38,640	54,083	3,28,532	1,44,005	1,22,666

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு - IX-அ

1990-ஆம் ஆண்டு முதல் 1994-ஆம் ஆண்டு வரையிலும் மதுவிலக்கு குற்றங்களில் கைப்பற்றப்பட்ட வாகனங்கள் பற்றிய விவரங்கள்.

வ.எண்.	விவரம்	1990	1991	1992	1993	1994
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
(அ)	கார்	269	201	195	131	112
(ஆ)	ஜீப்பு	11	16	14	8	4
(இ)	வேன்	65	42	64	56	40
(ஈ)	ஆட்டோரிக்ஷா	98	87	249	136	83
(உ)	லாரி	36	48	98	89	58
(ஊ)	மோட்டார் சைக்கிள்	205	183	620	826	1089
(எ)	படகு	—	4	7	5	3
(ஏ)	ஸ்கூட்டர்	71	44	40	46	39
(ஐ)	பஸ்	4	2	6	—	1
(ஒ)	பாரவண்டி/பார கட்டவண்டி		1	2	2	—
(ஓ)	டிராக்டர்	—	—	—	1	3
(ஔ)	மாட்டுவண்டி	—	—	—	12	15
(க)	சைக்கிள்	1887	596	2098	2125	2194
(ங)	மூன்று சக்கர சைக்கிள் (இயக்கி உடையது)	—	—	—	—	7
(ச)	குதிரை வண்டி	—	—	—	—	3
	மொத்தம்	2646	1224	3393	3437	3651

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு - X

1990-ஆம் ஆண்டு முதல் 1994-ஆம் ஆண்டு வரையிலும் மதுவிலக்கு அமுலாக்கப் பிரிவு மற்றும் மாவட்ட காவல்துறையினரால் கண்டறிந்து, முடிக்கப்பட்ட மதுவிலக்கு வழக்குகள் பற்றிய விவரங்கள்.

வ. எண். (1)	விவரங்கள் (2)	1990 (3)	1991 (4)	1992 (5)	1993 (6)	1994 (7)
(1)	கண்டுபிடிக்கப் பட்ட வழக்கு களின் எண்ணிக்கை	3,78,298	2,79,318	5,03,677	5,58,072	5,89,807
(2)	(அ) குற்ற வழக்குகளின் எண்ணிக்கை	3,73,380	2,70,231	4,77,712	2,64,663	2,95,508
	(ஆ) இணக்கமுறை தீர்வில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை.	—	—	16,753	2,71,400	2,62,349
(3)	தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை.	3,52,347	2,36,170	4,26,754	2,08,047	1,98,842
(4)	விடுவிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை.	15,183	22,223	31,198	28,762	1805
(5)	திரும்பப் பெறப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை.	78	953	—	—	—
(6)	விசாரணை முடிவுறாமல் உள்ள வழக்கு களின் எண்ணிக்கை.	5,772	10,885	19,128	14,974	94,861

வ. எண். (1)	விவரங்கள் (2)	1990 (3)	1991 (4)	1992 (5)	1993 (6)	1994 (7)
(7)	நடவடிக்கை எடுக்கப்படாமல் விடுவிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை.	3,644	6,154	5,508	11,098	4,590
(8)	புலனாய்வில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை.	1,274	—	—	—	27,354

இணைப்பு - XI

போதைப் பொருட்கள் உளவுத்தகவல் பிரிவுகளில் பணிபுரியும் பணியாளர்களின் விவரங்கள்.

போதைப் பொருட்கள் உளவுத் தகவல் பிரிவுகள் (1)	காவல் துறை கண்காணிப்பாளர் (2)	காவல் துறை கூடுதல் கண்காணிப்பாளர் (3)	காவல் துறை துணை கண்காணிப்பாளர் (4)	காவல் துறை ஆய்வாளர்கள் (5)	காவல் துறை சார் ஆய்வாளர்கள் (6)	தலைமை காவலர்கள் (7)	முதல் நிலை காவலர்கள் (8)	இரண்டாம் நிலை காவலர்கள் (9)
சென்னை	1	1	1	2	4	17	1	7
திருச்சி	-	-	-	1	1	2	-	6
மதுரை	-	-	-	1	1	2	-	6
சேலம்	-	-	-	1	1	2	-	6
திண்டுக்கல்	-	-	-	1	1	4	-	-
தேனி	-	-	-	1	1	4	-	-
கள்ளக்குறிச்சி	-	-	-	1	-	4	-	-

இவர்களுடன் 1 ஆய்வாளர், 2 சார் ஆய்வாளர்கள், 2 தலைமைக் காவலர்கள், 18 இரண்டாம் நிலைக் காவலர்கள் மற்றும் 10 ஓட்டுனர் காவலர்கள் மாவட்ட காவல்துறையிலிருந்து பெறப்பட்டு பணிபுரிகின்றனர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-XII

1990-94- ஆம் ஆண்டுகளில் மாவட்டக் காவல் துறையினர் மற்றும் போதைப்பொருட்கள் உளவுத் தகவல் காவல் பிரிவு மத்தியப்புலனாய்வுப் பிரிவு ஆகியவற்றின் சாதனைகள்

ஆண்டு	வழக்குகளின் எண்ணிக்கை	குற்றம் சாட்டப்பட்டவர்களின் எண்ணிக்கை	மலைப்பிரதேச திடீர் சோதனைகளின் எண்ணிக்கை	பயிர் செய்யப்பட்ட நிலப்பரப்பு (ஏக்கரில்)	கைப்பற்றப்பட்ட அளவு (கிலோ கிராமில்)								மதிப்பு ரூபாய்.
					உலர்ந்த கஞ்சா	சர கஞ்சா	அபின்	ஹெராயின்	கஸ்கஸா விதை	டிடிஜெசிக் ஊசிமருந்து (குப்பிகள்)	டார்பின் மாத்திரைகள்	டையாசிபம்	
1990	2357	2453	19	225.00	2995.430	112696.000	35.084	4.237	-	-	-	-	232157390
1991	5207	5549	28	113.75	5227.340	55469.000	7.174	2.293	61.600	-	-	-	121694680
1992	4491	4768	30	176.58	2844.752	152507.000	3.563	17.573	20.100	50	-	-	312496930
1993	3307	3544	28	118.70	3768.326	170035.000	78.427	13.648	-	301	25	-	349755722
1994	3124	3289	27	35.12	5752.992	40721.500	39.038	7.172	30.000	3144	-	126.500	94275098

இணைப்பு - XIII

1990 முதல் தமிழ்நாடு சட்டம் 14/1982 (குண்டர்கள் சட்டம்) படி தடுப்புக்காவலில் வைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை:-

ஆண்டு	கள்ளச் சாராயம் காய்ச்சு பவர்கள்	மருந்து பொருள் சட்டத் தின் கீழ் வரும் குற்ற வாளிகள்	வனச் சட்டத்-தின் கீழ் வரும் குற்ற வாளிகள்	குண்டர்கள்	விபச்சாரத் தொழில் குற்ற வாளிகள்	நில ஆக்கிர மிப்-பாளர்கள்	மொத் தம்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
1990	96	-	2	228	1	-	327
1991	129	-	51	191	1	-	372
1992	1064	-	267	523	2	-	1856
1993	1366	-	123	595	1	-	2085
1994	1282	-	84	496	4	-	1866
1995 (28-2-95 வரையில்)	164	-	12	90	-	-	266

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-XIV

1990-91 ஆம் ஆண்டு முதல் பல்வேறு தலைப்புகளின் கீழ் ஈட்டப்பட்ட ஆயத்தீர்வை வருவாய்

வ. எண்.	வருவாய்த் தலைப்பு	1990-91	1991-92	1992-93	1993-94	1994-95 (ஜனவரி 1995 முடிய)	வரவு செலவுத் திட்ட மதிப்பீடு (1995-96)
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
		(ரூபாய் கோடியில்)					
1.	நாட்டுச் சாராவி (சாராயம்)	154.64	49.16	0.42	0.54	0.42	
2.	புளிக்க வைக்கப்பட்ட நாட்டு மது (கள்)	12.46	0.17	0.15	0.17	0.17	
3.	மால்ட் வகை மது (பீர்)	26.79	30.42	26.98	27.03	19.09	
4.	அயல்நாட்டு மது, சாராவி	228.89	392.47	520.44	510.80	405.94	601.00
5.	வணிக ரீதியான, இயல்பு மாற்றப்பட்ட சாராவி	0.97	0.18	(-)1.00	0.07	0.02	
6.	மருந்துப் பொருட்கள், ஒப்பனைப் பொருட்கள்.	2.39	2.98	3.2[illegible]	[illegible]	4.41	

வ. எண்.	வருவாய்த் தலைப்பு	1990-91	1991-92	1992-93	1993-94	1994-95 (ஜனவரி 1995 முடிய)	வரவு செலவுத் திட்ட மதிப்பீடு (1995-96)
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
		(ரூபாய் கோடியில்)					
7.	அபின், ஹெம்ப், ஏனைய மருந்துப் பொருட்கள்	0.02	0.04	0.10	0.01	0.01	
8.	அபராதங்களும், பறிமுதல்களும்	0.41	0.19	3.58	15.22	13.53	
9.	பணியும், பணிக் கட்டணங்களும்	3.40	5.04	5.25	4.07	3.61	
10.	ஏனைய விவரங்கள்	4.89	2.47	5.73	6.92	5.39	
	மொத்தம்	**434.86**	**483.12**	**564.86**	**568.82**	**452.59**	

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

53-68–29

இணைப்பு-2

{53 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

1994-1995 ஆம் ஆண்டின் தமிழ்நாடு காவல் துறையின் சாதனைகள்

மற்றும்

1995-1996 ஆம் ஆண்டின் வருங்காலத் திட்டங்கள் பற்றிய குறிப்பு

I. முன்னுரை

மரபு வழி சார்ந்த ஒரு சமுதாயத்தில், காவல் துறையின் முதன்மையான பணி, சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதும், குற்றங்களைக் கட்டுப்படுத்துவதுமே என்றாலும், அத்தகைய சமுதாயத்தில் காவல் துறையினரின் பணி, நெருக்கடி மிகுந்ததாக உள்ளது. எனினும், இன்றைய நவீன, முற்போக்கான ஒரு மக்கள் நல அரசில், காவல் படையின் பணி பெருமளவிற்கு சிக்கலானதாகவும், பலதிறப்பட்ட சவால்களை எதிர்நோக்கிச் சமாளிக்க வேண்டியதாகவும் உள்ளது. இவற்றைச் சமாளிக்க, மிக உயரிய விழிப்புணர்வும், தொழில்முறைத் தகுதியுடன் கூடிய திறமையும் மிக அவசியம். தொழில் மயமாக்கல், அதிகரித்து வரும் நகர் மயமாக்கல், விரைவான சமூக மாற்றங்கள், குறைந்து வரும் நற்பண்புகள், அறிவியல் முன்னேற்றங்கள், குற்றவாளிகள், தீவிரவாதிகளின் அதிகரித்துவரும் நடமாட்டம், அவர்கள் பின்பற்றும் நவீன உத்திகள் ஆகியவற்றின் காரணமாக காவல் துறையின் பணி கடினமானதாகவும், சிக்கல் நிறைந்ததாகவும் மாறியுள்ளது. எனவே, காவல் துறை துடிப்பு மிகுந்ததாகவும் இருந்து சவால்களை சமாளிக்கும் திறம்படைத்ததாகவும் உயர்ந்த பட்ச விழிப்புணர்வுடன் செயல்பட்டாலன்றி, இத் தகைய சவால் நிறைந்த சூழ்நிலைகளைச் எதிர்கொள்ள இயலாது.

காவல் துறை பணி ஒன்றில்தான் சூழ்நிலைக்கேற்ப, பொறுப்புகளும் பரந்த அளவில் மாறுபடுகிறது. ஏழைகள், தாழ்த்தப்பட்ட பிரிவினர், உடல் ஊனமுற்றவர்களிடம் கனிவும், மனித நேயமும் மிகுந்த அணுகுமுறை, அதே வேளையில், குற்றவாளிகளிடமும் மற்றும் தீவிரவாதி களிடமும் கடுமையான போக்கு என ஊசலின் இரு திருப்பு முனைகள் போன்று, நேர் எதிர் பண்புகளுடன் காவல் துறையினர் செயலாற்ற வேண்டியுள்ளது.

திறமை, செயல் வேகம், அர்ப்பணிப்பு உணர்வு, கடமைப் பற்றுணர்வு ஆகியவற்றுக்குப் பெயர் பெற்ற தமிழ்நாடு காவல்துறை தன்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பெரு மளவிலான எண்ணற்ற பொறுப்புகளையும், ஒதுக்கப்படும் பணிகளையும் நன்குணர்ந்து மனவுறுதியுடன் நிறைவேற்று கின்றது. செயல்பாட்டினாலும், சாதனைகளினாலும் அரசு, பொதுமக்கள் ஆகிய இரு தரப்பினரின் பாராட்டினையும் நமது காவல் துறையினர் பெற்றுள்ளனர். ஆய்வு ஆண்டில் தமிழ்நாடு காவல்துறையின் செயல்பாடு குறித்து பின்வரும் அத்தியாயங்களில் கூறப்பட்டுள்ளது:-

II. தமிழ்நாடு காவல் துறையின் பணிகள்.

பெருகி வரும் பொருளாதார, தொழில் நடவடிக்கைகளினால் மிக வேகமாக மாறிவரும், வளர்ந்துவரும் சமுதாயத்தில் தமிழ்நாடு காவல் துறையின் பணிகள் பல்வகைப்பட்டதாகவும், சிக்கல் நிறைந்ததாகவும் மாறியுள்ளன. இது, சட்டம்-ஒழுங்கைப் பராமரித்தல், சமுதாயத்தின் பல்வேறு பிரிவினர்களுடன் தொடர்பு, குற்றங்களைக் கண்டுபிடித்தல், குற்றவாளிகளைப் பிடித்தல், போராளிகளைச் சமாளித்தல், பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ளுதல், பல்வேறு சிறப்பு, உள்ளூர் சட்டங்களை நடைமுறைப்படுத்துதல் என பலவகைகளில் வேறுபடுகின்றது. ஆனால், இக்கடமைகள் அனைத்தையுமே

1995 ஏப்ரல் 6]

நான்கு பெரும் பிரிவுகளாக, அதாவது, பாதுகாப்பு அளித்தல், தடுப்புப் பணிகள், துப்பு துலக்கும் பணிகள், செயலாக்கத்தை முறைப்படுத்துதல் என வகைப்படுத்தலாம். இந்த நான்கு பெரும் பொறுப்புகளின் தன்மைகள் குறித்து கீழே சுருக்கமாக விவரிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அளித்தல் :

பாதுகாப்பு அளிக்கும் பணி என்பது சட்டம், ஒழுங்கை செயல்படுத்துதல் என்றும் அழைக்கப்படுகிறது. இதில் மக்களின் உயிர், உரிமை, உடைமைகளைப் பாதுகாத்தல், சமுதாயத்தில் அமைதியான சூழ்நிலையைப் பராமரித்தல் ஆகியவை அடங்கும்.

துப்புத் துலக்கும் பணிகள் :

உரிய காலத்தில் துப்புத் துலக்கிக் குற்றங்களைக் கண்டுபிடித்தல், குற்றவாளிகளைக் கைது செய்தல், அவர்கள் மீது வழக்குத் தொடர்ந்து அவற்றை வெற்றிகரமாக முடித்தல், ஆகியவை காவலர்களின் துப்புத் துலக்கும் பணியில் அடங்கும். தமிழ்நாடு காவல் துறை, கடந்த மூன்றாண்டுகளில் சொத்துக்கள் தொடர்பான குற்றங்களைக் கண்டுபிடிப்பதில் குறிப்பிடத் தக்க வகையில் செயலாற்றியுள்ளதுடன், ஆண்டிற்கு ஆண்டு அதன் செயல்திறன் மேம்பட்டு வருகின்றது. சொத்துக்கள் தொடர்பான குற்றங்கள் கண்டுபிடிப்பு 1993-ஆம் ஆண்டு 73.2 சதவீதம் ஆக இருந்து 1994-ஆம் ஆண்டு 74.3 சதவீதம் ஆக அதிகரித்துள்ளது.

தடுப்புப் பணிகள் :

இனம், தொழில், தொழிலாளர், உழவர், மாணவர் பிரிவுகளிடையே ஏற்படும் மோதல்கள் காரணமாக உருவாகும் விளைவுகள், பின்விளைவுகள் குறித்து முன்கூட்டியே புலனாய்வு செய்து, தகவல்களைச் சேகரித்தல் ஆகியவை தடுப்புப் பணிகளில் அடங்கும். இயல்பான

வாழ்க்கைமுறையைப் பாதிக்காதவாறு, அரசியல் போராட்டங்களின்போது போதுமான முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

செயலாக்கப் பணிகள் :

போக்குவரத்துச் சட்டங்களை, விதிகளை நடைமுறைப்படுத்துதல், சாலைகளில் தங்கு தடையற்ற போக்குவரத்தை உறுதி செய்தல், முக்கிய பிரமுகர்களுக்குப் பாதுகாப்பு அளித்தல், வங்கிகள், தொழில், வணிக நிறுவனங்கள் போன்றவற்றிற்கு பாதுகாப்பு அளித்தல், ஆகியவை செயலாக்கப் பணிகளில் அடங்கும். மது விலக்கு, விபச்சாரத் தடுப்பு போன்ற சமூக நலச்சட்டங்களை நடைமுறைப் படுத்துவதும் இப்பணியின் கீழ் அடங்கும். சுருக்கமாகக் கூறினால் மாநிலத்தின் பாதுகாப்பை உறுதிசெய்தல், சட்டம்-ஒழுங்கைப் பராமரித்தல், பொதுமக்கள் பயமின்றி அமைதியான சூழ்நிலையில் வாழ்க்கை நடத்த தகுந்த பாதுகாப்பு அளித்தல், சொத்துக்களுக்குப் பாதுகாப்பு அளித்தல், குற்றங்களைத் தடுத்தல்-கண்டுபிடித்தல், ஒழுங்கு முறை விதிகளைச் செயல்படுத்துதல் ஆகியவை காவலர்களின் அடிப்படை பணிகளாகும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

III. நிர்வாக அமைப்பு.

அ. உயர்மட்ட நிர்வாக அமைப்பு.

காவல் துறைத் தலைமை இயக்குநர் தமிழ்நாடு காவல் துறைக்குத் தலைவராவார். இவர் காவல் துறை நிர்வாகத்தில் உயர் பொறுப்பை வகிக்கிறார்.

மாநிலத்தின் சட்டம்-ஒழுங்கைப் பராமரிப்பது தொடர்பான அனைத்து நிர்வாகத்திலும் காவல் துறை கூடுதல் தலைமை இயக்குநர் (சட்டம்-ஒழுங்கு) காவல்

துறைத் தலைமை இயக்குநருக்கு உதவியாகச் செயல்படுகின்றார். சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பனைப் பிடிப்பதற்கு அமைக்கப்பட்ட சிறப்பு அதிரடிப்படைக்கும் இவரே பொறுப்பு வகிக்கிறார். திட்டமிடல், காவல் துறை செயல்பாட்டிற்கான தேவைகளை நிறைவேற்றும் பணிக்கு காவல் துறை கூடுதல் தலைமை இயக்குநர் (தலைமையிடம்) பொறுப்பு வகிக்கிறார். காவல் துறைப் பணியாளர்களின் பணி தொடர்பான விவரங்களைக் காவல்துறை கூடுதல் தலைமை இயக்குநர் (பணியாளரமைப்பு) கவனித்து வருகிறார்.

பல மாவட்டங்கள் சம்பந்தப்படும் அதிக முக்கியத்துவம் வாய்ந்த குற்றங்களைப் புலனாய்வு செய்யும் பணியைக் காவல் துறைத் தலைமை இயக்குநர் (குற்றம்) கவனித்து வருகிறார். காவல் துறைத் தலைவர் (புலனாய்வு) குற்றப் புலனாய்வு, தனிப் பிரிவு சம்பந்தப்பட்ட பணிகள், போராளிகள், கடலோர பாதுகாப்பு பணியைக் கவனிக்கிறார்.

பொருளாதாரக் குற்றங்கள் நடைபெறாமல் தடுத்தல், துப்புத் துலக்குதல் ஆகிய பணிகளுக்கு காவல் துறைத் தலைமை இயக்குநர் (பொருளாதாரக் குற்றங்கள்) பொறுப்பு வகிக்கிறார். மாபெரும் சென்னை மாநகரத் திட்டத்தின் திட்ட அலுவலராகவும் இவர் செயல்பட்டு வருகிறார்.

பயிற்சிப் பிரிவிற்கும் காவல் துறை தலைமை இயக்குநர் ஒருவர் தலைமை வகிக்கிறார். இவரே, அமைக்கக் கருதியுள்ள தமிழ்நாடு காவல் துறை பயிற்சி நிலையத்திற்கான திட்ட அதிகாரியும் ஆவார்.

காவல்துறை கூடுதல் தலைமை இயக்குநர் (வனப் பிரிவு) மாநிலத்திலுள்ள வன வளத்தைப் பாதுகாப்பதற்குப் பொறுப்பாவார். காவல் துறைத் தலைவர் தலைமையிலான சிறப்புப் பிரிவு ஒன்று அனைத்து மாவட்டங்களிலும்

குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தை செயல்படுத்துகின்றது. திட்டமிடல்-ஒருங்கிணைப்பு காவல்துறைத் தலைவர் தொழில்நுட்பப் பணிகள், கணிப்பொறிப் பிரிவு உள்ளிட்ட நவீன மயமாக்கும் திட்டங்களைக் கவனிக்கின்றார். காவல் துறைத் தலைவர் (ஊர்க் காவல்படை) தமிழ்நாட்டிலுள்ள குடிமக்கள் பாதுகாப்பு உட்பட ஊர்க்காவல் படைக்கும் பொறுப்பு வகிக்கிறார்.

காவல் துறைத் தலைவர் ஒருவர் இரயில்வே பாதுகாப்பு காவல் படைக்குப் பொறுப்பு வகிக்கிறார். காவல் துறைத் தலைவர் (குடிமைப் பொருள் குற்றப் புலனாய்வு) அத்தியாவசியப் பொருட்கள் சட்டத்தை செயல்படுத்துதல் குறித்து கவனித்து வருகிறார்.

காவல் துறை, சிறைத்துறை, தீயணைப்புத் துறை ஆகியவற்றில் சீருடைப் பணியாளர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையைச் சீரமைப்பதற்கு, தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் ஒன்றை தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது. அதற்கு தற்போது காவல் துறை கூடுதல் தலைமை இயக்குநர் (சட்டம்-ஒழுங்கு) தலைவராகச் செயல்படுகிறார்.

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம், காவலர் குடியிருப்புகள்/படைவீடுகள் கட்டும் பணிகளுடன் சொந்த வீடு கட்டித் தருதல் திட்டத்தின் கீழ் வீடு கட்டும் பணியையும் மேற்கொண்டு வருகின்றது. இதற்குத் தற்போது காவல் துறைக் கூடுதல் தலைமை இயக்குநர் ஒருவர் தலைமைப் பொறுப்பு வகிக்கின்றார்.

தமிழ்நாட்டுக்கு ஒதுக்கப்பட்ட இந்திய காவல் பணியைச் சேர்ந்தோரின் எண்ணிக்கை 200 ஆகும். ஆனால், 1-1-1995-ஆம் நாளன்று நிலவரப்படி இப்பணியைச் சேர்ந்தோர் 158 பேர் மட்டுமே உள்ளனர். 1994-ஆம் ஆண்டில், 5 அதிகாரிகள் வயது முதிர்வின் காரணமாகப்

பதவி ஓய்வு பெற்றனர். பதவி உயர்வு ஒதுக்கீட்டின் கீழ், 4 அதிகாரிகளுக்கு இந்தியக் காவல்பணி பதவித்தரம் வழங்கப்பட்டது.

இணைப்பு-II-ல் கண்டுள்ளபடி, 1-1-1995 அன்றைய நிலவரப்படி தமிழ்நாடு காவல்படையின் மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கை 77,426 ஆகும். 1994-ஆம் ஆண்டில், 12,224 செயல் பணியிடங்களும், 430 அமைச்சுப் பணியிடங்களும் ஏற்படுத்தப்பட்டன. புதிதாக ஏற்படுத்தப்பட்ட பணியிடங்கள் குறித்த விவரங்கள் இணைப்பு III-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

சேமப்படையைச் சேர்ந்த 200 படைப் பிரிவுகளும், தமிழ்நாடு சிறப்புக் காவல் படையிலுள்ள 9 அணிகளும் சட்டம் ஒழுங்கை திறம்பட பேணிக் காத்திட தலக்காவல் படைக்கு உதவி புரிந்து வருகின்றன. சிறப்புக் காவல் படைப் பிரிவு III, திகார் சிறை வளாகத்தைப் பாதுகாப்பதற்காக, புது டில்லிக்கு முகமைப் பணியில் அனுப்பப்பட்டுள்ளது.

ஆ. காவல் துறையில் உள்ள சிறப்புப் படைப் பிரிவுகள்.

(i) சிறப்புப் பாதுகாப்புப் படை :

தமிழ்நாட்டில் நடந்த முன்னாள் பாரதப் பிரதமர் மாண்புமிகு திரு. ராஜீவ் காந்தி அவர்களின் படுகொலை சம்பவம், பயங்கரவாதக் குழுக்கள், நாட்டின் மக்களிடையே பீதியையும் குழப்ப நிலையையும் தோற்றுவிக்கும் முக்கியமான ஆயுதமாக, முக்கியப் பிரமுகர்களைத் தாக்குகின்றனர் என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளது. தமிழ்நாட்டில் பயங்கரவாதத்தை அறவே ஒழிக்க எனது அரசு மேற்கொண்ட உறுதியான நடவடிக்கைகள் காரணமாக சில பயங்கரவாதக் குழுக்கள் தங்களது தலையாய இலக்காக என்மீது குறி வைத்துள்ளனர். மிக

முக்கியப் பிரமுகர்களுக்குப் போதிய பாதுகாப்பு ஏற்பாடு செய்வதும் ஒரு பெரும் பிரச்சினையாக உள்ளது. எனவே, 1991-ஆம் ஆண்டு அக்டோபரில் சிறப்புப் பாதுகாப்புப் படை தொடங்கப்பட்டது. இதில், ஒரு காவல் துறைத் துணைத் தலைவர், 2 காவல்துறை கண்காணிப்பாளர்கள், 11 காவல் துறை துணைக் கண்காணிப்பாளர்கள் மற்றும் ஏனைய பதவித் தரத்தைச் சேர்ந்த 500 பணியாளர்கள் ஆகியோர் உள்ளனர். இப்படைப் பிரிவினருக்கு, மாண்புமிகு பாரதப் பிரதமருக்குப் பாதுகாப்பு அளிக்கும் சிறப்புப் பாதுகாப்புப் படைத் தொகுதியினருக்கு அளிக்கப்படும் பயிற்சி அளிக்கப்பட்டது.

மிக முக்கிய பிரமுகர்களுக்கு அவசியமான பாதுகாப்பு அளிப்பதுடன், முக்கிய பிரமுகர் பாதுகாப்பின் அவசியம் பற்றி காவல்படையினருக்கு எளிதில் எடுத்துரைக்கும் ஒரு முக்கிய அமைப்பாக இந்தச் சிறப்புப் பாதுகாப்புப் படை வளர்ந்துள்ளது. நவீன ஆயுதங்களைப் பயன்படுத்துவதில் ஏராளமான அதிகாரிகளுக்கு இப்படைப் பிரிவு பயிற்சி அளித்துள்ளது. வெடிமருந்துகள், தளவாடங்கள், நிலக்கண்ணி வெடிகள் மற்றும் ஐ.இ.டிஸ் ஆகியவற்றைக் கண்டுபிடிக்கும் முறையிலும் சிறப்புப் பாதுகாப்புப் படைப் பிரிவு 380 அதிகாரிகளுக்கும் 481 காவல் துறையினருக்கும் பயிற்சி அளித்துள்ளது. இப்படை, கமாண்டோ பிரிவு, நாசவேலை தடுப்புப் பிரிவு, வெடிகுண்டு செயல் இழக்கச் செய்யும் பிரிவு, மோப்ப நாய்ப் படை பிரிவு, ஓட்டுநர் பள்ளி மற்றும் தனிப் பயிற்சிப் பிரிவு ஆகியவற்றையும் ஏற்படுத்தியுள்ளது.

(ii) *சிறப்பு அதிரடிப் படை:*

சந்தன மரக் கடத்தல்காரன் வீரப்பனையும் அவனது கூட்டத்தைச் சேர்ந்த 130 துப்பாக்கி ஏந்திய கூட்டாளிகளையும் வளைத்துப் பிடிக்க, தற்போதுள்ள

படையினரைக் கொண்ட சிறப்பு அதிரடிப்படை, 1993, மே மாதத்தில் உருவாக்கப்பட்டது. இப்படைப் பிரிவில், 141 காவல் பணியாளர்களும் 17 சிறப்புப் பாதுகாப்புப் படைப் பணியாளர்களும், காவல் துறை வானொலிப் பிரிவைச் சேர்ந்த 6 தொழில் நுட்ப உதவி ஆய்வாளர்களும் அடங்குவர். காவல் துறை கூடுதல் தலைமை இயக்குநர் (சட்டம்-ஒழுங்கு) திரு. டபிள்யூ. ஐ. தேவாரம், இ.கா.ப., அவர்கள், இப்படையின் தலைவர் ஆவார். தமிழ்நாட்டில் தருமபுரி, சேலம், பெரியார் மற்றும் நீலகிரி மாவட்டங்களிலும் கர்நாடக மாநிலத்தில் மைசூர் மற்றும் மாண்டியா மாவட்டங்களிலும் பரவலாகவுள்ள அடர்த்தியான 6,000 சதுர கிலோ மீட்டர் காட்டுப் பகுதிகளில் இந்தச் சிறப்பு அதிரடிப்படை செயல்பட்டு வருகிறது. இடைவிடாத உறுதியான வீரச் செயல்களின் காரணமாக இப்படை, இக்கூட்டத்தினரின் ஆயுத பலத்தையும் ஆட்பலத்தையும் குறைத்துள்ளதோடு, பகுதி முழுவதிலும் புதைக்கப்பட்டிருந்த நிலக்கண்ணி வெடி குண்டுகளைத் தேடி, தோண்டி அகற்றியுள்ளது. கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த சிறுமுகை அருகில் உள்ள வனப் பகுதியில் அமைந்துள்ள அவர்களுடைய பண்ணைக்குச் செல்ல வேண்டாம் என சிறப்பு அதிரடிப்படை எச்சரித்திருந்தும், ஒழுக்கக் கண்காணிப்பு-இலஞ்ச ஒழிப்புப் பிரிவைச் சேர்ந்த காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் திரு. சிதம்பரநாதன், தலைமைக் காவலராக உள்ள அவரது சகோதரர் மற்றும் அவரது மைத்துனர் ஆகியோர் அப்பண்ணைக்குச் சென்றிருந்தபோது 3-12-1994 அன்று வீரப்பன் கூட்டத்தினர் அவர்களைக் கடத்திச் சென்றனர்.

இவ்வாறு கடத்திச் சென்ற பின்னர், வீரப்பன் சில நியாயமற்ற நிறைவேற்றமுடியாத நிபந்தனைகளை விதித்தான். ஒரு இருமுனை திட்டத்தின்கீழ் கோயமுத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர், கொள்ளைக் கூட்டத்தினருடன்

பேச்சுவார்த்தைகளை நடத்திக் கொண்டிருந்தபோது சிறப்பு அதிரடிப்படை, எவ்வித ஆரவாரமின்றி 29-12-1994-ஆம் நாளன்று மீட்புப் பணியை மேற்கொண்டது. இதன் பயனாக மூன்று பிணையாளிகள் மீட்கப்பட்டனர். வீரப்பன் கூட்டத்தைச் சேர்ந்த அய்யன்துரை, ரங்கசாமி மற்றும் கடம்பூரான் ஆகிய மூன்று முக்கிய நபர்கள் சரணடைந்தனர். வீரப்பனின் சகோதரனான அர்ஜுனன் குண்டு காயத்திற்குச் சிகிச்சைப் பெரும் பொருட்டு காட்டுப் பகுதியிலிருந்து வெளிவந்தபோது அவனும் மூன்று கூட்டாளிகளும் கைது செய்யப்பட்டு, 'தடா' சட்டத்தின்கீழ் காவலில் வைக்கப்பட்டனர்.

வீரப்பனும் ஏனைய நால்வரும் தப்பித்துச் சென்றுவிட்டனர். வீரப்பனின் கூட்டாளிகள் பலரை, 'தடா' சட்டத்தின் கீழ் கைது செய்ததும் அவனது சகோதரன் அர்ஜுனனைக் கைது செய்ததும் வீரப்பனுக்கு நெருக்கடியை உருவாக்கியுள்ளது. இக்கூட்டத்தினரைத் தேடிக் கண்டுபிடிக்கும் பணி, தொய்வில்லாமல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தற்போது வீரப்பன் சுற்றி வளைக்கப்பட்டு, தனிமைப்படுத்தப்பட்டு, மனமொடிந்த நிலையில் உள்ளான். இப்பணி விரைவில் முடிக்கப்பட்டு விடுமென அரசு நம்புகிறது.

(iii) திருக்கோயில் பாதுகாப்புப் படை:

தமிழ்நாட்டில் திருக்கோயில்கள் வழிபாட்டுத் தலங்களாக விளங்குவது மட்டுமின்றி, சமுதாயத்தினர் கூடும் மையங்களாகவும் விளங்குகின்றன. சில திருக்கோயில்களில் முக்கிய சிற்பங்கள் அமைந்துள்ளன. அவற்றில் பெரும்பாலானவை உள்ளூர் தெய்வங்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளன.

திருக்கோயில்களில் நடைபெறக்கூடிய திருட்டுக்கள், மக்களின் உணர்வுகளை எவ்வாறு பாதிக்கின்றன என்பதை

உணர்ந்து, திருக்கோயில்களையும், அவற்றிலுள்ள விலைமதிப்பு வாய்ந்த சொத்துக்களையும் பாதுகாக்கும் பொருட்டு, 'திருக்கோயில் பாதுகாப்புப் படை' என்ற பெயரில் தனிப் படை ஒன்றை அரசு ஏற்படுத்தியது. இந்தத் தனிப் படையில் 1,000 இரண்டாம் நிலைக் காவலர்களும், 3,000 முன்னாள் படை வீரர்களும் உள்ளனர். திருக்கோயில் பாதுகாப்புப் படை, திருக்கோயில்களையும் அவற்றின் சொத்துக்களையும் சிறந்த முறையில் பாதுகாத்து வருகின்றது. எனவே, திருக்கோயில்களில் நடைபெறும் திருட்டுக்களின் எண்ணிக்கையானது 1992-ல் 396 ஆக இருந்து, 1993-ல் 208 ஆகவும் 1994-ல் 100 ஆகவும் படிப்படியாகக் குறைந்துள்ளது.

(iv) பெண் காவலர்கள் :

நாடு சுதந்திரம் அடைந்த பிறகு, மகளிர் கல்விக்கு உயரிய முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இதனால், மகளிரிடையே எழுத்தறிவு பெற்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்து பணிக்குவரும் மகளிரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. ஏராளமான படிப்பறிவற்ற பெண்கள் வீட்டை விட்டு வெளியேறி சமுதாயத்தில் பயனுள்ள பணியை ஆற்றுவதற்காக முன்வருகின்றனர். 'பெண் காவலர் படை' தமிழ்நாட்டில் 1974-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. இளம் பெண்களையும், காணாமல் போன குழந்தைகளையும் மீட்டுத் தருவது, விபச்சாரத் தடுப்புச் சட்டத்தின் கீழ், திடீர் சோதனையின்போது, ஆண் காவலர்களுக்கு உதவுவது, பெருங் கூட்டங்களில் பெரும்பாலும், பெண்கள் கூடியுள்ள பகுதிகளில் ரோந்து பணி மற்றும் பந்தோபஸ்து பணியில் உதவுவது, விமான நிலையத்திலும், துறைமுகத்திலும், பெண் பயணிகளைச் சோதனையிடும் பணியில் உதவுவது, காவல் தொலைபேசி நிலையங்கள் முதலியவற்றை நிருவகிக்கும் பணியில் உதவுவது ஆகியவை பெண் காவலர்களின் முக்கிய பணிகளாகும்.

விரைவான தொழில் நுட்பக் கண்டுபிடிப்புகள், சமுதாயத்தின் வாழ்க்கை முறையையே மாற்றிவிட்டன. இதன் காரணமாக இவ்வாறு மாறி வரும் காலத்திற்கு ஏற்ப, தங்களது குடும்ப வசதிகளைப் பெருக்கி குடும்பங்களை நடத்துவதற்காக பெருவாரியான பெண்களுக்கு ஏதாவதொரு வேலையைத் தேடிக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டு வருகிறது. இதனால், பெண் காவலர் படையின் பணி அதிகரித்துள்ளது. குறைவாக உள்ள பெண் காவலர்களால் அதிகரித்து வருகின்ற பணிச்சுமையை சமாளிக்க முடியவில்லை. எனவே, பெண்கள் நலனுக்கென்றே பெண்களை மட்டுமே கொண்டு செயல்படும் காவல் நிலையம் ஒன்றை ஏற்படுத்த அரசு முடிவு செய்தது. அரசு எடுத்த இந்த புதுமையான முடிவின் அடிப்படையில், முதன் முதலாக 14-4-1992-ஆம் நாளன்று, அதாவது தமிழ்ப்புத்தாண்டு நாளன்று, சென்னையில் உள்ள ஆயிரம் விளக்குப் பகுதியில் முதல் அனைத்து மகளிர் காவல் நிலையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இந்த முன்னோடித்திட்டம், அனைத்து வகையிலும் முற்றிலும் வெற்றிபெற்றமையால், பெண்கள் மட்டுமே கொண்டு செயல்படும் அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், 1993-ல் ஒன்பதும் 1994-ல் இருபத்தொன்றும் தொடங்கப்பட்டன. இவ்வாறாக, தற்போது தமிழ்நாட்டில் பெண்களை மட்டுமே கொண்டு செயல்படும் அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் 31 உள்ளன. அவற்றில் மூன்று சென்னை மாநகரில் உள்ளன.

இந்த அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், பெண்கள் தங்களின் உரிமைகளை உணரச் செய்வதில் வெற்றி கண்டுள்ளன. மேலும், இவை, பெண்களின் குறைகளையும், இன்னல்களையும் அனுதாபத்துடன் கேட்டறிந்து, அவற்றைப் போக்க முற்படும் நிலையங்களாகவும் திகழ்கின்றன.

1995 ஏப்ரல் 6]

இத்திட்டம், உலக அளவில் பாராட்டுதலைப் பெற்று இந்நாட்டின் பிற மாநிலங்களிலும் பிற நாடுகளிலும் பின்பற்றப்படுகிறது. மத்திய சமூக நல வாரியத் தலைவர், அந்தந்த மாநிலங்களிலுள்ள பெண்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து, போக்கும்பொருட்டு, பிற மாநிலங்களிலும் இத்திட்டத்தை உருவாக்கிச் செயல்படுத்துமாறு ஆலோசனை நல்கியுள்ளார்.

பெண் காவலர்கள் படையின் திறமையை அதிகரிக்கும் பொருட்டு, மாவட்டத்திற்கு ஒன்று என்ற விகிதத்தில் 26 பெண் துணை காவல் கண்காணிப்பாளர்கள் பதவிகளுக்கு இவ்வாண்டில் அனுமதிக்கப்பட்டது. இம்மாநிலத்தில் பெண் காவலர்கள் படையில் உள்ள அனுமதிக்கப்பட்ட மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை 01-01-1995 அன்று நிலவரப்படி, 2,877 ஆகும். இவர்களில் 26 துணைக் கண்காணிப்பாளர்களும், 31 ஆய்வாளர்களும், 118 உதவி ஆய்வாளர்களும், 103 தலைமைக் காவலர்களும், 2,599 காவலர்களும் அடங்குவர்.

(v) ரயில்வே காவல் படை :

அரசு ரயில்வே காவல் படையானது, தமிழ்நாட்டு காவல் படையின் கீழ் வரும் ஓர் அமைப்பாகும். தமிழ்நாட்டுக்குள் அமைந்துள்ள ரயில்வே பகுதி முழுவதும் இப்படையின் அதிகார வரம்பிற்குட்பட்டதாகும். இப்படையானது, இரயில்வே பாதுகாப்புப் படை பிரிவினின்று வேறுபட்டதாகும். ஏனெனில், காவல் துறைக்குள்ள அதிகாரங்கள் எதுவுமின்றி இரயில்வே சொத்துக்களைப் பாதுகாப்பது மட்டுமே இரயில்வே பாதுகாப்புப் படைப் பிரிவின் தலையாயப் பணி ஆகும். எனவே, குற்றங்கள் ஏற்படா வண்ணம் தடுப்பது/ கண்டுபிடிப்பது, சட்டம், ஒழுங்கினைப் பராமரிப்பது, ரயில்வே சொத்துக்களையும், அமைப்புகளையும்

பாதுகாப்பது ஆகியவை தொடர்பாக இந்தியத் தண்டனை முறைச் சட்டம், குற்றவியல் நடைமுறை விதிக்கோவை, இந்திய இரயில்வே சட்டம் மற்றும் ஏனைய சட்டங்களின் கீழ் நடவடிக்கை எடுக்க ரயில்வே நிருவாகம், அரசு ரயில்வே காவல் படையைப் பயன்படுத்துகிறது. அரசு ரயில்வே காவல் படை, ரயில்களில் பயணம் செய்யும் பயணிகளுக்கும், ரயில்வே பிளாட்பாரங்களில் பொது மக்களுக்கும் பாதுகாப்பு அளிக்கின்றது.

இவ்வாண்டில், குற்றம் நடைபெற வாய்ப்புள்ள பகுதிகள்/இரயில்கள் கண்டறியப்பட்டு, அந்தப்பகுதிகளில்/ரயில்களில் காவலர் முறைப்பணியும், ரோந்துப் பணியும் வலுப்படுத்தப்பட்டது. குற்றத் தடுப்பு சிறப்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டன. சில முக்கிய வழக்குகள் தொடர்பாக சந்தேகிக்கப்படுபவர்களைத் தேடிக் கண்டுபிடித்து, புல னாய்வு செய்யும் பொறுப்பு இக்குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தத் தீவிர நடவடிக்கைகளின் காரணமாக, குற்ற நிகழ்வுகளின் எண்ணிக்கையானது கணிசமான அளவு குறைந்துள்ளது. அதாவது குற்ற நிகழ்வுகளின் எண்ணிக்கை 1993-ஆம் ஆண்டில் 451 ஆக இருந்து, 1994-ஆம் ஆண்டில் 339 ஆகக் குறைந்துள்ளது.

அரசு இரயில்வே காவல்படை வகையில் ஆகும் மொத்தச் செலவை, தமிழ்நாடு அரசும் இரயில்வே நிருவாகமும் சம அளவில் பங்கிட்டுக் கொள்கின்றன.

(vi) விமான நிலையப் பாதுகாப்பு :

விமான நிலையப் பாதுகாப்புப் பணியாளர்கள், விமானக்கடத்தல் தடுப்பு நடவடிக்கைகள், விமானம் நிறுத்துமிடங்களின் பாதுகாப்பு மற்றும் ஏனைய வசதிகள் ஆகியவற்றுக்குப் பொறுப்பு வகிக்கின்றனர். மேலும், இப்படைப்பிரிவு சுமார் 14 கி.மீ. அளவுள்ள புற எல்லைப்

பகுதியில் ரோந்து பணியையும் பாதுகாப்புப் பணியையும் மேற்கொள்கிறது.

விமான நிலையப் பாதுகாப்புப் பிரிவு, மத்திய அரசின் புதுடில்லியில் உள்ள சிவில் விமானப் பிரிவு (Bureau of Civil Aviation) பிறப்பிக்கும் கட்டளைகளுக்கிணங்க செயல்பட்டு வருகிறது.

காவல்துறை ஆய்வாளர் ஒருவர் பொறுப்பின்கீழ், திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள விமான நிலையங்களிலும் இப்படைப் பிரிவு செயல்பட்டு வருகிறது. இப்பிரிவு விமான நிலையப்பகுதியின் பாதுகாப்புப் பணிகளையும் விமான கடத்தல் தடுப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறது.

விமான நிலையத்திற்கென்றே, மீனம்பாக்கம் விமான நிலையக் காவல் நிலையம் என்ற தனிப்பட்ட காவல்நிலையம் ஒன்றை 23-01-1995 அன்று தமிழ்நாடு காவல் துறைத் தலைமை இயக்குநர் திறந்து வைத்தார். இக்காவல் நிலையம், காவல் துறைத் துணை ஆணையாளரின் (பாதுகாப்பு மற்றும் விமானக் கடத்தல் எதிர்ப்பு நடவடிக்கை) கண்காணிப்பின்கீழ் செயல்பட்டு வருகிறது. இது சட்டம்-ஒழுங்கு, குற்றவியல், போக்குவரத்து, பாஸ்போர்ட் சட்டம் உட்பட்ட ஏனைய சட்டங்கள் தொடர்பான பணிகளுக்கும் பொறுப்பு வகிக்கிறது.

(vii) கடலோரப் பாதுகாப்புப் பிரிவு:

தமிழ்நாடு சுமார் 1000 கி.மீ. நீளமுள்ள கடற்கரையைக் கொண்டுள்ளது. பெட்ரோலியப் பொருட்கள், மருந்துகள், ஆயுதங்கள், வெடிமருந்துப் பொருட்கள் மற்றும் ஏனைய இன்றியமையாப் பொருட்கள் இலங்கைக்குக் கடத்தப் படுவதை கட்டுப்படுத்துவதற்காகவும், இலங்கையிலிருந்து

போராளிகள் இந்தியாவுக்குள் நுழைவதைத் தடுப்பதற்காகவும், கடலோரப் பாதுகாப்புப் பிரிவு ஒன்று ரூ. 3.5 கோடி செலவில் 61 சோதனைச் சாவடிகளுடன் ஏற்படுத்தப்பட்டது. இப்பிரிவு, ஒரு காவல்துறைத் துணைத் தலைவரின் கீழ் இயங்குகிறது. அவருக்கு காவல்துறைக் கண்காணிப்பாளர் ஒருவர், காவல் துறை கூடுதல் கண்காணிப்பாளர்கள் இருவர், நான்கு துணைக் கண்காணிப்பாளர்கள், 17 ஆய்வாளர்கள், 34 உதவி ஆய்வாளர்கள், 120 தலைமைக் காவலர்கள், 900 காவலர்கள் ஆகியோர் உதவி புரிகின்றனர். இப்பிரிவைச் சேர்ந்தவர்கள் பயன்படுத்திக்கொள்வதற்காக, இரண்டு கார்கள், 23 ஜீப்புகள் 34 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 300 சைக்கிள்களும் மற்றும் ஏனைய தகவல் தொடர்பு வசதிகளுக்கும் அனுமதியளிக்கப்பட்டுள்ளன.

கடலோரப்பகுதி முழுவதும், சென்னை, நாகப்பட்டினம், இராமநாதபுரம், தூத்துக்குடி ஆகியவற்றைத் தலைமையிடங்களாகக் கொண்டு, நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இப்படைப்பிரிவின் செயல்பாடு கடலை அடிப்படையாகக் கொண்டுள்ள தொழிற்சாலைகளும், மின் உற்பத்திக்கான திட்டப்பணிகளும் செழித்து வளர ஏற்ற அமைதியான சூழ்நிலை உருவாக்க உதவும்.

(viii) துப்பறியும் நாய்ப்படை :

துப்பறியும் நாய்ப்படை, குற்றங்களைக் கண்டுபிடிப்பதில் மிக முக்கிய பங்கு வகித்து குற்றப்புலனாய்வுப் பணியாளர்களுக்கு உதவிபுரிகிறது. எனவே, தமிழ்நாடு காவல்துறை அவற்றின் பணிகளை நன்கு பயன்படுத்திக்கொள்கிறது. தமிழ்நாட்டில் துப்பறியும் நாய்ப்படை, சென்னை, வட ஆர்க்காடு அம்பேத்கார், தென் ஆர்க்காடு வள்ளலார், சேலம், கோயம்புத்தூர்,

1995 ஏப்ரல் 6]

திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை, இராமநாதபுரம், சிதம்பரனார், திருநெல்வேலி கட்டபொம்மன் ஆகிய 11 மாவட்டங்களில் உள்ளன. ஈரோட்டில், மற்றொரு துப்பறியும் நாய்ப்படை ஒன்றை ஏற்படுத்தவும் அரசு அனுமதியளித்துள்ளது. மிக முக்கியப் பிரமுகர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப் பொறுப்பு வகிக்கும் சிறப்புப் பாதுகாப்புப் படைப்பிரிவு 7 மோப்ப நாய்களை வாங்கியுள்ளது. பாதுகாப்பிற்கு உட்பட்ட பகுதிகளில் குண்டு/வெடி மருந்துப் பொருட்கள் ஆகியவற்றைக் கண்டுபிடிக்கும் பணிகளில் அவை ஈடுபடுத்தப்படுகின்றன.

1994-ஆம் ஆண்டில், 1178 குற்றவியல் வழக்குகளில், இந்த துப்பறியும் நாய்ப்படை பிரிவுகள் பயன்படுத்தப்பட்டு, 448 வழக்குகளில் துப்புத்துலங்க இவற்றின் பணி மிகவும் உதவியாக இருந்தது.

(ix) குதிரைப்படை :

குதிரைப்படை ஆங்கிலேயர் நிருவாகம் நமக்கு விட்டுச்சென்ற ஒரு பயனுள்ள அமைப்பாகும். இது போக்குவரத்தையும் கூட்ட நெரிசல்களையும் முறைப்படுத்துவதோடல்லாமல், சில விழாக் கொண்டாட்டத்தின்போதும், இப்படை பயனுள்ள வகையில் பணியாற்றி வருகிறது. சென்னையிலுள்ள குதிரைப்படைப் பிரிவில் 34 குதிரைகள் உள்ளன. கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் 10 குதிரைகள் உள்ளன. அவற்றின் பயன்பாட்டை அறிந்த பின்னர், இவ்வாண்டில் 177 சமயங்களில் அவை பயன்படுத்தப்பட்டன.

(x) ஒழுக்கக்கேடு தடுப்புப் பிரிவு :

1956-ஆம் ஆண்டு பெண்களையும் சிறுமியர்களையும், விபச்சாரத்தில் ஈடுபடுத்துவதைத் தடுத்தல் சட்டத்தை செயல்படுத்துவதே இப்பிரிவு ஏற்படுத்தப்பட்டதன்

நோக்கமாகும். சென்னை மாநகரைப் பொறுத்தவரையில், காவல்துறை உதவி ஆணையாளர் பதவித் தரத்திற்குக் குறையாத அனைத்து காவல் துறை அதிகாரி ஒவ்வொருவரும், மற்ற இடங்களைப் பொறுத்தவரையில் காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளர் பதவித் தரத்திற்குக் குறையாத காவல்துறை அதிகாரிகள் ஒவ்வொருவரும் அவரவர் அதிகார வரம்பிற்குட்ட பகுதிகளில் 1956-ஆம் ஆண்டு பெண்கள்-சிறுமியர்களை விபச்சாரத்தில் ஈடுபடுத்துவதைத் தடுத்தல் சட்டத்தின் கீழ் குற்றம் புரிபவர்களைக் கண்டு பிடிப்பதற்குரிய சிறப்புக் காவல் துறை அதிகாரி ஆவர்.

(xi) *இளங்குற்றவாளிகள் திருந்த உதவும் காவல்துறைப் பிரிவு :*

இப்பிரிவு 1960-லிருந்து சென்னையில் செயல்பட்டு வருகிறது. இந்தியக் குற்றவியல் தண்டனை விதிக்கோவை, மதுவிலக்குச் சட்டம், விபச்சாரத் தடுப்புச் சட்டம், சூதாட்டச் சட்டம் ஆகியவற்றின் கீழ் தண்டனை அளிக்கப்படாத, ஆதரவற்ற 16 வயதிற்குக் குறைந்த இளம் குற்றவாளிகள் தொடர்பான நடவடிக்கைகளை இப் பிரிவு மேற்கொள்கிறது. மேற்சொன்ன குற்றங்களைப் புரிந்த இளங்குற்றவாளிகள் மீது உள்ளூர் காவல்துறை நடவடிக்கை எடுக்கிறது.

இளங்குற்றவாளிக்கு உதவும் காவல் துறைப் பிரிவு, இத்தகைய சிறுவர் சிறுமிகளைப் பிடிக்க நேரிடும்போது அவர்களின் பெற்றோர்களிடம் அல்லது உள்ளூர் பாதுகாப்பாளர்களிடம் ஒப்படைக்கிறது. மேலும், இப்பிரிவு, பெருமளவில் குற்றம் நடைபெறுவதற்கு வாய்ப்புள்ள பகுதிகளான குடிசைப்பகுதி, இரயில் நிலையங்கள், திரையரங்குகள், விழாக்கள் நடைபெறும் இடங்கள் முதலியவற்றில் ரோந்துப் பணிபுரிந்து கவனிப்பாரற்ற அனாதைகள், வீட்டைவிட்டு ஓடிவந்த சிறுவர் சிறுமி ஆகியோரை அவர்கள் சமூகவிரோதச் சக்திகளின் கைகளில்

TRUTH ALONE TRIUMPHS

சிக்கிவிடாமல் பிடித்து காப்பாற்றுகிறது. 1994-ஆம் ஆண்டில், இப்பிரிவு சென்னையில் 210 இளங்குற்றவாளிகளை வளைத்துப் பிடித்து, அவர்களில் 194 பேர்களை, அவர்கள் பெற்றோர்களிடம் திருப்பி ஒப்படைத்தது. 16 பேர்கள், பல்வேறு பாதுகாப்பு இல்லங்களுக்கு அனுப்பப்பட்டனர்.

மேலும், இத்தகைய பிரிவுகள், கோயம்புத்தூர், சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களிலும் உள்ளன. இப்பிரிவுகள் அனைத்தும் சேர்ந்து ஆண்டொன்றுக்கு சுமார் 500 இளங்குற்றவாளிகளை வளைத்துப் பிடிக்கின்றன. இளங்குற்றவாளிக்கு உதவும் இத்தகைய பிரிவு ஒவ்வொன்றும் காவல்துறை ஆய்வாளர் ஒருவரின் தலைமையில் இயங்குகின்றன. அவர்களுக்கு காவல்துறை உதவி ஆய்வாளர் ஒருவரும், 6 தலைமைக் காவலர்களும் உதவுகின்றனர்.

(xii) காவல்துறையினர் சுருக்கெழுத்துப் பிரிவு :

இப்பிரிவின் தலைமையகம் சென்னையில் உள்ளது. இதன் கிளைகள், பொதுக்கூட்டங்களில் பேசப்படும் மறுப்பிற்குரிய வரம்புமீறிய உரைகளை முறையாகக் கண்காணித்துக் குறிப்பெடுத்து வருகிறது. இப்பிரிவில் 30 முதுநிலை நிருபர்கள், 48 இளநிலை நிருபர்களும் உள்ளனர்.

இப்பிரிவு, தனது இயல்பான பணிகளோடு, மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறை அதிகாரிகளின் மாநாடுகள்; சிறப்புப் பாதுகாப்புப் பிரிவு உறுப்பினர்களுக்கும், காவலர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெறுகின்றவர்களுக்கும், மிகவும் முக்கியப் பிரமுகர்கள் ஆற்றிய சிறப்பு உரைகள் ஆகியவை உள்பட 1858 சிறப்பு நிகழ்ச்சிகளிலும் குறிப்பெடுத்துள்ளது.

மறுப்பிற்குரிய உரைகள், பிரிவினை வாதம், பழிதூற்றல் போன்றவற்றில் சம்பந்தப்பட்ட பேச்சாளர்கள் மீது 31 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

TRUTH ALONE TRIUMPHS

(xiii) ஊர்க் காவல் படை :

ஊர்க் காவல் படை முழுக்க முழுக்க ஒரு தொண்டு அமைப்பாகும். இப்பிரிவு, காவல்துறைக்குத் துணைப்படையாக விளங்குகிறது. போக்குவரத்து நெரிசல் முனைகளை முறைப்படுத்தல், முறைப்பணியாற்றுதல், இரவுநேரப் பாதுகாப்புப் பணிகள், கோயில் திருவிழாக்கான 'பந்தோபஸ்து பணிகள்', அழைப்பாணைகள் சார்வு செய்தல், புள்ளிவிவரங்கள் திரட்டுதல், மீட்பு நடவடிக்கைகள், தீயணைப்புப் பணிகள் முதலியவற்றில் ஊர்க்காவல் படையினர் ஈடுபடுத்தப்படுகின்றனர். கொடி நாள் வசூல் பணியிலும் அவர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர். மேலும், மிகவும் முக்கியப் பிரமுகர்களின் வருகையின் போது 'பந்தோபஸ்து' ஏற்பாடுகள் செய்வதற்கும், பெருங் கூட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் அவர்கள் பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றனர். இவர்கள் மாநிலத்தின் நல நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவதோடு சமுதாய நல்லிணக்கத்தை மேம்படுத்தவும் உதவுகின்றனர்.

இந்த அமைப்பு ஒரு காவல்துறைத் தலைவர் தலைமையில் இயங்குகிறது. பல்வேறு வாழ்க்கைத் தொழில், வாணிகம் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளோர்களிடையேயிருந்து தெரிவு செய்யப்பட்ட 10,010 ஆண்களும், 550 பெண்களும் இந்த ஊர்க்காவல் படையில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஊர்க் காவல் படையில் மொத்தம் 8319 ஆண்களும், 360 பெண்களும் இருந்தனர். ஆண்களில் 1691 இடங்களும், பெண்களில் 190 இடங்களும் காலியாக உள்ளன.

ஊர்க்காவல் படை தொடர்பாக சில இனங்களுக்காகும் செலவில் 50 சதவீதத்தை மத்திய அரசு ஏற்றுக்கொள்கிறது. ஊர்க்காவல் படையினரில் சிறந்த முறையில் கடமை புரிந்தமைக்காக, 1994-ஆம் ஆண்டில், 5 பேர்களுக்கு முதலமைச்சரின் பதக்கங்கள் வழங்கப்பட்டன. இருவருக்கு

மதிப்புமிக்க பணிக்காக குடியரசுத்தின பதக்கங்கள் வழங்கப்பட்டன.

ஊர்க்காவல் படையினருக்குப் பயிற்சி அளிப்பதற்காக, உதகமண்டலத்தில் ஊர்க்காவல் படைப்பயிற்சி நிறுவனம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

(xiv) மக்கள் பாதுகாப்புப் படை :

பகை காரணமாய் தாக்குதல் நடைபெறும் காலங்களில் சொத்துக்கள் சேதமாவதைக் குறைப்பதும் தொழில் உற்பத்தியைத் தொடர்ந்து பராமரிப்பதும் மக்கள் பாதுகாப்புப் படையினரின் நோக்கங்களாகும். மக்கள் பாதுகாப்பு படையினர் தொண்டு அடிப்படையில் பல்வேறு ஆக்கப்பூர்வ நடவடிக்கைகளான இயற்கையின் சீற்றங்களின்போது மீட்பு, துயர் துடைப்பு ஆகிய பணிகளில் அமர்த்தப்படுகின்றனர். சென்னை மாநகரம் மற்றும் கல்பாக்கம் ஆகியவை முதல்வகை (A) மக்கள் பாதுகாப்பு நகரமாக அறிவிக்கப்பட்டுள்ளன.

மாநிலத்தில் வெள்ளம்/புயல் மீட்புத்துயர் துடைப்பு பணிகளின்போது காவல்துறைத் தலைவர் (ஊர்க்காவல் படை) மக்களுக்கு பாதுகாப்பு உணர்வினை அளிக்கிறார். மக்கள் பாதுகாப்புப்படை இயக்குநராகவும் இவர் செயல் படுகிறார். ஆண்டு தோறும் (அக்டோபர் முதல் ஜனவரி வரை) வட கிழக்குப் பருவமழை காலத்தில் வெள்ளம், புயல் ஏற்படும் போது நடத்தப்பெறும் மீட்பு, துயர் துடைப்புப் பணிகளை மேற்பார்வையிட மாநில வெள்ளக்கட்டுப்பாட்டு மையம் ஒன்று இயங்கி வருகிறது. இயற்கையின் சீற்றத்தால் கடும்துன்பம் ஏற்படுவதைக் களைய எதிர்கொள்ளும் திறன் கொண்ட பயிற்சி பெற்ற காவலர்களுடன் கடற்கரையோர மாவட்டங்களில் வாழும் மக்கள் பயன்பெறும் வகையில் காற்றடைப்புப் படகுகள் மற்றும் சிறப்பு மீட்பு ஊர்திகளும் வழங்கப்பட்டுள்ளன.

(xv) குடியுரிமை பாதுகாப்பு :

தீண்டாமையை ஒழிக்கவும், ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கு இழைக்கப்படும் கொடுமைகளை அகற்றவும், உள்ளூர் காவல்துறையினரின் காவலர்கள் உதவியுடன், 1976-ல் திருத்தம் செய்யப்பட்டதான 1955 ஆம் ஆண்டு குடியுரிமை பாதுகாப்புச்சட்டத்தையும், 1989 ஆம் ஆண்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (கொடுமைகளைத் தடுத்தல்) சட்டத்தையும் செயல் படுத்துவதே குடியுரிமை பாதுகாப்புப் பிரிவின் பணியாகும். சென்னை மாநகர் நீங்கலாக, அனைத்து காவல் மாவட்டங்களிலும் காவல்துறை ஆய்வாளர் தலைமையில் 25 இயலூர்தி காவல் பிரிவுகள் இயங்கி வருகின்றன. சென்னை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் மூன்று காவல்துறை துணைக் கண்காணிப்பாளர்களால் இந்த 25 பிரிவுகளின் பணிகள் மேற்பார்வையிடப்படுகின்றன. இத்தகைய காவல் பிரிவுகளுக்குக் கூடுதலாக தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை மாநகர், திருநெல்வேலி கட்டபொம்மன், தென் ஆர்க்காடு வள்ளலார் மற்றும் கோயம்புத்தூர் (ஊரகம்) ஆகிய மாவட்டங்களில் 6 குற்ற வழக்குத் தொடர்பு பிரிவுகளும் இயங்கி வருகின்றன.

1955-ஆம் ஆண்டு குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம், (ஆதிதிராவிடர், பழங்குடியினர் கொடுமைகளைத் தடுத்தல்) சட்டத்தின் கீழ் 1993-ல் 1112 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்ததற்கு மாறாக 1994-ஆம் ஆண்டில் 998 வழக்குகள் பதிவுசெய்யப்பட்டன. குடியுரிமைப் பாதுகாப்பு சட்டம் மற்றும் (ஆதிதிராவிடர், பழங்குடியினர் கொடுமைகளைத் தடுத்தல்) சட்டம் பற்றி பொதுமக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்தியதாலும், கிராம சமுதாய தலைவர்கள் நல்கிய ஒத்துழைப்பினாலும் இவ்வகையிலான வழக்குகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

1995 ஏப்ரல் 6]

பொருளாதார நிபுணர் ஒருவர் மற்றும் சமூகவியல் நிபுணர் ஒருவர் ஆகியோரைக் கொண்ட ஆராய்ச்சி பகுப்பாய்வுப் பிரிவு ஒன்று ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கு எதிரான கொடுமைகள் நடைபெற வாய்ப்புள்ள கிராமங்களைக் கண்டறிய மாதிரி ஆய்வுகள் நடத்தி வருவதுடன் இச்சட்டத்தை நன்முறையில் செயல்படுத்துவதற்கும் உதவுகிறது.

IV. காவல் துறையை நவீனப்படுத்துதல்.

நவீனப்படுத்துதல் என்பது ஐயத்திற்கு இடமின்றி, ஒரு புதிய கருத்தோ, ஒரு முறை மட்டுமே தோன்றும் கருத்தோ அல்ல. மாறாக, இது ஒரு தொடர்ச்சியான வழிமுறையாகும். நவீனப்படுத்தும் திட்டம், மாநில நிதியைக் கொண்டும், மத்திய அரசின் நிதியுதவியைக் கொண்டும் செயல்படுத்தப்படுகிறது. நவீனப்படுத்துவது தற்போது மிகவும் இன்றியமையாததாய் உள்ளது. ஏனெனில், குற்றங்களின் தன்மைகளும், குற்றவாளிகளின் நடவடிக்கைகளும் மற்றும் பொதுவாக சமுதாய அமைப்பும் அடிக்கடி மாறிக்கொண்டு வருகின்றன. மேலும், தற்போது பின்பற்றப்படுகிற முறைகளும், உத்திகளும், நடைமுறைகளும், பயன்படுத்துகிற சாதனங்களும் மிகவும் பழமையானவையாக உள்ளதோடு, தற்போதைய சூழ்நிலையையும் சிக்கலான பிரச்சினை களையும் உரிய முறையில் சமாளிப்பதற்கு அவை போதுமானவையாகவும் இல்லை.

அறிவியல்-தொழில் நுட்பவியல் வேகமாக வளர்ச்சியடைவதும், அவை நாடு முழுவதும் விரைவாகப் பரவுவதும், சமூக விரோத சக்திகளும், சட்டத்தை மீறுபவர்களும் தாங்கள் காலங்காலமாகப் பயன்படுத்தி வந்த ஆயுதங்களிலிருந்தும், குற்றங்கள் புரியும் முறைகளிலிருந்தும் மாறுவதற்கு வழிகோலுகின்றன. இந்த நெறிபிறழும் சக்திகளை முழுவதுமாகக் களைவதற்கு, காவல்

துறைக்கு நவீன ஆயுதங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதோடு மட்டுமின்றி, அவை நவீன தொழில் நுட்பத்துடன் கூடியவையாகவும் இருக்க வேண்டும்.

மத்திய அரசும், மாநில அரசும் 50:50 என்ற அடிப் படையில் ரூ. 3.95 கோடி ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட துடன், மாநில காவல் துறையை நவீனப்படுத்துவதற்காகப் பல்வேறு திட்டங்களுக்கு, அரசு ரூ. 43.08 கோடி ரூபாயை இதுவரை அனுமதித்துள்ளது. தமிழ்நாடு அரசு, காவல் துறையை நவீனப்படுத்துவதற்குத் தாராளமாக நிதி அனுமதித்துள்ளது. நவீனப்படுத்தும் நமது குறிக்கோளை அடைவதற்கு நிதி ஆதாரங்களில் காணப்படும் இடர்ப்பாடுகள் எவ்விதத்திலும் தடையாக இராது.

(i) தகவல் தொடர்பு :

நாளுக்கு நாள் தேவைகள் அதிகரித்து வரும் சூழ்நிலைகளுக்கேற்ப, தகவல்களைச் சேகரிக்கவும், தகவல்களை அனுப்பவும், பெறப்படும் தகவல்கள் குறித்து விரைவில் நடவடிக்கை எடுக்கவும் பொருத்தமான மேல் நடவடிக்கை எடுக்கவும் இயலும் நோக்கத்துடன் நான், நவீனமாக்கும் திட்டத்தைத் தொடங்கியுள்ளேன். இந்நோக்கத்தை எய்துவதற்கு, பழைய அனலாக் நுண்ணலை அமைப்பு முறையுடன் கூடிய தற்போதைய நுண்ணலைத் தகவல் தொடர்பு அமைப்பிற்குப் பதிலாக, நவீன டிஜிடல் நுண்ணலை அமைப்பு முறையை நிறுவுவதற்கும், ஐந்து தகவல் அனுப்பும் நிலையங்களுக்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். இந்த ஐந்து தகவல் அனுப்பும் நிலையங்களும், நீலகிரி மாவட்டத்தில் துரமுல்லாவிலும், நெல்லை-கட்டபொம்மன் மாவட்டத்தில் மாஞ்சோலை யிலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் வெள்ளிமலையிலும், நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டத்தில் மயிலாடுதுறையிலும், திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் அறங்கானலிலும் அமைக்கப்பட உள்ளன.

1995 ஏப்ரல் 6]

காவல் துறை வானொலிப் பிரிவு, முக்கியமான தகவல்களை விரைவாகவும் உடனுக்குடனும் அனுப்புவதற்குரிய மற்றொரு அமைப்பாகும். மிகப்பெரிய மாவட்டத்திற்கு அதிமீவுயர் அலை அமைப்பு முறைகளும், மாவட்டத் தலைமையிடங்களுக்கு பல்வழி அதிமீவுயர் அலை அமைப்பு இணைப்புகளும் ஏற்படுத்தியுள்ளதன் மூலம், வானொலிப் பிரிவு கடந்த ஆண்டுகளில் தனது தொழில் நுட்பத் திறனைக் குறிப்பிடத்தக்க அளவிற்கு மேம்படுத்தியுள்ளது. மொத்தம் 1905 கிலோ மீட்டர் தொலைவு வரை பணி செய்யும் வகையில், 747 கிலோ மீட்டருக்கு தொலை தூர நுண்ணலை அமைப்பு ஏற்படுத்தியதன் மூலம் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது.

பழைய அனலாக் நுண்ணலை அமைப்பு முறைக்குப் பதிலாக, டிஜிடல் நுண்ணலை அமைப்பு முறையை நிறுவுவதற்கு அரசு 1991-92-ஆம் ஆண்டு 972.36 இலட்சம் ரூபாயை அனுமதித்துள்ளது. இத்திட்டத்தின் முதற்கட்டப் பணியாக சென்னையிலிருந்து கொடைக்கானலுக்கு அளிக்கப்பட்ட இணைப்பினை நான் 24-10-94 அன்று தொடங்கி வைத்தேன். இத்திட்டத்தின் 2-ஆம் கட்டப் பணியின் கீழ், குறிப்பிட்ட கால வரம்பிற்குட்பட்ட பல்வழி அணுகுமுறையைப் புதிதாக ஏற்படுத்தப்பட்ட இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர், காமராஜர், திருநெல்வேலி-கட்டபொம்மன், திருவண்ணாமலை-சம்புவராயர் ஆகிய மாவட்டங்களுக்கு அரசு அனுமதித்துள்ளது.

காவல் துறை வானொலிப் பிரிவின் மாபெரும் அதிமீவுயர் அலை அமைப்பு முறை வசதியுள்ள கருவிகள், 1,032 காவல் நிலையங்கள், 105 துணைக் கோட்டங்கள், 29 கட்டுப்பாட்டு அறைகள், 461 நடமாடும் வாகனங்கள், 422 மற்ற நிலையான அமைப்புகள் ஆகியவற்றில் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன.

[1995 ஏப்ரல் 6

(ii) கணிப்பொறி மயமாக்குதல் :

காவல் துறையின் முக்கிய நடவடிக்கைகள் அனைத்தையும் கணிப்பொறி மயமாக்குவதற்கு விரிவான அணுகு முறை மேற்கொள்ளப்பட்டுள்ளது. காவல் துறை தலைமை இயக்குநர், காவல் துறை கூடுதல் தலைமை இயக்குநர்கள் (சட்டம்-ஒழுங்கு) (தலைமையிடம்) (பணியாளர்), காவல் துறைத் தலைவர் (மதுவிலக்கு), காவல் துறைத் தலைவர் (புலனாய்வு), காவல் துறைத் துணைத் தலைவர், மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் காவல்துறைக் கண்காணிப்பாளர் பதவித் தரத்திலுள்ள அதிகாரிகள் ஆகியோரின் பயனுக்கென தனியே கணிப்பொறிகள் வழங்கப்பட்டுள்ளன. சட்டம்-ஒழுங்கு தொடர்பான தகவல்களையும், புலனாய்வு அறிக்கைகளையும் உடனுக்குடன் அனுப்புவதற்கு இயலும் வண்ணம் மாநில அளவிலான கம்பியில்லாத் தந்தி அமைப்பு முறையில், கம்பியில்லாத் தந்தி அமைப்பின் மூலம் இந்தக் கணிப்பொறிகள் இணைக்கப்படவுள்ளன. தேசிய மற்றும் மாநில அளவிலான அமைப்பிற்குள் வரும், குற்றம்-குற்றவாளிகள் குறித்த தகவல் முறையைக் கையாளுவதற்கு, மாநிலக் குற்றப்பதிவேடுகள் பீரோவுக்கும், மாவட்ட குற்றப் பதிவேடுகள் பீரோவுக்கும் தக்க முறையில் கணிப்பொறி அமைப்பு முறை வகை செய்யப்பட்டுள்ளது.

பரந்த அளவில் முக்கியத்துவம் வாய்ந்த இரு முன்னோடித் திட்டங்களும் தொடங்கப்பட்டுள்ளன. முதல் திட்டம், விரல் ரேகைப் பதிவில் கணிப்பொறி மயமாக்கும் செயல்முறை தொடர்பானதாகும். மற்றொரு திட்டம், இம் மாநிலத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட நான்கு காவல் நிலையங்களில் இருமொழி (ஆங்கிலம்/தமிழ்) கணிப்பொறிகளை நிறுவும் திட்டமாகும். இது வெற்றிகரமாகச் செயல்படுமாயின் மாநிலத்தின் அனைத்துக் காவல் நிலையங்களிலும் படிப்படியாக கணிப்பொறிகளை நிறுவுவதற்குப் பயனுள்ளதாக இருக்கும்.

1995 ஏப்ரல் 6]

கைவிரல் ரேகைப் பதிவுகளைத் தானாகவே கண்டுபிடிப்பதற்காக, காவல் துறை கணிப்பொறி தகவல் தொடர்பு மையத்தில் “அங்குலி முறை ” முன்னோடித் திட்டமாகக் அமைக்கப்பட்டுள்ளது.

V. சட்டம் - ஒழுங்கு:

மாநிலத்தில் சட்டம்-ஒழுங்கைப் பராமரிப்பது, மாநில அரசின் முக்கிய பொறுப்பாகும். தமிழ் நாட்டில் பெரும்பாலும் அமைதி நிலவி வருகிறது. மற்ற மாநிலங்களைப் போலன்றி, இம்மாநிலம் கிளர்ச்சி கொந்தளிப்பின்றி உள்ளது. எடுத்துக்காட்டாக, அயோத்தியில் 6-12-1992 அன்று பாபர் மசூதி இடிக்கப்பட்டதால், இன உணர்வு தூண்டப்பட்டு நாட்டில் வகுப்புவாத கலவரமும், வன்முறைச் சம்பவங்களும், தீ வைப்புச் சம்பவங்களும் நடைபெற்றபோது, தமிழ்நாடு மட்டும் ஒரு சில சிறு சம்பவங்கள் தவிர, அமைதிப் பூங்காவாகத் திகழ்ந்தது. இதேபோன்று காவிரி நீர்ப் பிரச்சினை காரணமாக கருநாடக மாநிலம் கொந்தளித்து கலவரமடைந்த நிலையில் இப்பிரச்சினையில் அதிகமாக பாதிக்கப்பட்ட தமிழ்நாடு, பெரிய சம்பவங்கள் எதுவும் நேராமல் நிலைமையைக் கட்டுக்குள் வைத்திருந்தது. மேலும், முரண்பாடான இரு பெரும் பிரிவுகளான பாரதீய ஜனதா கட்சியும் அதன் கூட்டணிக் கட்சிகள் ஒரு பக்கமும், இஸ்லாமியர்கள் மற்றொரு பக்கமும் எவ்வித மோதல்களின்றியும் பொதுமக்களுக்குத் தொல்லைகள் ஏற்படாத வகையிலும் மிகப்பெரும் ஊர்வலங்களையும், விழாக்களையும், கூட்டங்களையும் நடத்தியது தமிழ்நாட்டில்தான் என்று நாம் மேலும் பெருமைப்படலாம்.

(i) இனக் கலவரங்கள் :

காவல்துறை, தேவையான முன்னறி உளவுத் தகவல் களைச் சேகரித்து, ஆண்டு முழுவதும் அமைதி நிலவச் செய்துள்ளது. நாட்டின் மற்ற பகுதிகளில் நிலவிய சூழ்நிலைகளுடன் ஒப்பிடுகையில் இது குறிப்பிடத்தக்க

மிகப் பெருஞ்சாதனையாகும். 14-8-1994 அன்று சென்னை, அண்ணா நகர் விவேகாநந்தா வித்யாலயத்திற்கு அருகில் ஜெலட்டின் குச்சிகள் வெடித்த சம்பவம், 10-10-1994 அன்று இந்து முன்னணிக் கட்சியின் மாநிலத் தலைவரான பி. இராஜகோபாலன் கொலை செய்யப்பட்ட சம்பவம் ஆகியவை திடீரென்றும், எதிர்பாராமலும், சினத்தைத் தூண்டும் வகையிலும் நடைபெற்றபோதும், அரசு, இனப் பதட்ட நிலையைப் பாராட்டத்தக்க வகையில் கட்டுப் படுத்தியுள்ளது. காவல் துறை தக்க நேரத்தில் தலையிட்டு அடக்கியதால் ஆதிதிராவிடர்கள்/பழங்குடியினருக்கும் சாதி இந்துக்களுக்கும் இடையில் நடைபெறுகிற சாதிக் கலவரங்கள் தடுக்கப்பட்டதுடன் எவ்விதப் பிரச்சனைகளும் எழாமலும் பார்த்துக் கொள்ளப்பட்டது.

(ii) தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் :

தமிழ்நாடு விடுதலைப் படையைச் சேர்ந்த இருவர் 'தடா' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டதும், அவர்களது முக்கியத் தலைவர்கள் இருவர், தென் ஆர்க்காடு-வள்ளலார் மாவட்டத்தில் 29-3-1994 அன்று பெண்ணாடத்திலும், 8-7-1994 அன்று செப்லநத்தத்திலும் குண்டுகளை எடுத்துச் சென்ற போது குண்டுவெடிப்பு விபத்து நேர்ந்து இறந்ததும், விழுப்புரம், ஆத்தூர், குடவாசல் ஆகிய இடங்களில் 1993-ஆம் ஆண்டில் நடைபெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்கும், தென் ஆர்க்காடு-வள்ளலார் மாவட்டத்தில் குள்ளஞ்சாவடி காவல் நிலையம் தாக்கப்பட்ட சம்பவத்திற்குப் பொறுப்பான தமிழ்நாடு விடுதலைப்படைக்கு மிகப் பெரிய பின்னடைவாகும்.

(iii) விவசாயிகள் நிலை :

விவசாயிகள் கிளர்ச்சி எதுவும் நடைபெறாமல் மாநிலம் முழுவதும் பெரும்பாலும் அமைதி நிலவியது. இவ்வாண்டு விரும்பத்தகாத சம்பவம் எதுவும் நடைபெறவில்லை.

1995 ஏப்ரல் 6]

(iv) மாணவர்கள் போராட்டம் :

கல்வி நிலையங்களில் தொடர்ந்து 69 சதவீத இடஒதுக்கீடு இருக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தும் பொருட்டு, கல்லூரி, பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் வகுப்புகளுக்குச் செல்வதைப் புறக்கணித்தனர். மாணவர்களில் சிலர், 1-7-1994 அன்று சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்கள் 11-7-1994 அன்று அடையாள வேலை நிறுத்தம் செய்தனர். போராட்ட நாளன்று, 67 பள்ளிகளைச் சேர்ந்த 1,10,744 பள்ளி மாணவர்களும், 53 கல்லூரிகளைச் சேர்ந்த 39,889 கல்லூரி மாணவர்களும் வகுப்புகளுக்குச் செல்வதைப் புறக்கணித்தனர். தமிழ்நாடு அரசு இட ஒதுக்கீடு சட்ட முன்வடிவிற்கு இந்தியக் குடியரசுத் தலைவர் இசைவளித்ததால், மாணவர்கள் தங்கள் போராட்டத்தைக் கைவிட்டனர்.

(v) தொழிலாளர் போராட்டம் :

இவ்வாண்டு, தொழிலாளர் போராட்டம் குறைந்த அளவில் இருந்தது. பெரிய அளவில் போராட்டம் ஏதும் நடைபெறவில்லை.

(vi) காவல் துறையின் துப்பாக்கிச் சூடு :

காவல் துறையினர் சாதாரணமாகத் துப்பாக்கிச் சூடு நடத்துவதில்லை. தவிர்க்க முடியாத கட்டாய சூழ்நிலைகளில் மட்டுமே காவல் துறையினர் இத்தகைய தீவிர நடவடிக்கையை மேற்கொள்கின்றனர். 1994-ஆம் ஆண்டில், பொது ஒழுங்கை நிலைநாட்டும் முக்கிய நோக்கத்துடனேயே 23 நேர்வுகளில் காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இவ்வாறு துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட சம்பவத்தில், பொது மக்களில் ஐவர் இறந்தனர்; 26 பேர் காயமுற்றனர்; காவலர்கள் 119 பேர் காயமுற்றனர்.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

(vii) குண்டுவெடிப்புச் சம்பவங்கள்

1993-ஆம் ஆண்டில் நாட்டு வெடிகுண்டுகள் பயன்படுத்தப்பட்ட சம்பவங்கள் 49 நிகழ்ந்திருக்க, இந்த ஆண்டில், 32 தனித்தனிச் சம்பவங்கள் நிகழ்ந்தன. இந்த 32 சம்பவங்களில், 20 சம்பவங்கள் தற்செயலாக நிகழ்ந்தன. பின்வரும் அட்டவணையில் இது தொடர்பான விவரங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

1994-ஆம் ஆண்டில் நடைபெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களின் எண்ணிக்கையைக் காட்டும் அட்டவணை:

மாவட்டங்கள்.	குண்டுவெடிப்புச் சம்பவத்திற்கான காரணம்.					
	பயங்கரவாத சம்பவங்கள்.	மக்கள் பிரிவினருக்கிடையேயான மோதல்கள்.	தற்செயலான சம்பவங்கள்.	போராட்டச் சம்பவங்கள்.	இறந்தவர்களின் எண்ணிக்கை.	காயமுற்றவர்களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
சென்னை	1	-	-	-	-	-
செங்கை-எம்.ஜி.ஆர் (கிழக்கு)	1	-	2	-	3	1
செங்கை-எம்.ஜி.ஆர் (மேற்கு)	-	-	1	-	2	1
தென் ஆர்க்காடு-வள்ளலார்	2	-	-	-	2	3
சேலம்	-	-	1	-	1	1
பெரியார்	1	-	-	-	-	-
மதுரை (ஊரகம்)	-	-	3	1	-	1
மதுரை (மாநகர்)	-	-	1	-	-	2
திண்டுக்கல்-அண்ணா	-	-	2	-	-	-
தஞ்சாவூர்	1	-	-	-	-	8
காமராஜர்	-	-	2	-	18	5
சிதம்பரனார்	-	1	3	-	-	1
திருநெல்வேலி கட்டபொம்மன்	-	-	2	-	3	1
கன்னியாகுமரி	2	2	3	-	-	5
மொத்தம்	8	3	20	1	29	29

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1995 ஏப்ரல் 6]

குண்டு வெடிப்புச் சம்பவங்களினால் 29 பேர் இறந்தனர். மேலும் 29 பேர் காயமுற்றனர். வெடிமருந்துகள் தவறாகக் கையாளப்பட்டதால் 25-11-1994 அன்று சிவகாசியில் மிகப் பெரிய வெடிவிபத்து நேர்ந்தது. இவ்விபத்தில் 18 பேர் இறந்தனர். ஐவர் காயமுற்றனர். சம்பவம் நேர்ந்த இடத்திலிருந்த ஒன்பது வீடுகளும் சேதமடைந்தன.

VI. குற்றம்

(i) குற்ற நிகழ்வுகளின் நிலைமை

நாட்டில் வன்முறைச் சம்பவங்களும், சண்டைச் சச்சரவுகளும், கிளர்ச்சியும், அமைதியின்மையும் பெருமள வில் நடைபெற்றபோதும், கடந்த மூன்றாண்டுகளாகத் தமிழ்நாடு அமைதிப் பூங்காவாகத் திகழ்ந்துள்ளது. தேசிய அளவில் அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்ட போதும், பம்பாயில் குண்டு வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்த போதும் தமிழ்நாட்டில் அமைதி நிலவியது.

தமிழ்நாட்டில் நடைபெற்ற சொத்து குறித்த குற்றங்கள், கடந்த மூன்றாண்டுகளில் படிப்படியாகக் குறைந்து வந்துள்ளன. பல்வேறு சிறப்புப் படைப் பிரிவுகள் ஏற்படுத்தப் பட்டதாலும், தொடர்ந்து விழிப்புப் பணி மேற்கொள்ளப் பட்டதாலும், மாவட்ட காவல்/படைப் பிரிவில் காவல் துறைப் பணியாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப் பட்டதாலும் குற்றங்களின் எண்ணிக்கை இவ்வாறு குறைந்தது. குற்றத் தடுப்பு முறைகளும், தடுப்புக் காவல் முறைகளும் அறிவார்ந்த முறையில் மேற்கொள்ளப் பட்டதால், தமிழ் நாட்டில் குற்றங்கள் குறையும் நிலை ஏற்பட்டது. பின்வரும் அட்டவணை, குற்றங்களின் நிலவரத்தை விளக்குகிறது.

[1995 ஏப்ரல் 6

1993–94-ஆம் ஆண்டுகளில் தமிழ்நாட்டில் நடைபெற்ற சொத்து குறித்த குற்றங்களைக் காட்டும் அட்டவணை:

தொடர் எண்.	குற்றத்தின் தன்மை	1993		1994	
		புகார் செய்யப் பட்டவை.	கண்டு பிடிக்கப் பட்டவை.	புகார் செய்யப் பட்டவை.	கண்டு பிடிக்கப் பட்டவை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1.	ஆதாயத்திற்காக செய்யப் பட்ட கொலை	95	51	72	43
2.	முகமூடிக் கொள்ளை	155	68	124	46
3.	வழிப்பறிக் கொள்ளை	416	208	401	252
4.	வீடு புகுந்து திருடுதல்	6,945	3,117	6,348	2,939
5.	பெருந்திருட்டு	20,890	16,931	18,192	15,018
6.	சிறு திருட்டு	1,438	1,419	1,150	1,137
7.	கால்நடைத் திருட்டு	647	578	644	591
	மொத்தம் ..	**30,586**	**22,372**	**26,931**	**20,026**
குற்றக் கண்டுபிடிப்புச் சதவீதம்		73.2 சதவீதம்		74.3 சதவீதம்.	

கீழே குறிப்பிட்டுள்ளவாறு, குற்றக் கண்டுபிடிப்புச் சதவீதம் கணிசமான அளவிற்கு அதிகரித்துள்ளது.

கண்டுபிடிக்கப்பட்டுள்ள குற்றங்களின் சதவீதம்:

1991 .. 64 சதவீதம்

1992 .. 72.1 சதவீதம்

1993 .. 73.2 சதவீதம்

1994 .. 74.3 சதவீதம்

1995 ஏப்ரல் 6]

சென்னையிலுள்ள விரல் ரேகை பதிவுக் கூடம், மாவட்டங்களிலுள்ள சிங்கிள் டிஜிட் விரல் ரேகைப் பதிவுக் கூடங்கள், தமிழ்நாடு தடய அறிவியல் ஆய்வுக் கூடம், துப்பறியும் நாய்ப் படை, காவல்துறை கணிப்பொறிப் பிரிவு ஆகியவை அறிவியல் முறையில் மேற்கொள்ளும் ஆய்வுகளையும், பணிகளையும் பயனுள்ள வகையில் தொடர்ந்து செவ்வனே செய்து வருகின்றன. சுருங்கக்கூறின், ஆதாயத்திற்காக செய்யப்படும் கொலை, வழிப்பறி, கூட்டுக்கொள்ளை, வீடு புகுந்து திருடுதல், பெரிய திருட்டு, வேலை வாங்கித் தருவதாகக் கூறிச் செய்யும் மோசடி, இன்னும் பிற மோசடிக் குற்றங்கள் என்ற வகையின் கீழ்வரும் கடுமையான, பரபரப்பான, குறிப்பிடத்தக்க பல வழக்குகள், நவீன கருவிகளையும், தொழில் முறை திறமைகளையும், முறைகளையும் பயன்படுத்தியதன் மூலம் கண்டுபிடிக்கப்பட்டு, மிகக் குறுகிய கால அளவில் சொத்துக்கள் மீட்கப்பட்டுள்ளன. புலனாய்வில் உள்ள எஞ்சிய வழக்குகளைக் கண்டுபிடிப்பது தொடர்பாக விசாரணை முழுவீச்சில் நடந்து கொண்டிருக்கிறது. இவ்வாறாக, சொத்துக்கள் சம்பந்தப்பட்ட குற்றங்களைக் கட்டுப்படுத்துவதற்கும், குறைப்பதற்குமான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. காவல் துறையினர் விழிப்புடன் திறம்பட செயலாற்றும் திறன் கொண்டிருக்காவிடில், சொத்து சம்பந்தப்பட்ட குற்றங்கள் இன்னும் அதிகமாக இருந்திருக்கும்.

(ii) நெடுஞ்சாலைச் சோதனைச் சாவடிகள், நெடுஞ்சாலை ரோந்துப் பணி திட்டங்கள்

நெடுஞ்சாலை கொள்ளைகளைத் தடுப்பதற்கும், குற்றவாளிகள் தப்பிச் செல்வதைத் தடுப்பதற்கும், கள்ளக்கடத்தல் பொருட்களை ஏற்றிச் செல்லும் வண்டிகளைத் தடுத்து நிறுத்தவும், இலங்கையைச் சேர்ந்தவர்களின் நடமாட்டத்தைத் தடுப்பதற்கும் ரூ. 307.84 இலட்சம் செலவில்

மாநிலத்தில் 190 நெடுஞ்சாலைச் சோதனைச் சாவடிகளை ஏற்படுத்த அரசு அனுமதித்துள்ளது. தேசிய நெடுஞ்சாலை சுமார் 4,000 கிலோ மீட்டர்களுக்கு நீண்டிருப்பதாலும், ஏனைய மாநிலங்களிலுள்ள குற்றவாளிகள், நம்முடைய மாநிலத்தில் நடமாடத் தொடங்கியிருப்பதாலும், நெடுஞ் சாலையில் கொள்ளையடிப்பதைக் குறைக்கும் பொருட்டும், நெடுஞ்சாலை விபத்துகளில் பலியானவர்களுக்குத் தேவைப் படும்போது உடனடி மருத்துவ நிவாரணம் செய்யும் பொருட்டும், நெடுஞ்சாலை ரோந்து காவல்படைப் பிரிவு தனியாக ஏற்படுத்தப்பட்டது.

மாநிலத்தில் 40 பகுதிகளில் 160 நெடுஞ்சாலை ரோந்துக் காவற்படைப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு படைப் பிரிவிலும் ஒரு உதவி ஆய்வாளர், மூன்று இரண்டாம் நிலை காவலர்கள், வண்டி ஓட்டுநர்-காவலர் ஒருவர் ஆகியோர் இருக்கின்றனர். ஒவ்வொரு குழுவிற்கும், 9 மி..மீ. கைத் துப்பாக்கி, சுழல் துப்பாக்கி, துப்பாக்கி, தடி ஆகியவற்றுடன் வி.எச்.எஃப். பொருத்தப்பட்ட ஜீப் ஒன்றும் வழங்கப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலையில் கொள்ளையடிப்பதைத் தடுப்பதற் கென்ற குறிப்பிட்ட நோக்கத்திற்காக இப்பிரிவு அமைக்கப்பட்ட பின்னர், நெடுஞ்சாலைக் கொள்ளை சம்பவங்கள் இங்கு வெகுவாகக் கட்டுப்படுத்தப்பட்டிருப்பது ஊக்கமளிப்பதாக இருக்கிறது.

(iii) நெடுஞ்சாலை வழிப்பறி கொள்ளைகளைக் கண்டு பிடிப்பதற்குச் சிறப்புப் புலனாய்வுப் பிரிவு

கண்டுபிடிக்கப்படாமலுள்ள நெடுஞ்சாலைக் குற்றங்கள் சம்பந்தப்பட்ட வழக்குகள் குறித்த புலனாய்வு செய்வதற்கென, காவல் துறைத் தலைமை இயக்குநர், திரு. கே. கே. இராஜசேகரன் நாயர், இ.கா.ப., அவர்களைத் தனி அதிகாரியாக அரசு நியமித்தது. தென்

1995 ஏப்ரல் 6]

மாவட்டங்களுக்கென ஒரு பிரிவும், வட மாவட்டங்களுக்கென ஒரு பிரிவுமாக இரு சிறப்புப் புலனாய்வுப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. இப்பிரிவுக்கு அனுப்பப்பட்ட 31 வழக்குகளில், 19 வழக்குகள் சம்பந்தப்பட்ட குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, ரூ. 11.6 இலட்சம் மதிப்புள்ள சொத்துக்கள் மீட்கப்பட்டன. இது தொடர்பான புலனாய்வின்போது, இப்பிரிவின் அதிகார வரம்பின்கீழ் வராத 28 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, மேற்கொண்டும் நடவடிக்கை எடுப்பதற்காக, உள்ளூர் காவல் துறையினரிடம் இந்த வழக்குகள் ஒப்படைக்கப்பட்டன. இதனால் ரூ. 20.1 இலட்சம் மதிப்புள்ள சொத்துக்கள் மீட்கப்பட்டன. மகாராஷ்டிர மாநிலத்திலிருந்து வந்துள்ளதாகக் கூறப்படும் "கஞ்சா பட் கும்பல்" எனப்படும் கும்பலால், ஸ்ரீபெரும்புதூர், உடுமலைப் பேட்டை நெடுஞ்சாலையில் மேற்கொள்ளப் பட்ட பரபரப்பான கொள்ளைகள் சம்பந்தப்பட்ட குற்றங்களும் இந்தப் புலனாய்வில் கண்டுபிடிக்கப்பட்டன. சிறப்புப் புலனாய்வுப் பிரிவு மேற்கொண்ட சீரிய முயற்சிகளின் காரணமாக, பெரும்பாலும் அனைத்து நெடுஞ்சாலைக் குற்றங்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

VII. மோட்டார் வண்டிகளும், பணிமனைகளும்

காவலர்கள், அதிலும் அதிகமான அதிகார எல்லையைக் கொண்டுள்ள பெருநகர்ப் பகுதியில்லாத பகுதிகளில் இருக்கும் காவல் நிலையங்களிலுள்ள காவலர்கள் சட்டம் ஒழுங்குப் பிரச்சினையைச் சமாளிக்கவும், குற்றங்கள் நடைபெறும் நேர்வுகளிலும் மிகக் குறுகிய நேரத்திற்குள் ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு உடனடியாகச் செல்ல வேண்டுமென்பது மிகவும் முக்கியமானதொன்றாகும்.

[1995 ஏப்ரல் 6

(i) மோட்டார் வண்டிகள்:

1994-ஆம் ஆண்டில், நெடுஞ்சாலை ரோந்துக் காவல் பணிக்கென 80 ஜீப்புகளையும், கரையோரப் பகுதி காவல் பணிக்கென 63 மோட்டார் வண்டிகள், 300 சைக்கிள்கள் ஆகியவற்றையும் அரசு அனுமதித்துள்ளது. காவல் நிலையப் பயனுக்கென, 330 ஜீப்புகளையும், ஏனைய பதினொரு மோட்டார் வண்டிகளையும் அரசு அனுமதித்துள்ளது. இவ்வாறு புதிய வண்டிகளை வழங்கிய வகையில், ரூ. 10.27 கோடி செலவு ஏற்பட்டுள்ளது. காவல்படைப் பிரிவுகளில் போக்குவரத்தை மேம்படுத்தும் பொருட்டு, பழுதுற்று பயன்படுத்த இயலாத 299 மோட்டார் வண்டிகளுக்குப் பதிலாக ரூ. 3.73 கோடி செலவில் மீண்டும் புதிய மோட்டார் வண்டிகளை வாங்க, அரசு அனுமதி வழங்கியுள்ளது. 1994-ஆம் ஆண்டு இறுதியில், காவல் படையின் பயனுக்காக, 4,835 மோட்டார் வண்டிகள் இருந்தன.

ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் ஒரு ஜீப் வழங்க வேண்டுமென்ற இச்சிறந்த திட்டம் முழுவதுமாகச் செயல்படுத்தப்பட்டது. 31 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் உட்பட, 1,130 காவல் நிலையங்களுக்கும் ஜீப்கள் வழங்கப்பட்டுள்ளன.

(ii) காவல் போக்குவரத்துப் பணிமனைகள் :

காவல் துறைக்குச் சொந்தமான மோட்டார் வண்டிகள் நன்முறையில் பராமரிக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும், அவை சாலைகளில் நன்முறையில் ஓடும் நிலையில் இருக்க வேண்டியதன் அவசியத்தையும் கருத்தில் கொண்டு, சரக அளவிலான காவல் துறை போக்குவரத்துப் பணிமனைகளை அரசு அமைத்தது. ஆவடி, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் தற்போதுள்ள போக்குவரத்துப் பணிமனைகள் தவிர 1-4-1995-ஆம் நாள் முதற்கொண்டு 8 வட்டாரப் போக்குவரத்துப் பணிமனைகள் அமைக்கப்படும்.

1995 ஏப்ரல் 6]

VIII. ஊக்க நலத் திட்டங்கள்:

(i) மானிய விலையில் உணவுப் பொருட்கள் வழங்கும் திட்டம் :

குறைந்த விலையில் உணவுப் பொருட்கள் வழங்கும் திட்டமானது, 1980-ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. இன்றியமையா உணவுப் பொருட்களான அரிசி, கோதுமை, சர்க்கரை, ரவை, மைதா, துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில், ஆகியவற்றை காவல் வானொலிப் பிரிவு, சுருக்கெழுத்துப் பிரிவு ஆகிய பிரிவுகளிலுள்ள தொழில் நுட்பப் பணியாளர்கள் உட்பட, காவல் துறை ஆய்வாளர்கள் பதவித்தரம் வரையிலான அலுவலர்களுக்கும், பொது விநியோக முறையின் மூலம், 50 சதவீத விலை வீதத்தில் வழங்கும் வகையில் இத்திட்டம் 1984-ஆம் ஆண்டு திருத்தியமைக்கப் பட்டது. இருப்பினும், பின்னர் பொது விநியோக முறையின் கீழ், பொருட்களின் விலை உயர்ந்து அதே சமயத்தில் அந்த அளவுக்கு நிகராக அரசு மானிய வீதம் உயர்த்தப்படாததால், மானிய விலையின் சதவீதமானது 50 சதவீதத்தைக் காட்டிலும் குறைந்து விட்டது. அரிசி, கோதுமை, சர்க்கரை, பாமாயில் ஆகிய பொது விநியோகப் பொருட்களின் விலையில், 50 சதவீதம் என்ற அளவில் காவலர்களுக்கு தாராளமாக மானிய விலையை நிர்ணயித்தது. மேலும், 1 கிலோ துவரம் பருப்பிற்கு ரூ. 4 என்றும், 1 கிலோ உளுத்தம் பருப்பிற்கு ரூ. 3 என்றும் 1 கிலோ ரவை/மைதா ஆகியவற்றிற்கு ரூ. 1.50 என்றும் நிர்ணயிக்கப்பட்ட வீதத்தில் அரசு மானிய தொகைக்கான, தன்னுடைய பங்கை திருத்தியமைத்தது.

இத்திட்டத்தின் பயன்கள் குடும்பத்திலுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து, ரூ. 31.90 லிருந்து, ரூ. 87.80 வரை உள்ளன.

[1995 ஏப்ரல் 6

இத்திட்டத்தின் கீழ், 1994-ஆம் ஆண்டில், 1,587 ஆய்வாளர்களும், 5,496 உதவி ஆய்வாளர்களும், தலைமைக் காவலர்களும் உள்ளிட்ட 63,238 காவலர்களும் பயனடைந்தனர். கடந்த மூன்று ஆண்டுகளில், இத்திட்டத்தைச் செயல்படுத்தியது தொடர்பாக ஏற்பட்ட செலவுத் தொகை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

ஆண்டு	அரசுக்கு ஏற்பட்ட செலவு (ரூபாய் இலட்சத்தில்)
1992-93	223.65
1993-94	235.95
1994-95	274.57

(ii) தமிழ்நாடு காவலர் நல நிதி:

காவல் துறையைச் சேர்ந்த அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்களுக்கு அவர்களுடைய இக்கட்டான நிலையில் நிதியுதவியும், ஏனைய நிவாரண உதவிகளும் அளிக்கும் பொருட்டு, 1957-ஆம் ஆண்டில், தமிழ்நாடு காவலர் நல நிதியை, தமிழ்நாடு அரசு அமைத்தது.

இந்நிதியில், அரசிதழ் பதிவு பெறாத காவல் துறைப் பணியாளர்களிடமிருந்து ரூ. 12/-லிருந்து ரூ.48/- வரையிலான தாமாகவே முன்வந்து அளிக்கும் ஆண்டு சந்தாத் தொகையும் காவல் துறையைச் சேர்ந்த அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளிடமிருந்து கிடைக்கப் பெறும் நன்கொடைகளும், அரசு மானியத் தொகையாக ஒவ்வோராண்டும் வழங்கும் ரூ. 10 இலட்சமும் அடங்கும். இந்நிதி, பின்வரும் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகிறது:—

(அ) இறந்த காவல் துறைப் பணியாளரின் மனைவிக்கு அவரைச் சார்ந்திருப்போருக்கு, இறந்த பணியாளரின் பதவித்

1995 ஏப்ரல் 6]

தரத்திற்கேற்ப ரூ. 3,000 முதல் ரூ. 5000 வரை குடும்ப நிவாரணத் தொகை ஒட்டுமொத்தமாக வழங்குதல்;

(ஆ) நீண்ட காலமாக நோயால் பீடிக்கப்பட்டவர்கள், கடுமையாக காயமுற்றோர்கள் போன்ற தவிர்க்க முடியாத தனிச் சூழ்நிலைகளின் கீழ், உறுப்பினர்களுக்கு நிதியுதவி வழங்குதல்;

(இ) மாற்றுச் சிறுநீரகம் பொருத்துவதற்கு அல்லது இருதய அறுவைச் சிகிச்சைக்கு சிறப்பு மருத்துவ நிவாரணத் தொகையாக ரூ. 5,000/- வழங்குதல்.

(ஈ) காவல்துறையில் பணியாற்றும் சார்நிலைப் பணியாளர்களின் குழந்தைகள், கல்லூரிகளிலும், தொழில் பயிற்சிப் பள்ளிகளிலும் உயர் கல்வியைத் தொடரும் வகையில், ஆண்டொன்றுக்கு ரூ. 500/- லிருந்து ரூ. 1,500 வரையில் படிப்புதவித் தொகை வழங்குதல்.

1994-ஆம் ஆண்டில், இத்திட்டத்தின் கீழ் ரூ. 27.82 இலட்சம் செலவிடப்பட்டு, 2,516 காவல் துறைப் பணியாளர்கள் பயனடைந்துள்ளனர்.

(iii) தமிழ்நாடு காவல் துறையினர் நலக் கூட்டுறவுச் சங்கங்கள் :

காவல் பணியாளர் மற்றும் அமைச்சுப் பணியாளர்களின் குடும்பத்தினரின் வருமானத்தை உயர்த்தவும், பொழுதுபோக்கு, கல்வி, மருத்துவ வசதிகள் ஆகியவற்றைச் செய்து கொடுக்கவும் இயலும் வகையில் அவர்களுடைய நலத் திட்டங்களை மேற்கொள்வதில் ஊக்கமளித்து, மேம்படுத்தி, அவர்களின் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதே இதன் முக்கிய நோக்கமாகும். தையல், தீக்குச்சி தயாரித்தல், பால்பண்ணை அமைத்தல் முதலிய திட்டங்களைக் காவல் துறை அலுவலர்களுடைய குடும்பத்தினர் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

காவல் துறை அதிகாரிகளுக்கும், சில பொதுத் துறை நிறுவனங்களின் பணியாளர்களுக்கும், தமிழ்நாடு அரசு மதிய சத்துணவுத் திட்டத்தின் கீழ், பள்ளிக் குழந்தைகளுக்குச் சீருடைகள் தைக்கும் பணியில் ஒன்பது தையல் பிரிவுகளும், 20 மாதர் சங்கங்களும் (பெண்கள் தையல் பிரிவுகள்) ஏற்படுத்தப்பட்டுள்ளன.

20 கூட்டுறவுச் சங்கங்களும், சிறு தொழில் நிறுவனங்களும் இருக்கின்றன. இவற்றில் காவல் துறையினரின் குடும்பத்தினர் பனியன்கள், காலுறைகள், ஆடைகள், செர்ஜ் தொப்பிகள், கொசு வலைகள், தரை விரிப்புகள், பாலிதின் பைகள் முதலிய பொருட்களைத் தயாரிக்கின்றனர்.

ஆவடியில் ஒன்றும், மதுரையில் ஒன்றுமாக இரு கூட்டுறவு பால் பண்ணைகளும், விருதுநகரில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் ஒன்றும் இருக்கின்றன. இராமநாதபுரத்தில் பால் பண்ணைகளும் நடத்தப்பட்டு வருகின்றன. இதனால், காவல் துறை குடும்பத்தினர், கறவை மாடுகளை வளர்த்து அவர்களுடைய வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள ஊக்குவிக்கப்படுகின்றனர்.

அருள்மிகு மாரியம்மன் அப்பளம் தயாரிப்பு நிறுவனம் என்ற பெயரில், அப்பளம் தயாரிப்பு நிறுவனம் ஒன்று மதுரை மாநகரில், 1987- ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது.

அரசு போக்குவரத்து நிறுவனங்கள் அளித்த பணிகளை, தமிழ்நாடு காவல் துறையைச் சேர்ந்த டயர் புதுப்பிக்கும் தொழில் கூட்டுறவுச் சங்கம் தன்னிடமுள்ள 30 உறுப்பினர்களைக் கொண்டு நிறைவேற்றியுள்ளது.

தமிழ்நாடு காவல் துறை விளையாட்டுப் பொம்மைகள், விளையாட்டுப் பொருட்கள் தயாரிப்புத் தொழில் கூட்டுறவுச் சங்கம் 20 உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகிறது.

1995 ஏப்ரல் 6]

சிவகாசியிலும், மணிமுத்தாரிலும் உள்ள தீக்குச்சி தயாரிப்புத் தொழிற் பிரிவுகளும், சென்னையிலுள்ள புத்தகம் கட்டும் பிரிவுகளும் காகித உறைகள் தயாரிக்கும் பிரிவுகளும், காவல் துறைப் பணியாளர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்புகளை அளித்து வந்துள்ளன.

(iv) தமிழ்நாடு காவலர் நல்வாழ்வுத் திட்டம் :

அரசு மருத்துவ மனைகளில் சிகிச்சை பெற இயலாத அளவிலான பெரிய நோய்கள்/மருத்துவ அறுவைச் சிகிச்சை தொடர்பான இனங்களில், காவல்துறைப் பணியாளர் களுக்குள்ள நிதி இடர்ப்பாடு குறித்து இந்த அரசு நன்கறியும். காவல் துறைப் பணியாளர்களுக்குள்ள இந்நிலையை எளிதாக்கும் பொருட்டு, அரசு, "தமிழ்நாடு காவலர் நல்வாழ்வு நிதி " ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. அரசு, இந்நிதிக்கு அரசுப் பங்குத் தொகையாக ரூ. 50 இலட்சம் வழங்கியுள்ளது. இந் நலநிதிக்கு, காவல் துறைப் பணியாளர்களின் பங்குத் தொகை ஆண்டொன்றுக்கு ரூ. 10 ஆகும். இந்தியாவில் சிகிச்சை பெறும் இனங்களுக்கு, வழங்கக் கூடிய உயரளவு நிதியுதவி ரூ. 1 இலட்சமாகும். இந்தியாவில் அல்லாமல் ஏனைய வெளிநாடுகளுக்குச் சென்று சிகிச்சை பெற வேண்டிய இனங்களுக்கு, மேற்கூறியவாறு வழங்கப்படும் மானியத் தொகை ரூ. 1 இலட்சம் தவிர, கூடுதலாக ரூ. 1 இலட்சம் கடனாக வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதியுதவி மொத்தம் ரூ. 2 இலட்சத்திற்கு மேற்படக்கூடாது. இதய அறுவைச் சிகிச்சை, மாற்றுச் சிறுநீரக அறுவைச் சிகிச்சை, நரம்பியல் அறுவைச் சிகிச்சை, புற்றுநோய் போன்ற முக்கிய சிகிச்சைகளைப் பொறுத்தமட்டில் மட்டுமே இந்நிதியுதவி வழங்கப்படும்.

(v) காவல் துறைப் பணியாளர்கள், அதிகாரிகள் ஆகியோருக்கான குழுக் காப்பீட்டுத் திட்டம் :

நிலை-2 காவலர்களிலிருந்து, காவல் துறை தலைமை இயக்குநர் வரையிலான பதவித் தரத்திலுள்ள அனைத்து காவல் துறைப் பணியாளர்களும், குழுக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர். காவல் துறைப் பணியாளர்கள் இறக்கும் நேர்வில் (தற்கொலை நீங்கலாக) ஏனைய இயல்பான மரணம் ஏற்படும் நேர்வில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வீதங்களில், காவல் துறைப் பணியாளர்களின் நியமனதாரர்களுக்கு அல்லது வாரிசுதாரர்களுக்கு இத்திட்டத்தினால் ஈட்டுறுதித் தொகை கிடைக்கப் பெறும்.

		தொகை
காவலர் முதல் காவல் துறை கூடுதல் கண்காணிப்பாளர் வரை.	ரூ.	1 இலட்சம்.
காவல் துறை கண்காணிப்பாளர் முதல் காவல்துறைத் தலைவர் வரை.	ரூ.	5 இலட்சம்.
காவல் துறைக் கூடுதல் தலைமை இயக்குநர்.	ரூ.	7.5 இலட்சம்.
காவல் துறை தலைமை இயக்குநர்.	ரூ.	10 இலட்சம்.

சிறப்பு பாதுகாப்புப்படை, சிறப்புப் பணிப்படை ஆகியவற்றில் பணிபுரியும் காவல் துறைப் பணியாளர்கள் மற்றும் அதிகாரிகளுக்கென பெயரிடப்படா குழுக் காப்பீட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

சிறப்பு பாதுகாப்புப் படை, சிறப்புப் பணிப்படை ஆகியவற்றில் பணிபுரியும் காவல் துறைப் பணியாளர்கள், அதிகாரிகள் ஆகியோர் கடமை ஆற்றும்போது விபத்து ஏற்பட்டதன் காரணமாக இறக்க நேரிட்டால், அவருடைய நியமனதாரர் அல்லது வாரிசுதாரருக்கு காப்பீட்டுத்

1995 ஏப்ரல் 6]

தொகையாக ரூ. 10 இலட்சம் வழங்கப்படும். நிரந்தரமாக ஏலாமையுற்றோருக்கு, அந்த ஏலாமைத் தன்மையின் சதவீதத்திற்கிணங்க, காப்பீட்டுத் தொகை வழங்கப்படும்.

(vi) தொழிற் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு செய்தல் :

வீர தீரச் செயல் புரிந்த சூழ்நிலைகளில், வீரமரணம் எய்திய காவல் துறை பணியாளர்களின் குழந்தைகளுக்கு மருத்துவம், பொறியியல், வேளாண்மை ஆகிய கல்லூரிகளில், ஒவ்வொன்றிலும் மூன்று இடங்களும் சட்டக் கல்லூரிகளில் இரண்டு இடங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன.

(vii) பரிசுத் திட்டம் :

ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒவ்வோராண்டும் பள்ளி இறுதித் தேர்விலும், 12-ஆம் வகுப்பிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் காவல் துறைப் பணியாளர்களின் குழந்தைகளுக்கு முறையே ரூ. 6,000 ரூ. 4000 ரூ. 2,000 பரிசுத்தொகை வழங்கப்படும்.

(viii) தமிழ்நாடு காவல் துறை நூற்றாண்டு படிப்புதவி நிதி :

காவல் துறையில் பணியாற்றும் அரசிதழ்ப் பதிவுறா காவல் துறைப் பணியாளர்கள், அமைச்சுப் பணியாளர்கள் ஆகியோரின் தகுதி வாய்ந்த குழந்தைகளுக்கு, அவர்கள் கல்லூரி அளவில் உயர்கல்வியைத் தொடரும் வகையில், படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. காவலர் ஒருவரின் இரண்டு குழந்தைகளுக்கு மட்டுமே படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. ஓய்வு பெற்ற/இறந்த காவல் துறைப் பணியாளரின் குழந்தைகளும் அப்பணியாளர் ஓய்வு பெற்ற/இறந்த நாளிலிருந்து 5 ஆண்டுக் கால அளவிற்குப் படிப்புதவித்

தொகை வழங்குவதற்குக் கருதிப் பார்க்கப்படுகின்றன. ஆய்வு ஆண்டில், அவ்வகையில் 2,201 மாணவர்களுக்கு 16,68,500 ரூபாய் வழங்கப்பட்டது.

(ix) சிறப்பு படிப்புதவி நிதி :

அரசு, உள் துறையின் (காவல்.9) 17-3-1994-ஆம் நாளிட்ட 811-ஆம் எண் ஆணையில், காவலர் பதவித் தரத்திலிருந்து ஆய்வாளர் பதவித் தரம் வரையிலான காவல் துறைப் பணியாளர்களின் குழந்தைகளுக்கென்று "சிறப்பு படிப்புதவித் தொகை" நிதி ஒன்றை உருவாக்க அனுமதி அளித்துள்ளது. இதன்பொருட்டு அரசு ரூ. 6 இலட்சமும், சிறப்புக் காவல் படைப் பிரிவின் பணியாளர்கள் ரூ. 4 இலட்சமும் வழங்கியுள்ளனர். மேற்சொன்ன வகையில் மொத்தம் ரூ. 10 இலட்சம் தமிழ்நாடு போக்குவரத்து மேம்பாட்டு நிதிக் கழகத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வைப்பீட்டுத் தொகைக்கு கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து இந்தப் படிப்புதவி தொகை வழங்கப்படும்.

தொழில் கல்லூரிகளில் சேரும் காவல் துறைப் பணியாளரின் குழந்தைகள் இந்தப் படிப்புதவித் தொகையைப் பெறலாம். இச் சிறப்பு படிப்புதவித் தொகை ரூ.40,000/- அளவில் சிறந்த மாணவர் ஒருவருக்கு வழங்கப்படும்; மேலும், ஒவ்வொரு மாணவருக்கும் ரூ. 20,000/- என்கிற வீதத்தில் 5 சிறந்த மாணவர்களுக்கு வழங்கப்படும்.

(x) காவலர் மருத்துவமனைகள் :

சென்னை மாநகர காவலர் மருத்துவமனை, 1928-ல் காவல் துறைப் பணியாளர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காகவென்றே, தொடக்கத்தில் மருந்தகமாக ஏற்படுத்தப்பட்டது. பின்னர், அது 1963-ல் காவலர் மருத்துவமனையாக மாற்றப்பட்டது. இம்மருத்துவமனையில்,

1995 ஏப்ரல் 6]

ஒரு சிவில் மருத்துவர், ஐந்து உதவி மருத்துவர்கள், ஏழு செவிலியர் மற்றும் 27 மருத்துவத் துணைப் பணியாளர்கள் உள்ளனர்.

மாநகர காவலர் மருத்துவமனை, காவல் துறைப் பணியாளர்கள், ஓய்வுபெற்ற காவல் துறைப் பணியாளர்கள் ஆகியோர் அடங்கிய சுமார் 55,000 பேரின் மருத்துவத் தேவைகளை நிறைவு செய்கிறது. அவர்களுடைய குடும்ப உறுப்பினர்களும், அலுவலகப் பணியாளர்களும் மாநகரக் காவலர் மருத்துவமனையில் சிகிச்சை பெறுகின்றனர்.

மாநகரக் காவலர் மருத்துவமனை அளிக்கின்ற மருத்துவப் பணியால், ஆண்டுதோறும் சுமார் 1.2 இலட்சம் புறநோயாளிகளும் 2,000 அக நோயாளிகளும் பயனடைகின்றனர்.

கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சேலம், விழுப்புரம் ஆகிய இடங்களில் காவலர் மருத்துவமனைகள் உள்ளன. இம்மருத்துமனைகளில் சுமார் 500 அக நோயாளிகளும், 7,000 புறநோயாளிகளும் பயனடைந்து வருகின்றனர்.

(xi) தனிப் பாதுகாப்புப் படைப் பணியாளர் நலத் திட்டம் :

தனிப் பாதுகாப்புப் படைப் பணியாளர்களுக்குரிய வீட்டுவசதித் திட்டம் 'மருதம் வளாகத்தில்' பெரும்பாலும் முடிக்கப்பட்டுள்ளது. ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்களுக்கு 40 இல்லங்களும், தலைமைக் காவலர்கள்/காவலர்களுக்கு 80 வீடுகளும், ஒவ்வொன்றிலும் 100 காவலர்கள் தங்குவதற்கு வசதியாக இரண்டு படை குடியிருப்புகளும் கட்டுவதற்கு, ரூ. 3.50 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. இது தவிர, 500 ரூபாய்க்கு மிகாமல், அவர்களுடைய அடிப்படைச் சம்பளத்தில் 30% சிறப்பு ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது. தனிப்

[1995 ஏப்ரல் 6

பாதுகாப்பு படைப் பிரிவினருக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 500/-என்கிற வீதத்தில் தனிச் சீருடைப் படியும், மாதம் ஒன்றுக்கு ரூ. 1000/- என்கிற வீதத்தில் இடருதவிப் படியும் இப்படைப் பிரிவைச் சேர்ந்த 514 காவலருக்கும் தற்போது செயலில் உள்ள ஆணைப்படி அனுமதிக்கப்படும். சாதாரண நாட்படி வீதத்தைக் காட்டிலும் 1 1/2 மடங்கு அதிகமான நாட்படியும் வழங்க அரசு அனுதி அளித்துள்ளது.

(xii) மாண்புமிகு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து அளிக்கப்படும் நிதி உதவி :

ஆய்வு ஆண்டில், 25 இனங்களில் நோய் வாய்ப்பட்ட காவல் துறைப் பணியாளர்களுக்கும், இறந்து விட்ட காவலர்களின் குடும்பங்களுக்கும் ரூ. 65,51,000/- இலட்சம் நிதியுதவியை நான் வழங்கியுள்ளேன்.

(IX) காவலர் பணிக்கு ஆள் எடுத்தலும் – பயிற்சியும் :

அரசின் சீருடைப் பணிகளுக்கு அதாவது காவல் துறை, தீயணைப்புத் துறை, சிறைத் துறை ஆகியவற்றில், தகுதி வாய்ந்த காவலர்களைத் தேர்ந்து எடுப்பதற்காக தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் 1991-ல் அமைக்கப் பட்டது. இவ்வாரியம் அமைக்கப்பட்டவுடன், நிலை-2 காவலர் பதவியில் நிரப்பப்படாமல் இருந்த பல பதவியிடங்களை நிரப்புகின்ற முக்கியப் பணியை மேற்கொண்டது. செயலில் உள்ள விதிகளின் அடிப்படையில் காவலர்களைத் தேர்வு செய்ய, பல்வேறு நடைமுறைகளையும், விதிமுறைகளையும் இயற்றிய பின்னர், கிராமப் பகுதிகளின் மூலை முடுக்குகளுக்குக் கூட செல்லுகின்ற தமிழ் செய்தித்தாள்களின் வாயிலாகப் பரவலாக விளம்பரம் கொடுப்பதன் மூலமாக, வாரியம் தகுதி வாய்ந்தவர்களை விண்ணப்பிக்குமாறு கேட்டுள்ளது. தொடக்கச் சரிபார்ப்பு, உடல் திறன் தேர்வு, எழுத்துத் தேர்வு

1995 ஏப்ரல் 6]

ஆகியவை நடத்திய பின்னர், வாரியம் 70,294 விண்ணப்பதாரர்களில் தகுதி வாய்ந்த 10,264 பேரைத் தெரிந்தெடுத்தது.

நிலை-2 காவலர் பதவிக்காக தெரிந்தெடுக்கப்பட்டவர் களில், 9,000 பேரை இதுவரையில் நியமித்து அவர்களை 4 தொகுதிகளாகப் பிரித்து, 6 மாதங்களுக்கு அடிப்படைப் பயிற்சி அளிக்கப்பட்டது. புதிதாகத் தெரிந்தெடுக்கப்பட்ட 1,000 பேர் 1-3-95 முதல் அடிப்படை பயிற்சி பெற்று வருகின்றனர். எஞ்சியுள்ளவர்கள், பதவிக் காலியிடங்கள் ஏற்படுவதைப் பொறுத்து நியமிக்கப்படுவர். 1994-ல் உதவி ஆய்வாளர்கள் 96 பேருக்கு (ஆயுதம் தாங்கிய சேமக் காவல் படை/தமிழ்நாடு சிறப்புக் காவல் படை) சென்னையில் உள்ள காவலர் பயிற்சிக் கல்லூரியில் ஆறு மாதங்களுக்கு முன் அறிமுகப் பயிற்சியும், அவர்களை வட்டக் காவல் பிரிவிற்கு மாற்றுவதற்காக, மாவட்டங்களில் மூன்று மாத நடைமுறைப் பயிற்சியும் அளிக்கப்பட்டது.

மேற்கூறிய பயிற்சிகளுடன், கணிப்பொறிமயமாக்கும் பணியிலும் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டம் எல்லா நிலைகளிலும் உள்ள காவல் படையினருக்கும் அலுவலகப் பணிகளில் உள்ளவர்களுக்கும் பயிற்சி அளிக்கிறது.

தீவிரவாதங்களை எதிர்த்துப் போராடவும், காட்டுப் பகுதிகளில் போராடவும் இயலும் வகையில், சிறப்புப் பயிற்சி பெறுவதற்காக காவல் துறை அதிகாரிகளும், காவலர்களும் தேசியப் பாதுகாப்புப் படைப் பிரிவிற்கும்/ எல்லைப் பாதுகாப்புப் படை பிரிவிற்கும் அனுப்பப்பட்டனர். மேலும், தமிழ்நாடு காவல் துறைப் பணியாளர்களுக்காகச் சிறப்புப் பாதுகாப்புப் படை சிறப்புப் பயிற்சிப் படிப்புகளை ஏற்படுத்தி பயிற்சி அளித்து வருகிறது. இத்திட்டம் போராளிகளின் நடவடிக்கைகளைத் தடுப்பதில், காவல் துறைப்

பணியாளர்களுக்கும் பயிற்சி அளிப்பதோடு மட்டுமன்றி, தங்களுடன் வாழுகின்ற மக்களின் பிரச்சினைகளை மனிதாபிமானத்துடன் எதிர்நோக்குவதிலும் பயிற்சி அளிக்கிறது. மனித உரிமைகள், மகளிர் மற்றும் நலிந்த பிரிவினரின் நலனில் நாட்டம் ஆகியவையும் காவலர்கள், உதவி ஆய்வாளர்கள் , ஆய்வாளர்கள், முதுநிலை அதிகாரிகள் ஆகியோரின் பயிற்சித் திட்டத்தில் இடம் பெறுகின்றன.

பல விதமான பயிற்சித் திட்டங்களை அளிக்கும் நோக்கத்துடன், அரசு, ரூ. 20 கோடி செலவில், மாநிலக் காவலர் பயிற்சி நிலையம் ஒன்றை நிறுவ அனுமதி அளித்துள்ளது. இத்திட்டத்தைத் தயாரித்து செயலாக்குவதற்காக, காவல் துறை தலைமை இயக்குநர் நிலையிலான அதிகாரி ஒருவர் தனி அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

(x) பரிசுகளும், வெகுமதிகளும் :

திறமையாக, கடமைப் பற்றுறுதிமிக்க காவல் படை இருக்க வேண்டுமானால், காவல் துறைப் பணியாளர்களின் தன்னிகரற்ற தனித் திறமையை உரியமுறையில் பாராட்ட வேண்டும். இந்த உண்மையை நன்கு உணர்ந்து காவல் துறைப் பணியாளர்களின் தன்னிகரற்ற சிறந்த சாதனையைப் பாராட்டும் வகையில், அரசு, பல பரிசுகளும் வெகுமதிகளும் ஏற்படுத்தியுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு முதலமைச்சரின் காவல் பதக்கம் :

ஆய்வு ஆண்டில் காவலரின் வீரதீரச் செயல்கள்/ தன்னிகரற்ற பணி மற்றும் கடமைப் பற்றுறுதியைப் பாராட்டும் வகையில், காவல் துறை அதிகாரிகள்/ காவலர்கள் 65 பேருக்கு அண்ணா பிறந்த நாள் அன்று தமிழ்நாடு முதல் அமைச்சரின் காவல் பதக்கம் வழங்கப்பட்டது.

1995 ஏப்ரல் 6]

துணிவுடைச் செயலுக்கான பதக்கம் :

காவல் துறைப் பணியாளர்கள் 65 பேரில், ஆய்வாளர் ஒருவர், உதவி ஆய்வாளர் ஒருவர், தலைமைக் காவலர் ஒருவர், காவலர் மூவர் ஆகியோருக்கு, 1994-ஆம் ஆண்டில் அவர்கள் துணிவுடைச் செயலைப் பாராட்டும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சரின் காவல் பதக்கம் வழங்கப்பட்டது.

தன்னிகரற்ற கடமைப் பற்றுறுதிக்கான பதக்கம் :

பதவி நிலை	வழங்கப்பட்ட பதக்கங்களின் எண்ணிக்கை
காவல் துறை கண்காணிப்பாளர்	1
காவல் துறை கூடுதல் கண்காணிப்பாளர்	2
காவல் துறை துணை கண்காணிப்பாளர்	7
காவல் துறை ஆய்வாளர்	17
காவல் துறை உதவி ஆய்வாளர்	12
தலைமைக் காவலர்	13
காவலர் நிலை -I	3
காவலர் நிலை -II	4
மொத்தம்	**59**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

காவலர்களுக்கான பதக்கங்கள் :

தமிழ்நாடு முதலமைச்சரின் காவலர்களுக்கான பதக்கங்கள், குறைந்தது பத்தாண்டுப் பணிக்காலத்தை முடித்து, தம்முடைய பணிக்காலத்தில் நிகரற்ற, அப்பழுக்கற்ற பணிபுரிந்துள்ள தலைமைக் காவலர்கள் மற்றும் காவலர்கள் 905 பேருக்கு 1994-ல் பொங்கல் தினத்தன்று வழங்கப்பட்டன.

தகைசால் பணிக்காக வழங்கப்படும் குடியரசுத் தலைவர் பதக்கம் :

காவல் துறை பணியாளர்களின் தகைசால் பணியையும், தகுதிவாய்ந்த பணியையும் பாராட்டும் வகையில், ஒவ்வோராண்டும் சுதந்திர தினத்தன்று/குடியரசு தினத்தன்று குடியரசுத் தலைவர் பதக்கங்கள் வழங்கப்படுகின்றன. காவல் துறைத் தலைவர் மூன்று பேருக்கும், காவல் துறை துணை ஆணையாளர் ஒருவருக்கும் அவர்களுடைய தகைசால் பணிகளைப் பாராட்டி சுதந்திர தினத்தன்று பதக்கங்கள் வழங்கப்பட்டன.

காவல் துறை துணைத் தலைவர் ஐவர், காவல் துறை துணை கண்காணிப்பாளர் ஒருவர், காவல் துறை ஆய்வாளர் ஒருவர், காவலர் இருவர் ஆகியோருக்கு, அவர்களுடைய பாராட்டத்தக்க பணிக்காக காவலர் பதக்கங்கள் சுதந்திர தினத்தன்று வழங்கப்பட்டன. காவல் துறை துணை கண்காணிப்பாளர் மூவர், காவல் துறை ஆய்வாளர் மூவர் ஆகியோருக்கு அவர்களுடைய பாராட்டத்தக்க பணிக்கான காவலர் பதக்கங்கள் குடியரசு தினத்தன்று வழங்கப்பட்டன.

ஊர்க்காவல் படைப் பிரிவினருக்கான பதக்கங்கள் :

தமிழ்நாடு முதலமைச்சரின் ஊர்க் காவல் படைக்கான பதக்கங்கள், ஊர்க்காவல் படைவீரர் 5 பேருக்கு, அவர்களுடைய நிகரற்ற கடமை உணர்வுக்காக வழங்கப்பட்டன. ஊர்க்காவல் படைவீரர் இருவருக்கு, அவர்களுடைய பாராட்டத்தக்க பணிக்காக, குடியரசு தினத்தன்று பதக்கங்கள் வழங்கப்பட்டன.

1995 ஏப்ரல் 6]

XI. வீட்டு வசதி மற்றும் கட்டிடங்கள் :

(i) வீட்டு வசதி :

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் 1991-ல் மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. இக்கழகம் மீண்டும் புதுப்பிக்கப் பட்டவுடன், தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில், ரூ. 10 கோடி செலவில் வீட்டு வசதித் திட்டங்களை உருவாக்கியது. 1993-94-ல் இத்திட்டத்தின் முதல் கட்டப் பணியாக, இக்கழகம், 1002 குடியிருப்புகளைக் கட்டி முடித்து, அவற்றைக் காவல் துறைப் பணியாளர்களுக்கு ஒதுக்கியது.

காவலர் வீட்டுவசதிக் கழகம், இத்திட்டத்தின் இரண்டாம் நிலைப் பணியின் கீழ் ரூ. 15.75 கோடி மதிப்பீட்டுச் செலவில் 1,000 காவலர் குடியிருப்புகள் கட்டும் பணியை மேற்கொண்டுள்ளது.

இதில் 120 குடியிருப்புகளும், இரண்டு படை குடியிருப்புகளும், தனிப் பாதுகாப்புப் படைப் பணியாளர்களுக்கென்று தனியாகக் கட்டப்பட்டு வருகின்றன. எஞ்சியுள்ள 880 குடியிருப்புகள், மாவட்டங்களில் உள்ள காவல் துறைப் பணியாளர்களுக்கென்று கட்டப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் நிலை-II பணியின் கீழ் குடியிருப்புகள் கட்டும் பணி முடிவுறும் நிலையில் உள்ளது. இவை விரைவில் ஒதுக்கப்படும்.

நிலை-III பணியின் கீழ் 1,000 குடியிருப்புகள் கட்டுவதற்கு, அரசு, நிருவாக அனுமதி அளித்துள்ளது.

சென்னை மாநகரில் பணிபுரிகின்ற காவல் துறை அதிகாரிகள், காவல் துறைப் பணியாளர்களுக்கென்று, 3,000 வீட்டு வசதிக் குடியிருப்புகளுடன் சென்னை மாநகரில் "காவலர் மாநகர்" ஒன்றை அமைக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. "காவலர் மாநகர்" அமைப்பதுடன்

ஆண்டுதோறும், 500 குடியிருப்புகள் கட்டும் பணியை மேற்கொள்ளுமாறும், அரசு, தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்திற்கு ஆணையிட்டுள்ளது. இவ்வாறாக, கடந்த ஆண்டில் 1,000 குடியிருப்புகள் கட்டப்பட்டிருக்க, 1995-96 முதல் ஆண்டுதோறும் 1,500 குடியிருப்புகள் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம், காவல் துறையினருக்குச் "சொந்த வீடு" கட்டித்தரும் திட்டத்தின் கீழ் மூன்று திட்டப் பணிகளை மேற்கொள்ளக் கருதியுள்ளது. வேளச்சேரியில், ரூ. 88 இலட்சம் செலவில், 32 வீடுகள் கட்டித் தரும் திட்டம் நடைபெற்று வருகிறது. மடிப்பாக்கத்தில் ரூ. 140 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் 70 வீடுகள் கட்டுவதும், மதுரவாயில் என்கிற இடத்தில் ரூ. 52 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் 40 வீடுகள் கட்டுவதும் ஏனைய இரண்டு திட்டங்களாகும்.

(ii) கட்டிடங்கள் :

தமிழ்நாட்டில் 1-1-.1995 அன்று நிலவரப்படி, 1,130 காவல் நிலையங்களும், 162 புறக்காவல் நிலையங்களும் உள்ளன. இதில், 795 காவல் நிலையங்களும், 94 புறக்காவல் நிலையங்களும் அரசுக் கட்டிடங்களில் செயல்பட்டு வருகின்றன. எஞ்சியுள்ள 335 காவல் நிலையங்களும் 68 புறக்காவல் நிலையங்களும் தனியார் கட்டிடங்களில் செயல்பட்டு வருகின்றன. வாடகைக் கட்டிடங்களில் செயல்பட்டு வருகின்ற காவல் நிலையங்களுக்கென்று, சொந்தமாக அரசுக் கட்டிடங்கள் கட்டும் பணியை படிப்படியாக மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது.

(iii) காவல் துறை தலைமை இயக்குநர் அலுவலகத்திற்கென்று புதிய கட்டிட வளாகம் :

பாழடைந்த நிலையில் இருக்கும் பழைய கட்டிடத்தில் அமைந்திருந்த காவல் துறை தலைமை இயக்குநர் அலுவலகம்,

1995 ஏப்ரல் 6]

பெரிய அளவில் பல பதிவேடுகளை வைத்து வருவதற்குப் போதிய இடவசதி இல்லாததாலும், மூத்த அதிகாரிகள் ஆய்வுக் கூட்டங்கள் நடத்துவதற்கு இடவசதி இல்லாது சிறிய அறைகளில் அடைந்திருக்க வேண்டிய நிலை இருந்ததாலும் அவர்கள் திறமையான முறையில் பணியாற்றுவதற்குத் தடையாக இருந்தது. காவல் துறைத் தலைமையிட அலுவலகத்திற்கு மிகப் பெரிய அளவில் இடவசதி இருக்க வேண்டியது மிகவும் அவசியம். ஆகவே, அரசு, சென்னை மாநகரில் பல இடங்களில் அமைந்துள்ள காவல் துறை அலுவலகங்கள் அனைத்தும் ஒரே இடத்தில் அமையும் வகையில் அனைத்து நவீன வசதிகளுடன் குறிப்பிடத்தக்க, சிறந்த பலமாடிக் கட்டிடம் ஒன்றைக் கட்டுவதற்கு ஆணை பிறப்பித்துள்ளது. அதன் காரணமாக, நவீன 10 மாடிக் கட்டிட வளாகம் ஒன்றைக் கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. நாடு முழுவதிலும் உள்ள பிரபல கட்டிடக்கலை வல்லுநர்களிடமிருந்து 104 வகையான கட்டிட வடிவ அமைப்புகளைப் பெற்ற பின்னர், அதில் சிறந்ததொரு கட்டிட வடிவமைப்பு தெரிந்தெடுக்கப்பட்டு, முடிவு செய்யப்பட்டது. இக்கட்டிடம், காவல் துறையின் அனைத்துப் பிரிவுகளையும் தன்னகத்தே கொண்டு, ஒரே இடத்தில் அவை நன்முறையில் ஒருங்கிணைந்து செயல்படப் பெரிதும் உதவும். கட்டிடம் கட்டப்படும் இடத்தில் மண் பரிசோதனை நடத்துதல், ஒப்ப அறிவிப்புகள் வழங்குதல் முதலியன போன்ற தொடக்கப் பணிகள் ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளன.

XII. பொது மக்கள் ஒத்துழைப்பு :

சமூகக் கட்டுப்பாட்டு அமைப்பான காவல் துறை, பொது மக்களின் மற்றும் சமூதாயத்தின் விரோதிகளை எதிர்த்துப் போராடி அவர்களைக் கட்டுப்படுத்துகின்ற, சமுதாயத்தின் அசல் பாதுகாப்பு அமைப்பாகச் செயல்பட்டு வருகின்றது.

சட்டத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கின்ற பொதுமக்கள், காவலர்களுக்கு உதவி புரியவில்லை என்றால், காவலர் தம் பணியைச் செவ்வனே நிறைவேற்ற இயலாது. சமுதாய நல்லுறவில் காவலரின் ஈடுபாடு பொதுவாக நன்முறையில் உள்ளது. இயற்கைச் சீற்றங்கள் ஏற்படும் தருணத்தில் அவர்கள் முக்கியப் பங்காற்றி, பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய உதவிகளையும் நிவாரணப் பணிகளையும் செய்கின்றனர். இனக்கலவரங்களின்போது, பதட்டநிலை உச்ச நிலையில் இருக்கையில் அவர்கள் அமைதிக் குழுக்களை அமைத்து, அமைதியை நிலைநாட்ட போதிய நடவடிக்கைகள் எடுக்கின்றனர்.

(i) காவலரின் நண்பர்கள் :

பொது மக்களின் ஒத்துழைப்பைத் தொடர்ந்து பெறும் நோக்கத்துடனும், பொது மக்களின் நல்லெண்ணத்தைப் பெறும் வகையிலும், நான் காவலர்-பொது மக்கள் நல்லுறவை ஏற்படுத்த "காவலரின் நண்பர்கள்" என்கிற ஒரு தொண்டு இயக்கத்தை ஏற்படுத்தலாம் என்று கருத்துத் தெரிவித்தேன். இந்த இயக்கம், முதற்கண் இராமநாதபுரத்தில் தொடங்கப்பட்டது. பின்னர், ஏனைய மாவட்டங்களும் அதனைப் பின்பற்றின. சிவில் (அல்லது) குற்றவியல் வழக்கு எதிலும் சம்பந்தப்படாத ஒரு குடிமகன், காவலரின் நண்பராகலாம். இவ்வாறு நண்பராவதால், காவலரின் மதிப்பு உயரும் ; தகவல் தொடர்பு வாய்ப்புகள் பெருகும் ; பொது மக்களின் நல்லெண்ணமும், உளவுத் தகவல், மனித ஆற்றல் கிடைப்பதற்கும் பெரிதும் உதவும்.

இதுவரையில், சுமார் 25,000 பேர் "காவலரின் நண்பர்கள்" என்று தம்மை பதிவு செய்து கொண்டுள்ளனர். குற்றங்கள் அதிகமாக நடக்கும் பகுதிகளில், குறிப்பாக, நள்ளிரவுகளில் இரவு நேர ரோந்துப் பணி புரிவதிலும், போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கும் வேளைகளில், நெருக்கடி மிக்க

பகுதிகளில் போக்குவரத்தை முறைப்படுத்தல், முக்கியமான பண்டிகைகளின்/விழாக்களின்போது கும்பலைக் கட்டுப்படுத்தல் ஆகிய பணிகளில் பொது மக்கள், உள்ளூர் காவலர்களுக்கு உதவுகின்றனர்.

(ii) கடலோரப் பாதுகாப்புக் குழு :

இம்மாநிலத்தின் கடலோரப் பகுதிகளில், காவலர்-பொதுமக்கள் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக, கடலோரக் கிராமம் ஒவ்வொன்றிலும் கடலோரப் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இக்குழுவில், கடலோரக் கிராமம் ஒவ்வொன்றையும் சேர்ந்த உடல் வலிமை மிக்க படித்த மீனவர் 10 பேர் இருப்பர். இக்குழுவின் உறுப்பினர்களிடம், தங்களுடைய கிராமங்களை, கள்ளக்கடத்தல்காரர்களிடமிருந்தும், மீன்பிடித் தொழிலுக்குத் தடையாக இருக்கின்ற ஏனைய சமூக விரோத சக்திகளிடமிருந்தும் பாதுகாக்கின்ற பொறுப்பும், அந்தந்த பகுதிகளில் குற்றங்கள் நடப்பதைத் தடுப்பதில் காவலருக்கு உதவுகின்ற பொறுப்பும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்த இயக்கம், வருகின்ற மாதங்களில் தீவிரமாகச் செயல்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

XIII. தடய அறிவியல் துறை :

தமிழ்நாடு தடய அறிவியல் துறை, ஆசிய கண்டத்திலேயே மிகவும் பழமை வாய்ந்த ஒரு முன்னோடித் துறையாகும். இத்துறை 1849-ஆம் ஆண்டிலேயே துவக்கப்பட்டுள்ளது. இந்தத் துறையைச் சேர்ந்த அறிவியல் ஆய்வகம் தடய அறிவியல் வசதிகளை, மாநிலத்திலுள்ள சட்டத்தை நிர்வகிக்கும் துறைகளுக்கும், மைய அரசின் துறைகளுக்கும், கோரும்போது அளிக்கிறது.

53-68--36

[1995 ஏப்ரல் 6

இத்துறையில் சென்னையில் ஒரு முதன்மை ஆய்வுக்கூடம் உள்ளது. இதில் பதினான்கு பிரிவுகள் உள்ளன. அதாவது மானிடவியல், துப்பாக்கியியல், உயிரியல், வேதியியல், ஆவணங்கள், ஆயத் துறை, கருவி இயல், போதைப் பொருள், நிழற்படம், பௌதீகயியல், மதுவிலக்கு, ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி, குருதி நீரியியல், நச்சியியல் பிரிவுகளைக் கொண்டது. மதுரை, கோயம்புத்தூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, வேலூர் மற்றும் சேலம் ஆகிய இடங்களில் ஆறு வட்டார ஆய்வுக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. களத்தில் வசதிகளை வழங்குவதற்காக இம் மாநிலத்தில் 24 காவல் மாவட்டங்களில் 24 நடமாடும் தடய அறிவியல் ஆய்வுக் கூடங்கள் உள்ளன. இது தவிர, சென்னையில் 24 மணி நேரமும் இயங்கும் ஒரு நடமாடும் தடய அறிவியல் ஆய்வகம் உள்ளது.

இத் துறை, தடயஅறிவியல் கல்வி வசதிகளை அளிக்கிறது. மேலும், இத் துறை, எம்.எஸ்.சி. (சுற்றுச்சூழல்-நச்சியியல்) மாணவர்களுக்குப் பாடக் கல்வி/செய்முறைக்கல்வி நடைமுறை வகுப்புகளையும் நடத்துகிறது. சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைந்து எம்.எஸ்.சி. பாடத்திட்டத்தை வழங்குகிற ஒரேயொரு அரசுத் துறை இத் துறையாகும். இத் துறை, தடய அறிவியலில் டாக்டர் (பி.எச்.டி) பட்டங்களை அளிப்பதோடு, சென்னைப் பல்கலைக் கழகம் மற்றும் தமிழ்நாடு மருத்துவக் கல்வி நிலையங்களுடன் இணைந்து குற்றவியல் மற்றும் நச்சுவியல் தொடர்புடைய பட்டமேற்படிப்பு வகுப்புகளை அதாவது எம்.எஸ்.சி (சுற்றுச்சூழல்-நச்சியியல்) எம்.டி. (தடயவியல் மருத்துவம்), எம். ஏ. (குற்றவியல்) வகுப்புகளை நடத்த உதவி வருகிறது. தடய அறிவியலில் பி.எச்.டி. ஆராய்ச்சிப் பட்டத்திற்குரிய ஓர் ஆராய்ச்சி மையமாக, இத்துறை, சென்னைப் பல்கலைக் கழகம், டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக் கழகம் மற்றும் அண்ணா பல்கலைக் கழகம் ஆகியவற்றால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இத்துறை, 1-1-1994 முதல் 31-12-1994-வரையிலான கால அளவில், 49,772 இனங்கள் சம்பந்தப்பட்ட 1,95,616

1995 ஏப்ரல் 6]

பொருட்களைக் கையாண்டுள்ளது. சட்டத்தை அமல்படுத்தும் துறைகளுக்கு, தடய அறிவியல் பணிகளை அளிப்பதோடன்றி, சென்னை நகர் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் உள்ள மருத்துவமனைகளில் விஷம் அருந்தி பாதிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் வகையில், நச்சியியல் மருத்துவ வசதிகளையும் வழங்குகிறது. பிரச்சினைக்குள்ளான குழந்தைக்கு தகப்பன் யார் என்பதை முடிவு செய்யும் மையமும் இத்துறையில் உள்ளது.

பணியாளர் வசதியுடன் முழு வசதி பெற்ற வெடிமருந்து தடய அறிவியல் பிரிவு ஒன்றுக்கு அரசு, 1994-95-ஆம் ஆண்டில் அனுமதி வழங்கியுள்ளது. இத்துறை, இயக்குநர் ஒருவரின் தலைமையின் கீழ் 421 உறுப்பினர்கள், 195 விஞ்ஞானிகள் மற்றும் 226 அறிவியல் துணைப் பணியாளர்கள் உதவியுடன் இயங்கி வருகிறது.

XIV. விளையாட்டரங்கில் சாதனைகள் :

தமிழ்நாடு காவல் துறை பணியாளர்கள், விளையாட்டுகள் மற்றும் போட்டி விளையாட்டுகளில், தங்களுடைய திறமையை நிரூபித்து வருகின்றனர். விளையாட்டு-போட்டி விளையாட்டுகளில் தன்னிகரற்ற சாதனை புரிந்து இந்த ஆண்டிலும் தொடர்ந்து அவர்கள் தங்கள் திறமையை வெளிப்படுத்தியுள்ளனர்.

1994-ஆம் ஆண்டில், தமிழ்நாடு காவல் துறையினர் பின்வரும் விளையாட்டு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர்.

1. மதுரையில் மாநில தடகளப்போட்டியில் பங்கேற்று, நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த, தலைமைக் காவலர் முரளி (எண். 593) (5,000 மீட்டர் மற்றும் 10,000 மீட்டரில்) தங்கப் பதக்கத்தைப் பெற்றார்.
2. 10-1-1994 முதல் 12-1-1994 வரையில் திருச்சிராப்பள்ளியில், மாநிலக் காவல் துறை விளையாட்டுக்கள் நடைபெற்றன.

3. 21-2-1994 முதல் 28-2-1994 வரையில் ஜெய்பூரில் நடந்த, அகில இந்திய காவல் துறையினருக்கான விளையாட்டுப் போட்டிகளில், தமிழ்நாடு காவல் துறையினர் கலந்து கொண்டனர்.
4. நாகப்பட்டினம் - காயிதே மில்லத் மாவட்டத்தைச் சேர்ந்த ஆர். இராஜன் காவலர் நிலை-I, (எண். 1028) டீக் வொன்டோ (Teak Wondo) கராத்தே சாம்பியன் போட்டியில் 2 Don நிலையிலிருந்து 3 Don நிலைக்கு வந்தார்.
5. சென்னையில், 28-6-1994 முதல் 30-6-1994 வரையில், மாநிலக் காவல் துறையினர் விளையாட்டுப் போட்டி நடத்தப்பட்டது.
6. 5-7-1994 முதல் 8-7-1994 வரையில், சென்னையில் மாநிலக் காவல் துறையினர் நீர் விளையாட்டுப் போட்டி நடத்தப்பட்டது.
7. 30-7-1994 மற்றும் 31-7-1994 வரையில், சென்னையில் நடைபெற்ற டீக் வொன்டோ (Teak Wondo) கராத்தே சாம்பியன் போட்டியில் ஆர். இராஜனும் (காவலர் நிலை-I எண் 1028) ஏனைய 12 பேர்களும் கலந்து கொண்டு ஒரு தங்கப் பதக்கமும் ஒரு வெள்ளி பதக்கமும் பரிசு பெற்றனர்.
8. 20-8-1994 முதல் 23-8-1994 வரையில், திருச்சிராப்பள்ளி சரகத்தில், 1994 ஆம் ஆண்டு சரகங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன.
9. 19-9-1994 முதல் 23-9-1994 வரையில் ஜெய்பூரில் நடைபெற்ற அனைத்திந்திய காவல் துறையினருக்கான, நீர் விளையாட்டுப் போட்டிகளிலும் (Aquatic Meet) நீர் மற்றும் வெகுதூரம் ஓடும் (Cross country) விளையாட்டுப் போட்டிகளிலும் தமிழ்நாடு காவல் துறையினர் கலந்து கொண்டனர்.

1995 ஏப்ரல் 6]

எனது தலைமையில் சென்னையில் ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கை, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் திறந்து வைத்தபோது, தமிழ்நாடு காவல் துறையினர், தங்களுடைய திறமையை வெளிக்காட்டி, பார்வையாளர்களின் பாராட்டைப் பெற்றனர்.

XV. முடிவுரை :

தமிழ்நாடு காவல் படை, எவ்வித ஐயப்பாட்டினுக்கும் இடமின்றி நாட்டிலேயே சிறந்த காவல் படையாக விளங்குகிறது. தமிழ்நாடு மாநிலக் காவல்படை மற்றவர்களுக்கு பல துறைகளிலும் முன் மாதிரியை ஏற்படுத்தியுள்ளது. நவீனமயமும், மனிதாபிமானமும் தமிழ்நாடு காவல் துறையை வழி நடத்தும் இரண்டு அடிப்படைக் கொள்கைகளாகும். கடந்த 50 ஆண்டு காலமாக இருந்துவரும் இலங்கைப் பிரச்சினையைக் கருத்திற்கொண்டும், சமூகச் சட்டங்களைச் செயற்படுத்தி கணிசமாகத் தேவைப்படுகிற மனித உழைப்பைக் கருத்திற்கொண்டும், காவல் துறையின் சாதனைகள் கருதிப்பார்க்கப்பட வேண்டியுள்ளது. மதுவிலக்குச் சட்டத்தைச் செயல்படுத்தி வருகின்ற ஒருசில மாநிலங்களில், தமிழ்நாடும் ஒன்றாகும். சட்டம்-ஒழுங்கு நிலைமையைக் காவல் துறை பராமரித்து வருவதுடன், இயற்கை சீற்றங்களின் போதும், காவல் துறை, தன்னுடைய உதவிக் கரங்களை நீட்டி சிறப்பாகப் பணியாற்றியுள்ளது.

இவ்வரசு, தமிழ்நாடு காவல் படையின் பலத்தையும், பலவீனத்தையும், முழுமையாக அறிந்துள்ளது. தமிழ்நாட்டில் காவல் படை, பல்வேறு இனங்களில் பலத்தால் வெற்றியையும், சில இனங்களில், தோல்வியையும் சந்தித்துள்ளது. இலங்கைப் போராளிகள் / விடுதலைப் புலிகள், ஏனைய தீவிரவாதிகளின் நடவடிக்கைகளைத் தொடர்ந்து கட்டுப்படுத்துவதில் ஏற்பட்ட சில பெரிய கடுமையான சட்டம்-ஒழுங்கு பிரச்சினைகளைச் சமாளித்ததிலும், மிக முக்கிய பிரமுகர்களுக்கும், பொது மக்களுக்கும் பாதுகாப்பு வசதிகளை அளித்ததிலும், காவல் துறை எய்திய தன்னிகரற்ற சாதனைகள் சிலவற்றை இந்த


அரசு, கருத்திற்கொண்டு அவர்களது பணிகளைப் பாராட்டியுள்ளது. ஆய்வாண்டில், குற்றங்களின் கண்டுபிடிப்பு சதவீதம், கணிசமாக அதாவது 64 சதவீதத்திலிருந்து 74.3 சதவீதமாக உயர்ந்துள்ளதை நாம் பெருமையாகக் குறிப்பிட வேண்டியுள்ளது.

மறுபுறத்தில், காவல் படையின் பலவீனத்தை அரசு கண்டறிந்துள்ளது. காவலர் எண்ணிக்கை, காவல் நிலையங்கள், காவல் துறையினரின் விரைந்து இயங்கும் தன்மை, தகவல் தொடர்பு, பயிற்சி, காவல் துறையினரின் போக்கு, நோக்கம், தலைமை ஆகிய வகையில் காவல் படையின் குறைபாடுகள், வசதியின்மை, போதாமை ஆகியவற்றை இவ்வரசு கண்டறிந்துள்ளது. வேரூன்றியுள்ள மேற்சொன்ன பிரச்சினைகளுக்கு, உடனடித் தீர்வுகள் எவையும் இல்லை. ஆனால், மேற்சொன்ன பிரச்சினைகள் பற்றி அறிந்துள்ள ஒரு நிலைமையானது, அப்பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காண உதவியாக அமையும். வேகமாக மாறிவரும் சமுதாயத்தின் தேவைகள், நாட்டங்கள் ஆகியவற்றை நிறைவு செய்ய காவல் துறையின் திறமையையும், முனைப்பையும் மேலும் மேம்படுத்த வேண்டுமென்பதை ஒப்புக்கொள்ள வேண்டியுள்ளது. மக்களின் மேற்சொன்ன தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு நிருவாகத்தில் ஏனைய துறைகளைப் போன்று, காவல் படையையும் அதி நுட்பத்திறனுடையதாக மேம்படுத்த வேண்டுமென்பதில் எவ்வித ஐயமுமில்லை.

சுருங்கக்கூறின், இவ்வரசு, ஆட்சிப் பொறுப்பேற்றபின், இம்மாநிலத்தில், காவல் படை செவ்விய முறையில் செயல்படுவதற்கு உகந்த ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில், காவல் படையை நவீனமாக்குவதற்கும், காவல் படையின் திறன், சாதனங்கள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கும் இவ்வரசு எடுத்த முயற்சியானது காவல் துறையினரின் மீதுள்ள நன்மதிப்பை உயர்த்தியுள்ளதோடு, காவல் துறையினரின் மீதுள்ள நம்பிக்கையை அதிகப்படுத்து வதற்கும், அவர்களுடைய ஒழுங்குணர்வை அதிகப்படுத்து வதற்கும் பெரிதும் உதவியுள்ளது.

இணைப்பு -I

தமிழ்நாடு காவல் தலைமை அமைப்பு



விளக்கம்

1.	கா. து. த. இ.	..	காவல்துறை தலைமை இயக்குநர்
2.	கா. ஆ	..	காவல் ஆணையாளர்
3.	கூ. இ.	..	கூடுதல் இயக்குநர்
4.	து. ஆ	..	துணை ஆணையாளர்
5.	கா. க.	..	காவல் கண்காணிப்பாளர்
6.	பொ. கு.	..	பொருளாதாரக் குற்றங்கள்
7.	தி & ஒ	..	திட்டம் மற்றும் ஒருங்கிணைப்பு
8.	இ. பா.	..	இருப்புப் பாதை பாதுகாப்பு
9.	ச & ஒ.	..	சட்டம் மற்றும் ஒழுங்கு
10.	கு. பா. பி.	..	குடியியல் பாதுகாப்புப் பிரிவு
11.	த. இ.	..	தலைமையிடம்
12.	ஊ. ப.	..	ஊர்க் காவல் படை
13.	ஆ. ப.	..	ஆயுதப் படை
14.	கு. பொ. வழங்கல்	..	குடிமைப் பொருள் வழங்கல்
15.	வ. பி.	..	வனப் பிரிவு
16.	சி. பு. கு.	..	சிறப்புப் புலனாய்வுக் குழு
17.	போ. வ.	..	போக்குவரத்து
18.	தொ. நுட்பம்.	..	தொழில் நுட்பம்
19.	கு. பு.	..	குற்றப் புலனாய்வு
20.	தி. வேலி	..	திருநெல்வேலி
21.	ம. வி.	..	மது விலக்கு
22.	வா. போ. வ.	..	வாகனப் போக்கு வரத்து
23.	கா. வா. அ.	..	காவல் வானொலி அலுவலர்
24.	கு. பி.	..	குற்றப் பிரிவு
25.	வணிக கு.பு.பிரிவு	..	வணிக குற்றப் புலனாய்வுப் பிரிவு
26.	வி. பா. பி.	..	விமான பாதுகாப்பு பிரிவு
27.	நிர்	..	நிர்வாகம்
28.	ரெஜி. நி.	..	ரெஜிமெண்டல் நிலையம்
29.	நு. அ.	..	நுண்ணறிவு
30.	சி. பா. படை	..	சிறப்புப் பாதுகாப்புப் படை
31.	கா. ப. கல்லூரி	..	காவலர் பயிற்சிக் கல்லூரி
32.	கா. ப. பள்ளி	..	காவலர் பயிற்சிப் பள்ளி

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS

CHIEF REPORTER
FORT ST. GEORGE.
12 NOV 1999
Chennai -600 009.
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY SECRETARIAT

இணைப்பு-II

1-1-1995 அன்றுள்ள நிலவரப்படி, அனுமதிக்கப்பட்ட தமிழ்நாடு காவல் துறைப் பணியாளர்களின் எண்ணிக்கை.

தொடர் எண். (1)	தகுதி (2)	1-1-95 அன்றுள்ள நிலவரப்படி மொத்த எண்ணிக்கை. (3)
1.	காவல் துறைத் தலைமை இயக்குநர்கள்	4
2.	காவல் துறைக் கூடுதல் தலைமை இயக்குநர்கள்	12
3.	காவல் துறைத் தலைவர்கள்	16
4.	காவல் துறைத் துணைத் தலைவர்கள்	36
5.	காவல் துறைக் கண்காணிப்பாளர்கள்	98
6.	காவல் துறைக் கண்காணிப்பாளர்கள்-II	4
7.	படைத் தளவாய்கள் (Commandants)	2
8.	காவல் துறைக் கூடுதல் கண்காணிப்பாளர்கள், நிலை-I	33
9.	காவல் துறைக் கூடுதல் கண்காணிப்பாளர், நிலை-II	6
10.	படைத் துணை தளவாய்கள்	5
11.	காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளர்கள், நிலை-I	420
12.	காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளர்கள், நிலை-II	43
13.	படை உதவி தளவாய்கள்	39
14.	காவல் துறை ஆய்வாளர்கள்	1,707
15.	காவல் துறைக் கூடுதல் ஆய்வாளர்கள்	7

[1995 ஏப்ரல் 6

தொடர் எண். (1)	தகுதி (2)	1-1-95 அன்றுள்ள நிலவரப்படி மொத்த எண்ணிக்கை. (3)
16.	காவல் துறை ஆய்வாளர்கள், (ஆயுத சேமக் காவல்படை)	118
17.	காவல் துறை உதவி ஆய்வாளர்கள்	4,434
18.	காவல் துறை உதவி ஆய்வாளர்கள் (ஆயுத சேமக் காவல் படை)	632
19.	தலைமைக் காவலர்கள்	8,508
20.	ஹவில்தார்கள் (Havildars)	1,158
21.	காவலர்கள் நிலை-I	21,411
22.	நாயக் (Naiks)	688
23.	லான்ஸ் நாயக் (Lance Naiks)	1,127
24.	காவலர்கள் நிலை-II	34,041
25.	காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளர்கள் (மகளிர்)	26
26.	காவல் துறை ஆய்வாளர்கள் (மகளிர்)	31
27.	காவல் துறை உதவி ஆய்வாளர்கள் (மகளிர்)	118
28.	காவல் துறைத் தலைமைக் காவலர்கள் (மகளிர்)	103
29.	காவல் துறைக் காவலர்கள் (மகளிர்)	2,599
	மொத்தம்	**77,426**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1995 ஏப்ரல் 6]

இணைப்பு-III

1994-ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட கூடுதல் பதவிகள் பற்றிய விவரங்கள்.

அ. நிருவாகப் பதவிகள்:

1.	காவல் துறைக் கூடுதல் தலைமை இயக்குநர்கள் ..	4
2.	காவல் துறைத் தலைவர் ..	1
3.	காவல் துறைத் துணைத் தலைவர்கள் ..	3
4.	காவல் துறைக் கண்காணிப்பாளர்கள் ..	10
5.	காவல் துறைக் கூடுதல் கண்காணிப்பாளர்கள் ..	4
6.	காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளர்கள் ..	57
7.	காவல் துறை ஆய்வாளர்கள் ..	165
8.	காவல் துறை உதவி ஆய்வாளர்கள் ..	202
9.	தலைமைக் காவலர்கள் ..	1,421
10.	காவலர்கள், நிலை-I ..	8,011
11.	காவலர்கள், நிலை-II ..	768
12.	காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளர்கள் (மகளிர்).	26
13.	காவல் துறை ஆய்வாளர்கள் (மகளிர்) ..	4
14.	காவலர்கள் (மகளிர்) ..	1,548
	மொத்தம் ..	**12,224**

ஆ. அலுவலகப் பணியாளர்கள்:

1.	நேர்முக உதவியாளர்கள் ..	14
2.	உதவியாளர்கள் ..	367
3.	இளநிலை உதவியாளர்கள்-தட்டச்சர்கள் ..	9
4.	அலுவலக உதவியாளர்கள் ..	40
	மொத்தம் ..	**430**

இணைப்பு-IV

1994-95–ஆம் ஆண்டிற்கான பகுதி-II திட்டப் பணிகளின் பட்டியல்:

தொடர் எண்.	திட்டப் பணிகள் விவரம்	செலவு (ரூபாய் இலட்சத்தில்)
1.	திண்டுக்கல் - அண்ணா மாவட்டம், கொடைக்கானலில் போக்குவரத்துக் காவல் நிலையம் ஒன்றை ஏற்படுத்துதல்	12.43
2.	திண்டுக்கல் - அண்ணா மாவட்டம் சின்னாளப்பட்டியில் காவல் நிலையம் ஒன்றைத் தொடங்குதல்.	2.25
3.	நாகப்பட்டினம் - காயிதே மில்லத் மாவட்டம், மயிலாடுதுறையில் அனுப்பிய தந்திச் செய்தியைத் தானாகவே திருப்பியனுப்பும் (Repeater) நிலையம் அமைத்தல்.	1.95
4.	கீழ்க்காணும் மாவட்டங்களிலுள்ள காவல் நிலையங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு தொலைபேசி வசதி செய்து கொடுத்தல்	
	(i) ஏர்வாடி தர்கா காவல் நிலையம், இராமநாதபுரம் மாவட்டம்.	
	(ii) பழையனூர் காவல் நிலையம் (பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம்)	
	(iii) அல்லிநகரம் காவல் நிலையம் மதுரை ஊரக மாவட்டம் (சொந்தத் தொலைபேசி அடிப்படையில்)	0.93
5.	கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோயிலில் காவல் துறைக் கண்காணிப்பாளர் குடியிருப்புகள் கட்டுதல்.	14.50

தொடர் எண்.	திட்டப்பணிகள் விவரம்	செலவு (ரூபாய் இலட்சத்தில்)
6.	சென்னை மாநகரக் காவல் - சென்னை மாநகரிலுள்ள சில காவல் துறை குடியிருப்புகளுக்குத் துப்புரவு மற்றும் சிறப்புப் பழுதுபார்ப்புகள்/ மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளுதல்.	13.47
7.	தமிழ்நாட்டிலுள்ள சில ஆயுத சேமக் காவல் படை குடியிருப்புகளுக்கு, இரயில்வே காவலர் குடியிருப்பு களுக்கு, காவலர் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கல் ஏற்பாடு, அவசர சிறப்புப் பழுதுபார்ப்புப் பணிகள், மின்கம்பிகளை மாற்றியமைத்தல் ஆகியவற்றிற்கு வகை செய்தல்.	12.65
8.	தஞ்சாவூர் மாவட்டம் - பட்டுக்கோட்டை காவல் நிலையத்தில் மேல்நிலை நீர்த்தொட்டி கட்டுதல், கிணற்றை ஆழப்படுத்துதல், குடிநீர் வழங்கல் இணைப்பு முதலிய வசதிகள் ஏற்படுத்துதல்.	2.58
9.	பழனி, தமிழ்நாடு சிறப்புக் காவல் படை - காவலர் குடியிருப்புகளுக்குச் சிறப்புப் பழுதுபார்ப்புப் பணிகள்.	3.30
10.	கன்னியாகுமரி மாவட்டம், காவலர் குடியிருப்புகளின் மின் சாதனங் களுக்குச் சிறப்புப் பழுதுபார்ப்புப் பணிகள் (தக்கலை காவல் நிலையம்)	2.48
11.	போடி நாயக்கனூர், ஈரோடு ஆகிய இடங்களிலுள்ள இரயில்வே காவலர் குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கல் ஏற்பாடு மற்றும் சிறப்புப் பழுதுபார்ப்புப் பணிகள்.	3.06

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1995 ஏப்ரல் 6

தொடர் எண். (1)	திட்டப்பணிகளின் விவரம் (2)	ஏற்படும் செலவு (ரூபாய் இலட்சத்தில்) (3)
12.	சேலம் மாவட்டம் சூரமங்கலத்திலுள்ள இரயில்வே காவலர் குடியிருப்புகளுக்குச் சிறப்புப் பழுது பார்ப்புப் பணிகள்.	2.50
13.	உள்துறையின் 4-5-1990 ஆம் நாளிட்ட 945-ஆம் எண் அரசாணையில் அனுமதிக்கப்பட்ட 50 அமைச்சுப் பணியாளர்களுக்குத் தேவையான மேசை, நாற்காலி, போன்றவற்றை வாங்குதல்.	2.62
14.	உள் துறையின் 18-8-1989-ஆம் நாளிட்ட 1980-ஆம் எண் அரசாணையில் அனுமதிக்கப் பட்ட கூடுதல் பணியாளர்களுக்குத் தேவையான மேசை, நாற்காலி போன்றவற்றை வாங்குதல்.	0.40
15.	அனைத்து மகளிர் காவல் நிலையங்களுக்கு 15 டெம்போ ட்ராக்ஸ் ஜீப்புகள் வாங்குதல்.	33.45
16.	திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள குற்றப்புலனாய்வுத் துறையின் சிறப்புப் பிரிவுகளுக்கு 7 புதிய தொலைபேசி வசதி செய்து கொடுத்தல்.	2.51
	மொத்தம் ..	111.08

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-V

1995-96–ஆம் ஆண்டில் நிறைவேற்றக் கருதப்பட்டுள்ள பகுதி-II திட்டப்பணிகளின் பட்டியல்.

தொடர் எண். (1)	திட்டப்பணிகளின் விவரம் (2)	ஏற்படும் செலவு (ரூபாய் இலட்சத்தில்) (3)
1.	தஞ்சாவூர் மாவட்டம், சுவாமி மலை புறக்காவல் நிலையத்தைக் காவல் நிலையமாக நிலை உயர்த்துதல்.	7.09
2.	வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், விருதம்பட்டு புறக்காவல் நிலையத்தைக் காவல் நிலையமாக நிலை உயர்த்துதல்.	7.09
3.	ஈரோடு, கொடுமுடி கிராமத்தில் காவலர் குடியிருப்பு கட்டுவதற்காக நிலத்தைக் கையகப்படுத்துதல்.	1.35
4.	மதுரை, சிலைமான் கிராமத்தில், 31-ஆம் எண். 5 நி.அ.புலத்தில் 11-0.32 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தைக் கையகப்படுத்துதல்.	0.84
5.	பெரியார் மாவட்டம், கடத்தூரில், காவல் நிலையமும், காவலர் குடியிருப்புகளும் கட்டுவதற்காக, நிலத்தைக் கையகப்படுத்துதல்.	0.64
6.	கன்னியாகுமரி மாவட்டம், நித்திலைவிளையில் காவல் நிலையமும், காவலர் குடியிருப்புகளும் கட்டுவதற்காக, நிலத்தைக் கையகப்படுத்துதல்	2.17
7.	செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர் (மேற்கு) மாவட்டம் மறைமலை நகரில் காவல் நிலையம் கட்டுவதற்கு நிலத்தைக் கையகப்படுத்துதல்	3.37

தொடர் எண். (1)	திட்டப்பணிகள் விவரம் (2)	செலவு (ரூபாய் இலட்சத்தில்) (3)
8	சேலம், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் திருச்செங்கோடு காவல் நிலையம் கட்டுவதற்கு நிலத்தைக் கையகப்படுத்துதல்	4.97
9	காவலர் குடியிருப்புகளில் பழுது பார்ப்புப் பணிகளை மேற்கொள்ள்வும் பராமரிக்கவும் வகை செய்தல்	25.85
10	காவல் நிலைய கட்டிடங்களில் பழுது பார்ப்புப் பணிகளை மேற்கொள்ளவும், பராமரிக்கவும் வகை செய்தல்	10.72
11	காவலர் குடியிருப்புகளில் சிறப்புப் பழுது பார்ப்புப் பணிகளும், மின் இணைப்புகளைப் புதுப்பித்தலும்	18.84
12	காவலர் குடியிருப்புப் பகுதிகளில் தெருவிளக்கு வசதி செய்து கொடுத்தலும், மின் இணைப்புகளைப் புதுப்பித்தலும்	15.83
13	தமிழ்நாடு சிறப்புக் காவல் படை IX-ஆம் அணிக் காவலர் குடியிருப்புகளில் மின் இணைப்பு பழுது பார்ப்புப் பணி	0.80
14	வேலூர் காவலர் தேர்வு பள்ளியுடன் இணைந்த காவலர் குடியிருப்புகளில் அமைக்கப்பட்டுள்ள மின் இணைப்பு சாதனங்களில் பழுது பார்ப்பு பணிகளை மேற்கொள்ளுதல்	0.47
15	தஞ்சாவூரில் இரயில்வே காவலர் குடியிருப்புகளில் பழைய மின்கம்பிகளுக்குப் பதிலாக புதிய மின் கம்பிகள் பொருத்துதல்	0.88
16	தமிழ்நாடு சிறப்புக் காவல் IV-வது படை பிரிவு, கோவைபுதூர் காவலர் குடியிருப்புகளில் உள்ள மின் அமைப்புகளில் பழைய மின் கம்பிகளுக்குப் பதிலாக புதிய மின்கம்பிகள் அமைத்தல்	1.25

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

தொடர் எண். (1)	திட்டப்பணிகள் விவரம் (2)	செலவு (ரூபாய் இலட்சத்தில்) (3)
17	தமிழ்நாடு சிறப்பு காவல் VII படைப் பிரிவு, பழனியில் உள்ள காவலர் குடியிருப்புகளில் மின் இணைப்புகளில் புதிய மின் கம்பிகள் பொருத்துதல்	1.59
18	போதை மருந்து குற்றப் புலனாய்வு துறையின் சிறப்புப்பிரிவுகளுக்கு 11 புதிய தொலைபேசி இணைப்புகள் அளித்தல்	1.60
	மொத்தம் ..	**105.35**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-VI

இவ்வாண்டில் அனுமதிக்கப்பட்ட முக்கிய பணிகளின் பட்டியல்

1. பின்வரும் இடங்களில் ஏழு புதிய காவல் நிலையங்கள் அமைக்க அரசு அனுமதி அளித்துள்ளது.

a)	மீனம்பாக்கம் விமான நிலையம்	..	(செங்கை-எம்.ஜி.ஆர். கிழக்கு)
b)	டாக்டர் ஜெ. ஜெயலலிதா நகர்	..	(செங்கை எம்.ஜி.ஆர் கிழக்கு)
c)	தமிழ்ப்பல்கலைக் கழகம்	..	(தஞ்சாவூர்)
d)	சின்னாளப்பட்டி	..	(திண்டுக்கல்-அண்ணா)
e)	கடற்பணி காவல் நிலையம்,	..	தூத்துக்குடி (சிதம்பரனார்)
f)	அனைத்து மகளிர் காவல் நிலையம்,	..	கரூர், (திருச்சிராப்பள்ளி)
g)	அனைத்து மகளிர் காவல் நிலையம்,	..	உடுமலைப்பேட்டை (கோயம்பத்தூர்)

2. இவ்வாண்டில், 49 புதிய காவல் உட்கோட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன.

3. (சென்னை மாநகரம், கரூர், உடுமலைப்பேட்டை நீங்கலாக) முதன் முறையாக, அனைத்து மகளிர் காவல் நிலையங்களுக்கும், 26 புதிய காவல்துறை மகளிர் துணை கண்காணிப்பாளர் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டன.

4. இவ்வாண்டில், 150 காவல் நிலையங்கள் காவல் துறை ஆய்வாளர் பொறுப்பு வகிக்கும் காவல் நிலையங்களாக நிலை உயர்த்தப்பட்டன.

5. சென்னை மாநகரில் பணிபுரியும் காவல்துறை பணியாளர்களுக்கு குடியிருப்பு வசதிகள் செய்து கொடுப்பதற்காக, காவல்துறை மாநகரம் ஒன்றை ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டது.

6. மாறிவரும் தொழில் நுட்பங்களுக்கு ஏற்ப நவீன பயிற்சிகள் அளிப்பதற்காக தமிழ்நாடு காவலர் பயிற்சி நிலையம் (Tamil Nadu Police Academy) ஒன்று ஏற்படுத்த அனுமதி அளிக்கப்பட்டது.

7 தமிழ்நாட்டைச் சேர்ந்த 1000 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரை நெடுகப்பாதுகாப்பை வலுப்படுத்தும் பொருட்டு கடலோரப் பாதுகாப்பு காவல் படைப்பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

8. சாலையோரங்களில் நடைபெறும் திருட்டை தவிர்க்கவும், சாலைகளில் விபத்துகள் ஏற்படும் நேர்வுகளில் உடனுக்குடன் மருத்துவ நிவாரணம் வழங்குவதற்கும் 190 நெடுஞ்சாலை தணிக்கைச் சாவடிகள் நிறுவப்பட்டன. இந்நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் 40 பகுதிகளில் 160 நெடுஞ்சாலை சுற்று காவலர் படைப்பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன.

9. தமிழ்நாடு காவல் துறை தலைமை இயக்குநர் அலுவலகத்திற்காக, 10 மாடி கொண்ட நவீன அலுவலக வளாகம் ஒன்றைக் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-3

[53-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

தமிழ்நாடு தீயணைப்புத்துறை

மானியக் கோரிக்கை எண். 16

கொள்கை விளக்கக் குறிப்பு

1995-96

I. முன்னுரை

தீயின் பயன் பரந்த அளவிலானது; நாகரிக வாழ்க்கைக்கு மிக இன்றியமையாதது. அதே நேரத்தில் அது ஆபத்தானதும் அழிவினை உண்டாக்கும் ஆற்றலைக் கொண்டதும் ஆகும். நகர்ப்புற நாகரிக வளர்ச்சி, மாநகரங்கள், நகரங்களின் துரித வளர்ச்சி, அதனைத் தொடர்ந்து அதிகரித்துவரும் மக்கள் தொகை, குடியிருப்புகள் ஆகியவற்றின் காரணமாக தீயினால் உயிருக்கு ஆபத்தும் உடைமைகளுக்குச் சேதமும் ஏற்படும் வாய்ப்புகள் பெருகிவருகின்றன. அதிலும் குறிப்பாக, எளிதில் தீப்பற்றக்கூடிய பொருட்களைக் கொண்டு கட்டப்பட்ட வீடுகள், குடிசைகளுக்கு தீ பெரும் சேதத்தை ஏற்படுத்துகிறது. எளிதில் தீப்பற்றக்கூடிய திரவங்களான பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய், சமையல் எரிவாயு சிலிண்டர்கள் முதலானவற்றைச் சேமித்துவைப்பதும் தீயினால் ஏற்படும் இன்னல்களை அதிகரிக்கின்றன. இத்தகைய சூழ்நிலையில் தீயினால் ஏற்படும் அழிவிலிருந்து உயிரையும் உடமையையும் பாதுகாப்பதற்காக தீ விபத்தைத் தடுப்பது மட்டுமின்றி தீயணைப்பு பணியும் மிகவும் அவசியமாகிறது. தீயணைப்புத் துறையை முதலில் உருவாக்கிய மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்றாகும். கடந்த காலங்களில் ஆற்றிய மிகச் சிறந்த செயல்களாலும் மற்றும் சாதனைகளாலும் தமிழ்நாடு தீயணைப்புத்துறை, நாட்டிலுள்ள பெரிய திறமைமிக்க அமைப்புகளில் ஒன்றென புகழை ஈட்டியுள்ளது.

[1995 ஏப்ரல் 6

II. குறிக்கோள்கள்

பொது மக்களுக்குச் சேவை செய்யும் தமிழ்நாடு தீயணைப்புத் துறையின் பணிகள் பல்வேறு வகைப் பட்டதாகவும் முதன்மையாகவும் உள்ளன. இச்சேவையைத் தவிர, ஆலோசனை வழங்கும் பணியையும், சட்டங்களில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி ஆற்ற வேண்டிய கடமை மற்றும் முறைப்படுத்தும் பணியையும் மேற்கொள்கிறது.

சேவையைப் பொறுத்த வரையில், இத்துறையின் முக்கிய குறிக்கோள், தீ விபத்துக்களால் ஏற்படும் அபாயம், சேதம் பிற அழிவிலிருந்து உயிர்களையும், உடைமைகளையும் காத்தலாகும். தீயணைப்பு மற்றும் தீத்தடுப்பு தவிர, தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமின்றி, வெள்ளம், புயல், நிலச்சரிவு, கட்டிடம் இடிந்து விழுதல் போன்ற இயற்கையின் சீற்றங்கள், வெடி விபத்துக்கள், இரயில் விபத்துக்கள், மற்றும் பெரும் விபத்துக்களில் பாதிக்கப்பட்டவர்களைக் காப்பாற்றுதலும், அவசர நிவாரணம் அளித்தலும் இத்துறையின் பிற பணிகளுள் அடங்கும். தேர்தல்கள், கலவரங்கள், பொருட்காட்சிகள், திருவிழாக்கள், முக்கிய பிரமுகர்களுக்கு பாதுகாப்பு அளிப்பது ஆகியவற்றில் காவல்துறைக்கும், தொற்றுநோய் பரவும் காலங்களில் பொது சுகாதாரத் துறைக்கும் இத்துறை உதவுகிறது. நோயுற்றவர்களையும் காயம்பட்டவர்களையும் உடனடியாக மருத்துவ சிகிச்சைக்காக மருத்துவ மனைக்கு கொண்டு செல்ல இத்துறையில் உள்ள நோயாளர் ஊர்திகள் பயன்படுத்தப்படுகின்றன.

பன்மாடிக் கட்டிடங்கள், தொழிற்சாலைகள், பொது மக்கள் கூடுமிடங்கள், பொருட்காட்சிகள், திருவிழாக்கள் ஆகியவைகளில் தீத்தடுப்பு ஏற்பாடுகள் குறித்தும் இத்துறை ஆலோசனை வழங்குகிறது.

1995 ஏப்ரல் 6]

பல்வேறு சட்டங்கள் மற்றும் விதிகளின் கீழ் கட்டிடங்களை ஆய்வு செய்து, அறிக்கை அனுப்புவதும் இத்துறையின் பொறுப்பாகும். 1994 ஆம் ஆண்டில் பல்வேறு சட்டங்கள் மற்றும் விதிகளின் கீழ் தீயணைப்பு அலுவலர்களால் ஆய்வு செய்யப்பட்ட கட்டிடங்களின் எண்ணிக்கை குறித்த விவரங்கள் இணைப்பு VI-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

III. நிறுவனமும் நிருவாக அமைப்பும்

இணைப்பு I-ல் உள்ள நிறுவன அமைப்பு குறித்த அட்டவணை தீயணைப்புத் துறையின் அமைப்பு குறித்த விவரத்தைத் தெரிவிக்கிறது.

நிருவாகப் பதவி அமைப்புமுறை

தீயணைப்புத்துறை இயக்குநர் இத்துறையின் தலைவராவார். தீயணைப்புத் துறையைச் சேர்ந்த முதுநிலை அதிகாரி, தீயணைப்புத்துறை இயக்குநராக உள்ளார். இத்துறை சென்னையைத் தலைமையிடமாகக் கொண்ட வட மண்டலம், திருச்சியை தலைமையிடமாகக் கொண்ட மத்திய மண்டலம், மதுரையைத் தலைமையிடமாகக் கொண்ட தென் மண்டலம், கோயம்புத்தூரைத் தலைமையிடமாகக் கொண்ட மேற்கு மண்டலம் என நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மண்டலமும் ஒரு துணை இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது. ஒவ்வொரு மண்டலமும் மூன்று முதல் ஆறு கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோட்டமும், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வருவாய் மாவட்டங்களைத் தன்னகத்தே கொண்டு, ஒரு கோட்டத் தீயணைப்பு அலுவலரின் பொறுப்பின் கீழ் இயங்கி வருகிறது. ஒவ்வொரு கோட்டத் தீயணைப்பு அலுவலருக்கும், நிருவாக மற்றும் தீத்தடுப்புப் பணிகளில்

உதவுவதற்காக, உதவி கோட்டத் தீயணைப்பு அலுவலர் ஒருவர் இருக்கிறார். இணைப்பு IV-ல் குறிப்பிட்டுள்ளவாறு தற்சமயம் இம்மாநிலத்தில் 19 கோட்டங்கள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு கோட்டமும் 6 முதல் 20 தீயணைப்பு நிலையங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. ஒவ்வொரு தீயணைப்பு நிலையமும் ஒரு நிலையத் தீயணைப்பு அலுவலரின் பொறுப்பில் உள்ளது. கோட்டத் தலைமையகங்களில் 17 நடமாடும் பழுதுபார்க்கும் குழுக்கள் இயங்கி வருகின்றன. இவை தவிர, சென்னை மாநகரத்தில் மாநிலப் பயிற்சிப் பள்ளியும் மற்றும் மாநிலப் பட்டறையும் ஒரு கோட்டத் தீயணைப்பு அலுவலரின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன.

IV. துறையிலுள்ள வளங்கள்

(அ) மனித ஆற்றல்

இத்துறையில் பணியாற்றும் பணியாளர்களின் எண்ணிக்கை 6194 ஆகும். ஒவ்வொரு பதவி வகையிலும் உள்ள பணியாளர்களின் விவரம் இணைப்பு II மற்றும் III-ல் கொடுக்கப்பட்டுள்ளன. தீயணைப்புத் துறையில் தீயணைப் போர் பதவியிலுள்ள காலியிடங்களை நிரப்பும் பணி தமிழ்நாடு சீருடைப்பணியாளர் தேர்வு வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டு அப்பணி முடியும் தருவாயில் உள்ளது.

(ஆ) தீயணைப்பு நிலையங்கள்

இத்துறையில் அடிப்படை அலகு தீயணைப்பு நிலையம் ஆகும். இணைப்பு IV-ல் உள்ளவாறு தமிழ்நாட்டில், 224 தீயணைப்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு 25 கி.மீ. தொலைவுக்குள்ளும் ஒரு தீயணைப்பு நிலையம் அமைப்பது இந்த அரசின் குறிக்கோளாகும். இக் குறிக்கோளை அடைவதற்காக, கடுமையான நிதி நெருக்கடி உள்ளபோதும், தொழிற்சாலைகள் அதிக அளவில் உள்ள

1995 ஏப்ரல் 6]

பகுதிகள் மற்றும் குடிசைப் பகுதிகள் போன்ற தீ அபாயம் நிறைந்த பகுதிகளுக்கு முன்னுரிமை அளித்து, மாநிலத்தில் பல்வேறு இடங்களில் தீயணைப்பு நிலையங்களை அரசு அவ்வப்போது அமைத்து வருகிறது.

(இ) ஊர்திகளும், சாதனங்களும்.

தீயணைப்பு மற்றும் மீட்பு அழைப்புப் பணிகளில் விரைந்து செயல்படுவதற்காக, இத்துறையில் 304 நீர்த்தொட்டி வண்டிகளும் / நீர் நிறை வண்டிகளும், 78 நோயாளர் ஊர்திகளும், 7 போம் (Foam) கார்பன்டையாக்சைட் கிராஷ் டெண்டர்கள், 2 அவசரகால மீட்பு ஊர்திகள், 1 ஹைட்ராலிக் பிளாட்பார்ம் (ஸ்நார்கல்), 1 சுழல் மேசை ஏணி வண்டியும் (இசுசு மோரிட்டா), 2 நீர்விடு குழாய் ஊர்திகளும், 37 தண்ணீர் லாரிகளும், 202 அதிவேக தூக்கிச் செல்லும் பம்புகளும் மற்றும் கம்பி இல்லா தந்தி பொருத்தப்பட்ட கார்களும், ஜீப், பேருந்து, மோட்டார் சைக்கிள் போன்ற இதர 45 துணை ஊர்திகளும், துறையின் பயன்பாட்டில் உள்ளன. இத்துறையினை நவீனப்படுத்துவதில் அரசு மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளது. புதிய ஊர்திகள் வாங்குவது மட்டுமின்றி கழித்துக் கட்டப்பட்ட பழைய ஊர்திகளுக்குப் பதிலாக படிப்படியாக புதிய ஊர்திகளும் வாங்கப்படுகின்றன. பன்மாடிக் கட்டிடங்கள் மற்றும் சரியான அணுகு சாலைகள் இல்லாத குடிசைப் பகுதிகள் ஆகியவற்றில் ஏற்படும் தீயினை அணைக்கவும், மீட்புப் பணிகளுக்குச் செல்லவும் "ஸ்நார்கல்" என்ற ஹைட்ராலிக் பிளாட்பார்ம் ஒன்றும் "மோரிட்டா" சுழல் மேசை ஏணி வண்டியும், சென்னை மாநகரில் உள்ளன. தீயணைக்கும் ஊர்திகளும் தளவாடங்களும் வாங்கும் பொருட்டு தீயணைப்புத் துறைக்கு உதவும் வண்ணம், பல்வேறு நிறுவனங்களைச் சார்ந்த தேர்ந்தெடுக்கப்பட்ட அலுவலர்களைக் கொண்ட தொழில் நுட்பக்குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது.

(ஈ) சிறப்புத் தளவாடங்கள்

மேன்மைமிகு முதன்மையாளர்கள் வருகைதரும் இடம், பொருட்காட்சிகள், திருவிழாக்கள் முதலியன நடைபெறும் இடங்களில் போதுமான அளவு நீர் இல்லாவிட்டால், தீயணைப்புப் பணியில் தொடர்ந்து போராட வேண்டியிருக்கும் காலங்களில் சிரமத்தை உருவாக்குகிறது. இத்தகைய பிரச்சினையைச் சமாளிப்பதற்காக 20,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு சுருங்கும் நீர்த்தொட்டியை இத்துறை வாங்கியுள்ளது. இத்துடன் கூடுதலாக, 25 சின்டெக்ஸ் நீர்த்தொட்டிகள் பெருநகர் குடிநீர் வாரியத்திடமிருந்து இத்துறைக்கு மாற்றப்பட்டு குடிசைப் பகுதிகளில் எளிதில் தூக்கிச் செல்லக்கூடிய பம்பு மற்றும் நீர்விடு குழாயுடன் பயன்படுத்த வழங்கப்பட்டுள்ளன. தஞ்சையில் நடைபெற்ற எட்டாவது உலக தமிழ்மாநாட்டின் போது இம்மாதிரியான தீ பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டு அது மிகவும் பயனுடையதாக விளங்கியது. புகையை வெளியேற்றி தீயின் மூலத்தை அறிந்து அதனைத் திறமையுடன் அணைப்பதற்கான "புகை வெளியேற்றி" என்ற நவீன கருவி ஒன்றினையும் இத்துறை வாங்கியுள்ளது. எண்ணெய் மற்றும் இரசாயனப் பொருட்களால் ஏற்படும் தீ விபத்துக்களைச் சமாளிக்க எடுத்துச் செல்லத்தக்க நுரை ஆக்கி ஒன்று, ஆழ் கிணறுகளிலிருந்து நீரை வெளியேற்றும் புளோட்டோ பம்பு, தேடப்பயன்படும் விளக்கு, விசை ரம்பம், எடுத்துச் செல்லத் தக்க புவி விளக்குடன் கூடிய மின் ஆக்கிச் சாதனம், நச்சு வாயு கண்டுபிடிப்பான் ஆகியவை இத்துறை வாங்கிய இதர சாதனங்களாகும். இவ்வாறாக, எல்லா வகையான தீ விபத்துக்களையும் சமாளிக்க இத்துறை தேவையான அளவு நவீன கருவிகளைப் பெற்றுள்ளது.

1995 ஏப்ரல் 6]

(உ) தகவல் தொடர்பு

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளுக்குச் சரியான நேரத்தில் செல்வது மிகவும் அவசியமானதாகும். இச்சேவையை சரியான நேரத்தில் அளிப்பதற்கு விரைவான தகவல் தொடர்பும் இயக்கமும் அவசியமாகிறது. விரைவாக தொடர்புகொள்ளும் பொருட்டு ஒவ்வொரு தீயணைப்பு நிலையத்திற்கும் தொலைபேசி அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலமாக தீ விபத்து அழைப்புகள் வரப்பெற்று, தீப்பற்றிய இடங்களுக்கு உடனடியாகச் செல்ல இயலுகிறது. இதைத் தவிர, சென்னை மாநகரத்தில் 43 கம்பியில்லாத தந்திக் கருவிகள் ஊர்திகளில் பொருத்தப்பட்டுள்ளன. இதே போன்று மாவட்டங்களில் வாக்கிடாக்கி கருவிகள் உட்பட 193 கம்பியில்லாத் தந்திக் கருவிகளும் ஊர்திகளில் பொருத்தப் பட்டுள்ளன. கோடைக்காலத்தில் புற தீயணைப்பு நிலை யங்களுடன் விரைவாக தொடர்பு கொள்வதற்காக "வாக்கி டாக்கி" கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

(ஊ) நோயாளர் ஊர்திகள்

தீயணைப்பு நிலையங்களில் நோயாளர் ஊர்தி வசதி உண்டு. இம்மாநிலத்தில் உள்ள 224 தீயணைப்பு நிலை யங்களுள், 74 தீயணைப்பு நிலையங்களில் நோயாளர் ஊர்திகள் உள்ளன. நியாயமான கட்டணத்தை வாடகை யாகப் பெற்றுக் கொண்டு நோயுற்றவர்களும், காயம்பட்ட வர்களும் மருத்துவ சிகிச்சைக்காக விரைந்து மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்படுகின்றனர். ஏழை மக்களுக்கு இச்சேவை இலவசமாக அளிக்கப்படுகிறது. 1994- ம் ஆண்டில் நோயாளர் ஊர்திகள் 3418 அழைப்புகளை ஏற்றுச் செயல்பட்டன. இவற்றுள் 3092 அழைப்புகளுக்குக் கட்டணம் வசூலிக்கப்பட்டது. இக்கட்டண அழைப்புகளின் மூலம் ரூ. 4,01,976.50 ஈட்டப்பட்டது. நோயாளர் ஊர்திகள் செல்லும் தொலைவிற்கு ஏற்ப இக்கட்டணம் வசூலிக்கப் படுகின்றது.

(எ) பட்டறை

துறை ஊர்திகள் மற்றும் சாதனங்களில் ஏற்படும் சிறியவும் பெரியவுமான பழுதுகளைச் செப்பனிடுவதற்காகச் சென்னையில் போக்குவரத்துப் பட்டறை ஒன்று இயங்கி வருகிறது. இப்பட்டறை ஒரு உதவிப் பொறியாளரின் (மோட்டார் வண்டிகள்) உதவியுடன் ஒரு கோட்ட தீயணைப்பு அலுவலரின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. இப்பட்டறையை நவீனப்படுத்த ரூ. 10.26 இலட்சம் செலவிலான பணி மேற்கொள்ளப்பட்டு தற்போது நடைபெற்று வருகிறது.

(ஏ) பயிற்சி வசதிகள்

இத்துறையில் புதிதாக நேரடியாக நியமனம் செய்யப்படும் அலுவலர்கள், பணியாளர்கள் ஏற்கெனவே பணியில் உள்ள அனைத்து அலுவலர்கள், பணியாளர்களுக்கும் தமிழ்நாடு மின்வாரிய ஊழியர்களுக்கும், ஏனைய அரசு சார்புள்ள நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கும் பயிற்சி அளிக்கும் பொருட்டு, சென்னையில், தமிழ்நாடு மாநிலப் பயிற்சிப் பள்ளியை இத்துறை நடத்தி வருகிறது. இப்பள்ளி ஒரு கோட்டத் தீயணைப்பு அலுவலரின் பொறுப்பின் கீழ் இயங்கி வருகிறது. இவருக்கு உதவியாக இரண்டு நிலையத் தீயணைப்புப் பணி அலுவலர்களும், இரண்டு முன்னணித் தீயணைப்போரும் உள்ளனர்.

V சிறப்புப் பணிகள்

(அ) தீத்தடுப்பு நடவடிக்கைகள்

இரவு பகல் ஆகிய எந்நேரமும் பெறப்படும் தீயணைப்பு அழைப்புகளுக்கு குறித்த காலத்தில் சென்று திறமையாக பணியாற்றுவதால் தீயணைப்புத்துறை பொதுமக்களிடையே

நன்மதிப்பைப் பெற்றுள்ளது. சென்னை மாநகரில் கோடைக்காலங்களில் குடிசைப்பகுதிகளில் தீ விபத்துக்கள் ஏற்படுகின்றன. இவை பெரும்பாலும் கவனக்குறைவாலும் பொறுப்பின்மையாலும் ஏற்படுகின்றன. ஆண்டுதோறும் கோடை மற்றும் காற்று வீசும் காலங்களிலும் அதாவது மார்ச் முதல் ஆகஸ்ட் வரை குடிசைப்பகுதிகளில் ஏற்படும் தீ விபத்துகள் அதிக அளவில் உள்ளன. இத்தீவிபத்துக்களைச் சமாளிப்பதற்காக, கோடைக்காலத்தில், பற்கோல் (Fire Rakes) கூறைக்கொக்கி (Fire Hooks) எளிதில் எடுத்துச் செல்லத்தக்க பம்புகள் (Portable Pumps) மற்றும் நீர்த்தொட்டிகள் போன்ற எளிய தீயணைப்பு சாதனங்களுடன் குடிசைப் பகுதிகளில் தீத்தடுப்பு நடவடிக்கைகளாக புறத் தீயணைப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இப்புறத் தீயணைப்பு நிலையங்கள் இப்பகுதிகளில் இரவு பகல் எந்நேரமும் பணியாற்றுவதுடன் இப்பகுதிகளை விழிப்புடன் கண்காணித்து வருகின்றன.

(ஆ) மீட்பு அழைப்புகள்

1994-ஆம் ஆண்டில் *3061* மீட்பு அழைப்புகள் பெறப் பட்டுள்ளன. அதிகரித்துவரும் மீட்பு அழைப்புகளுக்கு தீயணைப்புத்துறையின் பணிகள் ஈர்க்கப்பட்டுள்ளன. இம்மீட்பு அழைப்புகள் பெரும்பாலும் அவசரத்தன்மை கொண்டதாகவும், விபத்துக்களில் ஏற்பட்ட அபாயங்களி லிருந்து மீட்கவும், கிணற்றில் விழுந்துவிட்டவர்களை மீட்கவும், விஷவாயு கொண்ட கிணறுகள், பாதாள சாக் கடைகள் போன்றவைகளில் சிக்கியவர்களை மீட்கவும், சாலை விபத்துக்கள், இரயில் விபத்துக்கள், புயல் மற்றும் வெள்ளங்கள், கட்டிட இடிபாடுகள், உயரமான இடங்கள், பூச்சிகள் மற்றும் விஷவண்டுகளின் தாக்குதல், ஆகியவற்றிலிருந்து பொதுமக்களைக் காக்கவும், வளர்ப்புப் பிராணிகளை நீரில் மூழ்குதலிலிருந்து காப்பாற்றவும்,

[1995 ஏப்ரல் 6

யாருமற்ற வீட்டினுள் அகப்பட்டுக்கொண்ட குழந்தைகளை மீட்கவும், மின்தூக்கிகளில் சிக்கிக்கொண்டவர்களையும், நிலச்சரிவுகளில் அகப்பட்டுக் கொண்டவர்களையும் மீட்கவும், கிணறுகள் இடிந்து விழுந்தால் அதில் சிக்கிக் கொண்டவர்களை மீட்க வரும் அபாய அழைப்புகளாகவே உள்ளன.

(இ) தீயணைப்பு அழைப்புகள்

1994-ஆம் ஆண்டு இத்துறை *11,120* தீ விபத்து அழைப்புகளை ஏற்று செயல்பட்டது. அவற்றில், *149* அழைப்புகள் ஒவ்வொன்றும் ரூ. *50,000*-க்கு மேல் பொருட்சேதமோ, உயிரிழப்போ ஏற்பட்ட பெருந்தீ விபத்துக்களாகும். இக்கால அளவில் மாநிலம் முழுவதும் தீ விபத்துக்களால் ஏற்பட்ட பொருள் இழப்பு அல்லது சேதத்தின் மதிப்பு உத்தேசமாக ரூ. *16.76* கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், அதே நேரத்தில், தீயிலிருந்து காப்பாற்றப்பட்ட சொத்துக்களின் மதிப்பு ரூ. *144.69* கோடியாகும். *1990* முதல் *1994* ஆம் ஆண்டு வரையிலான கடந்த ஐந்து ஆண்டுகளுக்குரிய விவரங்கள் பிற்சேர்க்கை V-யில் குறிப்பிடப்பட்டுள்ளன.

1994-ஆம் ஆண்டில் ஏற்பட்டுள்ள தீ விபத்துக்கள் பற்றிய பகுப்பாய்வில் பின்வரும் விவரங்கள் தெரியவருகிறது :

(i) வீடுகளில் ஏற்பட்ட தீ விபத்துகள் சுமார் *50* சதவீதமாகும். இதில் ஒருபகுதி, சென்னை மாநகரின் குடிசைப் பகுதிகளில், குறிப்பாக, கோடைக் காலத்தில் ஏற்பட்டவையாகும்.

(ii) தொழிற்சாலைகளில் ஏற்பட்ட தீ விபத்துக்கள் சுமார் *31.5* சதவீதமாகும்.

1995 ஏப்ரல் 6]

(iii) பண்ணை நிலங்களில், காடுகளில், மலைத் தோட்டங்களில், புல் (உலர்ந்த) வளர்க்கப்பட்ட நிலங்களில் ஏற்பட்ட தீ விபத்துக்கள் சுமார் 15.2 சதவீதமாகும்.

சென்னை மாநகர் குடிசைப் பகுதிகளில் ஏற்பட்ட தீ விபத்துக்கள் :

ஆண்டு	அழைப்புகள்
1988	58
1989	61
1990	48
1991	48
1992	49
1993	37
1994	10

(ஈ) உலகத் தமிழ் மாநாடு

தஞ்சாவூரில் 1-1-1995ஆம் நாள் முதல் 5-1-1995ஆம் நாள் வரையில் நடைபெற்ற எட்டாம் உலகத் தமிழ் மாநாடு பெரும் திரளான மக்களை கவர்ந்தது, மேலும், உலகில் அனைத்து நாடுகளிலிருந்து ஏராளமான சீர் மக்களும் கலந்து கொண்டனர். இம்மாநாட்டிற்கு, போதிய அளவிற்கு தீ விபத்துப் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டும், உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொள்ளும் மக்களுக்கு முதலுதவிப் பணிகளை உடனடியாகச் செய்யும் பொருட்டும், எந்தவொரு அசம்பாவித/விரும்பத்தகாத நேர்விலும், உடனடியாக நிலைமையைச் சமாளிக்கும் வகையில், தஞ்சாவூரின் வெவ்வேறு பகுதிகளிலும், முக்கியமான இடங்களிலும், தேவையான தீயணைப்புத் துறைப் பணியாளர்களுடன் கூடிய, தீ அணைப்புப் பிரிவுகளும், நோயாளர் ஊர்திகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன.

[1995 ஏப்ரல் 6

VI. ஊக்குவித்தலும், ஊக்கத் தொகைகளும்

அ. விருதுகளும், வெகுமதிகளும்

தீயணைப்புத் துறையினர் போற்றத்தக்க கடமைப் பற்றுறுதியுடனும், அஞ்சா நெஞ்சத்துடனும் ஆற்றிய பணியைப் பாராட்டும் வகையிலும், அவர்கள் பணிக்குரிய திறமையையும், செயல் திறனையும் வளர்த்துக் கொள்வதை ஊக்குவிக்கும் வகையிலும், மாநில அரசு ஏற்படுத்திய பின்வரும் விருதுகள், இந்த ஆய்வாண்டில், தமிழ்நாடு தீயணைப்புத்துறை அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும் வழங்கப்பட்டன:

1. ஒவ்வோராண்டும், அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15 ஆம் நாளன்று வழங்கப்படும் "தமிழ்நாடு முதலமைச்சரின் (அண்ணா பதக்கம்) தீயணைப்புப் பதக்கம்".

2. ஒவ்வோராண்டும், பொங்கல் தினத்தன்று வழங்கப் படும் "தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பதக்கம்".

(1) 1994 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15 ஆம் நாளான, அண்ணா பிறந்த நாளன்று தமிழ்நாடு முதலமைச் சரின் (அண்ணா பதக்கம்) தீயணைப்புப் பதக்கம் கீழ்க்கண்ட தீயணைப்புப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டது :

பதவித் தரம்	வழங்கப்பட்ட பதக்கங்களின் எண்ணிக்கை.
கோட்டத் தீயணைப்பு அலுவலர்	1
உதவிக் கோட்டத் தீயணைப்பு அலுவலர்	1
நிலையத் தீயணைப்பு அலுவலர்	1
முன்னிலைத் தீயணைப்போர்	2
இயந்திரக் கம்மியர் ஓட்டுநர்	1
தீயணைப்போர்-ஓட்டுநர்	1
தீயணைப்போர்	2

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1995 ஏப்ரல் 6]

இப்பதக்கம் பெற்றவர்கள், அவர்களுடைய பதவித் தரத்திற்கேற்ப ரூ. *1,500* முதல் ரூ. *4,000* வரை ஒரு மொத்த மானியம் பெறத் தகுதியுடையோராவர்.

(2) தமிழ்நாடு முதலமைச்சர் தீயணைப்புப் பதக்கம் *1995* ஜனவரித் திங்களில் கீழ்க்கண்ட தீயணைப்புப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டது :

முன்னணித் தீயணைப்போர்	..	*25*
தீயணைப்போர்-ஓட்டுநர்	..	*24*
இயந்திரக் கம்மியர் ஓட்டுநர்	..	*2*
தீயணைப்போர்- இயந்திரக் கம்மியர்	..	*1*
தீயணைப்போர்	..	*28*

இப்பதக்கம் பெறும் தீயணைப்பாளர்கள் மற்றும் அதற்கு இணையான பதவி வகிக்கும் ஒவ்வொருவருக்கும் மாதாந்திர ரொக்கத் தொகையாக ரூ. *20*-ம், முன்னணித் தீயணைப்போர் / இயந்திரக் கம்மியர் ஓட்டுநர் / தீயணைப்போர்-ஓட்டுநர்/தீயணைப்போர் இயந்திரக் கம்மியர் ஆகிய ஒவ்வொருவருக்கும் ரூ. *25*-ம் வழங்கப் படுகிறது.

(3) இதைத்தவிர மாநில விருதுகளுடன், இம்மாநிலத்தைச் சேர்ந்த கீழ்காணும் தீயணைப்புப் பணியாளர்களுக்கு, மத்திய அரசு, குடியரசுத் தினத்தன்றும், சுதந்திர தினத்தன்றும் பின்வரும் பதக்கங்களை வழங்குகிறது.

*(அ) 1994*ஆம் ஆண்டு சுதந்திர தினத்தன்று வழங்கப் பட்ட பாராட்டத்தக்க பணிக்கான தீயணைப்புப் பதக்கம்:

நிலையத் தீயணைப்பு அலுவலர்	..	*1*
முன்னணித் தீயணைப்போர்	..	*1*
தீயணைப்போர்–ஓட்டுநர்	..	*1*
தீயணைப்போர்	..	*1*

(ஆ) 1995ஆம் ஆண்டு குடியரசு தினத்தன்று வழங்கப்பட்ட பாராட்டத்தக்க பணிக்கான தீயணைப்புப் பதக்கம்:

முன்னணித் தீயணைப்போர்	..	*1*
தீயணைப்போர்-ஓட்டுநர்	..	*2*
இயந்திரக் கம்மியர் ஓட்டுநர்	..	*1*
தீயணைப்போர்	..	*2*

(ஆ) நலத் திட்டங்கள்

(1) தீயணைப்புத் துறை நல நிதி

துயருற்ற நிலையிலுள்ள தீயணைப்புத் துறைப் பணியாளர்களுக்கு நிதியுதவி செய்யவும், அவர்களின் நலனை மேம்படுத்தவும், 1962 ஆம் ஆண்டில், தமிழ்நாடு தீயணைப்புத் துறை நல நிதி ஏற்படுத்தப்பட்டது. இதன் உறுப்பினர்களுக்கு, பின்வரும் செயல் நோக்கங்களுக்காக நிதி உதவி அளிக்கப்படுகிறது:

1. காசநோய், தொழுநோய், புற்றுநோய் போன்ற கொடிய நோய்களால் அவதியுறுபவர்களுக்கு சத்துணவு வாங்க.

2. குழந்தைகளின் உயர் கல்விச் செலவுக்கு.

3. இறந்தவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க.

4. உறுப்பினர்களோ, அவரைச் சார்ந்தவர்களோ இறந்துவிட்டால் அவர்களது ஈமச்சடங்குச் செலவுக்கு.

இந்நிதியில் உறுப்பினர்களாக உள்ள நபர்களின் எண்ணிக்கை 6047 ஆகும். அரசு, ஒவ்வோராண்டும் இந்நிதிக்கு ரூ. 1,50,000 அளிக்கிறது. 1993-1994 ஆம் ஆண்டில் 31-12-94 வரை இந்நிதிக்குச் சந்தாத் தொகையாக உறுப்பினர்களிடமிருந்து ரூ. 90,610.50 வசூலிக்கப்பட்டது. 1993-1994 ஆம்

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ஆண்டில் இந்நிதியிலிருந்து உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட பண உதவித் தொகை ரூ. 2,47,517 ஆகும். ஓய்வு பெறும் உறுப்பினர் அனைவருக்கும் ரூ. 200 வழங்கப்படுகிறது. 1994 ஆம் ஆண்டில் ஓய்வு பெற்ற 38 பணியாளர்களுக்கு ரூ. 7,600 வழங்கப்பட்டது. இத்துறையின் சார்நிலைப் பணியாளர்கள், பணியில் ஈடுபட்டிருக்கும் போது உயிர் துறக்க நேரிட்டால், அவர்கள் குடும்பத்திற்குக் குடும்ப நலத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் ரூ. 60,000 உதவித் தொகையுடன், மேலும் ரூ. 10,000 உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. பணியில் ஈடுபட்டிருக்கும்போது காயம் ஏற்பட்டால், காயத்தின் தன்மைக்கேற்ப பணியாளர்களுக்கு ரூ. 1,000 முதல் ரூ. 3,000 வரை கருணைத் தொகை வழங்கப்படுகிறது.

(2) குழு காப்பீட்டுறுதித் திட்டம்

தீயணைப்புத் துறை இயக்குநர் முதல் தீயணைப்போர் வரையிலான பணியாளர்கள் (அமைச்சுப் பணியாளர்கள் நீங்கலாக) அனைவருக்கும், பணியில் ஈடுபட்டிருக்கும்போது இறக்கநேரிட்டால், ஒவ்வொரு குடும்பமும் ரூ. 1,00,000 பெறும் வகையில் "குழு காப்பீட்டுறுதி " திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

(3) உணவுப் பொருட்களைக் குறைந்த விலையில் வழங்கும் திட்டம்

இத்திட்டம், 1981 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்டது. அரிசி, கோதுமை, சர்க்கரை, ரவை/மைதா, பாமாயில், துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு ஆகிய உணவுப் பொருட்கள் குறைந்த விலையில் உதவிக் கோட்டத் தீயணைப்பு அலுவலர் மற்றும் அதற்குக் கீழுள்ள பதவியில் உள்ளோருக்கு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வழங்கப்படுகின்றன. இன்றியமையாப் பொருட்களுக்கு அளிக்கப்படும் மானியம் விவரம் வருமாறு :

அரிசி, சர்க்கரை, கோதுமை, பாமாயில்.	..	பொது விநியோக விலையில் *50* சதவீதம்	
துவரம்பருப்பு	..	ரூ. *4* கிலோ ஒன்றுக்கு	*
உளுத்தம் பருப்பு	..	ரூ. *3* கிலோ ஒன்றுக்கு	*
ரவை/மைதா	..	ரூ. *1.50* கிலோ ஒன்றுக்கு	*

* அரசு மானியம்

(4) குடியிருப்புகள் கட்டுதல்

தீயணைப்புப் பணியாளர்களின் செயல் திறனைப் பாதுகாக்கவும், தேவை ஏற்படும்போது அவர்களை விரைவாகப் பணிக்கு அழைக்கவும், அவர்களுக்குத் தீயணைப்பு நிலையங்களின் அருகில் குடியிருப்புகள் அளிப்பது இன்றியமையாததாகும். தற்சமயம் குடியிருப்பு வசதிகள் போதுமானவையாக இல்லை. தற்போது, அரக்கோணம், உடுமலைப்பேட்டை, இராணிப்பேட்டை, சிவகாசி, அசோக்நகர், வண்ணாரப் பேட்டை, நந்தனம் ஆகிய இடங்களில் மட்டுமே குடியிருப்புகள் உள்ளன. தருமபுரியில் ரூ. *40.40* இலட்சம் செலவில் *36* குடியிருப்புகள் கட்டுவதற்கு அரசு அனுமதித்துள்ளது. மேலும், நாகப்பட்டினம், பெரம்பலூர், சென்னை ஆகிய இடங்களில் முறையே *30, 31,* மற்றும் *39* குடியிருப்புகளை ரூ. *217.41* இலட்சம் செலவில் கட்ட அரசு நிருவாக ஒப்புதல் அளித்துள்ளது. இக்குடியிருப்புகளின் கட்டுமானப் பணி, தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும், நாமக்கல், செய்யாறு, நெல்லிக்குப்பம், கோவில்பட்டி, ஆலங்குடி ஆகிய இடங்களில் ரூ. *63.37* இலட்சம் செலவில் தீயணைப்பு

1995 ஏப்ரல் 6]

நிலையங்களுக்கும் பொதுப்பணித் துறையின் மூலம் நிரந்தரக் கட்டிடங்கள் கட்ட அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. கொடைக்கானல் தீயணைப்பு நிலையத்திற்கு ரூ.5.60 இலட்சம் செலவில் அரை நிரந்தரக் (Semi permanent) கட்டிடம் ஒன்றைக் கட்டவும் அரசு அனுமதித்துள்ளது.

VII. தற்போதைய அரசு பதவி ஏற்றபின் வழங்கியுள்ள வசதிகளும், சலுகைகளும்

பொது மக்களுக்கு இத்துறை ஆற்றி வரும் பணியின் முக்கியத்துவத்தை உணர்ந்து, இந்த அரசு பதவியேற்ற பின்னர், இத்துறையின் செயல் திறனை மேம்படுத்த பின்வரும் நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தியுள்ளது :

(1) இராமநாதபுரத்தில் புதிய கோட்டம் ஒன்றை ஏற்படுத்தியது.

(2) தீயணைப்புப் பணியாளர்களையும் தேர்தெடுக்க தமிழ்நாடு சீருடைப் பணியாளர்கள் தேர்வு வாரியம் ஒன்றை அமைத்தது.

(3) தீயணைப்புத் துறை நல நிதிக்கான அரசு மானியத்தை ரூ.60,000/-லிருந்து ரூ.1.50,000/- ஆக உயர்த்தியது.

(4) இரண்டு செட் ‘டெரிகாட்டன்’ சீருடைகளைத் தீயணைப்புப் பணியாளர்களுக்கு வழங்கியது.

(5) விடுமுறை நாட்களில் பணிபுரிவோருக்கு (Off duty Allowance) நாளொன்றுக்கு அளிக்கப்படும் படியை ரூ.5/-லிருந்து ரூ.10/- ஆக உயர்த்தியது.

(6) தீயணைப்புப் பணியாளர்களுக்கு உணவுப் படியினை உயர்த்தியது.

(7) சீருடைப் பராமரிப்புப் படியினை உயர்த்தியது.

(8) 25 புதிய தீயணைப்பு நிலையங்களைத் தொடங்கியது.

(9) புதிதாக 49 ஊர்திகளும், பயன்படாது என ஒதுக்கப்பட்ட 64 ஊர்திகளுக்குப் பதிலாக புதிய ஊர்திகளும் வாங்கியது.

(10) திருவள்ளூர் தீயணைப்பு நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டியது.

(11) தமிழ்நாடு அரசு தீயணைப்புத்துறையின் மாநிலப் பட்டறையை ரூ.10.26 இலட்சம் செலவில் நவீனப்படுத்துதல்.

(12) 22-6-1993-லிருந்து தீயணைப்புத் துறைப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் இன்றியமையாப் பொருட்களுக்கு அளிக்கப்படும் மானியத்தை 50 சதவீதம் ஆக உயர்த்தியது.

(13) திண்டுக்கல் கோட்டத்தில், கொடைக்கானல் தீயணைப்பு நிலையத்திற்கு ரூ.5.60 இலட்சம் மதிப்பில் அரை நிரந்தர (Semi permanent) கட்டிடம் கட்ட அனுமதி வழங்கியது.

(14) இராமநாதபுரம் கோட்டத்திற்குப் பணித் திறமையை மேம்படுத்துவதற்காக ஓர் அம்பாசிடர் கார் வாங்கியது.

(15) தீக்கட்டுப்பாட்டு அறையின் பணித்திறனை மேம்படுத்த மூன்று முறை மாற்றுப் பணியாக மாற்றி அமைத்தது.

(16) தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் மூலமாக தருமபுரியில் 36 குடியிருப்புகள் கட்டுதல்.

(17) நாமக்கல், செய்யாறு, ஆலங்குடி, கோவில்பட்டி மற்றும் நெல்லிக்குப்பம் தீயணைப்பு நிலையங்களுக்கு ரூ.63.37 இலட்சம் செலவில் நிரந்தர கட்டிடம் கட்டுதல்.

1995 ஏப்ரல் 6]

(18) தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் மூலம் பெரம்பலூர், நாகப்பட்டினம் மற்றும் சென்னை ஆகிய இடங்களில் சுமார் ரூ.*217.41* இலட்சம் செலவில் *100* குடியிருப்புகள் கட்டுதல்.

VIII. புதிய திட்டங்கள்

*1995-96*ஆம் ஆண்டில், ரூ.*65.30* இலட்சம் செலவில், (தொடரினச் செலவு மற்றும் தொடராயினச் செலவு) *3* தீயணைப்பு நிலையங்களைப் புதிதாகத் தொடங்கவும், ரூ.*13* இலட்சம் செலவில் (தொடராயினச் செலவு) தற்போதுள்ள இரு தீயணைப்பு நிலையங்களுக்குக் கட்டிடங்கள் கட்டவும் இந்த அரசு உத்தேசித்துள்ளது.

IX. நிறைவுரை

தீயணைப்புத்துறை, தீயின் சீற்றம் மற்றும் இதர அழிவுகளிலிருந்து மக்களின் உயிரையும், உடைமைகளையும் காப்பதில் தக்க சமயத்தில் பொறுப்பாக பணியாற்றி வருகிறது. தீயணைப்புத் துறையின் அடிப்படை வசதிகள், திறமை மற்றும் சாதனங்கள் ஆகியவற்றை மேம்படுத்தி, தமிழ்நாட்டு மக்களுக்கு மன நிறைவு அளிக்கத்தக்க வகையில், தனது சேவையைத் திருப்திகரமாக இத்துறை நிறைவேற்றுவதைத் தனது குறிக்கோளாக இந்த அரசு கொண்டுள்ளது.

இணைப்பு-I

நிறுவன அமைப்பு

தீயணைப்புத்துறை இயக்குநர்

தீயணைப்புத்துறை துணை இயக்குநர், வட மண்டலம், சென்னை.	தீயணைப்புத்துறை துணை இயக்குநர், மத்திய மண்டலம், திருச்சிராப்பள்ளி.	தீயணைப்புத்துறை துணை இயக்குநர், தென் மண்டலம், மதுரை.	தீயணைப்புத்துறை துணை இயக்குநர், மேற்கு மண்டலம், கோயம்புத்தூர்.
கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள்.	கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள்.	கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள்.	கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள்.
1. வட சென்னை	1. திருச்சிராப்பள்ளி	1. மதுரை	1. கோயம்புத்தூர்-பெரியார்-நீலகிரி.
2. தென் சென்னை	2. புதுக்கோட்டை	2. திருநெல்வேலி-கட்டபொம்மன்	2. சேலம்-தருமபுரி
3. செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மற்றும் தமிழ்நாடு மாநிலப் பயிற்சிப்பள்ளி மற்றும் பட்டறை.	3. தஞ்சாவூர்	3. கன்னியாகுமரி	3. திண்டுக்கல்-அண்ணா
	4. தென்னாற்காடு-வள்ளலார்	4. சிதம்பரனார்	4. வட ஆற்காடு-அம்பேத்கார்
	5. விழுப்புரம்-ராமசாமி படையாச்சியார்	5. காமராஜர்	5. திருவண்ணாமலை-சம்புவராயர்.
		6. இராமநாதபுரம்-பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்.	

இணைப்பு-II.

தீயணைப்புத்துறையில் ஒப்பளிக்கப்பட்ட களப் பணியாளர்களின் விவரங்கள்.

தொ.எண்.	பதவியின் பெயர்	எண்ணிக்கை.
(1)	(2)	(3)
1.	தீயணைப்புத்துறை இயக்குநர்	1
2.	தீயணைப்புத்துறை துணை இயக்குநர்	4
3.	கோட்டத் தீயணைப்பு அலுவலர்	20
4.	உதவிப் பொறியாளர் (தானியங்கி)	1
5.	உதவிக் கோட்டத் தீயணைப்பு அலுவலர்	18
6.	நிலையத் தீயணைப்பு அலுவலர்	224
7.	நிலைய அலுவலர் (போக்குவரத்து)	15
8.	உதவி நிலையத் தீயணைப்பு அலுவலர்	15
9.	முன்னணித் தீயணைப்போர்	655
10.	இயந்திரக் கம்மியர் ஓட்டுநர்	209
11.	தீயணைப்போர் ஓட்டுநர் மற்றும் இயந்திரக் கம்மியர் ஓட்டுநர்	977
12.	தீயணைப்போர் மற்றும் அதற்கு இணையான பதவிகள்	3792
	மொத்தம்	**5931**

இணைப்பு-III

அமைச்சுப் பணியாளர்களின் விவரங்கள்.

தொ.எண்.	பதவியின் பெயர்.	எண்ணிக்கை.
(1)	(2)	(3)
1.	துணை இயக்குநர் (நிர்வாகம்)	1
2.	தீயணைப்புத் துறை இயக்குநரது நேர்முக உதவியாளர்	2
3.	கண்காணிப்பாளர்	23
4.	உதவியாளர்	78
5.	இளநிலை உதவியாளர்	44
6.	சுருக்கெழுத்துச் தட்டச்சர்	5
7.	தட்டச்சர்	25
8.	பதிவுரு எழுத்தர் (கருணை அடிப்படை நியமனத்திற்காக ஒப்பளிக்கப்பட்ட 5 உபரி பதவிகள் உட்பட)	27
9.	அலுவலக உதவியாளர்	58
	மொத்தம்	**263**

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1995 ஏப்ரல் 6]

இணைப்பு-IV.

மாநிலத்தில் இயங்கி வரும் கோட்டங்கள் மற்றும் தீயணைப்பு நிலையங்களின் விவரப் பட்டியல்.

கோட்டத்தின் பெயர் (1)	தீயணைப்பு நிலையத்தின் பெயர் (2)
1. வட மண்டலம், சென்னை (39)	
வடசென்னைக் கோட்டம்	1. வண்ணாரப் பேட்டை
	2. எஸ்பிளனேடு
	3. ராயபுரம்
	4. வியாசர்பாடி
	5. செம்பியம்
	6. கீழ்ப்பாக்கம்
	7. வேப்பேரி
	8. தண்டையார்பேட்டை
	9. வ.உ.சி. நகர்
	10. எண்ணூர்
	11. மணலி
	12. வில்லிவாக்கம்
	13. தலைமைச் செயலகம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கோட்டத்தின் பெயர்	தீயணைப்பு நிலையத்தின் பெயர்
(1)	(2)
தென் சென்னைக் கோட்டம்	1. எழும்பூர்
	2. திருவல்லிக்கேணி
	3. மயிலாப்பூர்
	4. தேனாம்பேட்டை
	5. அசோக் நகர்
	6. சைதாப்பேட்டை
	7. கிண்டி
	8. ராஜ்பவன்
	9. தாம்பரம்
	10. அம்பத்தூர்
	11. கோயம்பேடு
	12. ஜெ.ஜெ. நகர்
செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். கோட்டம்	1. காஞ்சிபுரம்
	2. ஸ்ரீபெரும்புதூர்
	3. மதுராந்தகம்
	4. செங்கற்பட்டு
	5. திருவள்ளூர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கோட்டத்தின் பெயர் (1)	தீயணைப்பு நிலையத்தின் பெயர் (2)
செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். கோட்டம்—தொடர்ச்சி	6. கும்மிடிப்பூண்டி
	7. மறைமலைநகர்
	8. செங்குன்றம்
	9. உத்திரமேரூர்
	10. பொன்னேரி
	11. திருத்தணி
	12. திரூர்
	13. கும்மிடிப்பூண்டி (சிப்காட்)
	14. ஆவடி

2. மத்திய மண்டலம், திருச்சிராப்பள்ளி (60)

திருச்சிராப்பள்ளி கோட்டம்	1. திருச்சிராப்பள்ளி
	2. ஸ்ரீரங்கம்
	3. முசிரி
	4. துறையூர்
	5. பெரம்பலூர்
	6. ஜெயங்கொண்ட சோழபுரம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

கோட்டத்தின் பெயர் (1)	தீயணைப்பு நிலையத்தின் பெயர் (2)
திருச்சிராப்பள்ளி கோட்டம்—தொடர்ச்சி.	7. கரூர்
	8. மணப்பாறை
	9. அரியலூர்
	10. புள்ளம்பாடி
	11. அரவக்குறிச்சி
	12. புகளூர்
	13. நாவல்பட்டு
	14. துவரங்குறிச்சி
தென்னாற்காடு-வள்ளலார் கோட்டம்	1. கடலூர்
	2. சிதம்பரம்
	3. நெல்லிக்குப்பம்
	4. பண்ருட்டி
	5. விருத்தாசலம்
	6. காட்டுமன்னார் கோயில்
	7. குறிஞ்சிப்பாடி
	8. திட்டக்குடி
	9. கடலூர் (சிப்காட்)
	10. வேப்பூர்
	11. சேத்தியாதோப்பு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கோட்டத்தின் பெயர் (1)	தீயணைப்பு நிலையத்தின் பெயர் (2)
விழுப்புரம்-ராமசாமி படையாச்சியார் கோட்டம்	1. விழுப்புரம்
	2. கள்ளக்குறிச்சி
	3. திண்டிவனம்
	4. செஞ்சி
	5. திருக்கோயிலூர்
	6. சங்கராபுரம்
	7. மரக்காணம்
	8. உளுந்தூர்பேட்டை
புதுக்கோட்டை கோட்டம்	1. புதுக்கோட்டை
	2. அறந்தாங்கி
	3. பொன்னமராவதி
	4. ஆலங்குடி
	5. திருமயம்
	6. இலுப்பூர்
	7. கந்தர்வக்கோட்டை
	8. கீரனூர்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கோட்டத்தின் பெயர் (1)	தீயணைப்பு நிலையத்தின் பெயர் (2)
தஞ்சாவூர் கோட்டம்	1. தஞ்சாவூர்
	2. கும்பகோணம்
	3. மன்னார்குடி
	4. நாகப்பட்டினம்
	5. திருவாரூர்
	6. நன்னிலம்
	7. மயிலாடுதுறை
	8. பட்டுக்கோட்டை
	9. ஒரத்தநாடு
	10. சீர்காழி
	11. திருத்துறைப்பூண்டி
	12. பேராவூரணி
	13. திருக்காட்டுப்பள்ளி
	14. பாபநாசம்
	15. குடவாசல்
	16. தரங்கம்பாடி
	17. திருவிடைமருதூர்
	18. வேதாரண்யம்
	19. நீடாமங்கலம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கோட்டத்தின் பெயர்	தீயணைப்பு நிலையத்தின் பெயர்
(1)	(2)

3. தென் மண்டலம், மதுரை (59)

மதுரைக் கோட்டம்	1. மதுரை
	2. தல்லாகுளம்
	3 மேலூர்
	4. உசிலம்பட்டி
	5. பெரியகுளம்
	6. தேனி-அல்லிநகரம்
	7. ஆண்டிப்பட்டி
	8. மயிலாடும்பாறை
	9. உத்தமபாளையம்
	10. போடிநாயக்கனூர்
	11. திருமங்கலம்
	12. கம்பம்
	13. சோழவந்தான்
	14. கொட்டாம்பட்டி
	15. கடமலைக்குண்டு
	16. அனுப்பானடி

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கோட்டத்தின் பெயர் (1)	தீயணைப்பு நிலையத்தின் பெயர் (2)
இராமநாதபுரம்-பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் கோட்டம்	1. இராமநாதபுரம்
	2. இராமேஸ்வரம்
	3. கமுதி
	4. பரமகுடி
	5. முதுகுளத்தூர்
	6. ஏர்வாடி
	7. காரைக்குடி
	8. தேவக்கோட்டை
	9. சிவகங்கை
	10. சிங்கம்புனரி
	11. திருப்பத்தூர்
	12. மண்டபம்
காமராஜர் கோட்டம்	1. ஸ்ரீவில்லிபுத்தூர்
	2. இராஜபாளையம்
	3. சாத்தூர்
	4. சிவகாசி
	5. அருப்புக்கோட்டை
	6. விருதுநகர்
	7. வத்திராயிருப்பு
	8. திருச்சுழி

கோட்டத்தின் பெயர் (1)	தீயணைப்பு நிலையத்தின் பெயர் (2)
திருநெல்வேலி-கட்டபொம்மன் கோட்டம்	1. பாளையங்கோட்டை
	2. திருநெல்வேலி (பேட்டை)
	3. தென்காசி
	4. கடையநல்லூர்
	5. நாங்குநேரி
	6. அம்பாசமுத்திரம்
	7. சங்கரன்கோயில்
	8. வாசுதேவநல்லூர்
	9. வள்ளியூர்
கன்னியாகுமரி கோட்டம்	1. நாகர்கோயில்
	2. கன்னியாகுமரி
	3. குழித்துறை
	4. குலசேகரம்
	5. பத்மநாபபுரம்
	6. குளச்சல்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கோட்டத்தின் பெயர் (1)	தீயணைப்பு நிலையத்தின் பெயர் (2)
சிதம்பரனார் கோட்டம்	1. கோவில்பட்டி
	2. தூத்துக்குடி
	3. தூத்துக்குடி அனல் மின் நிலையம்
	4. திருச்செந்தூர்
	5. சாத்தான்குளம்
	6. ஸ்ரீவைகுண்டம்
	7. விளாத்திகுளம்
	8. கழுகுமலை

4. மேற்கு மண்டலம், கோயம்புத்தூர் (66)

கோயம்புத்தூர்-பெரியார்-நீலகிரி கோட்டம்	1. கோயம்புத்தூர் (தெற்கு)
	2. கோயம்புத்தூர் (வடக்கு)
	3. மேட்டுப்பாளையம்
	4. திருப்பூர்
	5. பொள்ளாச்சி
	6. உடுமலைப்பேட்டை
	7. வால்பாறை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

கோட்டத்தின் பெயர் (1)	தீயணைப்பு நிலையத்தின் பெயர் (2)
கோயம்புத்தூர்-பெரியார்-நீலகிரி கோட்டம்—தொடர்ச்சி	8. பல்லடம்
	9. ஈரோடு
	10. தாராபுரம்
	11. காங்கேயம்
	12. கோபிசெட்டிபாளையம்
	13. சத்தியமங்கலம்
	14. கூடலூர்
	15. உதகமண்டலம்
	16. குன்னூர்
	17. கணபதி
	18. பவானி
	19. கொடுமுடி
	20. வெள்ளக்கோவில்
வடாற்காடு-அம்பேத்கார் கோட்டம்	1. வேலூர்
	2. இராணிப்பேட்டை
	3. இராணிப்பேட்டை (சிப்காட்)

கோட்டத்தின் பெயர் (1)	தீயணைப்பு நிலையத்தின் பெயர் (2)
வடாற்காடு-அம்பேத்கார் கோட்டம்—தொடர்ச்சி	4. அரக்கோணம்
	5. திருப்பத்தூர்
	6. வாணியம்பாடி
	7. ஆம்பூர்
	8. குடியாத்தம்
	9. சோளிங்கர்
	10. நாட்ராம்பள்ளி
	11. ஆற்காடு
திருவண்ணாமலை-சம்புவராயர் கோட்டம்	1. திருவண்ணாமலை
	2. செங்கம்
	3. போளூர்
	4. செய்யார்
	5. வந்தவாசி
	6. ஆரணி
	7. தண்டராம்பட்டு
	8. ஜவ்வாதுமலை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கோட்டத்தின் பெயர் (1)	தீயணைப்பு நிலையத்தின் பெயர் (2)
சேலம்-தருமபுரி கோட்டம்	1. மேட்டூர் அனல் மின் நிலையம்
	2. சேலம்
	3. திருச்செங்கோடு
	4. ஆத்தூர்
	5. மேட்டூர்
	6. நாமக்கல்
	7. ராசிபுரம்
	8. சங்ககிரி
	9. ஏற்காடு
	10. கொல்லிமலை
	11. பர்கூர்
	12. தருமபுரி
	13. ஓசூர் (சிப்காட்)
	14. கிருஷ்ணகிரி
	15. அரூர்
	16. பெண்ணகரம்
	17. பாலக்கோடு
	18. ஊத்தங்கரை
	19. தேங்கனிக்கோட்டை

கோட்டத்தின் பெயர் (1)	தீயணைப்பு நிலையத்தின் பெயர் (2)
திண்டுக்கல்-அண்ணா கோட்டம்	1. நத்தம்
	2. வத்தலகுண்டு
	3. திண்டுக்கல்
	4. பழனி
	5. ஒட்டன்சத்திரம்
	6. வேடசந்தூர்
	7. கொடைக்கானல்
	8. நிலக்கோட்டை

வட மண்டலம்	..	39
மத்திய மண்டலம்	..	60
தென் மண்டலம்	..	59
மேற்கு மண்டலம்	..	66
மொத்தம்	..	**224**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-V

தீ விபத்துக்கள் குறித்த ஆண்டு வாரியான விவரங்கள்

ஆண்டு.	தீ விபத்துக் களின் எண் ணிக்கை	சேதம்		காப்பாற்றப்பட்டவை	
		உடைமை களின் மதிப்பு.	மனித உயிர் களின் எண் ணிக்கை.	உடைமை களின் மதிப்பு.	மனித உயிர் களின் எண் ணிக்கை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1990	10,341	7,36,94,873	140	64,32,81,907	274
1991	12,157	10,47,48,851	98	53,42,44,763	99
1992	12,996	10,16,54,885	96	93,41,36,143	208
1993	14,212	10,54,63,634	38	1,00,80,07,173	122
1994	11,120	16,76,40,554	44	1,44,68,74,621	255

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1995 ஏப்ரல் 6

இணைப்பு-VI

பல்வேறு சட்டம் மற்றும் விதிகளின் கீழ் தீயணைப்புத்துறை அலுவலர்கள் 1994-95 ஆம் ஆண்டில் (1994 டிசம்பர் வரையில்) ஆய்வு செய்த கட்டிடங்களின் எண்ணிக்கை.

தொ. எண்.	சட்டத்தின் / விதியின் பெயர்.	ஆய்வு செய்யப்பட்ட கட்டிடங்களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)
1.	தமிழ்நாடு திரைப்பட (ஒழுங்கு முறை) சட்டம் மற்றும் விதிகள்	315
2.	பொதுமக்கள் கூடுமிடங்களுக்கான சட்டம்	540
3.	தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் மற்றும் சென்னை மாநகராட்சி சட்டம்	1067
4.	தமிழ்நாடு ஊராட்சி சட்டம்	176
5.	தொழிற்சாலைகள் சட்டம்	1700
6.	ஆய்வு செய்யப்பட்ட அரசு கட்டிடங்கள்	576
7.	படைக்கலச் சட்டம் மற்றும் வெடிப் பொருட்கள் சட்டம் முதலியன	828